# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXVI (Nos. 1 to 4)

5th, 6th, 10th and 11th March 1982.

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

PRICE *Rupee* : 1

D
V211,32 N82
N83.186
122060

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*5th, 6th, 10th and 11th March,* 1982.

VOLUME CLXXXVI (Nos. 1 to 4)

TABLE OF CONTENTS.

*Friday, 5th March 1982.*


| | PAGES. |
|---|---|
| 1. Questions and Answers | 1—12 |
| 2. Privilege issue *re* publication of a news item in "Malai Murasu" newspaper on 3rd March 1982 | 12—13 |
| 3. Call attention notices— | |
| (1) Non-fixation of pay of Headmasters of Higher Secondary Schools .. .. .. .. | 13 |
| (2) Use of bogus mark-sheets for getting admission in Medical Colleges in Tamil Nadu .. | 13—17 |
| 4. General discussion on the Budget for the year 1982-83 ... ... ... ... ... | 17—40 |
| 5. Statement under rule 82 of the Council Rules—Selection of Haj pilgrims from Tamil Nadu and Pondicherry .. .. .. .. .. | 40—41 |
| 6. Papers laid on the table of the house .. .. | 98—99 |

*Saturday, 6th March 1982.*

| | |
|---|---|
| 1. Questions and answers ... ... ... | 101—122 |
| 2. Privilege issue *re* publication of a news item in "Murasoli" newspaper, dated 24th February 1982 | 128 |
| 3. Call attention notices— | |
| (1) Cases pending in Courts of Tamil Nadu due to non-filling of the posts of Magistrates .. | 124—130 |
| (2) Contamination of drinking water in Madras City dut to pollution with sullage water .. | 130—132 |

*Wednesday, 10th March 1982.*


| | Pages. |
|---|---|
| 4. General discussion on the Budget for the year 1982-83 .. .. .. .. .. .. | 132—194 |
| 5. Papers laid on the table of the House .. .. | 194—195 |
| 1. Government Motion *re*— | |
| Dispensation with Question Hour .. .. | 199 |
| 2. Information *re* Privilege Issue given notice of .. | 199 |
| 3. Adjournment motion *re*— | |
| Attack on people assembled at Meenambakkam Airport to welcome Thiru Sivaji Ganesan, M.P. | 200 |
| 4. Half-hour discussion *re*— | |
| Mass rapid transit system .. .. .. | 200—209 |
| 5. Call attention notices— | |
| (1) Closure of New College at Madras and suspension of 9 students ... ... ... ... | 209—213 |
| (2) Direct action by the nurses in Government hospitals stressing their 10 point demand ... | 213—217 |
| 6. General discussion on the Budget for the year 1982-83—*cont* .. .. .. .. .. .. | 217—290 |
| 7. Papers laid on the table of the House .. .. | 291 |


*Thursday, 11th March 1982.*


| | |
|---|---|
| 1. Call Attention Notice— | |
| Theft of five valuable Buddha Icons from Madras Museum .. .. .. .. .. | 297—299 |
| 2. General discussion on the Budget for the year 1982-83—*cont* .. .. .. .. | 299—393 |
| 3. Papers laid on the table of the House .. .. | 393—395 |
| Index .. .. .. .. .. .. | 396—417 |


## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

*வெள்ளிக்கிழமை, 1982 மார்ச் 5.*

*மாசி 21, துன்மதி-திருவள்ளுவராண்டு, 2013.*

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு எழுத்தர் பதவி.

** 153. வினா—செல்வி ஆ. லீலாவதி :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசு ஆணைப்படி, பள்ளிகளில் 500 மாணவர்கள் இருந்தால், ஒரு எழுத்தர் நியமிக்கப்படலாம் என்ற விதி இருந்தும், 1,500 மாணவர்கள் உள்ள சென்னை மாநகராட்சிப் பள்ளிகளிலும் ஒரே ஒரு எழுத்தர்தான் நியமிக்கப்பட்டு உள்ளார் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) தெரியும்.

(இ) இது சம்பந்தப்பட்ட கோப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**செல்வி ஆ. லீலாவதி :** 500-க்கு மேல் பிள்ளைகள் உள்ள பள்ளிகளில் நியமிக்கப்பட்ட இடங்களிலே உள்ள எழுத்தர்கள் கூட 'டியிங் ட்யூட்டி' என்ற அளவிலே பள்ளிகளிலே அவர்கள் இல்லாமல், மாநகராட்சி அலுவலகத்திலே இல்லாமல் போயிருக்கும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை மாற்ற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 500 மாணவர்களுக்கு ஒரு எழுத்தர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்து தான் மாநகராட்சியிலே இருக்கிறது, ஆனாலும் இந்த அரசினுடைய ஒப்புதலைப் பெற்றுத் தான் இவர்களையெல்லாம்

நியமிக்க வேண்டிய பொறுப்பு மாநகராட்சிக்கு இருக்கிறது. அதன் காரணமாகத்தான் அரசினுடைய பரிசீலனைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். 500 மாணவர்களுக்கு ஒரு எழுத்தர் என்ற முறையிலே இனிவரும் காலங்களில் அதுபோன்ற பதவிகளை ஏற்படுத்த நடவடிக்கையை அரசு எடுக்கும். இப்போது மாநகராட்சிகளிலே இருக்கும் எழுத்தர் ஒருவர்—மாநகராட்சியிலே எட்யூக்கேஷன் டிபார்ட்மென்ட்டிலே—இதற்காகத்தான் உபயோகப்படுத்தப்படுகிறார். ஆகவே, பள்ளியிலே இருக்கும் எழுத்தர்களை அங்கேயே அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஏற்கெனவே இருக்கும் நிலைமையில் பள்ளிகளில் இருக்கும் எழுத்தர்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களின் நிலைமை இப்படி இருக்கும்போது, "on other duty" என்றோ அல்லது "Deputation" என்றோ சொல்லி பள்ளியிலே இருக்கும் எழுத்தர்களைக் கொண்டு செல்லும் நிலைமை இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, பள்ளிகளில் இருக்கும் எழுத்தர்களை மாற்றுப் பணிக்கு அனுப்பாமல் இருக்கும் வகையில் ஒரு குறிப்புரையை இந்த அரசு அனுப்புமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கண்டிப்பாக அனுப்பப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இதுபோன்று கோவை மாநகராட்சியிலும் போதுமான எழுத்தர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** எல்லா மாநகராட்சிகளிலேயும் இவ்வாறு செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

**செல்வி ஆ. லீலாவதி :** எழுத்தர் வேலையை ஆசிரியர்கள் செய்யக் கூடாது என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதுபோன்ற நிலைமை இப்போது இல்லை. ஆனாலும் வேலைகள் அதிகமாக இருக்கும்போது, அப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன. அந்த நிலைமைகளைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.





**நெடுஞ்சாலைத் துறை நிரந்தரக் கோட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு.**

* 154. **வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தார் விலை ஏற்றம் மற்றும் சாலைத் தொகுதி ஆட்களின் (Road Gang Coolies) சம்பள உயர்வு இவைகளைக் கருத்தில் கொண்டு சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காக, நெடுஞ்சாலைத் துறை நிரந்தரக் கோட்டங்களுக்கு (Regular Divisions) அதிக நிதி ஒதுக்கீடு செய்யும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) அவ்வப்போது அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வந்துள்ளது.

(இ) கடந்த இரண்டு ஆண்டுகளில், தார் மற்றும் சாலைக்கான மூலப் பொருள்களின் விலை, ஆட்கூலி, வேலையாள் சம்பளம் முதலியன கணிசமாக உயர்ந்துள்ளது. மேலும் "கிராமச் சாலைகள் திட்டம்" மற்றும் "பேருந்துகள் செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" ஆகிய திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருவதால், அரசாங்கம் பராமரிக்க வேண்டிய சாலைகளின் மொத்த நீளமும் அதிகரித்துள்ளது.

மேற்கூறிய விலைவாசி உயர்வினை கருத்தில் கொண்டு சாலைகளின் பராமரிப்பிற்காக அரசாங்கமும் சாலைகளின் பராமரிப்புச் செலவிற்கான ஒதுக்கீட்டுத் தொகையை அதிக அளவில் உயர்த்தி உள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 9.47 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 22.53 கோடி அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஒரு கோட்டப் பொறியாளருக்கு முன்பு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதே ஒதுக்கீடு தான் தற்போதும் செய்யப்படுவதால், அவர்களுக்குச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. 40 இலட்சம் ரூபாய் முன்பு ஒதுக்கப்பட்டது என்றால், அதை வைத்து 40 கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிக்க பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியும். இப்போதும் அதே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுவதால், 40 கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிக்க முடியாமல், விலைவாசி உயர்வினாலும், தார் விலை உயர்வாலும், அங்கே வேலை செய்யும் காங்மேன் வேலையாட்களுடைய ஊதியம் ரூபாய் 150 என்று இருந்தது. இப்போது ரூபாய் 300

என்ற அளவுக்கு எல்லாம் உயர்ந்து விட்டதாலும், சாலைக் கற்களின் விலை ஏறிவிட்டதாலும், பொறியாளர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையாக செய்ய முடியாமல் இருக்கிறார்கள். இந்த ஒதுக்கீட்டை உயர்த்தி, சாலைப் பராமரிப்பை எந்த அளவுக்குச் செட்மையாகச் செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய, அதற்கான ஒதுக்கீட்டை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நிதியொதுக்கீடு எவ்வளவு அதிகமாகச் செய்யப்பட்டிருக்கிறதோ அதற்கேற்ற முறையிலே கோட்டப் பொறியாளர்களுக்கு இருக்கும் நடைமுறைகளை அதிகப்படுத்தும் நிலைமைகளைப் பரிசீலிக்கிறோம். கண்டிப்பாக இந்த ஆண்டில் அதிகமான தொகை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Houses Constructed by Cuddalore Municipality.*

*155. Q.—DR. T. R. JANARTHANAM (on behalf of THIRU A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether, under G.O. Ms. No. 315, Rural Development and Local Administration, dated 3rd March 1981, orders have been issued to the Municipal Council, Cuddalore, to sell 15 houses constructed by the Municipality under the Low-Income Group Housing Scheme to Municipal Employees on hire-purchase basis; and

(b) whether such sale of Municipal houses, will not cause difficulties to other Municipal Employees, who may require accommodation during their service in the Municipality?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) இல்லை.

### கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம்.

* 156. **வினா—திரு. வி. வி. வி. ஆனந்தம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?



(உ) இல்லை எனில், இத்திட்டம் எப்போது முடிவடையும்? அதற்கு ஆகும் செலவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) கிழக்குக் கடற்கரைச் சாலையை ஒரு வழிச் சாலையாக மேம்படுத்த ரூ. 52 கோடியும் இரு வழிச்சாலையாக மேம்படுத்த ரூ. 80 கோடியும் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி ரூ. 4 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டிணத்திற்கும் இராமநாதபுரத்திற்கும் இடையில் சாலை மேம்பாட்டுப் பணிக்கும், இராமநாதபுரத்திற்கும் கன்னியாகுமரிக்கும் இடையில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் சில முக்கிய பாலங்கள் கட்டுவதற்கும் பன்மாநிலத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள செயற்குறிப்பு (மாநில அரசால் அனுப்பப்பட்டு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது). சென்னையிலே இருந்து கன்னியாகுமரி வரை இந்தச் சாலையின் மொத்த நீளம் 773 கிலோ மீட்டர்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கிழக்குக் கடற்கரைச் சாலை என்பது புதிதாக அமைக்கப்பட்ட சாலையல்ல. ஏற்கெனவே சாலையில் எங்கெல்லாம் இடைவெளி, இருக்கிறதோ அதையெல்லாம் பூர்த்தி செய்து, துண்டிப்பு ஏற்படாமல் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை அமைக்கப்படும் திட்டம் தான். இந்தச் சாலை அமைப்பதன் மூலமாக நமக்குப் பயணம் செய்ய வேண்டிய தொலை தூரம் குறைகிறது. பெட்ரோல், டீசல் போன்றவற்றில் ஏற்படும் அதிகமான பணச் செலவும் குறைகிறது. இந்தத் திட்டத்தைப்பற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தியிருப்பதாக நம்முடைய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் மத்திய அரசு இந்தத் திட்டத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை மத்திய அரசு உணர்ந்திருக்கிறதா? அதன் சார்பாக ஏதாவது பதில் கடிதம் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்தத் திட்டத்தை ஏற்கெனவே மத்திய அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது. ஆனால் நிதிநிலை காரணமாக ஆறாவது திட்டத்திலாவது இதைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ஆனாலும் சேர்க்கப்படவில்லை. மேலும் இந்தச் சாலை மிக முக்கியமான சாலை. அதுவும் இது போர்க்காலத்திலே மிக மிக

அத்தியாவசியமான சாலையாக இருக்கும் என்பதில் மத்திய அரசுக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை, ஆனால் இருக்கின்ற கன்ஸ்ட்ரெய்ன்ட்ஸ் 'ஃபினான்ஷியல் டிஃபிக்கல்டிஸ்'தான். ஆகவே, நிதி நெருக்கடி என்ற முறையிலே தான் இந்தத் திட்டம் இன்னும் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறது. ஆனாலும், 4 கோடி ரூபாய் அளவிலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே 38 பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளைக் குறிப்பிட்டுச் சொல்லி, ஏற்கெனவே 4 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம், பாக்கியிருக்கிற தொகையையும் கொடுத்தால், உடனடியாக வேலையை முடிக்க உதவியாக இருக்கும் என்பது மட்டுமல்லாமல், இந்தச் சாலையின் மூலமாக ஏறத்தாழ 7 மாவட்டங்களை இணைக்கும் நிலைமை ஏற்படும் என்றும் சொல்லியிருக்கிறோம். சென்னை, செங்கை, தென்னாற்காடு, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 7 மாவட்டங்களையும் இணைக்கும் சாலையாக இருப்பதால், இந்தச் சாலையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இதற்கென்று தனியாக அந்தத் துறையில் அமைச்சரைப் பார்த்து உடனடியாக நிதியைக் கேட்க அடுத்த மாதத்திலே மத்திய அமைச்சரைப் பார்ப்பதாக இருக்கிறேன். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல் உடனடியாக சாலையைப் போட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை

(முற்பகல் 9.40)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாவட்டங்களில் தென்னாற்காடு மாவட்டமும் ஒன்றாகும். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயும், நெடுஞ்சாலைகள்—போக்குவரத்துக்கான கொள்கைக் குறிப்பின் விவாதத்தின்போதும், சிதம்பரத்திற்கும் கடலூருக்கும் இடையே உள்ள சாலையில் முட்டலூருக்கு அருகில் வெள்ளாற்றின் குறுக்கே ரூ. 50 லட்சம் செலவில் ஒரு பாலம் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்தத் திட்டமும் இந்தத் திட்டத்தோடு வருகிறதா? வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்படவிருக்கும் அந்தப் பாலத்திற்கான திட்டப் பணிகள் துவக்கப்பட்டு விட்டனவா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை, நாம் அதிகமான அளவுக்கு பணத்தைச் செலவிடும்போது சாலையை ஒட்டியிருக்கும் இத்தகைய பணிகளையும் சேர்த்தே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கருத்தாகும். நேற்றையதினம் சட்ட மன்றப் பேரவையில்கூட ஒரு வினா எழுப்பப்பட்டது. நாகர்கோயிலுக்கு





அருகில் உள்ள கீழ்மணல்மேடு மேல் மணல்மேடு ஆகிய இரு கிராமங்களையும் இணைக்கும் பாலத்தை ரூ. 80 லட்சம் செலவில் கட்ட வேண்டுமென்று கேட்கப்பட்டது. அந்தப் பாலம்கூட இந்தச் சாலையின் ஓரத்தில் வருகிற காரணத்தால், அதையும் இதோடு இணைக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நாம் மைய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மீண்டும் அதைப்பற்றிப் பேச இருக்கிறோம்.

**திரு. சி. இராமலிங்கம் :** நெல்லூரிலிருந்து ரெட் ஹில்ஸ் வழியாக ஒரு "பை-பாஸ்" ரோடு போடப்படுவதாக மத்திய அரசு அறிவித்து, அதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் காரணமாக, இக்கடற்கரையோரச் சாலை புறக்கணிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அனகாபுத்தூர் திரு. இராமலிங்கம் அவர்கள் நாள்தோறும் அந்தத் தடத்தில்தான் போக வேண்டியவர்களாக இருக்கிறார். அதைக்கூட கருத்தில் கொண்டிருக்கிறோம். எனவே கண்டிப்பாக, எவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இதை நடைமுறைப்படுத்த முயல்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இரயில்வே கட்டணம் வெகுவாக உயர்ந்ததன் காரணமாக இப்போது எல்லோரும் சாலைப் போக்குவரத்தைத்தான் நம்பியிருக்கிறார்கள். இதன் காரணமாக, நெடுஞ்சாலைகளை வாகனப் போக்குவரத்துக்கள் மிக அதிகமாகப் பயன்படுத்தும் நிலை உருவாகியிருக்கிறது. நெடுந்தூரப் பயணம் செய்ய விரும்புகிறவர்களும் சாலைகளைத்தான் பயன்படுத்துகிறார்கள்' என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நெடுஞ்சாலைகளைப் பொறுத்த வரையில், அவற்றை நல்லமுறையில் பராமரிக்க வேண்டும் என்பதற்குக் காரணமே வாகனப் போக்குவரத்துக்கு எந்தவிதமான தடையும் அங்கே இருக்கக்கூடாது என்பதுதான். ஆனால் பல காரணங்களால் போக்குவரத்து நெடுஞ்சாலைகளில் அதிகமாகிக் கொண்டிருப்பதால், வாகனங்கள் போக முடியாத நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதற்காகத்தான் அதை நெடுஞ்சாலை என்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: வாகனப் போக்குவரத்துக்குத் தான் நாம் அதை அதிகமாக உபயோகிக்க வேண்டும். பாத யாத்திரை போவோர் கிராமப்புறச் சாலைகளை வைத்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

திரு. க. அருணாசலம்: இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே கடற்கரையோரங்களில் எல்லாம் வெறும் மணலாகவே இருக்கிறது. இருந்தாலும் கீழ்க் கடற்கரையையொட்டி பாலங்கள் பலவற்றைக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பாலங்களையெல்லாம் இன்னும் பயன்படுத்தப்படாமலே இருக்கின்றன. அவற்றை பயன்படுத்தும் வகையில் அந்தப் பாலங்களையும் நெடுஞ்சாலைகளோடு இணைத்துவிட்டால், அதன் காரணமாக அந்த பிரதேச மக்களுக்கு வேலைவாய்ப்பும், அவர்கள் வளருவதற்கான சூழ்நிலையும் ஏற்படும் என்பதால், அரசு இதைப் பரிசீலனை செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இராமநாதபுரம் மாவட்டத்தில்கூட இதுபோன்ற பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கீழ்க்கடற்கரைச் சாலையையொட்டி, அதனோடு சேர்த்து பல்வேறு பாலங்கள் கட்டப்படவிருக்கின்றன. இதை ஒருவழிச் சாலையாக மேம்படுத்த வேண்டும் என்றால், ரூ. 52 கோடி நமக்குத் தேவைப்படுகிறது. பொதுவாக நாம் நெடுஞ்சாலைத் துறைக்காக ஆண்டுதோறும் ஒதுக்கும் பணம் சுமார் 22 அல்லது 23 கோடி ரூபாய்தான். ஆகவே ரூ. 52 கோடி ஒதுக்குவது என்பது மாநில அரசால் முடியாத காரியம் என்பதால், இதை மத்திய அரசுதான் கண்டிப்பாகச் செய்ய முடியும் என்றுதான், இருவழிப் பாதையாக, அதுவும் நெடுஞ்சாலைக்குரிய முறையில், இவை அமைக்கப்படவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அடுத்த மாதத்தில் இதுபற்றிப் பேசுகிறபோது இந்த ஆண்டிலேயே இதைத் துவக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 157 மற்றும் 158 ஒத்தி வைக்கப்படுகின்றன.

குழந்தைகள் காப்பகங்களில் பணியாற்றும் ஆயாக்கள்.

*159 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குழந்தைகள் காப்பகங்களில் பணியாற்றும் ஆயாக்களுக்கு வழங்கப்படும் ஊதியம் எவ்வளவு?





(இ) அவ்வூதியத்தை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) & (இ) குழந்தை நல காப்பகங்களில் பணிபுரியும் குழந்தைகள் நல உதவியாளர்களுக்கு மொத்த ஊதியம்/கௌரவ ஊதியம் ரூ. 30, ரூ. 40 மற்றும் ரூ. 50 என்று பல நிலைகளில் வழங்கப்பட்டு வந்தது. அண்மையில் ரூ. 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளில் பணியாற்றும் குழந்தைகள் நல உதவியாளர்களுக்கு சிறப்பு ஊதியம் ரூ. 25 மாதமொன்றுக்கு அளிக்கப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: குழந்தைகள் காப்பகங்களில் பணியாற்றும் ஆயாக்களின் பணியின் தன்மையை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நன்கு உணர்ந்திருக்கக்கூடும். நான் பல இடங்களில் அதைப் பார்த்திருக்கிறேன். குழந்தைகள் காப்பகங்களில் இருக்கும்போது, முழுப் பொறுப்பையும் அவர்கள் ஏற்று, பொறுமையுடனும், மிகுந்த சகிப்புத் தன்மையுடனும் பணியாற்றுகிறார்கள். அவ்வளவு பொறுப்பான பணியாற்றுவோருக்கு மாதம் ரூ. 60 ஊதியம் வழங்கப்படுவதென்பது போதுமானதல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே உணர்ந்திருப்பார்கள். எனவே அரசுத் துறையில் கடைநிலை ஊழியர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியத்தையாவது அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: ஆயாக்களுக்கு மாதம் ரூ. 30, ரூ. 40 மற்றும் ரூ. 50 என்று வழங்கப்பட்டு வந்ததை மாற்றி இப்போது மாதம் ரூ. 60 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதில் நாம் நிதிநிலைமையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. நிதிநிலை உயரும்போது, கடைநிலை ஊழியர்களுக்குக் கொடுப்பதைப்போல் இவர்களின் ஊதியத்தையும் உயர்த்தலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: ஆயாக்கள் என்னும் தாதியர்கள் எவ்வளவு பேர் தமிழ்நாட்டில் பணியாற்றுகிறார்கள்? ஆயாக்களின் எண்ணிக்கையை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அவர்கள் பெறும் ஊதியத்தின் அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். மாதம் ரூ. 40 ஊதியம் பெறுபவர்கள் 4,075 பேர் இருக்கிறார்கள். மாதம் ரூ. 45 ஊதியம் பெறுபவர்கள் 29 பேர் இருக்கிறார்கள். மாதம் ரூ. 50 ஊதியம் பெறுபவர்கள் 397 பேர் இருக்கிறார்கள். அங்கன்வாடிகள் 300 பேர் இருக்கிறார்கள்.

## பாலசேவிகாக்கள்.

* 160. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) குழந்தைகள் காப்பகங்களில் பணிபுரியும் பாலசேவிகாக்களுக்கு வழங்கப்படும் ஊதியம் எவ்வளவு ?

(இ) அவ்வூதியத்தை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (இ) பூந்தமல்லி யில் இயங்கும் ஒருங்கிணைந்த குழந்தை நல முன்மாதிரி திட்டத்தில் பணி புரியும் குழந்தைநல அமைப்பாளர்களுக்கும், தாய்-சேய் நல திட்டத்தின்கீழ் பணிபுரியும் குழந்தை நல அமைப்பாளர்களுக்கும் கால ஊதியம் ரூ. 325-10-445-15—550 என்ற விகிதத்தில் அளிக்கப்படுகிறது. இவர்களுக்கென்று பணியமைப்பு விதிகள் உண்டு. மற்ற குழந்தைநல நிலையங்களில் பணி புரியும் பணியமைப்பு விதிகளுக்கு உட்படாத குழந்தை நல அமைப்பாளர் களுக்கு மொத்த ஊதியம்/கௌரவ ஊதியம் ரூபாய் 90, ரூபாய் 100, ரூபாய் 125, ரூபாய் 150, ரூபாய் 165 மற்றும் ரூபாய் 175 என்று பல நிலைகளில் வழங்கப்பட்டு வந்தது. அவர்களுடைய மொத்த ஊதியம்/கௌரவ ஊதியம் அண்மையில் ரூபாய் 175-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. மலைப் பகுதிகளில் பணி புரியும் குழந்தை நல அமைப்பாளர்களுக்கு சிறப்பூதியம் ரூபாய் 25 மாதம் ஒன்றுக்கு அளிக்கப்படுகிறது.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : குழந்தைகள் காப்பகங்களில் பணி புரியும் " பால சேவிகாக்களுக்கு " குறைந்தபட்சக் கல்வித் தகுதி ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? அவர்களுக்கென்று பயிற்சி ஏதேனும் வழங்கப் படுகிறதா ? அப்படியானால் அந்தப் பயிற்சிக் காலம் எவ்வளவு ? அவர் களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான பள்ளிகள் தமிழ் நாட்டில் எத்தனை இருக்கின்றன ?

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1973-74 ஆம் ஆண்டுக்கு முன்பு எட்டாம் வகுப்பு முடித்த மக ளிரைத் தேர்வு செய்து அவர்களுக்கு மூன்று மாதம் பயிற்சி அளித்திருக் கிறோம். 1973-74 ஆம் ஆண்டுக்குப் பிறகு 11-வது வகுப்பு தேர்ச்சி பெற்ற வர்களுக்கு இரண்டு மாதம் பயிற்சி அளித்து அதன் வாயிலாக அவர்களுக்கு



வேலை கொடுத்துள்ளோம். 1973-74-ல் பள்ளி இறுதியாண்டு முடித்தவர் கள் தேர்வு செய்யப்பட்டு, இரண்டு மாதம் பயிற்சி கொடுக்கப்பட்டு அவர் களுக்குப் பணி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற கல்வியாண்டில், மூன்று வயது முதல் ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக் காக நர்சரி பள்ளியைப் போன்ற சிறார் பள்ளிகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு அரசின் சார்பாக வந்திருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் துவக்கப்படும்போது, இப்போது நடைபெற்று வருகிற இந்தக் குழந்தைகள் காப்பகங்களும் அதோடு இணைந்து செயல்படுமா அல்லது தானே செயல்படும் அளவிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா ? சிறார் பள்ளிகளோடு இணைந்து புதிய கல்வித் திட்டத்தை துவக்குவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இணைந்துதான் செயல் படுத்தப்படும். இப்போது குழந்தைகளைப் பாதுகாத்து, அவர்களுக்குச் சத் துணவை இலவசமாகக் கொடுத்து பள்ளிகளுக்குச் செல்லும் ஒழுங்கு முறையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். அதன் வாயிலாக வாயால் பேசக் கூடிய அளவிற்கு—ஸ்போக்கன் லாங்குவேஜ்—ஏ, பி, சி, என்று ஆங்கிலம் பயிலக்கூடிய அளவிற்கு நாங்கள் கிராமத்தில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்கப் போகிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. அருணாசலம் : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, இரண்டு மாதப் பயிற்சி கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்தப் பயிற்சிக் காலம் போதுமா ? போதும் என்றால், எந்த இடத்திலே இந்தப் பயிற்சியைக் கொடுப்பார்கள் ? இந்தப் பயிற்சிக்குரிய தகுதி என்ன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இரண்டு மாதப் பயிற்சிக் காலம் போதுமானதாகத்தான் கருதப்படுகிறது. ஏனென்றால் பெரும்பாலும் அவர்கள் தாய்மார்களாக இருக்கிறார்கள். தாய் என்றால் குழந்தைகளிடம் எவ்வளவு அன்பு காட்டுகிறார்கள் என்பது உங்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக் கிறேன். அந்த வகையிலே பெண்களுக்கு இரண்டு மாதம் பயிற்சி கொடுத் தாலே, குழந்தைகளை எப்படி அன்பாக நடத்த வேண்டுமோ அந்த முறையைக் ற்றுக்கொள்வார்கள்.

திரு. செ. முத்துசாமி : இத்தகைய பாலசேவிகா பள்ளிகளையும், பஞ்சாயத்து யூனியனில் நடத்தக்கூடிய பள்ளிகளையும், மற்றும் நாற்றங்கால் பள்ளிகளையும் அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொள்கையாகச் சொல்லியிருக்கிறார்கள். அது எப்போது நடைமுறைக்கு வரவிருக்கிறது ? அதற்கான திட்டங்கள் எப்போது வழங்கப் படவிருக்கின்றன ? அது செயல்படுவது என்பது எப்போது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பிறகு அறிவிக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

### 3—3—1982 அன்று 'மாலை முரசு' பத்திரிகையில் வெளியான செய்தி குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவா : 3—3—1982 அன்று "மாலை முரசு" பத்திரிகையில் வெளியான செய்தி குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்ப முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 3—3—1982 நாளிட்ட "மாலை முரசு" பத்திரிகையில், "தீய சக்திகளுக்கு இரையாகாதீர்கள்—கிறிஸ்தவர்களுக்கு வீரப்பன் வேண்டுகோள்" என்று செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துப் பேசும்போது, "சகோதர மனப்பான்மையோடு பழகும் அந்தப் பகுதி மக்கள் எந்த ஒரு தீய சக்திக்கும் இரையாகாமல் அமைதிக் குழு செயல்படும்" என்று கூறியதாக அதே பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நிலைமை இப்படியிருக்க "தீய சக்திகளுக்கு இரையாகாதீர்கள்—கிறிஸ்துவர்களுக்கு வேண்டுகோள்" என்று தலைப்பிட்டுவிட்



உள்ளே செய்தியைப் பார்க்கும்போது, "சகோதர மனப்பான்மையோடு பழகக் கூடிய அந்தப் பகுதி மக்கள் சகோதர மனப்பான்மையோடு பழக வேண்டும்" என்று பேசிய பேச்சையும் அந்தப் பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சருடைய பேச்சை வேண்டுமென்றே திருத்தி விஷமத்தனமாகச் செய்தி தரப்பட்டிருப்பதால், இந்தச் சபையினுடைய உரிமை மீறிய செயலாகிறது. ஆகவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இது குறித்து பத்திரிகை ஆசிரியரிடமிருந்து விளக்கம் பெற்ற பின் தீர்ப்பு பின்னர் வழங்கப்படும்.

## 3. கவன ஈர்ப்பு.

### (1) மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு இதுகாறும் உரிய ஊதியம் நிர்ணயம் செய்யப்படாமை குறித்து.

செல்வி ஆ. லீலாவதி (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு இதுகாறும் உரிய ஊதியம் நிர்ணயம் செய்யப்படாமையால், அத்தலைமையாசிரியர்கள் அல்லல் படும் நிலை குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

### (2) தமிழ் நாட்டில் மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்காக போலி மதிப்பெண் பட்டியல் பயன்படுத்தப்பட்டிருப்பது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தமிழ் நாட்டில் மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்காக போலி மதிப்பெண் பட்டியல் பயன்படுத்தப்பட்டிருப்பது குறித்தும், இது குறித்து சிலர் கைது செய்யப்பட்டுள்ளது குறித்தும்".

---

@ 99-ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து இரகசிய காவல் துறையினர் விசாரணை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இதுவரை இவ் விசாரணைக்காக 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். புலனாய்வு தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவர் அவர்களே, கோளாறிலே இது போன்ற முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு பத்திரிகைகளிலேகூட மிக விரிந்த அளவிலே செய்திகள் வந்திருக்கின்றன. அங்கே பல ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருப்பதாக நிரூபிக்கப்பட்ட நிலையில், நம்முடைய அரசே மனமுவந்து அதைப் போல இங்கே நடைபெற்றிருக்குமா என்பதைப்பற்றி ஆராய நடவடிக்கை எடுத்தது குறித்து பாராட்டுகிறேன். அரசே முன் வந்து இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றனவா என்பதைக் கண்டறிய நடவடிக்கை எடுத்திருப்பதால், இந்த நடவடிக்கையையொட்டி அரசுக்குக் கிடைத்திருக்கின்ற விவரங்கள் அனைத்தையும் இந்த அவையில் அறிவிப்பது நல்லது என்று கருதுகிறேன். பத்திரிகைகளில் வெளியான விரிவான செய்திகள் அளவுக்குக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே இல்லை. பத்திரிகையிலே வெளியாகி இருக்கும்போது, அதைவிட இன்னும் அதிகமான செய்திகள் வெளியாகும் என்ற அடிப்படையிலேதான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன்.

அதேபோல அண்ணாமலைப் பல்கலைக் கழக பல் மருத்துவக் கல்லூரி பட்டப் படிப்பில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகவும் அதன்மீது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கும் என்று கருதுகிறேன். இவை எல்லாவற்றையும் குறித்து அரசுக்குக் கிடைத்துள்ள தகவல் அனைத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவையில் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், மெடிக்கல் காலேஜ் அங்கே இல்லை. பி.டி.எஸ். என்ற பல் மருத்துவப் படிப்புதான் இருக்கிறது. இங்கே சென்னையிலே consequent on discreet interrogation, a student of the First Year B.D.S. was nabbed by the Crime Branch C.I.D., at his residence at Katpadi என்ற எல்லா முழு விவரங்களையும் வைத்துக் கொண்டிருக்கிறேன். நாம்





இதிலே கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. எல்லா விவரங்களையும் அதிகாரபூர்வமாகக் கொடுத்தால், அவர்கள் உஷாராகி விடுவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். ஆகவே எச்சரிக்கையாகக் கண்டுபிடித்திருக்கிறோம். இதுதான் சென்னையைப் பொறுத்த வரையில் நிலைமை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், நான் பத்திரிகையில் படிக்கவில்லை. அது குறித்து அதிகாரபூர்வமாகத் தகவல் இல்லை. உறுப்பினருக்கு எந்தத் தகவல் கிடைத்தாலும் தைரியமாக, சங்கோஜம் இல்லாமல் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே நாம் மிகத் தீவிரமாக இருக்கிறோம். இதைப் பொறுத்த வரையில், அதிகாரிகள், அரசாங்கத்தில் இருக்கக்கூடிய அமைச்சர்கள், அங்கே இருக்கக்கூடிய சி.ஐ.டி. துறையினர் அத்தனை பேரும் சேர்ந்து மிக ஜாக்கிரதையாகக் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதன் அடிப்படையிலே அரசாங்கமே இதைக் கவனித்திருப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் பாராட்டியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நாமாகவே கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், சில இடங்களில் போலி சர்ட்டிபிகேட்டுகளைத் தயாரிப்பதை ஒரு கலையாகவே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகக்கூட நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். அண்மையிலே கூட ஒரு உத்தரவை இட்டிருக்கிறோம். எல்லா மெடிக்கல் காலேஜ் அட்மிஷனும் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

(முற்பகல் 10-00)

எந்த ஒரு அட்மிஷனாக இருந்தாலும் we would not take it for granted. We will have it investigated again. மீண்டும் யாராக இருந்தாலுங்கூட, every admission will be subject to severe scrutiny once again. கொஞ்ச நாட்களில், ஒவ்வொரு நாளைக்' 10 அல்லது 15 என்று வைத்துக் கொண்டு ஆய்வு செய்யலாம். எல்லாவற்றையும் 'ஸ்க்ரூட்டினைஸ்' செய்ய வேண்டும். பழைய ரெக்கார்டுகள் எல்லாவற்றையும் பார்த்து சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். மீண்டும் கிளியராக ஆய்வு செய்து அவைகள் அரசாங்கத்தினுடைய பார்வைக்கு புலனாய்வுத் துறையினுடைய

பார்வைக்குக் கொண்டு வரப்படும். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், எப்பேர்ப்பட்டவர் இதில் தவறு செய்திருந்தாலும்கூட, அவர்கள்மீது தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும். அதைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யலாம். அவ்வப்போது பத்திரிகைகளிலே சமாசாரம் வருகிறது. ஆனால் நாம் இந்த மன்றத்திலே சொல்லும்போது, அதிகாரபூர்வமானதாக திட்டவட்டமான அறிவிப்பைத்தான் செய்ய முடியும். இன்னும் கொஞ்சம் அதிகமாகவே கிடைத்திருக்கும் தகவலைக்கூட மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறேன். யாருக்கும் எந்தத் தகவல் இதைப்பற்றிக் கிடைத்தாலும், அதை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட கேஸ் இருக்கிறது. Crime Branch C.I.D, Cr. No. 9/82, under sections 420, 468 and 471, I.P.C. was registered on 16th February 1982 and investigation is being taken up இப்போதைக்கு எந்தத் தகவலும் கொடுக்கவில்லை என்ற குறைபாடு இருக்க வேண்டாம் என்பதற்காக அந்தத் தகவல் மட்டும் கொடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, இந்த முறைகேடான வேலைகளில், மோசடி வேலைகளில் எந்தப் பெரிய சக்தி ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இனி தமிழகத்திலே இப்படிப்பட்ட நடவடிக்கைகள் வராத அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அட்மிஷனில் மட்டுமல்லாமல், மாணவர்கள் தேர்வுகளில்கூட சில முறைகேடுகள் நடைபெறுகின்றன. அதிலே குறைந்தபட்ச மார்க்குகளை மாற்றி கூட்டிப் போடுவதாகவும் அதிலும் முறைகேடுகள் நடப்பதாகவும் தெரியவருகிறது. There will be no smoke without fire. அது குறித்துக்கூட அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அப்படிப்பட்ட முறைகேடுகளைத் தடுத்து நிறுத்த, புலனாய்வுத் துறையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இனிமேல் இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் நடக்காமல் இருக்கத் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சில தகவல்கள் சொன்னார்கள். இது மட்டுமல்ல, எல்லாத் தேர்வுகளும் நடத்துகிறோம். நாம்



செலக்ஷன் நடத்தினால், அதிலேகூட என்னென்ன கொஷ்டியன்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம்பற்றித் தகவல் வரவழைத்து நாமாகவே நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மேலும் நமக்குத் தகவல்கள் கிடைக்கும். தகவல்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நாங்கள் செலுத்த வேண்டிய கவனத்தை தீவிரமாகச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். எந்த வகையில் நாம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிவிட்டால், அவர்கள் உஷாராகி விடுகிறார்கள். நாம் எச்சரிக்கையோடு செய்கிறோம். பொதுவாகச் சொல்கிறேன். கோளாறிலே தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்த பிறகுதான், நாமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இவைகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது கம்ப்யூட்டர் சிஸ்டம்பற்றிச் சொல்கிறார்கள். அந்தக் கருத்தும் நமக்கு இருக்கிறது. கம்ப்யூட்டரைப் பொறுத்தவரையில், கம்ப்யூட்டரைப் போன்ற வேறு கம்ப்யூட்டர் கூட வைத்துக்கொண்டு சில காரியங்களை நடத்துவதாகவும் சொல்கிறார்கள். நம் நாட்டில் இப்படிப்பட்ட சமாசாரங்கள் எல்லாம் நடக்கின்றன. அதையெல்லாம் கண்டுபிடித்து, அது யாராக இருந்தாலும்கூட, நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய கம்ப்யூட்டரைக் கூட 'டூப்ளிகேட்' செய்துவிடுபவர்கள் இருக்கலாம். ஃபேக் ரூபாய் நோட்டுக்கள் போடுபவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அதுமாதிரி இதையும் செய்து வருகிறார்கள். அதுவெல்லாம் நடைபெறாமல் செய்ய வேண்டும். திட்டவட்டமாக அது எப்பேர்ப்பட்ட சக்தியாக இருந்தாலும், தயவு தாட்சண்யம் காட்டாமல் நடவடிக்கை எடுக்கலாம். அதுபற்றி தகவல்களை அரசுக்கு யார் கொடுத்தாலும், அதை சி.ஐ.டி. டிப்பார்ட்மெண்ட்டுக்கு அனுப்பி ஃபீட் செய்தால், சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்— தொடர்ச்சி.

திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அவையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதனை நான் முழு மனதோடு ஆதரித்து வரவேற்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே எங்களுடைய கைத்தறி நெசவாளத் தொழிலாளர்களுக்காக கிட்டத்தட்ட 5வது ஐந்தாண்டுத் திட்டத்திலே 27 கோடி ரூபாயும், 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே 84 கோடி

ரூபாயும் ஒதுக்கி, எங்களுடைய வாழ்க்கையை மிகவும் வளமுள்ளதாக்க முனைந்துள்ள நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை நான் பாராட்டுகிறேன்.

அதுபோலவே பட்டு நூல் உற்பத்தி செய்வதற்கு, பட்டுப் புழுக்கள் வளர்க்க, கிட்டத்தட்ட 45 ஏக்கரைப் பயன்படுத்த அரசு முன் வந்திருக்கிறது. அதனால் பட்டு உற்பத்தி அதிகமாகும். தென் மாநிலத்திலே குறிப்பாக கர்நாடக மாநிலத்திற்குச் சென்றும் நார் பட்டு விலைக்கு வாங்கி வந்து இங்கே தொழில் செய்யவேண்டியிருக்கிறது. அந்த மாநிலத்திலே பட்டை வைத்துக்கொண்டு, அங்கே காலை ஒரு விலை மாலை ஒரு விலை என்று விற்கிறார்கள். அங்குள்ள வியாபாரிகள், கூட்டுறவுச் சங்க நெசவாளர் அங்கே சென்றால், "பொழுதுபோனால் வராது, பொழுது போனால் நிற்காது, நீங்கள் இன்றைக்கு வாங்காவிட்டால் உங்களுக்கு நாளைக்குக் கிடைக்காது" என்று சொல்லிக்கொண்டு, ரூ. 350 என்று ஆரம்பித்து ரூ. 550 என்று விலையை அதிகமாக்கி விடுகிறார்கள். அப்படி விலையை ஏற்றி முடிப்பார்கள். வேறு வழியில்லாமல் அதை வாங்கிக்கொண்டு வந்து, இன்றைக்கு நாங்கள் அந்தப் பட்டை உற்பத்தி செய்கிறோம். குறிப்பாக கடந்த மூன்று நான்கு மாதங்களுக்கு முன்னால், அசல் பட்டு என்று சொல்கின்ற அந்தப் பட்டு பெங்களூர் மார்க்கெட்டிலே ரூ. 350 ஒரு கிலோ என்று விலை விற்றது. ஆனால் அது படிப்படியாக ஏறி, ரூ. 700க்கு வந்துவிட்டது. ஏழை நெசவாளர்களாகிய நாங்களும், அதுபோலவே கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற நாங்களும் அந்தப் பட்டை வாங்கி பட்டுத் துணி நெய்தால், விலை அதிகமாக விற்கவேண்டியிருக்கிறது. அதனால் உற்பத்தி இல்லாமல், அதற்கு வாய்ப்பு இல்லாமல் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிட்டது. அதேநேரத்திலே காஞ்சீபுரம் பட்டு, ஆரணிப் பட்டு, திருப்புவனம் பட்டு என்று விரும்பி விரும்பிக் கேட்டு வாங்கி அணிகின்றவர்கள் இன்றைக்கு ரூ. 300 என்று இருந்த விலையை உயர்த்தி ரூ. 700 அளவுக்கு விற்கிறதே என்று கேள்வியைக் கேட்கிறார்கள். அதனால் வியாபாரமும் ஆகவில்லை.

என்னுடைய தலைமையிலே சமீபத்திலே டெல்லிக்குச் சென்று நமது மாண்புமிகு பிரதமர் அவர்களை அணுகி ஒரு மகஜரைக் கொடுத்தோம். இந்த நெசவாளர்கள் நிலைமைகளை எடுத்துச்சொன்னார்கள். கிட்டத்தட்ட 80 கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும், 20க்கு மேற்பட்ட பட்டு உற்பத்தி செய்யும் நெசவாளர்களும், வியாபாரிகளும் சென்று அந்த அம்மையாரிடம் சொன்னோம். அப்படி டெல்லியில் நிலைமைகளை எடுத்துக்கூறிய பின்,—



அதாவது நாங்கள் 28 ஆம் தேதி போய்ப் பார்த்தோம்—30 ஆம் தேதி அன்று இந்திய பட்டு உற்பத்தி இயக்குநர்களையெல்லாம் கூப்பிட்டு, ஆலோசனை செய்து, பட்டுத் தேவையை உணர்ந்து உடனடியாக சைனாவிலே இருந்து 250 டன் பட்டு இறக்குமதி செய்ய ஒரு உத்தரவினைப் போட்டார்கள். அதற்காக நான் நெசவாளர் சார்பிலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பிலும் அந்த அம்மையார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்து உறுதுணையாக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கும் நான் நெசவாளர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏன் இதைச் சொல்கின்றேன் என்றால், நெசவாளர்களுக்கு என்று இந்த அரசு எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே பலர் பலவிதமாகப் பேசினார்கள். இங்கே விவாதத்திலே பேசும்போது 'செஞ்சோற்றுக் கடன்' என்று சொன்னார்கள். நாய்க்கு உணவளித்தால், அந்த நாய் சாகும் வரையிலே எஜமானனிடத்தில் நன்றியுடன் இருக்கும் என்பார்கள். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. நீலநாராயணன் அவர்கள் என்னைப் பற்றியே சொன்னார்கள். செஞ்சோற்று வரிசையிலே இருக்கிறார் என்று சொன்னார்கள். அவர் என்னைப்பற்றிக் குறிப்பாகச் சொன்னதால், தற்போது அவர் அவையில் இல்லை என்றாலும், என்னுடைய கருத்தை இந்த அவையிலே சொல்லுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். செஞ்சோற்றுக் கடன் என்று சொல்கிறார்கள். ஒரு தலைவர் என்று இருந்தால், அவருக்கு ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தொண்டர்கள் இருக்கின்றார்கள். அத்தனை பேர்களும் அந்தத் தலைவருக்குச் செஞ்சோற்றுக் கடன் ஆற்றுகின்றார்கள் என்று சொவதா? டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இருக்கும் தொண்டர்கள் எல்லாம் செஞ்சோற்றுக் கடனுக்காக இருக்கிறார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே 7 ஆண்டுக் காலம் ஆட்சியிலே அவர்கள் செய்த தவறுகள் எத்தனை? கொள்ளை அடித்தது எவ்வளவு? அவர்கள் வாங்கிக் கொள்கின்றவர்களாக, கொள்ளைக் கூட்டமாக இருக்கிறார்களா என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். செஞ்சோற்றுக் கடன் என்பது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : செஞ்சோற்றுக் கடன் என்றால் என்ன என்று சொல்கிறார் அங்கத்தினர்.

**திரு. சி. இராமலிங்கம்** : செய்த வேலைக்கு கிடைக்கக்கூடிய உணவு செஞ்சோற்றுக் கடன் என்று பெயர் சொல்வார்கள். வேலை செய்ததற்குச் சாறு போடுவார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : செஞ்சோறு என்று சொல்லும்போது அது சிவப்பு வண்ணத்தைக் குறிக்கும். சிவப்போடு அந்த வர்ணத்தோடு உள்ள சோற்றைச் சாப்பிடுவதையும் அது குறிக்கிறதா ? அந்த அடிப்படையிலே செஞ்சோறு என்று சொல்லப்படுகிறதா ? அதற்கு என்ன பொருள் என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

டாக்டர் இரா. சனார்த்தனம் : துணைத் தலைவரவர்களே, புலவராகிய தாங்களே சொல்ல வேண்டும், 'செய்த சோறா' அல்லது 'சிவந்த சோறா'.

திரு. சி. இராமலிங்கம் : வெள்ளைக்காரனை விரட்ட வேண்டுமென்ற தேசிய உணர்வோடு காங்கிரஸ் என்ற இயக்கத்தை ஒரு வெள்ளைக்காரன்தான் ஆரம்பித்தான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 'செஞ்சோறு' என்பது செம்மையான சோறு. கைமாறு கருதாது அளிக்கப்பட்ட சோறு.

திரு. சி. இராமலிங்கம் : தலைவரவர்களே, நீங்கள் படித்தறிந்தவர்கள் செய்து, கட்டிக் கொடுத்த சோறுதான் செஞ்சோறு. (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 'செய்த சோறு', 'செஞ்சோறு' ஆகாது. செம்மையான சோறுதான் செஞ்சோறாகும்.

திரு. சி. இராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : கொடுத்துச் சிவந்த கரம் கொடுத்ததால் செஞ்சோறு ஆகியிருக்கலாம்.

திரு. சி. இராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே, நான் இன்னொரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால், அதிகம் குறுக்கீடு இல்லாமல் இருந்தால், என்னுடைய பேச்சை சீக்கிரம் முடித்துக்கொள்ள முடியும்.

காங்கிரஸ் இயக்கம் ஆரம்பித்து அதில் லட்சக் கணக்கான பட்டம் பெற்ற, பதவி பெற்றவர்கள் எல்லாம் தொண்டர்களாகச் சேர்ந்தார்கள்.. அதன் பிறகு மகாத்மா காந்தி அவர்கள் அதன் தலைமையை ஏற்றார்கள். அவர்கள் பின்னால் சென்றவர்கள் எல்லாம் செஞ்சோற்றுக்காகச் சென்றார்களா ? அவர்கள் அந்நிய நாட்டிடமிருந்து நம்முடைய நாடு விடுதலை பெற மாபெரும் தியாகங்கள் செய்து, ஒரு தலைவன் பின்னால் செல்லுவது செஞ்சோற்றுக் கடன் என்றால், எப்படி அதை ஏற்றுக்கொள்ள முடியும் ? வறுமையில் வாடிக் கொண்டிருந்த பிராமணர் அல்லாதார் சங்கம் ஆரம்பித்தார்கள்—தென் இந்தியர் நல உரிமை சங்கம் என்று தியாகராசச் செட்டியார், நாயர், நடேச முதலியார் ஆகியோர் ஆரம்பித்தார்கள். அப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பில் 30 ஆண்டுக்காலம் இருந்தது. அவர்கள் பின்னால் சென்றது செஞ்சோற்றுக் கடனா ?





மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களும், நானும் மற்றவர்களும் மகிழ்ச்சியோடு தந்தை பெரியார் அவர்கள் இயக்கத்தில் பணியாற்றினோம். அவருடைய இயக்கத்தில் பணியாற்றினோம் என்றால் செஞ்சோற்றுக்காகவா ? சாதி மதபேத ஊழல்களிலிருந்து, சாதிகளின் அடிப்படையில் அடக்கி ஆளப்படும் நிலையிலிருந்து விடுதலை பெற, மதமற்ற மக்களாக வர வேண்டுமென்பதற்காக பெரியார் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் நல்ல தொண்டாற்ற வேண்டுமென்று திராவிடர் சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார்கள். அவர்கள் பின்னாலே சென்றவர்கள் எல்லாம் செஞ்சோற்றுக் கடன் பட்டவர்களா ? அதற்குப் பின்னாலே கலைஞர் அவர்கள் பின்னாலே சென்றவர்கள் செஞ்சோற்றுக் கடன்பட்டவர்களா ? இவர்கள் எல்லாம் செஞ்சோற்றுக் கடன் பட்டவர்கள் என்றால், நான் அதை ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே சர்க்கார் ஊழியர்களுக்கு எந்தவிதச் சலுகையும் இல்லை, ஆசிரியர்களுக்கு எதுவும் இல்லை, இவர்களுக்கு இல்லை, அவர்களுக்கு இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். நான் கேட்கிறேன், இன்றைக்குப் பணிவன்போடு ஆட்சிப் பொறுப்பிலே இயந்திரங்களாக இருக்கக்கூடிய சர்க்கார் அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறேன், "உங்களுக்குத் தேவை என்று கோரிக்கை வைக்கிறீர்கள். ஆனால் நீங்களெல்லாம் கிராமங்களிலிருந்து வந்தவர்கள்தான். அங்கே உங்கள் உற்றார், உறவினர்கள் வறுமையில் இருக்கிறார்கள். இருந்தும் அவர்கள் வரி கொடுக்கிறார்கள். அந்த வரியை வைத்து ஆட்சி நடக்கிறது." கிட்டத்தட்ட 12 லட்சம் என்.ஜி.ஓ.வினர் ஆசிரியர்களையும் சேர்த்து. அது இல்லை, இது இல்லை, எங்களுக்குப் பிள்ளை இல்லையா, குட்டி இல்லையா என்று கேட்கிறார்கள். வறுமையிலே இருக்கும் ஏழை எளிய மக்கள் சுதந்திரம் கிடைத்தால் சுபிட்சமாக இருப்பார்கள், பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடுமென்று சொல்லி, மகாத்மா காந்தி அவர்கள் தலைமையில் சுதந்திரம் பெற்றோம். சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகள் ஆகியும், யார் ஏழைகளுக்காகச் சிந்திக்கிறார்கள் ? படித்துவிட்டு, எப்படியாவது வேலைக்கு வந்து, ஒரு கூட்டமாக சங்கத்தை அமைத்துக்கொண்டு, இந்த நாட்டை ஸ்தம்பிக்க வைப்பது யார் ? நான் வாழ வேண்டுமென்ற சுய நலக் கோடி இந்த நாட்டு மக்களில் கிட்டத்தட்ட 15 சதவிகிதத்தினர். நீ எக்கேடு கெட்டுப் போ எந்த வரியாவது போடு. எங்களுக்குக் கோடி என்று சொன்னால், எந்த மனித சமுதாயம் மன்னிக்கும் ? பல முறை இதைப்பற்றிப் பேசியிருக்

கிறார்கள். எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்த நாட்டு மக்களை, ஏழைகளிலும், நகர்ப்புறங்களிலும் பள்ளிக்கூடத்திற்கு வருகிற ஏழையெளிய பிள்ளை நீங்கள் பிறந்த சாரி, ஊர், நாடானாலும் அங்கே உள்ள மக்களைச் சிந்தித்துப் பார்த்துவிட்டு, அதன் பிறகு ஆட்சியாளர்களைப் பார்த்து பண உதவி கேளுங்கள், பதவி உயர்வு கேளுங்கள். இந்த நாட்டிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் கிட்டத்தட்ட வறுமையிலே இருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா? சட்டமன்றத்தில் நான் எம்.எல்.சி.யாக இருக்கலாம். எனக்குப் பின்னாலே 4½ லட்சம் நெசவாளர்கள் அவர்களை நம்பி வாழக்கூடிய 25 லட்சம் பேர்கள் ராப் பட்டினி, பகல் பட்டினி என்று இருக்கிறார்கள். பாதை ஓரங்களிலே எவ்வளவு பேர்கள் கையையே தலைக்கு வைத்து, வானத்தையே கூரையாகக் கொண்டு படுக்கிறார்கள். நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகாத்மா காந்தி அவர்கள் சொன்னதைப் பின்பற்றுகிறோமா என்பதைப் பார்க்க வேண்டும். சலுகை வேண்டுமென்று சொல்லும்போது, மகாத்மா காந்தியை நினைக்கிறோம். சலுகையை மறுக்கும்போது அவராவது, இவராவது என்று நினைக்கிறோம். ஏழை மக்களை ஓரளவிற்குச் சிந்திக்க வேண்டுமென்று படித்து, உத்தியோகத்தில் இருக்கக் கூடியவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகளாகியும் இந்த நாட்டிலே பிச்சை எடுக்கிறார்கள். இவர்களைப்பற்றி ஏன் சிந்தித்து ஒரு முடிவிற்கு வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். . .

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் அவசரமாகச் செல்ல வேண்டுமென்று சொன்னதால், நான் குறுக்கிடக்கூடாதென்றுதான் நினைத்தேன். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஏன் கேட்கிறார்கள் என்று கேட்டார்கள். எனவே ஒரேயொரு விஷயத்தைச் சொல்ல வேண்டியதாகிவிட்டது. படித்தவர்கள், உத்தியோகத்தில் உள்ளவர்கள் நாட்டிலே விலைவாசி உயர்வதால் ஊதிய உயர்வு கேட்கிறார்கள். சாதாரண ஏழை மக்களும் சங்கங்களை அமைத்துக்கொண்டு, போராட்டங்களில் இறங்கும்போது அரசின் நிலை என்ன? இன்னொன்று, இப்போது ஏழை மக்களுக்குச் செய்யக்கூடாதென்று யார் தடுத்தார்கள்? ஏழை மக்களுக்காக என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள்? எத்தனை மாதங்களில் அவர்களுக்கு மாதம் 200 ரூபாய் கொடுக்க முயற்சி செய்யப்போகிறார்கள்? சொல்லட்டும். அதுவரை காத்திருக்கத் தயார். திட்டத்தை அறிவிக்கட்டும்.

திரு. சி. இராமலிங்கம்: நான் பேசிக்கொண்டு வந்ததை மாண்புமிகு உறுப்பினரவர்கள் பூராவும் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். அவர்கள் நிதிநிலை அறிக்கையையும் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். நான்



பேசிய பிறகு, அவர்கள் பேசும்போது பதில் சொல்லலாம். நான் பேசுகிறேன் என்றால், 5½ கோடி மக்கள் சார்பாகப் பேசுகிறேன். குந்தக் குடிசைகூட இல்லாத அவர்களைப்பற்றிப் பேசுகிறேன். மேதகு ஜனாதிபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார் என்றால், நீங்கள் அதைப் பொருட்படுத்தமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இந்திய ஜனாதிபதி, நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள், இந்த நாட்டிலே படித்தவர்கள் சங்கம், அமைப்பு என்று வைத்துக்கொண்டு போராடுகிறார்கள், ஆனால் சாலை ஓரங்களில் உள்ள மக்களைப்பற்றி யார் கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்காக, ஏழை மக்களுக்காக இந்த அரசு 100 கோடி ரூபாய் அளவில் மதிய உணவுத் திட்டம் கொண்டு வந்திருக்கிறது. ஆசிரியர் பிரதிநிதி, திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் முந்தாநாள் பேசினார்கள். "என்ன திட்டம் இது? காமராஜர் கொண்டுவராத திட்டமா; அவர் கொண்டு வராத திட்டமா; இவர் கொண்டு வராத திட்டமா மதிய உணவு?" என்று சொன்னார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலேதான் அத்திட்டம் கொண்டு வரப்பட்டது. என்னுடைய பிள்ளைகளெல்லாம் அதை உண்டு மகிழ்ந்து, படித்தார்கள். இல்லையென்று சொல்லவில்லை. பள்ளிக்குப் போகும் பிள்ளைகளுக்கு மட்டும் அந்தத் திட்டம் இருந்தது. கேர் நிறுவனத்தின் யாசகத்தில், அவர்கள் இட்ட பிச்சையில் நன்கொடையில் இன்றைக்கும் அந்த மதிய உணவுத் திட்டம் நடைபெறுகிறது. நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் சொன்னார்கள். "கார்ப்பரேஷன் பள்ளிகளிலே இன்றைக்கு மதிய உணவு கொடுக்கிறார்கள், வாயிலே வைக்க முடியவில்லை, அவர்கள் பள்ளம் தோண்டிப் புதைக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அந்தப் பள்ளிகளிலே பணியாற்றுகிறவர்களே, ஆசிரியர்களே அவர்களைத் திருத்தலாம். அவர்களே சொல்லலாம் இந்த நிலை ஏன் என்று. இந்த அளவிற்கு ஏன் ஆக்கிப் போட வேண்டுமென்று கண்டிக்கலாம் சங்கத்தின் மூலமாக. ஆக புரட்சித் தலைவர் அவர்கள் பள்ளிக்குப் போகும் பிள்ளைகளுக்கு மட்டும் மதிய உணவு போடவில்லை. நாட்டிலே ஏழை எளிய மக்களுக்கு, வேலைக்குப் போகும் பெற்றோர்களின் குழந்தைகள் மரத்தடியில் விழலாமா, கிணற்றடியில் விழலாமா என்று தவித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-20).

இந்தத் திட்டம் எவ்வளவு சிறப்பானது என்பதைப்பற்றி கற்றறிந்தவர்களுக்குத் தெரியும். இந்தச் சமுதாயத்தில் ஏழையெளியவர்கள் மீது

உள்ளன்பு கொண்டவர்களுக்குத் தெரியும். நாம் எதற்காக சுதந்திரம்
பெற்றோம் என்பதை அறிந்து கொண்டவர்களுக்குத் தெரியும். அதனால்
தான் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் அருணாசலம், தாமஸ்
போன்றவர்கள் இன்னும் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களைப்
போன்றவர்கள் எல்லாம் வரவேற்றார்கள். "உண்டி கொடுத்தோரே உயிர்
கொடுத்தோர்" என்று சொல்வார்கள். ஆசிரியர்களும், அரசு ஊழியர்
களும் கோரிக்கைகளை வைக்கிறார்கள். அவர்களை நான் ஒன்று
கேட்கிறேன், "உங்களுடைய கோரிக்கைகளை தயவுசெய்து 5 ஆண்டு
களுக்கு நிறுத்தி வையுங்கள். உங்களை விட ஏழ்மை நிலையில் இருக்கக்
கூடிய 5½ கோடி ஏழையெளியவர்களைப் பற்றி 5 ஆண்டுகள் சிந்திப்போம்.
அவர்களையும் முன்னேற்றுவோம். அப்படிச் செய்வதன் மூலம் கோடிக்
கணக்கான மக்களை அருள்கூர்ந்து வாழ வையுங்கள்" என்று கூறி என்
உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது
சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை
யில் ஒருசில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இதை நாங்கள் ஏற்கெனவே
பேசும்போதே ஒப்புக் கொண்டிருக்கிறோம். நான் ஒரு ஆசிரியர் பிரதி
நிதி என்கிற கண்ணோட்டத்தில் இந்த நிதி நிலை அறிக்கையை ஆராய்ந்து
பார்த்தால், எங்களுக்கு முழு ஏமாற்றம்தான் ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள்
சார்பாக நான் பார்த்ததில் எனக்கு முழு ஏமாற்றம் ஏற்பட்டது. ஆசிரியர்
பிரதிநிதிகள் ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டவாறு, சாதாரணமாக நிதி
நிலை அறிக்கையில் ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் அளிக்க
வேண்டிய சில சலுகைகளைக் கூட இந்த நிதி நிலை அறிக்கையில் அளிக்க
வில்லை. இது உண்மையிலேயே எங்களுக்கு வருத்தத்தையும் வேதனையை
யும் அளிக்கிறது. குறிப்பாக அகவிலைப்படி உயர்வு போன்ற அரசினால்
ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை பற்றிக்கூட ஒரு அறிவிப்பு காணவில்லை
என்பது குறித்து எங்களுக்கு வருத்தம்தான். மத்திய அரசு இது குறித்து
சட்டபூர்வமாக அறிவிக்கவில்லையென்று ஆளும் தரப்பிலிருந்து சொல்லுவார்கள்
என்று நாங்கள் எதிர்பார்த்தாலும்கூட, மத்திய அரசு எப்படி தன்னுடைய
கொள்கையை அறிவித்திருக்கிறதோ அது போல நம்முடைய அரசும் மத்திய
அரசின் அறிவிப்பு வந்தவுடன் அதைத் திட்டவட்டமாகச் செயல்படுத்து
வோம் என்று சொல்லியிருந்தால், அதை நாங்கள் வரவேற்றிருப்போம். ஆனால்
அத்தகைய ஒரு அறிவிப்பும் இதில் இல்லை. சாதாரணமாக அளிக்க வேண்டிய





சலுகைகளைக்கூட அரசு இதில் சொல்லவில்லை. இன்னும் சில ஆண்டு
களுக்கு ஆசிரியர்களுடைய, அரசு ஊழியர்களுடைய கோரிக்கைகளைத்
தள்ளி வையுங்கள், ஒத்தி வையுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு.
இராமலிங்கம் கேட்டார். நான் ஒன்றை அவருடைய தகவலுக்காகச்
சொல்கிறேன். ஆசிரியர்கள் எந்த ஒரு புதிய கோரிக்கையையும் வைப்ப
தில்லை. ஏற்கெனவே இருக்கின்ற கோரிக்கைகளைப் பற்றித்தான் பேசி
வருகிறோம். ஏற்கெனவே இருக்கின்ற முரண்பாடுகள், ஒரு நிலை ஆசிரிய
ருக்கும், அதே நிலை ஆசிரியருக்கும் இருக்கின்ற ஊதிய முரண்பாடுகள்
பல்லாண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகள். அரசுத்
தரப்பிலிருந்தும், அமைச்சர்களிடத்திலிருந்தும் பெறப்பட்ட உறுதிமொழிகள்
போன்றவைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை, நிறைவேற்றப்பட
வில்லை என்கிற குறிப்புகளைத்தான் நாங்கள் திரும்பத் திரும்ப சொல்லிக்
கொண்டிருக்கிறோம். ஆகவே புதிய கோரிக்கை எதையும் நாங்கள் வைப்ப
தில்லை.

அதே நேரத்தில் எங்களுக்கு சமுதாய உணர்வு இருக்கிறதா இல்லையா
என்று கேட்டால், நிச்சயமாக எங்களுக்கு இருக்கிற சமுதாய உணர்வு,
சமுதாயக் கண்ணோட்டம் போல் மற்றவர்களுக்கு எந்த விதத்திலும் இருக்க
முடியாது. மற்றவர்களுக்கு இருக்கின்ற உணர்வில் நாங்கள் எந்த அளவி
லும் சளைத்தவர்கள் அல்ல, குறைந்தவர்கள் அல்ல. இன்று கிராமப்புறங்
களிலும், நகர்ப்புறங்களிலும் வருகிற ஏழையெளிய பிள்ளைகளை
பள்ளிக்கூடங்களுக்கு வந்து பார்த்தால், தலையில் எண்ணெய் இல்லாமல்,
கண்களில் பீழை ஒழுகிக் கொண்டிருக்கின்ற நிலையில், கந்தல் ஆடையுடன்
ஒருவேளை உணவுகூட உண்ண வசதியில்லாமல், சுகாதாரக் கேடுடன்
வருகின்ற காட்சியைப் பார்க்கலாம். அப்படி வருகின்ற குழந்தைகளுக்குக்
கூட ஆசிரியர் பெருமக்கள் பொறுமையாக, சகிப்புத் தன்மையிலிருந்து
வழுவாமல் நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள்.
சமுதாயத்தினுடைய எந்த நிலையிலிருந்து வந்தாலும், எத்தகைய ஒரு
ஏற்றத்தாழ்வையும் பாராமல் ஒட்டுமொத்தமாக அத்தனை குழந்தைகளுக்
கும் நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுக்கின்ற சமுதாய உணர்வுடன்
கூடியவர்கள் தான் ஆசிரியப் பெருமக்கள். இதை அரசுத் தரப்பில் இருப்
பவர்களும் மற்றத் தரப்பில் இருப்பவர்களும் என்றைக்கும் மறந்து விடக்
கூடாது. ஆசிரியர்கள் சமுதாய உணர்வு மிக்கவர்கள், பொறுப்புணர்வு மிக்க
வர்கள். இதில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. "எத்தனை தர்மம்
செய்தாலும், கல்விச் சாலை அமைக்கின்ற தர்மம் போல் எதுவும் இல்லை"
என்று பாரதி சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட கல்விச்சாலைகளில்
ஏழை எளிய மக்கள் கல்வி வளர்ச்சிக்காக ஆசிரியர்கள் தங்களை அர்ப்
பணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் யாரும் மறந்துவிடக் கூடாது.

ஆகவே ஆசிரியர்களாகிய நாங்களும் சமுதாயத்தின் ஒரு அங்கமாக, சமுதாய உணர்வுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஆளும் தரப்பில் இருப்பவர்களும் எதிர்த் தரப்பில் இருப்பவர்களும் இதை என்றைக்கும் மறந்துவிடக்கூடாது.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே நானும் அவற்றைப்பற்றி விளக்கப் போவதில்லை. ஆனால் ஒன்று சொல்வேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கக்கூடிய தேக்க நிலைக்கு என்ன காரணம் என்பதை அரசு முதலில் உணர வேண்டும். மூன்றாவது ஊதியக் குழு அமைக்கப்பட்ட உடன் ஆசிரியர்களுக்கு என்று தனி ஊதியக் குழு அமைக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தினோம். அந்தக் கோரிக்கையை அரசு அப்போதே ஏற்றுக்கொண்டு ஆசிரியர்களுக்கு என்று தனி ஊதியக் குழு அமைத்திருந்தால், இந்த மாதிரி பிரச்சினைகள் தேக்க நிலையில் இருக்கக்கூடிய நிலைமை இருந்திருக்காது. இன்றைக்கு 7½ லட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள் என்றால், அந்த 7½ லட்சத்தில் ஆசிரியர்களுடைய எண்ணிக்கை 3 லட்சம்.. ஆக, பெருவாரியான ஆசிரியர்களுடைய பிரச்சினை தனித் தன்மை வாய்ந்தது என்கிற கண்ணோட்டத்தில் தான் தனி ஊதியக் குழு அமைக்கப்பட வேண்டுமென்று கோரியிருந்தோம். அப்படி அமைக்கப்பட்டிருந்தால், இன்றைக்கு பல பிரச்சினைகள் தீர்ந்து போயிருக்கும். அப்படி இல்லாமல் எல்லோருக்கும் சேர்த்து பொதுவாக ஒரு ஊதியக் குழு அமைக்கப்பட்டதால், ஆசிரியர்களுடைய தனித் தன்மை வாய்ந்த பிரச்சினைகள் சம்பந்தமாக மூன்றாவது ஊதியக் குழுவும் சரியாக ஆசிரியர்களுக்கு நியாயம் வழங்கவில்லை. அதன் விளைவுகளைத் தான் இப்போது ஆசிரியர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் தொல்லைகளை அரசு அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் அரசுக்கு ஓரே ஒரு கோரிக்கை விடுக்கிறேன். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர தமிழக அரசு ஆசிரியர்களின் பிரச்சினைகளை தனித் தன்மை வாய்ந்தவையாகக் கருதி, அவற்றின் தன்மையை உணர்ந்து உடனடியாக நீதி வழங்க வேண்டும். இப்போது கூட அதற்குக் காலம் கடந்துவிடவில்லை. ஒரு கமிஷன் அமைக்க வேண்டும். இது புதிய கோரிக்கை அல்ல. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேர்தல் அறிக்கையில் இது குறித்து ஒரு முக்கியமான



வாக்குறுதியை அளித்திருந்தது. அதாவது ஆசிரியர்களுடைய குறைபாடுகளைப் போக்க தனிக் குழு அமைக்கப்படும் என்று ஆளும் கட்சியின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அது செயல்படுத்தப்படவில்லை. இதைச் செயல்படுத்தியிருந்தால், இத்தகைய பிரச்சினைகள், சங்கடங்கள் வந்திருக்காது. எந்தக் கட்சியும் தேர்தல் வாக்குறுதியில் ஆசிரியர்களைப்பற்றிக் குறிப்பிடாத நிலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க குழு அமைக்கப்படும் என்று குறிப்பிட்டது கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ந்து பாராட்டினோம். இன்னமும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். தேர்தல் நேரத்தின்போது தேர்தல் அறிக்கையில் அறிவித்த உறுதிமொழியைக் காப்பாற்றும் வகையிலும், ஆசிரியர்களுடைய பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டுமென்ற அடிப்படையிலும் தனிக் குழு அல்லது ஒரு ஊதியக் குழு அல்லது ஆசிரியர்களுடைய வேலை நிலைமைகளையும் சேர்த்து ஆராய ஒருங்கிணைக்கப்பட்ட உயர் மட்டக் குழு என்கிற வகையில் ஒரு குழுவை நியமித்து, அதற்கு ஒரு கால கட்டத்தையும் நிர்ணயித்து அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் ஆசிரியர்கள் தரப்பிலிருந்து தீர்க்கப்படாமல் தேக்க நிலையில் இருக்கக்கூடிய பல பிரச்சினைகள் உடனடியாகத் தீர வாய்ப்பு ஏற்படும், தீரவும் செய்யும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே ஆசிரியர்களுடைய குறைபாடுகள் குறித்து அரசு ஒரு உயர் மட்டக் குழுவை அமைக்க வேண்டுமென்று நான் அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. என்றாலும் நான் மிகவும் விரும்புகின்ற ஒரு அம்சம் எது என்றால், ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவு அளிப்பது என்கிற திட்டமாகும். இதைப் பற்றி நான் ஏற்கெனவே இதே அவையில் இரண்டு மூன்று முறை பேசியிருக்கிறேன் என்பதால், இது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய சமுதாயம் எத்தனை பிரச்சினைகளைச் சந்தித்தாலும், அவற்றை முழு அளவில் அரசு தீர்க்க நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும் கூட, இன்றைய குழந்தைகள் வருங்கல குடி மக்கள் என்கிற வகையில் அவர்களுக்குப் பசி, பட்டினி இருக்கக்கூடாது, கல்விப் பற்றாக்குறை இருக்கக் கூடாது, வேறுபாடு இருக்கக்கூடாது என்கிற வகையில் எடுக்கப்பட்டிருக்கும் இந்த நடவடிக்கையை நான் பாராட்டுகிறேன். மேலை நாடுகள் சிலவற்றில் இன்றைய தினம் குழந்தைகளை ஏற்று பாராமரித்து நடத்துவது போல், நம் தமிழகத்திலும் செய்ய வேண்டுமென்று தான் நான் கோரிக்கை விடுத்திருந்தேன். 1 வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி, உடை, உணவு ஆகிய மூன்றையும் அரசே ஏற்பாடு செய்து கொடுத்து இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை நான் ஏற்கெனவே விடுத்திருந்தேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1982 மார்ச் 5

(முற்பகல் 10-30)

அந்தக் கோரிக்கையினுடைய ஒரு பகுதியாக இன்று இரண்டு வயது முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஒருவேளை சத்துணவு கொடுக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பல மாண்புமிகு உறுப்பினர்கள் பலவிதமாக விமர்சனம் செய்தாலும் கூட, நான் இதிலே முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து சில ஆக்க பூர்வமான ஆலோசனைகளை நான் அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லி பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் மிகவும் நல்லதொரு திட்டம். பசிக்கு ஒருவேளை சோறு இல்லாது வாடும் குழந்தைகளை நான் பார்த்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அந்த வறுமையின் கொடுமையை நானும் அனுபவித்தவன் என்ற முறையிலே இந்தத் திட்டத்தின் உன்னதமான குறிக்கோளை நான் உணர்கிறேன். 'ஒருவேளை உணவு' மட்டும் என்று இருந்தால், ஒரு நிறைவு பெற்ற திட்டமாக இது இருக்காது. உணவு மட்டும் கொடுத்தால் போதாது. அவர்களுக்குக் கட்டாயமாக கல்வியும் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே நாம் இலவசக் கல்வியை அளிக்கிறோம். அதற்கென்று தனியாக நிதிச் செலவு ஏதுமில்லை. ஒரு ஆண்டில் குறைந்த பட்சம் இரண்டு ஜோடி ஆடைகளைக் கொடுத்து, கட்டாயக் கல்வியும் கொடுக்க வேண்டும். அடுத்த ஆண்டு முதல் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள பிள்ளைகளுக்கென்று 'சிறார் பள்ளிகளை' நாம் அமைக்க இருக்கிறோம். 'உணவு, உடை, கல்வி' என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை விரிவாக்க வேண்டும். இன்னும் சில விவரங்களை அரசின் அறிக்கையிலேயிருந்து நான் தெரிந்து கொண்டேன். அதிலே, 2 வயதிலிருந்து 4 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் சுமார் 33 இலட்சம் என்றும், 5 வயதிலிருந்து 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் 67 இலட்சம் என்றும் இருக்கிறது. ஆகவே, சுமார் 100 இலட்சம் குழந்தைகள் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள். இதிலே Below poverty line. என்ற முறையிலே 50 சதவீதம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்ற கணக்கின் அடிப்படையிலே பார்த்தால், எஞ்சியிருப்பது 50 இலட்சம் பேர் தான். அந்த வகையில் 2 வயதிலிருந்து 10 வயதுக்குள்ளாக தமிழகத்திலே உள்ள குழந்தைகள், தோராயமாக இருக்கும் கணக்குப்படி, 50 இலட்சம் பேர்கள்தான். நாம் ஏற்கெனவே மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். அதற்கென்று ஒரு மாணவனுக்கு 15 காசு ஒதுக்கு



1982 மார்ச் 5] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

கிறோம். அதற்கென்று மேலும் 'கேர்' நிறுவனத்திடமிருந்தும் சில உதவியைப் பெற்று வருகிறோம். விலைவாசி உயர்ந்து விட்டது என்ற அடிப்படையிலே, அந்த 15 காசை உயர்த்தி இப்போது ஒரு குழந்தைக்கு 25 காசு என்ற வகையிலே ஒதுக்கினாலும்கூட ஓராண்டுக்கு ஒரு குழந்தைக்கு 90 ரூபாய் தான் ஆகிறது. ஆகவே, 50 இலட்சம் குழந்தைகளுக்குக் கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் தான் ஆகிறது. 50 இலட்சம் குழந்தைகளுக்கு ஒருவேளை சத்துணவு கொடுக்க வேண்டும் என்று சொன்னால், 45 கோடி ரூபாய்தான் ஆகிறது. 100 கோடி ரூபாய் தேவையில்லை. ஏற்கெனவே, 5 வயது முதல் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தின் மூலமாக நாம் கொடுக்கும் உணவுக்கு அரசின் செலவு 3¾ கோடி ரூபாய், அல்லது 4 கோடி ரூபாய் என்றுகூட வைக்கலாம். 45 கோடி ரூபாயில் இந்த 4 கோடி ரூபாயைக் கழிக்க வேண்டும். காரணம் அவர்களுக்கு என்று வேறொரு திட்டத்திலே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 41 கோடி ரூபாய்தான் தோராயமாக இந்தத் திட்டத்திற்குச் செலவாகும். ஆகவே, 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதில் மீதி 60 கோடி ரூபாய் இருக்கிறது. இதிலே அவர்களுக்குக் கட்டாயக் கல்வி, ஓராண்டுக்கு வேண்டிய உடை இவைகளைக் கொடுத்து, 'கல்வி, உடை, உணவு' என்ற அடிப்படைத் தேவைகளை இந்த அரசு செய்து கொடுத்தால், இது ஒரு உன்னதமான திட்டமாக இருக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்போது இருக்கும் விலைவாசியில், மதிய உணவு போடுவதைப்போல்தான் பகல் உணவையும் போட வேண்டும் என்று பேசுகிறாரா? இலவச கட்டாய உணவு, உடை வேண்டும் என்பதும் தவிர்க்க முடியாத ஒன்றுதான். ஆனால் பகல் உணவு போடுவதை பள்ளிகளிலே போடுவதோடு ஒப்பிட்டுப் பேசுவது நல்லதல்ல, பள்ளிகளிலே போடுவதைவிட சிறப்பாக இருக்க வேண்டும் என்ற முறையிலேதான் இருக்க வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பள்ளிகளிலே போடப்படும் உணவு சிறப்பான உணவு அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை இன்னும் திருப்திகரமாக ஆக்க வேண்டும். ஆகவேதான் 15 பைசா என்று இருப்பதை 25 பைசா என்று வைத்துப் பேசுகிறேன். இதுமட்டுமல்லாமல், 'கேர்' நிறுவன உதவியும் இருக்கிறது. இதுபோன்ற திட்டத்தை நிறைவேற்றும்போது, மத்திய அரசிடமிருந்தும் நாம் உதவியைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசு கொடுத்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட சத்துணவுக்காக ரூ. 26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** துணைத் தலைவர் அவர்களே, நமது அரசாங்கக் கொறடா அவர்கள் பேசும் 'மைக் குழாயை' உடைத்து எடுத்துக் கொண்டிருக்கிறார். அது எதனால் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதற்காக அவர் கொறடா என்று அழைக்கப்படவில்லை. (சிரிப்பு)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** என்னுடைய பின்புறத்திலிருந்து கீழே விழுந்தது. அதை எடுத்தேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இது குறைந்தபட்சம் என்ற அளவிலே இருக்க வேண்டும். இதைவிட அதிகமான அளவிலே ஒதுக்கீடு செய்தால், மிக்க மகிழ்ச்சி. 'உடை-உணவு-கல்வி'க்காக என்று 200 கோடி ரூபாய் செலவு செய்தால் கூட, நான் அதைப் பாராட்டுவேன். ஆனால் கல்வியும் உடையும் இல்லாமல் உணவு மட்டும் என்று வைக்கக்கூடாது. அந்த வகையிலே இந்தத் திட்டத்தை விரிவாக்கி, மாற்றியமைத்து செயல்படுத்த வேண்டும். இந்தத் திட்டத்தை எப்படி செயல்படுத்த வேண்டும் என்று சில ஆலோசனைகளைச் சொல்கிறேன். என்னுடைய அனுபவத்திற்கு உட்பட்டுச் சொல்கிறேன். என்னைக் கேட்டால், இதற்கென்று ஒரு தனியான இலாகா ஏற்படுத்தி, அதிகாரிகளைப் போட்டு "Overhead Charges, Establishment Expenses" போன்றவைகளை அதிகரிப்பதைவிட, இந்தத் திட்டத்தின் 99 சதவீதம் பலன் குழந்தைகளுக்குப் போய்ச் சேர வேண்டுமென்று சொன்னால், ஊராட்சிகளிடமும், பஞ்சாயத்துக்களிடமும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். இதைக் கண்காணிக்கும் பொறுப்பை அங்கே இருக்கும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கலாம். பஞ்சாயத்து யூனியன்களில் அங்கே இருக்கும் ஆசிரியர்கள் இப்போது அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே Extension Officer for Education என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு என்ன வேலை என்பது கேள்விக்குறி. ஏற்கெனவே அவருக்கு வேலையில்லை. 90 ஆயிரம் அல்லது 1 இலட்சம் ஆசிரியர்கள், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் இன்றையதினம் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கும் Extension Officer -க்கு வேலை இல்லை. Practically he has no duties to discharge. அவர்களிடம் இந்த வேலையைக் கண்காணிக்கும் பொறுப்பை ஒப்படைக்கலாம். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நல ஊழியர்கள், அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் வைத்து, ஊராட்சித் தலைவர்களை வைத்து, சர்வ கட்சி பிரதிநிதிகளை வைத்து, கிராமத்திலே குழுக்கள் அமைத்து, கண்காணிப்புக் குழு அமைத்து,





இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இதைக் கண்காணிக்க அமைக்கப்படும் குழுக்கள் கிராம அளவிலே மட்டுமல்லாமல் மாவட்ட அளவிலேயும் குழு அமைக்கப்பட்டு, இது சம்பந்தமான குறைகள் எழும்போது, அந்தக் குறைகளை அரசின் கவனத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வரும் நிலைமை வேண்டும். கிராமப்புற அளவிலேயும், வட்டார அளவிலேயும், மாவட்ட அளவிலேயும் கண்காணிப்புக் குழு வேண்டும். அரசு விரும்பினால், இதுபற்றிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளை விரிவாகக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். அரசு விரும்பினால் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படி விரிவாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், தமிழ் நாடு மற்ற மாநிலங்கள் செய்யாத ஒரு சாதனையைச் செய்த பெருமையைப் பெறும். மேலும் பல்வேறு மட்டங்களிலேயிருந்து எழுப்பப்பட்டிருக்கும் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயும் இருக்கும்.

கல்வித் துறையிலே ஒதுக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கான பதவிகள் போதுமானதாக இல்லை. இருக்கின்ற தேவைகள் எவ்வளவு என்ற விவரங்கள் என்னிடம் தோராயமாக இருக்கின்றன. நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. 3,000 இடைநிலை ஆசிரியர்கள் தேவை.

(முற்பகல் 10-40)

ஆனால், அனுமதிக்கப்பட்டுள்ள பதவிகள் 1,000 தான். அதைப்போலவே தேவைப்படும் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 2,000. அனுமதிக்கப்பட்டிருப்பது 300 பதவிகள். உடற்பயிற்சி ஆசிரியர்கள் 500-க்கும் மேற்பட்டவர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையோ மிக மிகக் குறைவு. இதைவிட வேடிக்கை என்னவென்றால், தமிழகத்தில் 1,200-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் கடந்த ஆண்டுகளில் தொடங்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அப்பள்ளிகளில் எல்லாம் பணிச் சுமை மிகவும் அதிகமாகிவிட்டது. ஒவ்வொரு மேல் நிலைப் பள்ளிக்கும் கூடுதல் எழுத்தர் பதவி ஒன்று அனுமதிக்கப்பட வேண்டும் என்று நான் கடந்த ஆண்டே கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களேகூட இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 100:1 என்ற விகிதத்தில் non-teaching staff ஆசிரியர் அல்லாத பதவிகளை அமைக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்யலாம் என்றார்கள். மற்ற துறைகளில் இது பின்பற்றப்படுகிறது. ஆனால் கல்வித் துறையில் இந்த

முறை பின்பற்றப்படவே இல்லை. 100:1 என்ற விகிதத்தில் பதவிகள் கொடுப்பது என்றால், 1,200 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 1,200 எழுத்தர்கள் பதவிகள் வழங்கப்பட வேண்டும். அது இதுவரை வழங்கப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து இந்த மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் எழுத்தர் பதவியைக் கூடுதலாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எப்போதும் பார்த்திராத புதுமையாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டில் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 50 தலைமை ஆசிரியர்கள் பதவியை அளித்திருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு உயர்நிலைப் பள்ளி துவக்கப்படும்போதே அந்தப் பள்ளிக்காகத் தேவைப்படுகிற தலைமை ஆசிரியர், இதர ஆசிரியர்கள், ஏவலர்கள், காவலர்கள் ஆகிய அத்தனை பேரையும் சேர்த்துத்தான் அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் என்றுமில்லாத புதுமையாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 50 புதிய உயர் நிலைப் பள்ளிகளுக்கான தலைமை ஆசிரியர்களின் பதவியை உருவாக்கியிருப்பதைக் குறிப்பிட்டிருப்பது, ஏதோ புதிய ஒரு திட்டமாக ஒரு பிரமையை உண்டாக்கியிருக்கிறது. ஒரு பள்ளி அனுமதிக்கப்படும்போதே, அதற்குத் தேவைப்படும் அனைத்துப் பதவிகளும் சேர்த்துத்தான் அனுமதிக்கப்படுகிறது என்றுதான் பொருள். எனவே இதைப் புதிய திட்டமாகச் சேர்த்திருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்;

அடுத்து, கல்வி மாவட்டங்களின் பணிப்பளு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. அதன் காரணமாக மாநிலத்தில் கல்வி மாவட்டங்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்குடி ஆகிய இரண்டையும் சேர்த்து ஒரு தனிக் கல்வி மாவட்டம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. ஆனால் அரசு அதை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைப்போலவே வடாற்காடு மாவட்டத்தில் போளூரை மையமாக வைத்து, புதிய கல்வி மாவட்டம் ஒன்று துவக்கப்பட வேண்டும் என்றும், அதற்குத் தேவையான அளவு அங்கே பணிப்பளு இருக்கிறது என்றும் விவரமான அறிக்கையொன்று அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதுவும்கூட இதுவரை அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நாள்தோறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை கூடுதலாகிக்கொண்டே இருக்கிறது. இதன் காரணமாக, பணிச்சுமை அதிகமாகிறது. அந்த அடிப்படையில் அதிகமான அலுவலகங்களும், அலுவலர்



களும் தேவைப்படுகின்றனர். இதை அரசு கருத்தில் கொண்டு, மாநிலத்தில் கல்வி மாவட்டங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்தை மையமாக வைத்து, புதியதொரு கல்வி மாவட்டமும், வடாற்காடு மாவட்டத்தில் போளூரை மையமாக வைத்து, தனியானதொரு கல்வி மாவட்டமும் துவக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அதுகுறித்த அறிவிப்பை இங்கே வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Deputy Inspectors, Assistant Educational Officers ஆகியோரின் பதவிகள்— Promotion பதவிகளாக—பதவி உயர்வின் அடிப்படையில் கிடைக்கும் பதவிகளாக மாற்றியமைக்கப்பட வேண்டும். அதற்குரிய பொறுப்புகளையும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி விரிவாக நான் கல்வி மானியத்தில் பேச இருப்பதால், இப்போது சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே இரண்டு, மூன்று ஆண்டுகளாக இங்கே ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். திட்டங்களின் பலன்கள் மக்களை விரைவாகச் சென்றடைய வேண்டும் என்றால், அதோடு முழுமையாகச் சென்றடைய வேண்டுமென்றால், திட்டத்தின் பலன்கள் உண்மையிலேயே ஏழை எளிய மக்களை விரைவாகவும், முழுமையாகவும் சென்றடைய வேண்டுமென்றால், அரசின் அனைத்துத் திட்டங்களும் செம்மையாக நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் அதற்கு ஏற்ற நிர்வாக அமைப்பு இன்றைக்கு இல்லை. நாம் இன்னும் பிரிட்டிஷ்காரன் காலத்திலேயேதான் இருக்கிறோம். நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும், அதைச் சீரமைக்க வேண்டும் என்றெல்லாம் பல்வேறு சமயங்களில் பேசினாலும்கூட, அதனை உண்மையிலேயே நடைமுறைப்படுத்த இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ளவில்லை. சிவப்பு நாடா முறை இன்னும் நமது நிர்வாகத்திலிருந்து அகற்றப்படவில்லை. கடந்த காலத்தில் இருந்த அரசுகள், இத்தகைய சிவப்பு நாடா முறையை அகற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றாலும்கூட, இன்றைக்கு இருக்கிற அரசாவது அந்த முறையில் விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நடவடிக்கை மேற்கொண்டால்தான், திட்டங்களின் முழுப் பயனும், விரைவாகவும் முறையாகவும் ஏழை எளிய மக்களைச் சென்றடையும்.

இந்தச் சமயத்தில் நான் அதிகாரிகளைப்பற்றி ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகளில் நல்லவர்களும் நேர்மையானவர்களும் அரசாங்கத்தின் கொள்கைகளை உணர்ந்து, அவற்றையெல்லாம் ஒரு சமுதாயக் கண்ணோட்டத்தோடு, சமுதாய உணர்வோடு நிறைவேற்றுபவர்களும் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட அதிகாரிகளின் பெயர்களைச் சொல்லி இங்கே பாராட்டினால்கூட, அது அவர்களுக்குப் பாதகமாக இருக்கிறது என்ற காரணத்திற்காக, நான் அவர்கள்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆனால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் உண்டாக்கக்கூடிய சமுதாயக் கண்ணோட்டமும், சமுதாய உணர்வும் இல்லாதவர்களும் இருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற சமுதாயக் கண்ணோட்டமே இல்லாத அதிகாரிகளும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களால்தான் அரசுக்கு அவப்பெயர் வருகிறது. இந்த அரசுக்கு என்று நான் சொல்லவில்லை, எந்த அரசாக இருந்தாலும், இப்படிப்பட்ட அதிகாரிகள் தான் தவறு செய்கிறார்கள், ஒழுங்கீனங்களைச் செய்கிறார்கள், ஊழல்களைச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களைப் புரிபவர்கள் மீதும், தவறு செய்பவர்கள் மீதும், ஊழல் குற்றங்களைச் செய்கிறவர்கள் மீதும் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. இப்படிப்பட்டவர்களையெல்லாம் மாற்றி, சமுதாயக் கண்ணோட்டத்தோடு சமுதாய உணர்வோடு செயலாற்றும் மனப்பான்மையை அரசு வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வகையில் எனக்கு ஒரு ஆசை கூட உண்டு. இப்படிப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு ஏன் அரசே ஒரு குறுகிய காலப் பயிற்சியை அளிக்கக்கூடாது என்றுகூட நான் எண்ணுவது உண்டு. அதை இங்கே நான் ஒரு வேண்டுகோளாகவேகூட வைக்க விரும்புகிறேன். பிரிட்டிஷ் ஆட்சியமைப்பிலிருந்து அனுபவப்பட்டவர்கள், வேறு அமைப்புக்குத் தங்களை அவ்வளவு எளிதாக மாற்றிக்கொள்ள முடியவில்லை. அவர்களையெல்லாம், புதிய அமைப்புக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ள அரசு பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையில் இம்மாதிரியாக "அட்மினிஸ்டிரேட்டிவ் டெக்னிக்ஸ்" என்று அண்மையில் ஆரம்பித்திருக்கிறோம். இதைத் தகவலுக்காகத்தான் சொல்லுகிறேன். அட்மினிஸ்டிரேட்டிவ் டெக்னிக்ஸ் என்று மாவட்டங்களில் உள்ள டி.எம்.ஓ.க்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் மிக நல்ல





மருத்துவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு நல்ல அட்மினிஸ்டிரேட்டிவ் டெக்னிக்ஸ்க்கு 'எக்ஸ்போஸ்' ஆகும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அதன் காரணமாக, 3 மாதங்களுக்கு முன்பு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மானேஜ்மெண்ட் மூலம் அவர்களெல்லாம் வரவழைக்கப்பட்டு ஒரு மூன்று வாரங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில் அனைத்து டி.எம்.ஓ.க்களுக்கும் இந்தப் பயிற்சி இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் இரண்டாவது கட்டமாக தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸில் இருக்கிற மருத்துவர்களுக்கும் அட்மினிஸ்ட்டிரேட்டிவ் டெக்னிக்ஸ்சுக்கு எக்ஸ்போஷர் கொடுக்கலாம் என்று இருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினரின் தகவலுக்காகச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை நான் வரவேற்கிறேன். இதை எல்லாத் துறைகளிலும் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அதில் ஒரு பிரச்சினையும் வருகிறது. அதை அவ்வளவு எளிதாகச் செய்ய முடியாததற்கு என்ன காரணம் என்றால், அப்படி பயிற்சிக்காக நாம் அவர்களை அழைக்கும் போது, அவர்களிடத்தில் வேலை செய்வதற்கு வேறு ஆட்கள் இருக்கமாட்டார்கள். ஆகவே ஒரே நேரத்தில் அனைத்து டி.எம்.ஓ.க்களையும் கொண்டு வர முடியவில்லை. எல்லோரையும் ஒரே நேரத்தில் வரச் சொன்னால், அங்கே ஒரு "வேக்குவம்" ஏற்பட்டுவிடுகிறது. அந்தச் சிக்கல் மற்ற இலாக்காக்களில் இன்னும் அதிகமாக இருக்கும். காரணம் நல்வாழ்வுத் துறையிலாவது ஒரு சௌகர்யம் இருக்கிறது. டி.எம்.ஓ.க்கள் வந்தால், அவர்கள் ஏ.டி.எம்.ஓ.க்களிடம் தங்கள் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு வர முடிகிறது. எனவே இந்தப் பிரச்சினையும் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** பல மாநிலங்களில் பெட்டிஷன் கமிட்டிகள் என்று இருக்கின்றன. மக்களுடைய குறைகள் அடங்கிய மனுக்களைப் பரிசீலனை செய்வதற்கு சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைக் கொண்ட பெட்டிஷன் கமிட்டிகள் பல மாநிலங்களில் இருக்கின்றன. ஆனால் அத்தகைய கமிட்டிகள் நம் மாநிலத்தில் இல்லாமல் இருக்கின்றன. என்னென்ன பெட்டிஷன்கள் வருகின்றன, அவற்றின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற விவரங்கள் நமக்குத் தெரிவதில்லை. ஆகவே, ஒரு ஜனநாயக அமைப்பில் இது முக்கியமான அமைப்பாகும். எனவே நமது மாநிலத்தில்கூட பெட்டிஷன் கமிட்டிகள் அமைக்கப்பட

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவையிலும், சட்டமன்ற மேலவையிலும் தனித் தனியான பெட்டிஷன் கமிட்டிகள் எனப் படும் மனுக்கள் குழுக்களை அமைத்தால் மக்களுடைய மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கவும், விரைவுபடுத்தவும், மற்றும் அவற்றைக் கண்காணிக்கவும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு ஏற்படும் என்பதால், இதை அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன் களைக் கண்காணிக்க என்றே சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. Committee for the welfare of the Scheduled Castes. இப்படி சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதே வகையில் இங்கேயும் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளை அறியவும், ஆராயவும் அவர்களுடைய குறைகள்மீது நடவடிக்கை எடுக்கவும் உதவியாக இத்தகைய குழுக்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.50)

குழந்தைகள் சாப்பிடக்கூடிய பிஸ்கட், சாக்லேட் போன்றவைகளுக்கு வரி விதித்திருக்கிறார்கள். ஒரு புறம் இரண்டு வயது முதல் பத்து வயதுக்குட் பட்ட குழந்தைகளுக்கு என்று ஒரு நல்ல திட்டத்தை அறிவித்துவிட்டு, மறு புறம் அதற்குக் களங்கத்தை உண்டாக்குவதுபோல பிஸ்கட், சாக்லேட் போன்ற குழந்தைகள் சாப்பிடும் பொருள்களுக்கு 2 சதவீத வரி அதிகமாக விதித்திருப்பது நியாயமல்ல. ஏழைக் குழந்தைகள் உட்பட எல்லாக் குழந்தை களும் இதைச் சாப்பிடுகிறார்கள். ஆகவே இது நிச்சயமாக ஏழைக் குழந்தை களையும், நடுத்தர வர்க்கத்தினரையும் பாதிக்கும் என்பதால், இந்த வரியை அடியோடு ரத்து செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

நான் முன்பு குறிப்பிட்டதைப் போல இந்த மாநிலத்தில் "டிஸ்னி லாண்ட்" போன்ற குழந்தைகள் அதிசய உலகத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஓர் அம்சமாக அதைச் சேர்த்து தமிழகத்திலே குழந்தைகளுக்கான அற்புத உலகத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடக மாநிலத்திலே அப்படியொரு திட்டம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே நம் அரசும் அதைச் செயல் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், முன்பே பல முறை குறிப்பிட்டிருக்கிறேன் என்றாலும், அதை மீண்டும் வற்புறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழகத்திற்குள்ளாக சென்றுவர எவ்விதமான உச்சவரம்பும் இல்லாமல் இலவச இரயில் பாஸ் கொடுக்க வேண்டும். உத்தரப் பிரதேச மாநிலத்திலே, மாநிலத்திற்குள்ளாகச் செல்ல இலவச இரயில் வசதியும், மாநிலத்திற்கு வெளியே செல்ல ஒரு குறிப்பிட்ட தொகையையும் அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த நல்ல திட்டத்தை இங்கேயும் செயல்படுத்தலாம்.

அதற்கடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தத் தொகுதிகளில் ஒரு அலுவலகத்தை வைத்துக்கொள்வதற்கும், அதிலே ஒரு இளநிலை எழுத்தரை வைத்துக்கொள்வதற்கும் வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்து தர வேண்டுமென்று நான் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல. சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அனை வருடைய ஒன்றுதிரண்ட கருத்து இது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஜனநாயகக் கடமையைச் சிறப்பாகச் செய்ய இந்த வசதியைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பத்திரிகைகள் வாங்குவதற்கான செலவைக் குறிப்பிட்டேன். ஆகவே பத்திரிகைகள் வாங்குவதற்காக என்று ஒரு படி வேண்டும் என்று மீண்டும், மீண்டும் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு, பத்திரிகைகள் வாங்கு வதற்காக ஒரு தனிப் படியும், தங்கள் தொகுதிகளில் ஒரு அலுவலகத்தை வைத்துக் கொள்ளுவதற்கும், அந்த அலுவலகத்தில் ஓர் இளநிலை எழுத்தரை நியமிக்கவும், மாநிலம் முழுவதற்கும் சென்று வருவதற்கு வரம்பு இல்லாமல் இரயில் பாஸ் வழங்குவதற்கும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்றக் கட்சிக்கும் கட்சி அலுவலகம் இருக்கிறது. அந்த அலுவலகங்களில் குறைந்தபட்சம் ஒரு எழுத்தரையாவது நியமிக்க அனுமதி வழங்கலாம். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல, கட்சித் தலைவர்களுடைய கருத்தும்கூட. அப்படி ஒரு இளநிலை எழுத்தரை வழங்க முடியாவிட்டாலும், தற்போதைக்கு ஒரு கடைநிலை ஊழியரையாவது வழங்கலாம். அங்கீகரிக்கப் பட்ட கட்சி அலுவலகங்களுக்கு ஒரு கடைநிலை ஊழியரை நியமிக்க அனுமதி வழங்கி சட்டமன்றக் கட்சி அலுவலகப் பணிகள் சீரான முறையிலே நடைபெற அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு விவசாயத்தை நம்பிக் கொண்டிருக்கிற மாநிலம். அதிகமாக நாம் விவசாயத்தை நம்பிக் கொண்டிருப்பதால், அதற்குத் தேவையான விவசாயப் பல்கலைக் கழகங்கள் நம் மாநிலத்தில் இருக்க வேண்டும். மிகச் சிறிய மாநிலங்களில்கூட மூன்று, நான்கு விவசாயப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் ஒரே ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் தான் இருக்கிறது. ஆகவே மிகவும் முக்கியமான விவசாயத் தொழிலைக் கொண்டுள்ள தமிழ் நாட்டில் இன்னும் புதிதாக மூன்று பல்கலைக் கழகங்களைத் துவக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை, செங்கை, தென்னாற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு விவசாயப் பல்கலைக் கழகமும், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு விவசாயப் பல்கலைக் கழகமும், மதுரை, முகவை, நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு விவசாயப் பல்கலைக் கழகமும் புதிதாகத் துவக்கி, ஏற்கெனவே இருக்கின்ற பல்கலைக் கழகத்தினுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட கோவை, நீலகிரி, சேலம், தர்மபுரி, பெயார் ஆகிய மாவட்டங்களை அதனோடு இணைத்தால், தமிழகத்தில் விவசய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை இந்தச் சமயத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பொறுத்த வரையில், அதிலே ஈடுபட்டிருக்கிற நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு ஜீப் வசதி இல்லை. பொதுப் பணித் துறையில் உள்ள அசிஸ்டெண்ட் எக்சிகியூட்டிவ் என்ஜினியர்களுக்கு ஜீப் வசதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மிகவும் தேவைப்படுகிற நெடுஞ்சாலைத் துறையில் உள்ள அசிஸ்டெண்ட் டிவிஷனல் என்ஜினியர்களுக்கு ஜீப் வசதியில்லை. சாலைகளைப் பராமரிப்பதற்கும், அவற்றைக் கண்காணிக்கவும், தக்க நடவடிக்கைகளை எடுக்கவும் ஜீப் வசதி தேவை. ஆகவே நெடுஞ்சாலைத் துறையில் உள்ள உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு, ஜீப் வசதி வழங்க வேண்டும் என்று வற்புறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் இருப்பவர்களுக்குக் குடியிருப்புக் காலனிகள் அமைப்பது குறித்து அரசு பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ரூபாய் நூறிலிருந்து நூற்று இருபத்தைந்து என்று உயர்த்தப்பட்டிருப்பதையும்,





முதியோர் உதவித் தொகை ரூபாய் 25-லிருந்து முப்பத்தைந்து உயர்த்தப்பட்டிருப்பதையும் நான் வரவேற்கிறேன். அதற்காக உண்மையிலேயே அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் இதை வரவேற்கிறார்கள் என்றாலும், உயர்ந்துவிட்ட விலைவாசியின் காரணமாக இது போதாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே முதியோர் உதவித் தொகையை குறைந்தபட்சம் 50 ரூபாய் என்றும், ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கும் ஓய்வூதியத் தொகையை 200 ரூபாயாகவும் உயர்த்த வேண்டும் என்று அவர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில சுயாட்சிபற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே மிகவும் நாசுக்காகச் சொல்லி, திட்டவட்டமாக ஒன்றுமே சொல்லாமல் முடித்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையின் 2, 3 ஆகிய பக்கங்களில் மாநில சுயாட்சியின் அவசியத்தை வலியுறுத்துவதுபோல பிரமையை உண்டாக்கிவிட்டு, அதைப் பற்றித் தெளிவாக கருத்தைச் சொல்லாமல் வழுக்கிவிட்டதைப்போல முடித்திருக்கிறார்கள். மத்திய அரசு இதுபற்றி என்ன நினைக்குமோ என்று அஞ்சாமல், தயங்காமல் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அதை எப்படி வேண்டுமென்றாலும் சொல்லலாம். ஆனால் சொல்லுவதற்குத் தயக்கம் கூடாது. அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய கருத்துக்கள் நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் முன்பே காந்தியடிகள் சொல்லியிருக்கிறார். அவர் கிராம சுயாட்சியைப்பற்றி மிகத் தெளிவாக, விரிவாகச் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு கிராமமும் கிராமக் குடியரசாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். Every village should be a republic; it should be a village republic—அந்த வார்த்தை மிகவும் அழுத்தமான வார்த்தை. இதைவிட சுயாட்சித் தத்துவத்தைத் தீவிரமாக வேறு யாராலே சொல்ல முடியும்? காந்தியடிகளே சொல்லியிருக்கும்போது, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று. இந்த அரசு அவருடைய பாதையிலே சென்று மத்திய அரசைக் கேட்பதற்கு எந்தவிதமான தயக்கமும் தேவையில்லை. இதை இப்படிச் சொன்னால், அதை அவர்கள் அப்படி நினைத்துக் கொள்வார்களோ என்று அஞ்சத் தேவையில்லை. ஆகவே மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று அழுத்தமாகவும், தீவிரமாகவும் வலியுறுத்தி வாதாடி போராட வேண்டியது அனைத்துக் கட்சிகளுக்கும் உள்ள பொறுப்பு. நம்முடைய மாநிலத்தின் சார்பாக அப்படி வாதாடுவது நாடாளுமன்ற உறுப்பினர்

களுடைய கடமை என்பதை இந்தச் சமயத்தில் வலியுறுத்தி அப்படிப்பட்ட நல்லதொரு 'றிக்கோளுக்காக தமிழக அரசு கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கென்று தனி வீட்டு வசதி வாரியம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்திலே நடைபெற்ற மாநாட்டில் பகிரங்கமாக அறிவிப்புத் தந்தார்கள். அந்த அறிவிப்பைச் செயல் படுத்த செயற்குறிப்பு எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே காணப்பட வில்லை. கல்வி மானியக் கோரிக்கையிலாவது வந்தால், நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த அறிவிப்பைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இங்கே பேசிய ஆசிரியப் பிரதிநிதிகள் கூறிய அத்தனை கருத்துக்களையும் வலியுறுத்தி—அதையே நானும் மீண்டும் பேசினால் நேரம் ஆகும் என்பதால்—அவர்களுடைய பேச்சை வழிமொழிந்து வலியுறுத்தி, அதை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

### 5. மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் அவர்களின் அறிக்கை.

### தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து ஹஜ் பயணம் பயணம் செல்லும் பயணிகளைத் தேர்ந்தெடுப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள், மேலவை விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையைக் கொடுப் பார்கள்.

*** மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டிலிருந்து குஜராத், மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம் போன்ற மாநில ஹஜ் குழுக்களை பின்பற்றி தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து கடல் மார்க்கமாக ஹஜ் பயணம் செல்லும் பயணிகளைத் தேர்ந்தெடுக்கும் பணியினை தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மேற்கொள்ளவிருக்கிறது. இது மத்திய அரசின் ஆலோசனையின்மீது எடுக்கப்பட்ட முடிவாகும். இதுவரையில் மேற்கூறிய பணியினை பம்பாயிலுள்ள மத்திய ஹஜ் குழுவே செய்து வந்தது. மாநில ஹஜ் குழுவிடம் தேவையான நிதி வசதியும், பணியாளர்களும் இருப்பின் இப்பணியினை மாநில ஹஜ் குழுவே ஏற்று நடத்தலாம் என மத்திய அரசும், மத்திய ஹஜ் குழுவும் தெரிவித்துள்ளன. மாநில ஹஜ் குழுவிடம் இதற்குப் போதிய நிதி வசதியும், பணியாளர்களும் உள்ளதாக மத்திய அரசுக்கும் பம்பாய் ஹஜ் குழுவிற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முடிவினால், மாநில ஹஜ் குழு ஹஜ் பயணம் மேற்கொள்ளுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புதல், குலுக்கு முறை மூலம் பயணிகளைத் தேர்ந்தெடுத்தல், பயணத்திற்கான கட்டணம் மற்றும் அன்னிய செலவாணி தொகையினை பெற்று, மத்திய ஹஜ் குழுவிற்கு விண்ணப்பங்களுடன் அனுப்புதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும், ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களை பயணிகளின் குழு விவரங்களோடு, சாதாரண வகுப்பு பயணிகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 100 விதமும் முதல் வகுப்பு பயணிகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 200 விதமும் மொத்தத் தொகையும் மாநில ஹஜ் குழுவின் செயலரின் பெயருக்கு டிமாண்ட் டிராப்ட் எடுத்து அதனை விண்ணப்பத்தோடு இணைத்து அனுப்புமாறு கேட்டுக் கொண்டு பத்திரிகை விளம்பரம் ஒன்று விரைவில் வெளியிடப்படவிருக்கிறது. விண்ணப்பத்தோடு அனுப்பப்படும் இத்தொகையானது திருப்பித்தரப்படமாட்டாது. ஒரே உறையில் அதிக பட்சம் ஆறு விண்ணப்பங்கள் அனுப்பலாம். சாதாரண வகுப்புக்கும், முதல் வகுப்புக்கும் தனித்தனி உறைகளில் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். குறிப்பிடப்படும் நாளுக்குள்ளாக (19—4—1982) விண்ணப்பத்தை செயலாளர், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பயணிகளின் தேர்வு குலுக்கல் முறையில் ஹஜ் குழுவினால் முடிவு செய்யப்படும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு மட்டுமே அச்சிடப்பட்ட விண்ணப்ப படிவங்கள் அனுப்பப்படும். இப்படிவத்தை நிரப்பி, அந்நிய செலாவணிக்கும், போக்குவரத்திற்கும் உண்டான மொத்த தொகைக்கான டிமாண்ட் டிராப்டுடன் ஹஜ் குழுவின் செயலருக்கு அனுப்ப வேண்டும். இம்முறையினால், தேர்ந்தெடுக்கப்படாத பயணிகள் அச்சிட்ட படிவங்களை நிரப்பி மேற்குறிப்பிட்ட தொகையோடு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டியதில்லை. இப்புதிய ஏற்பாட்டின் கீழ் ஹஜ் பயணிகள், பயணத்திற்கு 2—3 நாட்கள் முன்னதாக பம்பாய் சென்றால் போதுமானது.





(முற்பகல் 11-30)

### 4. 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

*** Thiru A. R. DAMODARAN:** Sir, I rise to offer my remarks on the Annual Financial Statement for the year 1982-83 that has been placed by the Hon. Finance Minister. May I first say

that in presenting a State Budget, the people do not have any great expectation nor do they feel that they will have any great disappointment because State Budgets are generally considered to be rather inflexible from the point of view of raising resources?

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை).

As the Hon. the Finance Minister has himself pointed out, we are greatly dependent on grants-in-aid and loans and, therefore, in view of the many responsibilities that have to be undertaken by the State Government, the resources position is necessarily tight. But, I must confess that in presenting the Budget for 1982-83 the Hon. the Finance Minister has done justice neither to himself nor to the State in that the variations between the Budget Estimates of 1981-82 and the fluctuations that have taken place in the Revised Estimates for the same year and the anticipated Revenue for 1982-83 are all subject-matter of mystery and puzzle to many of us who have followed State Budgets over these 15 or 16 years. I remember a Finance Minister in 1965-66 stating with pride that he was proud that he was about to cross two hundred crores of rupees. Now, we have a Finance Minister who announces, with a certain degree of pride, that the overall deficit in the Budget is likely to exceed Rs. 200 crores. May I express my feeling of helplessness in tackling this Budget because, as I said, I cannot understand how a Budget with a Revenue Surplus of Rs. 199 crores is magically transformed to a Budget with an overall deficit of Rs. 204 crores and, having a Revenue surplus of Rs. 199 crores, why the Finance Minister and the Government thought it necessary to impose new taxes to the extent of Rs. 38 crores by way of Sales tax increases and other taxes like the Urban Land Tax which the Government intend to extend to 16 new areas? But, the people naturally feel that it is neither necessary nor is it in the interests of the consumer to raise taxes to this extent. I shall not deal with the various achievements that have been mentioned in various fields of administration because they will





be the subject-matter of discussion and debate when we take up the Policy Notes for discussion. I would first like to express and sound a note of caution to the Government that they should not be complacent about the food situation in Tamil Nadu because, although the monsoon has been fairly good in the southern districts of Tamil Nadu, in the northern districts of Chengalpattu, South Arcot and North Arcot and the area surrounding the metropolitan area of Madras City, the average rainfall during the North-East monsoon has been less than 600 mm. as against the average rainfall of 1000 mm. Already in these three districts, the water position is extremely bad. I wanted to sound this note of caution to the Government because, I expect very shortly they will be receiving reports from the Collectors of these districts that drought relief measures will be required and that some more crores of rupees would have to be spent in tackling the difficult situation that is likely to arise. I would request the Government to call for immediate reports from the Collectors of these three districts regarding the availability of water not only for drinking but also for crops and to plan the necessary activities that would be required to tackle this difficult situation.

I do not want to get lost in the discussion on various progressive measures that have been taken up by various departments of the Government because my first duty is to place before the Government the feelings of the people in regard to the taxation measures that have been proposed to raise the resources. The thirst of the Government for resources is insatiable. Even if we give taxation proposals to the Government for raising 400 crores of rupees, they would find ways and means of frittering away the resources in various schemes which they consider absolutely necessary for the people of this State. May I voice the disappointment of the consumers and traders in regard to the

sales tax levies and in regard to the absence of expected reliefs in the administration of sales tax?. I have often requested the Government, and, in fact, there is a State Sales Tax Advisory Committee which meets very rarely and which met about four months ago where the traders and Chambers of Commerce requested the Government to consider whether certain welcome reliefs could not be provided for the trading community as well as for the consumers. The first relief that was expected was that the turn-over exemption limit of multi-point tax would be raised from Rs. 50,000 to Rs. 1 lakh. This is absolutely necessary because the rate of inflation at the retail level is somewhere about 15 to 18 per cent per annum. Our normal expectation has resulted in the feeling that the sales tax exemption limit would be raised from Rs. 50,000 to Rs 1 lakh. Not only that. It has been a long-pending demand that the turn-over limit for composition of tax would be raised from Rs. 1 lakh to Rs. 2 lakhs. The Kaiwar Committee has reccommended this and I would request the Government to consider these measures although the Budget has been presented. The third measure that was expected was

(முற்பகல் 11-10)

the abolition of the additional sales-tax which today fetches a revenue of Rs. 29 crores to the Government of Tamil Nadu. The trade wanted this tax to be merged with the multi-point tax or the single-point tax. Further, the trade is put to a lot of difficulties because of the surcharge on sales tax which renders calculations extremely difficult. It is a great pity that the Cabinet does not contain one Minister who has been in business for some time in his life. This is something that we feel most acutely because only those who have felt the punch will know where exactly the difficulty arises. But, I have no doubt that the Hon. the Chief Minister who is conversant with the problems of trade and commerce will give due consideration to these requests of the Chambers of Commerce.

Sir, I would like to make another plea. I think the Hon. the Chief Minister has himself felt a degree of sympathy with this demand because he has always been concerned about those



whose income is below Rs. 750 a month. I have pleaded that the time has come when the Government's revenue is anticipated to be Rs. 620 crores from sales tax. It is not Rs. 620 lakhs but it is Rs. 620 crores. In other words, more than 60 per cent of the revenue of the Tamil Nadu Government is coming from sales tax which is an indirect tax. And, an indirect tax, according to all economists, falls on all sections of the community, not only on A. R. Damodaran who may wear a terelyne shirt but on every section of the community. I would like to plead that sales tax on articles of mass consumption like chillies, tamarind, pulses, gingelly oil, groundnut oil and small grocery articles which are purchased by low-income groups should be exempted from sales tax. This would give a tremendous relief to the poorer sections of the community. Some of my friends have tried to argue with me and they have asked: "If the sales tax is reduced, will the prices of these commodities come down?". I cannot give an assurance that the removal of sales tax will bring down the prices of commodities. As the Hon. the Chief Minister and the Ministers at the Centre have also stated, the only answer to the price inflation that exists in our country is to work hard and produce more. Unless we admit this philosophy in formulating Budgets for the future, we will be only expanding the spiral of inflation in which we are and it will result in a vicious circle in which wages will have to be increased to keep pace with the prices of commodities. Therefore, I would like to make a plea to the Government, even though it may mean a set-back to the extent of Rs. 30 crores or Rs. 35 crores which is only 5 per cent of the Government's sales tax Budget. I would plead for the abolition of sales tax on grocery articles as the Government have done in the case of perishables and other items like eggs and milk. I would plead that sales tax be totally abolished on grocery articles.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

Sir, another plea of the trade has been the abolition of chowki-posts. Unfortunately, only five days ago, when I returned to Cuddalore, as I do always, via Pondicherry—because it is a shorter route and not because of any other reason—I found to my dismay that two fresh chowki-posts had been erected on

the Cuddalore–Pondicherry border as well as on the Tindivanam–Pondicherry border. Being a very respectful obeyer of laws, I stopped my car and I asked the man what he expected to find in my car. He said, "Now, Sir, goods are flowing from Tamil Nadu to Pondicherry because of various tax differences and, therefore, fresh chowki-posts have been created". Sir, these chowki-posts are centres of corruption. I hope that the Hon. Ministers will realise that it is extremely difficult for trade and for consumers to survive if they are subjected to various controls at every point on the highways. We are checked by the Excise staff on the highways, we are checked by the Prohibition staff on the highways and now we are checked by the sales tax officials. In fact, we must be prepared for half-a-dozen checks on these highways. I would plead with the Government to abolish unnecessary chowki-posts. I am sure that all of us have had this miserable experience of being detained on the highways. There is a regular mamool that is being paid by lorries. No goods are inspected and no bills are inspected. A regular mamool depending on the needs of the chowki-post officers, whether it is Rs. 10 or Rs. 20 is paid by all these lorry people. There is no great advantage in having these chowki-posts because the extent of evasion is extremely limited in so far as many commodities are concerned. May I also plead, in view of the interest of the Government in evolving strict vigilance procedures, for checking corrupt sales tax officers? This has become one of the most corrupt Departments in the entire State of Tamil Nadu. Even those of us who have no sales tax to pay—many of us come under single point tax—those of us who have to pay about Rs. 1,000 as multi-point tax, have to give our books for assessment and when the assessment is completed, the Government get a revenue of Rs. 1,000 and the mamools that are expected for the completion of assessment is somewhere between Rs. 200 and Rs. 500. I would plead with the Government that instead of allowing the transfer of revenues in an unauthorised manner to the departmental officials, they may devise some means of getting this revenue themselves.

I now refer to the sales tax proposals of the Hon. the Finance Minister. He has outlined in great detail the need for raising an additional 88 crores of rupees, when he is already anticipat-



ing 620 crores of rupees under Sales Tax. Of course he has outlined the reason and I shall refer to that later. But I would like to refer to one or two items of tax which he has imposed in this Budget.

I read a few months ago that the Finance Ministers of the southern States were meeting to evolve a common sales tax incidence in the southern region. May I request the Hon. the Chief Minister to take the initiative in asking the Finance Ministers of the four southern States to evolve uniform rates of sales tax because unnecessary diversion of resources, unnecessary diversion of trade across the borders can be prevented and each State will be able to get the normal revenue to which it is entitled? I think that just like the discussion of the sharing of river waters, the sales tax issue has become a thing of paramount importance because the petrol pump at Kerala border sells petrol at 20 per cent sales tax, whereas in Tamil Nadu, it is only 11 per cent. I hope the Hon. the Chief Minister is not noting this to raise the Tamil Nadu sales tax also to 20 per cent. I gave this example only to indicate that there were vast differences in the rates of taxes and it would be in the interest of the Southern region as far as possible to bring the sales tax in the four southern States to a common level.

The Hon. the Finance Minister has introduced an increase in the sales tax on biscuits, chocolates, toffees, confectionery, etc. It is a very intriguing word and I wonder how such a word is being used in relation to a taxation proposal because it should not have been used in such matters. When I referred to the list, it is item No. 103 and I think possibly the Hon. the Chief Minister would have advised him not to mention all the items mentioned, because item No. 103 mentions biscuits, toffees, chocolates, confectionery, butter, ghee, cheese and foods including preparations of vegetables, fruits, milk, cereals, flour, starch, birds, eggs meat and meat offals. In other words, the Hon. the Finance Minister did not want to mention that butter and ghee would also be liable to increased tax. He has tried to show as if he has taxed only confectionery, toffee, chocolates and biscuits. Is it necessary for us to tax butter and ghee and raise from 8 per cent to 10 per cent? The Hon. the Health Minister may say that use of butter will cause increase in blood cholesterol. I am

sure the Hon. the Finance Minister would not have included it for this reason. He is interested only in additional revenue. I would like to plead, as I have consistently pleaded before, that in the case of food articles, incidence of taxation should be brought down to the lowest level possible. Although some may say that edible oils could be taken and butter and ghee should not be taken, I feel that the tax on these things should not have been raised. In view of the deep concern of the Government for the children and in view of the feeding programme for 100 crores of rupees, I am sure biscuits, toffees and chocolates will get some welcome relief at the hands of the Hon. the Chief Minister.

(முற்பகல் 11.20)

Sir, the Government have announced a reduction of sales tax on kerosene. Now, I am concerned with the petroleum trade and, probably, the first person who should welcome a relief in petroleum-product taxation should be the President of a Petroleum Dealers' Association. While I welcome this relief, may I point out to the Hon. Members of the Cabinet, in terms of money, what this relief means? The sales tax on kerosene has been reduced by 6 paise a litre. The Government are distributing three litres in the rural areas. So, a magnificent relief of 18 paise per month has been given to the poorest man in the village. When we come to the Municipality, the family card distribution system says that 5 litres will be given. So, there, the quantum of relief is 30 paise per month. When we come to Madras City where the consumption may be 10 litres, the relief is even more magnanimous in that it amounts to 60 paise per month. After having taxed us for Rs. 38 crores, to say that some relief is being given for kerosene is a thing that is very difficult to swallow in terms of reality. I would only say that, while the Government are entitled to reduce the price of kerosene, there is one big danger which I have to point out to the Government in the interests of taxation revenues. The Hon. the Minister for Petroleum, Thiru Shivasankar, in reply to a question in the Lok Sabha, said that he was considering equalising the prices of kerosene and High Speed Diesel. Today, it is anticipated that 20 per cent of the kerosene is going into motor vehicles. The rate of difference between the prices of kerosene and diesel is one rupee and fifteen paise per litre. In 1974, I made a special plea, on





behalf of the petroleum trade, to Thiru Barooah and I said, "Please remove this difference because too much of black money is being generated". It is done not merely by petroleum dealers—there may be a few unscrupulous dealers who do adulterate—but by thousands of kerosene vendors who are pouring kerosene into motor vehicles. If you want to know the places, I can tell you where they are located: beyond Achirapakkam, beyond Tindivanam in Chengalpattu, in Ulundurpet, in Chinnasalem 'Koottu-road', along the Tiruchirappalli road, in Ranipet. It is a big gang that is working and it is a gang that cannot be controlled. I dare not make a complaint because it is not merely a gang that is operating but very high people in Government service are involved in this terrible racket of syphoning off Government revenues. In the interests of preventing this malpractice, I would plead with the Government to consider whether it would be desirable to maintain this unequal price level between High Speed Diesel and kerosene. I realise that I am placing myself in a danger because the moment I make this complaint in the Legislature, the first pump that will be raided and unnecessarily harassed is my own pump. But, my sense of public duty makes me tell this. I am not afraid of any raid. My conscience is absolutely clear. Even if they find 5 litres or 10 litres not billed, I am prepared to face that prosecution also. But, I want to make a request to the Government not to harass the petroleum trade in this matter but to get hold of all those **anti-social elements who are indulging in such malpractices,** to the extent possible.

Sir, the Urban Land Tax is going to be extended to sixteen new localities. Now, the Urban Land Tax is a notional tax on land values. I think all of us are aware how even in Madras City the price of land has shot up from somewhere around Rs. 40,000 per ground to a figure which I shall not mention because I do not want the Government to adopt that figure for determination of Urban Land Tax. It has risen very high because of various conditions in our country. Perhaps, the Urban Land Ceiling itself is responsible for the rise in land values. Perhaps, the restrictions imposed on buildings are also responsible. Perhaps, there is so much of black money in other States that people from places like Bombay and Bangalore come to purchase land in Tamil Nadu which is a comparatively

peaceful State. But, I would plead that we must give top priority to housing and the construction of houses. I have a quarrel with my Hon. Friend, the Minister for Housing, because from the last year he has introduced a ban on all Urban Housing Co-operative Societies in the matter of entertaining loan applications for building houses in Municipal areas, Town Panchayat areas and metropolitan areas. He has diverted vast resources to rural housing. While it is a laudable object, the moment he deprives urban areas of housing, he is placing lakhs of Government servants, lakhs of industrial workers and lakhs of people belonging to the low-income groups in deplorable situations where they are not able to find a 10' × 12' room to stay in. Sir, if you go to the area which was formerly known as George Town or if you go to Kilpauk, you will find that a tenement which is only a 10' × 8' room is housing a family of 5 or 6 persons. How do you expect those people to have any sort of civic sense or civic consciousness or to live in happiness? It is in this context that I would plead that before the Government extend the Urban Land Tax to new areas, they must ensure that housing construction in the private sector is not affected by any measure of the Government because this, in my opinion, is a top priority sector to which the Government must

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

pay their attention. Sir, there may be some excuse for the Hon. the Finance Minister not to be able to estimate with any degree of certainty the amount of revenue that he would get under the State Excise in the beginning, because it was a measure which was introduced in April or May. We have got Rs. 102 crores under Excise and as I shall point out, an additional 29 crores of rupees as sales tax on arrack, toddy and other products. The gross under-estimation in receipts of the Tamil Nadu Government would require some attention at the hands of the Finance Department itself. Last year we anticipated a revenue of Rs. 1,128 crores (Budget Estimates) and in the revised estimates, it has become Rs. 1423 crores. If this sort of arithmetic happens in my personal budget, I would be either broken or I would be accused of serious irregularities by the members of my family. I cannot understand how a





Government can under-estimate its revenue to the extent of 300 crores of rupees. But I realise that the Government will be very happy about the revenue which they are getting. At the same time, having obtained 199 crores of rupees as the anticipated surplus, which itself is an under-estimate, because, in my opinion it would touch 275 crores of rupees at least in the coming year due to various inflationary proposals, how was it possible for the Finance Minister to convert such a large revenue surplus into an over-all deficit of Rs. 204 crores? Excuse has been given that the State Electricity Board is working at a loss, that the Civil Supplies Corporation is also working at a loss and that the Transport Corporations are also working at a loss. My plea to the Government is that if we have 4.3 million consumers of electricity in Tamil Nadu, it is not necessary to put the burden on the remaining 46 millions of our people by way of sales tax. As regards Civil Supplies Corporation, incidentally I would like to bring to the notice of the Hon. the Chief Minister that the Report of the Comptroller and Auditor-General of India shows that the Civil Supplies Corporation has not had the courtesy of producing its accounts from 1978–79 and it has not published its accounts for the past five years. Regarding the Transport Corporations, I have always been pleading in the Transport Advisory Committee that if the fuel prices are going to increase, the Government will have to increase the fares. If the Government do not have the will to raise resources from the State Electricity Board and from the Transport sector and want to give certain amount of subsidy to the Civil Supplies Corporation, why should the general tax-payer be ruined to the extent of 100 crores of rupees in subsidising these sections? I realise, of course, I am advancing a very unpopular view. I remember in 1967-- the Hon. the Electricity Minister was Thiru O. P. Raman--the rate for agriculture was only 8 paise. One day while I was talking with him in the lobby, I mentioned to him that it would be better to raise the rate for agriculture at half-a-paisa every year. I think the Government did not believe in the exercise of raising it half-a-paise every year but the Government would raise it from 8 paise to 16 paise, after delaying the decision for years together and this is what happens always. What the Government should do immediately is being delayed and then it is found that the Electricity Board should be subsidised to the extent of Rs. 120 crores and it becomes inevitable. I would

plead with the Government that whenever the Government have to take a decision, however unpopular it may be, the decision will have to be taken in time.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே மிகவும் தெளிவாகவும், அரசுக்கும் நாட்டுக்கும் பயனளிக்கக் கூடிய வகையிலும் சில கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு வேண்டுமென்றோ, பயந்தோ நடவடிக்கைகளைத் தள்ளி வைத்துக் கொண்டு போகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முடிவு எடுப்பதில் எந்தவித தாமதத்தையும் செய்யவில்லை. ஆனால் சூழ்நிலை என்பது சில நேரங்களில் எத்தகையவர்களையும் ஒரு இடத்தில் நிறுத்தி விடுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக உணர்வார்கள். குறிப்பாக மின்சார வாரியத்தில் இத்தகைய குறைபாடுகள் ஏற்பட எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள்.

ஆனால் அந்த அடிப்படையிலேதான், தனியார்கள் கூட இந்தப் பொறுப்பை ஏற்க முன்வந்தால் அவர்களிடம் ஒப்படைக்கலாமா என்பதைப்பற்றி இந்த அரசு சிந்திக்கிறது என்று சொன்னதுகூட, நாங்கள் முடிவு எடுக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல, பிறரை அச்சப்படுத்துவதற்காக அல்ல, அண்ணா அவர்களின் கொள்கையை விட்டுவிட வேண்டும் என்பதற்காக அல்ல. நாட்டுக்கு எப்படியாவது நன்மை பயக்க வேண்டும், அரசு நஷ்டப்படக் கூடாது, மக்கள் கஷ்டப்படக்கூடாது என்ற நிலையிலே தான் நாங்கள் செயல்படுகிறோம் என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

THIRU A. R. DAMODARAN : Sir, I have deep sympathy with the Government because, if they raise these tariffs, I realise the difficulties they will experience. My intention in requesting the Government to revise suitably the tariff in all these sectors was only inspired by the motive that the Government were taking into account only the vocal sections. But, the vast millions, the 45 millions, who may not protest against the Government's sales tax measures have to remain silent. Probably if these people also led a 'morcha' from the villages, the situation may be different. But they are not organised and the unorganised sector has to accept taxation with tears and without protests. Even today, as I was coming to the Council, I found a very big procession blocking Anna Salai. There is a big procession going on and they are urging the removal of sales tax on fishes, prawns and frogs. My only request is that the time has come for us to think suitably of how to reduce the losses of the Electricity Board. There is no doubt that a revision in tariff is necessary in combination with other measures which we have often advocated. But, my plea should not be taken as a request that automatic increases in tariff should take place.





Sir, one of the most important features of the Budget, which, as I said, is contributing to the overall deficit, is a major proposal that has been mooted by the Tamil Nadu Government to introduce a feeding programme for children between the ages of 2 and 10 throughout Tamil Nadu. Of course, no statistics have been given. But, if you refer to the Census that has taken place, it is anticipated that 42 per cent of the population in Tamil Nadu, about 21 million people, are in the age-group 0—14. How many children there are between the ages of 2 and 10, I cannot say and, probably, the Government have the statistics. Even if you assume that it is somewhere about 12 million to 14 million and even if you say that half of them are not poor and, therefore, will not come to your schools to take food, still, this is a very big programme of feeding 7 to 8 million children in the rural areas. While the scheme is extremely laudable, may I bring to the attention of the Government that in implementing such popular measures, they are not taking into account the inefficiency that prevails in the Government sector today to do the job for which it is intended? We have been pleading for a long time that the midday meals scheme which now extends to 30 per cent of the school-going children between the ages of 5 and 10 should be extended to 60 per cent, in the hope that the Government would be able to spend Rs. 7 crores. Sir, any feeding programme of children should avoid giving 'saambaar' and rice. There should be pre-cooked food which can be packed and despatched to centres for feeding the children. Otherwise, complaints of pilferage *en route*, non-feeding of children at destination, etc., are likely to arise. I would request the Government to consult various welfare agencies which are already doing the job of feeding

children. It is a gigantic task that the Government have taken upon themselves. As I said, while the object is very good, I fear that, in the implementation of this scheme, the Government are likely to come across many practical difficulties.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டம் நல்லது என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்வதிலும், மாண்புமிகு உறுப்பினர், எனது மரியாதைக்குரிய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் அதை இந்த அளவுக்குப் புகழ்ந்து சொல்வதும் எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது, எனக்கு மன நிறைவையும் தருகிறது. இப்போது பள்ளிகளிலே மதிய உணவு தரும் முறையிலே சில தவறுகள் நடப்பதாகச் சொல்லப்படுவதை இந்த அரசு மறுக்கவில்லை. இவை பல ஆண்டு காலமாகத் தொடர்ந்து இருக்கிற குறைபாடுகள். நாங்கள் குறைகள் 'இல்லை' என்று எதிர்க்கவும் தயாராக இல்லை. ஆனால் இந்தப் பகல் உணவு அளிக்கும் ஏற்பாட்டைப் பற்றி ஒன்றைச் சொல்கிறேன்—மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே இல்லாததால்—இது முழுக்க முழுக்க பெண்கள் பொறுப்பேற்று நடத்தக்கூடிய ஒரு செயலாக இருக்கும். கட்சி வேறுபாடின்றி அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து செயல்படுத்தும் ஒரு அமைப்பாக இருக்கும். அது நல்லபடியாகச் சொல்லப்படும் அளவுக்கு ஒவ்வொரு யோசனையையும், அனுபவத்தையும், தியாக உணர்வையும் பயன்படுத்திக் கொள்ளவும் இந்த அரசு தயங்காது. அது மட்டுமல்ல, 2 வயது முதல் 10 வயதுக்குள் இருப்பவர்களுக்கு என்று ஏன் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இரண்டு வயதிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வயது வரையில் குழந்தைகள் தங்களை மறந்து தாங்கள் எந்த ஜாதியைச் சேர்ந்த குழந்தைகளோடு உட்கார்ந்து சாப்பிடுகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாத நிலையில் அவர்கள் ஒன்று கூடி வாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்படும். அதே நேரத்தில் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்தி பழகுவது ஜாதி உணர்வைப் போக்க பயன்படும். அதே நேரத்தில் 5 முதல் 6 வயதிற்குள் முடிந்தவரையில், அவர்களுக்கு அவ்வப்போது எழுத்துக்களும் சொல்லிக் கொடுக்கப்படும். ஆகவே, அந்தப் பிள்ளைகள் பள்ளிக்குப் போகும்போது, அவர்கள் புதிதாக 'அனா' 'ஆவன்னா' தெரிந்துகொள்வதற்குப் பதிலாக, அங்கே போகும்போதே சமத்துவ உணர்வு, மற்றும் இந்த எழுத்துக்களைத் தெரிந்து கொண்டு செல்ல முடியும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தான் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு



உறுப்பினர் அவர்களைப் போன்றவர்களின் ஆசி இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அவ்வப்போது ஆலோசனை சொன்னால், இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்ய முடியும். குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று எண்ணிப் பார்த்து அச்சப்பட வேண்டியத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, as I said, the scheme is very laudable and every person has got his own dream. This is a dream because the proposal to feed poor children cannot be attacked by any political party, or any Member of the Legislature. I am only pointing out that there are tremendous practical difficulties and those of us who have watched the mid-day meals scheme in operation have realised that we are spending about 8 crores of rupees to feed one-third of the children who come to primary schools. When we want to feed all the children in the age group of 2 to 10, it is not known how these registers are to be maintained, and who is to be in charge of the implementation of the programme. These are all items which we have to consider. The Government may consult Welfare Agencies to find out whether we will be able to implement the scheme successfully. I make this plea because we are not in a state when we can throw away crores of rupees on some subsidies and feeding programmes and it would be useful to invest the money in high priority sectors so that we may provide employment for the people in rural areas. When they get employment, they will learn how to feed their children. While the Hon. the Health Minister is spending a large amount of money on Family Welfare Programmes, this feeding programme may defeat the Family Welfare Programme. While the Hon. the Chief Minister and I can take a few people to our houses and feed them, I think the implementation of the scheme through the Government officials will be an impossibility, knowing the present public officialdom.

மாண்புமிகு திரு. எம். ஜி.. இராமச்சந்திரன் : இது 'கனவு' என்று தயவுசெய்து கருத வேண்டாம். இது கனவு அல்ல. நனவாக, நடக்கக்கூடிய ஒன்றுதான். ஓராண்டு காலம் கழித்து இதே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இந்த அளவுக்கு வெற்றிகரமாக நிறைவேற்றியதற்கு பாராட்டுகிறேன் என்று சொல்லும் அளவில் இந்தத் திட்டம் அமையும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அரசியல்

கட்சிகளிடையே எவ்வளவுதான் கருத்து வேறுபாடு இருந்தாலும், குழந்தைகள், நாடு என்று வரும்போது சில நேரங்களில் அவற்றையெல்லாம் மறந்துவிட்டு, இந்த நாட்டிற்காக, குழந்தைகளுக்காக சேவை செய்கின்ற நல்ல உள்ளம் படைத்தவர்கள் தான் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. பணம் எவ்வளவு செலவாகிறது என்பது கேள்வியில்லை. அநாவசியமாக, பொறுப்பற்ற நிலைமையிலே தாய் தந்தையரை ஆக்கிவிடுகிறோம் என்பதும் இல்லை. கிராமப்புறங்களிலே பார்க்கும்போது, கையிலே குழந்தைகளை வைத்துக் கொண்டு, வேலைக்கும் போகாமல், வேலைக்குப் போகவும் வாய்ப்பு இல்லாமல், குழந்தைகளுக்கு உணவு கொடுக்க வழியில்லாமல் இருக்கும் நிலைமைகளைப் பார்க்கும்போது, யாராவது ஒருவர் பூனைக்கு மணி கட்டித்தான் ஆக வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அந்த நிலைக்குத் தான் இந்த அரசு வந்திருக்கிறது.

(முற்பகல் 11-40)

அதை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அந்தப் பூனை ஏமாற்றுகிற பூனையல்ல. நாட்டில் நல்லது செய்வதற்காக ஏற்பட்ட யானை என்று எடுத்துக் கொள்ளுங்கள். யானை உண்டு கீழே விழுகிற மிச்சமே எத்தனையோ உயிர்களுக்கு உணவாகிறது என்பதைப் போல், யானையாக இருக்கிற பலர் இதில் அக்கறை காட்டினால், ஏழைக் குழந்தைகளுக்கு வயிறு நிரம்பும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த அளவுக்கு முழு நம்பிக்கையோடு செயல்படுகிறோம். வெறும் கனவு என்று சொல்லப்படுவது நனவாக மாறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I referred to the fact of a dream because all of us have good dreams. Martin Luther King, before he died, said, "I have a dream of integrating the United States of America". The Hon. the Chief Minister has a good dream. I am only pointing out the difficulties in translating it into action. I wish the Government all success in their efforts. The Government will be spending a substantial amount of State revenues on this feeding programme and on payment of subsidies to the Civil Supplies Corporation. We will be spending about Rs. 180 crores on more subsides. Whether this scheme is possible, it is only for the Government to judge. My fear is that even what we spend may not reach the people. But, I hope and wish that the scheme will be a success. It is far from me to say that it will be a failure. I can only want to point out the difficulties.





Sir, I realise that I have taken up a substantial amount of time. I would only like to refer to one particular policy that has been adumbrated in the Budget. It is regarding the Integrated Rural Development Programme and the Self-Sufficiency Schemes. The Government of Tamil Nadu have very rightly extended this to all the Panchayat Union areas in our State and, from reports that have been received, there has been a substantial measure of progress in the implementation of these schemes. The Self-Sufficiency Schemes are vital for the development of the agrarian sector, particularly the rural areas. But, may I point out that at present these schemes are being administered, executed and supervised by 100 per cent bureaucrats ? You have the Collectors, the Revenue Divisional Officers, etc., but there is not a single Panchayat Union Member to say what is happening in the rural areas. Therefore, until they decide to have elections to these local bodies, may I request the Government to appoint an evaluation cell, not from the Government but from an independent authority, to evaluate how far these schemes are being implemented in the different areas ? There is no use of the Cabinet being misled entirely by reports from the officials. They will always give the Government a rosy picture of the administration. If you ask any Collector, he will say, "Yes, yes, we have spent Rs. 40 crores and we have put up so many roads". Only the man from the Panchayat knows whether the road has been put on paper or whether it has been put up in actual practice.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகளுடைய அறிக்கைகளை மட்டும் நாங்கள் நம்பி எதையும் சொல்வதில்லை. சில நேரங்களில் சில அறிக்கைகளைத் திருப்பியனுப்பிக் கூட வைத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆங்காங்கே இருக்கிற பலரைக் கவனிக்கச் சொல்கிறோம். அதையெல்லாம் பார்க்கிறோம், தவறுகள் இருக்கின்றன, இல்லை என்று சொல்லவில்லை. ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆரம்பிக்கப்பட்ட பழக்க வழக்கத்தில் இது உண்டாக்கப்பட்டு விட்டதே தவிர வேறல்ல. இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டிருக்கிறது.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதில் அக்கறையும் ஆர்வமும் எங்களுக்கு உண்டு. இன்னும் சொல்லப் போனால், அதிலே

கொஞ்சம் வேகமும் எங்களுக்கு உண்டு. ஏதோ சில பல சூழ்நிலைகளால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. விரைவில் அது நடைபெற வேண்டும் என்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். அந்த வகையில் அவர்களிடம் இந்தப் பணியை ஒப்படைக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு இருக்கிறோம். எந்த வகையில் நாங்கள் இந்தத் திட்டத்தை அமைத்தோமோ அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இயற்கையாக இப்போது இருக்கிற வரைமுறைப்படி ஏதோ மேலிடத்திலிருந்து கேட்பது, பிறகு அவர்கள் தங்களுக்குக் கீழே இருப்பவர்களிடமிருந்து அறிக்கை பெற்று மேலே அனுப்புவது என்ற முறையில் இது நடைபெறாது என்பதையும் இது நிச்சயமாக மக்களின் கண்களுக்குத் தெரிகிற வகையில், அங்கேயிருக்கிற பொறுப்பானவர்களுக்குத் தெரியும் வகையில், குறிப்பாக ஊராட்சி மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் முதற்கொண்டு அனைவருக்கும் பொறுப்பு இருக்கும் வகையில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: I thank the Hon. the Chief Minister for his assurance that he will evaluate these programmes which I feel are very useful in the rural areas.

I have taken a lot of time of this House and I would like to end my speech after making one plea to the Hon. the Chief Minister, and that is in regard to the functioning of our Legislature. There is a lot which has to be done and one of the first things I would like the Hon. the Chief Minister to do is that he should instruct his colleagues to get on with the work of presenting the reports of the Select Committees which have been pending for two years. Excepting the Committee on Co-operation Law which has concluded its work, there are six Select Committees which have been formed in 1980 or early 1981 which have not concluded their work. I think it is very unfair to delay them. The Agricultural Income-tax Committee, the Registration Committee—half a dozen such Committees are there and are sleeping over the matter, not because the Members have not been desirous of participating in the Select Committees but the Ministers are allowing them to sleep over the matter. May I request them to see that the reports are produced within



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகிறார்கள் என்றாலே அது நாட்களைத் தள்ளிப் போடுவதற்குத்தான் என்று எண்ணும் நிலைமை நாட்டில் ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே இப்படி ஒரு கருத்தை வெளியிட்ட பிறகாவது இதெல்லாம் வேகமாக நடைபெறுவதற்குத்தான் என்ற எண்ணம் எல்லோருக்கும் வர வேண்டும், வந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: This is the assurance I wanted from the Hon. the Chief Minister, because without his instructions, these Select Committees will not produce the reports. There are a number of people who are waiting for the reports. I would plead with the Hon. the Chief Minister to see that the Select Committees complete their work as early as possible. Thank you.

டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த பட்ஜெட்டைத் தயாரித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், இந்த அமைச்சரவைக்கும் நான் பொதுவாக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக குழந்தைகளுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கி மதிய உணவு அளிப்பதாக இருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதோடு பென்ஷன் தொகையை ரூ. 100 லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதுகூட போதாது. ரூ. 125 என்றிருப்பதை விட ரூ. 200 என்று ஆக்கினால்கூட நியாயம்தான் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அவையில் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இருப்பதால், ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஏற்கெனவே பலமுறை இரிகேஷன்பற்றி இங்கே பேசியிருக்கிறேன். மேட்டூரில் சர் சி. பி. அவர்கள் ஹைடல் பிராஜெக்ட் கொண்டு வந்தபோது இன்னும் தெர்மல் பிளாண்ட்கள்கூட வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார். இரிகேஷன் மட்டுமல்லாமல், இன்னும் அதிகமான மின்சாரமும் ஊருக்கு ஊர் தேவைப்படும் என்று சொன்னார். பெரிய பெரிய தெர்மல் பிளாண்ட்களை நாம் வைக்காவிட்டாலுங்கூட, 20 000 பேர் அல்லது 30,000 பேர் இருக்கும் டவுன்களில்

முனிசிபாலிடிகளே சிறிய அளவில் தெர்மல் பிளாண்ட்டுகளை வைக்கலாம் அத்தகைய தெர்மல் பிளாண்ட்டுகளை எலெக்ட்ரிசிடி போர்டே கவனித்துக் கொள்ளலாம். இப்படி எலெக்ட்ரிசிடி போர்டு விதிகளின்படி அவைகளை அமைத்தால், இப்போது அடிக்கடி மின்சாரத்தை நிறுத்துவது போன்ற நிலைமை இருக்காது என்று நம்புகிறேன்.

மேட்டூர் ஹைடல் பிராஜக்ட் வருவதற்கு முன்பே, பைக்காரா வருவதற்கு முன்பே, ஊட்டி ரயில்வே ஸ்டேஷன் அருகே தெர்மல் பிளாண்ட் இருந்தது. அதன் மூலம் 4 மணி நேரத்திற்கு கரண்ட் கிடைத்துக் கொண்டிருந்தது என்பதை நான் ஏற்கெனவேகூட சொல்லியிருக்கிறேன்.

பொதுவாக இராமநாதபுரத்திற்குக் கட்டளை சேனலைத் திருப்பவிருப்பது குறித்து பாராட்டுகிறேன். அதிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கிடைப்பதாக இருந்த திட்டத்தைக் கைவிட்டு கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்திருப்பதைப் பாராட்டுகிறேன். அதுவும் ஒரு பைப் இருந்தால் போதாது. 6 அடி அல்லது 7 அடி டயா மீட்டர் உள்ள பைப்புகளை வைத்துக் கொண்டுவர வேண்டும். அதைப்பற்றி கர்நாடக சர்க்கார், மத்திய அரசு, நம்முடைய முதலமைச்சர் ஆகியவர்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பேசி முடித்து சீக்கிரம் கொண்டு வந்தால் நலமாக இருக்கும், ஏனென்றால் ஆரம்பித்தால் அதை முடிக்க நான்கைந்து ஆண்டுகள் ஆகும்.

(முற்பகல் 11-50)

கிருஷ்ணா நதி நீர் திட்டம்பற்றிச் சொன்னார்கள். இப்போது 80 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். எம். எம். டி. ஏ.-யின் தலைவராக மாண்புமிகு அமைச்சர் திரு. இராகாவானந்தம் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 80 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய அபிப்பிராயம், இது இன்னும் 20 வருடங்களில் ஒரு கோடிக்கு வந்துவிடும். பூந்தமல்லி உட்பட 450 சதுர மைல் சேர்த்தால். கட்டளை ஆறு தண்ணீரைத் தேக்கி வைக்க பல அணைகளைப் போட வேண்டும். எவ்வளவு போட வேண்டுமோ அவ்வளவு போட வேண்டும். ரெட் ஹில்சிலும், சோழவரத்திலும், மூன்றரை மாதங்களுக்குத்தான் தண்ணீர் இருக்கிறது. காவிரியிலிருந்து வரும் தண்ணீரையும் கட்டளையில் இருந்து வரும் தண்ணீரையும் தேக்கி வைக்க முடியும். சாதாரணமாக தேக்கலாம். ரொம்ப உயரமாக அணை இருக்க வேண்டியதில்லை 100 அடி, 150 அடிக்கு தேக்கலாம். 'லீக்' ஆனாலும்கூட கொஞ்சம் விட்



விடலாம். ஆனால் 'லீக்' இராது. இருந்தாலும் அதத் தண்ணீரைத் தேக்கி வைக்க ஏற்பாடு முன்னதாகவே செய்தால், முடிவுறும்போது தோதாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

கட்டளை சேனலைக் கொண்டு வருவதில் பல கால்வாய்கள் தேவைப்படும். அது பற்றிய விவரம் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் அறிக்கையை வைப்பார்கள் என்று நம்புகிறேன். புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள கண்மாய்கள் முக்கியம். இப்போது கண்மாய்கள் தூர்ந்திருக்கின்றன. கண்மாய்களைச் சீர்திருத்தம் செய்வதற்காக அந்தக் காலத்திலே சூப்பிரண்டென்டிங் என்ஜினியர் சரியாக வைத்திருக்கிறார்கள். பரமக்குடி, மானாமதுரை ஆகிய இடங்களில் நூறு வருஷத்திற்கு முன்பு இருந்தே கண்மாய்கள் இருக்கின்றன. அந்தக் 'கண்மாய்களில் சீர்திருத்தம் செய்ய மூன்றரை ரூபாய், நாலு ரூபாய்தான் கூலி தருகிறார்கள். அதில் அவர்கள் பஸ்சில் வந்து போக ஒரு ரூபாய் போனால் மீதி மூன்று ரூபாய்தான் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே நான் ஒன்றைச் சொல்லுகிறேன். அது தப்பாக இருந்தால் திருத்திக்கொள்ளலாம். அந்த ஊர் மக்களையே கூப்பிட்டு, அரசு டிப்பார்ட்மென்ட் எஸ்டிமேட் போட்டு எவ்வளவு ரூபாய் செலவாகும், எத்தனை நாள் ஆகும் என்று கணக்கிட்டு ஏழரை ரூபாய் அல்லது எட்டு ரூபாய் கூலி வைத்து அவர்களிடமே அந்த வேலையை விட்டு விடலாம். அவர்களுக்கும் தண்ணீர் வர வேண்டியிருப்பதால், அவர்கள் நன்றாக கவனிப்பார்கள், கரையையெல்லாம் அதிகமாக உயர்த்துவார்கள். கட்டளை சேனல் வரும்போது, கண்மாய்களில் நீரை நிரப்ப தோதாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அதோடு வெஸ்ட்ஃப்ளோயிங் வாட்டரைப்பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். கேரளாவிலிருந்து மேற்கே போகும் தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரைப்பற்றிப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. திரு காமராஜ் காலத்திலேயே இத்திட்டத்திற்கு 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் ஆகும் என்றார்கள். இப்போது ஆயிரம், ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் கூட ஆகலாம். அதற்கு வேர்ல்ட் பேங்க் உதவியோடு செய்வதாகச் சொன்னார்கள். வேர்ல்ட் பேங்க் உதவியோடும், மத்திய அரசின் உதவியோடும் சென்னை அரசாங்கம் இதைச் செய்தால் நாகர்கோவிலிலிருந்து தஞ்சாவூர் வரை தண்ணீர் வந்துவிடும். காவிரி ஸ்கீம் வந்துவிடும். கட்டளை ஸ்கீம் வந்துவிடும். அதோடு இதுவும் வந்துவிடும். அப்போது அந்தப் பகுதியிலே எல்லா கண்மாய்களையும் நிரப்பிவிடலாம். எனது அபிப்பிராயம், கிருஷ்ணா தண்ணீரை சென்னைக்கு தந்துவிட்டு அந்தத் தண்ணீரை செங்கற்பட்டு, நார்த் ஆற்காடு, ஆகிய கண்மாய்களில் நிரப்ப வேண்டும் என்பதுதான்.

இந்தச் சமயத்தில் ரெவின்யூ செட்டில்மென்ட் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். இந்தியாவிலேயே சென்னையில்தான் ரெவின்யூ செட்டில்மென்ட் நல்ல முறையில் நடந்தது. அதை விட்டுவிட்டார்கள். மறுபடியும் ரெவின்யூ செட்டில்மென்ட் பண்ணுகிறார்கள். ஜமீன் அப்ாலிஷன் ஆக்ட் ஒன்று வந்தது. அதற்கு இந்த அமைச்சரவை காரணமல்ல. அதைச் சரியாகப் பண்ணவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். அதைச் சட்டப்படி சரியாகச் செய்ய வில்லை. பணம் கொடுத்து நிலத்தை வாங்கியவர்கள் இருக்கிறார்கள். அந்தக் காலத்திலே புஞ்சை பயிர் செய்திருப்பார்கள். நிலம் கோயில்களுக்குச் சேர்ந்ததாகக்கூட இருக்கும். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். கோவிலுக்குச் சொந்த காடுகள் இருக்கின்றன. அதெல்லாம் ஜாக்கிரதையாக இருக்கலாம். பணம் கொடுத்து வாங்கி 40, 50 வருஷமாக வைத்துக் கொண்டிருப்பது செல்லாது என்று சொல்லுகிறார்கள். அதையெல்லாம் அரசாங்கப் புறம்போக்கு என்று 'டிக்ளேர்' பண்ணுகிறார்கள். அப்படி 'டிக்ளரேஷன்' செய்வது தவறு. கேட்டால் கோர்ட்டுக்குப் போ என்கிறார்கள். கோர்ட்டுக்குப் போனால் எவ்வளவு செலவாகும்? ஆகவே அரசாங்கமே பார்த்து சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையைப்பற்றிப் பேசும்போது, ரோடு வசதி பற்றிப் பேச வேண்டும். ஏரோபிளேன் ஆக்சிடெண்ட், இரயில்வே ஆக்சிடெண்ட் போல, காலையிலே ரேடியோவைத் திருப்பினால், மோட்டாரில் அடிபட்டார்கள் என்று தினமும் சொல்லுகிறார்கள். ஆகவே ரோட்டிலே லைன் போட்டு போக்குவரத்தை சீர் செய்யலாம். இருந்தாலும் பல இடங்களில் டிராபிக் டிப்பார்ட்மென்டைச் சேர்ந்தவர்களை அதிகமாகப் போட வேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அப்படிப் போட்டால்தான் 'பீக் அவர்' என்று சொல்லக் கூடிய நேரத்தில் ஆக்சிடெண்ட் குறையும் என்று நினைக்கிறேன். இராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் ஆக்சிடெண்ட் வார்டில் கணக்கு எடுத்துப் பார்த்தால் எவ்வளவு ஆக்சிடெண்ட்கள் ஏற்படுகின்றன என்று தெரிந்துகொள்ளலாம். இந்தியாவிலே சென்னையில்தான் ஆக்சிடெண்ட் அதிகம் என்று சொல்லுகிறார்கள். தமிழகத்திலே சென்னைப் பட்டினத்திலேதான் அதிகம் என்று பேப்பரிலே படித்ததாக ஞாபகம் இருக்கிறது.

கல்வியைப்பற்றி அதிகமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் கூட பேசியிருக்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அது நல்லதுதான். இருந்தாலும் கல்வி யமைச்சர் அவர்களே புதுக்கோட்டை நூற்றாண்டு விழாவிலே பேசினார்கள்,



அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் கூட பேசினார்கள். அமைச்சர் திரு. திருநாவுக்கரசு கூட பேசினார்கள். அங்கே நானும் பேசினேன். எல்லோருடைய பேச்சிலும், சாதாரண பி. ஏ, பி. டி படித்துவிட்டு வேலையில்லாமல் வைக்க வேண்டாம், டெக்னிக்கல் எஜுகேஷன தேவை என்று சொன்னார்கள். டெக்னிக்கல் எஜுகேஷனைப் பற்றி நானே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பத்து பதினைந்து வருஷங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு பாலிடெக்னிக் வேண்டும். அதோடு சேர்ந்து ஒரு ஜூனியர் பாலிடெக்னிக்கும் வேண்டும். அதிலே சேர ஒன்பதாவது, பத்தாவது கூட படிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இப்போது திரு. வி. சி. குழந்தைசாமியைத் தலைவராக வைத்து ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள்.

"ரீ—ஓரியன்டேஷன்" என்று சொல்லி சிலபசை மாற்றுவதற்காக வைத்திருக்கிறார்கள். அதில் டெக்னிக்கல் எஜுகேஷனைச் சேர்க்கவில்லை. என்ஜினியரிங் எஜுகேஷன் பற்றித் தெளிவாகச் சொல்லவில்லை. என்ஜினியரிங் எஜுகேஷனையும் அதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும். அதிலே ஹைஸ்கூல் எஜுகேஷனிலும் மாற்றம் கொண்டுவரச் சொல்லியிருக்கிறார்கள். அது நல்லதுதான். எனக்குத் தெரிந்த வரையில் இப்போது இருப்பது பழைய காலத்து சிலபஸ். முப்பது வருஷத்திற்கு முன்பு இருந்ததுதான் இப்போதும் இருக்கிறது. அரசாங்கம் எவ்வளவோ பணம் செலவு செய்து நல்ல படிப்புச் சொல்லித் தருகிறார்கள். அவ்வளவு பணம் செலவு செய்யும் போது சிலபசை மாற்றலாம். அப்படி மாற்றுவதற்கு எல்லா வைஸ்-சேன்சலர்களும் ஒத்துக் கொள்வார்கள். இதற்காக கல்வி இலாக்காவிலே இருந்து ஒரு உத்தரவிட்டாலே போதும். சட்டத்தை மாற்ற வேண்டியதில்லை. சாதாரணமாக சிலபஸை மாற்ற வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். கெமிக்கல் பாக்டரி ஒன்று இருக்கிறது. சமீபத்திலே ஆமதாபாத், பம்பாய் போன்ற இடங்களில் அப்படி வைத்திருக்கிறார்கள். அங்கே வேலை இருக்கிறது என்று இங்கிருந்து மனு போட்டார்கள். அவர்களும் கூப்பிட்டார்கள். பையன் போனான். போன பிறகு அவர்கள் கேட்ட கேள்விக்கு அவன், 'அதெல்லாம் சொல்லித் தரவே இல்லை. அது எங்கள் சிலபஸிலே இல்லை' என்று சொன்னான். அதற்கு உங்கள் வாத்தியார் சொல்லித் தரவில்லையா என்று கேட்டபோது, "வாத்தியாருக்கு 52, 53 வயது ஆகிவிட்டது. அவருக்கும் சிலபஸ் அதே மாதிரிதான் இருந்தது. அவருக்கும் சொல்லிக் கொடுக்க வசதியில்லை" என்று சொல்லியிருக்கிறான். ஆகவே ஆசிரியர்களுக்கு ரெஃப்ரெஷர் கோர்ஸ் வைக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு தரம் 15 நாட்களுக்கு ரெஃப்ரெஷர் கோர்ஸ் வைக்க வேண்டும். இதிலே சீர்

திருத்தம் வேண்டும். இதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்த வேண்டும். அந்தக் கமிட்டியிலே எல்லா வைஸ்-சேன்சலர்களையும், ரிட்டையர்ட் பிரின்சிபால்களையும், என்ஜினியரிங் காலேஜ் பிரின்சிபால்களையும், ரிட்டையர்ட் சீப் என்ஜினியர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். சிக்கிரமாக இதைச் செய்ய வேண்டும். ரொம்ப நாள் தள்ள வேண்டியதில்லை. ஒரு வாரத்திற்குள் செய்ய வேண்டும். பழைய சிலபஸை மாற்றி புதிய சிலபசை ஏற்படுத்த வேண்டும். இப்போது இருப்பது நன்றாக இல்லை என்று சொல்லவில்லை. நாட்டினுடைய தேவைக்கேற்ப, வருங்காலத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல், என்ஜினியரிங் பாஸ் பண்ணுபவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கத் தகுந்தபடி அதிலே மாறுதல் செய்ய வேண்டும். நாட்டிலே எவ்வளவோ புதிய தொழில்கள் வந்திருக்கின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்திலே அவ்வளவு தொழில்கள் இல்லை. இப்போது அரசு புதுத் தொழில்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பேப்பர் போர்ட் தொழிலைக் கூட 200 கோடி ரூபாய் அளவில் கோயம்புத்தூர்-திருச்சி பார்டரில் வைக்க இருக்கிறார்கள். மேலும் சவுத் இந்தியா விஸ்கோஸ் இருக்கிறது. அதற்குத் தகுந்தபடி படிப்பை வைக்கலாம். சிலபசை சாதாரணமாக மாற்றலாம். அப்படி மாற்ற கல்வித் துறை ஒரு உத்தரவிட்டு, ஒரு கமிட்டியை சீக்கிரமாக ஏற்படுத்தி, மார்ச்-ஏப்ரலில் கமிட்டியை நடத்தி ஜூலை முதல் புதுத் திட்டம் வரும்படி செய்தால், நன்மையாக இருக்கும்.

இந்த ஜூனியர் பாலிடெக்னிக் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்க வேண்டும். இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட் வைத்திருக்கிறார்கள். அதிலே 20 பேர்தான் படிக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே தொழிற்பேட்டை, பாக்டரியை வைத்துக்கொள்ளலாம். தொழிற்பேட்டை, பாக்டரியை வைத்துக் கொள்ளும்போது 20 பேர் என்பது தப்பு. செங்கல்வராய இன்ஸ்ட்டிடியூட்டில்

(நண்பகல் 12.00)

எப்படி இருந்தது என்பது பற்றித் தெரியும். மாண்புமிகு அங்கத்தினர் திரு ஏ. ஆர். தாமோதரன் அவர்களுக்குத் தெரியும். டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் இருந்தது. திரு தியாகராச செட்டியார் அவர்களும் இருந்தார்கள். முதலில் அங்கே 100 பையன்கள், 300 பையன்கள் என்று இருந்து பிறகு ஆயிரம் பையன்கள், 1,500 பையன்கள் என்று உயர்ந்து இப்போது ஆயிரக்கணக்கான பையன்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். 350 ஆசிரியர்கள் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 80



ஆண்டுகளாக அப்படி நடந்து கொண்டிருந்தது. அதற்குப் பின் அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. 40 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. பாலிடெக்னிக்கில் 5 செக்ஷன்கள் வைத்திருக்கிறார்கள். அதில் 100, 120 பையன்கள் வைத்துச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதிலும் மாற்றி மாற்றி சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முதல் வருடம் 'மேத்ஸ்' சொல்லிக் கொடுக்கலாம். இரண்டாவது வருடம் 'டிராயிங்' சொல்லிக் கொடுக்கலாம். மூன்றாவது வருடம் லெபராட்டரி பயிற்சி கொடுக்கலாம்.

இத்துடன் ஷிப்ட் சிஸ்டம் வைக்கலாம். ஒரு ஷிப்ட் என்று இருந்தால் 200 பேர்கள் இருப்பார்கள். அதுவே இரண்டு ஷிப்ட் சிஸ்டம் என்று இருந்தால், 400 பேர்களுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். அதுபோல மூன்று ஷிப்ட் என்று இருந்தால், 600 பேர்களுக்குச் சொல்லிக்கொடுக்கலாம். இப்போது சில கோர்சுகள் இல்லாமல் இருக்கின்றன. சென்ட்ரல் பாலிடெக்னிக் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கிறது. டெக்ஸ்டைல் டெக்னாலஜி இருக்கிறது. கோயம்புத்தூரில் கூட இருக்கிறது. இன்னும் பல கோர்சுகள் இருக்கின்றன. டெலிபோன் இண்டஸ்ட்ரி இருக்கிறது. உடனே வேலை கிடைக்கும். அவர்கள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். கிரௌன்ட் இன்ஜினியரிங், ஆட்டோமொபைல் இன்ஜினியரிங், ஏர்கிராப்ட் இன்ஜினியரிங் இதையெல்லாம் சேர்த்துக்கொண்டு பல கோர்சுகள் அங்கு வைத்துச் செய்யலாம். ஷிப்ட் சிஸ்டம் என்று வைத்துவிட்டால், இன்னும் வசதியாக இருக்கும். அமெரிக்காவிலேகூட 6 மணிக்குத் திறந்து 11 மணி வரையிலும் திறந்து வைத்திருக்கிறார்கள். இங்கே 10 மணியிலிருந்து 5 மணி வரையில்தான் திறந்து வைத்திருக்கிறார்கள். இடம் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். ஷிப்ட் சிஸ்டம் வைத்துக் கொள்ளலாம். பொதுவாக இந்தக் கட்டிடங்களுக்கு ஏற்படுகின்ற டிப்ரிசியேஷன் அளவுக்குக்கூட பலன் கிடைப்பதில்லை. அவைகளைக் குறைந்த அளவுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். ரூபாய் 50 லட்சம், ரூ. 100 லட்சம் என்று போட்டு கட்டிடங்கள் கட்டுகின்றார்கள், ஆனால் 4 மணி நேரம்தான் உபயோகப்படுத்துகிறார்கள். கல்லூரிகள் 44 நாட்கள்தான் வேலை செய்கின்றன என்று சொல்கிறார்கள். சில கல்லூரிகள் 50 நாட்கள்தான் வேலை செய்கின்றன என்று சொல்கிறார்கள். அந்தக் கட்டிடங்களில் எல்லாம் ஷிப்ட் சிஸ்டத்தில் சொல்லிக் கொடுக்க வேண்டும். அது தோதாக இருக்கும். எத்தனையோ வாத்தியார்களுக்கு வேலை கிடைக்கும். அதனால் எத்தனையோ பையன்கள் படிக்க வாய்ப்பு ஏற்படும். அன்-எம்ப்ளாய்மென்ட் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்த அன்-எம்ப்ளாய்மென்டே இதனால் நிச்சயமாகக் குறையும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதையெல்லாம் வருவதற்கு முன்னால் உணர்ந்து செய்ய வேண்டும். அன் எம்ப்ளாய்ட் நெம்பர் குறைவதை இந்த மந்திரி சபை அதன் ஆட்சிக் காலத்திற்குள்ளேயே பார்க்கலாம்.

அடுத்து, இன்னொரு முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மியூசியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பற்றிச் சொல்லிக்கொள்கிறேன். மியூசியத்தில் மேனுஸ்க்ரிப்ட்களை வைக்க வேண்டும். அதாவது ஏட்டுச் சுவடிகள் வைக்க வேண்டும். இதையெல்லாம் மியூசியத்திலே வைத்து ஒரு டிபார்ட்மெண்ட் போல வைக்கலாம். அதற்கு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். அடுத்து, தமிழ் புத்தகங்கள் பற்றிச் சொல்கிறேன். வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் தமிழில் பேச முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் உலகம் எங்கும் பாவியிருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் டேப் ரெக்கார்டர்களை வைத்துக் கொண்டு தமிழ் கேட்டுக்கொள்கிறார்கள். அவர்கள் இங்கே வருகின்றபோது டேப் ரெக்கார்ட் பண்ணி எடுத்துக் கொண்டு அங்கே வைத்துக் கொண்டு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆப்பிரிக்காவில் இருக்கிறார்கள், உலகத்தின் மற்ற பாகங்களிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள். தமிழர்களாக இருந்தும் தமிழ் பேச முடியாமல், தெரியாமல் இருக்கின்றார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திரு. முருகேச முதலியார் அவர்கள் அவருக்கு உதவியாக இருந்தார்கள். வெளிநாடுகளிலே தமிழர்கள் இருக்கிறார்கள். அதுபோலவே தெலுங்கர்கள் கூட இருக்கிறார்கள். அந்தத் தமிழர்களுக்குத் தேவையான தமிழ் புத்தகங்கள் அவர்களுக்கு அங்கே கிடைப்பதில்லை. அச்சாபீஸ்களுக்கு ஒரு ஆர்டர் கூட போடலாம். அந்தப் புத்தகம் பிரசுரம் செய்பவர்கள், பப்ளிஷர்ஸ் எல்லாம் ஐந்து ஐந்து புத்தகங்கள் அனுப்பவேண்டியது என்று சொல்லலாம். நிறைய தமிழ் புத்தகங்கள் வெளியிடுபவர்கள் இருக்கிறார்கள். அதற்காக ஒரு கமிட்டிகூட அமைக்கலாம். மாதத்திற்கு இரண்டு மூன்று நாட்கள் கூடிப் பேசலாம். 100 புத்தகங்களுக்கு 2, 3 நூல்கள் என்று தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அதிலே ஒவ்வொன்றிலும் 500 காப்பிகள் என்று அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம். அவர்கள் ஃப்ரியாகத் தரமாட்டேன் என்றாலும், நாம் அவைகளை விலைக்குப் பணம் கொடுத்தே வாங்கிக்கொள்ளலாம். அதற்கு ரூ. 30 லட்சம், செலவானாலும் ரூ. 40 லட்சம் அல்லது ரூ. 50 லட்சம் செலவானாலும் பரவாயில்லை. இதனால் கோடிக்கணக்கான தமிழ் மக்கள் பயன்பெறுவார்கள். அவர்கள் உலகம் பூராவும் பரவியிருக்கிறார்கள். அவர்கள் எல்லா ஊர்களிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் பல கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் அங்கே தமிழ் புத்தகங்கள் போதுமான அளவுக்கு இல்லை. அவர்கள் அங்கேயிருந்து வருகின்றார்கள். அவர்கள் வரும்போது சைவ சித்தாந்தக் கழகத்திலே வந்து வாங்கிக் கொண்டு போகிறார்கள். 'கல்கி' பத்திரிகை அங்கே போகிறது. குமுதம் பத்திரிகை அங்கே போகிறது. ஆனால் நல்ல தமிழ் புத்தகங்கள் அங்கே இல்லை. அமெரிக்காவிலே இருப்பவர்களுடைய குழந்தைகள் 'டாடி, டாடி' என்று தான் கூப்பிடுகிறார்கள். அங்கிருந்து வருகின்றவர்களிடம் நான் சொல்லியிருக்கிறேன். வீட்டிலேயாவது தமிழிலே பேச வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு இந்த அரசு உதவி செய்தால், நன்றாக இருக்கும். அவர்கள் எல்லாம் தமிழிலே பேசுவதற்கு இந்தப் புத்தகங்கள் உதவியாக இருக்கும். இதில் பணம் அதிகம் செலவாகும். இந்தச் செலவைப்பற்றிப் பார்க்கக் கூடாது.





அடுத்து, சுகாதாரத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டும். ஹாஸ்பிட்டல்கள் எல்லாம் மிகவும் நன்றாக நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு விஷயம் சொல்ல வேண்டும். இங்கே டென்டல் காலேஜ் என்று ஒன்றுதான் இருக்கிறது. இப்போதுதான் இரண்டாவது வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் அதைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். பார்மசி, நர்சிங் எல்லாம் ரொம்பப் பரவலாக இருக்கின்றன. அதை எல்லா ஊர்களிலும் வைக்கலாம். செங்கற்பட்டிலே வைக்கலாம். ஆஸ்பத்திரிகள் இருக்கின்ற எல்லா ஊர்களிலும் நர்சிங் கோர்ஸ் வைக்கலாம். பார்மசிஸ்டுகள் உருவாக்கலாம். நர்சுகள் நிறைய தேவைப்படுகிறது. ஆஸ்பத்திரிகளில் நிறைய நர்சுகள் இருந்தால் நன்றாக இருக்கும்.

அடுத்து, 'ஸ்கேனர்' பற்றிச் சொல்கிறேன். இந்த ஸ்கேனருக்கு 28 லட்சம் ரூபாய் ஒதுக்கி, அது ஜெனரல் ஆஸ்பத்திரியிலே வைக்கப்பட்டிருக்கிறது. இது அல்லாமல், இதைவிட பெரிய ஸ்கேனர் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். 98 - லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது என்றும், அப்படிப்பட்ட ஸ்கேனர் பூந்தமல்லி ஹைரோடில் உள்ள டாக்டர் ஜகதீசன் அவர்களிடம் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அவர்கள் வரவழைத்திருக்கிறார்கள். அதுபோல பம்பாயிலே இருக்கிறது, டெல்லியிலே இருக்கிறது என்று நினைக்கிறேன். சென்னையிலேகூட ஒன்று இருக்கலாம். 98 லட்சம் ரூபாய் செலவு என்றாலும் இருக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** That is called full body scanner நாம் பட்ஜெட்டிலே கூட போட்டிருக்கிறோம். அது மதுரைக்கு வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பண்ணலாம். நன்றாக நடக்கிறதா என்று கவனிக்க வேண்டும். 'மேனஸ் கிரிப்ட்ஸ்' எல்லாம் இருக்கின்றன. தமிழ் படித்தவர்களை அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும். ஆங்கிலம் படித்தவர்களையும் கூட அங்கே நியமிக்க வேண்டும். ஆர்க்கியாலஜி துறை—திரு. நாகசாமி அவர்கள் பணி புரியும் துறை—இதில் சேர்ந்து பாடுபட வேண்டும். 500 ஆண்டுகளுக்கு முந்தைய பட்டயம் ஒன்று வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து எடுத்ததைக் காண்பித் தார்கள். அதிலுள்ள தமிழைப் படிக்க முடியவில்லை. ஆர்க்கியாலஜி துறை யினர்தான் அதைப் படிக்க முடியும். இன்றைய தமிழில் அவை இருந்தால், எல்லோரும் அவற்றைப் படிக்கலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ.ஐ.ஆர். பற்றி ஒன்றிரண்டு கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது இருக்கும் டைரக்டர்கள் கூடுமானவரையில் பாவாயில்லை. சில நாட்கள் அபத்தமாக இருக்கிறது. '7 நாட்களில், 2 நாட்கள், 3 நாட்கள் பாடல்கள் நன்றாக இல்லை. நல்ல சங்கீதம் தெரிந்தவர்களைக் கொண்டு பாடல்களைப் பாடச் செய்ய வேண்டும். மக்களுக்கு உபயோகப்படக்கூடிய விதத்தில் இருக்க வேண்டும். முதலமைச்சரவர்கள் நன்றாகக் கவனிப்பார். எல்லாவற்றையும் அவரால் செய்ய முடியாது. எனவே மற்ற அமைச்சர்கள் இதைக் கவனித்து, ஏ.ஐ.ஆர். மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வழி வகுக்க வேண்டும். சென்னை, திருச்சி, திருநெல்வேலி, கோவை ஆகிய 4 இடங்களில் ஏ.ஐ.ஆர். நிலையங்கள் இருக்கின்றன. தெலுங்கு, கன்னடம் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். ஒன்றிரண்டு பாடல்கள் அவர்களுக்காகப் பாடட்டும். தியாகராசர் தஞ்சாவூரில் பிறந்தார். அவர் தெலுங்கு பெஜவாடா, ராஜ முந்திரியிலே ஒப்பேறாது. நிதிநிலை அறிக்கையிலே ஆர்ட்ஸ் & கல்ச்சர்' என்று ஒரு பாரா இருக்கிறது. எனவே ஏ.ஐ.ஆர். ஐக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி பொதுவாக நிதிநிலை அறிக்கையை அளித்த தமிழக அரசையும், முதலமைச்சரவர்களையும், மற்ற அமைச்சர்களையும் பாராட்டி, முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு



வாய்ப்பு கொடுத்ததற்கு முதலிலே நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில், ஒரு புதிய கண்ணோட்டத்தோடு ஏழைப் பிள்ளை களுக்கு, பசியோடும் பட்டினியோடும் இருந்து கொண்டிருக்கும் குழந்தை களுக்கு ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம், இந்தச் சமுதாய அமைப்பில் தேவையா என்றால், இத்தகைய சமுதாய அமைப்பில் இத்தகைய திட்டங்கள் இருந்துதான் தீரும். ஆனால் இந்தச் சமுதாய அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டு, சோஷலிச சமுதாய அமைப்பாக மாறினால் அப்போது யாருடைய குழந்தைக்கும் யாரும் சோறு போட வேண்டிய நிலை ஏற்படாது. பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தத் திட்டம் சரியாக நிறைவேறுமா, நிறைவேறாதா என்ற சந்தேகத்தைச் சொன்னார்கள். அதற்கு முதலமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்வது, எந்தத் திட்டத்தையும் அரசாங்க அமைப்பை வைத்துத்தான் செய்ய வேண்டும். திட்டத்தைக் கொண்டுவரும்போது, இது வெற்றி பெறுமா, வெற்றி பெறாதா என்ற சந்தேகம் வந்தால், எந்தத் திட்டத் தையும் செயல்படுத்த முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், திட்டம் எப்படி சீர்திருத்தமாக இருக்க வேண்டுமென்பதைச் சொன்னார்கள். "ஒரு ஆண்டு கழித்துப் பாருங்கள், அது வெற்றி பெற்றுள்ளதைத் தெரிந்துகொள் வீர்கள், நீங்களே பாராட்டும் அளவிற்கு இருக்கும்" என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். நிர்வாக இயந்திரம் மூலம் இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவது குறித்து ஒரு கருத்து இங்கே சொல்லப்பட்டது. மதிய உணவு வழங்குவதுபற்றிச் சொல்லப்பட்டது. மதிய உணவைக் கல்விக் கூடங் களில் கொண்டு வந்ததால் ஏற்பட்ட விளைவுகள்பற்றி ஏற்கெனவே பேசியிருக்கி றோம். அந்த அடிப்படையில் கொண்டு வரக்கூடிய சத்துணவுத் திட்டத்தை மிகச் சரியான முறையிலே செய்ய, அதைப் பள்ளிகளில் கொண்டு வந்து சேர்க்காமல், பெண்களை வைத்து, தனி அமைப்பாக வைத்துச் செய்வோம் என்று மாண்புமிகு முதல்வரவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். அந்த அடிப்படையிலே அந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் குறிப்பிட்டது குறித்து எனக்குப் பயம் வந்தது. முதலமைச்சரவர்கள் அதைப்பற்றித் தெளிவுபடுத்தியபோது, அந்தப் பயம் நீங்கியது. இந்தத் திட்டத்தை கல்வி நிறுவனங்களில் இணைத்தால், கல்வி

தடைப்பட்டு, பிரச்சினை ஆகிவிடுமோ என்ற பயம்தான். முதலமைச்சரவர்கள் அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் மதிய உணவுகூட இல்லாமல் இருப்பது பற்றிச் சிந்தித்திருக்கும் முதலமைச்சரவர்கள், இந்தத் திட்டத்தை எப்படியும் செயலாற்ற வேண்டியிருக்கிறார்கள். இந்த நல்ல திட்டத்தை வரவேற்கிறேன்.

பொதுவாக நிதிநிலை அறிக்கைகளில் ஊழியர்களுக்குச் செய்யப்பட வேண்டியவை பற்றிய பட்டியல் இடம்பெறும். அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள்—இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இடம் பெறவில்லை. 1569 கோடி ரூபாய் பட்ஜெட் போடப்பட்டு, அதற்கான வரவினங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு வழங்கியுள்ள அகவிலைப்படி உயர்வு இங்கே வழங்காமல் இருக்கிறது. கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு ஏற்கெனவே பல அறிவிப்புகளைச் செய்திருக்கும்போது, இங்கே அதைச் செய்யாமலிருப்பது குறித்து எந்த விளக்கமும் இல்லை. சென்ற முறைகூட ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் அமைப்பது பற்றியும், அகவிலைப்படி பற்றியும் கேட்டபோது, முதலமைச்சரவர்கள், 'கொஞ்சம் பொறுங்கள், நிர்ச்சயமாக அது வரும்' என்று சொன்னார்கள். நாங்கள் எதிர்பார்த்தோம். 'கொஞ்ச நாள்' என்றால், பட்ஜெட் வரவிருக்கிறது, எனவே அப்போது வரும், முதலமைச்சரவர்களை இதற்குமேல் சங்கடப்படுத்தக்கூடாதென்று கருதினேன். இன்றைக்கு வீட்டுவசதி வாரியம் ஆசிரியர்களுக்கு அமைக்கப்படவில்லை. முதலமைச்சரவர்கள் சொன்ன அந்த வாக்குறுதி இந்த நிதிநிலை அறிக்கையிலே நிறைவேற்றப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த அரசு கமிட்மெண்ட் என்று சொல்லுவதுபோல ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. சாதனைப் பட்டியல் என்று போட்டு, அதில் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் செயல்பட்டு வருகிறதென்று வந்திருக்கிறதே என்று கேட்டபோது, சற்று பொறுத்துக்கொள்ளுங்கள் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டில் அது வரவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதலமைச்சரவர்கள் சொன்னதே நிதிநிலை அறிக்கையில் வரவில்லை என்று சொல்லும்போது, முதலமைச்சர் சொன்னதற்கு என்ன மரியாதை தரப்படுகிறதென்பது புரியவில்லை. அதை முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் உணர்ச்சிபூர்வமாகப் பல விஷயங்களைச் சொன்னார்கள். ஏழை மக்களைப்பற்றி, இல்லாத



மக்களைப்பற்றி, தெரு ஓரங்களில் கஷ்டப்படும் மக்களைப்பற்றி உருக்கமாகச் சொன்னார்கள். ஆளும் கட்சியிலிருந்து இத்தகைய உணர்வோடு அவர் சொன்னதை வரவேற்கிறேன். ஆனால் அந்த உணர்ச்சிக்கு அவர் எதிராகக் குறிப்பிடுவதிலேதான், எதிரான கருத்து இருக்கிறது. அவர்களுக்கு வாழ்வு அளிப்பதிலே, வாய்ப்பு அளிப்பதிலே, நலன்கள் செய்வதிலே, திட்டங்கள் தீட்டுவதிலே, மாத ஊதியம் தருவதிலே, வேலை கொடுப்பதிலே அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எந்தவிதத் தவறான கருத்தும் இல்லை . .

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள், நான் கூறியதிலிருந்து அவருக்குப் பெருத்த அச்சம் வந்தது என்று கூறினார்கள். நான் மதிய உணவு பற்றிக் கூறியதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்ததாகவும் சொன்னார்கள். சத்துணவுத் திட்டத்தை ஆசிரியர்கள் முழுப் பொறுப்பேற்று நடத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அனைவரும் இணைந்து செய்ய வேண்டும், மேற்பார்வை செய்ய வேண்டுமென்றுதான் சொன்னேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. தெளிவாக அவர் சொல்லாததால், எனக்கு ஏற்பட்ட அச்சத்தைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள், இதனால் எந்த அளவிற்குக் கல்வி பாதிக்கப்படும் என்பதை, ஒரு பள்ளித் தலைமை ஆசிரியர் என்ற முறையில் உணர்ந்திருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இங்கே அவர்கள் சொன்னபோது மிக அழகாகச் சொன்னார்கள். சமுதாயத்தின் கோடிக்கணக்கான மக்களின் உணர்வைச் சொன்னார்கள். மிகவும் அழுத்தமாகச் சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு கொடுப்பதால் தான் இந்த நாட்டு ஏழையெளிய மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை என்கிற கருத்துப்பட சொன்னார்கள். இந்த நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களுக்கும், பஞ்சைகளுக்கும், பராரிகளுக்கும் நன்மை செய்யாமல் எங்களுக்கு மட்டும் கொடுங்கள் என்று நாங்கள் என்றைக்கும் சொன்னதில்லை. அவர்களுக்காக என் சங்கம் அமைக்கச்

கூடாது என்றும் சொன்னார்கள். அவர்களும் தாராளமாக சங்கம் அமைக்கட்டும். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சங்கம் அமைப்பதாக இருந்தால் ஆட்சி பீடத்தில் இருக்கிற அதிகாரிகள் சங்கம் அமைப்பவர்கள் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எல்லாம் எடுத்திருக்கிறார்கள் என்பதை ஆசிரியர் சங்கத்தினர் உணர்ந்திருக்கிறார்கள். சங்கம் அமைத்ததன் மூலம் அதிகமாக பாதிக்கப்பட்டவர்களும் ஆசிரியர்கள் தான். ஆகவே ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், உணர்வுகளைப் பொறுத்தவரையில் யாருக்கும் சற்றும் குறைந்தவர்களல்ல. பஞ்சைகள் மீது, பராரிகள் மீது ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் எந்த விரோதமும் இல்லை. இந்த நாட்டினுடைய ஜனநாயக அமைப்பில் எந்தெந்த சமுதாயம் கிளர்ந்து எழுந்து போராட்டம் நடத்தி, கையை உயர்த்தி கோரிக்கைகளை வைத்து தியாகம் செய்கிறார்களோ அவர்கள்பால்தான் அரசின் பரிவும் கொடுக்கக்கூடிய நிலையும் இருக்கிறது. இது ஜனநாயகத்தில் தவிர்க்க முடியாத ஒன்று. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற ஜனநாயக அமைப்பில் இருக்கிற ஒரு குறைதான் இது. ஆகவேதான் ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும் பிரச்சினைகளை எழுப்பி கோரிக்கைகளை கொடுக்கிறோம். மத்திய அரசு அகவிலைப்படி உயர்வு பற்றி அறிவித்திருக்கிற கொள்கையை நம்முடைய அரசு ஏன் ஏற்றுக்கொண்டு அறிவிக்கவில்லை என்று தான் கேட்டோம். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகக் கருதத் தேவையில்லை. எங்களுக்குத் தேவையானதைத் தாருங்கள் என்று தான் கேட்கிறோமே தவிர வேறல்ல என்பதை உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி . * * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

திரு. ம. சங்கரலிங்கம் : * * * *

திரு. க. இராமமூர்த்தி . * * * *

திரு. ம. சங்கரலிங்கம் : * * * *

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : * * * *

திரு. செ. முத்துசாமி : * * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



(பிற்பகல் 12.20)

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * * * *

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : * * * *

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் ஒரு வேண்டுகோள். சட்டப் பேரவையிலே பேசப்படும் விவாதக் குறிப்புகள் டைப் அடிக்கப்பட்டு அவைகள் நூலகத்திலே பார்வைக்காக வைக்கப்படுகின்றன. அதுபோன்ற வாய்ப்பு மேலவையிலே இல்லை. அப்படிப்பட்ட வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாகக்கூட இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். ஆகவே இதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

**திரு. செ. முத்துசாமி:** இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் சொன்ன கருத்தை வரவேற்கிறேன். ஏழைகள் வீடு இல்லாதவர்கள் இவர்களுக்கெல்லாம் திட்டம் இல்லை என்று பார்க்கும்போது அந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும் மற்ற அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஓய்வு பெறும்போது 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கென்று ஒரு குழுவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைவராக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மேலும் இன்றைக்கு இருக்கக்கூடிய தலைமைச் செயலாளர், செக்கன்ட் செக்ரட்டரி போன்றவர்களைப் போட்டு ஒரு குழு அமைக்கப்பட்டும், இன்றுவரை அதனுடைய முடிவுகள் வராமல் இருப்பது ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் மிகுந்த வேதனையைத் தருகிறது. விரைவாக அந்த முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குழு போடும்போது செலக்ட் கமிட்டி பற்றி / மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கமிட்டி போட்டாலே காலத்தாழ்வு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். குழுக்கள் போட்டாலும் அப்படியே காலத் தாழ்வு ஏற்படுகிறது. இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தக் குழு அமைக்கப்பட்டபோது 3 மாத காலத்திற்குள்ளாக அறிக்கை தரவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் அந்த அறிக்கை வரவில்லை. ஆகவே, இதைப் பரிசீலனை செய்து, ஓய்வு பெற்றால், 10 ஆயிரம் ரூபாய் என்று உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறைக்காக 1569 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் கேட்டிருந்தும், கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி 290.78 கோடி ரூபாயாகும். இது மொத்த நிதி வருவாயில் 18½ சதவீதம்தான் வருகிறது. இந்த அளவுக்குத்தான் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பலமுறை இந்த அவையிலே கல்விக்காக நிதி ஒதுக்கம் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று கேட்ட பிறகும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைச் சந்தித்துச் சொல்லியதற்குப் பிறகும், கடந்த பல ஆண்டுகளில் இருந்ததைவிட இந்த ஆண்டு கல்விக்கான ஒதுக்கீடு குறைந்



திருப்பதைப் பார்க்கும்போது, மிகவும் வேதனையாக இருக்கிறது. நல்ல கல்வியை எல்லா மக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று புதிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். மேல் நிலைப் பள்ளிக் கல்வியைக் கொண்டு வந்த பிறகு, சோதனைச் சாலைகள் போன்றவைகள் மிகவும் தேவையாக இருக்கின்றன. பல மேல் நிலைப் பள்ளிகளிலே சோதனைச் சாலைகளை இப்போது கட்டிக்கொண்டிருக்கிறோம். பல சோதனைச் சாலைகளில் தேவையான கருவிகள் இல்லை. மருந்துகள் இல்லை, மற்ற தேவையான பொருள்கள் இல்லை. இப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது, கல்விக்காக ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியை விட குறைவாக நிதி ஒதுக்கினால், இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணப்படும்? இன்றைக்கு இருக்கும் தொழில் கல்வி பற்றி மிகவும் அருமையாக பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களே கூட அறிவிப்பு வழங்கியிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு கோயம்புத்தூரிலே சென்று, இனி தொழில் கல்வி பயின்று வரும் மாணவர்கள் படிப்பு முடித்தவுடன், தொழிற்சாலைகளில் பயிற்சி அப்ரண்டிசாக எடுத்துக்கொள்ளப் படுவார்கள், இங்கிருந்து படித்து வந்தவுடனே அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கும் என்று அறிவித்தார்கள். அரசின் சார்பிலே கல்வித் துறை இயக்குநர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அது அமல்படுத்தப்படவில்லை. மதிக்கப்படவும் இல்லை. இதை இந்த அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பிறகு, ஓராண்டு காலத்திற்குப் பிறகு இராணிப் பேட்டையிலே. தோல் பதனிடும் தொழிற்சாலை பயிற்சி ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அத்தகைய பயிற்சி ஆரம்பிக்கும்போது, அவர்களை ஏன் எடுக்கவில்லை? அண்ணா தொழில் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தருடைய தலைமையிலே இன்றையதினம் ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு என்ன முடிவு எடுத்திருக்கிறது? அந்தக் குழு இதுபற்றி ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மாணவர்கள் சென்று படிக்க முடியாமல் இருக்கிறார்கள். பார்ட்-டைம் இன்ஸ்ட்ரக்டர் என்று வைத்து அவர்களுக்கு 150 ரூபாய், 200 ரூபாய் கொடுக்கிறோம். இப்போது டெக்னிக்கலி க்வாலிஃபைட் பீப்பிளுக்கு நல்ல வாய்ப்பு இருக்கும்போது அவர்கள் பார்ட்-டைமாக வந்து எப்படி ஊக்குவிப்பார்கள்? இப்போது நர்சிங் பயிற்சி தருகிறார்கள். இங்கே மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்கள் கூட இருக்கிறார்கள். பள்ளியிலே படிக்கக்கூடிய காலத்திலே தொழில் கல்வி என்ற முறையிலே 2 ஆண்டு காலம் நர்சிங் பயிற்சிக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் பின்னர் அவர்கள் 'நர்ஸ் டிரெய்னிங்' படிப்புக்கு செலக்ஷனுக்குப் போகும்போது, அவர்களுக்கு

இதுபற்றி எந்தவிதமான சலுகையும் கொடுப்பதில்லை. ஒரு 5 எண்கள் இவர்களுக்குத் தரவேண்டும் என்ற முடிவைக்கூட எடுத்து அமுல்படுத்தவில்லை என்று சொன்னால், இவற்றைப் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு என்ன நம்பிக்கை வரும்? இப்படி இருக்கும்போது, தொழில் கல்வி கொண்டு வந்து விட்டோம், எல்லோரும் தொழில் கல்வி பெறுகிறார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்தக் கொள்கை எப்படி நிறைவேறும் நிலை வரும்? ஆகவே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் இதுபற்றி ஒரு சரியான முடிவு எடுத்து, அவர்களுக்குத் தக்க வழியில் பயிற்சி அளிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அறிவித்துவிட்டு பின்னர் அப்படியே விட்டுவிடுவது நல்லதல்ல.

மேல் நிலைப் பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், தமிழாசிரியர்களுக்கு நல்ல நன்மைகளைச் செய்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செய்திருக்கிற விஷயங்களைச் சொன்னார்கள். இதுவரை செய்யாமல் இருக்கும் விஷயங்களை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேல் நிலைக் கல்வி போதிப்பதிலே இரண்டாண்டு காலம் இருந்தால் போதும், தலைமையாசிரியராக எம்.ஏ., பி.டி. படித்த தமிழாசிரியரை வைக்கலாம் என்ற விதி முதலிலே போடப்பட்டது. அதற்குப் பிறகு, சர்வீஸ் விதிகள் என்று வருகிறபோது,

(பிற்பகல் 12-40)

அத்தகைய தமிழாசிரியர்கள் பி.டி. பட்டம் பெற்று 10 ஆண்டுகள் பணியாற்றிய பிறகுதான் தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்படும், என்று சொல்லப்பட்டிருக்கிறது. பி. டி. பட்டம் பெற்று 10 ஆண்டுகள் பணியில் இருக்க வேண்டுமென்றால், அதற்குள் பல தமிழ் ஆசிரியர்கள் பணியிலிருந்தே ஓய்வு பெற்றுவிடுகிறார்கள். இது எப்படி நியாயம் என்றுதான் கேட்க விரும்புகிறேன். அவர்கள் ஓய்வு பெற வேண்டும் என்று அரசு உத்தரவிடுவதாக நான் சொல்லவில்லை. தமிழாசிரியர்களாக இருப்பவர்கள் பி.டி. பட்டம் பெற்று, அதற்குப் பிறகு 10 ஆண்டுகள் பணியாற்றினால்தான், தலைமையாசிரியர் பதவி வகிக்கலாம் என்றால், இது எந்த வகையிலே நியாயம் என்றுதான் அறிய விரும்புகிறேன். நல்ல தமிழ் ஆய்ந்த புலவர் தலைமை வகிப்பதால், அவர் மூலம் தான் இதைக் கேட்க விரும்புகிறேன். பி. டி. பட்டம் என்பது தேவை என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. அதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் பி.டி. பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள் 10 ஆண்டுகள் சர்வீஸ் பண்ணி





யிருந்தால்தான், தலைமையாசிரியர் பதவி என்று சொன்னால், அது எப்படி நியாயமாகும் என்றுதான் நான் அரசைக் கேட்க விரும்புகிறேன். இப்படி உத்தரவிடுவதன் மூலம் ஒருவருக்குக் கூட தலைமையாசிரியர் ஆகும் வாய்ப்பு கிடைக்காது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பி.டி. பட்டம் பெற்ற பிறகு தமிழாசிரியர் புதிதாக என்ன சொல்லித் தரப் போகிறார்? எதற்காக இந்தப் பத்தாண்டு சர்வீஸ் என்று வைக்கிறார்கள்? இதனால் யாருக்கு லாபம்? புதிதாக வருகிறவர்களுக்குத்தான் இதனால் நன்மை ஏற்படுமே தவிர, ஏற்கனவே பணியில் இருப்பவர்களுக்கு இதனால் என்ன நன்மை கிடைக்கும்? எனவே தமிழாசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி கிடைப்பதைத் தடை செய்வதாகவே இது இருக்கிறது என்ற தமிழாசிரியர்களின் ஒட்டுமொத்தமான கடுமையான உணர்வை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதன் காரணமாக இப்போது பணியில் இருக்கும் ஒருவருக்கும் தலைமையாசிரியர் ஆகும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதையும் நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, மேல் நிலைப் பள்ளிகளில் பி.டி. தகுதி போதாது என்று வைத்திருக்கிறார்கள். எம்.ஏ. படித்த தமிழ் ஆசிரியர்கள்தான் அங்கே நியமிக்கப்படலாம். சரி, எம்.ஏ., பி.டி. தான் அங்கே குறைந்தபட்சத் தகுதி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எம்.ஏ., பி.டி. படித்த ஆசிரியர்கள் எம்.ஏ., எம்.எட். படித்தால், அவர்களுக்கு இன்சென்டிவ் இன்கிரிமெண்ட் இல்லை என்று சொல்லப்படுகிறது என்பதையும் நான் அரசின் கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே இல்லாததாலும், கல்வி மானியக் கோரிக்கையின்போது இதைப்பற்றி விரிவாகப் பேசலாம் என்பதாலும், கல்வித் துறையைப்பற்றி அப்போது முழுமையாகச் சொல்ல முடியும் என்பதாலும், பொதுப் பிரச்சினைகளை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"பாதகம் செய்வோரைக் கண்டால், நீ பயங்கொள்ளலாகாது பாப்பா" என்று அன்று பாரதி பாடினான். ஆனால் இன்று "பாதகம் செய்வோரைக் கண்டால் அஞ்சி நடுங்கிவிடு பாப்பா, அவர்களோடு உறவு கொண்டுவிடு பாப்பா, அவர்களை வைத்து ஏதாவது காரியம் செய்து கொண்டுவிடு பாப்பா" என்று புதிய பாடலை பாரதியின் நூற்றாண்டு சமயத்தில் பாட வேண்டிய நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் என்னுடைய மனதில் இருக்கிற அச்ச உணர்வு காரணமாக, இன்றைக்குச் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற சீர்கேட்டைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஊராட்சி ஒன்றியங்களில் "தன்னிறைவுத் திட்டத்தைக்" கொண்டு வந்திருக்கிறார்கள். திட்டத்தைப் பொறுத்தவரையில், மிக நல்ல திட்டம்தான். அதன் நோக்கம் நல்லதுதான் என்பதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களேகூட இங்கே குறிப்பிட்டார். அந்தத் திட்டம், அதை அமுல்படுத்தும் அதிகாரிகளின் "தன்னிறைவுத் திட்டமாக"—தங்களை நிறைவு செய்து கொள்கிற திட்டமாக அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, "யார் யார் எங்கே தவறு செய்தாலும், உடனே எங்களுக்குச் சொல்லுங்கள், நாங்கள் உடனே நடவடிக்கை எடுக்கிறோம்" என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு நாட்டில் நடக்கும் பிரத்தியட்ச நிலைமையை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படித் தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் வருகிறபோது, என்ன நிலைமை ஏற்படுகிறது? தவறு செய்பவர்களும் மனிதர்கள்தான். மனிதர்களுக்குச் சொந்தக்காரர்கள்தான் அப்படித் தவறு செய்யும் அதிகாரிகளும். எனவே இன்னார் இந்தத் தவறைச் செய்கிறார் என்றால், உடனே என்ன நடக்கிறது என்றால், இவர் இன்னாருக்குச் சொந்தம். இன்னார் இதைச் சேர்ந்தவர் என்று இப்படிப்பட்ட நிலைமைகளைச் சொல்லி அழுத்தத்தைக் கொண்டு வந்து அவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் இன்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தனிப்பட்ட யாரையும் நான் இங்கே குறை சொல்லவில்லை. சமுதாயத்தில் இருக்கிற கேடுகள், நிர்வாகத்தில் இருக்கிற தவறுகள் இவைகளையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இவைகளையெல்லாம் என்னால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை.

கல்வித் துறையைப் பொறுத்தவரை, ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது ஒரு ரகசிய சுற்றறிக்கை. ரகசிய சுற்றறிக்கை என்று போட்டுவிட்டு, அதை ஆயிரக் கணக்கான கீழே இருக்கிற சாதாரண அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதில் வேடிக்கை என்னவென்றால் சட்டப் பேரவை, சட்ட மேலவை உறுப்பினர்கள் ஒரு சங்கத்தின்—அதாவது அங்கீகரிக்கப்படாத சங்கத்தின்—தலைவராகவோ அல்லது பொதுச் செயலாளராகவோ இருந்து ஒரு கடிதம் எழுதினால், அதற்குப் பதில் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி, பேரவை உறுப்பினர்களையும் மேலவை உறுப்பினர்களையும் கேவலப்படுத்துகிற முறையில் அந்தச் சுற்றறிக்கை "மந்தணம்" என்ற பெயரில் "கான்பிடென்ஷியலாக" அனுப்பப்பட்டிருக்கிறது. இது கல்வித் துறையின் உயர்ந்த தன்மையைக் காட்டுகிறதா? எனவே இதை தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சங்கம் அங்கீகரிக்கப்பட்டதா இல்லையா என்பதைக் குறித்து அரசும் அதன் துறையான பி. அண்டு ஆர். துறையும் முடிவெடுத்து செயல்படுத்துகிறது. அது வேறு விஷயம். ஆனால் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களைச் சம்பந்தப்படுத்தி அதில் ஒரு பத்தியைச் சேர்த்து இப்படி எழுதியிருக்கிறார்கள் என்றால், இதற்கு என்ன பொருள்? இப்படி எழுதுவதற்கு என்ன அவசியம் வந்தது? இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களை "இன்சல்ட்" செய்வதாக இருக்கிறது. பிரத்தியட்ச நடைமுறையில் நிலைமை என்ன என்பதை நான் விளக்க விரும்புகிறேன்.



சட்டமன்ற மேலவையைச் சேர்ந்த உறுப்பினர்கள்தான் ஆசிரியர்கள் சங்கத்திலே பொறுப்பில் இருக்கிறார்கள். பேரவையைச் சார்ந்தவர்கள் யாரும் அங்கே இல்லை. எனவே மேலவை உறுப்பினர்கள் என்று மட்டும் போட்டுவிட்டால், அதனால் சங்கடம் வந்துவிடும் என்று எண்ணி இரண்டு அவைகளையும் அதில் சேர்த்துப் போட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கல்வித் துறையின் செயலாளர் எழுதுகிற கடிதத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருந்தால், நாங்கள் எங்கே போய் யாரிடம் என்ன சொல்லுவது? நாங்களெல்லாம் இங்கே எப்படிப் பணியாற்றுவது? சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், மரியாதை கொடுக்காதே என்று தங்களுக்குக் கீழே பணியாற்றும் அதிகாரிகளுக்குச் சொல்லிக் கொடுப்பதைப்போல் அல்லவா இந்தக் குறிப்புரை இருக்கிறது. எனவே இந்தக் குறிப்புரையை உடனடியாக நீக்க வேண்டும் என்று, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலம் நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறு சேமிப்புப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சிறு சேமிப்புக்கு பெரிய டிரைவ் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பெயரே சிறு சேமிப்பு, ஆனால் ஆசிரியர்கள் சேர்த்து வைத்திருக்கும் பெரிய சேமிப்பே அவர்களுடைய பிராவிடண்டு பண்டு—வருங்கால வைப்பு நிதிதான். அதிலிருந்து ரூ. 500 அல்லது ரூ. 1,000 கொண்டுவா என்று கேட்கிறார்கள். பெரிய தொழில் அதிபர்கள், பெரிய கறுப்புப் பண முதலாளிகள், பெரிய லட்சாதிபதிகள் ஆகிய இவர்களிடம் போய் சிறு சேமிப்பு என்று கேட்டால், ஒரு பெரிய தொகை கிடைக்கும், அவர்களிடம் அவ்வளவு சேமிப்பு இல்லை

என்று கருதி, ஆசிரியர்களிடம் வந்து உன்னுடைய வைப்பு நிதியிலிருந்து ரூ. 500 கட்டாயமாகக் கொண்டு வா என்று கேட்கிறார்கள். இதற்கு பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும் மற்ற அதிகாரிகளும் கூட்டம்போட்டு ஆசிரியர்களின் பிராவிடண்ட் பண்டிலிருந்து பணம் கொடுங்கள் என்று கேட்கிற நிலைமை இருக்கிறது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதை உடனடியாக அரசு போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு இல்லம் வேண்டும் என்று பல்லாண்டுகளாகக் கேட்டு வருகிறோம். என்.ஜி.ஜி.ஓ.க்களுக்கு இல்லம் கட்டப்பட்டிருக்கிறது. பல இடங்களில் இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்களுக்கு என்று சென்னையில் ஒரு இல்லம் கட்டப்படும் என்று பல ஆண்டுகளுக்கு முன்பே அறிவிப்பு செய்யப்பட்டது. தமிழ் நாட்டில் தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரி வரை மொத்தம் 2½ லட்சம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சென்னைக்கு வந்தால் தங்கிக் கொள்வதற்கும், தங்கிக் கடமையை ஆற்றுவதற்கும் உதவியாக அவர்களுக்குச் சென்னையில் ஒரு இல்லம் கட்டிக் கொடுக்கப்படும் என்று அரசாங்கத்தால் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கல்வியமைச்சராக இருந்த காலத்திலிருந்து இந்தத் திட்டம் இருந்து வருகிறது. இப்போது கல்வியமைச்சராக ஒரு ஆசிரியரே வந்த பிறகும்கூட, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்கள் வந்தால் தங்கிக்கொள்வதற்கும், வெளி மாநிலங்களிலிருந்து ஆசிரியர்கள் வந்தால் தங்கிக்கொள்வதற்கும் சென்னையில் ஒரு இல்லம் தேவை என்பதை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. ஆனால் அதை எப்போது செயல்படுத்தப்போகிறார்கள் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. ஒரு திட்டத்தைச் சொல்லிவிட்டால் அதோடு திருப்தியடைந்துவிட முடியாது. அப்படி அறிவிப்பதன் மூலம் சமுதாயத்தைச் சிந்திக்க வைக்கிறீர்கள், அப்படி அறிவித்த திட்டத்தை எப்போது செயலாக்கம் செய்யப் போகிறீர்கள்? அதுதான் தற்போதைய பிரச்சினை, எனவே இதை அரசு உடனடியாகக் கவனித்து அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, ஆசிரியர்கள் போராட்டம் நடத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். போராட்டம் எப்படி எழுகிறது என்று நான் அப்போதே சொன்னேன். இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். அரசியல் வாதிகள் அரசியல் கட்சிகளை வைத்து நடத்தும்போது, போராட்டம் நடத்தப்படுகின்றது. ஆனால் சம்பளம்



வாங்குகிற அரசாங்க ஊழியர்கள் போராட்டம் நடத்தலாமா என்பதுதான் கேள்வி. போராட்டமின்றி நாட்டில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக வரலாறேயில்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதுதான் ஆசிரியர் இயக்கங்களின் வேண்டுகோளும் ஆகும். இங்கிலாந்து நாட்டிலே "நட்" என்று ஒரு சங்கம் இருக்கிறது. இன்னும் பல சங்கங்களும் அங்கே இருக்கின்றன. ஆனால் நேஷனல் யூனியன் ஆப் டீச்சர்ஸ்" 'என்ற இந்த சங்கம் ஆண்டுக்கு ஒருமுறை அல்லது 6 மாதத்திற்கு ஒருமுறை அரசாங்கத்தோடு உட்கார்ந்து பேசி பேச்சுவார்த்தை மேற்கொண்டு, இன்னின்ன திட்டங்களைச் செய்ய வேண்டும், அதற்கு இவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்ற அடிப்படையில் முழு அளவில்—பார்கெயினிங் கெப்பாச்சிடி—பேரம் பேசி பிரச்சினைகளைத் தீர்க்கிற சக்தியைப் பெற்றிருக்கிறது. இந்த உரிமையை இங்கிலாந்து நாட்டிலிருக்கிற ஆசிரியர் சங்கத்திற்குத் தந்திருக்கிறார்கள். இங்கேயும் நாம் சங்கம் வைத்து நடத்துகிறோம். நம்மிடம் இப்படிப்பட்ட முறையில் ஒரு புதிய அணுகுமுறையை கல்வித் துறை மேற்கொள்ள வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் இங்கே மிக அழகாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாங்கள் அதை ஏற்கெனவே பாராட்டியிருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிக்கு வருவதற்கு முன்னால்—நான் இரண்டாவது முறையாக வந்ததைச் சொல்லவில்லை—முதன்முதயில் வருவதற்கு முன்னால் நன்கு சிந்தித்து தன்னுடைய தேர்தல் அறிக்கையை வெளியிட்டபோது, அதில் ஒரு கருத்தை தெரிவித்திருந்தது. அதாவது ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தனிக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று அதிலே ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையானாலும் சரி, அன்றாடப் பிரச்சினைகளானாலும் சரி, நிர்வாகம் சம்பந்தமான பிரச்சினைகாளாலும் சரி, பதவி உயர்வுபற்றிய பிரச்சினைகளானாலும் சரி, இவைகளையெல்லாம் பரிசீலித்துத் தீர்ப்பதற்கு ஒரு நிரந்தரமான குழு அமைக்கப்படும் என்று அந்தத் தேர்தல் அறிக்கையிலே வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அத்தகைய குழு இன்றுவரை ஏனோ ஏற்படுத்தப்படவே இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி இப்படி வாக்குறுதி அளித்துவிட்டு அதை இன்னும் நிறைவேற்றாமல் இருப்பது நல்லதல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன். எத்தனையோ திட்டங்களை மீண்டும் சிந்தித்துச் செயல்படுத்துகிறார்கள். ஆனால் சொன்னதை மறந்துவிட்டார்களே, இது சரிதானா என்றுதான்

(பிற்பகல் 12-50)

நான் கேட்க விரும்புகிறேன். மனிதனுக்கு மறதி அதிகம் அல்லவா? அந்த மறதி தான் அமைச்சரவையிலே இருக்கக்கூடியவர்களுக்கும் நிச்சயமாக இருக்க முடியும். நேரம் அதிகமாகிவிட்டது என்பதை நான் மறந்துவிடவில்லை. இருந்தாலும் பிரச்சினைகள் இருக்கின்றன. நீங்கள் மணி அடித்து அடிக்கடி நினைவுபடுத்தாமல் இருந்தால், சீக்கிரம் முடித்துவிடுவேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடிக்கடி மணி அடிப்பது இப்போதுதான், உறுப்பினர் அவர்கள் வாய்ப்பு வரும்போதுதான். கல்வி மானியத்தில் பேசும்போது பொருள் இல்லாமல் போகும். ஆகவே உறுப்பினர் அவர்கள் நன்மைக்காகச் சொல்லுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** ஆயிரம் பிரச்சினைகள் இருக்கக் கூடிய சமுதாயத்தில் பேசுவதற்கு பிரச்சினைகள் இருக்காது என்று கவலைப்பட வேண்டாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** முடித்துக் கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்கு என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். திடீரென்று பஞ்சாயத்திலிருந்து நகராட்சிக்குப் போகக்கூடாது, நகராட்சியிலிருந்து கார்ப்பரேஷனுக்கு வரக்கூடாது என்று உத்திரவு போட்டு விட்டார்கள். அவர்கள் அரசு ஊழியர்களாக ஆகிவிட்டதால், நன்மை கிடைக்குமென்று நினைத்ததற்கு மாறாக பாதகமான சூழ்நிலை வந்திருக்கிறது. பிராவிடெண்ட் பண்டுக்காக பி.டி.ஓ., ஏ.ஈ.ஓ. ஆகியவர்களிடம் போவதால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட பல தொல்லைகள் நிர்வாக மாற்றத்தால் வந்திருக்கின்றன. இப்படி வரும் என்று ஏற்கெனவே தெரிவித்திருந்தோம். சிந்தித்துச் செயல்படாமல் முன்னால் இருந்த நிலையிலேயே செயல்படுவதால் வரக் கூடிய சிக்கல்களைச் சொல்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளிகளை அரசு ஏற்று அவைகளை அரசு ஊழியர்களாக ஆக்கும்போது அதே நடைமுறை அதே சர்வீஸ் விதிகள் அவர்களுக்கும் பொருந்தும் என்ற வகையிலே ஆக்குவதில் என்ன சங்கடம்? இதைச் செய்யாததால் புதிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் அரசு ஊழியர்களாகவும் இல்லை. பஞ்சாயத்து ஆசிரியர்களாக இருந்தபோது அவர்கள் பெற்றுவந்த சலுகையும் இல்லை. இப்படி இரண்டுங்கெட்டான் நிலையில் "திரிசங்கு சொர்க்கமாக" இருக்கிறார்கள். அவர்களால் சொர்க்கம் படைத்துக்கொள்ள முடியவில்லை. இரு





கின்ற தொல்லைகளைத் தாங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையை மாற்ற உடனடியாக அதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்டக்டேட் ஆசிரியர்களுக்கு பயிற்சி இல்லையென்று சொல்லியாகி விட்டது. அவர்களுக்குப் பயிற்சி இல்லையென்று சொன்னால், அவர்களை போஸ்ட்-கிராஜுஅவேட் என்று கருதப் போகிறோமா இல்லையா? அவர்களுடைய சம்பளம் என்ன என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் இருக்கிறார்கள். சீனியராக இருக்கக் கூடியவர்கள்தான் வந்திருக்கிறார்கள். ஆகவே உட்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் நிலை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அதிலே பே கமிஷனிலே வரும்போது சர்வீஸ் ரூல்ஸ் கிளாஸ் 3 என்று போட்டார்கள். தலைமை ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், இளங்கலை படித்திருக்கக்கூடிய பிரிவினர் என்று மூன்று பிரிவினரைப் போட்டார்கள். அவர்களையும் இன்றைய தினம் சேர்த்துக்கொள்ளவில்லை. இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய புதிய நிலை என்னவாயிற்று என்று பார்க்க வேண்டும். 1978 ஆம் ஆண்டிலே கொண்டு வந்த ஒரு திட்டம் இது. 1982 ஆம் ஆண்டு வரையில் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென்றால், இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய ஆசிரியர்கள் என்ன நிலையிலே மாணவர்களுக்குக் கல்வியைச் சொல்லித்தர முடியும்? அந்தக் கவலையோடுதான் நான் கேட்கிறேன். அவர்கள் குறித்து எந்தவிதமான முடிவும் எடுக்காத நிலை இருப்பதால்—எதிர்காலத்திலாவது பிரகாசம் இருக்கும் என்றால், அவர்கள் நன்றாக வாழ முடியும். எதிர்காலத்திலும் பிரகாசம் இல்லையென்றால்—அவர்களுடைய மனநிலை கெடும். அப்படி மனநிலை கெட்டவர்கள் எப்படி மாணவர்களுக்கு நல்லமுறையிலே கல்வியைக் கற்றுத் தர முடியும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவுத் திட்டத்திற்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறது. இப்போது 100 கோடி ரூபாய் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஆரம்பப் பள்ளியிலிருந்த மதிய உணவுத் திட்டத்திற்கு "கேர்" நிறுவனம் உணவு கொடுத்துக் கொண்டிருந்தது. இப்போது திடீரென்று கேர் நிறுவனம் உணவை நிறுத்தி விட்டது. வேலை நாட்கள் 20 என்றால் அதில் பத்து நாட்களுக்கு கேர் நிறுவனம் உணவு கொடுத்து வந்தது. இப்போது அந்த பத்து நாட்களுக்குக் கொடுப்பதை நிறுத்தி விட்டது. மீதியுள்ள 20 நாட்களுக்கும் அரசுதான் போடவேண்டும். இப்போது தற்காலிக ஏற்பாடாக 16 பைசா

சேர்த்துக் கொடுப்பது என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கேர் நிறுவனம் கொடுத்து வந்த உணவு நல்ல உணவாக, கூடுதலாக இருந்தது. இன்றைக்கு அதை நிறுத்தி விட்டது. அதற்கு ஒரு முன்னுதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். வங்காள மாநிலத்தில் கேர் நிறுவனம் உதவி செய்யவில்லை, இனி மேல்தான் தமிழ் நாட்டில் தொடர்பு கொண்டு விசாரிக்க வேண்டும் என்று இருக்கிறார்கள் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வங்காளத்தில் மிட்-டே டிபன் என்று சொல்லி ஒரு மாணவனுக்கு 35 பைசா ஆரம்பப் பள்ளியிலிருந்து செகண்டரி பள்ளி வரையில் கொடுக்கிறார்கள். நாம் நண்பகல் உணவு என்று சொல்லுகிறோம். அவர்கள் சிற்றுண்டி என்று சொல்லி அதற்காகத் தருவது 35 பைசா இன்றைக்குள்ள விலைவாசியில். நம்முடைய மாநில அரசு இன்றைக்குள்ள விலைவாசியில் 15 பைசா தருகிறது. அதுவும் 10 பைசாவை அரசு தரும். 5 பைசாவை பஞ்சாயத்து யூனியன் கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுத்தால் உண்டு, இல்லையென்றால் இல்லை. இப்போது 16 பைசாவைச் சேர்த்துத் தருகிறோம் என்று சொல்லுகிறோம். அதையும் சேர்த்து இந்த 26 பைசாவில், இன்றைக்குள்ள விலைவாசியில் என்ன உணவைக் கொடுக்க முடியும்? வங்காளத்தை விட ஜனத் தொகையிலோ அல்லது வருமானத்திலோ நாம் குறைந்து விடவில்லை. அவர்களுடைய பட்ஜெட்டைக் கூட நான் சென்ற தடவை பார்த்தேன். அவர்கள் சிற்றுண்டிக்காக 35 பைசா வழங்குவதால் நாம் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக 50 பைசாவாவது கொடுக்க வேண்டும். ஊரில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். தர்ம கர்த்தா முறை இருக்கக் கூடிய சமுதாய அமைப்பில் அதைத்தான் செய்ய வேண்டும். வேறு வழியில்லை. மாற்று வழி கண்டுபிடிக்கும் வரையில் இதைத் தான் செய்தாக வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த முறையில் சிந்தித்திருக்கிறார். அவருடைய நல்ல எண்ணத்தை நான் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் பள்ளியில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு நல்ல உணவு கிடைக்கக் கூடிய நிலையில் அதிகமான தொகையைக் கொடுத்து நல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு துணைத் தலைவர் மணி அடித்தார்)

ஒரே ஒரு விஷயத்தை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மீதி விஷயங்களை கல்வி மானியத்தின்போது சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தில் நல்ல அக்கறையோடு கவனித்துச் சிறப்பாக செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். மேல்நிலைக் கல்வியைச் சிறப்பாக நடத்துவதற்குரிய திட்டத்தை மீண்டும் சிந்தித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதில் உள்ள சிக்கல்களைப் போக்க உடனடியாகத் தீர்வு காணும் முயற்சியில் அமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டும் என்று சொல்லி . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: "கூறியவை கூறல் குற்றம்" என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல வேண்டாம். சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டாம்.

திரு. செ. முத்துசாமி: இந்தக் குற்றங்கள் வருவது என்ன காரணத்தால் என்பதைச் சொல்லிவிட்டால், அதை அமைச்சர் அவர்களாலே தீர்க்க முடியும் என்பதால் சொல்லுகிறேன். நிர்வாக அதிகாரிகளிடம் நாங்கள் பல பிரச்சினைகளை எடுத்து வைக்கிறோம். அப்போது அவர்கள் விவாதிக்கிறார்கள், செய்வதாகச் சொல்லுகிறார்கள், வாக்குறுதி தருகிறார்கள். மீண்டும் சென்றால் அதையே திருப்பிச் சொல்லுகிறார்கள். பைல் சென்றது என்கிறார்கள், அது இன்னும் வரவில்லை என்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து பிரச்சினைகளைத் தீர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு விழாக்களில் கலந்து கொள்கிறார்களே தவிர பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. அவர்கள் சுற்றுப் பயணம் நடத்துவது மட்டும் நிற்கவில்லை. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தனியார் விழாவுக்குச் சென்று, ஆசிரியர்களுடைய விழாவுக்குச் சென்று, ஒரு சங்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் போல அதிகாரி பேசி வருகிறார். ஒரு குறிப்பிட்ட சங்கத்திற்கு வக்காலத்து வாங்குவதற்காகவா அவர் சுற்றுப் பயணம் செய்கிறார்? ஆசிரியர்கள் பிரச்சினையில் புதிய கண்ணோட்டத்தோடு, முற்போக்கான பார்வையோடு, பிரச்சினைகள் என்றால் இவ்வளவு நாட்களில் தீர்க்க வேண்டும், ஒரு அப்பீல் என்றால், மூன்று மாதத்திற்குள் தீர்க்க வேண்டும் என்று திட்டவட்டமான உத்திரவுகளை கல்வித் துறையிலே இட்டாலொழிய ஆசிரியர்கள் போராட்டமாக மாறுவது நிற்காது. இன்றைக்குக் கூட 'தர்ணா' என்கிறார்கள். ஓராண்டுக்கு முன்னால் கொடுத்த பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை என்றால், நிர்வாக இயந்திரத்தில் உள்ள கோளாறுகளைப் போக்க அரசு சரியாக நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்து அதன் மூலம் வெற்றி பெற வேண்டும், ஆசிரியர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

THIRU J. M. MIAKHAN : Sir, now it is almost 1 o' clock May I know how much time you will be giving to me to speak on the Budget ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டும் ?

THIRU J. M. MIAKHAN : Sir, I want at least about fifteen minutes.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அது ரொம்பத் தாராளமாகத் தரலாம்.

THIRU J. M. MIAKHAN : Sir, many of the hon. Members here have expressed their views on various problems.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டதால் விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 15 நிமிடம் என்பது தாம் என்றால் மற்றது தாம் இல்லாத என்ற பொருள் வந்து விடாதா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் தாம் என்று சொல்லவில்லை. " தாலாம் " என்றேன். அது கூட தப்பாகப் போகுமா ?

திரு. செ. முத்துசாமி : நான் தவறாகப் புரிந்து கொண்டதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

(பிற்பகல் 1-00)

THIRU J. M. MIAKHAN : Hon. Deputy Chairman, Sir, I thank you for giving me this opportunity to speak on this Budget which has been presented by the Hon. the Finance Minister, Dr. Nedunchezhiyan.

Sir, there are very many things in this Budget that should be appreciated. But, to call this a no-tax Budget or a nearly no-tax Budget is a wrong assessment. In fact, the Hon. the Finance Minister has increased the tax on very many things. Instead, he could have candidly said, "There are many items of expenditure. We are not responsible for the price rise and other things. There are very many things that we are not able to do. We want to levy more taxes and, therefore, we are taxing



these commodities ". If he had said that, it would have been better. Instead of that, what he has done is a different thing. I do not want to use those words that are generally used by politicians. But, I would like to cite one example. The Hon. the Finance Minister has tried to say that the Government have reduced the tax on some commodities. For example, he has said that he has reduced the tax on kerosene by half and he has said that it would give relief to the poor. But, what is the amount of relief that the poor people will get ? It may not be even one rupee per family per month in the cities. In the mofussil, the relief will be only half that amount. But, a multi-point tax is there even on grocery items. Even for an ordinary family, a sum of at least Rs. 200 is required for buying even very common grocery items. If we take into account the taxation, every family will have to pay Rs. 5 or Rs. 10 more even to purchase the three ordinary pulses. If the Hon. the Finance Minister had taken a little more care, he could have spread the taxation more evenly and he could have seen to it that the burden is not felt by one section of the population. What is contemplated now is like trying to rob one person in order to give to others. There is a proverb about it in English which we all know and I need not tell it here. Of course, taxation is necessary. I do not say that the Government should not levy taxes or that the Government should not increase the taxes and collect them. Unless there is revenue, how can the Government be run ? Therefore, taxation is quite necessary.

Sir, I would like to congratulate the Government on their efforts to increase food production. Now, a little over 6.7 tons of rice is being distributed through fair price shops. While that is true, I should say that the actual number of card-holders does not represent the true state of affairs. There are very many bogus cards. Now, they are trying to re-enumerate the families. I hope that this would be done properly. I also hope that the people will get adequate quantities of rice and that the bogus cards will be eliminated. In this connection, I would like to say that some more utility items such as match-boxes, cheap cloth, milk powder, etc., may be added to the list of commodities supplied through fair price shops. Now, the people who man these shops are paid a paltry sum as salary and they have not been made regular Government servants. They are

paid Rs. 100 or so per month and their services have not been regularised. They are asked to work for more than 8 hours in a day. They have to work for four hours in the morning and for four hours in the evening. In between, during the lunch-break, they are expected to go and remit the sale proceeds at a place which is 5 kilometres away from the place where the shop is located. These things have to be looked into. Their pay has to be increased a little, at least so as to be commensurate with the present living conditions. Their jobs may be made permanent. They can be given a little more work. I agree that these people who man the fair price shops do not have sufficient work to do. That is why I suggested that some more utility articles may be distributed through these fair price shops. In that case, they will have more work to do and there will also be a justification for paying them a little more.

Sir, under Agriculture, the Government have proposed some seed farms. They have bestowed some attention on this and they have allotted some funds for this. I would like to state that one important aspect of agriculture is the provision of proper storage facilities. We all know that rats alone eat away 25 per cent of the produce in our country, especially in Tamil Nadu. Proper storage facilities are not available. The agricultural produce is stored in the open. They are open to the ravages of weather so much so, they get deteriorated and they become unfit for human consumption. Therefore, I would request the Government to pay some more attention to improving the storage facilities, particularly in the proposed regulated markets. There are a few markets now and the number has to be increased. Unless farmers get a proper return, we cannot expect them to bestow much attention on agriculture. Though ours is an agricultural economy and though many people are engaged in agriculture, because there is no proper return for the in-puts they make, many of them feel disgusted and leave the villages and come to cities. We in the cities are put to great difficulties and ultimately we will have to import foodgrains from foreign countries and it will end in a vicious circle.

Regarding Dairy Development Programme, I think it is better for us to leave it in the hands of the co-operatives because



they will be more fit to deal with it properly. They will be able to produce more milk and market the same and the benefit will accrue to the members of Co-operative Societies.

I am proud and happy—of course, I am associated with the Select Committee on Co-operation which is coming to a close—that the Bill will be presented during this session itself and the Bill has got very good provisions which have been incorporated after a study of the laws in the various States on the subject. The whole thing has been streamlined and it will be useful to the people and they will be benefited.

There is one small thing I want to mention in regard to the Large Scale Multi-purpose Society. One is in the Kolli Hills and we found that the people working there were very nice people and efficient people. But all facilities are not given to them. They say that they can market other things. They can buy the pine apple produced in the hills and bring them down to the plains and market the same. It will help the tribal people. They want one vehicle, which will be suitable for the terrain, like a jeep—four wheel drive. At present, these pine apples are sold in the hills for 5 paise and 20 paise and the same are sold in the plains for Rs. 2 to Rs. 6 per fruit. This is the difference in price from the hills to the plains. There are middlemen who exploit the poor tribal people. If the Society people are given a vehicle, they will be able to help the tribal people. The tribal people will be benefited and their conditions of living

(பிற்பகல் 1-10)

will be ameliorated. Similar conditions may exist in several other Societies also. I request the Government to pay some attention to these small things and see that things are set right. If this is done, I am sure that the usefulness of these Societies will improve as a result of which the people will be benefited.

Sir, I congratulate the Government on having bestowed some attention on fishing also. The Hon. the Finance Minister has stated that Government have proposed to have fishing harbours in two places and that they are trying to get clearance for a harbour in Thanjavur district also. All these things should not

remain only on paper Actually, we have got a large ocean-wealth. We have to exploit it well. There is a limit for the resources or land and beyond that limit we cannot exploit the resources on land. But, very many resources exist in the sea. Besides fish, prawns, etc., there are very many things in the sea that can be exploited. We should at least try to make a start on this. Our State has got a long coast-line and we can do this very well. The fishermen must find a market for the fish that they catch. They bring the fishes that they catch by loading them on catamarans, etc. They come to the shore only late in the night and they have to market the fishes early the next morning. Fish is a perishable item and it cannot be preserved by these fishermen. We cannot have a string of cold-storage plants all along our coast. It is very difficult to do that. But, at least we can provide the fishermen with some ice to preserve the fishes. Fish can be preserved for at least two days if ice and salt are mixed with it. By doing that, the fishermen can preserve the fishes for two days and then take them to the market-place. Therefore, at least in remote fishing hamlets, the Government may provide the fishermen with some ice so that they may preserve the fishes and get a better return for their labour.

Sir, as regards Forests, I would like to say that whatever amounts that the Government are allotting should not be frittered away in payment of salaries and provision of amenities to the staff. They are going to set apart a few crores of rupees for the development of forestry. But, I do not know how they are going to spend the amounts and how they are going to increase the forest wealth. I do not know whether they are going to do this by planting more trees. If I can get some elucidation on this point in the reply of the Hon. the Finance Minister, I will be really very happy. I am fully aware that, as at present, pilferage is rampant in the Forest Department. Timber trees worth crores and crores of rupees are felled down and the forests are denuded completely. For example, we have got valuable sandalwood trees and rosewood trees in our forests. These trees are cut down and smuggled to Japan and other countries. By this, the Government and the people are deprived of their legitimate income and only some middlemen and the



smugglers are being benefited. I think that, somehow or other, this is being done with or without the connivance of the Government officials. These trees must be protected and the denudation of the forests must be prevented. Only then, we will get a good return on the funds that we allot to the Forest Department.

Sir, I am glad that the Government of Tamil Nadu is proposing to start another cement plant in the public sector. At present, the black-market rate of cement is Rs. 90 or Rs. 100 per bag. Recently, I wanted to carry out some small repairs in my house. At first I thought that it would need 10 bags of cement. Later, I found that it required 12 bags of cement. When I asked about the price of cement, I was told that it would cost Rs. 90 per bag in the black market. Sometimes, they give cement adulterated with fine particles of granite and even sand. When getting cement is so very difficult for me, a legislator, I can understand the difficulties that an ordinary man may have to undergo. For getting one or two bags of cement, a man cannot apply to the Tahsildar and wait to get a permit. Even after getting permit, cement is not easily available. Even though we get all the raw materials for the manufacture of cement in our own State, I do not know why the position is so difficult. Cement is essential for the development of any country. We need cement for the building of factories, for building roads, dams, etc. But, cement is now in short supply. Therefore, I am really glad that the Government of Tamil Nadu are contemplating to start a cement plant in the public sector. I request the Government to expedite the proposal and see that the plant is started soon.

Sir, I am rushing through because the time at my disposal is short and the hon. Members will be hungry and eager to go for their lunch. I am finishing my speech very soon and I will finish within the stipulated time.

Though there are many industries and other subjects, about which my hon. Friend Thiru Damodaran had mentioned and Thiru Ramamoorthy will be mentioning when he speaks in detail, I will mention about the leather industry. Our country produces 70 per cent of the raw hides and skins required by the

whole world because we have got plenty of cattle wealth. Once upon a time we were exporting raw hides and skins. We are now forced to send only finished goods because the Centre thought that it would alone earn more revenue. People in European countries want raw or semi-finished leather because they want to give work to their people in their country. They do not like the finished goods of our country because they want to have the finished goods according to their tastes and fashions. The people who were our traditional buyers have started buying from Indonesia, Pakistan, Bangla Desh, Philippines and even South America. Now we are left in the lurch and there is no proper market for our leather goods. Of course, this is a Central subject and it is not a subject to be decided by a State. But our Government should take pains to see that this leather industry is helped in all possible ways. This is the major industry in Tamil Nadu and more than 70 per cent of leather exported from this country is produced and processed in Tamil Nadu. This has now gone down to 40 per cent. Though Tamil Nadu had been traditionally the major contributory to exports, new tanneries have come up in States like Gujarat. Because of lack of encouragement and resources, our traditional industries are going out of the State. Why? There is no proper co-ordination between the Government and the industry. There is a little difficulty as far as leather industry is concerned. There is the problem of effluents. It is true that it will affect the health of the people in the area and the effluents can be properly treated. But these industries are not able to do that because the amount that is required for the treatment of effluents is practically equal to the amount they have invested for the business and the machinery. We must find some way out for this. On a former occasion, our Health Minister said that a group of companies could join together for the purpose of treatment of effluents. In that case, the cost of treatment will go down. The Government must do something and see that these people dealing in leather are not put to difficulties. More than 8 lakhs of people are employed in the industry and most of them belong to the backward community. They are able to get handsome salary. While the agricultural labourer gets a paltry sum, these people are getting up to Rs. 1,000 per month. This industry should not be allowed to go to dogs. Therefore, I



request the Government to bestow some attention on the matter and form a committee consisting of knowledgeable persons to go into the problems of this industry and find out ways and means for the solution of the difficulties facing this industry.

(பிற்பகல் 1.20)

Sir, I somehow feel that our Government of Tamil Nadu are not giving adequate attention to sports. Unless there is a separate Minister for Sports, I do not think we will be able to pay more attention to sports. If there is a separate Minister for Sports, he will take some active interest. As far as our State is concerned, sports are not given any importance at all. Next to education, sports must be given importance. Only then, the health and morale of the people will improve. For example States like Punjab and Haryana are spending large sums of money on sports. Any expenditure on sports is an investment and the health and morale of the people will improve. For example, the States like Punjab and Haryana are spending large sums of money on sports. Any expenditure on sports is an investment on the health of the people and it will have to be done. I request the Government to bestow some attention on this and see that a separate Ministry is set up for this under the control of a separate Minister for Sports.

THIRU A. R. DAMODARAN: You will find the Sports Minister playing all the time, without doing his work, Sir.

THIRU J. M. MIAKHAN: I only wanted that a separate Ministry for Sports might be set up. It should have exclusive control over matters relating to sports. In Tamil Nadu, we may find a lot of hidden and unknown talents, If there is a separate Ministry for Sports, those talents may be brought out. Our boys can compete in sports and also games like tennis, badminton, etc., and bring laurels to our State and to our country also.

திரு. சோ. ஆறுமுகம்: விளையாட்டு அமைச்சராக நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிபாரிசு செய்கிறார்களா, கேட்டுக்கொள்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**திரு. ஜே. எம். மியாகான்:** அப்படி வைத்துக் கொண்டாலும் தவறில்லை. (சிரிப்பு) அவர் விளையாட்டுப் பிரியர். எல்லாவற்றிலும் அவர் போய்க் கலந்து கொள்கிறார். அப்படிச் செய்வது நாட்டுக்கு நன்மை பயக்கும். நாட்டுக்குப் பயன் அளிக்கும் என்றால் அப்படியே வைத்துக்கொள்ளலாம். அதில் எந்த விதத் தவறும் இல்லை.

Sir, the Government have proposed to increase the number of police Stations and also the number of Police personnel. In this connection, I have been stating again and again over the past four years of my tenure in this House that there is no proper representation for the minority communities in the police force. It is so not only for the Muslims but also for Christians and others. Unless the minority communities also are represented in the Police Force, those communities cannot have a sense of security. To instil a sense of security in them, some more members of these communities may be recruited to the Police Force. I request the Government to bestow some attention on this matter. Similarly, I understand that many of the vacancies in Courts have not been filled up. There also, some members of the minority communities, including the Muslims, Christians and others, may be given proper representation so that those communities may feel that they also are given a due share in the governance of the country.

Sir, there are very many orphanages that are run in our State. The amount given by the Government to these orphanages is meagre. The amount given is only Rs. 13 or Rs. 14 per head per month. This amount has to be doubled or even trebled. The children who stay in those orphanages have lost their parents and have become victims of misfortune. Some institutions have taken upon themselves the responsibility for the upkeep and welfare of these children. But, they cannot do it with the Rs. 13 or Rs. 14 given by the Government. Sir, can you imagine providing a child with three meals a day at 50 paise per day? Besides that, the child has to be educated and the dhobi charges, etc., have to be met. How can one expect a child to survive on 50 paise a day? I request the Government to increase the grants to the orphanages. I also request the Government to pay the grants in advance. I understand that now even the small grants that are given are not disbursed in full within the financial year. I



[Thiru J. M. Miakhan]

request the Government to see that these grants payable to the orphanages are increased and are also disbursed within the respective financial year. It seems that now the disbursements are made only after the Audit and other things are over. I hope that the Hon. the Chief Minister who is benevolent and who has introduced a new scheme for feeding children will definitely do this. I do not know how far this new scheme is going to succeed. So also is this tooth-powder affair. I think it is a gimmick. I am not really hopeful about its usefulness. I do not know how much of the money that is going to be spent on the distribution of tooth-powder will reach the people and how far it is going to benefit the people. In any case, the intention is good and, therefore, I appreciate the Government at least for their intention. In the case of orphanages, the private organisations run the institutions efficiently. If the Government give them a little more money, they will be able to run the institutions more efficiently.

One more thing, Sir. Very many people of our country have gone to foreign countries for a living and they are remitting their savings to India. There are such cases in large number in Tamil Nadu, Kerala and other southern States. They earn 1,500 or 2000 rupees and are able to save about Rs. 1000 and the same is sent directly or indirectly to India. With that money, their younger brothers are well brought up and their children are looked after. Their parents are in a better living condition. They are prosperous and any amount of help from this Government would not have placed them in such a good position. As a matter of fact, the amount that is being received in India through small remittances by these people who have gone abroad will be equal to the Budget of the Central Government. More than 900 crores of rupees are being received directly or indirectly through various sources and we get the money here. We must see to it that the service conditions and other living conditions of the people who have already gone abroad are good. I would request the Government to look into their problems. I remember they instituted some sort of a forum and also made a token grant for it last year. I do not know what its present position is. Our representative must be there to look after their interests and to redress their grievances, if any. If the employers in other countries know that our representatives are there, they will treat the people of our country employed there in a better manner and

[Thiru J. M. Miakhan] [1982 மார்ச் 5

will not ill-treat them There is some sort of discrimination in the matter of payment of wages and our people are paid only low salary comparatively. Though it may be within the power of the Central Government, we may send our representative so that he may supervise their conditions of work. In the hope of getting some employment, many people sell all their belongings and pay the money into the hands of some people here and at times they are cheated.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்).

I will finish soon and this is the last item I am mentioning. Such people are stranded in Bombay and other places. There must be an agency of the Government to recruit the people who want to go abroad. Through such an agent, the Government, should see that our people are not deprived of their valuable chances of earning in a foreign country and they should also see that they are treated properly, because not only Tamil Nadu but the whole country will be benefited in the long run. Thank you.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:* மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9—30 மணிக்குக் கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1—27)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

110. Notification issued with G.O. Ms. No. 218, Prohibition and Excise, dated the 9th September 1981 regarding the new rules called the Tamil Nadu Liquor (Refund of Fee and Disposal of Stocks) Rules, 1981 [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

111. Notification issued with G.O. Ms. No. 1364, Housing and Urban Development, dated the 17th October 1980 regarding approval of the detailed Development Plan for Adyar-Map No. 4.



1982 மார்ச் 5]

[Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

*B. Reports, Notifications and other Papers.*

Nil

**இணைப்பு.**

[13 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் உடற்பயிற்சி இயக்குனர்களுக்கான பணிவிதிகள் அரசாணை நிலை எண் 720, கல்வி, நாள் 28.4.81ல் வெளியிடப் பட்டது. அவ்வாணையின் விதி எண் 7(அ)ன்படி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெறுமுன், இதர கல்வித் தகுதிகளுடன் சார்நிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வுகள் பாகம் 1 மற்றும் 2லும் அல்லது நிர்வாக அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளித் தலைமை யாசிரியர் பணியிடங்கள் முதுகலைப் பட்டம் பெற்ற அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களில் 50 சதவிகிதமும், முழுத் தகுதி பெற்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களில் 50 சதவிகிதமும், பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டுள்ளன. கணக்குத் தேர்வுகளில் முன்பே தேர்ச்சி பெற்று இருத்தல் வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி அதனைத் தகுதிகாண் பருவ நிலையில் பூர்த்தி செய்யலாம் என்ற அடிப்படையில் விதிகளுக்கு 1.7.78 முதல் தக்க திருத்தங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி கணக்குத் தேர்வு நிபந்தனையை வலியுறுத்தாமல் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

2. இத்திருத்தங்கள் அரசின் பரிசீலனையிலுள்ளன. இவ்விதிகளுக்கு அரசின் ஒப்புதல் பெற்றபின், மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அப் பணியிடங்களில் பணிபுரிய முழுத் தகுதி பெற்றுள்ளனர் என்ற அடிப்படை விதி 22-பியின்படி (F.R. 22 B) சான்றிதழ்கள் வழங்கப்பட்டபின், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அவரவர்களுக்குரிய ஊதிய திரக்கில் (scale of pay) ஊதியத்துடன் சிறப்பூதியம் ரூ. 50ம் தொடர்ந்து பெற்று வருகின்றனர்.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

சனிக்கிழமை, 1982 மார்ச் 6

மாசி 22, துன்மதி, திருவள்ளுவராண்டு 2013

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள பேரவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம.பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

22060
V211.52 N82
N83-186

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Five-days-a-week work.*

* 161. *Q.*—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce five-days-a-week work in all Government Offices; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) ஐந்து நாட்கள் வேலை என்ற செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் இருந்து வந்தது.

(இ) மத்திய அரசு அலுவலகங்களில் இதே மாதிரியான செயற் குறிப்பினைக் கைவிட்டு விட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே மாநில அரசும் இச்செயற்குறிப்பினைக் கைவிட்டுவிட்டது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : இப்போது கூட வாரம் ஐந்து நாட்கள் பணி என்பது மாதத்திலே ஒரு வாரத்தில் நடைமுறையிலே இருக்கிறது இரண்டாம் சனிக்கிழமை விடுமுறையாக இருக்கிறது. மற்ற வாரங்களிலும் ஐந்து நாட்கள் தான் வேலை நாட்கள் என்று வைத்துக்கொண்டு, மற்ற நாட்களிலே கொஞ்சம் அதிக நேரம் பணி செய்யச் சொன்னால் மேலும் அதிகமான அளவிலே பணி செய்யும் வாய்ப்பு இருக்கிறது. வெளி நாடுகளிலே இதுபோன்ற திட்டம் நல்ல முறையிலே செயல்படுத்தப்படுகிறது. இரண்டு நாட்கள் ஓய்வு கொடுத்தால், அதற்குப் பின் வேலைக்கு வரும்போது சுறுசுறுப்பாகவும், ஆர்வத்தோடும் பணியாற்றுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இந்தத் திட்டம் 1972 ஆம் ஆண்டிலேயிருந்து மிகத் தீவிரமாக வலியுறுத்தப்பட்டு மாநில அரசும் பல்வேறு கட்டங்களில் இதை அமுல்படுத்த முடியுமா என்று ஆய்வு செய்து,

கடைசியில் இதை அமுல்படுத்த வேண்டும் என்பதற்கான ஆதரவான கருத்துக்களையும், அப்படி அமுல்படுத்தும்போது, ஏற்படும் சிரமங்களை அலுவலர்களின் சார்பிலே பலர் தெரிவித்ததையொட்டியும் பரிசீலித்த பிறகு, மத்திய அரசு இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதால், மாநில அரசும் இது வேண்டாம் என்று முடிவெடுத்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் 1. மணி, 1½ மணிநேரம் கூட்டிவைத்து, வாரத்திற்கு ஐந்து நாட்கள் என்று ஆக்குவதன் மூலமாக இப்போது இருக்கக்கூடிய பெட்ரோல் பற்றாக்குறை, மின்சக்தி சிக்கனமாகப் பயன்படுத்தப்படுதல் போன்றவற்றுக்குக்கூட வாய்ப்பு இருக்கும். என்ற கருத்து சொல்லப்பட்டது. ஆனால், எல்லாக் கருத்துக்களையும் பரிசீலித்த பிறகுதான் வேண்டாம் என்ற அளவிலே முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இப்போது எம்.எம்.டி.ஏ.-யில் வாரம் ஐந்து நாட்கள் தான் பணிகளைச் செய்கிறார்கள். மெட்ரோ வாட்டர் டிரெயினேஜ் சென்டரிலே கூட வாரத்திற்கு ஐந்து நாட்கள் தான் வேலைநாட்களாக வைத்திருக்கிறார்கள். ஆகவே, அரசு இதை மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பவும் அதையேதான் கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, எம்.எம்.டி.ஏ.-யில் வாரத்திற்கு ஐந்து நாள் என்றும், வேறுசில அரசுத் துறை நிறுவனங்களிலே வாரத்திற்கு ஐந்தரை நாட்கள் என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். பத்து நிறுவனங்களிலே வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேலைநாட்கள் என்றும், மூன்று நிலையங்களிலே ஐந்தரை நாட்கள் வேலைநாட்கள் என்றும் இப்போது இருக்கிறது. ஆனால், இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், எல்லா நிலைமைகளையும் பரிசீலனை செய்த பிறகுதான், இது வேண்டாம் என்று கைவிடப்பட்டது.

THIRU A. R. DAMODARAN : Sir, even if it is not possible to have a five-day week, may I know whether there is any proposal before the Government to stagger the office-hours of certain Departments so that some offices may start at 10 o'clock, some at 10-30 a.m. and some at 9-30 a.m., to ease the transport problem in Madras City and other areas?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்தக் கருத்தும் ஏற்கெனவே ஒருமுறை பரிசீலிக்கப்பட்டது. ஸ்கூல் கோயிங் சில்ட்ரன்-ஐ யெல்லாம் பள்ளிக்கு அனுப்பிவைத்துவிட்டு அலுவலகங்களுக்கு வருவதிலே சில இடர்ப்பாடுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டது ஒன்பது மணிக்கு அல்லது 9-30 மணிக்கு என்று சொன்னால் கூட, அலுவலகத்திற்கு வருவதிலே சிரமம், இடர்ப்பாடு இருக்கிறது என்று சொன்னதால்தான், இந்த முறையை இப்போது பின்பற்றி வருகிறோம்.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அலுவலக நேர மாற்றத்தைப் பொறுத்த வரையில், வெயில் காலமான இந்த நேரத்திலேயாவது, இந்த மாற்றத்தை அரசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இது நல்ல கேள்வி தான். வேண்டுமானால் இதுபற்றி பரிசிலிக்கச சொல்லலாம்.

## *Fire Accident in Madurai.*

*162. Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. Santhosham) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that there was a big fire mishap in Thirumalairayan Padithurai area in Madurai on 27th May 1981 ; and

(b) if so, the reason therefor?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** (அ) ஆம்.

(இ) இப்பெருந் தீவிபத்திற்கான காரணம், ஒரு குடிசையினுள் எரிந்து கொண்டிருந்த சிம்னி இல்லாத விளக்கிலிருந்து, தீ பரவியதுதான் எனத் தெரிகின்றது.

**திரு. பா. ரா. தாமஸ் :** இவ்வாறு அந்தப் பகுதியிலே பல குடிசைகள் தீப்பிடித்ததன் காரணமாக ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டதாகத் தகவல் வந்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான உதவியை இந்த அரசு அளித்தது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை 154. பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை 14. முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 200 வீதம் 154 குடிசைகளுக்கு வழங்கப்பட்டது. பகுதியாகப் பாதிக்கப்பட்ட 14 குடிசைகளுக்கும் தலா ரூ. 50 வழங்கப்பட்டது. மேலும் 168 சேலைகளும், 168 வேட்டிகளும் வழங்கப்பட்டன. குடும்பம் ஒன்றுக்கு ஐந்து கிலோ அரிசி வீதம் 168 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

**ஆசிரியர் மற்றும் அரசுப் பணியாளர் கூட்டுறவு வங்கி.**

*** 163 வினா.—திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஆசிரியர் மற்றும் அரசுப் பணியாளர் கூட்டுறவு வங்கியை ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரம் தோறும் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) இல்லை எனில், இது குறித்து அரசு ஆராயுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கென வட்டம் தோறும் கூட்டுறவு வங்கியை அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(இ) இந்திய தலைமை வங்கி, தனது 2—5—1980 நாளிட்ட கடிதத்தில் சம்பளம் பெறுபவர்களுக்கென புதிதாக தனி கூட்டுறவு வங்கிகள் அமைக்கக் கூடாதெனத் தெரிவித்துள்ளது. ஆகவே இவ்வகை கூட்டுறவு வங்கி அமைப்பது குறித்து ஆராய வாய்ப்பில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்களுக்கு ஏற்கெனவே பல இடங்களிலே கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. இப்போது அது அமைக்கத் தேவையில்லை என்று சொல்லியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இருக்கும் அந்தக் கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து செயல்படுமா அல்லது இந்த உத்தரவின்படி அவைகளை நீக்க அரசு முயற்சி செய்யுமா ? இப்போது பரிசீலனையில் இல்லாவிட்டாலும் இனிமேல் மீண்டும் அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஆசிரியர்களுக்கு என கூட்டுறவு வங்கிகள் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் தான் இருக்கின்றன. ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கென ஊராட்சி ஒன்றியங்கள் அளவிலே பணியாற்றுபவர்களுக்கு என 272 சங்கங்கள் இருக்கின்றன. அது தொடர்ந்து இருக்கும். புதிதாக கூட்டுறவு வங்கிகள் என ஆரம்பித்து, பிறரிடமிருந்து வைப்புத் தொகை வாங்கும், டெப்பாசிட் வாங்கும் முறையிலே வங்கிகள் அமைக்கக்கூடாது என ரிசர்வ் வங்கி உத்தரவிட்டிருக்கிறது. அதை மாற்றி இந்த அரசு எதுவும் செய்ய முடியாது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாநிலத்திலே பல பகுதிகளிலே ஊழியர்களுடைய நாணயச் சங்கங்களை இணைத்து வங்கிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சங்கங்கள் எல்லாம் விவசாய வங்கிகள் என்று செயல்படுகின்றன.





அவைகளிலே மாத வருமானம் பெறக்கூடிய ஆசிரியர்களையும், அரசு அலுவலர் களையும் இணைத்து அவர்களுக்கு ' நான்-அக்ரிக்கல்சுரல் லோன் ' என்ற வகையிலே கடன் வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அதற்கு வாய்ப்பில்லை. காரணம் அக்ரிகல்சுரல் சொசைட்டியினுடைய நோக்கங்களும், பணிகளும் வேறு. அரசு ஊழியர்களை அதிலே உறுப்பினர்களாக ஆக்கினால், அந்தப் பணிகளையும் மேற்கொள்ளும் அளவுக்கு செயல்படுவது சிரமம். அது நடக்காத காரியம்.

*Repaid Transit Project.*

* 164. Q.—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government will take appropriate steps to implement the Madras Rapid Transit Project at least between Madras Beach Station and Luz?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஆம். சென்னை கடற்கரை இரயில் நிலையத்தில் இருந்து மயிலாப்பூர் லஸ் வரை மின்சார இரயில்பாதை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற இவ்வரசு மத்திய அரசை ஏற்கனவே வற்புறுத்திக்கொண்டு வருகிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இந்தத் திட்டம் பல ஆண்டுகளாகப் பரிசீலனையில் இருந்து வந்தது. பின்னர், மத்திய அரசு இதுபற்றி மாறுபாடான கொள்கைகளை வைத்திருந்ததால், அது நிறைவேற்றப்பட வில்லை. ஏற்கெனவே, திருவொற்றியூரில் இருந்து திருவான்மியூர் வரையிலும் என்ற அளவிலே இந்தத் திட்டம் இருந்தது. இப்போது பீச் முதல் லஸ் வரை என்ற அளவிலே 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அதற்குத் தேவைப்படும் நிலம் போன்றவைகளைக் கொடுத்து தமிழக அரசு எவ்வளவு துரிதமாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு துரிதமாக செயல் படுத்த ஆவன செய்யுமா ?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளிக்கவும், அதற்குத் தேவையான நிதியையும் இந்த நிதியாண்டிலேயே ஒதுக்கவும் கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31—1—1982 அன்று மத்திய திட்ட அமைச்சருக்கு நேர்முகக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

[1982 மார்ச் 6

THIRU G. VASANTHA PAI : Sir, if the Rapid Transit system is to be only between Beach and Luz, it would mean only a distance of 6 to 8 miles. Then, is it worth while for the Government to restrict it to such a short compass, when we had a big plan earlier?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஏற்கெனவே திருவொற்றியூர் முதல் கஸ்தூரி பாய் நகர் வரை செல்லுவதற்கான வகையில்தான் முதல் திட்டம் போடப்பட்டது. அதுதான் இந்த அளவுக்குத் தற்போது குறுகி விட்டது. இந்த அளவுக்கு அனுமதி பெறுவதிலேயே நிறைய சிரமம் இருக்கிறது என்பதால், இதைப் பெற்றுக் கொண்டுவிடுவோம். பிறகு, காலம் கனியும் வரை காத்திருப்போம்.

THIRU G. VASANTHA PAI : Will the Government consider the proposal of having underground transport instead of the over-ground transport system?

The HON. THIRU S. RAGHAVANANDAM : Our proposal is only for ground transport. We are not considering any proposal to have underground railway.

THIRU A. R. DAMODARAN : Are the Government aware that in the Budget for 1982-83 the Government of India has categorically stated that no provision has been made for Madras Rapid Transit System. In that connection, the information that the Hon. the Chief Minister has sent a letter in January 1982 may not be entirely correct.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கடிதம் எழுதியிருப்பது என்பது உண்மை. அது ஒன்றும் 'இன்-கரெக்ட் இன்பர்மேஷன்' அல்ல. இந்தத் திட்டத்தை மத்திய திட்டக் குழு அனுமதிக்க, இரயில்வே அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய திட்டக் குழுவிற்கு மத்திய இரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதை மனதில் வைத்துத்தான் இப்படிப்பட்ட நேர்முகக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : The Hon. Minister is repeating the same reply. I wanted to know whether after the letter had been written, the Government were aware of any fresh development and whether the request had been rejected by the Government of India.



1982 மார்ச் 6]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு, நாம் எதிர்பார்த்த அளவுக்கு, நமக்குச் சாதகமாக நடந்துகொள்ளவில்லை என்பதுதான் உண்மை. என்றாலும் நாம் தொடர்ந்து முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன் காரணமாகத்தான் கடிதம் எழுதியிருக்கிறோம். இரண்டு கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும் இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டிருக்கிற முற்போக்கு நடவடிக்கை அல்லது பிரச்சினைகள் என்ன என்ற தகவல் இந்த அரசுக்குக் கிடைக்கவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** இரயில்வே நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் இதுபோன்ற வேலைகளுக்கு எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. எனவே அதை வற்புறுத்துவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது? அதுமட்டுமல்ல, இவ்வாறு வற்புறுத்துகிற நேரத்திலேயே, காலதாமதம் இல்லாமல் நகரத்தில் ஏற்பட்டிருக்கிற போக்குவரத்து நெரிசலைக் குறைக்கக்கூடிய வகையில்—ரிங் ரோடு டிரான்சிட் சிஸ்டம் என்கிற வகையில்—நகரைச் சுற்றி ரிங் ரோடு போடும் திட்டத்தை அரசு பரிசீலித்து அதன் மீது நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு ஆரம்ப முதல் இதுவரை நடந்து கொண்ட முறையைச் சொல்வதென்றால், அது கொஞ்சம் கசப்பான செய்தியாக இருக்கும். ஒரு நேரத்தில் முழுவதுமாக இந்தத் திட்டத்தையே விட்டுவிடுவது என்ற நிலை ஏற்பட்டது. இந்த அரசின் விடா முயற்சி காரணமாகத்தான் நாம் இந்த அளவுக்காவது வர முடிந்தது. எனவே நான் ஏற்கெனவே படித்தது "ரெப்படிஷன் அல்ல" என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை திட்டக் குழுவிலிருந்துகூட விட்டுவிடலாம் என்ற நிலை வந்தது. இப்போது திட்டக் குழுவிற்கு மத்திய அரசின் இரயில்வே அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது. அதற்கு இந்த அரசு எவ்வளவு சிரமப்பட்டது என்பதை நான் இங்கே சொல்லித்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையில் இல்லை. தற்போது இந்தத் திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று மத்திய திட்டக் குழுவை இரயில்வே அமைச்சகம் அணுகியுள்ளது என்ற தகவல் நமக்கு வந்திருக்கிறது. அந்த வகையில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட கடிதம் எழுதியிருக்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த முக்கியமான பிரச்சினையில் அவையினர் அனைவரின் கருத்தும் ஒருமித்து இருக்கிறது என்று நான் கருதுகிறேன். மத்திய இரயில்வே பட்ஜெட்டில் தமிழகத்திற்கு ஒன்றுமில்லை என்ற உணர்வு

வந்துவிட்டது. எனவே இந்தப் பிரச்சினையின் அடிப்படையில் ஒரு அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் விவாதிப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது அறையில் வந்து கேட்க வேண்டிய ஒன்று. நான் யோசித்துத்தான் சொல்ல வேண்டும். இதைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கருத்துத் தெரிவிக்க விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களின் இஷ்டத்தைப் பொறுத்தது. எனினும் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல கட்டங்களில் மத்திய அரசு இதற்குச் சாதகமாக இல்லை என்பதுதான் உண்மை. ஒரு கட்டத்தில் நாமே இதை விட்டுவிடலாமா என்ற நிலைக்குக்கூட வந்துவிட்டோம். மத்திய அரசின் ஒத்துழைப்பு அந்த அளவுக்கு நன்றாக இல்லை. ஆனால் ஆங்கிலத்தில் "பெர்சிவெரன்ஸ்" என்று குறிப்பிடுவார்களே, அந்த வகையில் விடாமுயற்சியோடு நாங்கள் செயல்பட்டதால், இப்போது இந்த நிலைக்கு வந்திருக்கிறோம். அந்த அளவுக்கு இப்போது 64 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 6.44 ஹெக்டேர் அளவுள்ள நிலத்தையே நாம் தருகிறோம் என்றும் சொல்லியிருக்கிறோம். இப்போது இந்த நிலைக்கு வெகு சிரமப்பட்டு வந்திருக்கிறோம். எனவே இன்னும் சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு, இரண்டு, மூன்று மாதங்கள் பொறுத்துப் பார்த்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன கருத்திற்கு ஏற்ப இதற்காக என்று தனியான ஒரு கூட்டத்தை, ஒரு ஸ்பெஷல் செஷனையே வைத்துக் கூட பேசத் தயாராக இருக்கிறது இந்த அரசு என்று தெரிவித்துக்கொள்கிறேன்

THIRU A. R. DAMODARAN : Sir, on the Railway Budget, final conclusions have not been made. It is true, as my Hon. Friend represented, that Tamil Nadu has lost a number of railway lines and in addition, the Rapid Transit System. The Hon. Minister has merely stated that he is petitioning the Government of India. He would be in a stronger positicin if a resolution of this House is placed before the Government of India before the Railway Budget is finalised. I. therefore, request the Hon. Minister to accept a discussion on the subject.

திரு. ம. சங்கரலிங்கம் : இரயில்வே பட்ஜெட்டில் நமது மாநிலத்திற்கு எந்தவிதமான திட்டமும் சேர்க்கப்படவில்லை என்று இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம்கூட தீர்மானம் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.



மற்ற எல்லாக் கட்சிகளையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட இதைப்பற்றி அங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அவையின் உணர்வையும் பிரதிபலிக்கும் விதத்தில் இதுபற்றி விவாதிக்க குறுகிய காலம் ஒன்றை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன். இதன் அவசியத்தை அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். நானும் ஒப்புக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதையே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். இதில் ஏதேனும் உடனடிப் பயன் ஏற்பட வேண்டுமென்றால், இரயில்வே பட்ஜெட்டின் மீதான விவாதம் முடிவடைவதற்கு முன்னால் நாம் நமது கருத்தை அவர்களுக்குத் தெரிவித்தால், நலமாக இருக்கும் என்பதால், இது குறித்து அமைச்சர் அவர்கள் தம் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது சம்பந்தமாக இப்போது சட்ட அமைச்சராகவும் முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் இருந்த எனது அருமைச் சகோதரர் மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்களே இரண்டு மூன்று முறை டெல்லிக்குப் போய் பேசியிருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். அதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதமும் எழுதியிருக்கிறார்கள். எனவே இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசி மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு என் கருத்தையும் தெரிவிக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு நாட்களில் முடிவு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### *Dam across Sirumalai Stream.*

* 165. *Q*.—THIRU P.R. THOMAS : Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(a) whether it is a fact that an all party meeting was held in the first week of May 1981 at Kodaikanal Road, Madurai district demanding the construction of a dam across sirumalai stream to help the farmers and the people of the locality; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) சிறுமலையாற்றின் குறுக்கே அணைகட்டக் கோரி அனைத்து கட்சி உறுப்பினர்களும் 1—5—1981 அன்று கோடை சாலையில் உண்ணாவிரதம் இருந்தனர் என மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்திருக்கிறார்.

(இ) இத்திட்டம் லாபகரமற்றது என்ற காரணத்தினால் 1976-ல் கைவிடப்பட்டது. மீண்டும் இதனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாமா என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** சிறுமலையாற்றில் மழைக்காலத்தில் அதிகமான வெள்ளம் புரண்டோடுகிறது. அப்படி அதிகமாக வரும் நீர் முழுவதும் வீணாகிறது என்பதை அங்கே உள்ள அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதோடு குடகனாறு அணைக்கட்டு உடைந்ததற்குக் காரணமே இந்தத் தண்ணீர் பெருக்கம் அங்கே போய் மோதியதுதான் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி மூன்று நதிகளின் தண்ணீர் அங்கே வருகிறது. மேலும் அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் தண்ணீர் மிகவும் ஆழத்தில் இருக்கிற நிலைதான் இருக்கிறது. எனவே இந்த அணையைக் கட்டினால், அதன் மூலம் விவசாய உற்பத்திக்கு உதவுவதோடு அந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு. கிணறுகள் மூலம் ஏராளமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்கவும் வாய்ப்பு இருக்கிறது. அதோடு சிறு சிறு மின் நிலையங்களை ஏற்படுத்தும் திட்டத்தையும் நமது அரசு வைத்துக் கொண்டிருக்கிறது. எனவே இந்த அணைக்கட்டைப் பயன்படுத்தி லாபகரமான முறையில் இவைகளைப் பெற்றிட அரசு இத்திட்டத்தைக் குறித்து மறுபரிசீலனை செய்யவும், திட்டத்தை விரிவுபடுத்தவும் முன்வருமா ?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறுமலை ஆறுபற்றி ஏற்கெனவே இன்னொரு சந்தர்ப்பத்தில் அவையில் பதில் சொல்லுகிறபோது, அரசு பரிசீலனை செய்கிறது என்பதற்குப் பதிலாக அந்தத் திட்டத்தை அரசு பரிசீலித்து ஆணையிட்டிருப்பதாகச் சொல்லி விட்டேன். பரிசீலனை செய்வதற்கு உத்தரவிட்டதற்குப் பிறகு ஏற்பட்ட இடைவெளியில் அதை ஆணையிட்டுவிட்டதாகவே சொல்லிவிட்டேன். அதன் காரணமாக இங்கே அந்த ஸ்டேட்மென்டை நானே 'கரெக்ட்' செய்து கொண்டிருக்கிறேன். அந்த அளவிற்கு அதிலே நாங்கள் வேகமாக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். உண்ணாவிரதம் இருந்தார்கள். என்னைக் கூட சந்தித்தார்கள். அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். குடகனாற்றில் வெள்ளம் ஏற்பட்டு உடைந்தது என்பது எப்போதாவது ஒரு முறை 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படக் கூடியது. அதற்காக அந்த வெள்ளத்தைத் தடுத்துவிட முடியாது. சிறுமலை ஆற்றில் அணை கட்டினால், குடகனாறில் தண்ணீர் வருமா, அதிலே பாதிப்பு வருமா என்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் அது தேவையான திட்டம் என்பதை மக்கள் உணர்வதை நாங்கள் உணர்கிறோம். விரைவிலே நல்ல முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



### Allotment of Cement to South Arcot district.

* 166. *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the quantity of cement allotted to South Arcot district, in the third and fourth quarters of 1980, for distribution to the general public;

(*b*) the quantity distributed in the above District during the fourth quarter by (i) Civil Supplies Corporation (ii) Co-operatives and (iii) private cement stockists;

(*c*) whether any Government Order has been issued regarding the allocation of cement to private stockists and public distribution agencies; and

(*d*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** (அ) 1980 மூன்றாம் காலாண்டு—6,000 (மெட்ரிக் டன்களில்) ; 1980 நான்காம் காலாண்டு—4,300 (மெட்ரிக் டன்களில்).

| | (மெட்ரிக் டன்களில்) |
|---|---|
| (இ) (1) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் | 2,580 |
| (2) கூட்டுறவு நிறுவனங்கள் | 1,720 |
| (3) தனியார் வணிகர்கள் அந்தக் கால கட்டத்திற்கு ஒன்றும் ஒதுக்கப்படவில்லை | — |
| | 4,300 |

(உ) மற்றும் (எ) மாவட்ட ஒதுக்கீட்டில் 40 சதவீதம் பொது நிறுவனங்களுக்கும் 60 சதவீதம் தனியார் நிறுவனங்களுக்கும் தற்போது ஒதுக்கப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, when there is a specific Government Order that 60 per cent should be allotteed to private agncy and 40 per cent to public agency, may I know on what authority the District Collector has flouted the Government Order and allotted 100 per cent to public distrbution agency?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** 1980 ஆம் ஆண்டு முதல் மூன்று காலாண்டுகளில் தனியார் வணிகர்களுக்கு ஒதுக்கப்பட்ட மூவாயிரம் மெட்ரிக் டன்களில் 2, 540 மெட்ரிக் டன்கள் மட்டுமே எடுத்துக் கொண்டு, ஏறக்குறைய

500 மெட்ரிக் டன்களை எடுக்காமல் விட்டதால் காலாவதியாகிவிட்ட அடுத்த காலாண்டில் 670/600 மெட்ரிக் டன் காலாவதியாகிவிட்டது. அ போலவே மூன்றாவது ஒதுக்கீட்டிலும் 1100/1, 700 மெட்ரிக் டன்கள் கா வதியாகிவிட்டன. இதனுடைய அடிப்படையிலேதான் அடுத்த காலாண் அவர்களுக்கு ஒதுக்காமல் இருந்தார்கள். அதற்குப் பின்னாலே தொட சியாக அப்படியில்லை. அவர்கள் கேட்டதற்குப் பிறகு கொடுக்கப்பட்டு இறது. 1982 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் தனியார் வணிகர்களுக்கு மெட்ரிக் டன்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எனவே பின்னாலே தொடர் கேட்டதற்கிணங்க ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

Thiru A. R. DAMODARAN : May I know if it has be brought to the notice of the Government that the reason why t private agencies in South Arcot district were not able to lift duri the third and fourth quarters was that the allocation was given fr steamer at Pondicherry and that there was the problem of Cent Sales Tax? May I also know whether the Collector is authoris by the Government to suspend supplies to private stockists, becau a few tonnes may have lapsed in the previous quarters and wheth any complaint has come from the Association in this regard?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இப்படி மொத்தமாக அசே யேஷன் மூலமாக எனக்கு 'ரெப்ரசென்டேஷன்' வரவில்லை. ஆனால் ட தனியார் ஏஜென்டுகளுடைய லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டத மனுக்களைத் தந்ததின் பேரில் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோ அதற்கிடையிலே மத்திய அரசு புதிதாகப் பிறப்பித்திருக்கிற உத்தரவை தொடர்ந்து வரவிருக்கிற மாறுதல்கள் மாண்புமிகு உறுப்பினருக்கு ம நன்றாகத் தெரியும். அந்த அடிப்படையிலே விநியோகம் இருக்கப் போவதா ஏற்கனவே வழங்கப்பட்டதில் பிரச்சினைகள் இருந்தால், முறையாக அர பரிசீலிக்கும்.

### புகளூரில் பத்திரிகை காகித ஆலை

* 167 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தொழி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண் கிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள புகளூரில் பத்திரிகை காகித ஆலையொன்று நிறுவ தமிழக அரசு திட்டமிட்டுள்ளது என்ப உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?





**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(இ) கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டிற்கு 50,000 டன் செய்தித்தாளும், 40,000 டன் எழுது தாளும் உற்பத்தி செய்வதற்காக திருச்சி மாவட்டத்தில் புகளூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திட்டத்தின் மதிப்பு ரூ. 190 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கி இத் திட்டத்திற்கு இந்திய அரசு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் மூலம் 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவி அளிக்க ஒப்புக் கொண்டு உள்ளது. இத்திட்டத்திற்கான நிதிவசதிகள் குறித்து உலக வங்கி மற்றும் இந்திய நிதி நிறுவனங்களுடன் 23-9-1981 அன்று உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 190 கோடி ரூபாயில் அமைக்கப்படவுள்ள அந்தத் திட்டம் எத்தனை ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டும், எந்த ஆண்டில் உற்பத்தியைத் துவங்க வேண்டும் என்றெல்லாம் அரசு முடிவு செய்திருக்கிறதா? அந்தத் திட்டத்தின் விவரங்களை நான் அறியலாமா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பிறகு அநேகமாக எப்ரல், மே மாதங்களில் அடிக்கல் நாட்டி, பணிகள் ஆரம்பிக்கப் படவிருக்கின்றன. 1984 டிசம்பரில் உற்பத்தி வெளி வரும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் காகித ஆலை கரும்புச் சக்கையிலிருந்து எழுதுதாள் தயாரிக்கும் ஆலை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே முந்திரி சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் ஆலையை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? தென்னாற்காடு மாவட்டத்திலே சில ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட அந்தக் காகித ஆலை முந்திரிச் சக்கையைப் பயன்படுத்தி காகிதத்தைத் தயாரிக்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** அரசு சார்பிலே பெரிய அளவிலே நிறுவப்பட இருக்கின்ற செய்தித்தாள் தயாரிக்கும் நிறுவனம் இது ஒன்று தான். மற்ற எதுவும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இன்னொரு சிறிய ஆலையை சர்க்கரை ஆலைக்குப் பக்கத்திலே துவக்க அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir. may I know wheather this is a State industrial project and if so, what the proposed share capital in the newsprint factory is?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 35 கோடி ரூபாய் அரசினுடைய பங்கு மூலதனம்.

Thiru A. R. DAMODARAN : Sir, in view of the proposed deficit of 204 crores of rupees, where do the Government propose to get this 35 crores of rupees?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இது ஏற்கெனவே ஒதுக்கப்பட்டது. அதோடு சேர்ந்ததுதான் ரூ. 204 கோடி டெபிசிட் என்பது.

**திரு. க. இராமமூர்த்தி :** புதிய ஆலையின் அடிப்படையில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது? எத்தனை ஆண்டுகளில் வேலை வாய்ப்பு முழுமை பெறும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** 1981 டிசம்பரில் உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேரிடையாக சுமார் மூவாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மறைமுகமாக ஏஜென்சிகள், டிஸ்ட்ரிபியூட்டர்கள், வியாபாரத்தில் ஈடுபடுபவர், போன்ற பல பேருக்கு ஆயிரக்கணக்கிலும், ஆக நேரிடையாகவும் மறைமுகமாக ஐந்தாயிரம் பேருக்காவது வேலை கிட்டுமென்று எதிர்பார்க்கலாம்.

Thiru A. R. DAMODARAN : May I request confirmation from the Hon. Minister that a sum of 35 crores of rupees has been allotted in the Budget for 1982-83 for investment in this project?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் எதற்காகச் சிரிக்கிறார்கள் என்பது தலைவருக்குத் தெரியவில்லை. தலைவர், அறியாமல் அவையில் சிரிக்கலாமா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். ஏற்கெனவே நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. 35 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அரசின் சார்பில் 30 கோடி ரூபாய் ரிலீஸ் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் ஐந்து கோடி ஒதுக்க வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே நான் சொன்னபடி 204 கோடி டெபிசிட் என்பது இதையும் சேர்த்துதான்.



**திரு. பா. ரா. தாமஸ் :** இந்தக் காகித ஆலையில் பத்திரிகைக் காகிதத்தை மட்டும் உற்பத்தி செய்யப் போகிறோமா அல்லது எழுதும் காகிதம், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றையும் உற்பத்தி செய்யப் போகிறோமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஐம்பதாயிரம் டன் செய்தித்தாளும், நாற்பதாயிரம் டன் எழுதும் தாளும் என்று ஏற்கெனவே சொன்னேன்.

(முற்பகல் 10-00)

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்தக் காகித ஆலைக்கு வேண்டிய மூலப் பொருளான கரும்புச் சக்கை முழுவதற்கும் போதுமா என்று ஆய்வு செய்யப் பட்டதா? பற்றாக்குறையாக இருக்குமானால், அந்தக் காகித ஆலையைச் சுற்றி, அதற்குத் தேவையான மூலப் பொருள்களுக்குரிய லைட் (சாஃப்ட்) மரங்களைத் தோற்றுவிக்க, வளர்க்க அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** கரும்புச் சக்கையிலே மட்டுமல்லாமல், தமிழ் நாடு வனத் துறையிலிருந்து 70 ஆயிரம் டன் மரம் பெறுகிறோம். வனத் துறையிலேயிருந்து அதுவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கச்சாப் பொருளாக கரும்புச் சக்கையும் அத்துடன் மரமும்கூட அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : There is also a paper mill at Punalur, of course, in Kerala State. Are the Government aware of it? I was wondering whether this Mill in Pugalur will not be a colourable imitation of the Mill in Punalur. Because one is Pugalur and the other is Punalur, one should not be mixed up with the other, giving rise to some action later, Sir.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** அது போல கோளாவில் இருக்கிறது. தமிழகத்திலே உள்ள தொழிற்சாலையின் ஊர் பெயரும் அதுவும் கிட்டத்தட்ட ஒரு 'ரைம்' ஆகத்தான் இருக்கிறது. மற்றபடி டெக்னாலஜி தனித்து இருக்கிறது. மாநிலம் தனித்து இருக்கிறது. ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Scarcity of Cement.*

* 168. *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. Santosham) : Will the Hon. the Minister for Industries be pleased to State.

(*a*) whether several representations have been made to the Government, about the scarcity of cement; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(இ) மைய அரசை அதிக அளவு சிமெண்ட் ஒதுக்கிட வலியுறுத்தி வருகிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நேரிலேயும் சந்தித்துச் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சிமெண்ட் பற்றாக்குறை குறித்து மத்திய அரசிடம் பேசி வருவதாக பல நாட்களாகவே சொல்லப்பட்டு வருகிறது. நம்முடைய மாநிலத்தினுடைய தேவைகளுக்கு ஏற்ப மத்திய அரசு நமக்கு ஒதுக்கீடு செய்யவில்லையா அல்லது சரியான முறையில் நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவில்லையா ? நீண்டகாலமாகவே நம்முடைய மாநிலத்தைவிட மற்ற மாநிலங்களுக்கு அதிகமாக ஒதுக்கப்படுகிறது என்ற செய்திகள் வருகின்றன. அப்படி என்றால் மத்திய அரசு நம்மைப் புறக்கணிக்கிறதா ? இது குறித்து விரிவான நடவடிக்கை எடுப்பதற்கும் நம்முடைய சிமெண்ட் பற்றாக்குறை தீர்வதற்கும் தமிழக அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு ஆண்டுக் காலத்திற்கு நமக்குத் தேவைப்படுகின்ற அளவு 12 லட்சம் மெட்ரிக் டன்கள். நமக்கு ஒதுக்கப்படுவது 3.20 லட்சம் மெட்ரிக் டன்கள். அவ்வப்போது வலியுறுத்தும்போது ஒரு 20 ஆயிரம், 30 ஆயிரம் மெட்ரிக் டன்கள் என்று அதிகரித்து தருகிறார்கள். இப்போது மத்திய அரசு விநியோகக் கொள்கையை மாற்றிக்கொண்டிருக்கிறது. ஏறக்குறைய மூன்றிலே 2 பங்கு சிமெண்ட்டை கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும், மூன்றிலே ஒரு பங்கை தனியார் துறை மூலமாகவும் விற்பனை செய்யலாம் என்று இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. எந்தெந்த வகையிலே செய்ய இருக்கிறார்கள் என்பதை மத்திய அரசோடு கலந்து பேசி மாநில அரசு அதற்கான வரைமுறைகளைக் கொண்டு வர இருக்கிறது. அரசு அனுமதியோடு தனியார் விற்கலாம் என்று வந்துவிட்ட பிறகு, இந்தக் குறைபாடுகள் ஓரளவுக்குக் குறையும் என்று நம்புகிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மத்திய அரசு அறிவித்த சிமெண்ட் கொள்கையானது ஏப்ரல் 1—ஆம் தேதிக்கு மேல்தான் அமுலுக்கு வருகிறது. ஆனால் இப்போதே அமுலுக்கு வந்துவிட்ட மாதிரி சொல்கின்றார்கள். மாநில அரசு விநியோக முறையை வகுக்கின்ற காலத்திற்கு முன் உள்ள இடைக்காலத்தில் ஏற்படுகின்ற நிலைமைகள் காரணமாக சிமெண்ட் உபயோகிப்பவர்களுக்கு,



கட்டிடம் கட்டுபவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆலை அதிபர்கள் 3-ல் ஒரு பங்கை அவர்களே விற்பனை செய்யலாம் என்பதால், ரூ. 55 விலைக்கு அந்த சிமெண்டை அந்த நிறுவனங்கள் விற்க இருப்பதாகச் சொல்கின்றார்கள். நம்முடைய மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அந்த விலையைக் குறைப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** அரசுத் துறை நிறுவனங்கள், நீர்ப்பாசனத் துறை, மற்றும் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் இது போன்றவற்றிற்கு மட்டுமல்லாமல், சிமெண்ட்டை மூலப்பொருளாக உபயோகப்படுத்தும் நிறுவனங்கள் இப்படிப்பட்ட சிலவற்றிற்கு மட்டும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும், பெர்மிட் முறை மூலமாகவும் அரசாங்கத்திலிருந்து சிமெண்ட் வாங்க பெர்மிட் வாங்கப்பட்டு, இன்டஸ்டிரிஸ் டிப்பார்ட்மெண்ட், ஒதுக்கி வருகிறது. திரை அரங்கு, பல அடுக்கு மாடிக் கட்டடங்கள், வியாபார நிறுவனங்கள், வீடுகள் இப்படிப்பட்ட வேலைகளுக்கு அவர்கள் தனியாக வாங்கிக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அவர்கள் ஓப்பன் மார்க்கட்டிலே வாங்கிக்கொள்ளலாம் என்று ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது.

இப்போது முழுமையாக எந்தெந்த கேட்டிகரிக்கு இப்படிப்பட்ட பெர்மிட் முறையில் கொடுப்பது தனியார் மூலமாக எந்தெந்த கேட்டிகரிக்குக் கொடுப்பது என்பது போன்றவற்றிற்கு 'கிளியர் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' இன்னும் வரவில்லை. டெலக்ஸ் மூலமாக இப்போது இருக்கின்ற முறையை நிறுத்தச் சொல்லி மத்திய அரசு மாநில அரசுகளுக்கெல்லாம் தகவல் அனுப்பியிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் புதிய பெர்மிட் வழங்குவது நிறுத்தப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Under the new scheme, two-thirds of the allocation will be to the Government. May I know whether the Government will honour the permits already given for low-income-group people because all of them are waiting for supply of cement in our State?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஏற்கெனவே 2/3 பங்கு பெர்மிட் முறைக்கு அல்லது அரசுத் துறைக்கு ஒதுக்குவதிலேயிருந்து தனியார்களுக்கு ஒதுக்க இயலாது. ஏற்கெனவே பெர்மிட் வாங்கியிருந்தாலும்கூட, இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, இனிமேல் அவர்கள் தனியார்களிடமிருந்துதான், பொது நிறுவனங்களிடமிருந்துதான் வாங்கியாக வேண்டும். பெர்மிட் முறை இருந்த போது, வெளியிலே கிடைக்காததால்

பெர்மிட் முறையிலே வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்போது வெளியிலேயே வாங்கிக்கொள்ளலாம் என்று இருப்பதால், அவர்கள் வெளியிலேயேதான் வாங்க வேண்டுமே தவிர, அரசுத் துறைகளுக்கு என்று ஒதுக்கப்படுவதிலேயிருந்து வீடு கட்ட மற்ற வேலைகளுக்கு ஒதுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பெர்மிட் வழங்கி பயன் அடைய இருக்கின்ற சிறு தொழில்கள் இருக்கின்றன. அந்தச் சிறு தொழில்களை வளர்க்கின்ற அளவுக்கு, சிறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு வழங்கியிருக்கின்ற பெர்மிட்டில் கேட்டிருப்பதற்கான அளவுக்கு அவர்கள் பெறுவதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா ? இல்லையென்றால், அவர்கள் கூடுதலான தொகை கொடுத்து வாங்கிச் செலவு செய்து, அவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகும் நிலைமைகள் ஏற்படும் என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இந்தந்தத் தொழில்கள் தொழில் வரிசையிலே வருகிறது என்பதற்கு பல வரைமுறைகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், முன்பு தியேட்டர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டது. தொழில் துறையில் இருந்ததுதான். அவர்கள் இப்போது தனியாக ஓபன் மார்க்கெட்டிலேயே வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற தொழில்களைப் பொறுத்த வரையிலே, தொழிற் துறையினுடைய வரம்பிற்குள் உட்பட்டு இருந்தால், தொழிற்துறை சார்பிலேதான் வழங்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** ஏற்கெனவே இந்தியாவினுடைய சிமெண்ட் உற்பத்தியானது மிகப் பற்றாக்குறையாக இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து தெரியவருகிறது. இப்போது 12 லட்சம் மெட்ரிக் டன் தமிழகத்தின் தேவை என்றால், அதிலே 3 லட்சம் மெட்ரிக் டன் தான் மத்திய அரசு ஒதுக்குகிறது என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்குத்தான் ஒதுக்க முடிகிறது என்று சொல்கிறார்கள். இப்படி உற்பத்தி குறைந்திருக்கின்ற நேரத்தில், இந்த 1/3 பங்கை தனியார்கள் தனிப்பட்ட முறையில் விற்கலாம் என்று சொல்லி வரம்பு இல்லை என்று சொன்னால், அவர்கள் கள்ள மார்க்கெட்டிலேதான் விற்பார்கள். அது நடைமுறையில் வந்தால், அந்தக் கள்ள மார்க்கெட்டுதான் இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன். வெள்ளை மார்க்கெட்டு அல்ல. கள்ள மார்க்கெட்டுத் தான். அதனால் சிமிண்டினுடைய விலை மிகவும் உயரும். வெளி நிறுவனங்களிலே நடக்கக்கூடிய அநியாயங்களைத்தான் நான் இங்கே சொல்கிறேன். அப்படித் தருவதன் மூலமாக கறுப்புப் பண வியாபாரம்தான் தொடர்ந்து நடக்கும்.





எனவே மத்திய அரசுக்கு இந்த 1/3 பங்கு வரம்பு விற்பனையை மாற்றும்படியாகவும், பழைய கொள்கையே இருக்கும்படியாகவும் எடுத்துரைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** பற்றாக்குறை இருக்கிறபோது, பொது விநியோக முறையை, ஓபன் மார்க்கெட் முறையைப் பின்பற்றினால், விலை குறையும், எல்லோருக்கும் பரவலாகக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அதற்கு மாறுபாடான கருத்தும் இருக்கிறது. இதில் நான் என்ன சொல்கிறேன் என்றால், தமிழக அரசைப் பொறுத்தவரையில், அதை கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் நமக்கு இல்லை. மத்திய அரசு முடிவு செய்து உத்தரவு பிறப்பித்துவிட்டார்கள். அவர்களுடைய உத்தரவைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுதான் நம்முடைய நிலைமை. கள்ள மார்க்கெட்டுக்காரர்களுக்கு அது உதவியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். நல்ல மார்க்கெட்டு இருக்கும் என்ற நோக்கத்திலேதான் கொண்டுவந்திருக்கிறார்கள். நாமும் நல்ல மார்க்கெட்டிலேயே எல்லோருக்கும் கிடைக்கும் என்று நம்பலாம்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** ஏற்கெனவே உள்ள பற்றாக்குறை சில அரசு அதிகாரிகள் எடுக்கின்ற தவறான நடவடிக்கைகள் காரணமாக அதிகப் பற்றாக்குறை ஆகிவிடுகிறது. கல்யாண மண்டபங்களிலிருந்தெல்லாம் பெர்மிட்டுகள் கொடுக்கும் முறைகேடான நிலைமைகள் இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் பல இடங்களிலிருந்து பெர்மிட்டுகளை வேண்டியவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இது போன்ற முறைகேடுகளைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இனிமேல் அந்தப் பிரச்சினை இல்லை. பெர்மிட் தாசில்தார் மூலம் அல்லது பி.டி.ஓ. மூலமாகக் கொடுக்கின்ற முறை இல்லை. அந்த சிஸ்டமே இப்போது இல்லை. அதனால்தான் இப்போது பிரச்சினை இல்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதற்குச் சொல்கிறேன் நூற்றுக்கு 66 பங்கு கவர்மென்ட் டிபார்ட்மென்ட்ஸ்க்கு என்ற முறை வந்திருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, சிமெண்ட் வெளியிலேயே ரூ.80, ரூ.90 என்று விற்கிறது என்று சொல்கிறார்கள். இப்போது ரூ.55க்குக் கிடைத்தால், அது எவ்வளவோ விசேஷமான நிலையாக விலையாக இருக்கும் என்பதுதான் நம்முடைய உணர்வு.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know from the Hon. Minister whether he has received specific advice from the Government of India that this 66 per cent levy cement is meant entirely for Government agencies or is meant for distribution through public distribution agency to all types of consumers.

(முற்பகல் 10—10)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மூன்றில் இரண்டு பகுதியை அரசாங்கத்திற்குக் குறிப்பிட்ட விலையில், கட்டுப்பாட்டு விநியோகத்திற்குக் கொடுக்க வேண்டும். மீதி மூன்றில் ஒரு பங்கை அவர்களே சொந்தத்தில் விற்க அனுமதிக்கப்படும். இதுதான் அவர்கள் எடுத்திருக்கிற முடிவு. பெர்மிட் முறை மூலமாக மூன்றில் இரண்டு பங்கு விநியோகிக்கப்படும். ஒரு பங்கு வெளியில் விற்றுக்கொள்ளலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, a clarification. Because two-thirds are to be handed over to the Government for distribution through public distribution agency, and not necessarily for Government consumers only, it is meant for private consumers also. May I request the Hon. Minister to place a statement under Rule 82 tomorrow clarifying the entire position?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, அரசுத் துறை நிறுவனங்கள், நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி இவைகளுக்கு எப்போதும் போலவே சிமெண்ட் குறிப்பிட்ட விலையில் வழங்கப்படும். சிமெண்ட்டை மூலப்பொருளாக உபயோகப்படுத்தும் நிறுவனங்கள், சிறிய பெரிய சிற்றுண்டி விடுதிகள், திரை அரங்குகள், பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள், வியாபாரக் கட்டிடங்கள் இவைகளுக்கான சிமெண்ட்டை நுகர்வோர்கள் வெளிச் சந்தையிலிருந்துதான் பெற வேண்டும். இதுதான் எடுத்திருக்கும் முடிவு.

**திரு. செ. முத்துசாமி :** ஏற்கெனவே சர்க்கரையைப் பொறுத்தவரையில் கன்ட்ரோல் விலை என்றும், லெவி விலை என்றும் இருந்ததோடு, வெளி மார்க்கெட்டிலும் விற்பது என்ற கொள்கையால் ஏற்பட்ட விளைவுகளை மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று சொல்லும் போது, அவர்கள் அதற்கான தண்டனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஆனால் மார்க்கெட்டில் உள்ள ஸ்டாக்கிஸ்டுகளைக் கன்ட்ரோல் செய்ய மாநில அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது? மத்திய அரசு என்ன திட்டம்



கொடுத்திருக்கிறது? சென்னையிலே வீடுகளைக் கட்டும் தொழிலதிபர்களுக்குத்தான சிமெண்ட் கிடைக்கும் நிலை ஏற்படும். சாதாரணமானவர்களுக்கு எப்படி கிடைக்கும்? இந்த நிலையில் மாநிலம் விட்டு மாநிலம் விற்கக்கூட வாய்ப்பு ஏற்படும். இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படுமென்று மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, இதைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெற ஆலோசனை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** நான் ஏற்கெனவே சொன்னது போல், மத்திய அரசு முடிவு எடுத்துள்ளது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல், நாம் ஆலோசனை சொன்னாலும், அதனால் ஒரு பலனும் ஏழப்போவதில்லை. மைய அரசின் முடிவை நடைமுறைப்படுத்துவோம். பிறகு பிரச்சினைகள் வரும்போது, தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாநிலத்திலே அமைச்சர்கள் அடிக்கல் நாட்டிய கட்டிடங்கள், கல்லூரிகள், பள்ளிகள், பாலங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டிடங்களைக் கட்டி முடிக்க முன்னுரிமை கொடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** யார் அடிக்கல் நாட்டினாலும், ஏற்கெனவே அனுமதி பெற்று, அதற்கான அனைத்து வசதிகளும் இருந்தால்தான், அடிக்கல் நாட்டுவது முறையாக இருக்கும். அடிக்கல் நாட்டப்பட்டதற்காக பிரத்யேக ஒதுக்கீடு அரசு சார்பிலே செய்யப்படாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சரவர்களோ அல்லது துறை அமைச்சர் என்ற முறையில் நானோ பிரத்யேக அல்லாட்மென்ட் என்ற முறையில் நாங்கள் விசேட அதிகாரம் கொண்டு யாருக்கும் எந்தவித ஒதுக்கீடும் செய்வதில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சிமெண்ட் பற்றாக்குறை அல்லது விநியோகத்திலே உள்ள முறைகேடுகள் இவைகளை விரைவிலே நிறுத்தவில்லை என்றால், சிமெண்ட் ஆலைகளை அரசே ஏற்க வேண்டி வரலாமென்று முதல்வரவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்புக்குப் பின்னாலே ஏதேனும் சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கிறதா? அல்லது அந்த அறிவிப்பின்படி அரசு அவற்றை ஏற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு முதல்வரவர்கள் சட்டமன்றத்திலே அறிவித்தது, மத்திய அரசு இப்போது எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு முன்னாலே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவும்

நல்ல நோக்கத்திலே, பொது மக்களுக்கு முறையாக சிமெண்ட் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே மாண்புமிகு முதல்வரவர்கள் அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசுக்கு இதுகுறித்து, இதிலே சிக்கல் வந்தால் எழுதுவோம், வற்புறுத்துவோம் என்ற அந்த எண்ணத்தில் அந்தக் கருத்தை வெளியிட்டார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மத்திய அரசு மாநில அரசுக்கு ஒதுக்குகிற சிமெண்டில் 66 சதவிகிதம் அரசாங்கப் பணிகளுக்கு மட்டுமே என்று தெரிவித்திருக்கிறார்கள். இதுவரையிலே ஆண்டுதோறும் மாநில அரசு தன்னுடைய சொந்தப் பணிகளுக்குப் பயன்படுத்தும் சிமெண்ட் எவ்வளவு? 66 சதவிகிதம் முழுமையாகச் செலவழிந்து போகிறதா, இல்லையென்றால் மீதம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஏற்கனவே நான் சொன்னது போல் 60 : 40 என்று பின்பற்றி வந்தோம். இப்போது ஒதுக்கப்படுகிற அளவு மூன்றில் 2 பங்கு. ஒரு பங்கை சிமெண்ட் ஆலைகளே விற்கலாம். அரசுத் துறை நிர்வாகங்களுக்கு, அரசு சார்பிலே கட்டப்படும் கட்டிடங்களுக்குத் தேவைப்படுவது மத்திய அரசு ஒதுக்குவதைவிட அதிகமாக இருக்குமே தவிர, அதிலிருந்து யாருக்காவது கொடுக்கும் அளவிற்கு இருக்காது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. உரிமைப் பிரச்சினை

### 24—2—82 அன்று 'முரசொலி' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 24—2—1982 அன்று முரசொலிப் பத்திரிக்கையில் வெளியான ஒரு செய்தி குறித்து டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்று சுருக்கமாக விளக்கக் கேட்டுக் கொள்கிறேன்.





**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, 24—2—1982 அன்று 'முரசொலி' நாளேட்டில் திரு. க. அன்பழகன் அவர்கள் தூத்துக்குடியில் பேசிய கீழ்க்கண்ட செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது :—

"நேற்று முன்தினம் அமைச்சர் வீரப்பன் பேசுகிறார் மேலவையில் என்று கருதுகிறேன், சுப்பிரமணிய பிள்ளை கொலை பற்றி எதிர்கட்சியிலே இவ்வளவு பேரும் பேசுகிறீர்கள், படுகொலை என்கிறீர்கள், பால் கமிஷன் அறிக்கையை வைத்துப் பேசுகிறீர்கள். இந்த அரசாங்கத்திற்கு தவறான நோக்கம் இருப்பதாகச் சொல்கிறீர்கள். இன்றைக்கு நான் சொல்கிறேன் என்று வீரப்பன் சொல்கிறார். சுப்பிரமணிய பிள்ளை மீது ஏற்கனவே சில புகார்கள் இருந்தன என்று சொல்கிறார் என்றால் எவ்வளவு அயோக்கியத்தனமான பேச்சு என்பதை தயவு செய்து எண்ணிப் பாருங்கள்."

மேலவையில் ஓர் உறுப்பினர் பேசியது அயோக்கியத்தனமான பேச்சு என்று கூறுவது இந்த அவையின் உரிமை மீறிய செயலாகும். எனவே இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஓர் உறுப்பினர் அவையில் உரையாற்றியது குறித்து 'அயோக்கியத்தனமான பேச்சு' என்று கூறுவது உறுப்பினருடைய பேச்சுக்கு மாசு கற்பிப்பதுடன், அவரை அச்சுறுத்துவதாக அமையும். பொது மக்களிடையே அவருடைய கௌரவத்தையும் குறைப்பதாகும். எனவே இது அவை உரிமை மீறிய செயலில் அடங்கும். இருப்பினும் விதி 160 (1)-ன்படி இந்த நிகழ்வு அண்மையில் நடந்திருக்க வேண்டும். அன்றே அவையில் உடனடியாக எழுப்பியிருக்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் இதைக் காலம் தாழ்த்தி இங்கு எழுப்பியுள்ளபடியால், விதி 160 (1)-ன்படி நான் இதற்கு இசைவு தர இயலாது. இருப்பினும் அவை நடவடிக்கைகளை பத்திரிக்கைகளில் பிரசுரிக்கும்போது, சற்று கவனத்துடன் உறுப்பினர் பேச்சுக்குக் களங்கம் விளைவிக்காத வகையில் பிரசுரிக்க வேண்டுமென்று பத்திரிக்கைகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு

(1) தமிழ் நாட்டில் நீதிமன்றங்களில் மாஜிஸ்டிரேட் இல்லாமல் இருப்பதால் வழக்குகள் தீர்க்கப்படாமல் தேங்கி வருவது குறித்து

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

" தமிழ் நாட்டில் 31 நீதிமன்றங்களில் மாஜிஸ்டிரேட் இல்லாமல் இருப்பதால் வழக்குகள் தீர்க்கப்படாமல் தேங்கி வருவது குறித்து"

Thiru G. VASANTHA PAI : On a point of order, Sir. On an important matter like this, the Minister's statement circulated to us is only in the Tamil language. We would like to have an English translation also about this. Many of us do not know the Tamil language. The language of the House is both English and Tamil. Therefore, I would request you to give an English translation.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையை உணர்கிறேன். நான் அதற்குத் தடையாக இல்லை. ஆங்கிலம் தெரியாதவர்கள், ஆங்கிலத்தில் வாங்கி ரொம்பக் காலமாகக் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்தார்கள் என்பதை நினைவூட்டுகிறேன். அவர்களுக்கு அவசியமானபோது அனுப்புவார்கள். அதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. ஜி. வசந்த பை : இப்போது எனக்கு 60 வயதிற்கு மேல் ஆகிறது.

திரு. செ. முத்துசாமி : Many of us ' என்று உறுப்பினர் சொல்வது சரியல்ல.

Thiru A. R. DAMODARAN : Sir, we are not prohibiting the distribution of Tamil versions of the Ministers' statements on call-attion notice. What we object to is that English translations are not being provided as is done in the case of Budget documents. Why should that be prohibited when it would be of benefit to hon. Members like Thirumathi Tara Cherian and Thiru Vasantha Pai and also, sometimes, myself ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூன்று பேருக்கும் தமிழ் தெரியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. வசந்த பை அவர்கள் தனக்கு 'சிலப்பதிகாரமே தெரியும்' என்று சொல்லியிருக்கிறார். (சிரிப்பு)

* 195-196 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. ஜி. வசந்த பை : எனக்கு தமிழ் கொஞ்சம் கொஞ்சம்தான் தெரியும். எனக்குத் தமிழில் பேசத் தெரியும். ஆனால் வாசிக்கத் தெரியாது. இப்போது எனக்கு வயது 60-க்கு மேல் ஆகிறது. ஆங்கிலத்தில் சொன்னால் பரவாயில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பல பேருக்குத் தமிழ் தெரியாது என்று உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அதை 'சில பேருக்கு' என்று உறுப்பினர் மாற்றிச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. வசந்த பை : உறுப்பினர் அவர்கள் 'லாஜிக்' படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். லாஜிக்கில் 'சம்' என்பதற்கு 'ஒன் ஆர் ஆல்' என்றுதான் பொருள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : விவர அறிக்கை * அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நீதிபதிகளை நியமிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நீதிபதிகள் நியமிக்கப் பட்ட பிறகும் கூட, ஏற்கெனவே உயர்நீதிமன்றமானாலும் சரி அல்லது மாவட்ட நீதிமன்றங்களானாலும் சரி, நீதிபதிகள் இருக்கிற இடங்களில் கூட வழக்குகள் தீர்வு காணப்படாமல் வீண் கால தாமதமாகிக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் வழக்குகள் தீர்க்கப்படவும், அதன் காரணமாக நியாயம் தேடி வரும் மக்களுக்கு காலா காலத்தில் நியாயம் கிடைக்கவும் அரசு என்ன நடவடிக்கையை விரைந்து எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 'பெண்டன்சி ஆப் கேசஸ்-ஐப் பொறுத்தவரையில், நீதிமன்றங்களில் தேங்கி நிலுவையில் இருக்கின்ற வழக்குகளைப் பொறுத்தவரை, அத்தகைய நிலையை மாற்ற அரசு அவ்வப்போது உயர்நீதிமன்றத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்களுக்கு உயர்நீதிமன்றம் அவ்வப்போது அறிவுரையும் தாக்கீதும் அனுப்பிக்கொண்டிருக்கிறது. தற்போது மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள் ஏராளமான அளவில் வந்திருப்பதன் காரணமாக மற்ற வழக்குகள் தேங்கிய நிலையில் இருக்காது தடுக்க 21 தனி நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு உத்தரவு போட்

[திரு. சி. பொன்னையன்] [1982 மார்ச் 6

டிருக்கிறது. பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் போதவில்லை என்கிற குறை இருந்த தால், 108 புதிய பப்ளிக் பிராசிக்யூட்டர்களை நியமனம் செய்ய தற்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இது போன்ற நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஓரளவு பிரச்சினைகள் தீரும். அது மட்டுமல்லாமல், வழக்குகள் தேங்காமல் இருப்பதற்காக தனியாக ஒரு குழுவை அமைக்கவும் யோசனை செய்யப்பட்டிருக்கிறது.

(திரு. ஜி. வசந்த பை எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள்தான் கேட்க வேண்டும். மற்றவர்கள் பேசக்கூடாது. அது மரபல்ல. திரு. வசந்த பை அவர்கள் இந்த அவையிலே ரொம்ப நாளாக இருக்கிறார்கள்.

**திரு. ஜி. வசந்த பை:** ஆங்கிலத்தில் கொடுக்கலாம் என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சரவர்கள் ஆங்கிலத்தில் பதில் சொல்லக் கூடாதா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆங்கிலத்தில் அவர் சொன்னார் என்றால், ஆங்கிலத்தைப் புரியாதவர்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள்.

**திரு. ஜி. வசந்த பை:** எளிதாக, சிம்பிளாக அமைச்சர் அவர்கள் அதை ஆங்கிலத்தில் சொல்லியிருக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** நீதி மன்றம் பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் வழக்கறிஞர்கள் எல்லோரும் கலந்து கொண்டு இதையே ஒரு நீதி மன்றமாக ஆக்க முற்படுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதே சமயத்தில் ஒன்றை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உயர்நீதி மன்றம் மற்றும் இதர நீதி மன்றங்களில் நீதிபதிகளுக்கு உதவி செய்யக் கூடிய பதவிகள் ஏராளமாகக் காலியாக இருக்கின்றன. அவர்களுக்குப் போதுமான அளவு ஊழியர்கள் வழங்கப்படவில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறது. இன்னொரு கருத்தையும் சொல்கிறேன். அரசுத் தரப்பிலிருந்து வழக்கறிஞர்களை நியமிக்கிறோம் என்று சொன்னால், இன்றைக்கு அரசின் பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு துறைக்கு என்று தனித் தனியாக வழக்கறிஞர்களை நியமித்தால், அந்தத் துறை சம்பந்தப்பட்ட



1982 மார்ச் 6] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

வழக்குகளை அரசு நீதிபதிகள் விரைவில் பைசல் செய்ய வாய்ப்பாக இருக்கும். இந்த வகையில் அவர்களிடம் பொறுப்புகளை ஒப்படைத்து விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கலாம். இன்னொன்று. சில வழக்குகளில் அட்வகேட் ஜெனரல் வந்து வழக்காட நேரமில்லை என்பதால் அந்த அடிப்படையில் வழக்குகள் தள்ளிப் போடப்பட்டுக்கொண்டே வருகின்றன. ஆகையால் அந்தக் குறைபாட்டைப் போக்கவும் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** உறுப்பினர் உயர் நீதிமன்றத்தில் தேங்கியிருக்கின்ற வழக்குகளை மட்டும் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். அட்வகேட்-ஜெனரல் பல நீதிமன்றங்களுக்குப் போக வேண்டியிருப்பதால், வழக்குகள் தேங்கி விடுகின்ற பிரச்சினை, நம்முடைய நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், அறவே இல்லை. எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 5 அடிஷனல் அரசு பிளீடர் பதவிகளை ஏற்படுத்தி, தனித் தனியாக உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், பல்வேறு பிரிவாக துறைகளைப் பிரித்து அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அந்த வகையில், வழக்குகளைப் பொறுத்தவரையில், எந்தவிதத் தேக்கமும் இருக்கக்கூடாது என்கிற வகையில் 5 அடிஷனல் பிளீடர் பதவிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, ஸ்பெஷல் பிளீடர் என்கிற அடிப்படையில் 'ஸ்பெஷல் கவர்ன்மென்ட் பிளீடர் பார் கவுண்டர்' என்கிற பதவியை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்களே வழக்குகளையும் நடத்தி, கவுண்டரையும் தயார் செய்ய வேண்டுமென்று முன்பு இருந்த நிலையை மாற்றியிருக்கிறோம். முன்பு இருந்த முறையின் மூலம் 1½ ஆண்டுக் காலம், 1 ஆண்டுக் காலம் பிடித்தது. Government Pleader will not be arguing the matter. இப்போது Special Government Pleader to prepare the counter என்று போடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 5 அடிஷனல் கவர்ன்மென்ட் பிளீடர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இப்போது பாராட்டக்கூடிய அளவுக்கு பிரச்சினைகள் தீர்ந்திருக்கின்றன. நீதிமன்றங்களில் இடங்கள் காலியாக இருக்கின்றன என்றும் சொன்னார்கள். அந்தப் பிரச்சினை இப்போது இல்லை. விவர அறிக்கையில் சொல்லியுள்ளதுபோல், 9—4—1981 அன்று 24 இடங்களில் மாஜிஸ்டிரேட் இல்லாத நிலையை மாற்ற வேண்டுமென்று சொல்லி உயர் நீதிமன்றம் நோட்டிபிகேஷன் செய்து, அவர்களே மனுக்களை வரவேற்று, தேர்வுகளை நடத்தி அரசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியலை 'பார்மல் அப்ரூவலு'க்காக அனுப்பியது. 24—4—1981 அன்று 'பார்மல் அப்ரூவலை' அரசு வழங்கியது. ஆனால் நோட்டிபிக்கேஷன் பண்ணும்

போதே, 5 ஆண்டுகளுக்குக் குறைவாக அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பம் அனுப்ப வேண்டாமென்று உயர்நீதிமன்றம் கேட்டிருந்தது. அப்படியும் பணி அனுபவம் என்கிற வகையில் தகுதியில்லாதவர்கள் 17 பேர்களிடமிருந்தும் கூட மனுக்களைப் பெற்று அவர்களையும் தேர்ந்தெடுத்து விட்டார்கள். அந்த 17 பேர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று சொல்லி ஒருவர் ரிட் தாக்கல் செய்தார். அதன்பேரில் அந்த 17 பேர்களையும் தேர்ந்தெடுப்பது முறையல்ல, அவர்கள் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக அனுபவம் உள்ளவர்களாக இருப்பதால், அவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது, மற்றவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், அரசு அதற்கு 'பார்மல் அப்ரூவல்' தர மாட்டோம் என்று சொல்லி மறுத்தது. 24—4—1981 அன்று இந்த 17 பேர்களைத் தவிர, மற்றவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சொல்லி அனுமதி தந்துவிட்டோம். இந்த 17 பேர்களுக்கும் கூட விதி விலக்கு தந்து தேர்ந்தெடுக்க அனுமதி வேண்டுமென்று உயர்நீதிமன்றம் அரசைக் கேட்டது. உயர்நீதிமன்றத்தில் ரிட் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அது சிக்கலாக முடியும் என்று எண்ணிய காரணத்தால், 6 மாத காலம் இது இழுத்தடிக்கப்பட்டது. கடைசியில் இடங்கள் காலியாக இருக்கிறது என்பதை அரசு சுட்டிக்காட்டி தகுதியுள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட 34 பேர்களையாவது உடனே நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன்பேரில், அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது அந்தப் பிரச்சினை இல்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, on a point of order. I gave notice of a Short Notice Question on the subject on which the Hon. Minister is now replying. But at that time he refused to give his reply to my Short Notice Question. I am regarding the letter received by me from the Legislative Council Department in the matter :

'In continuation of this Department letter cited. I am directed to inform you that since the Hon. the Minister for Co-operation has not consented to the waiver of the usual period of notice prescribed in the Rules, the Short Notice Question No. 1663 given notice of by you has been treated as Starred Question. It will be dealt with in accordance with Rule 40-A (5) of the Tamil Nadu Legislative Council Rules. Contrary to that, now the Hon. Minister is replying on the very question which I have asked and he is saying why the Government have appointed counter-lawyers, other Government Pleaders, etc. He is answering that. It is not proper



THE HON. THIRU C. PONNAIYAN : Sir, consequent on the raising of a query by the hon. Member Thiru Lakshmikandhan, it is inevitable for me to give the information. When he raises a question, definitely I have to give an answer. Especially, in a call-attention notice, the hon. Member concerned is entitled to put questions and I am obliged to give the reply.

THIRU G. VASANTHA PAI : Sir, I am not on that at all. I gave notice of the Question on 1st February 1982. Now, Rule 40-A (5) says, "If the Minister is unable to answer the question at short notice and the Chairman is of opinion that the question is of sufficient public importance", the Chairman may direct it to be included for answer under rule 35. Now, it is said that the Hon. Minister was not able to answer the Short Notice Question when I put it. He was in a position to answer it because he is now answering it. I say that he should have answered my Question and should not have turned it down.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்கும் 'ஷார்ட் நோட்டீஸ் கொஸ்ட்டியனை', 'ஆர்டினரி கொஸ்ட்டியனாக' மாற்ற துறைக்கு உரிமை இருக்கிறது. அதன்படி, எவ்வளவோ மாண்புமிகு உறுப்பினர்களின் 'ஷார்ட் நோட்டீஸ்' கேள்விகளெல்லாம் ஆர்டினரி கொஸ்டினாக மாற்றப்பட்டிருக்கின்றன.

THIRU G. VASANTHA PAI : Sir, I am not objecting to the Chair doing it. But the Chair does it only after the Minister says that he cannot answer that Question. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஆன்சர் பண்ணுகிறாரே! அப்படி இருக்கும்போது, அவ்வாறு எப்படிச் சொல்ல முடியும்?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்ததால் சொல்கிறார்.

The Hon. THIRU C. PONNAIYAN : Sir, at the time the hon. Member gave that Short Notice Question, I might not have been ready to give an immediate reply Subsequent to it the hon. Member spoke to me also in person and I gathered all the information. I

am now fully prepared with the entire answer. If the hon. Member
gives the Short Notice Question today, I will be able to give the
answer on Monday.

THIRU G. VASANTHA PAI : Sir, I have already given it.

(2) சென்னை குடிநீர் குழாய்களில் தண்ணீரில் விஷக்கிருமிகள் கலந்திருப்ப
தாகவும், சாக்கடைத் தண்ணீர் கலப்பதால் கிருமிகள் உள்ளதாகவும்
ஆராய்ச்சி முடிவுகள் மூலமாக தெரிவிக்கப்பட்டிருப்பது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, " சென்னை
குடிநீர் குழாய்களில் வரும் தண்ணீரில் விஷக்கிருமிகள் கலந்திருப்பதாகவும்,
மேலும் குழாய்த் தண்ணீரில் சாக்கடைத் தண்ணீர் கலப்பதால் அபாயகரமான
கிருமிகள் மேற்படி நீரில் உள்ளதாகவும் சமீபத்தில் ஆராய்ச்சி முடிவுகள்
மூலமாக தெரிவிக்கப்பட்டிருப்பதால் சென்னை மாநகர் வாழ் மக்கள்
அடைந்துள்ள அச்ச நிலை குறித்து" மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை
அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, விவர
அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, விவர அறிக்கையில்,
' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' நாளிதழில் வந்திருந்த ஒரு செய்தியைச் சுட்டிக்
காட்டி, அதிலே 371 மக்களின் உடல் நிலையைச் சோதித்தபொழுது அவர்களில்
பலருக்கு வயிற்றுப்போக்கு, இரத்தமின்மை முதலிய நோய்களை உண்டாக்கக்
கூடிய நுண் உயிரினங்கள் அவர்களின் உடலில் வாழ்வதாகக் கண்டுபிடிக்கப்
பட்டதென்று கூறப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்
பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் ' இந்தியன்
எக்ஸ்பிரஸ் ' பத்திரிகைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இது மிகவும்
அவசரமாகச் செய்ய வேண்டிய பணி. சாலையில் அதிக அளவு ஆழமான
பகுதியிலே கீழே இந்தக் குழாய்கள் இருப்பதால், கழிவுநீர் இந்தத்
தண்ணீருடன் கலக்கிறது. அடிமட்டக் குழாயை மேலே கொண்டு வந்து
பொருத்தச் செய்யும் பணிகளிலே 537 குழாய்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன
என்றும், மீதி 808 குழாய்கள் வருங்காலத்திலே உயர்த்தப்படுவதாகவும்
சொல்லப்பட்டிருக்கிறது. குடிநீரிலே கழிவு நீர் கலப்பதென்றால், இதைத்

---

@ 196 198 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தடுப்பது அவசர முக்கியத்துவம் கொடுத்து செய்து முடிக்க வேண்டிய ஒரு
காரியமாகும். ஆகவே, இதற்கென்று ஒரு காலக்கெடு இட்டு செய்து முடிக்க
இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்த
அரசைப் பொறுத்தவரையில், குடிநீருடன் கழிவு நீர் கலக்கவில்லை என்பது
தான் அரசினுடைய பதிலாகும். ' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' பத்திரிகையிலே
எழுதியிருப்பது கூட, கழிவு நீர் மழைக் காலங்களிலே குடிநீருடன்
கலப்பதால், இந்த நோய் பரவும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.
கலந்தால்தான் அந்த நோய்கள் பரவும். இந்த அரசைப் பொறுத்தவரையில்,
அப்படி கலக்கவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். ' இந்தியன் எக்ஸ்பிரஸ் '
பத்திரிகையில் செய்தி தான் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கலக்கிறது
என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. மொத்தம் 1,038 குழாய்கள்
அடிமட்டக் குழாய்களாக இருந்ததில், அங்கேயிருக்கும் கழிவு நீர், மழை நீர்
போன்றவை கலந்துவிடக்கூடாது என்ற வகையிலே 537 குழாய்கள் உயர்த்தப்
பட்டுள்ளன. மீதி இடங்களிலேயும் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம்.
ஆகவே, எந்த இடங்களிலேயும் கழிவு நீர் குடிநீருடன் கலக்கவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அந்தக் கட்டுரை வந்து, அதன்
அடிப்படையிலே ' கால் அட்டன்ஷன் ' போட்டு, அதற்குப் பிறகு எடுக்கப்
பட்ட நடவடிக்கைகளிலே, அடிமட்டத்திலே இருக்கும் குழாய்களிலே சில
சரியாக இல்லாத இடங்களிலே மழை நீர் கலக்க வாய்ப்பு இருக்கிறது என்று
தான் இந்த 537 குழாய்களை அரசு மாற்றியிருக்கிறது. ஆகவே, அந்தச்
செய்தியை வெளியிட்ட ' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' பத்திரிகைக்கு நன்றி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விளக்கம் சொல்லும்போது திரும்பத்
திரும்ப நன்றி சொன்னால் எப்படி ? விளக்கம் கேட்கலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வெளியூர்களிலேயிருந்து சென்னை நகருக்கு
வந்து குடியேறுபவர்களுக்கு அவர்கள் வரும்போதே அந்த நோய் இருந்
திருக்கக்கூடும் என்ற கருத்தும் இருக்கிறது. திருவிழா காலங்களிலே
'வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு எல்லாம் அம்மை, காலரா போன்ற நோய்
களுக்கான தடுப்பு ஊசி போடவேண்டும் என்று இருக்கிறது. அதுபோல,
சென்னைக்கும் வெளியூர்களிலிருந்து புதிதாக வருபவர்களுக்கு அப்படிப்பட்ட
தடுப்பு ஊசிகள் போட்டு, சோதனை செய்தால், இதுபோன்ற நோய்கள்
பரவுவதைக் கட்டுப்படுத்த வாய்ப்பு ஏற்படுமானால், அதுபோன்ற நடவடிக்கை
எடுக்க அரசு முன்வருமா ?

**சென்னை குடிநீர் குழாய்களில் தண்ணீரில் விஷக்கிருமிகள்
கலந்திருப்பதாகவும், சாக்கடைத் தண்ணீர் கலப்பதால்
கிருமிகள் உள்ளதாகவும் ஆராய்ச்சி முடிவுகள்
மூலமாக தெரிவிக்கப்பட்டிருப்பது குறித்து**

[1982 மார்ச் 6

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொன்னதற்குப் பிறகு தான் 1,038 அடிமட்டக் குழாய்களில் 537
குழாய்கள் உயர்த்தப்பட்டன என்று சொன்னார்கள். அதற்கும், இதற்கும்
சம்பந்தம் இல்லை. அதற்காக இருக்கும் இலாக்காவின் அதிகாரிகள் அவர்
களாகவே பரிசீலனை செய்து, இந்தப் பணிகளைச் செய்து வருகிறார்கள்
என்பதையும், இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி கிரிடிட்
எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை என்பதையும் சொல்லிக்
கொள்கிறேன். இவ்வாறு சுத்தம் செய்வதற்கு, சென்னை நகரில் குடிநீர்
வழங்கும் பகுதிகளை 12 உட்பகுதிகளாகப் பிரித்து, ஒரு நாளைக்கு ஒரு
பகுதி என்கிற முறையில், தினமும் ஒவ்வொரு பகுதியில் பரிசோதிக்கப்
படுகிறது. இம்முறையில் தினமும் 25 முதல் 30 இடங்களில் பரிசோதனை
செய்யப்படுகிறது. எங்கேயாவது குறை என்று சொன்னால், உடனடியாக
அதிகாரிகள் சென்று சீர்படுத்துகிறார்கள். எனவே, மக்களுக்குக் கொடுக்கும்
குடிநீரில் கழிவு நீர் கலக்கவில்லை. எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கங்கு
முன்னதாகவே தடுப்பு நடவடிக்கை எடுக்கிறோம் என்பதையும் சொல்லிக்
கொள்கிறேன்.

**4. 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—
தொடர்ச்சி.**

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை
அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பாக உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு
வந்ததிலேயிருந்து எப்படிப்பட்ட வாக்குறுதிகளையெல்லாம் தந்திருக்கிறது
என்பதைப் பற்றியும், அதிலே எவையெவை இந்த ஆட்சியிலே இதுவரையில்
நிறைவேற்றப்படவில்லை என்பதைப்பற்றிய புள்ளி விவரங்களையும் இந்த
அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கும்
ஏழையெளியவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள்,
எப்படியாவது இந்த ஆட்சியிலே பலன் அடைகிறார்கள் என்பதைப் போன்ற
ஒரு உணர்வை இந்த மன்றத்திலே உண்டாக்குவதும் அதற்குப் பிறகு அந்த
மக்கள் ஏமாற்றம் அடையும் வகையிலே இந்த ஆட்சியினுடைய
நடவடிக்கைகள் அமைவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக ஆகியிருக்கின்றன.



1982 மார்ச் 6] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட ஏழைக் குழந்தைகளைப்பற்றிச்
சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இருக்கும் வருத்தமெல்லாம், கடந்த ஆண்டு
நிதிநிலை அறிக்கையின்போது ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. யார் இந்த
நாட்டிலே வேலையில்லாமல் இருக்கிறார்களோ அவர்கள் கல்வி அறிவு
பெற்றவர்களாக இருந்தால் கூட, அவர்களுக்கெல்லாம் தினமும் ஒரு ரூபாய்
கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். தமிழ் நாட்டிலே வேலையில்லாமல்
இருக்கும் இலட்சக்கணக்கான ஏழைகளுக்கு இந்த அரசு எத்தனை கோடி
ரூபாய் கொடுத்திருக்கிறது என்ற புள்ளிவிவரங்கள் நம்முடைய நிதியமைச்சர்
அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையிலே இருக்கும் என்று பார்க்கிறேன்,
ஆனால் அது எங்கேயும் இல்லை. ஆனால், இந்த ஆண்டு கொடுக்கப்
பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையின் புள்ளிவிவரங்களைப்பற்றி நான்
முதலிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்படி நமது நாட்டில்

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-40)

சினிமா நடிகர்கள் தங்களுடைய வருமானத்தைக் குறைத்துக் காட்டு
கிறார்களோ அதேபோல் இந்த மாநிலத்தில் உள்ள ஆட்சியாளர்களும்
தங்களுடைய அரசின் வருவாயைக் குறைத்துக் காட்டுவதென்பது
வாடிக்கையாகப் போய்விட்டது என்ற எண்ணம்தான் எனக்கு ஏற்படுகிறது.
இதை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் இங்கே எங்களுக்குத் தரப்
பட்டிருக்கிற புள்ளிவிவரங்கள்தான். 1980-81 ஆம் ஆண்டு வருவாய்க்
கணக்கில் வருவாய் ரூ. 1,279.95 கோடி என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.
ஆனால் ஓராண்டுக்குப் பிறகு 1981-82 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை
வழங்கும்போது, அந்த ஆண்டுக்கான வருவாய் ரூ. 1,128.26 கோடியாகத்தான்
இருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆனால் உண்மை என்ன
வென்றால் 1981-82 ஆம் ஆண்டுக்கான ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் கொடுத்
திருக்கிற கணக்கைப் பார்த்தால், அந்த ஆண்டு வருவாய் 1,423.46 கோடியாக
உயர்ந்திருக்கிறது. எதிர்க் கட்சியைச் சார்ந்த நாங்கள் அப்போதே இதைச்
சுட்டிக்காட்டி, "நீங்கள் இந்த அளவுக்கு குறைத்துக் காட்டியிருக்கிறீர்கள்,
நிச்சயமாக அரசாங்கத்திற்கு ரூ. 100 முதல் 150 கோடி வரை அதிக வருவாய்
வரத்தான் போகிறது" என்று சொன்னோம். அப்போது அதற்குப் பதில்
சொல்லவில்லை. 1981-82-ல் பட்ஜெட் சமர்ப்பித்தபோது அறிவிக்கப்பட்ட
தொகைக்கும், பின்னால் ஆண்டு இறுதியில் வருவாய்க் கணக்கில் குறிப்பிடப்
பட்ட தொகைக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்றால்,
அது ரூ. 299.20 கோடியாக இருந்தது. அதாவது சுமார் 300 கோடி ரூபாய்

அளவுக்கு வருவாய்க் கணக்கில் உயர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலையின்
காரணமாகத்தான் "நீங்கள் தொடர்ந்து வருவாயைக் குறைத்தே
காட்டுகிறீர்கள்" என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த ஆண்டில்கூட, அதாவது 1982-83-ல்கூட, எங்களுக்குத் தரப்
பட்டிருக்கிற புள்ளிவிவரப்படி எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 1,569.48
கோடிதான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நீங்கள்
போட்டிருக்கிற வரிகள், புதிய வரிகள், ஏற்கெனவே இருப்பதைத் திருத்தி
உயர்த்தியிருக்கிற வரிகள், மாற்றப்பட்ட வரிகள் ஆகிய இவற்றையெல்லாம்
கணக்கில் கொண்டு பார்த்தால்—இவைகளுக்கெல்லாம் மேலாக விற்பனை வரி
மட்டும் ஆண்டுக்காண்டு ரூ. 100 கோடி அதிகமாகிக் கொண்டிருக்கிறது—
எனவே இதையும் சேர்த்துக் கணக்கிட்டால், அரசே அடுத்த ஆண்டு ரிவைஸ்டு
எஸ்டிமேட்டைக் காட்டுகிறபோது ரூ. 1,700 கோடி அரசாங்கத்திற்கு
வருவாயாக வந்திருக்கிறது என்று சொல்லத்தான் போகிறது. மக்களின் மீது
வரியைப் போடுவதற்கு இப்படி வருவாயைக் குறைத்துக் காட்டுகிறார்கள்
என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதன் மூலம் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட
மக்கள் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்படுகிறது
என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படியெல்லாம் இருந்தும்கூட, இந்த ஆண்டு ரூ. 199.44 கோடி உபரியாக
இருக்கும் என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் 271 கோடி ரூபாய் மின்
வாரியத்திற்குக் கொடுத்திருக்கிறோம் என்றும், 100 கோடி ரூபாயை ஏழை
எளிய குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்குவதற்காக ஒதுக்கியிருக்கிறோம்
என்று சொல்லி, இறுதியில் 204 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டாக
இருக்கும் என்ற அடிப்படையில் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைத்
தந்திருக்கிறார்கள்.

வருவாய்க் கணக்கில் இனவாரியாக எந்த அளவுக்குக் குறைத்துக் காட்டி
யிருக்கிறார்கள் என்று பார்த்தால், 1980-81 ஆம் ஆண்டில் மாநில ஆயத்
தீர்வைகள் மூலம் வருவாய் ரூ. 12.56 கோடி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அடுத்த ஆண்டு ஆயத் தீர்வை அதிகமாகத்தான் வர வேண்டும். ஆனால்
அடுத்த ஆண்டுக்கு, எவ்வளவு வருமென்று எதிர்பார்ப்பதாகச் சொல்லி
யிருக்கிறார்கள் என்றால் ரூ. 8.4 கோடி தான் வரும் என்று போட்டிருக்
கிறார்கள். அதற்குப் பிறகு ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் அதையே ரூ. 102.7
கோடி, என்று காட்டியிருக்கிறார்கள். எனவேதான் நான் சொல்கிறேன், அரசு
முதலில் உண்மையான புள்ளிவிவரத்தையே காட்டுவதில்லை. உறுப்பினர்
களுக்கானாலும் சரி, மக்களுக்கானாலும் சரி, உண்மையான புள்ளிவிவரத்தை
அரசு கொடுப்பதில்லை. இவ்வளவையும் நான் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற
புள்ளிவிவரங்களிலிருந்துதான் சொல்கிறேன்.



இந்த ஆண்டு, 1982-83-ல், மாநில ஆயத் தீர்வை ரூ. 146.50 கோடியாக
உயரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையா என்றால்
நிச்சயமாக இல்லை. குறைந்தபட்சம் அதன் மூலம் ரூ. 200 கோடியாவது
வருவாய் வர வேண்டும் மதுவிலக்கைத் தளர்த்தி, ஐ.எம்.எப்.எல். மீது
25 சதவீதமாக இருந்த விற்பனை வரியை 50 சதவீதமாக உயர்த்தி, ரூ. 146.50
கோடிதான் வரும் என்றால் என்ன அர்த்தம்? 1981-82-ல் ஆறு மாத
காலத்திற்குத்தான் இந்த மாநிலத்தில் பிளண்டிங் அண்டு பாட்டிலிங் நடை
பெற்றது. ஐ.எம்.எப்.எல். மீதும் அந்த அளவுக்குத்தான் தளர்த்தப்பட்டது.
ஆனால் இன்றைக்கு மாநிலம் முழுவதும் அது பரவலாக்கப்பட்டிருக்கிறது.
ஆறு மாத காலத்திற்கு 102 கோடி ரூபாய் வருவாயைக் காட்டிவிட்டு, அடுத்த
ஆண்டு முழுவதற்கும் 146 கோடிதான் வருவாய் வரும் என்று சொன்னால்,
இது என்ன கணக்கு என்றே எனக்குப் புரியவில்லை.

அதுவும் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தப் புள்ளிவிவரம் அளிக்கப்
படுகிறது? 25 சதவீதம் இருந்த சேல்ஸ் டாக்சை 50 சதவீதமாக
ஐ.எம்.எப்.எல்.-க்கு உயர்த்திவிட்டு, இந்த அளவுக்கு வருவாயைக் குறைத்துக்
காட்டியிருப்பதிலிருந்து அரசு இந்த அவையைக்கூட மதிக்கவில்லை, தவறான
புள்ளிவிவரத்தைத்தான் கொடுக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே 1980-81 ஆம் ஆண்டில் விற்பனை வரி மூலமாக
ரூ. 456.88 கோடி வரும் என்று சொல்லப்பட்டது. அதே நேரத்தில்
1981-82 ஆம் ஆண்டில் அதைவிட குறைத்துக் காட்டி, வருவாய் குறையும்
என்று சொல்லியிருக்கிறார்கள். முதல் ஆண்டில் ரூ. 456 கோடி என்று காட்டி
விட்டு, அடுத்த ஆண்டில் ரூ. 449 கோடி தான் வரும் என்று சொல்லப்பட்டது.
ஆனால் ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் அந்த இனத்தின் மூலமாக ரூ. 552 கோடி
கிடைத்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டைப் பொறுத்த
வரையில், விற்பனை வரி மூலம் 620 கோடி ரூபாய் வருவாய் வரும் என்று
காட்டியிருக்கிறார்கள். இது எப்படிப்பட்ட சூழ்நிலையில் சொல்லப்
படுகிறது? பல பொருள்களின்மீது நான்கு சதவீதமாக இருந்த பலமுனை
விற்பனை வரியை ஐந்து சதவீதமாக உயர்த்திவிட்டு, மற்ற வரிகளையெல்லாம்
உயர்த்திவிட்டு—எப்போதும் ஆண்டுக்காண்டு 100 கோடி ரூபாய் அளவுக்கு
விற்பனை வரி உயர்ந்து கொண்டிருக்குமே அதையும் விட்டுவிட்டு—38 கோடி
ரூபாய்தான் அதிகமாகப் புதிய வரிகள் மூலம் வரும் என்று சொல்லப்
பட்டிருக்கிறதே, இது உண்மைதானா? நிச்சயமாக இல்லை என்று என்னால்
சொல்ல முடியும். விற்பனை வரி மூலம் ரூ. 620 கோடி தான் வருவாய் வரும்

என்பதற்குப் பதில் குறைந்தது 700 கோடி அளவுக்காவது விற்பனை வரி மூலம் அரசுக்கு வருவாய் வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, தவறான புள்ளிவிவரங்களையே ஒரு பக்கத்தில் அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்று . . .

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் புள்ளிவிவரங்கள் எல்லாம் தவறு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். நான் அதை ஆட்சேபணை செய்ய முடியாது, செய்யவில்லை. என்றாலும் அவரும் ஆளும் கட்சியில் இருந்திருக்கிறார், நானும் ஆளும் கட்சியில் இருந்து எதிர்க் கட்சிக்கு வந்து இப்போது மீண்டும் ஆளும் கட்சிக்கு வந்திருக்கிறேன். புள்ளிவிவரங்களைத் தயாரிப்பது என்பது அமைச்சர்கள் செய்கிற பணியல்ல. அரசு அதிகாரிகள்தான் அவற்றைத் தயாரிக்கிறார்கள் என்பது அவருக்கு நன்கு தெரியும். இதற்கு அதிகாரிகள் பொறுப்பானவர்கள். ஏதோ அமைச்சர்கள் எழுதிக்கொடுத்துத் தயாரிப்பதைப் போல் பேசுவது சரியல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : என்னுடைய பேச்சை தயவுசெய்து நன்றாகக் கவனிக்க வேண்டும் என்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியைச் சார்ந்த அவர், இதில் அமைச்சர்களுக்குப் பொறுப்பில்லை என்று சொல்லித் தட்டிக் கழித்துவிட முடியாது. இதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முழுக்க முழுக்கப் பொறுப்பானவர். புள்ளி விவரங்களைச் சேகரிப்பவர்கள் அதிகாரிகள்தான் என்றாலும் அதில் தவறுகள் இருக்கின்றனவா என்று கண்காணிக்கவும், அவற்றைச் சரி செய்யவும், அவை குறித்து விவாதிக்கவும், சரியான புள்ளிவிவரத்தைத் தரவும் மாண்புமிகு நிதியமைச்சர் பொறுப்பானவராவார். அதுமட்டுமல்ல. இதற்கு அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பே உண்டு. ஏனென்றால் பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், அமைச்சரவையே கூடித்தான் எந்த முடிவையும் எடுக்கிறது என்பதால் . . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : துணைத் தலைவரவர்களே, பேச்சின் துவக்கத்திலேயே குறுக்கிடவேண்டாம் என்றுதான் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். பட்ஜெட் தயாரிக்கும்போது ஒவ்வொரு கட்சிக்கும், ஆட்சியில் இருப்பவர் களுக்கும் ஒவ்வொரு விதமான அணுகுமுறை இருக்கிறது. சென்ற ஆண்டு என் வருவாயைக் குறைத்துக் காட்டினீர்கள் என்றால், மதுவிலக்கில் எவ்வளவு வருவாய் வரும் என்று முன்கூட்டியே யாரும் எதிர்பார்க்க முடியாது. எனவே





ரிவைஸ்டு பட்ஜெட்டை சமர்ப்பிக்கும்போது, 100 கோடி ரூபாய் அதிகமாக வந்தது என்று குறிப்பிட்டிருக்கிறோம். இந்த ஆண்டிலே கூட சில வரிகள் மூலம் இவ்வளவு வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். கூடுதலாக வரும் என்று ஒரு கருத்தைச் சொன்னால், அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் பட்ஜெட் போடுவதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினரோடு கலந்து அவர்களுக்குச் சொல்லித்தான் தயாரிக்க வேண்டும் என்பதில்லை. இன்னின்ன இனங்களில் புதிதாக வரிவிதிக்கிறோம் என்று அறிவித்திருக்கிறோம். ஆனால் அதிலேயே சில இனங்களில் போடப்படுவதாகச் சொன்ன வரிகளை நீக்கி யிருக்கிறோம். இந்த ஆண்டில்கூட போடப்பட்டிருக்கும் வரிகள் குறித்து கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்துள்ளன. எனவே இவற்றையெல்லாம் அரசு அனுபவத்தில் கொண்டுதான் பட்ஜெட்டைத் தயாரிக்க வேண்டி யிருக்கிறது. எனவே இதைப்பற்றிப் பேசாமல், சென்ற ஆண்டு இந்தத் திட்டத்திற்காக இவ்வளவு தொகை ஒதுக்கியதில் இவ்வளவுதான் செலவு செய்தீர்கள் அல்லது இவ்வளவு செலவு செய்யவில்லை என்று சொன்னால், நாங்கள் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். எனவே இத்தகைய விவாதம் என்பது இரண்டு பேருக்கும் பயனுள்ளதாக இருக்காது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இதனால் உங்களுக்குப் பயன் இருக்கிறதோ இல்லையோ நாட்டு மக்களுக்குப் பயன் இருக்கிறது என்ற காரணத்தால், நான் இதை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது எனக்கு விந்தையாக இருக்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகு, எந்த ஆண்டை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள். கடந்த ஆண்டை விட வரும் ஆண்டின் வருவாயைக் குறைத்துக் காட்டியிருக் கிறார்களா என்று பாருங்கள். இந்த மாநிலத்தில் 38 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த பட்ஜெட் ரூ. 1,500 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இத்தகைய கால கட்டத்தில் படிப்படியாக ஆண்டுக்காண்டு வருவாய் உயர்ந்து கொண்டிருக்கிறதே தவிர, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வருவாய் குறைந்திருக்கிறது என்று எந்த ஒரு ஆண்டையாவது காட்ட முடியுமா? ஆனால் இந்த அரசு அவ்வாறு காட்டியிருக்கிறது. இதைத்தான் நான்

(முற்பகல் 10-50)

சுட்டிக்காட்டுகிறேன். கடந்த ஆண்டும் இதையேதான் சொன்னார்கள். எக்சைஸ் டியூட்டி பற்றிச் சொன்னார்கள். அதற்கு முந்தைய ஆண்டும் அப்படித்தான் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள். அதனாலேதான் சொன்னேன். இந்த அரசாங்கம், புள்ளிவிவரங்களை வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த அவைக்குத் தவறாகக் கொடுக்கிறதோ என்ற எண்ணம் ஏற்படக் கூடிய வகையிலே அரசு கொடுத்த புள்ளிவிவரங்கள் இருக்கின்றன

என்று சொல்லுகிறேன். நாங்கள் சொல்வதிலே தவறு இருந்தால் சொல்ல
லாம். இது தவறு என்று சொன்னால், ஆட்சி கொடுத்த இந்தப் புள்ளி
விவரம் தவறு என்று பொருள் ஆகும்.

நாட்டிலே நிர்வாகம் நல்ல முறையிலே நடக்க வேண்டுமென்று நாம்
நினைக்கிறோம். குறிப்பாக மாவட்ட நிர்வாகத்தை நன்றாக நடத்தினால்
தான், ஓர் ஆட்சி நல்லாட்சியாக இருக்க முடியும். 1981-82ஆம் ஆண்டில்
மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பில் ரூபாய் 27 கோடியே 90 இலட்சம்
ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கடுத்த ஆண்டு செலவு கூடுமா, குறை
யுமா ? திடீரென்று 1982-83-ல் மாவட்ட நிர்வாகத்தினுடைய செலவுக்காக 22
கோடியே 95 இலட்சம் ரூபாய் ஆகும் என்று எதிர்பார்க்கிறார்கள். இது
எப்படியென்று புரியவில்லை. மாவட்ட நிர்வாகத்தில் செலவு எப்படி குறைந்து
விடும்? இன்றைக்கு மாவட்டங்களை அதிகப்படுத்த வேண்டும், பிரிக்க
வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் செலவுகள்
அதிகமாகும் வாய்ப்பு இருக்கும்போது, 1981-82ஆம் ஆண்டிலே 27.90 கோடி
ரூபாய். .. .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : துணைத் தலைவர் அவர்களே,
நிர்வாகச் செலவு குறைந்திருக்கிறது என்று சொல்லுவது வரவேற்கத்தக்க
ஒன்றுதான். மாண்புமிகு உறுப்பினர் சந்தோஷம் அடையலாம். இரண்டாவது,
சென்ற ஆண்டு புதிய மாவட்டம், பெரியார் மாவட்டம் தோற்றுவிக்கப்
பட்டது. அதை எதிர்பார்த்து கிட்டத்தட்ட ஐந்து கோடி ரூபாய் வரையில்
ஒதுக்கப்பட்டிருக்கலாம். சென்ற ஆண்டு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.
நான்கு கோடி ரூபாய் வரை செலவு செய்து முடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அதுவுமில்லை, அரசு என்ன செய்யப்
போகிறது என்றால், அடுத்த ஆண்டு ரிவைஸ்ட் எஸ்டிமேட் என்று சொல்லி
மாவட்ட நிர்வாகத்திற்கு 30 கோடி ரூபாய் என்று சொல்லுவார்கள். இப்
போது குறைத்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் பெரியார்
மாவட்டம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நிர்வாகத்திலே எந்தப்
பணியைக் குறைக்க முடியும் ?

கிராமங்களில் பொதுப் பணித் துறை மிக ஒழுங்காகச் செயல்பட்டால்
தான், கிராமங்கள் நன்றாக இருக்கும். அந்தப் பொதுப் பணித் துறைக்கு,
1981-82 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆயிரம்
கோடி வருமானம் வரும்போது 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.
இப்போது 1,500 கோடி ரூபாய் வருமானம் வரும்போது, 6.56 கோடி ரூபாய்
ஒதுக்கியிருக்கிறார்கள். எந்த விகிதாச்சாரத்திலே இப்படி ஒதுக்கியிருக்
கிறார்கள் என்று புரியவில்லை.



அதைப் போலவே பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் ஆகியவற்றுக்
கெல்லாம் 1981-82-ல் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் ரூ. 62.16 கோடியாக அரசு
குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் 1982-83 ஆம் ஆண்டுக்கு 48.99 கோடி ரூபாய்
ஒதுக்கினால் போதும் என்று கருதுகிறார்கள்.

அதைப் போலவே வேளாண்மைத் துறைக்கு ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் 84
கோடி ரூபாய் செலவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வேளாண்
மைத் துறையைப் பாருங்கள், எப்படி உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம்,
உணவைப் பெருக்கியிருக்கிறோம், புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு
வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கடந்த ஆண்டு ரூ. 1,200 கோடி
வருமானம் இருந்தபோது 84 கோடி ரூபாய் செலவு செய்துவிட்டு இந்த
ஆண்டு ரூபாய் 1,500 கோடி வருமானம் இருக்கும்போது அதற்குத் தகுந்
தாற்போல் புரொப்போர்ஷனேட்டாக 100 கோடி ரூபாய் என்று இருந்தால்,
நாங்கள் பாராட்டியிருக்க முடியும். ஆனால் இந்த ஆண்டு ஒதுக்கியிருப்பது
68 கோடி ரூபாய்தான்.

சாலைகள், பாலங்கள் பற்றிச் சொல்லும்போது, பல டவுன்களில் செல்லக்
கூடிய அந்த சாலைகளைப் போய்ப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால்,
எத்தனை சாலைகள் குழியாக, பள்ளமாக, மேடுகளாக, கார்கள் கூட நேராகப்
போக முடியாத அளவிற்குக் கெட்டுப் போயிருக்கின்றன என்பதைப் புரிந்து
கொள்ள முடியும். அந்தச் சாலைகளுக்காக அரசு 1980-81-ல் 65 கோடி
ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்த ஆண்டு 62 கோடி ரூபாய்தான் ஒதுக்கி
யிருக்கிறார்கள். முன்பு இருந்ததைவிட இப்போது சாலைகள் பழுதுபட்டு
மோசமான நிலையில் இருக்கும் இந்தச் சூழ்நிலையில் 62 கோடி ரூபாய்
ஒதுக்குகிறார்கள் என்றால், சில புள்ளிவிவரங்களைக் கொடுத்து நிதியமைச்சர்
அவர்கள் இந்த அவையில் சில மணி நேரம் வரவு-செலவுத் திட்டத்தைப்
படித்தார் என்று சொல்லலாமே தவிர உண்மையாக எங்களுக்குத் திருப்தி
அளிக்கக் கூடியதாக, உண்மையான புள்ளிவிவரங்களாக, மக்களுக்குப் பயன்
படக் கூடிய அளவிற்கு இருப்பதாகச் சொல்ல முடியாது.

அது மட்டுமல்லாமல், இவர்களுடைய ஆட்சியில் ஒதுக்குகின்ற பணம்
எப்படி செலவிடப்படுகிறது, அது எப்படி இந்த அரசுக்கு மீண்டும் திரும்ப
வருகிறது என்பதற்கு ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்டைப் பார்த்தாலே
தெரியும். இதுவரையில் 1978-79, 1979-80 வரை வந்திருக்கின்றன. அதிலே . . .

"The balance of long-term loans outstanding in respect of 35
companies as on March 31, 1980 was rupees one hundred and
seventyone crores, seventy lakhs and seventythree thousands."

அரசாங்கத் துறையிலே வசூலிக்கவில்லை, தனியார் துறையிலே கொடுத்த
பணத்தை வசூலிக்கவில்லை என்று தெரிகிறது. அரசாங்கம் ஒரு பக்கத்திலே
வரியைப் போடுகிறது, கடனைக் கொடுக்கிறது. கடன் கொடுத்த அந்தப்
பணத்தைத் திரும்ப வாங்கினால், மறுபடியும் அதை முதலீடு செய்ய முடியும்.
அதை இந்த அரசினர் வாங்கியிருக்கிறார்களா என்று கேட்டால், யாரோ
ஏமாந்தவர்கள் இருந்தால் அவர்கள் வீட்டுக்குச் சென்று, அலுவலகத்திற்குச்
சென்று, எதிர்க் கட்சிக்காரர்களாக இருந்தால் அவர்களை ஒடுக்கி வாங்கி
யிருப்பார்கள். அப்படித்தான் அந்த இலாக்கா செயல்படுகிறதே தவிர 35
கம்பெனிகளில் 171 கோடி ரூபாயை வசூல் செய்வதற்கு அது பயன்பட
வில்லை என்ற குற்றச்சாட்டை ஆடிட்டர் ஜெனரல் சொல்லியிருக்கிறார்.
மாநில அரசாங்கம் மட்டும் 39.42 கோடி ரூபாய் திருப்பிக் கொடுக்கவில்லை.
மற்றவர்கள், தனியார் துறை, பொது நிறுவனங்கள் ஆகியவைகள் 131.68
கோடி ரூபாயைக் கொடுக்க வில்லை. இதெல்லாம் ஒரு பக்கத்திலே வராத
கடன்கள். வராத கடன்களாவது என்றைக்காவது ஒரு நாள்வரும் என்று
இருக்கலாம்.

ஆனால் வரவே வராது என்று முடிவுக்கு வர வேண்டிய நிலைக்கு நஷ்டத்
திலே இருக்கக் கூடிய நிறுவனங்கள்பற்றி எண்ணிப் பார்க்கும் போது
மிகவும் வேதனையாக இருக்கிறது. அப்படி 16, கம்பெனிகள் இருக்கின்றன.
தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மட்டும் அப்படி நஷ்டம் வந்திருந்தால்,
"ஊழலோ, ஊழல்" என்றும், நிர்வாகம் சீர்கெட்டுவிட்டது என்றும் பேசு
வார்கள். ஆனால் இவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அதாவது 1978-79-ல்
தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷனில் 28.37 இலட்சம் ரூபாய் நஷ்டம், 1979-80-ல்
273.31 இலட்சம் ரூபாய் நஷ்டம். ஒரே ஒரு ஆண்டிலே மட்டும் கிட்டத்தட்ட
இத்தனை கோடி ரூபாய் நஷ்டம் வருகிறதென்று அறிக்கை கொடுக்கப்படுகிற
தென்றால், இந்த அரசாங்கம் நல்ல முறையிலே இயங்குகிறதா, நிர்வாகம்
மிகச் சிறப்பாக இருக்கிறதா என்பதற்கு இது எடுத்துக் காட்டு என்பதை
நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே தமிழ் நாடு டெய்ரி டெவலப்மெண்டில் இந்த ஆண்டு
223.31 இலட்சம் ரூபாய் நஷ்டம். கட்டபொம்மன் போக்குவரத்துக்
கழகத்தில் 26 இலட்சம் ரூபாய் நஷ்டம். தமிழ் நாடு சிராமிக்ஸ் லிமிட்டெடில்
23 இலட்சம் ரூபாய் நஷ்டம். பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனில் 38 இலட்சம்
ரூபாய் நஷ்டம். தமிழ்நாடு பிளான்டேஷன் கார்ப்பரேஷனில் 20.89 இலட்சம்
ரூபாய் நஷ்டம். தந்தை பெரியார் போக்குவரத்து கார்ப்பரேஷனில் ரூபாய்
60.90 இலட்சம் நஷ்டம்.





**டாக்டர் இரா. சனார்த்தனம்** : துணைத் தலைவர் அவர்களே, நஷ்டம்,
நஷ்டம் என்று படித்துக் கொண்டிருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர்
அதற்கு என்ன காரணம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். டீசல்
விலை ஏறியிருப்பதால், போக்குவரத்துத் துறையில் நஷ்டம் வருகிறது.
மக்களுக்கு உதவி செய்வதற்கு சில பொறுப்புக்களை அரசு ஏற்கும்போது
நஷ்டம் வரத்தான் செய்யும் என்றாலும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : அது என் மற்ற கார்ப்பரேஷன்களில் வர
வில்லை. நீங்கள் சொல்லுவது உண்மையாக இருக்குமானால், நஷ்டம்
எல்லா டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களிலும் வந்திருக்க வேண்டும். டீசல்
விலை ஏறிவிட்டதென்றால், அரசு கட்டணத்தைக் கூட்டாமல் இருந்ததா ?
ஒன்றுக்கு இரண்டு மடங்காகக் கட்டணங்கள் கூட்டப்பட்டன.

டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களில்தான் இப்படி என்றால், மற்ற நிறு
வனங்களில் மட்டும் என்ன ? தமிழ் நாடு பப்ளிக் ஒர்க்ஸ் என்ஜினியரிங்
கார்ப்பரேஷனில் ரூபாய் 46.47 இலட்சம் நஷ்டம். அதைப் போலவே
பெரம்பலூர் சுகர் மில்லிலும் நஷ்டம் இருக்கிறது. நாட்டிலே எங்கேயாவது
சர்க்கரை ஆலை நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறதா. ஆனால் இந்த
சர்க்கரை ஆலை நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறதா ? ஆனால் இந்த
நஷ்டம். கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் நஷ்டம் வருவதை இந்த ஆட்சி
யிலேதான் பார்க்கிறேன் நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : துணைத் தலைவர் அவர்களே, கட்டணத்
தைக் கூட்டினார்கள் என்று சொன்னார்கள். அப்போதிருந்த டீசல் விலைக்
கேற்ப 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் தேதியில் கட்டணத்தை மாற்றி
யமைத்தோம். பிறகு மறுபடியும் ஜூலை 11 ஆம் தேதி டீசல் விலை ஏறி
விட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : முதலிலேயே கேட்டேன், அதுதான்
காரணம் என்றால், தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய எல்லாக் கார்ப்பரேஷன்
களிலும் நஷ்டம் வரவில்லையே என் என்று அப்படியென்றால் அண்ணா
போக்குவரத்துக் கழகம், மற்ற போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் நஷ்டத்
திலே இயங்கியிருக்க வேண்டும். அப்படி இல்லை. அதற்கு வேறு சில
காரணங்கள் இருக்கின்றன. அதைக் கண்டறியுங்கள், அதைப் போக்குங்கள்
என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவையெல்லாம்
அரசாங்கத்தாலே நிர்வகிக்கப்படுகிற பல துறைகளில் இலட்சக் கணக்கில்,

கோடிக் கணக்கில் ஏற்பட்டிருக்கக் கூடிய நஷ்டம். இதைச் சொல்லும் போது, இன்னுமொன்றையும் சொல்ல வேண்டும். இதைவிட வேடிக்கை என்னவென்றால்,

"The accumulated loss in respect of 20 companies with paid-up capital of Rs. 70. 60 crores amounted to Rs. 37. 12 crores. The particulars of companies, the accumulated loss of which had exceeded their paid-up capital.................."

என்று சொல்லக்கூடிய அளவிற்கு எந்த அளவிற்கு மூலதனம் போட்டார்களோ அந்த அளவு மூலதனமே காணவில்லை. அப்படி ஒரு எட்டுக் கம்பெனிகள். தமிழ்நாடு டெய்ரி டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷனில் பெய்ட் அப் காப்பிடலாகப் போடப்பட்ட மூலதனம் ரூபாய் 207.35 இலட்சம். ஆனால் நஷ்டம் ரூபாய் 261.34 இலட்சம்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கொடுக்கின்ற புள்ளி விவரங்களை நான் ஆட்சேபிக்க விரும்பவில்லை. அது நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலிலே எந்தெந்த இடங்களுக்கு என்ன தொக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வார்கள். டெய்ரி டெவலப்மெண்டைப் பொறுத்தவரையில், தமிழகத்தினுடைய தலைநகரத்திலேயுள்ள மக்களுக்கு, குறிப்பாக நடுத்தர வகுப்பு மக்களுக்குப் பால் கொடுக்கின்ற போது, ரூ. 2-லிருந்து ரூ. 2.50-க்கு அக்கும்போதே அவர்கள் பெரிதும் ஆட்சேபித்தார்கள். ஆனால் 3 ரூபாய்க்குமேல் விற்றால்தான், டெய்ரி டெவலப்மெண்ட்டில் நாம் ஓரளவுக்காவது நஷ்டம் வராமல் பார்த்துக்கொள்ள முடியும் என்ற நிலைமை இருக்கின்றது. லட்சக்கணக்கான மக்களுக்கு, அதுவும் குறிப்பாக ஏழை, நடுத்தர மக்களுக்குக் கட்டுமான விலையிலே பால் கொடுக்க வேண்டுமென்ற கடமை நமக்கு இருக்கின்றதால்தான் இந்த இழப்புகள் வந்திருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மனதிலே நினைவு வைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஒவ்வொரு இலாகாவிலும் ஒரு காரணம் இருக்கும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் நஷ்டத்திலே இயங்குகின்றது என்பதைத்தான் சொல்கிறேன். டெய்ரி டெவலப்மெண்டுக்கு இருக்கின்ற காரணத்தை இங்கே சொல்கிறார்கள்

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** துணைத் தலைவர் அவர்களே, லாபம் வரவேண்டுமென்ற ஒரு கமர்சியல் வென்ச்சராக இது இருக்கக்கூடாது. சர்க்கரை ஆலை நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறதா? ஆனால் இந்த





அதாவது தொழில் ரீதியாக, வணிக ரீதியாக செயல்படக்கூடிய நிறுவனங்களிலே நஷ்டம் வருகிறது என்று சொன்னால், அதை ஆய்வு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழகம் மட்டுமல்ல அகில இந்தியா முழுவதும் பொதுத் துறையினுடைய நிலைமைகளைப் பொறுத்து ஆய்வு செய்து கொண்டேதான் இருக்கிறோம். பப்ளிக் யுடிலிட்டி என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இது லாப நஷ்டத்திற்காகச் செய்வதில்லை. இதிலே வேறுபாடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்வது, அரசாங்கத்திலே நிருவகிக்கப்படுகின்ற பல துறைகளிலே அப்படி இருக்கிறது என்று சொல்கிறேன். பால் நிறுவனம்பற்றிச் சொல்கிறார்கள். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக இருக்கலாம். மற்ற இலாக்காக்களிலும் அதுமாதிரி காரணங்கள் இருக்க வேண்டும். தமிழ்நாடு பப்ளிக் ஒர்க்ஸ் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் மூலதனம் 35.75 லட்சம் ரூபாய். ஆனால் அதன் நஷ்டம் 60.92 லட்சம் ரூபாய். ஏறத்தாழ இரண்டு மடங்குக்கு இருக்கிறது. எவ்வளவு மூலதனம் போட்டிருக்கின்றார்களோ அதுபோல இரண்டு மடங்குக்கு நஷ்டம் என்றால், அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அதுபோல பல இருக்கின்றன. பெரம்பலூரில் சுகர் மில்ஸ் இருக்கிறது. தமிழ்நாடு மோபெட்ஸ் இருக்கிறது. ரூபாய் 49.71 லட்சம் அளவுக்கு முதலீடு செய்திருக்கிறார்கள். அந்த முதலீடு செய்த ஆண்டு மட்டுமே ரூ. 97.78 லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம். இரண்டு மடங்கு நஷ்டம் இருக்கிறது. மற்ற இலாகாவிலே என்ன இருக்க முடியும்? பப்ளிக் யுடிலிட்டி இருக்கிறதா? இன்றைக்கு இப்படி அரசாங்கத்திலே நடத்தப்படுகின்ற லிமிடெட் கன்சர்ன்ஸ், இவைகளிலெல்லாம் அரசாங்க அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், அதிகாரிகள் தவறு செய்தால், இப்படி நஷ்டம் வர என்ன காரணம் என்று கேட்டார்களா? அதிகாரிகள் தவறு செய்கின்றார்கள் என்று சொன்னால், அவர்களை விளக்கம் கேட்டு அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் என்ன என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு இன்னொரு பக்கத்திலே மின்சார இலாகாவிற்கு 221 கோடி ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்கின்றார்கள். யாருடைய பணம்? மக்களுடைய வரிப்பணம். இந்த 221 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதையே வேறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு என்று செலவழித்தால், 10 ஆயிரம், 15 ஆயிரம் குடும்பங்கள் நிம்மதியாக வாழ முடியும்.

**திரு. ஜேப்பியார்:** அங்கத்தினர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது, அவர் கட்சியிலே இருப்பவர்கள் 2 பேர்களைத் தவிர இந்த சபையிலே வேறு யாருமே இல்லையே. அங்கே 'கோரம்' இருக்கிறதா?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இதிலே என்ன "பாயிண்ட் ஆஃப் ஆர்டர்" இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இப்படியெல்லாம் பேசுவது என்றால், நாங்களும் பேசலாம். தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய பேச்சைக் கேட்பதற்காகப் போயிருக்கலாம். ஒவ்வொரு தடவையும் இடையில் பேசுவது என்றால் எப்படி? ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் எத்தனையோ முறைகள் இருப்பதில்லை. பாவம் கொறடா அவர்கள், உங்களை எல்லாம் தேடிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளும் இருக்கின்றன.

மின்சார வாரியத்திற்கு உதவி கொடுக்கிறார்கள். அந்த மின்சார வாரியம் ஒழுங்காகச் செயல்படுகிறதா? மின்சார வாரியத்திலே இழப்பு ஏற்பட என்ன காரணம்? அடிப்படையே இந்த அரசாங்கம்தான். சில கவுரவப் பிரச்சினையைப் பார்க்கிறார்கள். சில முடிவுகளைத் தாமதமாக எடுக்கிறார்கள். சில முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. இதனால் மின்சார வாரியம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஆண்டுக்கு உங்கள் தயவால் ரூ. 221 கோடிக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிக் கொடுத்தால்தான், இந்த இலாகாவை நடத்த முடியும் என்ற அளவுக்கு இன்றையதினம் வந்திருக்கிறது. அதிலே எப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன என்பதைப்பற்றிச் சொல்கிறேன் பிராட்மா பிரிண்டிங் மெஷின் என்ற 32 மெஷின்கள் வாங்கியிருக்கிறார்கள். 1977-ல் டிசம்பர் மாதத்திலே 'பர்சேஸ் ஆர்டர்' போய் அன்றையதினம் வாங்குவதற்கு ஒரு உத்தரவு போடுகிறார்கள். அதனுடைய விலை என்ன என்று கேட்டால், ரூபாய் 21.60 லட்சம். அவர்கள் ஒரு வருடத்திற்குத்தான் 'கேரண்டி பீரியட்' கொடுக்கிறார்கள். 1977-ல் டிசம்பர் மாதத்தில் அந்த இயந்திரங்களை வாங்கியும் 1980 ஏப்ரல் மாதம் வரையிலே அவைகள் பொருத்தப்படவே இல்லை. அவைகள் இயங்கவே இல்லை. அது மட்டுமல்ல. அந்தக் கம்பெனிக்கு ரூ. 21.60 லட்சம் பணத்தையும் கொடுத்துவிட்டார்கள். கடைசியிலே நிலைமை என்னவென்றால், அந்த இயந்திரங்கள் இப்போது இயங்காது என்று சூப்பிரண்ட்டெண்டிங் இன்ஜினியர் சொல்கின்றார். மக்களுடைய வரிப் பணத்தை இப்படியெல்லாம் வீண் விரையம் செய்தால், எப்படி அந்த இலாக்காக்கள் லாபகரமாக இயங்க முடியும்? இதை ஒரு உதாரணத்திற்குச் சொல்கின்றேன். இன்னும் இருக்கின்றன,



அது மட்டுமல்ல. இன்றையதினம் இங்கே சட்டம் போடுகிறார்கள். அந்தச் சட்டங்கள் எல்லாம் யார் மீதும் பாயாது என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் இன்றையதினம் 1,200 போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். போலீஸ் எஸ்.பி.யிலிருந்து காவல் துறை காவலர்கள் வரையில் இருக்கிறார்கள். அவர்களாலே மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லி, இப்போது புதிய சட்டம் வந்த பிறகு, கலால் துறையில் காவலர்கள் என்று சொல்லி, இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள் என்றெல்லாம் சொல்லி 40 பேர்களைப் போட்டிருக்கிறார்கள். மாவட்டம் முழுவதிலும் யார் இந்தக் குற்றம் செய்தாலும், அந்த 40 பேர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். 'லா அண்ட் ஆர்டர்' போலீஸ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது. என்ன காரணம் என்று பார்த்தால், எதிர்க் கட்சியிலே யார் யார் தீவிரமாக வேலை செய்கின்றார்களோ, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எங்கேயாவது துடிப்பாகச் செயல்படுபவர்களாக இருந்தால், அவர்களை அடக்கி ஒடுக்க இந்தப் பாதுகாப்புச் சட்டம், இந்த மினி மிசா சட்டம் இன்றையதினம் இருக்கிறது. இவர்கள் இன்றையதினம் அதை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பது பற்றி ஒரு உதாரணம் சொல்கிறேன்.

வட ஆற்காடு தாலுக்காவில், சாமந்திபுரம் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் சிங்காரம் என்ற தோழர் இருக்கிறார். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர். அவர் ஓர் உறுப்பினர். திடீரென்று பஞ்சாயத்துத் தேர்தல்பற்றி அறிவிக்கப்பட்ட உடனே, அவர் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை அவர்கள் வீட்டிற்குச் சென்று பார்க்க காரிலே போய்க்கொண்டிருந்தபோது அவரைக் கைது செய்திருக்கிறார்கள். செய்யாற்றிலே 15 நாட்கள் ரிமாண்டில் வைத்திருக்கிறார்கள். பிறகு அவர் கண்டிஷனல் பெயிலில் விடப்படுகிறார். அவர் அப்படி கண்டிஷனல் பெயிலிலே இருக்கும்போது, வேலூரிலே சென்று ரெகுலராக கையெழுத்துப் போட வேண்டும் என்று இருக்கிறது. அப்படியே 15-வது நாள் கையெழுத்துப் போடும்போது அவரைக் கைது செய்கிறார்கள். அதுபோலவே நான்கைந்து பேர்கள் அவசரச் சட்டத்தின் மூலமாக, பாதுகாப்புச் சட்டத்தின் மூலமாக கைது செய்யப்பட்டு சிறையிலே வைக்கப்படுகிறார்கள். இதை நான் ஏன் காரணம் காட்டுகிறேன்? திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தமிழ் நாட்டிலே இந்த நான்கைந்து பேர்களை, வட ஆற்காடு மாவட்டத்திலே இருந்து கைது செய்திருக்கிறார்களே, அவர்கள் மீதுள்ள குற்றத்தை நிரூபிக்க முடியுமா? அந்தக் கட்சியை அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்பதற்காக, இந்த அதிகாரம் வந்துவிட்டது, அந்த

அதிகாரத்தைப் பயன்படுத்திப் பார்ப்போம் என்ற அளவில் ஒரு நடவடிக்கை எடுக்கப்படுமேயானால், அது நியாயம்தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "பட்டினி இருக்கின்ற குழந்தைகளுக்கு ஒருவேளை உணவு". எதை வேண்டுமானாலும் செய்யட்டும். நாட்டு மக்களுக்குப் பயன்படக்கூடிய காரியங்களைச் செய்ய வேண்டும். ஒருவேளை என்ன, மூன்று வேளைகள்கூட உணவு கொடுக்கலாம். அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. இப்போது 10 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் இந்த நாட்டிலே பிறந்திருக்கின்ற குடிமக்கள் அனைவருக்கும் சோறு போடுவது என்று திட்டம் கொண்டுவந்தால்கூட, நாங்கள் வரவேற்கிறோம். அதற்குத் தயாராக இருக்கிறோம். இப்படிப்பட்ட திட்டங்களுக்குச் செலவழிக்கின்ற நேரத்தில், உருப்படியான ஒரு திட்டம் போட்டு செயல்படுத்தப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். இந்தத் திட்டத்தை ஆசையோடு கொண்டுவந்திருக்கிறார்கள். 'வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு என்று திட்டங்கள் தீட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. அதன் மூலம் ஒரு 'ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசர்-ஐ மேற்கொள்ளப் போகிறோம். ஒரு ஆண்டுக்கு ரூ. 100 கோடி அளவுக்குச் செலவினம். இதுவே அடுத்த ஆண்டு ரூ. 120 கோடி என்று அதிகரித்துவிடும். அதற்கு அடுத்த ஆண்டு ரூ. 140 கோடி என்று ஆகிவிடும். அதுவே இன்னும் பத்தாண்டுகளில் ரூ. 250 கோடி என்று ஆகிவிடும். மாநிலத்தினுடைய வருவாயிலேயிருந்து இப்படிப்பட்ட காரியங்களுக்கு நாம் செலவிட வேண்டும். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஆண்டுக்கு ரூ. 100 கோடி என்று, ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 100 கோடி என்று முதலீடு செய்து நிரந்தரமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரும் திட்டம் உண்டா? ஆட்சிக்கு வந்தவுடனே சொன்னார்கள். ரூ. 100 கோடியிலே காகித ஆலை அமைக்கப் போவதாகச் சொன்னார்கள். நான்கு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. இப்போது அதைச் செய்ய ரூ. 200 கோடி செலவாகும் என்று அதிகரித்திருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் இன்னும் வரவில்லை. ஆகவே உருப்படியான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றார்களா என்றால், இல்லை. அதற்கு மாறாக இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதையெல்லாம் நான் இங்கே ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றையதினம் மின்சார இலாகாவைப் பொறுத்த வரையில், நான் சொல்கிறேன். அங்கே பழி வாங்கக்கூடிய மனப்பான்மை இருக்கிறது. ஒரு சங்கம் இன்றையதினம் அரசாங்கத்தை எதிர்த்து, ஸ்பாட்



பில்லிங் திட்டத்திற்கு எதிராக நீதிமன்றத்திற்குப் போனார்கள் என்பதற்காக அந்த சங்கத்தைப் பழிவாங்குகிறார்கள். அவர்களைப் பழி வாங்கிவிட்டு என்ன சொல்லியிருக்கிறார்கள்? மின்சார பில் போடுவது என்று சொன்னால், அனுபவம் உள்ளவர்களாக, படித்தவர்களாக இருக்க வேண்டும். இப்போது 8-வது படித்தவர்கள், டி.சி. இல்லாமல் இருப்பவர்கள் இவர்களையெல்லாம் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் பில்களைக்கூட சரியாகப் போட முடியாத சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

இது ஒரு பக்கத்தில். நான் இந்தக் குற்றச்சாட்டுகளைச் சொல்லும் நேரத்தில், உறுதியோடு ஒன்றிரண்டைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் தவறு செய்கின்ற அதிகாரிகளைத் தட்டிக் கொடுக்கிறீர்கள். ஏன் என்று சொன்னால் அவர்கள் உங்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். ஆளுங் கட்சிக்கு, ஏன் என்று சொன்னால் அவர்கள் உங்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். ஆளுங் கட்சிக்கு, ஏன் அமைச்சர்களுக்கு அவர்கள் உடந்தையாக இருக்கிறார்கள். நீங்கள் சொல்லுவதை நிறைவேற்றுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களைத் தட்டிக்கொடுக்கிறீர்கள். உங்களோடு ஒத்துழைக்கவில்லை என்றால், நியாயமான அதிகாரியானாலும், நேர்மையான அதிகாரியானாலும், அவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, நம்முடைய முதலமைச்சராலே, தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, குற்றம் சாட்டப்பட்டவர்கள்; அண்ணா நகரிலே லஞ்சப் பணத்திலே வீடு கட்டியிருக்கிறார்கள், இது நியாயம்தானா என்று டெல்லியிலே புகார் கொடுத்தார்கள். புகார் பட்டியலிலே குறிப்பிடப்பட்ட ஒரு அதிகாரி அவர். அவர் லஞ்சம் வாங்கினார் என்று நாங்கள் சொல்லவில்லை, நீங்கள் சொன்னீர்கள். குடியரசுத் தலைவரிடம் புகார் கொடுத்தீர்கள். பிறகு நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? உங்களாலே குற்றம் சாட்டப்பட்டவர் அதிகாரியாக இருக்கிறார். அதற்கு முன்னாலே, உங்களுடைய ஆட்சியிலே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர். அப்போதும் சில தவறுகள் செய்தார் என்று புகார் வந்து, ஆளுநர் ஆட்சியிலே, 3, 4 மாத ஆட்சியிலே ஆளுநர் அவர்கள் ஒரு உத்தரவு பிறப்பித்து, அவர் டி.ஏ. பில்லில் தவறு செய்திருக்கிறார், அதைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று சொல்லி, பல புகார்கள் சொல்லப்பட்டன. அந்த அதிகாரிக்கு இப்போது 50 வயதாகிறது. நான் சொல்கிறேன், அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஒருநாள் சஸ்பென்ட் செய்யப்பட்டதாகக் காட்டுகிறார்கள். அந்த அதிகாரிக்கு 50 வயதாகிவிடுகிறது. மத்திய அரசு, 50 வயதான ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது புகார்கள் இருந்தால், அவர்களையெல்

லாம் வீட்டுக்கு அனுப்ப வேண்டும், கம்பல்சரி ரிடையர்மெண்ட் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தின் கீழ் இன்றையதினம் விவரங்களைக் கேட்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் 3 பேர் கொண்ட குழு இருக்கிறது. சீஃப் செக்ரட்டரி, இரண்டாம் செக்ரட்டரி, போர்ட் மெம்பர் திரு. பசுபதி— இந்த மூன்று பேரும் சேர்ந்து அப்படி 50 வயதான அதிகாரிகள் யார் யார், அவர்கள் மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் இருக்கின்றன; அவர் 50 வயதிற்குமேல் பதவியில் இருக்கலாமா, கூடாதா என்று அறிக்கைகள் தருகிறார்கள். அந்த அறிக்கையின்பேரில், இன்றைய முதலமைச்சரவர்கள் அன்றையதினம் குறிப்பிட்ட அதிகாரி மீது குற்றச்சாட்டு சொல்லியிருப்பதால், முதலமைச்சரவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிறார்கள். ஆனால், முதலமைச்சரவர்கள் அவர் பதவியில் நீடிக்கட்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறார். இப்போது நான் கேட்கிறேன், அவர்மீது நீங்கள் குற்றச்சாட்டு சொல்லிவிட்டு, இப்போது பதவியில் நீடிக்கலாமென்று உத்தரவு போடுகிறீர்களே, அதற்கு என்ன காரணம்? நான் கேட்கவில்லை. மத்திய அரசு கேட்கிறது. நீங்கள் தகவல்களை அனுப்புகிறீர்கள். என்ன விவரங்களை அனுப்புகிறீர்கள்? அப்படிப்பட்ட தவறு செய்த அதிகாரிக்கு நீங்கள் மெமோ கொடுத்திருக்கிறீர்களா? எக்ஸ்பிளனேஷன் கேட்டிருக்கிறீர்களா? அந்த எக்ஸ்பிளனேஷன் திருப்திகரமாக இருந்தது என்று ஏற்றுக்கொண்டு, அவர் மீது நடவடிக்கை வேண்டாமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா என்று கேட்கிறீர்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் நீங்கள்தான் சொல்கிறீர்கள். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தால் ஏன் எடுக்கிறீர்கள் என்று கேட்கிறீர்கள். நடவடிக்கை எடுத்தால் அதிலும் சந்தேகப்படுகிறீர்கள். எடுக்கவில்லை என்றால் ஏன் எடுக்கவில்லை என்று கேட்கிறீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நடவடிக்கை எடுத்து, ஏன் நடவடிக்கை எடுத்தீர்கள் என்று நான் எங்கே கேட்டிருக்கிறேன்? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றுதானே கேட்கிறேன். நான் சொல்லவில்லை, லஞ்சம் வாங்கி வீடு கட்டிய அதிகாரி என்று, நீங்கள் சொல்லுகிறீர்கள். அந்த அதிகாரி பற்றி இப்போது மத்திய அரசு கேட்கிறது. ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு ஒரேயொரு காரணம், கைது செய்திருந்தும்கூட, சஸ்பெண்ட் செய்திருந்தும் கூட, அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு எதிராக அவர் சாட்சி சொன்னார் என்பதைத் தவிர வேறு என்ன? இந்த அவையிலே கேட்கிறேன், ஆதாரத்தோடு, கோப்புகளைக் கொண்டு வாருங்கள், ஆனால்



பதவியில் இருக்க என்ன தகுதி இருக்கிறதென்பதை ஆராய்வோம். ஆளும் கட்சியிலே 4 பேர்கள் உட்காருங்கள். எதிர்க் கட்சியில் நான்கூட உட்காரவில்லை. யாராவது உட்காரட்டும். அது மட்டுமல்ல. இன்னொரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, மக்களிடமிருந்து 78,000 ரூபாய் வசூல் செய்கிறார். தனிப்பட்ட பொது வாழ்க்கையில் இருக்கும் நாம் வசூல் செய்துவிட்டால், போஸ்டர்கள் போடுகிறார்கள், பத்திரிகையில் எழுதுகிறார்கள். அதிகாரி, அவருடைய ஊரிலே நல்ல காரியம் நடக்க வேண்டுமென்று நினைத்தால்கூட, அவருடைய பணத்தைக் கொடுப்பதில் தவறில்லை. தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, 78,000 ரூபாய்க்கு அவர் பெயரிலேயே டிராப்ட் எடுத்து அனுப்புகிறார். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வருகிறது. அப்போது இருந்த சீஃப் செக்ரட்டரி எழுதுகிறார், அவர்மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று. நான் கேட்கிறேன், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? முதலமைச்சரவர்கள் மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறாரா? இதுவரை நடவடிக்கை இல்லை. அப்படித் தவறு செய்யும் அதிகாரிகளை நீங்கள் தட்டிக் கொடுத்தால், எப்படி அதிகாரிகள் ஒழுங்காக நடந்துகொள்வார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலத்தான் கப்பல் பேரம் பற்றி, 2 ஆண்டுகளாகப் பேசி, வழக்கு போடுவோம் என்று சொல்லி, நீதி மன்றத்தில் யாரையோ விட்டு வழக்கு போட்டு, இன்றைக்கு நீதிமன்றத்தில் வழக்கு வருமா, வராதா என்ற சூழ்நிலை இருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்கு வந்தால் அதை வரவேற்கிறோம். அது வேறு விஷயம். அதிலே இருந்த ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இறந்துவிட்டார். நான் காரணம் கற்பிக்கவில்லை. ஆனால், 'ஒழுங்காக வேலை செய்த, ஆனால் நீங்கள் சொல்லுவதைச் செய்ய முடியவில்லை' என்ற ஒரு நிலை இருந்ததன் காரணமாகத்தான் அன்றையதினம் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி 'வாலன்டரி ரிடையர்மென்ட்' எழுதிக் கொடுத்தார். அவரை உடனே வீட்டுக்கு அனுப்புகிறீர்கள். ஒழுங்காக உள்ள அதிகாரியை உடனே அனுப்புகிறீர்கள். உங்களாலே ஊழல் குற்றச்சாட்டு சாட்டப்பட்ட அதிகாரியை பதவியில் நீடிக்க உத்தரவு போடுகிறீர்கள். இது எப்படி நியாயம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதையெல்லாம் பார்த்து, இப்போதுள்ள பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் அதிகாரிகள் என்ன நினைக்கிறார்களோ, எனக்குத் தெரியாது. நீங்கள் ஒரு பக்கத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்க 100 கோடி ரூபாய் என்கிறீர்கள்; கப்பல் வாங்க 100 கோடி ரூபாய் என்கிறீர்கள்; அது பட்ஜெட்டிலே வரவில்லை. சட்டசபையிலே அமைச்சரவர்கள் விளக்கம் கொடுத்து, பத்திரிகையில் வந்திருக்கிறது. 100 கோடிக்கு கப்பல் வாங்குவதிலே எங்களுக்கு எந்தவிதமான கவலையும் இல்லை. நாட்டின் நன்மைக்காக, நாட்டில் நிர்வாகம் செம்மையாக நடக்க

கப்பல் வாங்குங்கள். அதிலும் பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. மத்திய அரசு அனுமதி தரவில்லையே. அதற்கு என்ன காரணம்? இதைப்போல எங்கே ராமகிருஷ்ணன்கள் இருந்தார்களோ, அவர்கள் இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எப்படி அமைந்திருந்தன என்பதை மத்திய அரசுக்குச் சொல்லியிருந்தால்—சொல்லாமல் இருந்தால் நல்லது—நான் கேட்கிறேன், ஏன் இப்படி மத்திய அரசு தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு ஒரு முட்டுக்கட்டை போட வேண்டும்? அவர்கள் தெளிவாகச் சொல்லுகிறார்கள். 33.33 கோடி ரூபாய் ஒரு ஜெர்மன் கப்பல் என்று தமிழக அரசு குறிப்பிடுகிறது, அதே நேரத்தில் இதே கொள்ளளவு உள்ள கப்பல்களை வேறு நாடுகளிலிருந்து வாங்கினால், ரூ. 22 கோடிக்கு மேலேயில்லை; சர்வதேச உலக அரங்கில் உள்ள மார்க்கெட் நிலவரங்களை எல்லாம் எஸ்.டி.எஃப்.சி. என்ற நிறுவனம் சேகரித்து, தமிழ் நாடு கொடுத்திருந்த ப்ரபோசல் சரியான ப்ரபோசல் அல்ல, மறுபரிசீலனை செய்யுங்கள்; இதற்கு மற்ற நாடுகளிலிருந்து டெண்டர்கள் வரவழைத்து சரியான டெண்டரைக் கொடுங்கள் என்று திருப்பி அனுப்பும் இந்த நேரத்தில் எப்போது இந்த அரசு கப்பல் வாங்கப் போகிறது? எப்போது தூத்துக்குடிக்கு கரி கொண்டுவரப் போகிறது ? எப்போது இந்த நாட்டிலே பற்றாக்குறையாக உள்ள மின்சாரத்தைத் தவிர்க்கப் போகிறது என்பதைத்தான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த அரசு தொழிற் கொள்கையை எப்படி வைத்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக எனக்குத் தெரிந்து, தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும் சரி, இந்தியாவிலே எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, ஒருவர் தொழில் செய்ய வேண்டுமென்றால், அதற்கு உரிமம் பெற்றாக வேண்டும். உரிமம் இல்லாமல் எந்த ஒரு முதலாளியும் லட்சக் கணக்கில் முதலீடு செய்து, தொழிற்சாலைகளை அமைப்பதில்லை. எனக்குத் தெரிந்து அப்படித்தான். லைசன்ஸ் வந்துவிடும், வேண்டியவர்கள் இருக்கிறார்கள், வாங்கிவிடலாம் என்று நம்பி, 20 லட்சம், 30 லட்சம் ரூபாய் முதலீடு செய்து, யாரும் தொழிற்சாலை கட்டமாட்டார்கள். ஆனால் இந்த அரசாங்கத்தின் கொள்கை எப்படித் தெரியுமா? முதலிலே தொழிற்சாலை கட்டிவிடுவார்கள். அதற்குப் பிறகு இவர்களிடத்தில் அவர்கள் வந்து போக வேண்டும். வந்து போய்க்கொண்டிருக்க வேண்டும். என்றைக்காவது ஒரு நாளைக்கு லைசன்ஸ் வரும் என்ற அடிப்படையிலே—யாருக்கு வேண்டுமானாலும் ஆதாரம் காட்டத் தயாராக இருக்கிறேன். யாராக இருந்தாலும், முதலமைச்சராக இருந்தாலும் அல்லது எந்த அமைச்சராக இருந்தாலும், அல்லது, துணைத் தலைவரவர்களே, தாங்கள் வருவதாக இருந்தால், உங்களையும், அழைத்துச் செல்ல விரும்புகிறேன். தமிழகத்தில், சென்னைக்கு



10 கிலோமீட்டர் தூரத்தில் ஒரு தொழிற்சாலை கட்டப்படுகிறது. ஐ.எம் எஃப்.எல். தொழிற்சாலை. இந்த நாட்டிலே பிராந்தி, விஸ்கி போன்ற மது வகைகள் தயாரிக்கப்படுவதில்லை. அவற்றைத் தயாரிக்க இன்றுவரை லைசன்ஸ் கொடுத்திருக்கிறதா என்றால், இல்லை. இன்றைய தினம் தொழிற்சாலை கட்டியாகிவிட்டது. 25 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். நான் குடியிருக்கும் வீட்டுக்குச் சொந்தக்காரர் கொஞ்சம் ' எக்ஸ்டன்ட் ' செய்ய வேண்டுமென்று விரும்பினார். ஒரு ரூம் போட வேண்டுமென்று நினைத்தார். ப்ளான் அனுப்பினார். 'அப்ரூவல்' ஆகவில்லை. 'அப்ரூவல்' வந்துவிடுமென்று, கட்டிவிட்டார். ஒரு அறை கட்டிவிட்டார். வீராசாமி குடியிருக்கும் வீடு அல்லவா அது என்று அவருக்கு நோட்டீஸ் கொடுத்து, வீட்டுக்காரரை நீதிமன்றத்திற்கு அழைத்து 600 ரூபாய் அபராதம் போட்டார்கள், எப்படி அனுமதியில்லாமல் அறை கட்டினீர்கள் என்று. ஆனால் 25 லட்சம் ரூபாயில் ஒரு தொழிற்சாலை, லைசன்ஸ் கிடையாது, ப்ளான் கிடையாது. ஆனால் 3,000 மூட்டை சிமெண்ட் அந்தக் கட்டிடத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-20)

நான் கேட்கிறேன். அந்துலேயைப்போல இதிலே செய்தீர்கள் என்று நான் சொல்லாவிட்டாலும், உங்களுடைய தயவு பெற்ற, உங்களுடைய பார்வையில் இருக்கிற ஒருவருக்கு பிளான் இல்லாமல், பிளான் அப்ரூவல் ஆகாமல் 3 ஆயிரம் மூட்டை சிமெண்ட் கிடைக்கிறது என்று சொன்னால், அவருக்கு எதை வைத்துக் கொடுத்தார்கள்? எப்படி அவரால் அதைக் கட்ட முடிந்தது? அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் இன்றைக்கு தமிழ் நாட்டிலே வளர்கின்றன என்றால், யாருடைய தயவில், யாருடைய நம்பிக்கையில், எவர் உத்தரவாதம் கொடுத்தது, உதவி கொடுத்தது யார் என்பதையெல்லாம் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப்போலத்தான் இன்றைக்கு சிமென்ட் என்று எடுத்துக்கொண்டால், தாலுக்கா அலுவலகமானாலும் சரி டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அன்ட் காமர்ஸ் ஆக இருந்தாலும் சரி, வழங்கியிருக்கின்ற உரிமங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தால், நூற்றுக்கு 60 சதவிகிதம் என்கிற அளவிற்கு மேல் முறையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்கிற ஒரு அறிக்கையை இந்த அரசு கொடுக்க முடியுமா? ஏராளமான போகஸ் சிமென்ட் பேர்மிட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் மட்டும்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலான இடங்களில் நடவடிக்கை உண்டா என்றால் இல்லை.

ஒரு பக்கம் தனியாருக்கு, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மூலதனத்தைப் போட்டு கட்டச் சொல்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே தொழிற்சாலை வளர்ச்சியில் அக்கறை காட்டுவது போல் பாவனை காட்டுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்கே பார்த்தாலும் இந்த நாடு தொழில் மயமாக வேண்டும், இந்த நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும் என்பதற்காக திட்டங்கள் தீட்டியதாக புள்ளிவிவரங்கள் ஓரிடத்திலும் இல்லை. அதுபற்றி விவரம் இல்லை.

அடுத்து, போடப்பட்டிருக்கிற புது வரிகளைப்பற்றி நீண்ட நேரம் பேச முடியாவிட்டாலும்கூட, கைத்தறிப் பட்டுத் துணிக்கு 5 சதவிகிதம் வரி போட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆளும் கட்சியில் உள்ள பல உறுப்பினர்கள் இதை ஆதரிப்பார்கள். கைத்தறிப் பட்டுக்கு வரி போட்டிருக்கிறார்களே என்று அவர்கள் கவலைப்படவில்லை. ஆனால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த நெசவாளர் சமுதாயம் அரசுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறது. அதன் எல்லாப் பகுதியையும் நான் சொல்லவில்லை. ஒரு பகுதியை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். " நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு விவசாயத்திற்கு அடுத்து அதிக அளவில் கை கொடுப்பது கைத்தறிதான். அதில் 1 லட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை நம்பி 10 லட்சத்திற்கு மேல் மக்கள் இருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கம் அரசுக்கு இப்படிச் சொல்லியிருக்கிறது. பனாரஸ் சங்கம், மதுரை, வாலாஜாபேட்டை கைத்தறிப் பட்டுச் சங்கம் இப்படி தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய கைத்தறி சங்கத்தினர் எல்லாம் சேர்ந்து மனு கொடுத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டின் சரித்திரத்திலே இதுவரை இப்படிப்பட்ட விற்பனை வரி போட்டதில்லை என்று சொல்லிவிட்டு, இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். அதில் எல்லாவற்றையும் படிக்கவில்லை. ஒன்றை மட்டும் சொல்கிறேன். அதிலுள்ள அபாயத்தை மட்டும் சொல்கிறேன். மத்திய அரசு கைத்தறிக்கு 10 சதவிகித உதவி அளித்து வருகிறது. இப்போது 5 சதவிகித விற்பனை வரியை மாநில அரசு விதித்திருப்பதால், மத்திய அரசு கொடுத்துவரும் 10 சதவிகித உதவித் தொகையை நிறுத்திவிடும். அந்த உதவித் தொகையை மாநில அரசு இழந்துவிடும். இந்த நிலையை தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது வளர்ந்துவிட்ட தொழில், ஆகவேதான் மாநில அரசு விற்பனை வரி விதித்திருக்கிறது, இந்நிலையில் இதற்கு மத்திய அரசின் உதவித் தொகை தேவையில்லை என்று சொல்லி மத்திய அரசு இந்த நிதி உதவியை நிறுத்திவிட்டால், மொத்தத்தில் 10





சதவிகித மத்திய அரசின் உதவித் தொகையை இழப்பதோடு மாநில அரசு கேட்கிற 5 சதவிகித விற்பனை வரியையும் கட்ட வேண்டியிருக்கும். முடிந்தால் இதை ரத்து செய்யுங்கள் என்கிற வேண்டுகோளை நான் விடுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். இவ்வளவு வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்த இந்த அரசு ஒன்றை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எப்படி மக்களுடைய வரிப்பணம் விரயமாகியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன். இன்றைக்கு 24 ஆயிரம் கிராம அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆண்டுக்கு 7 கோடி ரூபாய் அவர்கள் வேலை செய்யாமலே அவர்களுக்குச் சம்பளமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது யார் வீட்டுப் பணம்? இப்படி ஆண்டுக்கு 7 கோடி ரூபாய் கொடுக்கிறார்களே, அவர்களிடத்தில் வேலை வாங்கக் கூடாதா ? இதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். பல நீதிமன்றங்களில் அப்பீல் என்ற போரல்— சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தமிழ் நாடு இருக்கிறதோ என்று எண்ணத்தக்க அளவுக்கு—தமிழ் நாட்டு செக்கரட்டேரியட்டில் ஒரு பாதி செக்கரட்டேரியட் அங்கே வந்தது என்று எண்ணத்தக்க அளவுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், டெப்யூட்டி செக்காட்டரீஸ், லா டிப்பார்ட்மெண்ட் இப்படி பெருமளவுக்கு அதிகாரிகள் அங்கே குடியிருக்கிறார்கள். இப்படி ஒரு சமுதாயத்தை எதிர்த்து வழக்குகளைச் சந்திக்க வேண்டுமா என்பதைக் கேட்டுக்கொண்டு இந்த பட்ஜெட் சமுதாயத்திற்கு உதவாத பட்ஜெட், நாட்டு மக்களுக்கு நல்லது செய்யாத ஒரு பட்ஜெட், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

* **திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு **மேலவைத் தலைவர்** அவர்களே. 1982-83 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறி எனது உரையை ஆரம்பிக்கிறேன். நாட்டிலுள்ள ஏழையெளிய மக்கள், சமுதாயத்தில் நலிந்த நிலையிலுள்ள மக்கள், பின்தங்கிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் போன்றவர்கள் பயன் பெறுகின்ற வகையில் பாரத பிரதமர் அவர்கள் 20 அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்துகின்ற முறையில் அதை நிதி நிலை அறிக்கையில் வரவேற்றிருப்பதை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். கடந்த ஆண்டு கடுமையான வறட்சியைச் சந்தித்த நாம் இந்த ஆண்டு உபரியாக ஏறக்குறைய 8 லட்சம் டன் கூடுதலாக உற்பத்தி செய்கின்ற அளவுக்கு இந்த

பட்ஜெட்டில் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். 1981-82 ஆம் ஆண்டில் 60 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 1982-83 ஆம் ஆண்டில் 68 டன்னாக உயரும் என்று சொல்லியிருப்பதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் விலைவாசியும் ஏறிக்கொண்டே போகிறது. இன்றைக்கு குறிப்பாக உணவுப் பண்டங்களும் இதர உணவு தானியங்களின் விலையும் ஏறிக்கொண்டே வருகின்றன. இதைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக இன்றைக்கு ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலை கூடுதலாக ஏறிக்கொண்டே வருகின்றன. இன்றைக்கு ஓட்டல்களை நம்பி பல மக்கள் இருக்கிறார்கள். அரசுத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற அநேகம் பேர் ஓட்டல்களை நம்பித்தான் வாழ்கிறார்கள். ஆகையால் ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த இந்த அரசு மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்து உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டமானது அருமையான ஒரு திட்டம். இத்திட்டத்திற்காக ஏறக்குறைய 22.56 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. இதன் மூலம் ஆதி திராவிட பெருங்குடி மக்கள், சமுதாயத்தில் உள்ள நலிந்த நிலையிலுள்ள பழங் குடியினர், பிற்பட்ட மக்கள் போன்றவர்கள் நலம் பெற முடியும். ஆகையால் இந்தத் திட்டங்களை அரசு விரைவாக இதன் பலன் அவர்களைப் போய் சேர்கின்ற முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். இதனை நல்லமுறையில் முனைப்புடன் செயல்படுத்த வேண்டும்.

அடுத்து, கூட்டுறவைப் பொறுத்தவரையில், வேளாண் பொருள் கிடங்குகள் பற்றிக் குறிப்பிடுகிறேன். 100 கிராமக் கிடங்குகளும், 5 விற்பனைக் கிடங்குகளும் தொடங்க ஏறக்குறைய 86 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. இதன் மூலம் கடனாகவும் மானியமாகவும் அவர்களுக்கு உதவி அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல இதன் மூலம் சமுதாயத்திலுள்ள நலிந்த நிலையிலுள்ள மக்கள், ஆதி திராவிட மக்கள், பின்தங்கிய மக்கள் போன்றவர்கள் பயனடைவார்கள்.

திரு. ஜி. வசந்த பை : On a point of order. There is no quorum in the House. Sir. There are only six members in the House. பத்து பேராவது வேண்டாமா? உறுப்பினர்கள் வெளியே நின்றால் போதுமா? உள்ளே கோரம் வேண்டாமா?



திரு. பி. முனுசாமி : ஏழையெளிய மக்கள் அன்றாடம் வேலை செய்து பயனடைகின்ற முறையில் ஆயிரம் சைக்கிள் ரிக்‌ஷாக்களை அளிப்பதற்காக மானியத் தொகை அளித்தமைக்கு இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

(முற்பகல் 11-30)

இதற்காக 11.30 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதையும் நான் பாராட்டு கிறேன். அதுமட்டுமல்ல, அரசுத் துறைகளில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்குகிறோம் என்று சொல்லும் இந்த அரசு கூட்டுறவுத் துறையில் 18 சதவீதம் ஒதுக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக கூட்டுறவுத் துறையில் உள்ள நிறுவனங்களான மாநிலக் கூட்டுறவு வங்கி, சென்னை, மாநில நிலவள வங்கி, சென்னை, மாநில விற்பனை நிலையம், சென்னை, மாநிலக் கூட்டுறவு நுகர்வோர் சம்மேளனம், மாநிலக் கூட்டுறவு அடமான சங்கம், 16 மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள், 22 மாவட்ட மொத்த விற்பனைப் பண்டக சாலைகள், மாவட்டங்களிலே உள்ள அனைத்து நிலவள வங்கிகள், மாவட்டங்களிலே உள்ள அனைத்துக் கூட்டுறவு விற்பனை நிலையங்கள், அனைத்துக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பால்வள கூட்டுறவுப் பண்டக சாலைகள், வீட்டுவசதி பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று 18 சதவீதம் இதுவரையில் கொடுக்கப் படவில்லை. அதைக் கொடுக்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கீடு செய்கிறோம் என்று சொல்லும் இந்த அரசு இதை கவனிக்க வேண்டும். இந்தத் துறை அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட அந்த 18 சதவீதத்தை அவர்களுக்கு ஒதுக்காமல் இருப்பதை அரசு நேரடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு 3,350 கோடி ரூபாய் மின் விசைக்காக என்று அரசு ஒதுக்கி யிருக்கிறது. இந்தத் துறை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதியிருக்கிறது என்பதைத்தான் இந்த நிதி ஒதுக்கம் காட்டுகிறது. மற்ற துறைகளை விட இந்தத் துறை மிகவும் முக்கியமான துறை. அதைக் கவனத்தில் கொண்டுவருகிறேன். மின் சக்தி இருந்தால்தான், நாட்டில் மிகவும் முக்கியமாக தொழில்களையும், தொழிற்சாலைகளையும் இயங்க வைக்க முடியும். ஆகவேதான் மின் விசைக்கு அரசு இந்த அளவுக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மின்சாரத் துறையிலே தேவைக்கு அதிகமான அளவிலே தொழிலாளர்களையும், பொறியாளர்களையும் அதிகாரி களையும் வைத்துச் செயல்படுவதால்தான் அங்கே அதிகமான செலவு

ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆகையால் அந்தத் துறையிலே இருக்கும் ஊழியர்களுக்கு வேறு விதத்தில் வழிவகுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத் துறையிலே அதிகமான அளவு செலவு ஏற்படுவதைக் கட்டுப்படுத்த; அங்கு பணியாற்றும் ஊழியர்களை வேறு துறைக்கும் பயன்படுத்த வேண்டும். கேரள அரசு மின்சாரத் துறையிலே பணிபுரியும் பணியாளர்கள் 5 ஆண்டு விடுப்பு எடுத்துக்கொண்டு அரபு நாடுகளுக்குச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசுத் துறையிலேயே செய்து கொடுக்கிறது. ஐந்து ஆண்டு காலம் அங்கே செல்லும் அந்தப் பொறியாளர்கள் தங்களுடைய பொருளாதாரம் மேம்படச் செய்வதுடன் அரசுக்கு வேண்டிய அந்நியச் செலாவணியையும் கிடைப்பதற்கு உதவி செய்கிறார்கள். ஆகவே, தமிழக அரசும், கேரள அரசு காட்டுகின்ற வழியில், மின்சாரத் துறையில் பணிபுரியும் பொறியாளர்களின் நலனையும் மனதில் கொண்டு, அவர்களுக்கு ஐந்து ஆண்டு காலம் விடுப்பு கொடுத்து அவர்களை அரபு நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை மக்கள் வசிக்கும் இல்லங்களுக்கும் விளக்கு வெளிச்சம் கிடைக்க வேண்டும் என்ற வகையிலே திட்டம் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால், அந்தத் திட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளை எடுத்துக்கொண்டால், அங்கே விளக்குக் கம்பங்கள் தான் இருக்கின்றன, அவைகளிலே விளக்குகள் எரிவது இல்லை. ஆகவே, இந்தத் திட்டத்தை சரிவரச் செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளிலே நாம் அக்கறை காட்ட வேண்டும். பல கிராமங்களிலே இருக்கும் தெருக்களிலே, சாலைகளிலே இன்றைக்கு விளக்குகள் இல்லை. அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது. மற்ற துறைகளிலே எப்படி இருந்தாலும் கூட. தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் ஒளிவிளக்குத் தருகிறோம் என்று சொல்லும்போது, இந்தக் குறைகளை நீக்கி, வேகமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில், மற்ற நாடுகளைப் பார்க்கும்போது, அமெரிக்காவைப் பொறுத்த வரையில், மூன்று இலட்சம் மெகாவாட்டிற்கு மேல் மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவுக்கு அங்கே நல்ல வசதி இருக்கிறது. சீனாவைப் பொறுத்த வரையில், அங்கே ஐந்து இலட்சம் மெகாவாட் மின்சாரத்திற்கும் மேல் உற்பத்தி செய்கிறார்கள். இந்தியாவை எடுத்துக்கொண்டால், அனல் மின்சாரத் திட்டமானாலும், அணுமின்சாரத் திட்டமானாலும் எல்லாம்





சேர்த்துப் பார்த்தால் கூட, 32 ஆயிரம் மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்ய முடியும். ஆகையால், நாம் மிகவும் கவனத்தோடு இந்த மின்சாரத் துறையை அணுக வேண்டும். இந்தத் திட்டங்களை நிறைவேற்றும் வகையிலே, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, சிறுசிறு அணு மின்சாரத் திட்டங்களைக் கொண்டுவர இந்த அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், 150 கோடி ரூபாயில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை தவிர, வேறு தொழிற்சாலை ஒன்றுமில்லை. மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது, அவைகள் எல்லாம் தொழில் துறையிலே வேகமாக முன்னேறி வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொழிற் துறையின் முன்னேற்றம் மிகவும் மெத்தனமாகத்தான் இருக்கிறது. திட்டங்களுக்காக உதவித் தொகை, மற்றவைகள் எல்லாம் தருகிறோம் என்று சொல்கிறார்களே தவிர, குறைந்தது 15 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்கள் எதுவும் இல்லை. சிறுசிறு திட்டங்களாகத்தான் இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். மத்திய அரசோடு தொடர்பு கொண்டு பல திட்டங்களை உருவாக்க வேண்டும். பாரத் எலக்ட்ரானிக்ஸ் திட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்யவிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். 10 ஆயிரம், 15 ஆயிரம் பேர் வேலை செய்யும் அளவுக்கு அது இருக்கும். அந்தத் திட்டத்தை தமிழகத்திற்கு விரைவாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் நான் ஆவடி டாங்க் தொழிற்சாலைக்கு நமது பாரத பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு திரு. வெங்கடராமன் அவர்களுடன் சென்றபோது, அந்தத் தொழிற்சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்று அங்கே பணியாற்றும் தொழிலாளர்கள் சொன்னபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "அதற்கான ஒரு திட்டத்தை வைத்திருக்கிறேன், ஏற்கெனவே 10 ஆயிரம் பேர்கள் இதிலே வேலை செய்கிறார்கள், இன்னும் கூடுதலாக 4 ஆயிரம் பேர்கள் வேலை செய்யும் அளவுக்கு ஒரு திட்டத்தை வைத்திருக்கிறேன்" என்று சொன்னார்கள். இந்த அரசு அவர்களோடு தொடர்பு கொண்டு இன்னும் 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் பேர்கள் அந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்யும் அளவுக்கு மத்திய அமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் அந்தத் திட்டத்தை விரைவாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. முனுசாமி] [1982 மார்ச் 6

அடுத்தபடியாக, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு அருமையான திட்டம். சமுதாயத்தில் நலிந்த மக்கள், ஆதி திராவிட மக்கள், பழங்குடியினர் இவர்களுக்கெல்லாம் பயன்படும் வகையில் இந்தத் திட்டம் இருக்கிறது. குறிப்பாக கிராம மக்கள் மத்தியில் வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையிலே இந்தத் திட்டம் இருக்கிறது. இதில் சில குறைபாடுகள் இருந்தாலும் கூட, இந்தத் திட்டத்தை மிகவும் உன்னிப்பாகச் செயல்படுத்த வேண்டும். அதன் மூலமாக கிராம மக்களுடைய பொருளாதார வளர்ச்சி, கிராம மக்களுக்குத் தேவைப்படும் சாலை வசதி, குறிப்பாக ஆதி திராவிட மக்களுக்கு இடுகாட்டுக்குச் செல்ல சாலை வசதி, பள்ளி வசதி, குடிநீர் வசதி, இதுபோன்ற பல்வேறு திட்டங்களுக்கெல்லாம் இந்தத் தன்னிறைவுத் திட்டம் பயன்படுகிறது. ஆகையால் இந்தத் திட்டத்தை மிக வேகமாக நமது தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், சமுதாயத்தில் நலிந்த மக்கள் பயன்பெறுகிற வகையில் உதவிட வேண்டும்.

(முற்பகல் 11-40)

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தை 378 வட்டாரங்களிலும் செயலுக்குக் கொண்டுவர முனைப்போடு பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் கல்வித் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட 500 உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், அறிவியல் பாடங்களில் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினர்களுக்கும் உயர்தரக் கல்வி அளிக்கும் பொருட்டு, இந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தையும் மிக வேகமாக அமுல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, பெண்கள் கல்வி என்பது மிகவும் அவசியம், சமுதாயத்தில் குடும்பத்தைக் கவனிப்பவர்களான பெண்களுக்கு கல்வி என்பது மிகவும் அவசியமாகும். ஒரு காலத்தில் "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்று கேட்டார்கள். அந்தப் பழமொழியை மாற்றி இன்றைய கல்வி அமைச்சர் அவர்கள் பெண்களின் கல்விக்காக நல்ல முறையில் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சியடைவதோடு, என்னுடைய பாராட்டுதல்களையும் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் கல்வி அறிவில்லாமல் இருக்கும் நிலையை மாற்ற முதியோர் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து இனி நாட்டில் எழுத்தறிவில்லாதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்க இந்த அரசு செயலாற்ற



1982 மார்ச் 6] [திரு. பி. முனுசாமி]

வேண்டும். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த வகையில் நல்ல ஆர்வம் உள்ளவர்கள் என்பதால், இதையும் வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது 61 வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை 378 வளர்ச்சி வட்டாரங்களிலும் செயலாற்ற முனைப்போடு பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு வட்டாரந்தோறும் தொழில் பள்ளி உருவாக்கி அங்கே வாழ்கிற மக்களுக்குத் தொழிற் கல்வி உருவாக்கித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரத்தைப் பொறுத்த வரையில், ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை பயிலும் பிள்ளைகளின் உடல்நிலையைப் பரிசோதித்திடும் திட்டம் வைத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இத்திட்டத்தின் மூலமாக ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில், இந்த ஆண்டு விரைவாகச் செயல்படுத்த

சென்னையைப் பொறுத்த வரையில், கொசுத் தொல்லை மிகவும் அதிகமாகி விட்டது. எவ்வளவுதான் பெரிய திட்டங்களையெல்லாம் நாம் போட்டாலும் கூட, சுகாதாரக் குறைவு காரணமாக சென்னையில் உள்ள மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாகக் கொசுத் தொல்லை மூலம் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே இதற்குத் தனியாகவே "கொசு ஒழிப்புத் திட்டம்" என்று ஒரு திட்டத்தைப் பரீட்சார்த்தமாகக் கொண்டு வந்து கொசுத் தொல்லையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களில் இதை உடனடியாகச் செய்யாவிட்டாலும்கூட, சென்னையைப் பொறுத்தவரையில், ஒரு தனியான திட்டத்தைத் தயாரித்து கொசுத் தொல்லையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக, சென்னையில் உள்ள குடிசை வாழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் சென்னை நகரில் பெரிய சுகாதாரக் கேடுகளும், நோய்களும் பரவுவதற்கு வாய்ப்பு ஆகிவிட்டது. கொசு எங்கே உற்பத்தியாகிறது என்றால், கழிவு நீர் எங்கெங்கே தேங்குகிறதோ அங்கெல்லாம் மிகவும் அதிகமான அளவுக்கு உற்பத்தியாகிறது. அதிலும் குறிப்பாக, இன்றையதினம் பக்கிங்ஹாம் கனால் மூலமாக மிக அதிகமான அளவுக்கு கொசுக்கள் உற்பத்தியாவதோடு, மக்களை மிகவும் அதிகமாகப் பாதிக்கிறது. எனவே பக்கிங்ஹாம் கனால் ஓரமாக முதலில் கொசு ஒழிப்புத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் பக்கிங்ஹாம் கனாலுக்கு அருகில் இருப்பதால், என்னால் இந்தத் தொல்லையை முழுமையாக உணர முடிகிறது. குறைந்தபட்சம் பக்கிங்ஹாம் கனாலிலேயே அன்றாடம் கொசு ஒழிப்பு மருந்து தெளித்து அங்கேயே கொசுக்களை அழிக்க ஒரு திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. முனுசாமி] [1982 மார்ச் 6

அடுத்து, தமிழகத்தில் குடும்ப நலத் திட்டத்தை மிக அருமையான முறையில் நிறைவேற்றுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மைதான். இதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் சமூக நலத் திட்டங்கள் மூலமாகவும், ஆதி திராவிடர்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் பணியையும் அரசு முழு மூச்சோடு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பணிகளில் இவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 18 விழுக்காடு முறையாகப் பின்பற்றப்படுவதில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி கூட்டுறவுத் துறையில் இந்த 18 விழுக்காடு ஒதுக்கீடு சரியாகச் செயல்படுத்தப் படவில்லை என்பதை மீண்டும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர் நலனுக்காகவும், பழங்குடியினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காகவும் 535 கோடி ரூபாய் அளவுக்குள்ள ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் குடிநீர் வசதி, இணைப்புச் சாலை, மின்சார வசதி, சுகாதார வசதிகள் செய்தல் போன்ற திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தத் திட்டத்தை மிகவும் வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியத்தின் தலைமையிடம் விழுப்புரத்தில் அமைந்திருக்கிறது. தமிழகத்தில் உள்ள முக்கியமான அலுவலகங்கள் சென்னை நகரில் இருக்கும்போது ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியத்தின் தலைமையகம் மட்டும் விழுப்புரத்தில் இருப்பதற்கான காரணம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. இன்றைக்கு அந்த வாரியத்தின் தலைவர் சென்னை யில் இருக்கிறார். அலுவலகம் விழுப்புரத்தில் இருக்கிறது. அன்றாடம் அவர் விழுப்புரத்திற்குச் செல்கிறார். அவரோடு இணைந்து செயலாற்றும் உதவியாளர் இன்னும் அரசுப் பணியாளர்கள் ஆகியோரின் போக்குவரத்திற்குப் பெரிய அளவில் செலவாகிறது. அவர்களெல்லாம் எந்த அளவுக்குப் பயண சுட்டுப்படி பெறுகிறார்கள் என்பதைப் பார்த்தால் நாம் உள்ளபடியே வருத்தப் படுவோம். அதன் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவாவதாகச் சொல்கிறார்கள். எனவே இதன் காரணமாக, விழுப்புரத்தில் இருக்கும் ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியத்தின் தலைமையிடத்தைச் சென்னைக்கே மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், வீட்டு வசதி வாரியத்திற்கு தாங்கள் ஏதாவது குறைகளைச் சொல்ல வேண்டுமென்றாலும், விழுப்புரத்திற்குச் செல்ல வேண்டும் என்ற நிலை இருக்கிறது. எனவே



1982 மார்ச் 6] [திரு. பி. முனுசாமி]

எங்களைப் போன்ற உறுப்பினர்கள் விரைவில் சுலபமாகத் தொடர்பு கொள்ளுகிற வகையில் அலுவலகத்தை விழுப்புரத்திலிருந்து சென்னைக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் அந்தத் தலைமையகம் விழுப்புரத்தில் இருக்கும் காரணத்தால், ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கப்படும் பணம் பயணப்படியாகவே செலவாகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ரூ. 100 கோடி செலவில் ஏழை எளிய குழந்தைகளுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அந்தத் திட்டம் அருமையான திட்டம். அதை வேகமாகச் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மறைந்த மாபெரும் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒரு முறை சோவியத் ரஷ்யா சென்று வந்ததும் பகல் உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதையொட்டி அப்போது இன்னொரு திட்டத்திற்கான அறிவிப்பையும் செய்தது எனக்கு நினைவில் இருக்கிறது. அது என்ன திட்டமென்றால், "சோவியத் ரஷ்யாவில் குழந்தைகளை அரசே தத்து எடுத்துக் கொண்டு அவர்கள் பிறப்பிலிருந்து வளர்ப்பு, படிப்பு, உத்தியோகம் பெறுகிற வரை அரசாங்கமே பொறுப்பு எடுத்துக்கொள்கிறது. அப்படிப்பட்ட திட்டத்தை நான் தமிழ் நாட்டில் கொண்டுவர விரும்புகிறேன். பரிட்சார்த்தமாக ஒரு சில இடங்களிலாவது இந்தத் திட்டத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்" என்று அறிவித்திருந் தார்கள். எனவே பகல் உணவுத் திட்டத்தையொட்டி அனைத்துக் குழந்தை களுக்கும் ஒருவேளை இலவச உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டுகிறேன். பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் அறிவித்த மேற்படி திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் ஏற்று அடுத்த ஆண்டிலிருந்து பரிட்சார்த்தமாக, மாவட்டத்திற்கு ஒரு கிராமமாவது, குழந்தைகளை அரசே தத்து எடுத்துக் கொண்டு அவர்களுக்கு படிப்பு, உணவு, உடை, வேலைவாய்ப்பு என்று அனைத்திற்கும் பொறுப்பேற்கிற நிலையை உருவாக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் பல வரிகளைப் போட்டிருக் கிறார்கள் என்றாலும் அந்த வரிகளெல்லாம் அரசாங்கத்தை நடத்துவதற்குத் தான் என்று சொல்லி, அந்த வரிவிதிப்பையும் வரவேற்று அமைகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Hon. Deputy Chairman, I must thank you for the opportunity given to me to speak on the Budget. While reading the Budget speech, I was impressed by the fact that the Hon. the Finance Minister had first dealt with the advice of Thiruvalluvar to the rulers and had followed

it up with the words of the great Poet Kalidasa and I think this is a good augury to show that the qualities of Tamil and Sanskrit have fused together in this speech of the Hon. the Finance Minister.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

In the words of Poet Kalidasa, the Hon. the Finance Minister says "Just as the Sun absorbs water from lakes, rivers, and sea without causing any detriment to the water-spread, only to pour down useful rain over a wide area, so also a Government collects taxes from a few sources capable of bearing the burden and expends the money over a wider section of people for their benefit." I only hope that this quotation from Kalidasa's work, which looks fine in theory, will be translated by the Government in every way in practice.

Sir, the Rs. 100-crore scheme which has been placed before the public and which has been placed before this House in this Budget and which is also eulogised in many quarters will, I hope, become not a dream but a reality. In this connection, I would like to say that I was reading this morning the answer of the Hon. the Chief Minister when he intercepted my hon. Friend Thiru Damodaran during his speech. He has stated that the work of distribution under the said scheme will be done through ladies, voluntary organisations during social service, throughout the State, and that such voluntary organisations will undertake, without any cost to the Government, the personal supervision and conduct of the scheme of providing free meals to children of the age group of 2 to 10. I wish to commend to the Hon. the Chief Minister and his Cabinet Colleagues the idea that creches should be established in all centres. In those creches, the children must be wearing the same uniform dresses. It should not be any Party-uniform like saffron-white-green, black-white red-white etc. They must be wearing nice dresses everywhere.

(முற்பகல் 11-50)

They must be grouped together and brought into the creches. Elderly women or socially conscious ladies should take charge of them and look after their civic needs. The first thing they



should be taught is how to use the flush-out, how to use the bath-rooms, how to keep themselves clean, how to look after their cleanliness, and also how thereby they can translate cleanliness to the villagers or to their own parents. I would request that particular attention should be paid to this. Unless each child becomes aware of his or her civic duties, the programme will not be a success. Therefore, creches on the Russian or Chinese or any European model should be established. The children between the ages of 2 and 10 who are brought in there should have enough to play about with. They should also be made to study some elementary rudiments like arithmetic, writing and reading. They must be made to cultivate love for their country, love for the basic duties which are enshrined in our Constitution and which are called fundamental duties, respect for public property, respect for elders, respect for fellow-beings, respect for other people's property and respect for orderly behaviour in life. If this is done, the persons in charge of these institutions and who are given the responsibility of bringing up these children will really and truly deserve all the gratitude of the people in our country. I hope that Thirumathi Tara Cherian, Thirumathi Mandakini Krishnamurthi, Selvi Leelavathi and Thirumathi Seethadevi Krishnaswamy and everybody who is here will make it a point to see that the effort which is now sought to be put in is translated into action. They themselves may devote their time and energy to harnessing the willingness and aptitude of several women in diffierent places, especially in the villages, and make this not (merel ) a dream but reality. I do hope that this scheme will flourish and the children who are the beneficiaries of the scheme will become truly good citizens of the country.

There is another matter which I would like to bring to the notice of the Government. A few months ago, in Rajaji Hall we met for a big programme in connection with family planning. Thiru Damodaran was the Chairman of a Committee and I was Co-Chairman of another Committee. Thiru Balram Jakkar and others had come from New Delhi. There was a very brisk-moving lady—I forgot her name—and the legislators participated in the conference and the committees were held in Rajaji Hall. After that,

[Thiru G. Vasantha Pai] [1982 மார்ச் 6

nothing is known about that. The same thing should not happen to the 100-crore-rupee scheme also. I then got a letter from Thiru Shankaranand, Minister for Health and Family Welfare, Government of India. He says: "In fulfilment of the sacred trust, may I request you that in all apportunities of public speeches, group discussions and even in private conversations, you must bring home to the people the importance of small family . . . there is no occasion or subject, religious, economic political or otherwise, when a reference to the small family cannot be relevant." I do agree with him but I do not know whether our Ministers, in their speeches, refer to it. I do not know whether in the mass marriages that are performed any reference is made to Family Planning. But the newspapers do not mention about it; they say that 100 people have got married. There is one thing which I wish to impress upon you, namely, family planning should be applicable to both. If there is planning only for the wife, the husband will be free to go to somebody else. That should not be allowed. It must be a planning for both. If a man has got more than one wife...........

**Thiru A. R. DAMODARAN**: Madam Vice Chairman, this is a serious reflection on non-erring husbands. May I request the hon. Member to make his reference ot particular individuals?

**Thiru G. VASANTHA PAI**: I am only referring to erring husbands, and not to Thiru Damodaran or myself.

**Thiru K. RAMAMOORTHY**: The hon. Member is adding insult to injury.

**Thiru G. VASANTHA PAI**: I am only referring to persons who are entitled to marry more than one wife. It should not be construed as two children for each wife. They should not be allowed to have two children for each wife. If a person has four wives, he should have only two children on the whole. I am referring to the particular community in which they can have more than one wife. Please remember that. I am referring

(நண்பகல் 12-00)

specially to one community to which the Leader of the House belongs. Madam, this must be impressed. Otherwise, there is



1982 மார்ச் 6] [Thiru G. Vasantha Pai]

no value in the Family Planning Programme at all. This must apply both to the husband and the wife. For example, I have followed the Family Planning Programme because I have no children at all. Therefore, I am excluded from this. I do not know how many children Thiru Damodaran has got. I am sure he is not having more than two. I am subject to correction. He says that he has got three children. It is all right. He came into the picture before the Family Planning programme. Madam, I am only referring to this to say . . .

VICE-CHAIRMAN (Thirumathi Mandakini Krishnamurthi): The hon. Member does not have much of time.

**Thiru G. VASANTHA PAI**: I am only speaking now, Madam. Already I have taken only ten minutes and I have to speak on many important topics. I hope you will kindly bear with me. What I am submitting to you is that the Family Planning Programme has to be implemented on a practical and complete scale. There is no use of making it a wishy-washy affair. Every time mass marriages are held, those people must be told something. What is applicable to one should be made applicable to the other of the spouses. It is not enough if the Family Planning Programme is implemented only for the lady and not for the man. This is what I am trying to express.

Madam, I am now proceeding to the next point. It is about the concentration of all administrative, educational, irrigational, agricultural and every other activity in the City of Madras. The Chief Justice of India is now in our State and I think there is a programme for having the Law College converted into a Supreme Court also. You can just imagine what is going to happen to this City of Madras. It is going to be a place where everything is going to be concentrated. I know that the Hon. Thiru Raja Mohamed said something in the Lower House about this. I woud submit that either the Capital or the High Court should be transferred out of the City of Madras. Departments like the Agriculture Department and the Irrigation Department which are now based here should be shifted to distant places like Thanjavur. The Industries Department should go to some other area. Nothing should be concentrated here. The

[Thiru G. Vasantha Pai] [1982 மார்ச் 6

Government Departments should be diversified. We should not have everything concentrated here. Now, Madras is being made a humdrum of activity and the other places of Tamil Nadu are being ignored. Madam, we talk so much about Poompuhar and Kaverippoompattinam. Why cannot we shift the Capital to Poompuhar? Why cannot we ask persons like Otto Nemiere to come and build a new Capital? I have gone to far-off countries like Brazil. In Brazil, the Capital has been shifted from a place called Sava Polo to a place called Brazilia. There, a completely new city has been built by Otto Nemiere. It is a beautiful place where everybody has been provded housing facilities. Industrial activity takes place on one side of the city and the residential locality is on the other side. There are posh campuses with posh accommodation. There are separate campuses for schools, for super-markets, for Police Station, for Post Office, etc. Why should we not have something like that? The Government are now starting a Rs. 100 crore scheme for feeding children. Along with that, why should they not shift the capital to some other place like Poompuhar or Tiruchirappalli? Once upon a time, the Hon. the Chief Minister was for shifting the Capital to a place near Tiruchirappalli. But, the Opposition Party was against the idea of shifting the Capital. So it, became an issue between the AIADMK and the DMK. It should be made a general issue for the purpose of finding out how we can diversify and make different parts of our State beautiful. Let any area round about Tiruchirappalli or round about Kaverippoompattinam be the Capital of the State. Let the State's Capital be taken away from the Madras City. I would welcome that, Madam because I feel that there is so much of congestion and that unnecessary importance is being given to this place. Madras City is no longer in the central part of the State. In the old composite Madras State, the boundary of the State extended up to Ganjam. Then, Madras was in a central place; but it is no longer so. The Capital of a State should be in the centre of the State. If we shift the Capital to some place near Tiruchirappalli, it will be 200 miles away from Madras and 200 miles from Kanniyakumari. Therefore, I request the Government to shift the Capita. Personally, I would not stand to benefit by it, in any



1982 மார்ச் 6] [Thiru G. Vasantha Pai]

way. I am only suggesting this in the interests of the State. It is better to build a new city for locating the Capital. It may be built with all modern features after careful planning. If that is done, we can have a beautiful city and we can make Tamil Nadu an excellent place to live in. As a matter of fact, the more I go abroad, the more I love my country. Whatever you may talk of inflation, whatever you may talk of many things that happen in India, the inflation outside India is about 20 times greater than what we see here. I always feel proud to be an Indian because of the simplicity and contentment of the people in India, which I have never seen in Western countries. Such a good culture and tradition of the country should be preserved and we can copy from others, if there are any other good things. If we go to a village, the villager is content to get on with one meal a day.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

We can never see such conditions in other countries. The philosophy of this country is built up on contentment. Even the rich are advised not to earn more. In other countries, the rich people want to earn more and more and talk about billions of dollars. I think this culture should be preserved and at the same time we should get something good from other countries and supplement it for our needs.

I would request that the capital should be shifted out of the City of Madras to a central place like Tiruchirappalli or a place near that or to our ancient capital of Kaverippoompattinam.

Then I come to the controversial thing though our Law Minister is not here. I would like to say that in two judgments of the High Court, the Government have been criticised for the manner in which the affidavits have been drafted on behalf of the Government. In the judgment delivered day before yesterday, they say: Before the ink is dry, another instance has come by This happens because of lack of co-ordination between the Government Pleader who appears in Court and the person who prepares the affidavit on behalf of the Government. There was only one Government counsel and he had to go about, meet the senior counsel and do all the work. With the best of inten-

tions, the Law Minister has introduced a new system in which there are 18 Government Pleaders for 18 Courts. If the case goes from one Court to another, the Government Pleader remains in his own Court and the case is dealt with by another Government Pleader. The affidavit prepared and filed in one Court is not supported in the other court. He says: "I am not bound by what is stated by the other Government Pleader." As a result, the learned Judge has called upon the Advocate-General and warned that if any false statement if found in the solemn affidavit filed on behalf of the Government, the person concerned would be charged with perjury. The Judge has come down heavily upon the State for having filed a false affidavit. In that case, a man was said to have been guilty of some criminal offence. The concerned student said that he had not been prosecuted and that the charges had been dropped and that everything had been closed. This was found to be true. The Court questioned how then such a thing could find a place in the affidavit. I submit that the old system, with some modifications, may be revived. The affidavit should be drafted in consultation with the Government Pleader who is appearing in the Court, because he will know the mind of the Judge and what is happening in the Court. If it is not done, some poor Government Official who does not know anything about what is happening in Court and some other person in the Government employment will be penalised and will be hauled up for perjury. I do not want this punishment to be visited on Government servants who have other duties to perform, and whose duty is not merely filing of affidavits in Court. I, therefore, request the Hon. the Minister for Law.

(பிற்பகல் 12-10)

who is not present here, though he promised to be here on Monday, to take note of my speech which I am delivering here today and see that this anomaly is removed so that the person who appears in Court and the person who drafts the counter-affidavits is made more responsible to the job and the work of the State is carried on with efficiency and also care.

Sir, I shall not delay further except to say that the great Kalidasa, in his Raghu Vamsa, has also said that a policy initiated in proper time bears fruit. I do hope that this is the appropriate



time when the Rs. 100-crore scheme has been brought in and embedded in paragraph 117 of the Budget Speech of the Hon. the Finance Minister. Let it be made as if it were a trust. Let the Government remember that if a Budget Speech which contains 117 paragraphs is prepared and if certain taxes are contemplated therein, the proceeds of those taxes cannot be used for any other purpose than for the Rs. 100-crore scheme. If they do it, it would be a breach of trust. Sir, let me conclude by quoting, in Sanskrit, what Kalidasa has said : "Kale Kalo Samarakthaha Phalam". "Kale Kalo" means 'according to time'; "Samarakthaha" means 'brought into being'; "phalam" means 'fruit'. It means : Policies propitiated in proper time bear fruit. Thank you.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் பேசும்போது, எனக்கு ஒரு அச்சம் ஏற்பட்டது. அவர்கள் ஆங்கிலத்திலே வேகமாகப் பேசினாலும், அவர்கள் வைத்துள்ள ஹிட்லர் உமாநாத் மீசையைக் கண்டு எனக்கு ஒரு வகையிலே பயமாக இருந்தாலும், அவருடைய ஆங்கிலப் பேச்சு பல்வேறு வகையிலே அரசுக்கு உதவி செய்வதாக இருந்தது. சொல்ல வேண்டிய கருத்துக்களை அவர்கள் எடுத்துச் சொன்ன அந்த முறை என்னை உள்ளபடியே கவர்ந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையின்மீது எப்படிப்பட்ட விமர்சனங்கள் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த அவையிலே பார்த்துக்கொண்டிருக்கிறேன். பொதுவாக அரசினுடைய நிதிநிலை அறிக்கை என்று சொல்கிற நேரத்தில், அவரவர்கள் சார்ந்திருக்கிற கட்சிகளின் அடிப்படையிலேதான் நிதிநிலை அறிக்கையை அணுக வேண்டுமென்பது முறை என்றாலும், மேலவையைப் பொறுத்தவரையில், நிதிநிலை அறிக்கையை அணுகுகிற நேரத்தில், அதன்மீது பல்வேறு கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில், அது உபயோககரமான ஒன்றாக இருக்க வேண்டுமென்பது நாம் விரும்பி ஏற்றுக்கொள்ளும் ஒன்றாகும். நிதிநிலை அறிக்கையை அளித்த நிதி அமைச்சரவர்கள் பல்வேறு திட்டங்களையும், நாட்டிலே இன்றைக்குள்ள பல்வேறு பிரச்சினைகளையும் சொல்லி, நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறார்கள். இந்த நிலையில், நிதிநிலை அறிக்கையினுடைய முழு விவரங்களையும் நம்மாலே விமர்சிக்க முடியாது என்றாலும் கூட, அதிலிருந்து ஒன்றிரண்டை எடுத்துக்கொண்டு, இப்படி இப்படி இருக்கிறதென்று உறுப்பினர்கள் சொல்லும்போது, நான் எதிர்க் கட்சி உறுப்பினர்கள்

[திரு. எஸ். ஆர். இராதா] [1982 மார்ச் 6

சொல்லும் கருத்துக்களைத்தான் கூர்ந்து கவனித்துக்கொண்டிருப்பேன். தவிர, அவர்கள் முடிக்கும்போது, நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமில்லை என்றுதான் முடிப்பார்கள். வேறு வழி கிடையாது. 'இருக்கிறது' என்று சொன்னால், அவர்கள் சார்ந்துள்ள கட்சிக்கு உகந்ததாக இருக்காது. அதிலே வேடிக்கை என்னவென்றால், ஒருவர் வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டு, கடைசியிலே இதிலே ஒன்றுமில்லை என்று சொன்ன பிறகு, எனக்கு ஆச்சரியம். முன்னாலே வரவேற்றது எல்லாம் 'ஒன்றுமில்லை' போல் இருக்கிறது ; கடைசியிலே ஒன்றுமில்லை என்று சொல்லுகிறார் என்று எனக்கு நினைக்கத் தோன்றிற்று.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இந்த அரசு வந்த பின்னால் எவ்வளவு நஷ்டம் என்று ஒவ்வொன்றாக வரிசையாகச் சொன்னார்கள். அப்போது எனக்கு ஒரேயொரு பயம் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே லாபமாக நடந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நஷ்டமாகி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாலே தான் நஷ்டம் வந்தது என்று சொல்லியிருந்தால், நான் அச்சப்பட்டிருப்பேன். நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். இன்றைக்கு பால் பண்ணை இருக்கிறது. நாட்டுக்குத் தேவையான, மக்களுக்கு அத்தியாவசியமான ஒன்றாக பால் பண்ணை இருக்கிறது. அது நஷ்டத்தில் நடக்கிறது. 1973-74-ல் அது லாபகரமாக நடந்து, திடீரென்று இன்றைக்கு நஷ்டமாகி, அதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று சொன்னால், நான் உள்ளபடியே அச்சப்பட்டிருப்பேன். அதைப்போல மின்சார வாரியம். நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தைத் தர, இன்றைக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை அரசு செலவு செய்கிறது என்று சொல்லும்போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால்தான் இந்த நஷ்டம் வந்தது என்று எதிர்க் கட்சியிலே இருந்து ஒரு குற்றச்சாட்டு சொல்லப்படுகிறதென்றால், நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், அதை உள்ளபடியே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அப்படி ஒரு குற்றச்சாட்டு வந்தால், இந்த அரசு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். பல்வேறு துறைகளில் நஷ்டம் வருகிறது. அரசுத் துறையில் நஷ்டம் வருகிறதா, இல்லையா என்பது அத்தனை பேருக்கும் தெரியும். நஷ்டம் என்று சொல்லும்போது, ஒன்றை விவாதத்திற்குச் சொல்கிறேன். போடுகிற திட்டங்களில் தவறு ஏற்பட்டால், இந்த நஷ்டம் வந்தது என்று சொல்ல வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். வீராணம் திட்டம் போட்டார்கள். கோடிக் கணக்கான ரூபாய் சிமெண்ட் குழாய்களைச் செய்தோம், ரோட் முழுவதும் போட்டு வைத்திருக்கிறோம் ; இன்றைய



1982 மார்ச் 6] [திரு. எஸ். ஆர். இராதா]

வரையில் அதை என்ன செய்வது என்று எந்த அரசு வந்தாலும் முடிவு செய்ய முடியாத நிலை இருக்கிறது. குழாய்களின் வாய் அகலம் காரணமாக முடிவு செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். யார் இந்தத் திட்டத்தைப் போட்டார்கள் ? கோடிக் கணக்கான நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளிகள் ? ஆடிட்டர்-ஜெனரல் அவர்களால் சொல்ல முடியவில்லை. யாராவது பொறுப்பு ஏற்றுக்கொள்வார்களா ? கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சிமெண்ட் குழாய்கள் இன்றைக்கும் சாலைகளில் இருக்கின்றன. அந்த ஊழலுக்கு யார் காரணகர்த்தா ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் ஏதோ ஊழல் என்று சொல்லிவிடுகிற காரணத்தாலே, ஒரு ஆட்சிமீது பழி போட்டுவிட முடியாது, அ.தி.மு.க. ஆட்சியிலே இருக்கிறது. அதிலே ஊழல் நடந்திருந்தால், நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அந்த ஆட்சிக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை வைத்துக்கொண்டு ஒரு அரசாங்கம், பொறுப்பற்ற முறையில் நடக்கவும் கூடாது. தைரியம் இருந்தால், ஊழல் நடந்தது, அதற்கு இன்னார்தான் பொறுப்பு என்று சொல்லி நடவடிக்கை எடுக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டவுடன் ஆளுநர் அவர்கள் ஆட்சி இருந்தபோது, தெளிவாக ஒரு குழு போட்டு இந்தத் திட்டத்திலே தவறில்லை, தொடரலாமென்று அறிக்கை கொடுத்தும், வேண்டுமென்றே இந்த அரசாங்கம் அந்த நல்ல திட்டம் வந்துவிட்டால் தி.மு.க. ஆட்சிக்கு நல்ல பெயர் வந்துவிடுமென்று, அதை நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். அது இந்த ஆட்சியின் தவறே தவிர, திட்டத்திலே தவறில்லை. அதில் ஊழலும் இல்லை.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, 1976 சனவரி மாதம் 15 ஆம் தேதி கடற்கரையில் பேசிய கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள்,

"Above Rs. 20 crores have bee n squandered in Veeranam Project. Noone knows where the money has gone" என்று சொல்லியிருக்கிறார்கள். அது நடந்தது தி.மு.க. ஆட்சியிலே தான் 'பேப்பர் கட்டிங்' இருக்கிறது. 'இந்து' பத்திரிகையில் வந்திருக்கிறது. நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்போம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்த தவறுகளுக்கு எல்லாம் நடவடிக்கை எடுத்தால், ஆட்சி நடத்த முடியாது, அந்த வேலையே சரியாக இருக்குமென்பதால், போனால் போகிறது என்று விட்டுவிட்டோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** உங்களுக்கு நடவடிக்கை எடுக்க யோக்கியதை கிடையாது, தெம்பு கிடையாது, திராணி கிடையாது. தைரியம் இருந்தால் நடவடிக்கை எடுங்கள். நாங்கள் சந்திக்கத் தயார்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் யோக்கியதை பற்றி எல்லாம் பேசினால் . . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அரசுக்கு வேறு வேலை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தமிழில் இன்னும் பண்போடு பேசலாம். என்னுடைய வார்த்தையிலே ஏதேனும் தவறு இருக்கிறதா? . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என்ன தவறுகள் செய்யப்பட்டதென்று பட்டியல் போட்டுக் காட்டுங்கள் . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தயவு செய்து உட்காருங்கள். சொல்கிறேன். ஆலந்தூர் நகராட்சிக்கு 2½ கோடி ரூபாயில் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்திற்கு ஏழு, எட்டு கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அது தி.மு.க. ஆட்சியில் நடந்த ஊழல் என்று நிரூபிக்கப்படவில்லையா?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** எங்கே ஊழல் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது? எந்த வழக்கு? எந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்திருக்கிறது? நீங்கள் வேண்டுமென்றே, சிலரைப் பழி வாங்க, வழக்கு போட்டாலே ஊழல் என்று பெயரா? எத்தனை வழக்கு போட்டுவிட்டு—இப்போது முதலமைச்சரவர்களே நீதி மன்றத்திற்கு வராமல் இருக்கிறார்களே. வந்தால் தான் தெரியும்; எது ஊழல், எது இல்லை என்று. அமைச்சரவர்கள் ஆலந்தூர் பற்றிச் சொல்கிறார்கள், எந்தத் தீர்ப்பை வைத்துக்கொண்டு அங்கே ஊழல் நடந்ததாகச் சொல்லுகிறார்கள்? எத்தனையோ திட்டங்களைப் போடுகிறார்கள். போட்ட எஸ்டிமேட்டிலே நிறைவேற்றியிருக்கிறார்களா? இரண்டு கோடிக்குத் திட்டம் போட்டு எட்டு கோடிக்கு உயரவில்லையா? அது வேறு. ஊழல் நடந்திருக்கிறதென்றால், எங்கே தீர்ப்பு? சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, ஆலந்தூர்—பல்லவபுரம் பகுதிகளுக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தைப் பரிசீலனை செய்து, முடிவெடுத்த இன்ஜினியர்கள், "Water was found oozing out of the pipeline. 58 கிலோமீட்டர் போட்ட குழாயிலே தண்ணீர் வெளியே வந்துவிட்டது, அது குடி தண்ணீருக்குப் பயன்பட





வில்லை, விவசாயத்திற்குப் போவதுபோல் போய்விட்டது, எனவே வேறு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்" என்று சொல்லி, சிலவற்றை உபயோகத்திற்கு வைத்துக்கொண்டுள்ளார்கள். அதற்கு 708.08 லட்சம் ரூபாய் செலவாகிறது. 2½ கோடி ரூபாயில் முடிய வேண்டியது, தி.மு.க. ஆட்சி செய்த தவறால், ரூ. 7 கோடிக்கு மேல் ஆகியிருக்கிறது. பொது மக்களுடைய பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அது தி.மு.க. ஆட்சியில்

(பிற்பகல் 12-20)

நடந்ததுதான். ஒன்றைச் சொல்கிறேன். தயவுசெய்து அமைச்சர் பதவியை விட்டுவிட்டு என்னுடைய வயதிற்காகவாவது மரியாதையைத் தாருங்கள்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பொதுவாக உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்கிறேன். உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பு தருகிறேன். தயவுசெய்து உட்கார வேண்டும். சான்றோர்கள் அவை என்று பெயர் பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெயரைக் காப்பாற்ற வேண்டும். எல்லோருக்கும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கின்ற உரிமை உண்டு. அந்த வகையில் நிதானமாக, அமைதியாகக் கருத்துக்களை வெளியிடலாம். அப்படிச் செய்தால் இந்த அவையின் உயர்ந்த மரபு காப்பாற்றப்படும் என்பதை அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இரண்டு கோடி ரூபாயிலிருந்து திட்டம் உயர்ந்து விட்டது என்கிற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். இப்போது கூட காகித ஆலை 100 கோடி ரூபாயில் திட்டமிட்டார்கள். அது 200 கோடி ரூபாயாக உயரவில்லையா? இன்கிரீஸ் ஆப் காஸ்ட் என்பது எப்போதுமே இருக்கக்கூடியது தான். அது வேறு பிரச்சினை. ஆனால் பொதுவான ஒரு கருத்தை, முந்தைய ஆட்சியில் ஊழல் நடைபெற்றது என்று சொல்லக்கூடாது. எந்த நீதிமன்றத்திலிருந்தாவது ஊழல் நடைபெற்றது என்கிற ஒரு தீர்ப்பு வந்திருக்கிறதா? இருந்தால் அதைச் சொல்லட்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அமைச்சர் அவர்கள் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கான உரிமை படைத்தவர்கள். அவையில் சொல்ல உரிமை படைத்தவர்கள் என்கிற முறையில் அவர்கள் இங்கே சொன்னார்கள். அது குறித்து எனக்கு மகிழ்ச்சி. ஆனால் அப்படிச் சொல்லும்போது ஒரு கட்சியைப்பற்றிப் பழித்துச் சொல்கிற நிலை இருக்குமானால், அது ஒரு பெரிய

குற்றச்சாட்டு. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஊழலே தான் நடைபெற்றது என்று சொல்லி, அதைப்பற்றி நாம் பரிசீலனை செய்தால், வேறு வேலையே செய்ய முடியாது என்று சொல்வதை விட ஒரு கட்சியின் மீது களங்கம் கற்பிக்கும் வார்த்தை அல்லது குற்றச்சாட்டு வேறு எதுவுமே இருக்க முடியாது. அப்படி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஊழல் செய்திருந்தால், அதைத் தொடர்ந்து வருகிற ஆளும் கட்சி இந்த அவைக்கு அதைத் தெரிவித்தால் அதை விசாரிக்கின்ற உரிமை படைத்தது இந்த அவை. அதற்கான கடமை இந்த அவைக்கு இருக்கிறது. அப்படி இந்த அவையில் ஒரு குற்றச்சாட்டை அமைச்சர் அவர்கள் சொன்னதால், அதை விசாரிக்க இந்த அவை கடமைப்பட்டிருக்கிறது. துணைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக ஒன்று தெரிவிக்கிறேன். ஒன்றில் அமைச்சர் அவர்கள் சொன்னதைப் பின்வலித்துக்கொள்ள தாங்கள் உத்தரவிட வேண்டும். அப்படி இல்லையென்றால், இந்த அவை ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழு அவர் சொன்ன குற்றச்சாட்டுபற்றி விசாரிக்க வேண்டும். தாங்கள் தயவுசெய்து இது குறித்து தீர்ப்பு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இதுபற்றி பின்னர் தீர்ப்பு வழங்குகிறேன்.

**திரு. எஸ், ஆர், இராதா :** இந்த நல்ல நேரத்தில் ஒரு நல்ல கருத்தை தாங்கள் நினைவுபடுத்தியமைக்கு நன்றி. நானே பொதுவாக அதிகமான அளவுக்கு வேகத்திற்கும் கோபத்திற்கும் ஆளானவன். இந்த அவையில் பெரியவர்கள் அதிகமாக இருப்பதால், அடக்கத்திற்கு மாறாகப் பேசக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தபோது, எனக்கும் அந்த நிலை வர ஆரம்பித்தது. ஆனால் இப்போது மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. நல்ல கருத்துக்களை, கருத்துப் பரிமாற்றங்களை இங்கே சொல்கிறோம். மாற்றுக் கருத்துக்கள் இந்த அவையில் வருவது நல்லது தான். அது நாட்டுக்கு பல்வேறு பலன் அளிக்கும் வகையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அத்தகைய எண்ணத்தில் தான் மாற்றுக் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்த அளவில்தான் சொல்லிக் கொண்டிருக்கிறோமேயல்லாமல், குற்றச்சாட்டாக நான் இங்கே சொல்லவில்லை. ஆனால் குற்றச்சாட்டு என்பது இங்கே பழகிப் போன விஷயமாக மாறிவிட்டது. இன்றைக்கு எனக்கு வருகிற உணர்வு என்னவென்றால், நாம் ஒருவரைப்பற்றிக் குற்றச்சாட்டைச் சொல்லுவதற்கு முன்பு கொஞ்சம் நம்மைப் பற்றியும் யோசித்துப் பார்த்து விட்டு, குற்றச்சாட்டைச் சொல்ல முற்பட வேண்டும். நாம் சொல்லுகின்ற குற்றச்சாட்டு சரியாக இருக்குமா



என்பதையும் யோசிக்க வேண்டும். பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வருவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லக் கூடாது. அது உண்மையாக இருக்குமா என்பதை யோசித்துப் பார்த்து குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும். சாதாரணமாக மாண்புமிகு உறுப்பினர் திரு .வீராசாமி அவர்கள் குற்றச்சாட்டுகளை அதிகமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். நான் வார்த்தைக்கு வார்த்தை அப்படி இல்லை என்று உடனுக்குடன் பேசிக் கொண்டிருந்தால், நேரம் வீணாகிவிடும் என்பதோடு மட்டுமல்ல, அது வார்த்தைக்கு வார்த்தை மறுப்பு என்று தான் அமையுமே தவிர, அதனால் பலன் ஒன்றுமில்லை. ஆகவே தான் குற்றச்சாட்டு சொல்லுவதற்கு முன் அதை யோசித்துச் சொல்ல வேண்டும் என்று நான் சுட்டிக்காட்டுகிறேன்.

அதோடு மட்டுமல்ல. சினிமாக்காரர்கள் கணக்கைக் காட்ட மறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். சினிமாக்காரர்கள் மட்டுமா கணக்கை மறைத்துக்கொண்டிருக்கிறார்கள், இன்றைக்கு அரசியல் தலைவர்கள் கூட பல இடங்களில் கணக்கைக் காட்டாது மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது வாழ்க்கையிலே அன்றாடம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஒன்று. ஆனால் சினிமாக்காரர்கள் மட்டும் தான் இதைச் செய்கிறார்கள் என்று சொல்வது தவறு.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் பொதுவாகத் தான் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் 'சினிமா நடிகைகள் வருமானத்தைக் குறைத்துக் காட்டுகிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள். வருமான வரியின் நிலைமை அப்படி இருக்கிறது என்று சொன்னார்கள். அவர் சொன்ன தத்துவத்தை வைத்துத் தான் நான் சொன்னேனே தவிர, அது என் கருத்தல்ல.

**திரு. எஸ். ஆர். இராதா :** அப்படி இல்லை என்று உறுப்பினர் அவர்கள் மறுத்துச் சொல்வது குறித்துக் கூட எனக்கு மகிழ்ச்சிதான். இன்றைக்கு நாட்டிலே பல பேர் ஊழல் செய்துகொண்டிருக்கிறார்கள். நிலைமை அப்படி இருக்க, சினிமாக்காரர்கள் குறித்து உறுப்பினர் அவர்கள் முதலமைச்சர் கருத்தை ஏற்றுக்கொண்டு சொன்னதற்கு நன்றி.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் உட்கார்ந்துகொண்டு 'நல்லதை ஏற்றுக்கொள்கிறேன்' என்று சொன்னார்கள்.)

நல்லதைச் சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன் என்று உறுப்பினர் சொன்னதற்கு நன்றி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சிலுவை சுமப்பதற்கு சினிமாக்காரர்கள் மட்டும் தான் கிடைத்தார்களா ?

[1982 மார்ச் 6

திரு. எஸ். ஆர். இராதா : அந்த வகையில் சொல்கிறபோது, அரசின் புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, வார்த்தைக்கு வார்த்தை குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது ஒரு கணக்கைப் பற்றிச் சொல்லும்போது, இது ஏன் கடந்த ஆண்டை விட குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். இருந்தாலும் கூட நான் நகராட்சியில் 12 ஆண்டு காலம் இருந்தவன் என்கிற முறையில், அதுபற்றி அனு பவம் உடையவன் என்ற முறையில், நகராட்சியின் பட்ஜெட்டைப் பரிசீலனை செய்தவன் என்கிற முறையில் ஒன்றைச் சொல்கிறேன். நகராட்சி பட்ஜெட் டைத் தயாரிக்கும்போது அதை எப்படி அதிகாரிகள் தயாரிக்கிறார்கள், அது எப்படி மன்றத்திற்கு வருகிறது, எப்படி அதை விவாதிக்கிறார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன். "கடந்த ஆண்டு 6 கோடி இருந்தது இந்த ஆண்டு 4 கோடி ஆகக் குறைந்திருக்கிறதே, அது ஏன் ?" என்று கேட்டார்கள். பி.டபிள்யூ.டி. துறையில் இருக்கிற பல வேலைகள் பல திட்டங்களுக்கு, குறிப் பாக தன்னிறைவு போன்ற திட்டத்திற்கு மாறிவிட்டன. பல்வேறு துறை களுக்கு அந்த வேலைகள் மாறிவிட்டன. அப்படிச் செய்ததன் காரணமாக முன்பு 6 கோடி என்று இருந்த தலைப்பில் இப்போது 4 கோடி என்று ஆகி யிருக்கிறது. அதனால் பணியே நடக்கவில்லை என்று அர்த்தமில்லை. அந்த இலாகா செய்த பணியை வேறு இலாகா செய்கிறது என்று பொருள். வேறு தலைப்பில், வேறு காரியத்திற்கு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று பொருள். இது அரசுத் துறையில் நடைபெறக் கூடிய ஒரு சாதாரண காரியம். இதை ஒரு பெரிய குற்றச்சாட்டாகச் சொல்லியிருக்கிறார்கள். விவாதத்தின் தொடக்க நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நீல நாராயணன் அவர்கள் பேசும்போது, தேங்காயைக் கண்டுபிடித்து 'இதில் ஒன்றும் இல்லை' என்று சொன்னார்கள். பிறகு இதில் இருக்கிற வார்த் தைக்கு வார்த்தை கை இருக்கிறதா, கால் இருக்கிறதா, கொம்பு இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்யும் வகையில் சரியாகக் கணக்கு இருக்கிறதா என்று கேட்டார்கள். அப்படிக் கேட்கிறபோது, "இவ்வளவு அழுத்தந்திருத்தமாக இதை முழுவதும் படித்துக்கொண்டு தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்" உள்ளபடியே நான் நினைத்தேன் என்று. பொதுவாக உறுப்பினர்கள் இங்கே குற்றச்சாட்டுகள் சொல்வதை நான் வரவேற்கிறேன். அது கூடாது என்று சொல்கிறவன் அல்ல நான். அதை ஏற்றுக்கொள்கிறேன். குற்றச்சாட்டுக்கள் இருந்தால், அதை உறுப்பினர்கள் சொல்ல வேண்டும், அதன் அடிப்படையில் அதை நிவர்த்தி செய்து திருத்திக்கொள்ள வேண்டுமென்ற உயர்ந்த கொள்கை யைத் தான் எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டு ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால் குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன் அதை யோசித்துச் சொல்ல வேண்டும். இந்த வரவு-



1982 மார்ச் 6] [திரு. எஸ். ஆர். இராதா]

செலவுத் திட்டத்தில் பல்வேறு நல்ல திட்டங்கள் இருக்கின்றன. இந்த நல்ல திட்டங்கள் தொடர்பாக நீங்கள் விளக்கம், கருத்துக்கள் சொல்லியிருந் தால், பாராட்டியிருப்பேன். செலவை இப்படி இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லியிருந்தால், பாராட்டக் கடமைப்பட்டவனாக இருந்திருப்பேன். உதாரணத்திற்கு ஒன்றை இங்கே சொன்னார். "சிமெண்ட் ஆலைக்கு மத்திய சர்க்கார் அனுமதி தரவில்லையே, அது ஏன் தரவில்லை, என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் ?" என்று கேட்டார். அதே கேள்வியை நான் அவர்களைப் பார்த்துத் திருப்பிக் கேட்கலாம். மத்திய அரசு ஏன் தாங்கிக் கொண்டிருக்கிறது, ஏன் அனுமதி அளிக்கவில்லை என்று அவர்களையே உறுப்பினர் அவர்கள் கேட்கலாமே.

* திரு. நீலநாராயணன் : தேங்காய்பற்றி நான் பேசிய புள்ளிவிவரம் பற்றிச் சொன்னார்கள். அது சரி என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொல்கிறார்களா ? அல்லது நான் சொன்னது தவறு என்று சுட்டிக்காட்டுகிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : உறுப்பினர் அவர்கள் சொன்ன புள்ளிவிவரம் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. அதுபற்றி விவரமாக அறிந்த வகை யில், பதில் சொல்ல வேண்டிய நிலையில், பதில் தர முடியும். நானும் ஓர் உறுப்பினர் என்ற முறையில்தான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர் ஒரு கருத்தைச் சொன்னால், அதற்குத் தகுந்த பதிலை நான் சொல்ல முடியும். பெரிய புள்ளிவிவரங்களையெல்லாம் வைத்து இன்னின்ன தலைப்பிலே, இன்னின்ன துறைக்கென்று இன்னின்ன தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் பதில் சொல்ல முடியும். ஆனால் அதுவல்ல இங்கே பிரச்சினை. யார் தவறு செய்ததோ அதைச் சொன்னால், அந்த அதிகாரி அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்வார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் சொல்கின்றவைகளை நான் மறுக்க வேண்டுமென்று இல்லை. நான் சொல்வதெல்லாம், "தயவு செய்து இந்த அரசுக்கு யோசனை தாருங்கள். அது தான் நீங்கள் இந்த அரசுக்குத் தருகிற பெரிய உதவி." இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் பேசும்போது, "தலைநகரை மாற்றம் செய்யுங்கள்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள். அப்படி அழுத்தந்திருத்த மாக ஒரு கருத்தைச் சொல்வது நல்லது. அது நல்லது தான் என்று சொல்கிற துணிவு உங்களுக்கு இருந்தால் நீங்களும் சொல்லுங்கள். அப்படி யெல்லாம் சொல்வது என்பது உங்களுக்கு இருக்கிற உரிமை. அதைப்

(பிற்பகல் 12-30)

[1982 மார்ச் 6

* திரு. நீலநாராயணன் : யோசனைகளைச் சொல்லுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய பேச்சின் அடிப்படையும், முழுப் பேச்சும் 'நல்ல திட்டங்களை இந்த அரசு சொல்லியிருக்கிறது, அப்படிச் சொல்லியிருந்தும் அவற்றைச் செயல்படுத்தாமல் விட்டுவிடுகிறது, ஆகவே, செயல்படுத்த முன்வாருங்கள் அல்லது செயல்படுத்தக் கூடிய அளவிலே உள்ள திட்டங்களை அறிவியுங்கள் ; அறிவித்தது செயல்படுத்தப்படாமல் இருக்கிறது' என்பதுதான்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்றைக்குக் கூட விவாதத்திலே பங்குகொண்டு பேசும்போது ஒரு பெரிய கருத்தை, வேறு யாரும் சொல்லாத கருத்தைச் சொன்னார்கள். 'நாங்கள் அம்மா தி.மு.க.-வாக இருந்தாலும், எந்த அம்மாவினுடைய தயவிலேயும் இருக்க மாட்டோம்' என்று சொன்னார்கள்.

திரு. நீலநாராயணன் : நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள் என்று நினைக்கிறேன். 'அம்மா' என்று சொன்னது 'தாய்' என்ற பொருளில். 'தாய்க் கழகம்' என்பதற்குத் தான் அப்படிச் சொன்னேன், அதுதான் அதற்குப் பொருள்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் தவறாகப் புரிந்துகொள்ளவில்லை. அந்தக் கட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ, அதைக் கூட பார்க்காமல், . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும்வரையில் அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : 'அம்மா தி.மு.க.' என்ற விவகாரம் நாடாளுமன்றத்திலே வந்தது. திரு. சுப்பிரமணிய சுவாமி, எம்.பி. அவர்கள் என்ன சொன்னார் என்று சொன்னால், இவர்கள் இந்திரா காந்தி அவர்களோடு மிகவும் நெருக்கமாக இருப்பதால்தான், அப்படிச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களுக்கும், திரு. தம்பட்டாணி அவர்களுக்கும் இடையே நிலவுபட்ட நெருக்கம் இருப்பது இப்போதுதான் புரிகிறது.



1982 மார்ச் 6]

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்கிறார் என்று சொல்வதிலே, அந்தக் கருத்திலே அவர் அழுத்தமாக இருக்கிறார் என்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன், வரவேற்கிறேன். எத்தனையோ நல்ல காரியங்களை இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னால், எத்தனையோ காரியங்களை நாங்கள் சொல்லியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். தேங்காய் உற்பத்திக்கும் விற்பனைக்கும் ஒரு திட்டம் தயாரிக்கிறோம் என்று சொன்னால்—தேங்காய் உற்பத்தியிலே அதனுடைய எண்ணிக்கை மாறியிருக்கிறது என்பதிலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே என்ன காரியங்கள் செய்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரும் வகையில் அதற்கான கூட்டுறவுச் சங்கம் பதிவாகியிருக்கிறது. தேங்காய் உற்பத்தி செய்பவர்கள், தனியாரிடத்திலே அவற்றைக் கொண்டு போய், அந்த சமயத்திலே இருக்கும் விலைக்கு விற்றுவிடுகிறார்கள். தேங்காயை யார் உற்பத்தி செய்கிறார்களோ, யாருடைய தோப்பிலேயிருந்து அந்தத் தேங்காய் வருகிறதோ அவர்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அதன் மூலமாக வாங்குபவர்களுக்கு விற்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். அரசு திட்டத்தைச் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் போன்றவர்களின் நிலையிலே இருப்பவர்கள் என்ன சொல்ல வேண்டும் என்று சொன்னால், "இதற்கென்று ஒதுக்கியிருக்கும் 6 கோடி ரூபாய் போதாது, ஒரு 16 கோடி ரூபாய் அளவிலேயாவது இந்தத் திட்டத்தைத் தந்து, பேராவூரணியிலே, பட்டுக்கோட்டையிலே இருக்கும் தோப்புகளிலேயிருந்து நீங்கள் வாங்குங்கள், அதற்கென்று 4 லாரிகளை வாங்குங்கள்" என்று சொன்னால் இவ்வாறு இப்படிப்பட்ட திட்டங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுகிறார்கள், வரவேற்கிறார்கள் என்று நானும் பாராட்டுவேன். திட்டங்களைக் குறித்துச் சொல்லும்போது, குறைகளை மட்டும் சொல்வது நல்லதல்ல. கப்பல் வாங்க வேண்டும் என்று சொன்னால், அதிலே குறைகளைச் சொல்கிறார்கள். "ஜெர்மன் கப்பல் வாங்கினால், ஏன் இவ்வளவு செலவு? அதற்கு ஏன் இவ்வளவு விலையாகிறது?" என்றெல்லாம் கேட்பது பழைய கார்ப்பரேஷனிலே 'பெட்போர்ட்' லாரி வாங்குவது போலத்தான் இருக்கும். அப்படிப் பேசுவது நல்லதல்ல என்பதாலேதான் சொல்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க் கட்சிகளுக்கு என்று சில இலக்கணங்களைச் சொல்கிறார்கள். நிர்வாகத்திலே, ஒரு திட்டத்தை அரசுத் துறையிலே கொண்டு வருகிறோம். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே, எக்ஸிக்யூஷனிலே நடக்கும் தவறுகளை எதிர்க் கட்சிகள்

கண்காணித்து, கவனத்தோடு இருந்து, " இப்படி நடக்கிறது, இது நடக்கக் கூடாது " என்று சொல்கிறார்கள் என்றால், அது எதிர்க் கட்சிகளின் கடமை. அப்படி ஆலோசனை கூட சொல்லக்கூடாது என்பதல்ல. இந்தத் திட்டங்களில் அரசாங்கத்தினுடைய எக்ஸிக்யூஷன் என்பது அமைச்சர்களே நேரடியாக இருந்து செய்வதல்ல. ஏழு இலட்சம் ஊழியர்களை வைத்துச் செய்யும் போது. அவற்றிலே நடக்கும் தவறுகளை நாங்கள் சொல்லும்போது, அதற்குப் பொறுப்பு முழுவதும் அமைச்சரவை என்று சொல்வதாக எண்ண வேண்டாம். தவறுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். ஆகவே, இப்படித் தான் பேச வேண்டும் என்று சொல்வது நல்லதல்ல.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் எனக்கு ஒரு விளக்கம் சொல்ல ஆரம்பித்து, அவர் ஒரு பெரிய விளக்கம் சொல்லியிருக்கிறார். இந்த மன்றத்திலே யார் யார் எப்படி எப்படிப் பேசுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர் களும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் முத்துசாமி அவர்களும், மீனாட்சிசுந்தரம் அவர்களும் பேசுவது பற்றி நான் விவரம் தெரியாமல் இருக்கிறேன் என்றல்ல. நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, " ஆசிரியர்கள் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டு நான் வந்திருக்கிறேன். எந்த அரசியல் கட்சிக்கும் அப்பாற்பட்டவன் " என்று சொல்லியிருக்கிறார்கள். "உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏழு இலட்சம் பேர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை, ஆகவே, இந்தச் சர்க்காரை எச்சரிக் கிறேன்" என்று சொல்லிப் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்குப் பின்னாலே இருக்கவேண்டியவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்குப் பின்னாலே இருக்கிறாரே என்று தான் நான் கவலைப்படுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக் களைச் சொல்வதிலே எந்தவிதமான வேறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால் வேண்டுமென்றே இந்த அவையில் சில மரபுகளைப் பற்றி பேசும்போது, பேசும் மாண்புமிகு உறுப்பினர்களும் சில கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எங்கே உட்கார வேண்டும் என்பது அவரவர்களுடைய உரிமை. அவர் இவருடைய பின்னாலே உட்கார வேண்டும், ஆனால் இவருடைய பின்னாலே இருக்கிறார் என்றெல்லாம் சொல் வது அவர்களை அவமானப்படுத்துவதாகும். கப்பல் பற்றி நாங்கள் சொன்னாலே அவர்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. கப்பல்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. அரசாங்க அதிகாரிகள் சொல்வதை, பத்திரிகை



களில் போடுகிறார்கள். ' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' பத்திரிகையிலே வந்திருக் கிறது. அதிகாரிகள் விளக்கம் தந்திருக்கிறார்கள். மத்திய அரசு சொல் வதைக் கூட நாங்கள் சொல்லக்கூடாது என்று நினைப்பது சரியல்ல. ஆளும் கட்சித்தரப்பிலே இருப்பவர்கள் என்ன சொன்னாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், அதற்கு இந்தப் பக்கத்திலே இருப்பவர்கள் தயாராக இல்லை, அந்தப் பக்கத்திலே இருப்பவர்கள் வேண்டு மானால் தயாராக இருப்பார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : (மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களைப் பார்த்து) நீங்கள் மட்டுமே பேசுகிற விதமாகப் பேசுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : மாணபுமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு நல்ல யோசனையைச் சொன்னார்கள். அவர் சொல்லும்போது மகிழ்ச்சி. நாங்கள் இந்தப் பக்கத்திலே உட்காருகிறோம், அதனாலே பேசு கிறோம் என்ற உணர்வை வளர்த்துக்கொள்ளக்கூடாது. எந்தப் பக்கத்திலே உட்கார்ந்திருந்தாலும் . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் சொல்வதைப் புரிந்து கொள்ளாமல் பேசினால் எப்படி? மத்திய அரசு சொல்லியிருக்கிறது. கப்பல் போத்தில் ஏன் அனுமதி வழங்கவில்லை என்று காரணம் சொல்லியிருக்கிறது. மத்திய அரசு சொல்லும்போது, அதை எடுத்துச்சொல்வது எதிர்க் கட்சிகளுடைய கடமை, எதிர்க் கட்சிகளுடைய உரிமை. " இந்த அரசு என்ன சொல்கிறதோ அதைத்தான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், சொல்ல வேண்டும். அது உங்களுடைய தலையெழுத்து. " மத்திய அரசு இவ்வளவு விளக்கம் கொடுக்கும் போது, இந்த நாட்டின் நன்மைக்காக 100 கோடி ரூபாய் போத்திலே 50 சத விதம் அதிகமாக விலை கொடுத்து வாங்கவிருந்த தமிழக அரசின் போக்கைச் சுட்டிக்காட்டியிருக்கிற மத்திய அரசின் அறிக்கையைத்தான் சொன்னேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடாது என்று நான் வாதாடவில்லை. நான் சொல்கின்ற கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேகத்திலே சொல்ல வேண்டாம், மாண்புமிகு உறுப்பினர் மீது குறை சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. நான் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அன்றைக்குப் பேசும்போது யாரோ சொன்னார்கள்,

[திரு. எஸ். ஆர். இராதா] [1982 மார்ச் 6

'செஞ்சோற்றுக் கடன்' ஆற்றுகிறீர்கள், நீங்கள் இப்படித்தான் இருப்பீர்கள் என்று. இன்றைக்குப் பார்த்தால் "உங்களுடைய தலையெழுத்து, இப்படித் தான் இருக்க வேண்டும்" என்றெல்லாம் . . .

* **திரு. நீலநாராயணன்** : "செஞ்சோற்றுக் கடன்" என்ற வார்த்தையை இந்த சபையைப் பொறுத்தவரையில், நான் தான் முதலிலே குறிப்பிட்டேன். அதைத் தொடர்ந்து, ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் அதை எதெதற்கோ பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒரு விஷயத்தை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசுவதைப் போலவே சென்ற தடவை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் பேசியபோது, எதிர் வரிசையிலே இருக்கும் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் குற்றம் குறைகளை எடுத்துக்கூறும்போது, அவர்களுடைய கட்சித் தலைவர் களை அமைதிப்படுத்துவதற்காக, திருப்திப்படுத்துவதற்காக, இப்படிப்பட்ட வார்த்தைகளை அவர்கள் கையாளுகிறார்கள் என்று இந்த அவையிலே சொல்லப்பட்டது. நாங்கள் சொன்ன குற்றங்குறைகளை நீங்கள் விமர்சித் தால் அதை வரவேற்கிறோம். நாங்கள் சொல்லும் குற்றங்களிலே உள் நோக்கம் கற்பிக்கும் வகையில் "எங்கள் கட்சித் தலைவரைத் திருப்திப் படுத்தப் பேசுகிறோம்" என்ற முறையிலே இங்கே பேசப்பட்டன. இந்த நிலைமைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறேன். அப்படிப் பேசுவதுதான் செஞ்சோற்றுக் கடன் என்று குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : பொதுவாக, செஞ்சோற்றுக் கடன் கழிப்பது என்பது கேவலமான விஷயம் அல்ல. அது நல்ல பண்புதான்.

(பிற்பகல் 12.40)

**திரு. செ. முத்துசாமி** : மகாபாரதத்தில் கர்ணன் பாத்திரத்தின் மூலம் அது நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1½ மணிக்குள் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பேசி முடிக்க வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் 10 ஆம் தேதி பேச இருக்கிறார்கள். மேலவைக்கு உரிய பண்பு களையும் சிறப்புகளையும் அவ்வப்போது சுட்டிக்காட்டுகிறபோது, அதை ஏற்றுக்கொண்டு, குறுக்கீடுகளைத் தவிர்த்துப் பேசி முடித்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.



1982 மார்ச் 6]

**திரு. எஸ். ஆர். இராதா** : ஒரு நல்ல கருத்தை, விவாதத்தில் எடுத்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆளும் கட்சி என்றால் என்ன தகுதிகள், எதிர்க் கட்சி என்றால் என்ன தகுதிகள் என்ற புதிய மரபுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியில் இருக்கிறோம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றும், எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றும் நிலைமை உருவாகிக் கொண்டிருக் கிறது என்பதை மட்டும் நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளும் கட்சிக்காரர் என்றாலே அதன் காரணமாக அரசின் எல்லாத் திட்டங்களையும் வரவேற்றுப் பேசித்தான் ஆக வேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக அது ஜனநாயக முதிர்ச்சியைக் காட்டுவதாகாது. அதைப் போலவே எதிர்க் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் என்ற காரணத்திற்காகவே ஆளும் கட்சியின் எல்லாத் திட்டங்களையும் எதிர்க்க வேண்டும், அதுதான் எதிர்க் கட்சியின் மரபு என்ற நிலையும் வரக்கூடாது என்பதற்காகச் சில வற்றைச் சுட்டிக்காட்டினேனே தவிர, நாங்கள் ஆளும் கட்சியில் இருப்ப தாலேயே யாரும் குறை சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை.

ஆளும் கட்சியில் இருக்கிற நாங்கள் அரசில் நல்ல திட்டங்கள் போடப்படும் போது அவற்றை வரவேற்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு மென்றால், இந்த நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் மின்சாரம் இல்லாத இடமே இல்லை என்று சொல்லுகிற அளவுக்குப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வந்ததற்குப் பிறகு பெரிய சாதனையைச் செய்திருக் கிறார்கள் என்பதில் பெருமைப்படுகிறோம். அதை வெளியே சொல்வதில் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் நாட்டில் உள்ள ஆதி திராவிடர் களின் காலனிகளில் மின்சாரம் இல்லாத நிலையை உருவாக்கியிருக்கிறோம். தமிழகத்தில் மின்சாரம் இல்லாத கிராமம் இல்லை என்ற நிலைமை புரட்சித் தலைவர் ஆட்சியில் உண்டாக்கப்பட்டது என்றால், எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இதையே கூட எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் வேறு மாதிரியாகச் சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, இந்த ஆட்சி முடிவடைவதற்கு முன்னால் மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று சொன்னார்கள். நான் அதைக் குற்றமாகச் சொல்லவில்லை . . . .

* **திரு. சோ. ஆறுமுகம் :** மின்சாரம் இல்லாத கிராமங்களாக்குவோம் என்றும், மின்சாரம் இல்லாத தாழ்த்தப்பட்டவர்களின் கிராமங்கள் ஆக்குவோம் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். மின்சார வசதி செய்யப்படாத கிராமங்களே இல்லை என்றாக்குவோம் என்று சொன்னால், சரியாக இருக்கும். அதற்கு மாறாக 'மின்சாரம் இல்லாத கிராமங்களை ஆக்குவோம்' என்று சொல்வதில் பெருமை இருந்தால், அவர் அப்படியே சொல்லிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மனதில் தவறில்லை. வாக்கில்தான் தவறு வந்துவிட்டது.

**திரு. எஸ். ஆர். இராதா :** கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது, வார்த்தைகளைத் தனித் தனியாகப் பிரித்துப் பேசுவது என்பது எந்த வகையிலும் சரியில்லை. சொல்லுகிற கருத்துக்களைக் கேளுங்கள். வார்த்தைகளை மட்டும் பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். இது அவரவர்களுக்கு இருக்கிற சுபாவம், இப்படிப் பேசுவது என்பது என்னுடைய சுபாவம் . . .

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் அவருக்குமட்டும்தான் ஒரு சுபாவம் இருப்பதைப் போலவும் மற்றவர்களுக்கும் அத்தகைய சுபாவம் வரவேண்டும் என்றும் பேசுகிறார்கள். அவருடைய பண்பு எங்களுக்கு நிச்சயமாக வராது. அது தேவையானதும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டதால் நான் சொல்கிறேன். நான் எப்போதும் . . .

**திரு. க. இராமமூர்த்தி :** ஒரு கருத்தை மாண்புமிகு தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, மற்றொரு உறுப்பினரைப்பற்றிக் குறிப்பிட நேர்ந்தால் "மாண்புமிகு உறுப்பினர்" என்ற வார்த்தைகளையும் சேர்த்துக் கொண்டால், வேகம் தானாகவே தணிந்துவிடும் என்பதோடு அவர்களும் ஓரளவுக்குத் தங்களை நிலைப்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு இராமமூர்த்தி அவர்கள் ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ஆறுமுகம்



அவர்கள் "அவரைப் போன்ற சுபாவம் வரக்கூடாது என்று சொல்கிறார்." அண்ணா அவருக்கு ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அண்ணா அவர்களிடம் சேரும்போது, அவருடைய சுபாவங்களையும், நிலைமைகளையும் பார்த்து, அந்த வழியில்தான் நாம் நடக்க வேண்டும் என்று நான் நடந்து கொண்டதால், பலருடைய விரோதத்திற்கு ஆளானேன். அவர் என்னைப்போல் வரவேண்டும் என்பது என்னுடைய ஆசை, ஆனால் அப்படி வரமாட்டேன் என்பது அவருடைய முடிவாக இருக்கலாம்.

குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறபோது, யோசித்துவிட்டுச் சொல்லுங்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சியாக இருந்தவர்கள் எதிர்க் கட்சியாக இருக்கும்போது சிந்தித்துப் பார்த்துவிட்டு குற்றச்சாட்டுகளைச் சொன்னால் நான் உள்ளபடியே ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குற்றச்சாட்டுகளைச் சொல்கிறபோது, அவை உண்மையாக, முறையாக இருந்தால், அதற்காக வருத்தப்படுவோமே தவிர, அப்படிச் சொல்வதையே தவறு என்று சொல்லமாட்டோம்.

இங்கே நிதிநிலை அறிக்கையில் பக்கத்திற்குப் பக்கம் எத்தனையோ திட்டங்களைப் புதிது புதிதாக அறிவித்திருக்கிறார்கள். இப்படி அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்களில் இருக்கிற குற்றங்குறைகளைச் சொல்லுங்கள்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஏழை எளிய குழந்தைகளுக்கு இலவசமாக உணவு தருவதற்கு எங்கள் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு முடிவெடுத்து ரூ. 100 கோடியில் அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கிற சில உறுப்பினர்கள் அந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்துவது என்பதற்கான வழிவகைகளைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது, ஒரு அருமையான கருத்தைச் சொன்னார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரை, இப்படி இப்படிச் செய்யுங்கள், இன்னின்னாரைக் கொண்டு அமுல்படுத்துங்கள், அதை இப்படி இப்படிச் செய்தால்தான் சரியாக இருக்கும் என்றெல்லாம் சொன்னார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டத்தைச் சரியாக அமுல்படுத்தி தமிழ் நாட்டில் உள்ள ஏழை எளிய குழந்தைகளை ஒரு வேளை பகலுணவிற்காக அலைகிற குடும்பத்தில் உள்ள குழந்தைகளைக் காப்பாற்ற முன்வாருங்கள் என்று சொன்னபோது, நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைந்தேன். அந்த அளவிற்கு அவர் அந்தத் திட்டத்தை வரவேற்றார்கள். அதற்கான வழிவகைகளைச் சொன்னார்கள். இவ்வாறு தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான ஏழை எளிய குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஒரு வேளை பகல் உணவைக் கொடுப்பதற்கு வழி வகை செய்கிறோம் என்றால்,

[திரு. எஸ். ஆர். இராதா] [1982 மார்ச் 6

அதற்கு 100 கோடி ரூபாய் அல்ல, எத்தனை கோடி ரூபாய் செலவானாலும் தரும் என்று சொல்லுகிற அளவுக்கு எல்லோரும் இதைப் பாராட்டுகிறார்கள். ஆனால் இங்கே ஒரு நண்பர் பேசும்போது, "7 லட்சம் அரசு அதிகாரிகளையும் ஆசிரியர்களையும் கவனிக்காத நீங்கள் ஏழைக் குழந்தைகளுக்கா சோறு போடுகிறீர்கள்?" என்று கேட்டது எங்களுக்கு விசித்திரமாக இருந்தது. அதை ஒரு எச்சரிக்கை மாதிரி சொன்னார். "7 லட்சம் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களையும் புறக்கணிக்கிற இந்தச் சர்க்கார் என்ன ஆகும் தெரியுமா? நாங்கள் என்ன செய்வோம் தெரியுமா?" என்று பேசியபோது, எனக்கே கொஞ்சம் அச்சமாகக்கூட இருந்தது. ஓகோ, இவர்கள் ஏதோ செய்யப் போகிறார்கள் என்பது எங்களுக்குப் புரிந்தது. ஒன்றை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சரான பிறகு, இப்படிப்பட்ட மிரட்டல்களையும், பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் எத்தனை எத்தனையோ முறை சந்தித்துப் பழக்கப்பட்டவர்கள்தான் நாங்கள். 7 லட்சம் ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும் இந்த அரசு கவனிக்கவில்லை என்பதற்கு என்ன ஆதாரம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடப் பட்டிருக்கிறது. "உங்களைப்பற்றியும் நாங்கள் கவனத்தில் கொண்டிருக்கிறோம். உங்களுக்காகவும் நாங்கள் பரிந்து கொண்டிருக்கிறோம். உங்களையும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்ன பிறகும், "நாங்கள் விடமாட்டோம், நாங்கள் என்ன செய்வோம் தெரியுமா?" என்று சொன்னால் நான் அரசின் சார்பாக அல்ல, ஒரு சாதாரண மன்ற உறுப்பினர் என்ற முறையில் சொல்ல விரும்புகிறேன் "நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று பார்க்க வேண்டும் என்றுதான் இந்த இடை வெளியே கொடுக்கப்பட்டிருக்கிறது. உங்களின் நிலை தெரிந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுதான் இதை விட்டிருக்கிறோம். யார் யார் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் நிதிநிலை அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது." என்று. நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக் கிறார்கள். "பெரும்பான்மையான அரசு ஊழியர்கள் இந்த அரசுக்கு விசுவாசமாகப் பணியாற்றுகிறார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையான ஊழியர்கள் என்று போடப்பட்டிருப்பதை நான் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். பெரும்பான்மையான ஊழியர்கள் என்று சொல்வதன் மூலம் அத்தனை பேருமே ஆதரிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். இதுதான் இன்றைய அரசு



1982 மார்ச் 6] [திரு. எஸ். ஆர். இராதா]

ஊழியர்களிடம் இருக்கிற நிலைமையாகும். இன்றைக்குப் பலர் கட்சிக்காரர் களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். கையிலே பத்திரிகையை வைத்துக் கொண்டு "எந்த மாதிரியாக இருந்தாலும் சரி, எந்த அதிகாரியாக இருந் தாலும் நாங்கள் விரும்புவதைத்தான் செய்வோம், எங்கள் கையில் அதிகாரம் இருக்கிற வரை யாரும் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது" என்கிறார்கள். அத்தகைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தால், உடனே அவர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிற நிலைமையைப் பார்க் கிறோம். "ஏன் நடவடிக்கை எடுக்கிறீர்கள்?" என்கிறார்கள். "உங்களுடைய அரசுக்கு ஒத்துழைப்பு தரவில்லை என்று நடவடிக்கை எடுக்கிறீர்கள்" என்கிறார்கள். சரி, நடவடிக்கை எடுக்காமல் இருப்போம் என்றால், உடனே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறார்கள். இப்படியே செய்துகொண்டி ருந்தால் ஒரு அரசு எந்த வகையிலே செயல்படுவது என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நிதிநிலை அறிக்கையில் பல திட்டங்களைப்பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பல் பாது காப்பிற்காக ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். அதைப்பற்றிப் பேசிய உறுப்பினர்கள் சிலர் "பற்பொடியோடு நின்றுவிடாதீர்கள், சீப்பு, சோப்பு, கண்ணாடி ஆகியவற்றையும் வாங்கித் தாருங்கள்" என்று கூறினார்கள். ஆளும் கட்சியில் இருக்கிற நாங்கள் இதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். வேறு வழியில்லை. திட்டங்களை விமரிசனம் செய்யுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. அது உங்களுடைய உரிமை என்பதைப்பற்றி யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் "எங்களுக்குக் கண்ணில்தான் சந்தேகம் இருந்தது. அந்தச் சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள பெரிய சோடா பாட்டில் கண்ணாடி கொடுத்து சரி செய்துவிட்டோம். இப்போது பல்லைப் பார்க்கிறீர் களே என்றால் என்ன அர்த்தம்?" நீங்கள் கண்ணைப் பார்த்தால் நாங்கள் பல்லைப் பார்க்கிறோம். கண்ணாடிக்குப் போகக் கூடாது என்பதற்காகத்தான்

(பிற்பகல் 12.50)

பல்லுக்கு வரவேண்டுமென்று கருதி பல்லுக்கு வருகிறோம். பல்லைப் பார்க்க ஆரம்பித்தால், பிறகு சோப்பு, சீப்பு, கண்ணாடி வேண்டுமானால், வேண்டும் என்று கேட்கலாம். கேட்பதிலே நியாயம் இருக்கிறது. அவ்வாறு ஓர் அரசைக் கேட்பதிலே நிச்சயமாகத் தவறு கிடையாது. இன்னும் வேறு ஏதாவது வேண்டுமென்றால் கேட்கலாம், அதையும் தருவதற்கு வழிவகை இருக்கிறது. வேண்டுமென்றால் ஏற்பாடு செய்துகொள்ளலாம். திட்டங்களைப்

பற்றிக் குறை சொல்லும்போது வரிசைப்படுத்தலாம். பல்பொடி தருவதால் எந்தப் பலனும் இருக்காது, பல்பொடி தயாரிப்பதில் தவறு செய்யப் போகிறார்கள்—நாங்கள் கண்ணாடி வழங்க வேண்டும் என்று கொண்டு வந்த போது ஏற்பட்டதைப் போல இதிலே தவறுகள் வரக்கூடாது, தனியாரிடம் கொடுக்கக் கூடாது என்று சொல்லலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, பேசா தவைகளையெல்லாம் பேசியதாக இங்கே பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. நாங்கள் " கண்ணாடி வழங்கும்போது நேர்ந்த தவறைப் போல செய்யாதீர்கள். என்று யாரும் சொல்லவில்லை. அப்போது நீங்கள்தான் அப்படிச் சொன்னீர்கள். " கண்ணாடி வழங்கும் திட்டத்தைப்பற்றி நீங்கள் சொன்னதைப் போல நாங்கள் இப்போது சொல்மாட்டோம் " என்றுதான் சொன்னார்கள். அந்தப் பண்பு எங்களிடம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் சொன்னார்கள். தி.மு.க. கண்ணாடி போட வேண்டுமென்று திட்டத்தைக் கொண்டு வந்தபோது, அதிலே எவ்வளவு கமிஷன், ஊழல் என்றெல்லாம் நீங்கள் சொன்னீர்கள். அதுபோல நீங்கள் பல்பொடி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வரும்போது நாங்கள் பேச மாட்டோம் " என்று தான் சொன்னாரே தவிர, வேறு ஒன்றும் பேசவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** அவர் அப்படிப் பேசவில்லையென்றால், அதை ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் புதிதாக விளக்கம் சொன்னார்கள். நான் பேசுகிற பேச்சைப் படித்தாலே தெரியும். நான் தவறாகச் சொல்லவில்லை. அவர் சொன்னதை நான் திருப்பிச் சொன்னேன். " நீங்கள் திட்டங்களைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். பல்பொடி வழங்கும் திட்டத்திலே தவறு இருந்தால் எந்தெந்த வகையிலே செய்யலாம் என்று சொல்லுங்கள், அந்த வகையிலே செய்துகொள்ளலாம். " வெறும் பல்பொடியை மட்டும் கொடுத்துவிட்டு இந்த அரசாங்கம் போகிறதா என்றால், இல்லை. ஒவ்வொரு மண்டையையும் மூன்று மடங்கு பெரிதாகக் காட்டுகிற அளவிற்கு சென்னையிலே பெரிய மிஷின் வைக்கப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையிலே இருப்பதைப் பார்க்கிறோம். அதைப் போலவே தஞ்சையிலே வாங்க வேண்டும் என்றும், மதுரையிலே வாங்கி வைக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். இப்படி புதிய கருவிகளை வாங்க இருக்கிறோம். அதனாலே இன்றைக்கு திட்டங்கள் வரவில்லையா அல்லது புதிய கருவிகளை ...ல்லையா ?



**திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, தவறாக அர்த்த மாகிவிடக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். ஒரு மண்டையை மூன்று மடங்கு பெரிதாக ஆக்குவது அல்ல அது. அது " " three dimensional " ஆகக் காட்டும். இருக்கிற அளவிலேதான் இருப்பதைப்போலவே அது காட்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மூன்று பரிமாணத்தைக் காட்டுவது அது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அடிக்கடி மண்டையை உருட்ட வேண்டாம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** எனவே அந்த வகையிலே பல்வேறு புதிய திட்டங்களைக் கொண்டுவந்து அதை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே இந்த அரசு மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டிருக்கிறது.

தொழில் துறையிலே நாம் இன்றைக்கு எந்த அளவிற்குப் பின்தங்கி விட்டோம் என்பதைப்பற்றி பல பேர் பேசினார்கள் என்றாலும் கூட, இதே மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் ஒன்றை மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்த நான்காண்டுக் காலத்திலே தொழில் வளர்ச்சி எந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம் கூட சொன்னார்கள். ஆந்திராவுக்குப் போய் தொழிலை ஆரம்பிக்க இருந்த ஒரு தொழிலதிபர், இன்றைக்கு தமிழ் நாட்டிலேயே ஆரம்பிக்கும் அளவிற்கு வசதிகள் இருக்கின்றன, நல்ல வாய்ப்பும் வசதியும் உண்டாக்கிக் கொடுக்கிறார்கள் என்று சொல்லி இங்கேயே ஆரம்பித்திருக்கிறார்கள் என்று சொல்லி பாராட்டிய நேரத்தில், உள்ளபடியே அந்த மாதிரியான பாராட்டுக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஏற்றுக்கொள்கிறோம். அதே மாதிரி தவறுகள் இருக்கும்போது தவறுகளைச் சுட்டிக்காட்டலாம்.

இன்றைக்கு தொழிலில் பின்தங்கிய ஆறு வட்டங்களைப் புதிதாக அறிவிப் போம் என்று சொல்லியிருக்கிறார்கள். முதலீடுகளை வெளிநாடுகளிலிருந்து பெறும் ஏற்பாடு நடைபெறப்போகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு ஆக்கபூர்வமான காரியங்களைச் சொல்லியிருக்கலாம். இது விஷயமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சார்ந்திருக்கிற தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு வட்டங்கள் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களாக இருக்கின்றன. அங்கே விவசாயத்தையே நம்பிக் கொண்டிருப்பதால், விவசாயம் இல்லா விட்டால், தஞ்சை மாவட்டமே இல்லை என்ற நிலை இருக்கிறது. ஒன்றிரண்டு வட்டங்களைத் தவிர, மற்ற வட்டங்கள் அத்தனையும் விவசாயத்தை நம்பி

வாழ வேண்டிய நிலையில் இருக்கின்றன. விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற தஞ்சை மாவட்டம் போன்ற பகுதிகளை தொழில் துறையிலே முன்னேற்றுவதற்கு வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வழிவகை காணுவார்கள் என்று நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

அதைப்போலவே பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. பட்டுப்புழு வளர்க்க கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகிறது. பட்டுப் புழு வளர்க்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு எவ்வளவு முனைப்பாக செயல்படுகிறது என்பதை பல்வேறு இடங்களில் பார்த்தால்தான் தெரியும். இந்தத் திட்டத்தைப் பற்றி கவனித்தீர்களா என்று நான் கேள்வியாகக் கேட்க மாட்டேன். அதற்காக இன்றைக்கு கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இது பட்டு நெசவாளர்களுக்கு எந்த அளவிற்கு வேலை வாய்ப்பைத் தரும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில், நெய்யப்படுகிற பட்டுத் துணி அத்தனைக்கும் அருகிலே இருக்கின்ற கர்நாடகாவிலிருந்து பட்டு வந்தால்தான் வாழ்வு என்ற நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி, தமிழகத்திலே பட்டை உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலையை உண்டாக்கி, தமிழகத்திலும் தரமான பட்டு வருகிறது என்ற நிலையை உண்டாக்கி, அந்தப் பட்டை நெய்வதற்குப் பயன்படுத்த முடியும் என்ற அளவிலே அதற்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. பல்வேறு மாவட்டங்களில், இராமநாதபுரம் போன்ற மாவட்டத்தில் உள்ள நிலம் எதற்கும் பயன்படாத நிலமாக இருந்தாலும், இந்தப் பட்டுப்புழு வளர்க்கின்ற வாய்ப்புகள் இருக்கும் என்பதை ஆராய்ச்சிகள் மூலமாகக் கண்டறிந்து இன்றைக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கான ஆக்கபூர்வமான யோசனைகள் சொல்லுவதன் மூலம் நிச்சயமாக இதை நல்ல முறையிலே பயன்படுத்தலாம்.

இன்றைக்கு நிலப் பதிவு புதிதாக சர்வே செய்யப்படுகிறது என்று குறிப்பிடப்படுகிறது. எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னாலே இந்தப் புதிய நிலை வந்திருக்கிறது. பல்வேறு இடங்களில் சர்வே நடக்கப் போகிறது. தமிழ் நாடு முழுவதும் வரவிருக்கிறது. அவரவர்களுடைய நிலம் எந்த இடத்திலே இருக்கிறது என்பதை ஆதாரபூர்வமாகத் தயாரிக்க கோடிக் கணக்கான ரூபாயை அளித்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் நேற்று பேசும்போது, முதலமைச்சரை வைத்துக்கொண்டே ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். ஜாயின்ட் செலக்ட் கமிட்டி எல்லாம் மிக அதிகமான அளவிற்குக் காலம் எடுத்துக்கொண்டு முடிவுகள் வாராமல் போகின்றன என்று சொன்னார்கள்.



திரு. இராமமூர்த்தி அவர்கள் ஏதாவது சொல்லுவார்கள் என்று பார்த்தேன். ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விரைவாக முடிக்க வழிவகை காணுகிறேன் என்று சொல்லிவிட்டார். மாண்புமிகு உறுப்பினரும் செலக்ட் கமிட்டியிலே இருக்கிறார் என்று நினைக்கிறேன். அவரும் இருக்கிறார், நானும் இருக்கிறேன் ஒன்றிரண்டு செலக்ட் கமிட்டிகளிலே. செலக்ட் கமிட்டியில் தாமதம் என்று சொல்லுவதை விட, செலக்ட் கமிட்டி போடுவதால் பல்வேறு விவரங்களைத் தெரிந்துகொள்ள நமக்கு வாய்ப்பு வருகிறது. செலக்ட் கமிட்டியிலே உறுப்பினர்களாக இருக்கக் கூடிய நாம்தான் அதிகமான விவரங்களைச் சேகரித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக காலத்தை எடுத்துக்கொள்கிறோமே தவிர, அதிலே இருக்கக் கூடிய அமைச்சர் அவர்கள் யாரும் நீண்ட நாட்களுக்குத் தள்ளிக்கொண்டு போக வேண்டுமென்று சொன்னதில்லை. அடுத்த நாளே முடிக்க வேண்டும் என்றுதான் அமைச்சர்கள் விரும்புகிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அதிலே சட்டச் சிக்கல் இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் உடனடியாகக் குறிப்புரை வழங்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி சட்டரீதியாக சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகிய அவைகளிலே அமைக்கப்பட்டிருக்கின்ற செலக்ட் கமிட்டிகள் விரைவாக முடிக்க வேண்டுமென்று குறிப்புரை வழங்குவதற்கான அதிகாரம் இருக்கிறதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

THIRU A .R. DAMODARAN : Sir, what the Hon. the Chief Minister said was that he would request his Cabinet Colleagues who were Chairmen of Select Committees to expedite the proceedings of the Select Committees. The Chief Minister, by himself, cannot order any Select Committee to complete its work.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு குழுவைப் போட வேண்டுமென்று சொல்லும்போது அதன் நடவடிக்கைகளை விரைவாக முடிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள்தான் பல்வேறு விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று காலத்தை எடுத்துக்கொள்ளுகிறோம். நிச்சயமாக அமைச்சர்கள் வேகமாக முடிக்க வேண்டும் என்பதிலேதான் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். பல்வேறு திட்டங்களைத் தெரிந்துகொள்வதற்காக இந்தக் குழுக்களை அமைக்கிறோம்.

சென்னை மாநகரத்திற்கு மேம்பாலத் திட்டம் என்று பல்வேறு திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதை விமர்சனம் செய்கிறபோதுகூட, "சென்னை மாநகரத்திலே ஆதரவு இல்லை, ஆதரவு இல்லாததால்தான் சென்னை மாநகரத்தைப் புறக்கணிக்கிறார்கள், புறக்கணிக்கிற காரணமே தங்களுக்கு ஆதரவு வராது என்பதால்தான்" என்றெல்லாம் சொன்னார்கள். ஆதரவு இங்கே இருக்கிறதா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. ஆதரவு தேட வேண்டுமென்று சொன்னால், எத்தனையோ வழிவகைகள் இருக்கின்றன.

(பிற்பகல் 1.00)

நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். நான் சொல்ல வேண்டா மென்றுதான் கருதிக்கொண்டிருந்தேன். இங்கே பலபேர் பலவிதமாகப் பேசியிருக்கிறார்கள். பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு பல விமர்சனங்கள் வருகின்றன. இன்றைக்கு எதிர்க் கட்சியிலே இருக்கின்ற கலைஞர் அவர்கள் நெடும் பயணம் போகிறார் என்று சொன்னால், அதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்கிறார்கள். அவர்கள் அந்தக் கட்சியின் முடிவுப்படி செயல்படுகிறார்கள். அது வேறு விஷயம். அவர்கள் ஆதரவுக்காகப் போகிறார்கள். நீங்கள் ஆதரவுக்காகப் போகாதீர்கள் என்றும், உங்களுக்கு திருநெல்வேலியிலே, மதுரையிலே ஆதரிக்கப்போவது இல்லை என்றும் சொல்ல முடியாது. அதை உள்ளபடியே அரசியல் ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லாக் கட்சிகளும் தாங்கள் எடுக்கின்ற முடிவைப் பொறுத்து செயல்படுகின்றன. அந்தக் கட்சி எடுத்த முடிவின்படி அவர்கள் நெடும்பயணம் சென்றிருக்கிறார்கள். நான் இதில் ஒன்றைச் சொல்வேன். ஆரம்பத்திலேயே மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது யாராக இருந்தாலும், திருச்செந்தூர் வந்துதானாக வேண்டும் என்று சொன்னார்கள். தாங்கள் தார்மீக உணர்வுகளை மறந்துவிட்டு, பகுத்தறிவாளர்களாக மாறி தந்தை பெரியார் வழியைப் பின்பற்றிய நேரத்தில், பகுத்தறிவாளராக மாறுகின்ற நேரத்தில், தலைவர்கள் திருச்செந்தூர்க்கு வந்துதான் ஆகவேண்டுமென்று சொல்கிறார்கள் "கலைஞர் அவர்கள் இன்றைக்கு வைதீக எண்ணத்திலே போகின்றார்கள். இன்றைக்கு மாற்றிக்கொண்டு போகிறார்கள்" என்று சொல்கின்றார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட திருச்செந்தூர் போய் வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் [illegible] கமிஷன் [illegible] என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் பேசி முடிக்க வேண்டியதாக இருக்கிறது.

**திரு. எஸ். ஆர். இராதா :** இதை மட்டும் விவரமாகப் பேசிவிட்டு முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவாகள் ஒன்றைச் சொன்னார்கள. திருச்செந்தூர் போனதாகச் சொன்னார்கள். அவர்கள் போனது வைதீக காரணத்திற்காக என்று நினைக்கிறார்கள். திருச்செந்தூரை நான் மிகவும் சாதாரணமானதாக நினைக்கிறேன். பக்கத்திலே இருக்கின்ற ஒரு ஊர் போல நினைக்கிறேன். திருச்செந்தூரில் முருகனுக்கு ஏதோ ஒரு பெரிய சக்தி இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருந்தால், கொலை வழக்கிலே கண்டுபிடித்துச் சொல்லியிருக்கலாம். முருகனுக்கு சக்தி இல்லாத காரணத்தினாலேதான் நாட்டிலே இத்தனை குழப்பங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை விட்டுவிட்டு அந்த முருகன் பேசாமல் இருந்துகொண்டிருக்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** சக்தி இருப்பதனால்தான், முருகா, முருகா என்று இந்தச் சட்டமன்றம் தொடங்கிய நாளிலே இருந்து இந்தப் பேச்சு வந்து கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** அவரவர்கள் அவரவர்க்குச் சொல்லிக்கொள்ள வேண்டும். அவருக்கு நம்பிக்கை இருக்கலாம். அவர்கள் முருகனுக்கு சக்தி இருப்பதாக நினைக்கிறார்கள். எங்களைப் பொறுத்த வரையில், இந்தக் கொலை வழக்கிலே 'இல்லை' என்று சொல்கிறேன். முருகனுக்கு சக்தி இல்லாத காரணத்தினாலேதான், இன்றைக்கு நாட்டிலே இத்தனை குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நான் ஒரு பகுத்தறிவாளனாகச் சொல்கின்றேன். இன்றைக்கு நெடும் பயணம் ஆரம்பிக்கிறார் என்று சொல்கிறார்கள். 7-20-க்கு முன்னாலே, ராகு காலத்திற்கு முன்னாலே நெடும் பயணம் ஆரம்பிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் ஒரு பகுத்தறிவாளனாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எதைப்பற்றிப் பேசினாலும், உறுப்பினர் அவர்கள் சீக்கிரமாக முடித்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** துணைத் தலைவர் அவர்களே, உங்கள் நிலைமை எனக்குத் தெரிந்திருககிறது. ஆனால் நான் ஒரு பகுத்தறிவாளன் என்ற நிலையிலே என் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அந்த நிலையிலே

பிருந்தாலும் நான் பொறுக்கக்கூடாது என்ற அளவில் சொல்கிறேன். இன்றைக்கு வெளியுலகத்திலே தலைவர்களை எந்த வகையிலே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். 7.20க்கு புறப்படுகிறார் என்றால், 7.20க்கு ராகு காலத்திற்கு பயந்துகொண்டு முன்னாலேயே 7.20க்கே புறப்படுகிறார்கள் என்று சொல்கின்றார்கள். இன்னொரு பத்திரிகையிலே இப்படி தவறான செய்திகளைப் போடுகிறார்கள். ஒரு பத்திரிகையிலே ஒருவிதமாகப் போடுகிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மணி அடிக்கிறார்கள். மற்றவற்றை நான் பேசவேண்டிய நேரத்திலே பேசிக்கொள்கிறேன். எனக்கு இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்ததற்கு என் நன்றியைக் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : இப்போதே மணி 1.05 ஆகிவிட்டது. இதற்கு மேலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுவது என்றால், மணி 2 ஆகிவிடும். அப்படி தொடர்ந்து வைப்பதாக இருந்தால், பிற்பகல் வைத்துக்கொள்ளலாம். இல்லையென்றால், அடுத்த நாளைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையில் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 10—3—1982 அன்று காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-03)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

112. Notifications issued with G.O. Ms. No. 2813, Labour and Employment, dated the 24th December 1981 bringing the Tamil Nadu Industrial Establishment (Conferment of Permanent Status to Workmen) Act, 1981 (Tamil Nadu Act 46 of 1981) into force from the first day of January 1982. (Land on the table of the House under section 10 (4) of the Tamil Nadu Industrial Establishments (Conferment of Permanent Status to Workmen) Act, 1981 (Tamil Nadu Act 46 of 1981) ).



113. Notifications issued with G.O. Ms. No. 2838, Labour and Employment, dated the 29th December 1981 bringing the Tamil Nadu Payment of Subsistence Allowence Act, 1981 (Tamil Nadu Act 43 of 1981) into force from the first day of January 1982. [Laid on the table of the House under section 13 (2) of the Tamil Nadu Payment of Subsistance Allowance Act, 1981 (Tamil Nadu Act 43 of 1981)].

B. *Reports, Notifications and Other Papers.*

Nil.

இணைப்பு I.

[126 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் 24 இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றங்கள் நடுவர்கள் இல்லாமல் இருந்தன. அந்த இடங்களை நிரப்புவதற்காக உயர்நீதி மன்றம் அதற்குரிய விண்ணப்பங்களைப் பெற்று, நேர்முகத் தேர்வு நடத்தி, 52 நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை தமிழ்நாடு நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பணி விதி 13-ன் கீழ் தற்காலிகமாக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டாக நியமனம் செய்வதற்கு ஒப்புதல் வழங்கும்படி 9—4—1981 அன்று அரசைக் கேட்டது.

2. உயர்நீதிமன்றம் அனுப்பிய செயற்குறிப்பை அரசு பரிசீலித்ததில் 35 நபர்கள் மட்டுமே முழுத்தகுதி பெற்றிருந்தனர் என்பது தெரிய வந்தது. எனவே முழுத்தகுதி பெற்றிராத 17 நபர்களுக்கும் ஒப்புதல் வழங்காது, முழுத் தகுதி பெற்றுள்ள எஞ்சிய 35 நபர்களை மட்டும் தற்காலிக இரண்டாம் வகுப்பு குற்றவியல் மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்க 24—4—1981 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் : 918—ல், அரசு ஒப்புதல் அளித்தது. உயர்நீதிமன்றம் எஞ்சியுள்ள 17 நபர்களுக்கும் தற்காலிக நியமனம் செய்வதற்கு ஒப்புதல் வழங்கும்படி அரசை வற்புறுத்தியது. அரசு கடைசியாக 23.1.82 நாளிட்ட கடிதத்தில், 5 ஆண்டுகள் உதவியாளராக பணி அனுபவம் பெற்றிராத 17 நபர்களையும் நியமனம் செய்வதற்கு இயலாது என்றும், ஏற்கெனவே 31 இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றங்கள் நடுவர்கள் இல்லாமல் உள்ளதால், இனியும் காலந்தாழ்த்தாது, அரசால் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட 35 நபர்களிலிருந்து உடனடியாக நியமனங்கள் வழங்கும்படி உயர்நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டது. அதன்மீது 1.2.82 நாளிட்ட தனது கடிதத்தில் உயர்நீதி

மன்றம், மேற்சொன்ன 35 நபர்களுக்கும் நியமனங்கள் வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்தது. அதன்படியே தற்போது நடுவர்கள் இல்லாமல் உள்ள அனைத்து இரண்டாம் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்களுக்கும், உயர்நீதிமன்றம் நியமனங்களைச் செய்துள்ளது. விரைவில் தற்போது காலியாக உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் நடுவர்கள் பதவியேற்று பணியாற்றுவர்.

## இணைப்பு II

[130 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீர், கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்தும் தண்டையார்பேட்டையிலுள்ள அண்ணா பூங்கா அருகிலுள்ள நீர் ஏற்றும் நிலையத்திலிருந்தும் மற்றும் தியாகராயர் நகரில் வள்ளுவர் கோட்டத்திற்கு அருகாமையிலுள்ள குடிநீர் ஏற்றும் நிலையத்திலிருந்தும் கூட்டுமொத்தமாக குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இம்மூன்று இடங்களிலும் குளோரின் வாயுவுடைய சிலிண்டர்களிலிருந்து குளோரின் வாயுவினைக் கட்டுப்படுத்தி தேவைக்கேற்ப குடிநீரில் கலந்து குளோரின் வாயுவின் அளவு 1 மில்லியன் பகுதிக்கு 1 முதல் 1,5 பகுதி என்கிற அளவில் பரிசோதிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது மற்றும் நகரில் பரவலாக 24 இடங்களில் ஆங்காங்கே பிளீச்சிங் பவுடரினை நீரில் கலந்து அந்த இடங்களில் குடிநீரில் செலுத்தப்படுகிறது. மற்றும் பெசண்ட் நகர், செம்பியம் போன்ற இடங்களில் உள்ள சிறு கிணறுகளிலிருந்து பெறப்படும் நீரிலும் குளோரின் செலுத்தப்படுகிறது. ஆதலால் பொதுவாகக் குடிநீர் விநியோகிக்கும் குழாய்களில் பரவலாக குளோரின் மேற்கூறிய எல்லா இடங்களிலும் செலுத்தப்படுகிறது.

நகருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் குளோரின் அளவு சரியாக உள்ளதா என்பதனையும், நுண் கிருமிகள் இருக்கின்றனவா என்பதனையும் பரிசோதிக்க நகரில் குடிநீர் வழங்கும் பகுதிகளை 12 உட்பகுதிகளாகப் பிரித்து ஒரு நாளைக்கு ஒரு பகுதி என்கிற முறையில் தினமும் ஒவ்வொரு பகுதியாக பரிசோதிக்கப்படுகிறது. இம் முறையில் தினமும் 25 முதல் 30 இடங்களில் பரிசோதனை செய்யப்படுகிறது. அவ்வாறு பரிசோதிக்கும்போது குடிநீரின் தன்மை பாதிக்கப்பட்டிருக்கிற இடங்களில் உடனே குடிநீர் விநியோகிக்கும் மேற்பார்வை செய்யும் பொறியாளர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டு அதற்காக அவர்கள் நிவாரண பணிகளை செய்யுமாறு கோரப்படுகிறது. அந்த இடங்களை மறுபடியும் பரிசோதித்து குடிநீரின் தரம் சரியாக இருக்கிறதா என்பதனை சரி பார்க்கப்படுகிறது.



இவ்வாறு சென்னை நகருக்கு வழங்கும் குடிநீரில், குடிநீரினைக் கூட்டு மொத்தமாக விநியோகிக்கும் 3 முக்கிய இடங்களிலும் மற்றும் 24 இடங்களிலும் குளோரின் செலுத்தப்பட்டு தினமும் நகரில் 25 முதல் 30 இடங்களில் குடிநீரில் குளோரின் அளவு சரியாக இருக்கிறதா என்பதனை பரிசோதித்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின், கிங் நிலையத்தின் தலைமை நீர் பரிசோதகர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை 50 முதல் 60 இடங்களில் நீரினை சோதனை செய்கிறார். இச்சோதனையின் மேல் நீரின் தரம் குறைந்து இருக்கக்கூடிய இடங்களில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கும் அதிகாரிகள் உடனேயே கவனித்து குளோரினை அதிகமாக்கி நீரின் தரத்தினைப் பாதுகாக்கிறார்கள்.

1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை நகருக்கு பூண்டி மற்றும் இதர நீர்த்தேக்கங்களில் போதிய நீர் இல்லாமையால் குறைந்த அளவு நீர் வழங்கப்பட்டது. அப்போது 55 இடங்களில் நீர்ப் பரிசோதனை செய்யப்பட்டதில் 20 இடங்களில் நுண் கிருமிகள் இருக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டு அதற்குரிய நிவாரணங்கள் உடனடியாக செய்யப்பட்டன. அண்மையில் பெய்துள்ள மழையின் காரணமாக தற்போது பூண்டி மற்றும் இதர நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு கணிசமானதாக உயர்ந்து நிற்கிறது. இதனால் விநியோகிக்கப்படும் நீரின் அளவும் அதன் அழுத்தமும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவை கூடுமான அளவு குடிநீரில் அசுத்த நீர் கலப்பதைத் தடுக்கும். தற்போது சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தின் தரக் கட்டுப்பாடு அமைப்பு சோதனை செய்து வரும் நீரின் தரம் திருப்திகரமானதாகவே அமைந்துள்ளது மற்றும் கிங் நிலையத்தின் தலைமை நீர் பரிசோதகர் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 13 இடங்களில் குழாய்களில் இருந்து குடிநீரை பரிசோதனை செய்தபோது அவையெல்லாமே குடிப்பதற்குத் தகுதியான தரத்துடன் அமைந்திருந்தன.

1982 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் அடையாறு ஆற்றங்கரையில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் 371 மக்களின் உடல் நிலையை சோதித்தபொழுது அவர்களில் பலரில் வயிற்றுப்போக்கு, இரத்தமின்மை முதலிய நோய்களை உண்டாக்கக் கூடிய நுண் உயிரினங்கள் அவர்களின் உடலில் வாழ்வதாகக் கண்டுபிடிக்கப்பட்டதென்று கூறப்பட்டுள்ளது. குழாய் நீர் மழைக்காலங்களில் கழிவு நீருடன் கலப்பதால் இந்தநோய்கள் பரவலாம் என்று கூறப்பட்டுள்ளது. சென்னை நகரில் சில இடங்களில் போதுமான அழுத்தம் இல்லாததால் தெருக்குழாய்கள்

பள்ளங்களில் வைக்கப்பட்டுள்ளது உண்மையே. ஆனால் இவ்வாரியம் அவற்றை சாலை மட்டத்தை விட உயரமாக மாற்றி அமைத்துக் கை பம்புகளைப் பொருத்தி வருகிறது. இதுவரை சுமார் 1,038 அடிமட்ட குழாய்களில் 537 குழாய்கள் உயர்த்தப்பட்டன. மீதியுள்ள இடங்களில் இப்பணி தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

மேலும் பத்திரிக்கைச் செய்தியில் பரிசீலனை செய்யப்பட்ட மக்கள் மற்ற மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து குடியேறியதாகக் கூறப்பட்டுள்ளது. இரத்தமின்மை முதலிய நோய்களை உண்டாக்கும் நுண் உயிர் இனங்கள் பொதுவாக பல மாதங்களாக உடலில் வாழ்ந்து பின்னரே இம்மாதிரி நோய்கள் விளையும். ஆகவே, சென்னை நகருக்கு வரும் முன்பே கூட இந்த நோய்களால் பாதிக்கப்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது என்றும் கூற வேண்டியுள்ளது.

மேலே விரிவாகக் கூறியபடி சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீர் சுத்தம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது ; இதன் தரம் குறையாத வண்ணம் குளோரின் கலவை மூலம் பகுதாக்கப்படுகிறது ; எங்காவது ஓரிரு இடங்களில் குடிநீரின் தரம் குறைந்தால் அதற்கு வேண்டிய மாற்று நடவடிக்கைகள் உடனே எடுக்கப்படுகின்றன. ஆகவே சென்னை நகர் மக்கள் குடிநீரைப் பற்றி அச்சம் அடையக் காரணம் ஏதுமில்லை.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**புதன்கிழமை, 1982 மார்ச் 10.**

**(மாசி 26, துன்மதி—2013, திருவள்ளுவராண்டு)**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. அரசின் தீர்மானம்.

### கேள்வி நேரம் கைவிடப்படல் குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

“ மேலவை விதி 22 நிறுத்தி வைக்கப்பட்டு, இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம் ” என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

“ மேலவை விதி 22 நிறுத்தி வைக்கப்பட்டு, இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம் ”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 2. தகவல் கோரல்.

### உரிமைப் பிரச்சினை குறித்து.

**திரு க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு முன் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அதை அவையிலே எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அது மாண்புமிகு தலைவரவர்களிடத்தில் இருக்கிறது. அதை அடுத்து வருகிறபோது எடுத்துக் கொள்ளலாம்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**மீனம்பாக்கம் விமான நிலையத்தில் திரு. சிவாஜி கணேசன், எம்.பி., அவர்களை வரவேற்க வந்திருந்த கூட்டத்தைத் தாக்கியது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள், நேற்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் திரு. சிவாஜி கணேசன், எம்.பி. அவர்களை வரவேற்க வந்திருந்த கூட்டத்தைத் தாக்கியது குறித்தும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் தாக்கப்பட்டது குறித்தும், அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டது குறித்தும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இது அன்றாட சட்ட ஒழுங்கு நிர்வாகத்திற்குள் வருகிறபடியால், இதற்கு இசைவு தர மறுக்கிறேன்.

### 4. அரை மணி நேர விவாதம்.

**துரிதப் போக்குவரத்துச் செயல் திட்டம் குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடுத்து, துரிதப் போக்குவரத்துச் செயல்திட்டம் குறித்து ½ மணி நேர விவாதம். விவாதம் ஆரம்பித்து ½ மணி ஆனவுடன் விவாதம் முடிவுறும். இப்போது மணி 9.32.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே, துரிதப் போக்குவரத்துச் செயல் திட்டம் குறித்து சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். சென்னை நகரில் நாளும் பெருகி வருகிற போக்குவரத்து நெரிசல் அடிப்படையிலே இப்படி ஒரு திட்டம் தேவைப்படுகிறது. அது சென்னை திருவல்லிக்கேணியிலிருந்து லஸ் வரை இப்போது நிறைவேற்றப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் நிலையில் உள்ளோம். ஆனால் முழுத் திட்டமான திருவான்மியூரிலிருந்து திருவொற்றியூர்வரை நீண்டு போனால்தான் சென்னை நகர மக்கள் எதிர்காலப் போக்குவரத்து நெரிசலிலிருந்து மீள முடியும். மேலும் சைதாப்பேட்டையிலிருந்து தலைமைச் செயலகம் வரை ஒரு பாதாள வழிப் பாதை அமைப்பதும் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க உதவும். 4 பேருந்துகளில் மக்கள் செல்வதும், ஒரு ரயில் பெட்டியில் மக்கள் செல்வதும் ஒரே அளவாக இருப்பதால், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க இந்தத் திட்டத்தை வலியுறுத்த வேண்டும். கல்கத்தாவில் சப்-வே மாஸ் ரேபிட் டிரான்சிட் என்று உருவாக்கியுள்ளதுபோல, இங்கேயும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை விரைவிலே மேற்கொள்ள வேண்டும். முன்பு சென்னை—தாம்பரம் மின்சார ரயில் போட 14 லட்சம் செலவாகியிருக்கிறது. இப்போது அதே தூரமுள்ள இந்தத் திட்டத்திற்கு 155 கோடி ரூபாய் என்ற மதிப்பீட்டைப் பார்க்கும்போது, விரைவில் இதை நிறைவேற்றவில்லை என்றால், மேலும் பெரும் செலவாகும் என்பதால், மத்திய அரசிடம் இதை வற்புறுத்த வேண்டும். புதிய பேருந்து வழித்தடங்களை சென்னையில் ஏற்படுத்த இயலாத நிலையில் இந்தத் திட்டத்தை அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.



* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மத்திய ரயில்வே நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், அது தொடர்பான பல்வேறு திட்டங்களை, நிதி ஒதுக்கீடுகளைப் பார்க்கின்றபோது, தமிழகத்திற்குப் பொதுவாகவே ஏமாற்றம் தருகின்ற வகையிலே இருக்கிறது என்ற உணர்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. உண்மையிலேயே சொல்லப் போனால், ரயில்வே நிதிநிலை அறிக்கை பாராளுமன்றத்தில் தாப்பட்ட உடனே, தமிழகத்தினுடைய அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகுந்த ஏமாற்றத்தோடு, தமிழகத்திற்குச் சரியான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்ற உணர்வைத் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாகக் கூட்டத்தை தனியாகக் கூட்டி, அந்தக் கூட்டத்திலேயே இந்த உணர்வுகளை வெளிப்படுத்தி, இது குறித்து பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களிடம் தங்களுடைய வேதனையைத் தெரிவித்து, பிரதமரே இதில் தலையிட்டு தக்க பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப் போலவே திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய உணர்வுகளை தமிழகத்தின் சார்பிலே கொஞ்சமும் குறைவில்லாமல் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த உணர்வுகளை மதித்து, நமக்கு ஓரளவிற்கு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு பெற்றுத் தருகின்ற வகையிலே அமைவதற்குத் துணை செய்யும் வகையிலே, தமிழகத்தின் கருத்தை எதிரொலிக்கும் வகையிலே இந்த விவாதம் இடம் தருமென்று நம்புகிறேன்.

பொதுவாக இந்தியா முழுமையிலும் அகல ரயில் பாதை இருந்து கொண்டிருக்கும் நிலையிலே, தமிழகத்திலேதான் மீட்டர் காஜ் (Meter guage) இருந்துகொண்டிருக்கிறது. விரைவிலே தமிழகத்திலே பிராட் காஜ் வரவில்லை என்றால், நம் முன்னேற்றம் தடைபடும். இப்போதே தமிழகம் தொழில் துறையிலே, வியாபாரத் துறையிலே பின்தங்கியிருக்கிறது, ஓரளவிற்கு இருக்க வேண்டிய முன்னேற்றம் தடைப்பட்டிருக்கிறதென்றால், பிராட் காஜ் இல்லாததுதான் அதற்குக் காரணம். இந்த நிலையில், தமிழகத்தில் புதிய பிராட் காஜ் ரயில் பாதைகள் அமைப்பதற்கான திட்டங்கள் ரயில்வே நிதி நிலை அறிக்கையில் இல்லை. ஏற்கெனவே எடுத்துக்கொண்ட கரூர்—திண்டுக்கல் அகலப் பாதை திட்டத்திற்கு 90 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய ரயில் பாதை அமைப்புக்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு உள்ள நிதிநிலை அறிக்கையிலே இது ஒரு மூலையிலேதான் அமைந்திருக்கிறது. இந்த நிலையில் அந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்த முடியாதென்ற கருத்து ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அதைப்போலத்தான் அரக்கோணம் வரையிலான மின்சார ரயில் பாதைத் திட்டமும் வேகப்படுத்தப்படவில்லை. விழுப்புரம்—சென்னை மின்சார ரயில்பாதை பிராட் காஜ் பாதையாக மாற்றப்படவில்லை. ஆண்டுக்காண்டு சில திட்டங்களை எடுத்துக்கொண்டாலொழிய, இவற்றைச் செய்ய முடியாது. தமிழகத்திலே ரயில்வேயைப் பொறுத்தவரையில், பின் தங்கியிருக்கிறோம். நாம் பல்வேறு சங்கடங்களை பிராட் கேஜ் ரயில் பாதை இல்லாததன் காரணமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், சென்னையில் தனியான பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. சென்னை நகர அமைப்பின் காரணமாக டிராம்களை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டோம். பஸ்களைப் பொறுத்தவரையில், நமக்குப் பெருமை. இந்தியாவிலேயே நம்முடைய பேருந்துகளை நடத்தும் முறை, மற்றவற்றில் முன்னேறியிருக்கிறோம் என்ற நிலை இருக்கிறது. இன்றைக்குப் பேருந்துகளால்கூட ஜன நெரிசலைத் தவிர்க்க முடியாது. ரோட் கெப்பாசிட்டி (Road Capacity) குறைந்து போய்விட்டது. ஒரு பஸ் ஓரிடத்தில் நிற்கிறதென்றால், 10, 15 பஸ்கள் தொடர்ச்சியாக நிற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இந்த நிலையில், வேறு வகையான போக்குவரத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். ரேபிட் டிரான்சிட் சிஸ்டம் (Rapid Transit System) என்ற திட்டத்தைத் தீட்டி, அதற்கு 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சொன்னது, இன்றைக்கு அதிக அளவிற்குப் போகிறது என்று போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களும், தொழிலாளர் நல அமைச்சரவர்களும் சொன்னார்கள். அங்கீகரிக்கப்பட்ட திட்டம், Planning Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் வேகப்படுத்தப்படவில்லை.





உடனடியாக எடுத்துக்கொள்ள வாய்ப்புகள் இல்லை என்ற வேதனை உணர்வைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நேற்றுகூட மாநிலங்கள் அவையிலே இந்த உணர்வுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் நம்முடைய மாநில அரசு முழுமையாக எடுத்து வைத்து, இந்த மாநில உணர்வுகளை, கட்சிகளைக் கடந்து நின்று, தெரிவிக்கும் உணர்வுகளை முழுமையாக தங்களுக்கு வலுவூட்டும் ஒன்றாக எடுத்துக்கொண்டு, மத்திய அரசிடம், பாரதப் பிரதமரவர்களிடம் தனியாகத் தெரிவித்து, நமக்கு என்று சில சலுகைகளைப் பெற்றாக வேண்டும். ரயில்வே நிதிநிலை அறிக்கை முழுமை பெறுவதற்குள்ளாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். உடனடியாக நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டம் நடைபெற இருக்கிறது என்பதால், நம்முடைய முதலமைச்சரவர்களும், நிதி அமைச்சரவர்களும் நிச்சயமாக அதில் கலந்துகொள்ளுவார்கள் என்ற நிலை இருப்பதால், அதிலே வலியுறுத்தி, தக்க முறையிலே வேண்டியவர்களிடத்திலே சொல்லி, ரயில்வே நிதி நிலை அறிக்கையில் தமிழகத்திற்கு உரிய பங்கைக் கேட்க வேண்டும்.

(முற்பகல் 9-40)

இதைச் செய்யவில்லையென்றால், தமிழகத்தின் உணர்வுகளுக்குக் குந்தகம் ஏற்படும், பாதகம் ஏற்படும். அதோடு மட்டுமல்லாமல் தேசிய உணர்வை வேகமாகச் செயல்படுத்துகின்ற நிலை தவறிப் போய்விடும் என்று சொல்லி அமர்கிறேன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, துரிதப் போக்குவரத்துச் செயல் திட்டத்தின் அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் கூறிய கருத்துக்கள் அத்தனையையும் நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். மத்தியிலே ஆளும் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அவர்கள் இப்படி மாநிலத்தினுடைய நலன்களைப்பற்றி அக்கறையோடு பேசியது குறித்து நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே இந்தியாவினுடைய 3 முக்கிய தலை நகரங்களில் சென்னையும் ஒரு முக்கிய மாநிலத் தலைநகராக இருந்து வந்தது. இப்போதும் இந்தியாவிலுள்ள 3 முக்கியமான மாநிலத் தலை நகர்களில் சென்னையும் ஒன்றாக இருந்து வருகிறது. ஆனால் நமக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடமெல்லாம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சென்னை நகருக்கு அவர்கள் வளர்ச்சிக்காகக் காட்டிய பெருமளவு ஆர்வம் இப்போது எந்த அளவுக்குக் காட்டப்படுகிறது என்பது ஒரு கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. ஆகவே சென்னை நகரின் வளர்ச்சிக்கு குறிப்பாக துரித

போக்குவரத்துச் செயல் திட்டம் குறித்து மத்திய அரசு முன்னுரிமை கொடுத்து இந்த ரெயில்வே நிதி நிலை அறிக்கையிலேயே இதை மிகவும் முக்கியமான அம்சமாகச் சேர்த்து, ஒரு நல்ல அறிவிப்பைத் தர வேண்டும். இது இந்த மாநில மக்களின் ஒட்டுமொத்தமான உணர்வாக இருக்கிறது. இது போன்ற மாநில நலன்கள் குறித்து நடவடிக்கை எடுக்கும்போது, மேலவையிலே நான் இதற்கு முன்பே சுட்டிக்காட்டியதுபோல், தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளைக் களைந்து இந்த மாநிலத்தின் பொதுவான நலன்கள் குறித்து ஒருங்கிணைந்த முறையில் செயல்பட வேண்டும். அவர்களை ஒருங்கிணைத்துச் செயல்படும்படி செய்வதற்கான முயற்சிகளை இந்த மாநில அரசு செய்ய வேண்டும். கட்சிக் கருத்து வேறுபாடுகள் என்பது வேறு, மாநிலத்தின் நலன் என்பது வேறு. இம்மாநிலத்தின் மக்களுடைய ஒட்டுமொத்தமான தன்மை என்று ஒன்று வரும்போது, கட்சி வேறுபாடுகளைத் தூக்கி எறிந்து, விசியெறிந்து ஒருங்கிணைந்து அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டும். வேறுபல மாநிலங்களிலே இப்படிப்பட்ட மக்களின் நன்மை கருதி வரும் எந்தத் திட்டங்களானாலும், கட்சி வேறுபாடுகளைத் தூக்கி எறிந்துவிட்டு, மத்திய சர்க்காரை வற்புறுத்தி, மாநில மக்களின் நலனுக்காக தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து பத்திரிகைகளில் கூட செய்தி வந்திருக்கிறது. அம்மாதிரி நம்முடைய மாநிலத்திலுள்ள அனைவரும் கட்சி பேதங்களை மறந்து, இந்த விஷயத்தில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் இந்த மேலவையின் மூலம் விடுக்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இப்படிச் செய்வது அவசியம் என்றாலும் கூட, மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் கூட டெல்லிக்குச் செல்கிறபோது சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும், பிரதமரையும் சந்தித்து மாநில அரசின் கோரிக்கைகளை வலியுறுத்தி இம்மாநில மக்களின் நலனுக்காக இதைப் பெற வேண்டும். இந்தத் திட்டத்தை மத்திய அரசு நடப்பு ஆண்டிலேயே செயல்படுத்த உரிய ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும். அதற்குரிய வழிவகைகளையும், பணிகளையும் ஆரம்பிக்க வேண்டும். அதற்கேற்ற முறையில் இந்த மாநில அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப போக்குவரத்திலே ஏற்பட்டிருக்கிற நெரிசல் போன்றவைகளைக் கருத்தில் கொண்டு தொடக்கக் காலத்திலேயே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே





அதற்கான வசதிகள் செய்யப்பட்டன. ஆனால் அதற்குப் பின்னால் அவ்வப்போது போதுமான அளவிற்கு கவனம் செலுத்தி இது விரிவாக்கப்படவில்லை. இதனால் இன்றைக்கு இது மிக மிக தொல்லையைத் தந்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தினை நாம் ஆய்ந்து முடிவு எடுத்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தி, லெட்சுமிகாந்தன், டாக்டர் சனார்த்தனம் ஆகியோர் நல்ல பல கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் பேசியவற்றை நான் அப்படியே வழிமொழிகிறேன். மத்திய அரசு ரெயில்வே பட்ஜெட்டைச் செயல்படுத்துவதற்கு முன்னால் நாம் துரித நடவடிக்கை எடுத்து நம் அரசு சார்பிலே அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து இது குறித்து இந்த மாநிலத்தின் எண்ணம் என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும். ஆசிரியர் சார்பிலேயும் அதே எண்ணத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து இங்கேயிருந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் சேர்ந்து எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அதற்குப் பிறகு ஒரு குழு அமைத்து அந்தக் குழுவை அழைத்துக் கொண்டு டெல்லிக்குச் செல்ல வேண்டும். அங்கு சென்று பாரதப் பிரதமர் அவர்களையும் அங்கேயிருக்கிற ரெயில்வே அமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பேச வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், டெல்லிக்குச் செல்கின்றபோது, அங்கு இருக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துக் கொண்டு போய், அவர்களின் ஒத்துழைப்போடு, மிகத் தீவிரமாக இதில் நடவடிக்கை எடுத்துக்கொண்டால், நிச்சயம் நமக்குச் சாதகமான பதிலை மத்திய அரசு தரும். அந்த வகையில் இது குறித்துப் பேசி, தீர்மானம் போட்டு அத்தோடு நிறுத்திவிடாமல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் மிகத் தீவிரமாக இதுகுறித்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலையும் பெற்று அவர்கள் அனைவரையும் அழைத்துப் பேசி அங்கு இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலையும் பெற்று, இதுகுறித்து துரித நடவடிக்கையை மேற்கொண்டு மத்திய அரசை வலியுறுத்தி இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் துரிதப் போக்குவரத்துச் செயல் திட்டம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். சென்னையில் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றது. சென்னை மாநகரில் ஏறத்தாழ 30 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அப்படி

இருந்தாலும் போய் வருகின்ற மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால், புளோட்டிங் பாப்புலேசன் என்கிற அடிப்படையில், 60 லட்சம் மக்கள் போய் வருகின்ற சென்னை மாநகராக இது இருக்கிறது என்று ஆய்வாளர்கள் கணக்கினைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாக ஒன்றைச் சொல்கிறேன். இந்த அரசு எடுக்கின்ற எல்லாக் காரியங்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் எதிரானது என்கிற ஒரு எண்ணத்தைச் சொல்கிறார்கள். ஆனால் இந்தப் போக்குவரத்து நெரிசல் காரணமாக ஏற்படுகின்ற நெருக்கடி குறித்து ஒன்று சொல்கிறேன். சென்னையிலிருந்து லஸ் கார்னர் வரை ஏற்படுத்த இருக்கின்ற ரெயில் போக்குவரத்தைப் பொறுத்தவரையில், சர்க்காருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழர் பிரச்சினையானாலும் மற்றும் மத்திய சர்க்காரிடமிருந்து மாநில மக்களின் நலனுக்காக வலியுறுத்துகிற எந்தத் திட்டங்களானாலும் சரி, முன்னணியில் நிற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இந்த அவையில் மத்திய சர்க்காரை வலியுறுத்தும் இந்த துரித போக்குவரத்துச் செயல் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், இத்திட்டம் சென்னை நகரத்திற்கு அவசியம் வந்தாக வேண்டுமென்ற எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் கொண்டுவரப்பட்டிருக்கும் இத்தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கும் என்று தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, துரிதப் போக்குவரத்துச் செயல் திட்டம் குறித்து எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மிகவும் அக்கறையாக இருக்கின்றார்கள். மாநில அரசும் இந்த விஷயத்தில் எவ்வளவு தீவிரமாக இருக்கிறது, எவ்வளவு தீவிரமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக் காட்டுகிறேன். ஆனால் குறித்த நேரத்திற்குள்ளாக அதைக் குறிப்பிடுகிறேன். படிப்படியாக இதுகுறித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஒரு கேட்டலாக் என்கிற முறையில் நான் இங்கே காண்பித்து விட்டால், மாநில அரசு இந்த விஷயத்தில் எவ்வளவு அக்கறையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதையும், மத்திய அரசு இறுதியிலே இதுகுறித்து எவ்வளவு சாதகமாக வந்திருக்கிறது என்பதையும் உறுப்பினர்கள் அறிய வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில் வரிசைக்கிரமமாக என்னென்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.



கஸ்தூரிபாய் நகரிலிருந்து திருவொற்றியூர் வரை இதற்கான தூரம் 24.6 கிலோ மீட்டர். 154.71 கோடி ரூபாயில் முதலில் திட்டம் தயார் செய்யப் பட்டது. இதற்கு அனுமதி வழங்கும்படி மாநில அரசு மத்திய அரசுக்கு 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கடிதம் எழுதியது. பிப்ரவரி 1977-ல் முதல் கட்டமாக பீச்சிலிருந்து பாரதி சாலை வரை வேலையைத் தொடங்க அனுமதி கேட்டு கடிதம் எழுதியபோது 5.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு 23.84 கோடி ரூபாய் செலவிலான திட்டத்தைத் திட்டக் கமிஷனுக்கு மத்திய அரசு அனுப்பிவிட்டது. நவம்பர் 1977-ல் திட்டக் கமிஷன் துணைத் தலைவருக்கும், மே 1978-ல் பிரதமருக்கும் இதுபற்றி தமிழக முதல்வர் அவர்கள் கடிதமும் எழுதினார்கள். மீண்டும் அப்போது பிரதமராக இருந்தவருக்கு

(முற்பகல் 9-50)

அக்டோபர் மாதம் 1979-லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். ஆனால் டிசம்பர் 1979-லே 'இதில் முதலீடு செய்வது உசிதம் அல்ல' என்று பதில் கடிதம் வந்தது. கஸ்தூரிபாய் நகரில் இருந்து திருவொற்றியூர் வரையில் போக வேண்டும் என்பது, அது 3 ஃபேஸ், 3 கட்டமாகப் போக வேண்டும் என்பது 1979-லே வந்தது, அது சாத்தியமானதல்ல, லாபகரமாக இருக்காது என்று பின்னர் சொல்லிவிட்டார்கள்.

பின்னர் சென்னையிலிருந்து—செண்ட்ரல்—கும்மிடிப்பூண்டி—சென்னையிலிருந்து திருவள்ளூர் வரை மின்சார இரயில் போவதால், இந்தத் திட்டத்தை சென்னை பீச்சிலிருந்து கஸ்தூரிபாய் நகர் வரையில் 2 கட்டத்தில் நிறைவேற்றலாம் என்ற முடிவுக்கு வந்து, 12.4 கிலோமீட்டர் தூரத்தில், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் செய்யலாம் என்ற வகையிலே அடுத்த திட்டம் அனுப்பப்பட்டது. கஸ்தூரிபாய் நகர் முதல் திருவொற்றியூர் வரையில் என்று இருந்த அந்தத் திட்டத்தை குறைத்து, சென்னை பீச்சிலேயிருந்து கஸ்தூரிபாய் நகர் வரையில் போடலாம் என்ற அளவிலே திட்டம் அனுப்பப் பட்டது. இதுபற்றி ஆளுநர் ஆட்சியிலே, மார்ச் 1980-லே பிரதமர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மெட்ரோபாலிட்டன் டிரான்ஸ்போர்ட் ப்ராஜெக்ட், 1980-லே இந்தத் திட்டத்தை மாற்றி சென்னை பீச்சிலிருந்து கஸ்தூரிபாய்நகர் வரையில் போக்குவரத்திற்குத் திட்டமிட்டது. அந்த 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் சரியாக வராது என்று சொல்லி, ஏப்ரல் 1980-லே பீச்சிலேயிருந்து லஸ் வரைதான் போக முடியும், அதற்கு மேல் தேவையில்லை என்று முடிவெடுத்து, 8.45 கிலோ மீட்டர் தூரம் என்ற அளவிலே மதிப்பீட்டுச் செலவு 53.46 கோடி ரூபாய் என்று திட்டமிடப்பட்டது. இதில் 2.9 கிலோ மீட்டர் தரை. இந்தத் திட்டத்தைப் பற்றி எழுதும்போது எல்லாம் பாதாள இரயில் என்று வருகிறது. இது

ஆரம்பத்தில் இருந்து பாதாள இரயில் திட்டம் அல்ல. 2.9 கிலோ மீட்டர் தூரம் தலைப் பகுதியிலே சர்ஃபேஸ்சிலே செல்லும், 5.52 கிலோ மீட்டர் தூரம் உயரமாகச் செல்லும் அளவுக்குத்தான் இத் திட்டம் அனுப்பப்பட்டது. இதைப் பொறுத்தவரையில், மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், இரயில்வே அமைச்சர் அவர்களுக்கும், வீட்டு வசதி, ஓர்க்ஸ் அன்ட் ஹவுசிங் மினிஸ்டர், இரயில்வே போர்ட் தலைவர் ஆகியோர்களுக்கும் திருத்திய திட்டத்திற்கு அனுமதி கொடுக்கும்படி ஜூன் 1980-லே தமிழக முதலமைச்சர் அவர்கள் கடிதம் அனுப்பினார்கள். எத்தனை முறை தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். இதற்காக ரூ. 64 இலட்சம் மதிப்பு உள்ள 6.64 ஹெக்டேர் நிலத்தை தமிழக அரசு இனாமாக இரயில்வேக்குக் கொடுக்க முன்வந்துள்ளது. மேலும் தனியார் நிலத்தையும் ஆர்ஜிதம் செய்ய வேண்டும், 140 இலட்சம் ரூபாய் செலவாகும். அதையும் ஆர்ஜிதம் செய்து தருவதாக ஒத்திருக்கிறது மாநில அரசு. 10—12—1980-லே தொழிலாளர் நலத் துறை அமைச்சர், அதாவது நான் இரயில்வே அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். இந்தத் திட்டத்தை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும், அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறோம். 18—7—1981 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இரயில்வே அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார். 10—12—1980-லே நான் கடிதம் அனுப்பியிருக்கிறேன். 18—7—1981-லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை மத்தியத் திட்டக் குழுவிற்கு மத்திய இரயில்வே அமைச்சகம் பரிந்துரை செய்வதென்றும், இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளிக்க மத்தியத் திட்டக் குழுவை இரயில்வே அமைச்சகம் அணுகும் என்றும் இரயில்வே அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இப்போது இத்திட்டம் பற்றி மத்திய திட்டக் குழுவுடனும், மத்திய இரயில்வே அமைச்சகத்துடனும் கலந்து ஆராயப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்தக் கடிதங்கள் வந்த பிறகு, இதற்கு விரைவில் ஒப்புதல் அளித்து, தேவையான நிதியை நடப்பு நிதியாண்டிலேயே ஒதுக்கக் கோரி மத்தியத் திட்ட அமைச்சர் அவர்களுக்கு தமிழக முதல்வர் அவர்கள் 31—1—1982 அன்று நேர்முகக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். எனவே, மத்திய அரசைப் பொறுத்தவரையில், அவர்கள் இப்போது இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தும் அளவுக்கு வந்திருக்கிறார்கள். மாநில அரசைப் பொறுத்தவரையில், அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேர்முகக் கடிதம் எழுதி



யிருக்கிறார்கள். இறுதியாக கடிதம் எழுதிய தேதி 31—1—1982. இவைகளை வைத்துப் பார்க்கும்போது, இத் திட்டம் பீச்சிலிருந்து லஸ் வரையில் போகுமளவுக்கு—நான் ஏற்கெனவே சொன்னதைப்போல 2.9 கிலோ மீட்டர் தரை மட்டத்திலேயும், 5.52 கிலோ மீட்டர் மேல் மட்டத்திலேயும் போகும் அளவுக்கு இத் திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பு இருக்கிறது. மத்திய அரசும் இதற்கு வேண்டிய எல்லா உத்தரவுகளையும் கொடுத்து செயல்படுத்த ஒப்புதல் அளிக்கும் என்று நம்புகிறோம். மாநில அரசைப் பொறுத்தவரையில், எவ்வளவு நிலம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்களோ அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம், இன்னும் என்னென்ன வசதிகள் வேண்டும் என்றாலும், எந்த எந்த உதவிகளை மாநில அரசின் உதவியாக அவர்கள் கேட்டாலும், இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருதி அந்த உதவிகளைச் செய்வதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு.

### (1) சென்னைப் புதுக் கல்லூரியில் 9 மாணவர்கள் தற்காலிகமாக நீக்கப்பட்டது குறித்தும், அக் கல்லூரி மூடப்பட்டுள்ளது குறித்தும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "சென்னை புதுக் கல்லூரியில் 9 மாணவர்கள் தற்காலிகமாக நீக்கப்பட்டது குறித்தும், அது தொடர்பாக அக் கல்லூரி மூடப்பட்டுள்ளது குறித்தும், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மீது போலீஸ் கண்ணீர்புகை—தடியடி நடத்தியது குறித்தும்" மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ம. சங்கரலிங்கம், லெட்சுமிகாந்தன், மீனாட்சிசுந்தரம், ஆ. நல்லசிவன் ஆகியோர் கொண்டு வந்திருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவரவர்களே, சென்னைப் புதுக் கல்லூரியில் ஏற்பட்ட இந்தப் பிரச்சினை குறித்து, அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும் மிகவும் விரிவாக இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது இன்றைய தேதியிலே அந்தக் கல்லூரியி

---

@ 292-295 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

துடைய நிலைமை என்ன ? அந்தக் கல்லூரி மீண்டும் திறக்கப்பட்டுவிட்டதா ? அங்கே சுமுகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வெற்றி பெற்றுவிட்டதா? இந்த 9 மாணவர்களும் நேரடியாக சென்னைப் பல்கலைக் கழகத் தேர்விலே கலந்துகொள்ள அனுமதி வழங்குவது குறித்து சென்னைப் பல்கலைக் கழகம் ஆய்வு செய்யும் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 9 மாணவர்களும் தேர்வு எழுதுவதற்கான அனுமதியை சென்னைப் பல்கலைக் கழகம் தந்துவிட்டதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, காலையிலே எனக்குத் தரப்பட்ட தகவலின்படி 15ஆம் தேதி அந்தக் கல்லூரி திறக்க இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 9 மாணவர்கள் பாதிக்கப்படாமலிருப்பதற்கு, பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், இயன்றதைச் செய்யும் என்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்போது அந்த மாணவர்கள் அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய உதவியைப் பெற வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். அதற்குப் பிறகு என்னை அவர்கள் வந்து பார்க்கவில்லை. பல்கலைக் கழகம் அந்த உதவியைச் செய்யத் தயாராக இருக்கின்றது என்று சொன்னேன். இதிலே இருக்கும் கஷ்டம் என்னவென்றால் 4 மாணவர்கள் படிக்கிற படிப்பு 'சோஷியாலஜி'. அது அந்தக் கல்லூரியிலேதான் இருக்கிறது. வேறு கல்லூரிகளிலே இல்லை. அப்படியென்றால், அவர்களுக்குச் சிறப்பாக நாம் சில உதவிகளைச் செய்ய வேண்டியிருக்கும். அதற்கு பல்கலைக் கழகமும் அரசும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் ஒரு கல்லூரி முதல்வர் எடுத்த நடவடிக்கையை அரசு ரத்து செய்யக்கூடிய அதிகாரமோ அல்லது மைனாரிட்டி நிறுவனம் என்ற முறையிலே இருக்கும் நிலைமையில் அது எடுக்கும் நடவடிக்கையை மீறி அரசு செயல்படும் நிலையோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் விவர அறிக்கை மிகவும் விரிவாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அந்த மாணவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது என்பதிலே அக்கறை செலுத்தி, அவர்களுக்கு எப்படியாவது இந்தத் தேர்வினை எழுத உதவி செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி செலுத்துகிறேன். ஆனால் மைனாரிட்டி கல்லூரிகளிலே இருக்கக்கூடிய முதல்வர்கள் எடுக்கின்ற முடிவுகளில் நாட்டு நலன் கருதி,



மாணவர்கள் நலன் கருதிக் கூட அரசு தலையிட முடியாது என்று சொல்லக் கூடிய சூழ்நிலை இருந்தால் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தும் பொறுப்பிலே இருக்கும் அரசு இப்படிப்பட்ட நிலைமைகளிலே ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னால் அதற்குப் பின்னாலே எப்படி சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியும் ? இந்தப் போராட்டம் விரிவடைந்தால், நாட்டிலே என்ன நிலைமை ஏற்படும் என்பதைப் பார்த்து, அதை மாற்றக்கூடிய அதிகாரத்தைக் கொண்டுவர வேண்டும். அதற்குரிய நடவடிக்கையையும் நம்முடைய அமைச்சரவை எடுக்க வேண்டும். பொதுவாக மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது, அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படக் கூடாத அளவுக்கு, அவர்கள் தவறு செய்திருந்தாலும் கூட—'கடிதோச்சி மெல்ல எறிக' என்று வள்ளுவன் சொல்லியதைப்போல வாழ்க்கை பாதிக்கப் படாத வகையிலே இந்தத் தண்டனை இருக்கும் வகையிலே அறிவுரையை அந்தக் கல்லூரி முதல்வருக்கும், மாணவர்களுக்கும் வழங்குவதோடு, இந்தக் கருத்தின் அடிப்படையிலே அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய அதிகாரம், கல்லூரி முதல்வர்களுக்கு மட்டுமல்ல, உயர் நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும், தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. தேர்வைப் பொறுத்த வரையில்கூட, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் வாங்கியவர்களை மட்டும்தான் தேர்வு பெற்றவர்களாகச் சொல்ல முடியும் என்ற ஒரு முடிவை எடுப்பதானால்கூட, அதில் அரசு தலையிட முடியாது. 40 மார்க் குறைந்த பட்சம் வாங்க வேண்டுமென்று வைத்துவிட்டு. 35 மார்க் வாங்கியவர்களை 'பாஸ்' என்று போட்டிருந்தால், அப்படிப்பட்டவைகளைத்தான் நாங்கள் கேட்க முடியும். ஏன் 40 மார்க் என்று வைத்தீர்கள் என்றுகூட கேட்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதுதான் கல்வி நிறுவனங்களும் கல்வித் துறையிலுள்ள பள்ளிகளும் முறையாகச் செயல்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க நல்லதாக இருக்கும். இவ்வாறில்லாமல் எல்லாவற்றையும் அமைச்சரே பார்த்துக்கொள்வது என்ற நிலைமையை உருவாக்குவது நல்லதல்ல. கல்வித் துறையில் அப்படிப்பட்ட ஒரு உத்தரவைக்கூட போட்டுவிட முடியும். அப்படிச் செய்வோமானால், அனைத்துக் கல்லூரி முதல்வர்களும் பெரிய வணக்கத்தைப் போட்டுவிட்டு, அந்தப் பொறுப்பை என்னிடம் தந்துவிடுவார்கள். அப்படித் தந்தால், அவற்றை என்னால் சரியாக நிர்

வகிக்க முடியுமா என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரிந்த விஷயம். எனவே கல்லூரி முதல்வர்களையும், தலைமையாசிரியர்களையும் வைத்துத்தான் மாணவர்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கொண்டு வர முடியும், கொண்டுவர வேண்டும். அந்த வகையில் தான் இதுபோன்ற முறையில் அவர்களுக்கு அதிகாரத்தைத் தந்திருக்கிறோம். இப்போதே கல்லூரிகள் அளவில் அவற்றிற்கு " அடானமஸ் ரைட் " கொடுத்திருக்கிறோம். அதாவது பல்கலைக் கழகமேகூட தலையிட முடியாத அளவுக்கு அவர்களுக்கு உரிமைகளை வழங்குகிற சூழ்நிலையில் இருக்கிறோம். இப்படிப் பட்ட சூழ்நிலையில் அவர்களிடமிருக்கிற அதிகாரத்தை நாம் எடுத்துவிடுவது என்பது நல்லதல்ல. கல்லூரி முதல்வர்களுக்கு நாம் ஏற்கெனவே அறிவுரைகளை வழங்கியிருக்கிறோம். அதாவது உங்களுடைய நடவடிக்கைகளின் காரணமாக எந்தப் பிரச்சினையும் உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும், சட்டம் ஒழுங்கு கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் நீங்கள் எடுக்கிற நடவடிக்கைகளேகூட சற்று அனுதாபத்தோடு இருக்க வேண்டும் என்றும், கூடுமான வரை, மாணவர் தலைவரோடு கலந்து பேசி தக்க தீர்வுகளைக் காண வேண்டும் என்றும் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். சில கல்லூரிகளில் அப்படிப்பட்ட முறையில்தான் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்தக் கல்லூரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாணவர்கள் தற்போது இருக்கிற சூழ்நிலையில் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே முறைப்படி வருவார்களானால், தக்க உதவியைப் பல்கலைக் கழகம் செய்யும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : புதுக் கல்லூரிப் பிரச்சினை என்பது ஏதோ இப்போது மட்டும் ஏற்பட்டுவிட்டதல்ல. மாணவர்கள் தரப்பில் கேட்டால், புதுக் கல்லூரி நிர்வாகத்தில் பல்வேறு விதமான ஒழுங்கீனங்களும் ஊழல்களும் மலிந்திருப்பதாகப் பெற்றோர்களின் கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் பலமுறை கொண்டு வரப்பட்டதால்தான், இந்த ஒன்பது மாணவர்களும் பழிவாங்கப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இதன் காரணமாகத்தான் இந்த 9 மாணவர்களையும் மீண்டும் படிப்பதற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மாணவர்கள் போராட வேண்டிய அவசியமே ஏற்பட்டது என்கிறார்கள். எனவே இப்படி அந்த நிர்வாகத்தின் மீது ஒழுங்கீனங்கள் மற்றும் புகார்கள் கூறி, அரசின் கவனத்திற்கு ஏதேனும் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதுக் கல்லூரி நிர்வாகத்தைப் பற்றிய பல புகார்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னாலேகூட ஆசிரியர்கள் போராட்டம் நடத்திய போது இத்தகைய புகார்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவர்கள் மைனாரிட்டி உரிமையை அனுபவிக்கிற காரணத்தால், அவர்கள்மீது நாம் எப்படி நடவடிக்கை எடுப்பது என்பது பற்றித்தான் நாங்கள் இப்போது சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். இதைக் குறித்து சட்டத் துறையோடும் கலந்து கவனித்துக் கொண்டிருக்கிறோம். மைனாரிட்டி உரிமைகளை அனுபவிப்பவர்கள் என்ற காரணத்திற்காக இவைகளை இப்படியே விட்டுக் கொண்டிருப்பது என்பது சரிப்பட்டு வராது. எனவே மைனாரிட்டி உரிமைகளுக்குப் பாதகம் வராமல் அவர்களின் ஒழுங்கீனங்களை மட்டும் தடுக்கிற வகையில், அத்தகைய நிருவாகங்களைத் தட்டிக் கேட்கிற முறையில் நாம் அதிகாரத்தை மேற்கொண்டாக வேண்டும். அதற்கு ஏற்பதான் இப்போது நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த வகையில்தான் யோசனை செய்ய வேண்டும் என்று சட்டத் துறைக்கும் சொல்லியிருக்கிறோம். இது இப்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(2) பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்சுகள் நேரடி நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

" ஊதிய உயர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தித் தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்சுகள் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டது குறித்து ".

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை ஆணையர் மற்றும் செயலாளர் 20—2—1982 அன்று சங்கப் பிரதிநிதிகளுடனும், மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் மருத்துவமனை முதல்வருடனும் நடத்திய பேச்சுவார்த்தைக்கிணங்க, சங்கப் பிரதிநிதிகள் திருப்தியடைந்து மேல் நடவடிக்கையைக் கைவிடுவதாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

[1982 மார்ச் 10

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்து வரி அறிக்கையில், நாங்கள் எதிர்பார்த்திருக்கும் விவரங்கள் ஏதும் வரவில்லை. அண்மைக் காலமாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கைகள் மிகவும் சுருக்கமாக, நாங்கள் எதிர்பார்க்கும் கருத்துக்கள் அல்லது விவரங்கள் ஏது மில்லாத வகையில் வருகின்றன. அதன் காரணம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. அது எப்படி இருந்தாலும், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன? நர்சுகள் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முக்கியமானவை எவையெவை? அவற்றில் எந்தெந்த கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொண்டு செயல்படுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளது போன்ற விவரங்களை நாங்கள் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 20—2—1982 அன்று, மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் அவர்கள், சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேச வேண்டுமென்று நான் உத்தரவிட்டதையடுத்து; அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். செயலாளர் அவர்களிடம் நான் சிலவற்றைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

I want to catch the attention of the hon. Member I don't want the hon. Member Thiru Manickam to be my rival. அதாவது நான் சில கேள்விகளைக் குறிப்பிட்டுக் கொடுத்து, இவைகளைக் குறித்து நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று உத்தரவிட்டேன். அவருக்கு நான் அனுப்பிய குறிப்பையே இங்கே நான் படிக்க விரும்புகிறேன்.

Why the nurses are still wearing black badges? Has any assessment been made regarding their problems? If so, the action taken on them. Has the High Level Committee met? If so, the details of the progress made.

எப்படி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்களோ அப்படி நானே கேட்டு இவைகளுக்கு உடனடியாகப் பதில் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் நாம் ஏற்கெனவே ஒரு "ஹை பவர் கமிட்டி" ஒன்றை நியமித்திருக்கிறோம். அந்தக் கமிட்டியில் பொது மருத்துவக் கல்லூரியின் டீன் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் அவர்களும் கூடிப் பேசி சில





பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள். அங்கேயிருக்கிற நர்சுகளின் கல்லூரியை எப்படி விஸ்தரிப்பது, விரிவுபடுத்துவது என்பதைப்பற்றி முழு விவரத்தையும் தர வேண்டும் என்று அவர்களுக்கு ஆணையிட்டிருக்கிறோம். அந்தக் கமிட்டியும் அந்த வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதோடு சில பரிந்துரைகளையும் அரசுக்குச் செய்திருக்கிறது.

இதில் உள்ள பிரச்சினை என்னவென்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேச்சுவார்த்தையில் சில முக்கியமான குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் மிகவும் முக்கியமான குறை நர்சுகளின் "ஓர்க் லோடை" க் குறைக்க வேண்டும் என்பது. அதாவது தற்போது ஒவ்வொரு ஸ்டாஃப் நர்சுக்கும் எவ்வளவு 'ஓர்க்லோடு' இருக்கிறது என்பதைப் பார்த்து, அதைக் குறைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அது ஓரளவுக்கு நியாயமான கோரிக்கைதான் என்பதில் சந்தேகமில்லை. மூனறு நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நாம் 350 நர்சுகளுக்கு மட்டும்தான் இங்கே பயிற்சி அளித்துக் கொண்டிருந்தோம். அந்த அளவுக்குத்தான் அனுமதிக்கப்பட்டது. ஆனால் இப்போது நாம் எவ்வளவு பேருக்குப் பயிற்சி அளித்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் பார்க்க வேண்டும். இன்றையதினம் 700 நர்சுகளுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறோம். அதாவது நர்சுகளின் ஓர்க் லோடைக் குறைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாம் இப்போது ஆண்டுக்கு 700 நர்சுகளுக்கு 'டிரெயினிங்' கொடுக்கிறோம். இதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏராளமான செலவாகிறது. இருந்தாலும் பரவாயில்லை என்று செய்கிறோம். மற்ற வளர்ந்த நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நர்ஸ்-பேஷண்ட்ஸ் ரேஷியோவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது—ஓரளவுக்குச் சரியாக இருக்கும்படியான நிலைமையை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நாம் இத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் அவர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தியிருக்கிறோம்.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 10

பேச்சுவார்த்தையில் நர்சுகள் திருப்தியடைந்திருக்கிறார்கள். என்றாலும் இன்னொரு பிரச்சினையை இப்போது கிளப்பியிருக்கிறார்கள். இந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன். இப்போது நர்சு பயிற்சியில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான வாய்ப்பு இருக்க வேண்டும் என்று கோருகிறார்கள். தற்போது 100-க்கு 98 அல்லது 99 சதவீதம் பெண்கள்தான் நர்சுகளாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு ஒரு ஆண்தான் தலைவராக இருக்கிறார். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த வகையில் புதிய கோரிக்கையை வைத்

(முற்பகல் 10-10)

திருக்கிறார்கள். இதை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெண் செவிலியர்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது. அது அவர்களுக்கே தெரியும். தெரிந்தாலும் பயப்படுகிறார்கள். அவர்களுடைய அசோசியேஷன் ஒருவருடைய ஆதிக்கத்தில் இருக்கிறது. இவைகளையெல்லாம் இந்த மன்றத்தில் பேசி அதன் மூலம் அவர்களை ஊக்குவிப்பது இந்த நாட்டிற்கு நல்லதா? அவர்கள் பேசினார்கள், அத்தனை பேரும் இருக்கிற சங்கடங்களைப் புரிந்துகொள்கிறார்கள். அப்படி இருக்கும்போது இப்படிப்பட்ட தவறான போக்கில் சங்கத்தை நடத்திக் கொண்டு, தூண்டிவிட்டு, இவர்கள் ஒத்துக்கொண்டு போன பிறகு, மீண்டும் பிளாக் ஃப்ளாக் போட்டுக்கொள்ள வேண்டும், என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் நியாயமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிந்திக்க வேண்டும். ஆகவேதான் விரிவான அறிக்கையைத் தரவில்லை. எப்போது வேண்டுமானாலும் விரிவான அறிக்கையை வைக்கத் தயாராக இருக்கிறேன். அதையே கூட 'மிஸ்யூஸ்' பண்ணும் வாய்ப்பை உருவாக்கக் கூடாது என்பதற்காகத்தான், விரிவான பதிலைக் கையிலே வைத்துக்கொண்டு, கேள்விகள் கேட்கும்போது சொல்லுகிறேன் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் சொல்லுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நர்ஸ்கள் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கைகளில், ஊதியத்தை மாற்றியமைத்தல், பதவி உயர்வு அளித்தல் போன்ற கோரிக்கைகள் முக்கியமான கோரிக்கைகள். இந்த இரண்டு கோரிக்கைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் விளக்கம் அளிக்கவில்லை. இந்த இரண்டு கோரிக்கைகள் குறித்து அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



1982 மார்ச் 10]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, revision of pay-scales for Nursing Supervisors, Nursing Superintendents, Grade II, and Nursing Tutors, Grade II என்று கேட்டிருக்கிறார்கள். இதை நாங்கள் முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டுமானால், நம்முடைய எக்ஸ்செக்கருக்கு எவ்வளவு செலவாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சிந்தித்தாக வேண்டும். ஆசிரியர்களுககு நிறைய பணம் கொடுக்க வேண்டும். என்.ஜி.ஓ.க்களுக்கு, நர்ஸ்களுக்கு, டாக்டர்களுக்கு நிறைய சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கேட்டால், அது நியாயமான கோரிக்கைதான் என்றாலும், அப்படிக் கொடுக்க வேணடும் என்று சிந்திக்கிற நேரத்தில் அதற்கேற்ற வகையிலே எவ்வளவு வரி போட வேண்டும் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினாகள் கூட நிதிநிலை அறிக்கையின் மீது பேசப்போகிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் கொடுக்கவிருக்கிறார்கள். ஆகவே இவைகளையெல்லாம் சிந்தித்து விளக்கமாக அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். நாங்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் செய்து முடிப்பது என்பது முடியாத காரியம். அது மாண்புமிகு உறுப்பினருக்கு தெரியாததல்ல. ஆசிரியர்களுக்கும், நர்ஸ்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, எந்த அளவிற்குச் செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவேதான் அது பற்றி விரிவாக அறிக்கையை வைக்க முடியவில்லை.

### 6. 1982-83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்-தொடர்ச்சி.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தை ஒன்றரை மணிக்குள் முடிக்க நான் ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்று அரசு கொறடா அவர்கள் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அந்த அளவிலே என் பங்கைச் செய்ய வேண்டும் என்ற நிலையில் எவ்வளவு சுருக்கமாகப் பேச முடியுமோ அவ்வளவு சுருக்கமாகப் பேசுகிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும்போது, எனக்கு முக்கியமாகத் தென்படுவது இதுதான்; அதாவது தமிழக அரசு தங்கள் பொறுப்பில் இருக்கின்ற தமிழக மக்களுக்குச் செய்ய வேண்டிய பல்வேறு கடமைகளைச் செய்ய முடியாத நிலையில் எப்படி மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை இருக்கிறது என்பதைத் துணிவோடு

சொல்லத் தயங்குவதன் காரணமாகவும், அந்த உண்மையை தமிழக மக்களிடம் மறைத்து வருவதாலும், இதில் சிக்கல் அதிகமாக ஏற்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது நாடு மிகப் பெரிய பொருளாதாரச் சிக்கலில் இருக்கிறது. அதைப் பற்றிய பல விவரங்களை அறிஞர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு பொருளாதார நெருக்கடி அதிகரித்திருக்கிறது என்பதற்கு நான் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1939ஆம் ஆண்டு விலைவாசியின் அடிப்படையில் ஒரு தொழிலாளர் குடும்பத்திற்கு 100 ரூபாய்க்குச் சாமான் வாங்கினால், அதே அளவிற்கு உள்ள சாமானை இன்றைக்கு வாங்க வேண்டுமானால், 2,200 ரூபாய் இருக்க வேண்டும் என்று தமிழக அரசின் புள்ளிவிவரமே கூறுகிறது. 1939ஆம் ஆண்டு 100 புள்ளி என்று எடுத்துக் கொண்டால், 1960-ஐ அடிப்படையாக வைத்து அகில இந்திய புள்ளிவிவரத்தை 4.76 ஆல் பெருக்கி தமிழகத்தில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும், மற்ற தொழிலாளர்களுக்கும் பஞ்சப்படி தரப்படுகிறது. அந்த அடிப்படையில் 462 புள்ளி 1960-ல் இருந்தது என்று வைத்துக்கொண்டால், அதை 4.76 ஆல் பெருக்குவதன் மூலம் தமிழ்நாட்டில் காஸ்ட் ஆஃப் லிவிங் இண்டக்ஸ் 2,199 என்று வருகிறது.

இன்றைக்குள்ள தமிழ் நாட்டில் விலைவாசியைப் பார்த்தால், 1939 ஆம் ஆண்டில் 100 ரூபாய்க்கு வாங்கிய பொருளை இன்றைக்கு 2,200 ரூபாய் கொடுத்தால்தான் வாங்க முடியும். 22 மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதை அரசாங்கத்தின் புள்ளிவிவரமே ஒத்துக்கொள்கிறது. இந்த விலைவாசிக்கு பெரும்பாலும் மத்திய அரசின் நிதிக் கொள்கைதான் காரணம் என்று பல முறை பேசப்பட்டிருக்கிறது என்பதை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** புள்ளிவிவரம் பெருக்குவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். ஒப்பந்தம் செய்யும்போது, 'பேஸ் இயர்' 1936 என்று வைத்தால், 4.76 ஆல் பெருக்க வேண்டிய நிலை வராது. 'பேஸ் இயர்' 1960 என்று வைத்து, 1960-ல் 100 என்று வைத்துச் செய்யும்போது 1936 ஆக இருந்தால் என்ன இருக்கும் என்று பார்த்துக் கொள்வதற்காகத்தான் 4.76 ஆல் பெருக்கிக் கொள்வது. 1960 'பேஸ் இயர்' என்று வைத்தால், அதற்கேற்றபடி பஞ்சப் படி மற்றவைகளும் கொடுக்கப்படுகின்றன.



**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுவது வேறு விஷயம். 1960-ஐப் புள்ளியாக வைத்து இப்போது கணக்குப் பார்த்தால், இந்த விலைவாசி 1939-ல் இருந்தது எந்த அளவிற்கு உயர்ந்திருக்கும் என்பதை மக்கள் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது என்பதற்காகத்தான் நாங்கள், தொழிற் சங்கத்தைச் சேர்ந்த நாங்கள், 1939-ஐ அஸ்திவாரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்கிறோம்.

பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் சம்பளம் 1960 ஆம் ஆண்டு புள்ளிவிவரத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டிற்குத் தரப்படுகிறது. 1939 ஆம் ஆண்டு அடிப்படையில் பஞ்சப்படி தர வேண்டுமென்று தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்கள் வலியுறுத்துவதன் காரணமாக, தமிழ் நாட்டில் 1939 ஆம் ஆண்டின் அடிப்படையிலே புள்ளிவிவரம் சேகரித்து இரண்டு முறை செய்ய வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். 1960 ஆம் ஆண்டு புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது, நாலே முக்கால் பங்கு அதிகமாக இருப்பதால், அதை அப்படியே பெருக்கிக்கொள்ளலாம் என்று மத்திய அரசு, மாநில அரசு, முதலாளிகள், தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டதன் அடிப்படையிலேதான், பஞ்சப்படி புள்ளிக்கு 35 பைசா வீதம் 2,200 புள்ளிகளுக்குத் தரப்படுகிறது. அந்த அளவிற்கு விலை உயர்ந்துள்ளது. 1939 ஆம் ஆண்டுக்குப் பிறகு 1982 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 43 வருஷத்தில் 22 மடங்கு விலைவாசி தமிழ் நாட்டில் உயர்ந்திருக்கிறது என்ற விவரத்தை 1939 ஆம் ஆண்டு நிலவரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால்தான் தெரியும் என்று சொல்லுகிறேன். அந்த அளவிற்கு விலைவாசி உயர்ந்திருப்பதற்குக் காரணம் மத்திய அரசின் பொருளாதார நிதிக் கொள்கைதான் என்று நாங்கள் கருதுகிறோம். அந்த உண்மையைக் கூட தமிழ் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதற்கு இந்த அரசு தயாராக இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

1946 ஆம் ஆண்டு மத்திய அரசின் பட்ஜெட்டில் எக்சைஸ் வரி 60 கோடி ரூபாய்க்குத்தான் இருந்தது. இன்றைக்கு 3,600 கோடி ரூபாய்க்கு எக்சைஸ் வரி போடுகிறார்கள். இந்த 3,600 கோடி ரூபாய் சாதாரண மக்கள் தலையில் தூக்கி வைக்கப்படுகிறபோது, விலைவாசி ஏறுகிறது. அந்த விலைவாசிக்கு மத்திய அரசின் கொள்கைதான் காரணம் என்பதை இந்த அரசு சொல்லத் தயாராக இல்லை.

அடுத்தபடியாக, கறுப்புப் பணம். கறுப்புப் பணத்தைப்பற்றி ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். கறுப்புப் பணத்தைப் பொறுத்த வரையில், அது எவ்வளவு இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்வதற்காக புரபசர் கால்டர் என்ற பிரிட்டிஷ் நிபுணரை மத்திய அரசு 20 ஆண்டுகளுக்கு முன்பே வரவழைத்து புள்ளிவிவரங்களை ஆராய்ச்சி செய்யச் சொன்னது. அவர் ஆராய்ச்சி செய்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பே பதினைந்தாயிரம், இருபதாயிரம் கோடி வரையில் இந்தியாவில் கறுப்புப் பணம் இருக்கிறது, அது போட்டிப் பொருளாதாரமாக வளரக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னார். இன்றைக்குக் கறுப்புப்பணம் கிட்டத்தட்ட

(மாற்றுத்தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

(முற்பகல் 10-20)

30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் கோடி வரையில் இருக்கின்றது என்று இந்திய நாட்டினுடைய பொருளாதார நிபுணர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 30 ஆயிரம் கோடியிலிருந்து 50 ஆயிரம் கோடி வரையில் அவர்கள் வைத்துக் கொண்டு போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கறுப்புப்பணக்காரர்களை எப்படி கட்டுப்படுத்துவது? அந்தக் கறுப்புப் பணத்தை எப்படி அரசாங்கத்திலே கட்டுப்படுத்துவது ? அந்தக் கறுப்புப் பணத்தை எப்படி கட்டுப்படுத்துவது என்பதுபற்றி நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்கள். 50 ரூபாய், 100 ரூபாய் டிநாமிநேஷன் நோட்டுக்களை குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அரசு கைப்பற்றலாம் என்று சொன்னார்கள். இப்படி கடந்த 25 ஆண்டுக் காலமாகவே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் தெரிவிக்கப்பட்டு வந்த பின்னரும் கூட, ஏன் அப்படிச் செய்ய வில்லை ? அந்தக் கருத்தை ஏன் அமுல்படுத்தவில்லை ? கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களுடைய பணம் அரசியல் கட்சிகள் தேர்தலில் பங்குகொள்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. பாராளுமன்றத் தேர்தல் நடக்கிறது. மாநிலங்களில் தேர்தல்கள் நடக்கின்றன. அந்தத் தேர்தல்களுக்குச் செலவு செய்வதற்கு என்று ஒரு குறிப்பிட்ட தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்து அந்தச் சட்டத்திலே இருப்பது ஒன்று, ஆனால் நடைமுறையிலே இருப்பது ஒன்று. அரசியல் தலைவர்களும், சட்ட சபையிலோ பாராளுமன்றத்திலோ, அதைப்பற்றிப் பேசுவதில்லை. பொதுக் கூட்டத்திலேதான் அதைப்பற்றிப் பேசுகிறார்கள். அதைப்பற்றி சட்டசபையிலோ பாராளுமன்றத்திலோ யாரும் எடுத்துப் பேசுவதில்லை. சட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு மடங்கு என்றால், அதைப் போல பத்து மடங்கு அதிகமான செலவு தேர்தல்களுக்கு என்று அவர்கள்





செய்யவேண்டியதாக இருக்கிறது. அந்த அளவுக்கு தனி நபர்களால் செலவு செய்ய முடியாது என்ற கருத்தையும் சொல்கிறார்கள். அந்தக் கறுப்புப் பணக்காரர்கள், "இந்த அரசியல்வாதிகள் எங்களைப்பற்றியும், கறுப்புப் பணத்தைப் பற்றியும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கறுப்புப் பணத்தை எங்களிடம் வாங்குகிறார்கள். எங்களிடம் உள்ள அந்தப் பணத்தை வாங்கித்தானே அரசியல் நடத்துகிறார்கள்" என்று சொல்கிறார்கள். கறுப்புப் பணத்தின் சர்வாதிகாரம் மத்திய அரசைக்கூட கலங்கடித்துக்கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இன்றைக்குக் கறுப்புப் பணம் 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கு இருக்கிறது. மாநில அரசுகளும், மத்திய அரசும் அந்தக் கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தாததன் காரணமாகத்தான் இந்த மாதிரி விலைவாசிகள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கறுப்புப் பணத்தை மத்திய அரசு கட்டுப்படுத்தாததால் தான், இந்த விலைவாசி உயர்வின் சுமையை நாங்கள் சுமக்கவேண்டியிருக்கிறது என்று ஆளும்கட்சி அவர்களுக்கு எடுத்துச்சொல்லிக்கொண்டு வருகிறதா ? 50 ரூபாய், 100 ரூபாய் நோட்டுக்களை குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு எடுத்துவிடுவது என்று எழுதி வைத்திருக்கிறார்களா ? ஏதோ போகிற போக்கிலே சொல்வது போல சொல்லிவிட்டுப்போகிறார்கள். அதை ரெக்கார்டிலே இருக்கின்ற மாதிரி பேசி எழுதிவைக்கக்கூடாதா ? இதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. பற்றாக்குறை பட்ஜெட், துண்டு விழுகின்ற பட்ஜெட்டைச் சரிக்கட்ட பூராத் தொகைக்கும் அச்சு இயந்திரத்தை வைத்து அச்சடித்துத் தள்ளுவது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் நோட்டு அடிக்க வேண்டும் என்று இருக்கிறது. நிதிநிலை ஆதாரங்கள் என்று சொல்கின்றபோது, இவ்வளவுதான் நோட்டுப் பணம் இருக்க வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். நாட்டில் இருக்கின்ற தங்கத்தை ஆதாரமாக வைத்து இந்த அளவுக்குத்தான் நாம் நோட்டு அச்சடிக்க வேண்டும், வைத்திருக்க வேண்டும் என்று இருக்கிறது. இதை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் காலத்திலேயே வரையறுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் இன்று நம் நாட்டிலே உள்ள தங்கத்திற்கும் உற்பத்தியாகின்ற பொருள்களுக்கும் கொஞ்சம்கூட சம்பந்தாசம்பந்தமின்றி இருக்கின்றது. நமது மத்திய அரசு, அதிகமான அளவுக்கு நோட்டுக்களை அச்சடிக்கிறது. அது ஒரு முக்கியமான காரணம். இந்தக் காரணங்கள் எல்லாம் நமது நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. எல்லாம் தெரிந்தே இருக்கும். மத்திய அரசு பொருளாதார பாரங்களை, பெரிய பாறாங்கல்லை தூக்கி அவர்கள் தலை மேல் வைத்திருக்கிறது என்று ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. இந்த நாட்டிலே என்ன நடக்கிறது ?

இந்த வருடத்திலே பற்றாக்குறை பட்ஜெட் போடப்படுகிறது. நாட்டிலே வரி போடப்படுகிறது. பிப்ரவரி மாதத்தில் 28 ஆம் தேதி பட்ஜெட் வர இருக்கிறது என்று சொன்னால், அதற்கு முன்னாலேயே பாராளுமன்றத்தில் இந்த மாதிரி வரிகளைப் பற்றி அறிவித்துவிடுகிறார்கள். நம்முடைய மத்திய அரசு பட்ஜெட் வருவதற்கு முன்பாகவே வரிகளைப் பற்றிய விவரங்களை, காரணங்களை அறிவித்து விடுகிறார்கள். ரெயில்வேயில் டிப்பார்ட்மெண்ட் வழியாக அறிவிக்கப்பட்டு விடுகிறது. ரெயில்வேயில் போடுகிற வரி, தபால் கட்டண உயர்வு மூலம் போடப்படுகின்ற வரி பற்றி எல்லாம் விவரம் வந்து விடுகிறது. நம்முடைய ராஜ்யசபையினுடைய தலைவர், இந்திய நாட்டின் உபதலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரசு பட்ஜெட் கூட்டத்தைத் தொடங்குவதற்கான அறிவிப்பைக் கொடுத்த பிறகு, அதை பாராளுமன்றத்திலே கொண்டுவராமலே முன்னதாக வரி விதிப்பைக் கொண்டு வருவது சரியல்ல என்று கண்டிக்கத்தக்க அளவுக்கு அவர்கள் சொன்னார்கள். அவர்கள் ஏன் அப்படிச் சொல்கிறார்கள்? போஸ்ட் அண்டு டெலிகிராபிக் டிப்பார்ட்மெண்டில் 100 கோடி ரூபாய் அளவுக்கு வரி. ரெயில்வேயில் ரூ. 300 கோடி சொச்சம் அளவுக்கு வரி. அதாவது மொத்தத்தில் இந்த வருடத்தில் ரூ. 1,300 கோடி அளவுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்படி போஸ்டல் டிப்பார்ட்மெண்ட், ரெயில்வே என்று தனித்தனியாக, துண்டு துக்காணியாக நோடிபிகேஷன்கள் மூலம் முன்னதாக வரி போட்டுவிடுகிறார்கள். பட்ஜெட் என்று அறிவிக்கும்போது, மொத்தம் ரூ. 1,300 கோடி என்பதில், 635 கோடி ரூபாய் என்று அறிவித்துவிடுவது என்று இருக்கிறார்கள். ஆகவே உண்மையான படத்தை மாற்றி, பாதியாகக் குறைத்துக் காட்டுவது என்று இருக்கிறார்கள். முன்கூட்டியே போஸ்டல், ரெயில்வே டிப்பார்ட்மெண்டுகள் மூலமாக வரி போட்டுவிடுகிறார்கள். பார்லிமெண்ட்டைக் கலக்காமலேயே அறிவித்துவிடுகிறார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், மத்திய அரசு நிதிநிலை அறிக்கையினுடைய நகல் ஒன்றை எங்களுக்கும் கொடுத்துவிட்டால், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுவது எங்களுக்கும் புரியும். அவர்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் இருக்கும். இங்கே தமிழக பட்ஜெட் மீது விவாதம் நடப்பதாக நினைத்துக்கொண்டு நாங்கள் வந்துவிட்டோம்.



திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுவதற்காகத்தான் இந்த பட்ஜெட்டிலேயே எழுதி வைத்திருக்கிறார்கள். இதைப் படித்துப் பார்த்தால் தெரியும். தமிழ் நாடு தனி நாடு மாதிரியும், தமிழ் நாடு சுயேச்சையான அந்தஸ்தைப் பெற்றிருக்கின்ற மாதிரியும், சாவரின் ஸ்டேட் மாதிரியும், இந்த சாவரின் ஸ்டேட் நிதிநிலை அறிக்கையை சாவரின் ஸ்டேட் நிதி அமைச்சர் அறிவிக்கின்ற மாதிரிதான் இந்த பட்ஜெட் இருக்கிறது. இந்த தேசம் பூராவுக்கும் பொதுவாக மத்திய அரசு பட்ஜெட் போடுகிறது. அதைப் பொறுத்து இந்த மாநில அரசுகள் செயல்பட வேண்டும். ஆனால் இந்த மாநில அரசுகளின் பட்ஜெட்டை மத்திய அரசு பட்ஜெட் எப்படிப் பாதிக்கிறது என்று எடுத்துச் சொல்லவில்லை. இதை எடுத்துச் சொல்லாமல் விட்டிருக்கின்றார்களே, அதற்கு என்ன காரணம்? என்ன காரணமோ தெரியவில்லை. ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்? அப்படி இங்கே ஒரு வார்த்தையும் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். மத்திய பட்ஜெட் பற்றி திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்கிறார்கள். அந்த பட்ஜெட் அவர்களுக்கு முன்னதாகவே தபால் மூலம் வந்திருக்கும். அவருக்குத் தெரியாமல் இருக்க முடியாது. தெரிந்திருக்கும். இந்தச் சட்டமன்ற அவையிலே ஏன் அந்தக் கருத்துக்களை எடுத்து வைக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் எடுத்த எடுப்பிலேயே சொன்னேன். இதைப் பற்றி நான் என்ன குறிப்பிட்டிருக்கிறேன்? "தமிழ்நாடு, இந்தியாவின் நல இழப்புகளில் பங்கு பெறும் பகுதிகளில் ஒன்றாகவும், இந்தியாவின் வளர்ச்சிக்கு வலியூட்டும் பகுதிகளில் ஒன்றாகவும் இருந்து வருகின்றது. இந்தியாவைப் பாதிக்கின்ற எந்த ஒரு பிரச்சினையும் தமிழகத்தையும் பாதிக்கின்றது. எடுத்துக்காட்டாக பணவீக்கம், இன்றியமையாப் பண்டங்களின் பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், ஏழ்மை நிலை, எரி பொருள்கள், விவசாய இடு பொருள்கள் ஆகியவற்றின் விலை உயர்வு, இரயில்வே போக்குவரத்துக் கட்டணங்களின் உயர்வு போன்றவைகள் அகில இந்தியாவை எந்த அளவுக்குப் பாதிக்கின்றனவோ, அந்த அளவுக்குத் தமிழகத்தையும் பாதிக்கவே செய்கின்றன" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3-வது பாராவைப் படித்துச் சொல்கிறார்கள். நான் 2-வது பாராவைப் படித்துக் காட்டுகிறேன். அதாவது பொருளாதார ரீதியிலே 'கோட்' பண்ணி

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 மார்ச் 10

வகுத்துத் தந்ததைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். "பொருள் யிருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள். வள்ளுவர் ஈட்டும் வழிவகைகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளங்களை உருவாக்கி, நாட்டில் ஏற்படும் இடையூறுகளை ஆராய்ந்தறிந்து, அவற்றை நீக்கும் வல்லமை பெற்றவனே அரசு வினையை ஆற்ற வேண்டும் என்பது குறளாசிரியர் உணர்த்தும் கருத்துரையாகும். வள்ளுவனார் வகுத்துத் தந்த அறநெறிக் கருத்துரையின்படி, தமிழக அரசிற்குப் பொருள் வருவதற்கான வருவாய் வழிகளைப் பெருக்கி, அவற்றின் துணைகொண்டு தமிழ் நாட்டின் வளங்களைப் பல்வேறு வகைகளிலும் உருவாக்கி, அவற்றின் உதவியோடு நாட்டில் ஏற்படும் இடையூறுகளை ஆராய்ந்தறிந்து நீக்கி மக்களுக்கு நல்வாழ்வு நல்கிடும் நோக்கத்தை இன்றைய அரசு இயன்ற வரையில் நிறைவேற்றி வருகிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பாராவைப் படித்துப் பார்த்தால், அரசு உரிமை பெற்ற நாட்டிலே வள்ளுவர் சொன்ன பிரகாரம் செயல்படுகின்ற மாதிரி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படி இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை வைத்து, தமிழ் நாட்டு மக்களிடம் வரி வசூல் பண்ணுகிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள மக்களுக்கு பல காரியங்கள் செய்வதுபோல வரி வாங்குகிறார்கள், அப்படிச் சொல்கிறார்கள். இரண்டாம் பாராவிலே நூற்றுக்கு ஒரு பங்குகூட சொல்லாமல் விட்டுவிட்டுப் போகிறார்கள். இந்த அரசுதான் அதற்குப் பெரும் பொறுப்பு என்கின்ற மாதிரி இருக்கிறதா, இல்லையா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. சனார்த்தனம்:** முதல் பாராவிலே 'இயன்ற வரை' என்று சொல்லியிருக்கிறோம். வள்ளுவர் காலத்தில் மத்திய அரசு, மாநில அரசு என்று இல்லாததன் காரணமாகவே அவர்கள் பொதுவாக அரசுக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற அடிப்படையிலே, மாநில அரசு, மத்திய அரசு என்று பொறுப்புக்கள் வந்திருக்கின்றன. மத்திய அரசு உதவி இந்த அரசுக்குப் போதாது என்ற கருத்தை எல்லோருமே ஒப்புக்கொண்டு, அவ்வப்போது வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அப்படிப் பெறுவதன் மூலமாகத்தான், மாநிலத்தினுடைய வசதி வாய்ப்புக்களைப் பெருக்கி சரிக்கட்டிக் கொள்கின்ற, சமாளித்துக் கொள்கின்ற தன்மையிலேதான் 'இயன்ற வரை' என்று சொல்லியிருக்கிறோம்.



1982 மார்ச் 10]

**திரு. ஆ. நல்லசிவன்:** இங்கே வள்ளுவர் அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர் கருத்து எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. சில விஷயங்களிலே பொருந்தும். மாநில அரசு, மத்திய அரசு என்று அவர் காலத்தில் இல்லை என்று சொல்கிறார்கள். மத்திய அரசு, மாநில அரசு என்பதுபோல, பேரரசுகளின் கீழ் சிற்றரசுகளாக இருந்து, அவர்களுக்குக் கூறிய அறிவுரைகள்போல் ஏதாவது வள்ளுவர் கூறியிருந்தால், அதை எடுத்துச் சொல்லுங்கள். மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்களைப்பற்றிச் சொல்லாமல் விட்டுவிட்டிருக்கிறீர்கள். அந்த அதிகாரத்தைக் கொண்டு தமிழ் நாட்டிற்கு என்ன செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லாமல் 'இயன்ற அளவு' என்பது மாதிரி போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இயன்ற அளவு என்றால், பைனான்சியல் ரிசோர்சஸ் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் இன்றுள்ள நிலை. அதைச் சொல்லாமல் விட்டிருக்கிறீர்கள். அதை இங்கே சொல்வதற்குக் கூச்சப்படுகிறீர்கள். நான் உங்களுக்காகப் பேசுகிறேன். அவர்கள் பட்ஜெட்டிலே இந்த அளவுக்கு ஏற்கெனவே விலைவாசிகள் கூடியிருந்தும், இந்த ஒரு ஆண்டில் மட்டும் 2,600 கோடி ரூபாய் அளவுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. மக்கள் மீது வரி சுமத்தப்பட்டிருக்கிறது. 1,300 கோடி ரூபாய் வரியாகவும், 1,300 கோடி ரூபாய் அளவுக்குப் பற்றாக்குறை மூலமாகவும் சுமத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-30)

ஆண்டு முடிகிறபோது அது 5000 கோடி ரூபாயாக வந்தால், ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆண்டுக்கு 5000 கோடி ரூபாய் வருமானத்தால் ஏற்படும் சுமை மக்களை எப்படி பாதிக்கும் என்று சொல்ல வேண்டுமா ? இதனால் என்ன ஏற்படுகிறது என்பதைப் பாருங்கள். விலைவாசி உயருகிறது. ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் பஞ்சப்படி கேட்டால், அரசு என்ன சொல்லுகிறது ?. 'மத்திய அரசு விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது, இவ்வளவுதான் என்னால் தர முடியும், இதற்குமேல் தர வேண்டுமென்றால் மத்திய அரசின் உதவி வேண்டும், மத்திய அரசு உதவி தரவில்லை' என்று சொல்லத் தயாராக இல்லை. மாநில அரசைப் பொறுத்தவரையில், அதனுடைய நிதி ஆதாரங்கள் குறைவு, வருமானம் குறைவு. அதை வலியுறுத்தி வருகிறோம். விலைவாசி உயர்வால் பாதிக்கப்படுகிற அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பஞ்சப்படி கோரினால், அரசு என்ன சொல்லுகிறது ? கிராமங்களில் 40 ரூபாய், 50 ரூபாய் வருமானம்கூட இல்லாதவர்களைச் சுட்டிக்காட்டி,

'உங்களுக்குப் பிள்ளைப் பாசம் இல்லையா?' என்று கேட்கிறது. வேலை பார்க்கிற சிப்பந்திகளின் சம்பள உயர்விற்குக் காரணமாக இருக்கிற மத்திய அரசை நிர்ப்பந்திக்க ஒன்றும் செய்யாமல் இருக்கிறது மாநில அரசு. விலைவாசி உயர்வுக்கு நீங்கள்தான் பொறுப்பு என்று சொல்லவில்லை. 'விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணமாக இருக்கிறது, பஞ்சப்படி கொடுக்க எங்களிடம் பணம் இல்லை, அடுத்து வரும் பைனான்ஸ் கமிஷனில் அதிகமான பங்கை மத்திய அரசு கொடுக்க வேண்டும்' என்று கேட்க வேண்டும். பிள்ளைக்குப் பால் கொடுக்க 100 கோடி ரூபாய் திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. வேறொரு உண்மையை மறைக்க, இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து போதிய நிதி ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்ற உண்மையைச் சொல்ல மறுப்பதால், வாழ்க்கைச் செலவிற்குப் பஞ்சப்படி கேட்கும் சிப்பந்திகள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கிராமங்களிலே உள்ள கோடான கோடி மக்களுக்குப் பாலைக் கொடுக்க மறுத்து, சண்டாளர்கள் என்று சொல்லும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் உழைப்பாளிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

மாநிலங்களுக்குப் பெருமளவிற்கு வருமானம் தருவது விற்பனை வரி அந்த விற்பனை வரியின் மேலேயே கை வைக்க மத்திய அரசு திட்டம் போட்டிருக்கிறது. திரு. திரிபாதி அவர்களைத் தலைவராகப் போட்டு, ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். பல பொருள்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவற்றுக்கு விற்பனை வரியை மாற்றி எக்சைஸ் டியூட்டி என்று அறிவிக்கலாமா என்று ஆராய கமிட்டி நியமித்திருக்கிறார்கள். இது பாதகமான விஷயம். விற்பனை வரிபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். எப்படி விற்பனை வரி போடுகிறார்கள், அது இன்டைரக்டாக எப்படி பாதிக்கிறது என்பதைச் சொன்னார்கள். மத்திய அரசின் கொள்கைகள் காரணமாக, சாதாரண மக்கள் வாங்கும் அத்தியாவசியப் பொருள்களுக்கு மாநில அரசை நேரடியாக விற்பனை வரி போட வைத்து, அதன் மூலம் பொருள்களின் விலை ஏறும்போது, அதை எடுத்துக்கொண்டு, அதற்கு எக்சைஸ் டியூட்டி போடலாமா என்று ஆராய்வதற்கு ஒரு கமிட்டி போட்டிருக்கிறது. அதைத் தவறு என்று சொல்லியிருக்கிறார்களா? அப்படி





பொதுக் கூட்டத்தில் பேசினால் சர்க்கார் ரிக்கார்டில் வராது. சட்டசபையில் பேசினால்தான் சர்க்கார் ரிக்கார்டில் வரும். அதை ஆட்சேபிக்கிறோமென்று சொன்னார்களா என்றால் இல்லை. மத்திய அரசிடம் ஏகப்பட்ட பொருளாதார ஆதாரங்கள் குவிக்கப்பட்டுள்ள நிலையில், முனிசிபாலிட்டிகளுக்கு உள்ள அதிகாரங்கள்கூட மாநில அரசுக்கு இல்லை என்று சட்ட அமைச்சரவர்கள் பேசுகிறார்கள். அப்படி திருச்செங்கோட்டில் பேசி என்ன பிரயோசனம்? அப்படி சட்டசபையில் பேசவேண்டும். அப்படி ஒரு அரசை வைத்துக்கொண்டு தமிழகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால் எப்படி? மாநில அரசுக்கு இருக்கும் அதிகாரங்களில், விற்பனை வரியில்கூட கை வைக்க முயற்சி நடக்கிறது. அது தவறு என்று ஏன் எழுத மாட்டேன் என்கிறீர்கள்? இதையெல்லாம் சொல்லவில்லை. ஏற்கெனவே நிதி வாயில்கள் அடைபட்டுப் போயிருக்கின்றன. அதை மேலும் அடைக்க மத்திய அரசு முயற்சி செய்கிறது. இந்த உண்மையைச் சொல்லாமல், கையிலே கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு சில ஸ்கீம்கள் போடுகிறீர்கள். அதனால் தமிழ் நாட்டு மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. அதற்காக விளம்பரங்களை அதிகமாகச் செய்கிறார்கள். தமிழ் நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்ய போதிய அதிகாரம் இல்லை என்பதைச் சொல்வதற்குப் பதிலாக—அப்படிச் சொல்லி, அதற்குப் பிறகு முடிந்ததைச் செய்கிறோமென்று சொல்ல வேண்டும் . . . . அப்படிச் சொல்லாமல், கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு சில காரியங்களைச் செய்கிறார்கள். கார்ப்பரேஷனுக்கு 20 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அதில் 12 கோடி ரூபாய் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களும் 8 மணி நேரம் வேலை செய்துவிட்டுத்தான் போகிறார்கள். கணிசமான பகுதி விலைவாசி உயர்வால் சிப்பந்திகளுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே இருக்கிற பணத்தை வைத்துக்கொண்டு சில ஸ்கீம்களைப் போடுகிறார்கள். இந்த நிலையில் தமிழ்நாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கொஞ்சம்கூடத் தொட முடியாது. எனவே சர்க்கார் திறமையாகச் செய்திருக்கிறதென்று காட்ட, குறைந்த விஷயத்தைப்பற்றி நிறைய விளம்பரம் பண்ணுகிறார்கள். அதைப் பார்த்து தமிழ் நாட்டு மக்கள் ஏமாற மாட்டார்கள். 1946-லிருந்து பார்க்கிறார்கள். 36 வருடங்களாகத் தொடர்ந்து பார்க்கிறார்கள். இப்படி 'ஜிம்மிக்ஸ்' வைத்து, வண்டி ஓட்ட முடியாது. அந்த வார்த்தையை உபயோகிப்பதற்காக மன்னிக்க வேண்டும். உண்மையைச் சொல்கிறேன். இதைச் செய்திருக்கிறேன், அதைச் செய்திருக்கிறேன் என்று சொல்லுவது நம்புவதாக இல்லை.

[திரு. ஆ. நல்லசிவன்] [1982 மார்ச் 10

100 கோடி ரூபாய் திட்டம்பற்றிச் சொன்னார்கள். அந்த நோக்கம் பற்றிக் குறை சொல்லவில்லை. அதை எப்படி நிறைவேற்றப் போகிறோம்? ஏற்கெனவே ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். வேலையில்லாத பட்டதாரிகளுக்கு நிவாரணம் என்று சொன்னார்கள் ஆனால் 10,000 பேர்களுக்குத்தான் நிவாரணம் கொடுக்க முடிந்தது. முதலில் எல்லா படித்த வேலையில்லாத பட்டதாரிகளுக்கும் நிவாரணம் கிடைக்குமென்று சொல்லி, எல்லோரும் அதை நம்பும்படியாகச் செய்து, அதை அமல் நடத்தும்போது அதிகாரிகள் போடும் கண்டிஷனால் 11,000 பேர்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிந்துள்ள பட்டதாரிகள் எத்தனை பேர்? கொடுத்தது எத்தனை பேர்? நிவாரணம் அளிக்கப்பட்டது 11,000 பேர்கள் என்று சொல்லும்போது, பலர் அதைக் கேட்கிறார்கள். அப்போது ஏமாற்றப்படுகிறோமென்று நினைக்கிறார்கள். இது ஒரு கண்துடைப்பு ஏற்பாடு என்று சொல்ல விரும்புகிறேன். நான் இப்படிக் கொடுத்ததைக் குறை சொல்லவில்லை. தமிழ் நாட்டில் அனைவருக்கும், படித்த வேலையில்லாத பட்டதாரிகள் அனைவருக்கும் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. மூன்று வருடங்களுக்குப் பிறகு பார்த்தால், அதனால் பயனடைந்தவர்கள் 11,000 பேர்கள்தான். அடுத்து வயதானவர்களுக்கு, விதவைகளுக்கு உதவிப் பணம். ஒவ்வொரு தாலுக்காவிலும் 200 பேர்களுக்கு மேலே கொடுக்காதே, 150 பேர்களுக்கு மேலே கொடுக்காதே என்று ரகசியமாக அறிக்கை அனுப்புகிறார்கள். எல்லோரும் நமக்கு அந்த உதவிப் பணம் கிடைக்கப் போகிறதென்று எதிர்பார்க்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

அறிவிக்கப்பட்ட திட்டங்களையெல்லாம் பார்த்தால், அறிவித்தவாறு நடைபெறவில்லை. அதுமாதிரிதான் 100 கோடி ரூபாய்க்கான திட்டம் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை அதுகுறித்து விவரமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது சொல்லலாம். 'ஒருவேளை சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாத பிள்ளைகளுக்கு' என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளைகூட உணவு இல்லாத பிள்ளைகள் செத்துப் போய் விடுவார்களா இல்லையா? அதுகூட இல்லாதவர்கள் எப்படி பிழைத்திருப்பார்கள்? அப்படிப்பட்டவர்களுடைய லிஸ்டை எப்படி எடுக்க முடியும்? இதுகுறித்து எனக்கு பயம் வருகிறது. இதிலே 'ஒருவேளை சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாதவர்கள்' என்று ஏற்கெனவே கண்டிஷன் போட்டு விட்டார்கள். அவர்கள்தான் செத்துப் போய்விடுவார்களே, பிறகு எப்படிப் போய் கணக்கெடுக்க முடியும்?



1982 மார்ச் 10] [திரு. ஆ. நல்லசிவன்]

(முற்பகல் 10-40)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஒருவேளை கூட சாப்பாட்டுக்கு வழியில்லாமல் இறந்து போகிற குழந்தைகளின் எண்ணிக்கை 30 சதவிகிதம் என்கிற ஒரு கணக்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை நான் ஒத்துக் கொள்ள முடியாது. 'நூட்ரிஷன்' இல்லாமல் குழந்தைகள் இறந்து போய் விடுவது உண்டு. இத்திட்டத்தைப் பொறுத்தவரையில், 100 கோடி ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. நான் இதைக் கைவிட வேண்டுமென்று சொல்லவில்லை. பெண்களிடம் இந்தப் பணியை ஒப்படைக்கப் போவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் ஆமோதிப்பிற்குப் பிறகு வழங்குவதாக இருந்தால், குறைபாடுகள் வரும். குறைபாடுகள் எதுவும் வராமல் இத்திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசு முயற்சிக்க வேண்டும். நிறைய பேச இருந்தாலும், மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் மணியை அடிக்க கையை எடுப்பதால் ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். இந்த வருடம் மாதிரி இல்லாமல் அடுத்த வருடத்திலிருந்தாவது இந்தமாதிரி எந்தக் காரியத்தையும் சுயேச்சையாகச் செய்ய இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி, உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வதையும் மக்களை ஏமாறச் செய்கிற போக்கினையும் மாற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அதற்கு மாறாக "எங்களுக்கு இருக்கிற அதிகாரம் இவ்வளவுதான். ஆனால் மத்திய அரசுக்கு இருக்கிற அதிகாரம் இவ்வளவு" என்று சொல்ல வேண்டும். "மாநில அரசுக்கு இருக்கிற அதிகாரம் குறைவு. ஆகவே நிறைய செய்ய முடியவில்லை" என்று மக்களுக்கு ஒளிவு மறைவு இல்லாமல் தெரிவித்து மக்களுடைய ஆதரவைக் கோர வேண்டும். அதற்கு மாறாக இப்படி விளம்பரம் செய்வது கூடாது. மத்திய அரசோடு மாநில அரசும் சேர்ந்து மக்களை ஏமாற்ற முற்படும்போதுதான், உண்மையான ஏமாற்றுக்காரன் யார் என்று மக்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அடுத்து, ஒரே ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறேன். இன்றைக்கு உற்பத்தி-விற்பனை கூட்டுறவு சொசைட்டீஸ் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது இன்னொரு ஏமாற்று வேலை. இதை வேண்டுமென்று சொல்லுகிறார்களா, இல்லை தெரியாமல் சொல்லுகிறார்களா? இதுபற்றி என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உற்பத்தி-விநியோகம் கூட்டுறவு சொசைட்டீஸ் ஏற்படுத்த இருக்கிறார்களே. அதுபற்றி நான் ஒன்று சொல்கிறேன். இன்றைக்கு நாட்டிலே 54 ஆயிரம் கோடி ரூபாய் கள்ளப் பணம் நடமாடுகிறது. இவர்களை நாட்டில் உலாவ விட்டு விட்டு அரசு கூட்டுறவு சொசைட்டிஸ் ஏற்படுத்தி இடைத்தரகர்களை ஒழிக்க முடியுமா? இடைத்தரகர்களை ஒழித்து விடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டிலே 54 ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிகமாகக் கள்ளப் பணம் புழங்குகிறது. இவர்கள் எந்தவிதமான இன்கம்டாக்ஸ் போன்றவற்றையும் கூட கட்டுவதில்லை. அவர்களை ஒழிக்க மத்திய அரசும் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஆகவே உற்பத்திப் பொருள்களை அவர்களே வாங்கி வாங்கிக் குவித்து வைத்து விடுகிறார்கள். விலைவாசி உயரும்போது, அந்தப் பொருள்களை வெளியே கொண்டு வந்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் உற்பத்தி-விற்பனைக் கூட்டுறவு சொசைட்டிகளை ஏற்படுத்தி, விவசாயிகளுக்குக் கட்டுபடியான விலை கொடுப்பதோடு, வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்களே, உண்மையில் இவர்களுக்கு நியாயம் கிடைக்குமா? மக்கள்தான் அரசு சொல்லியிருப்பதை ஒத்துக்கொள்வார்களா? இடைத் தரகர்கள் என்பவர்கள் யார்? கள்ளப் பணத்திற்குச் சொந்தக்காரர்கள்தான் இடைத்தரகர்கள். அவர்களிடமிருந்து கள்ளப் பணத்தை மத்திய அரசே பிடுங்க முடியவில்லை. இப்படி மத்திய அரசே அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும்போது, அவர்களைக் கட்டுப்படுத்தி, கிராமப்புற விவசாய மக்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க ஆவன செய்வோம் என்று சொல்வது ஏமாற்று வேலை இல்லையா? இது எப்படி சாத்தியப்படும்? இப்படியெல்லாம் திட்டங்களைப் பற்றி நேரத்திற்குத் தகுந்தவாறு பட்ஜெட்டில் ஏதாவது சொல்லுகிறார்கள். ஆனால் பிறகு கண்டிஷன்கள் எல்லாம் போடுகிறார்கள். அல்லது செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிச் செய்வது சரியல்ல. துறையினுடைய செயலாளர் இருக்கிறார்; அவருக்கு இதுபற்றித் தெரியாதா? கள்ளப் பணத்தை வைத்திருப்பவர்கள் பிளாக் மார்க்கெட் செய்வது அவர்களுக்குத் தெரியாதா? தஞ்சையிலுள்ள நெல் முழுவதையும் வெளியே போக விடாமல் முடக்கி வையுங்கள். கள்ளப் பணத்தை வைத்திருக்கும் வியாபாரிகள் வெளியேயிருந்து வாங்கிக் கொள்ளட்டுமே; அரசாங்கச் செயலாளர்களுக்கும் இதுபற்றித் தெரியும். இதுபற்றி வளர்ச்சி மன்றத்தில் கூட பேசிவிட்டார்கள். இடைத்தரகர்களை எப்படி ஒழிக்க முடியும்? இப்படி காரிய சாத்தியமற்ற திட்டங்களை, தற்காலிகமாக மக்களுக்குச் சொல்கின்ற நிலையை அரசு கைவிட்டு விட்டு, யதார்த்தமாக இந்த அரசுக்கு இருக்கின்ற உரிமையை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி, மக்களுடைய ஆதரவைக் கேட்டுக்கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டு, இந்த அளவோடு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.





**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரக்கூடிய ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டக் கொள்கைகளை அறிவிக்கும்போது, கூடுதல் வருமானம் வந்த பின்னும் ஒரு பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கக்கூடிய நிலையை நம்முடைய மாநில அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது நம்முடைய மாநில அரசு எத்தகைய நிதி நிலைக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நமக்குத் தெரிய வைத்திருக்கிறது. அதற்கான காரண காரியங்களை இந்த அரசு சொல்வதைவிட, இன்றைய கால கட்டத்தில் மத்திய மாநில அரசுகள் இரண்டுமே ஒரு பற்றாக்குறை பட்ஜெட் தயாரிப்பது என்கிற நிதிநிலைக் கொள்கையை ஒரு நிலை நாட்டப்பட்ட கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில்தான் இந்த நிதி நிலை அறிக்கையும் வந்திருக்கிறது. இந்த ஆண்டு மட்டுமல்ல, சென்ற ஆண்டு மட்டுமல்ல, அதற்கு முன்பும் கூட பற்றாக்குறை பட்ஜெட்டை வைத்து விட்டு, அதற்கான காரண காரியங்களை அல்லது வாதங்களை அதற்கு மேல் கூறியிருக்கிறார்கள். ஆனால் நாட்டின் நடப்பும் வாழ்க்கையும் வேறு விதமான நிலைமைகளை வலியுறுத்துகின்றன. பற்றாக்குறை பட்ஜெட் என்று வரும்போது, பற்றாக்குறையைச் சரிக்கட்டி சாதாரண மக்கள் மீது வரி போடுகின்ற ஒரு கொள்கை இருந்து வருகிறது. இப்படி ஏன் பற்றாக்குறையைச் சரிக்கட்ட வேண்டும்? பற்றாக்குறை ஏற்படும் முறையிலே

வரவு-செலவுத் திட்டத்தை வகுத்துவிட்டு, அதைச் சரிக்கட்ட சாதாரண மக்கள் மீது வரி போடுகிற ஒரு நிதிக் கொள்கையைத்தான் இன்றைக்கு மாநில அரசும் மத்திய அரசும் கடைப்பிடித்து வருகின்றன. இந்த இடத்திலே மட்டும் மாநில மத்தியக் கொள்கைகள் வேறுபடவில்லை. வள்ளுவர்பற்றி ஒரு சிறு தாவா நடந்தது. வள்ளுவர் நெறி வகுத்துத் தந்தவர். பொருளாதார நியதிகளை மேற்கோள் காட்டி அவருக்கு ஒரு வேதனையை ஏற்படுத்தியிருக்கக்கூடாது. அவர் சமுதாயத்திற்கு நெறி வகுத்தவர். பொருளாதார நியதிகளை எல்லாம், இப்படி இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற நெறி முறைகளை வகுத்தாரில்லை. இந்த இடத்திலே வரி போடுவது என்று சொன்னால், பற்றாக்குறையைச் சரிக்கட்டத்தான் போடப்படுகிறது. அதுவும் யார் மீது வரி போடப்படுகிறது? சாதாரண மக்கள் மீது. எங்கே யாவது வசதியுள்ளவர்கள் மீது வரி போடப்பட்டிருக்கிறதா?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வள்ளுவர் பொருளாதார நெறி முறைகளை வகுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அரசாளுபவர்களுக்கு அவர் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். அதைத்தான் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தமிழர்களுடைய பொருளாதாரம் செழிக்க என்ன செய்ய வேண்டும் என்பதற்கு வள்ளுவருடைய குறளே ஆதாரம்.

**திரு. ப. மாணிக்கம்:** நான் குறளுக்கு உள்ளே போக விரும்பவில்லை. என்றாலும் பிரச்சினை என்று வந்து விட்டதால், ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

வள்ளுவர் ' பொருள் ' என்று சொன்ன காரணத்தினாலே 'பொருளாதாரம்' அல்ல. பொருளாதார விஞ்ஞானம் என்பது பிற்காலத்திலே வளர்ச்சியுற்ற ஒரு விஞ்ஞானம். வள்ளுவர் அவர்கள், அந்தக் காலத்தில் சமூகம் வாழ்ந்த முறையைக் கண்டு ஒரு நெறி வகுத்தார். அரசுக்கும், மக்களுக்கும் மற்ற எல்லோருக்கும் ஒரு நெறி முறையை வகுத்தார். அதுபோன்ற நெறியை இப்போதும் வகுக்கலாம். இப்போதும்கூட, வள்ளுவன் போன்ற மேதை, ஆசான் இல்லாவிட்டாலும், பல பெரிய அறிஞர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு உரைநடையிலே அதைச் சொல்லலாம். உரைநடை வளராமல் இருந்தபோது கவிதைகளிலே சொன்னார்கள். இப்போது உரைநடை வளர்ந்திருக்கிறது. அதிலேகூட சொல்லலாம். இப்போது நாட்டுக்கு ஒரு காந்தி தேவை, அவரைப்போன்ற தன்னலமற்ற அரசியல்வாதி தேவை என்றும்



சொல்கிறோம். அப்படி இந்த பட்ஜெட்டிலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியெல்லாம் போட்டு, அதையெல்லாம் காட்டி பட்ஜெட் வகுக்க முடியாது. வள்ளுவர் காட்டிய நெறி என்பது வேறு. பொருளாதார நெறிகளுக்கு அதை மேற்கோள் காட்டுவது என்பது ஒத்துவராது, அது வேறு. நினைத்தால் மட்டும் போதாது. வள்ளுவரின் படத்தை சுவற்றில் மாட்டி வைத்துக்கொண்டு அவர் சொன்னதுபோல நடக்காமல் இருக்கிறோமே அந்தக் காரியம் வேறு. வந்த பட்ஜெட்டிலே கூட ஜனங்கள் மீது வரி போடப்பட்டிருக்கிறது. இப்படிப் போடப்பட்டிருக்கும் வரிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஜனங்களைப் பாதிக்கிறது. நேரடியாகப் போடப்படும் வரியையும், மறைமுகமாகப் போடப்படும் வரியையும் பார்த்தால், இந்த நாட்டிலே நேரடியாகப் போடப்படும் வரி ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு இரண்டு விஷயங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று 'வறுமையின் வளர்ச்சி', இன்னொன்று ' மக்கள் மீது போடப்படும் வரி '. இந்த இரண்டையும் மாற்றுவதற்கு நாம் வழிவகைகளைக் காண வேண்டும். வரவு-செலவுத் திட்டத்திலே இந்த மாநில அரசு கையாண்டிருக்கும் கொள்கையை நான் புரிந்துகொள்கிறேன். என்னுடைய கட்சி கொண்டிருக்கும் கொள்கையின் அடிப்படையிலே வரவு-செலவுத் திட்டம் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், இன்றைக்கு மாநில அரசிடம் இருக்கும் வாய்ப்பு, வசதிகளை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். மத்திய அரசை எடுத்துக்கொண்டால் கூட, எப்படியெல்லாம், எந்தப் பின்னணியில் இதையெல்லாம் செய்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். நம்முடைய நாட்டிலே இருந்த முகலாய சாம்ராஜ்யத்தையும், சோழ சாம்ராஜ்யத்தையும் பார்த்தால், நிலைமை புரியும். இங்கே வரலாறு தெரிந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இருக்கிறார்கள். சோழ சாம்ராஜ்யம் களப்பிரர்களால் அடித்து நொறுக்கப்பட்டது? ஏன் அப்படிச் செய்தார்கள், அவ்வளவு சக்தி வாய்ந்தவர்களா அவர்கள் என்று பார்த்தால், அவர்கள் காலத்திலே நாட்டிலே வரிச் சுமை கொடுமையாக இருந்ததுதான் அதற்கு முக்கியமான காரணம் என்ற நிலைமை இருக்கிறது. எனக்குத் தெரிந்த விஷயத்தைச் சொல்கிறேன். அப்போது நீர்ப்பாசன வசதி இல்லை. ஆனால் ஏராளமான வரி போட்டார்கள். அதைப் போலவே, வரிகளை ஏற்றி ஏற்றி மொஹலாய சாம்ராஜ்யம் அழிந்தது. அந்தச் சீரழிவைப் பயன்படுத்தி அந்நியர்கள் இந்த நாட்டிலே வந்துவிட்டார்கள். தமிழ் நாட்டிலே உள்ள பிரச்சினைகளைப்பற்றிப் பேசினாலும், இந்தக் கொள்கை மத்திய அரசையும் சாரும். ஆனால், நாம் நம்முடைய மாநில அளவிலே இருக்கும் நிலைமைகளையும்

பார்க்க வேண்டும். வரி போடும்போது சாதாரண மக்களை பாதிக்கும் அளவிலே வரி போடக்கூடாது. பேரவையிலே விவாதம் நடந்தபோது எழுந்த கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பட்டு மீது போடவிருந்த வரியைக் கைவிட்டு விடுவதாக அறிவித்தார்கள். மேலவையிலேயும் நாங்கள் பிரதிநிதிகளாக இருக்கிறோம். பேரவையிலே மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இங்கேயும் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். பேரவையின் உறுப்பினர்களைப்போல, இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் மக்களிடமிருந்து நேரடியாக வாக்குகளை வாங்காவிட்டாலும், நாங்கள் சொல்வதையும் கவனத்திலே கொண்டு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு நட்டு கழற்றப்பட்டால்கூட, வண்டி ஓடாது என்ற கண்ணோட்டத்தோடு பார்த்துச் செயல்பட வேண்டும். இந்த அரசு பிஸ்கெட் மற்றும் சாக்லெட் போன்றவற்றுக்கு போட்டிருக்கும் வரியை நீக்க வேண்டும். பட்டினியால் வாடும் குழந்தைகளுக்குப் பால் தருவது எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது இது. இரண்டுக்கும் இல்லாவிட்டாலும்கூட, சாக்லெட் மீது போடப்பட்டிருக்கும் வரியையாவது நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகள் போகும்போது ஒரு சாக்லெட் வாங்குவார்கள். அதற்கென்று வீட்டிலே அம்மாவிடம் சண்டை போட்டு காசு வாங்குவார்கள். சாக்லெட்டின் விலை 5 காசு என்றால், அம்மாவிடமிருந்து அதற்கு மேலே ஒரு காசு கூட வாங்க முடியாது. இப்போது அவைகளின் விலை 7 காசு என்ற அளவிலே உயர்ந்திருக்கிறது என்றால், எப்படி அவர்கள் வாங்க முடியும்?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** சாக்லெட்டின் விலை 1½ ரூபாயிலிருந்து 2 ரூபாய் வரையிலும் இருக்கிறது. 5 பைசாவுக்கு சாக்லெட் எந்த கம்பெனி தருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், நானும் வாங்கிச் சாப்பிட உதவியாக இருக்கும்.

**திரு. ப. மாணிக்கம்:** பாரி கம்பெனி 5 காசுக்கு சாக்லெட் தருகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாக வாங்கிச் சாப்பிடலாம்.



**திரு. ப. மாணிக்கம்:** ஆகவே, குழந்தைகள் உபயோகிக்கும் இந்த அயிட்டத்தின் மீதாவது போடப்பட்டிருக்கும் வரியை நீக்க வேண்டும். மேலவை உறுப்பினர்கள்தானே கேட்கிறார்கள் என்று பார்க்காமல், கண்டிப்பாக இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்தால், அரசுக்கு வரும் வருவாயை இது பாதிக்கும் என்று சொன்னால், பட்டின் மீது போட்ட வரியை எப்படி நீக்கினார்களோ அப்படியே இதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வரி போடுவதைப் பொறுத்த வரையில், இப்படி மறைமுக வரி போடுவது என்பது நாட்டிலே வகுக்கப்பட்ட கொள்கையாக இருப்பதால், அதைச் செய்யாமலிருக்க முடியவில்லை என்று சொன்னாலும், அந்தக் கொள்கையிலே மாறுதல் செய்ய வேண்டும். நான் சர்க்காருடன் மோத வேண்டும் என்று இதைச் சொல்லவில்லை. அண்ணா அவர்கள் கூறியதாகக் கூறி அந்தக் கருத்தை நினைவுபடுத்தியிருக்கிறார்கள். இப்போது மாநில அரசுக்கு ஏராளமான சுமை இருக்கிறது. மாநில அரசுக்கு என்று உள்ள 4 பொருட்களின் மீது மத்திய அரசு வரி போட்டிருக்கிறது. மாநில அரசுக்கு வரும் உபரி வருமானம் 'சேல்ஸ்-டாக்ஸ'-லேயிருந்து வருகிறது. அதிலேயும் 4 பொருட்களை மத்திய அரசு எடுத்திருக்கிறது. இதுபற்றி சட்டப் பேரவையிலும், சட்டமன்ற மேலவையிலும் ஒரு தீர்மானம் கொண்டு வந்து 'இதை எடுக்கக்கூடாது' என்று கொண்டுவர வேண்டும். மத்திய அரசு இப்படிச் செய்வதன் மூலம் மாநில அரசினுடைய வாய்ப்பு வசதிகளைக் கெடுத்துவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வரியை எடுக்கக்கூடாது, மாநிலங்களின் உரிமையைப் பறிக்கக்கூடாது என்ற அளவிலே ஏகோபித்த ஒரு தீர்மானத்தை நாம் கொண்டு வர வேண்டும். மாநிலங்களுடைய வருவாயைப் பாதிக்கும் இந்த விஷயத்திலே தேவையான நடவடிக்கை எடுப்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும், முரண்பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களிலே சில குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றிச் சொல்கிறேன். டாக்சேஷனைக் குறைப்பது மிகவும் நல்லது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதைப் பரிசீலிக்க வேண்டும். இன்டிரைக்ட் டாக்ஸ், டிரைக்ட் டாக்ஸ் என்பதிலேயெல்லாம் இன்றைக்கு வருமானம் வருகிறது. இப்போது நாம் பாக்கு வாங்கினாலும் அல்லது ஒரு கடையிலே சென்று 'டீ' குடித்தாலும், அதிலே மறைமுக வரி உண்டு. கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஏ. கே. கோபாலன் அவர்கள் இந்த நாட்டிலே வரி கொடுக்காத பிச்சைக்காரன் கூட கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே 'பீடி, சாயா' வாங்கினாலும்

[திரு. ப. மாணிக்கம்] [1982 மார்ச் 10

அதற்கெல்லாம் வரியுண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே மறைமுக வரி அந்த அளவுக்கு இருக்கிறது. மறைமுக வரியை அதிகரிக்கக் கூடாது என்ற கொள்கைபற்றி, மாநில அரசு மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டும். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற அளவுக்கு பழமொழி இருக்கிறது. மேலும், தமிழக அரசு போட்டிருக்கும் இந்த மறைமுக வரியையும் நிக்க வேண்டும் அப்படிச் செய்தால் மாநில அரசுக்குக் கெட்ட பெயர் வராது. ஏழையானாலும், கல்யாணம் என்று சொன்னால், ஒரு பட்டுப் புடவை வாங்கித்தான் ஆக வேண்டும். பட்டின் மீது வரி என்றால், என்ன நிலைமை ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் நல்ல வேளையாக இப்போது குறைத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

வரியைப் போட்டவுடனே பட்டின் விலையைக் கூட்டி விடுவார்கள். அது மட்டுமல்ல. பட்டு நெசவு செய்யும் தொழிலாளர்களின் கூலியையும் குறைத்து விடுவார்கள். ( எனவேதான் பட்டு நெசவாளிகள் அனைவரும் கூக்குரல் கொடுத்தார்கள். எனவே இப்படி எதிலே சலுகை காட்ட முடியும் என்பதில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொள்கை சம்பந்தமானவற்றைக் குறித்து இதோடு முடித்துக்கொண்டு, வேறு சில விஷயங்களைப் பற்றி நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

கல்வி மானியக் குறிப்பில் பேச வாய்ப்பிருக்கிறது என்றாலும்கூட, கல்வித் துறையில் ஒன்றைப்பற்றி மட்டும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். பாலி டெக்னிக்கில் படிக்கும் மாணவர்கள் 3 ஆண்டு படித்த பிறகு, எஞ்சினியரிங் கல்லூரியில் சேருவதற்கான நிலை வரும்போது, அவர்கள் தங்களை இரண்டாம் ஆண்டு வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைத்துப் போராடி வருகிறார்கள். இது அரசுக்கு நிதிச் சுமையை ஏற்படுத் காத பிரச்சினை. அவர்கள் எல்லோரும் 10 ஆண்டுப் படிப்பு முடித்து, அதற்கு மேல் 3 ஆண்டுப் படிப்பையும் முடித்துவிட்ட பிறகு, எஞ்சினியரிங் கல்லூரியில் தங்களை இரண்டாம் ஆண்டு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கி றார்கள். காரணம் 10 ஆண்டுப் படிப்பு முடித்து அதற்கு மேல் இரண் டாண்டுகள் படிப்பை முடித்தவர்கள் எஞ்சினியரிங் கல்லூரியில் முதலாம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். எனவே அவர்களின் வாதத்தில் ஒரு இயற்கை நியதி இருக்கிறது. 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' இருக்கிறது. இளைஞர்கள் வாதாடுகிறார்கள் என்றால்கூட, அவர்கள் வாதத்தில் என்ன



1982 மார்ச் 10] [திரு. ப. மாணிக்கம்]

நியாயம் இருக்கிறது என்பதை அரசு பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சி னையைப் பொறுத்தவரையில், அரசு காலத்தில் பரிசீலனை செய்து ஒரு முடிவெடுக்க வேண்டும். இல்லையென்றால் வேலை நிறுத்தம், படிப்பில் சிக்கல் போன்ற நிலைமைகள்தான் உருவாகும். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட கொள்கை விஷயங்களில் இன்னும் சற்று அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும். 7, 8 ஆண்டுகளாக இருந்துவரும் பிரச் சினையாக இது இருக்கிறது. அதோடு இது மாநிலம் முழுவதும் உள்ள பிரச்சினை. அவர்களுக்கெல்லாம் ஏற்கெனவே வேலைவாய்ப்புக் குறைவு இருக்கிறது என்பது வாஸ்தவம்தான். என்றாலும் மூன்று ஆண்டுகள் படித்துவிட்டு முதலாவது ஆண்டில் சேருவது என்பது எந்த வகையிலும் சரி யில்லை என்பதால், இதைப்பற்றி அரசு உரிய முறையில் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாநிலத்தில் உள்ள டெக்னிகல் எஜு கேஷன் கவுன்சில் இதுபற்றிச் சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது. என்றாலும் அரசால் இதில் இன்னும் எந்த முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்று அறிகிறேன். அதிகமான தொழில் நுணுக்கம் பெற்றவர்கள் குறைவான ஞானம் பெற்றவர்களோடு சேர்ந்து படிக்கிற நிலையை அரசு எண்ணிப் பார்த்து, இதில் உரிய முடிவை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, காவல் துறையைப்பற்றியும், மதுவிலக்கைப் பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரணமாக ஏராளமாக வருவாய் அதிகரித்திருக்கிறது. சென்ற பட்ஜெட்டில் இல்லாத வருவாய் இந்த ஆண்டு நமக்குப் புதிதாகக் கிடைத்திருக்கிறது. தமிழ்நாட் டைப் பொறுத்தவரை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததாக பத்திரிகைகளில் வந்த கருத்துப்படி, சுமார் 138 கோடி ரூபாய் அதிகமான வருவாய் இந்த வகையில் அரசுக்குக் கிடைக்கும் என்பதாகும். என்னைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு இதன் மூலம் ரூ. 200 கோடிக்கு மேல் கிடைக்கும் என்பதுதான். அந்த அளவுக்கு எதிர்பார்க்கப்பட்டதால்தான், குழந்தைகளுக்குச் சத்து உணவு என்ற திட்டம் அரசாங்கத்தில் வகுக்கப்பட்டு 100 கோடி வரை செலவிடப்படுவதாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த வகையில் அரசின் வருவாய் இன்னும் சற்று அதிகமாகவே இருக்கும். அந்த அளவுக்கு வருவாய் கூடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நிச்சயமாகக் கூடும் என்றுதான் கருதுகிறேன்.

அரசு இப்படிச் சட்டமியற்றி, சில நிபந்தனைகளை வைத்து, செய்யும் போதுகூட அரசின் சட்டங்களையும் நிபந்தனைகளையும், அது வகுக்கும் விதிகளையும் அரசினுடைய இலாக்காக்களே—அதிலும் குறிப்பாக இவைகளைக் கண்காணிக்க வேண்டிய இலாக்காக்களே—அவைகளை நிறைவேற்ற முடியாமல் தவிப்பது என்பது ஒரு நிலை. மற்றொன்று அவைகளை மீறுவது என்கிற நிலை. அதாவது கள்ளச் சாராயத்தை தடுக்கப் போகும் போது, மிகவும் பலம் வாய்ந்த சக்திகளோடு மோத வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதன் காரணமாக காவல் துறையைச் சார்ந்தவர்கள் தயங்குகிறார்கள். இது ஒரு நிலை, இன்னும் சில இடங்களில் இந்த வம்பே நமக்கு வேண்டாம், நமக்கு வருகிற ஆதாயத்தைப் பார்த்துக்கொண்டு நாம் போவோம் என்ற நிலையில் சில காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளே செயல்படுகிறார்கள். இதன் காரணமாக அரசுக்கு வரவேண்டிய வருவாய் குறைகிறது. இப்படி இரட்டை நிலை இருக்கிறது. அதாவது ஒன்று அதிகாரிகளிடம் சட்டத்தை அமுல் செய்வதில் ஒரு தயக்கம். அடுத்தது இந்த அரசுக்கு ஏற்படுகிற வருவாய் நட்டம். அதோடு இதன் காரணமாக ஒரு துறையே ஊழலுக்கு ஆளாகிறது. மதுவிலக்குத் தளர்ச்சி வந்த பிறகு, இந்த நிலைமை நீடிக்கிறது என்றால், அது சரியல்ல. மது அருந்துவதை நான் சரியென்று கருதவில்லை. அது வேறு விஷயம். இது என்னுடைய சொந்தக் கருத்து. ஆனால் பொருளாதார அடிப்படையில் இந்த ஒரு விஷயத்தில் அரசு ஒரு கொள்கையை வகுத்து அதற்கான முறையில் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்ட பிறகு, அதைச் செயல்படுத்தும் துறை அல்லது அதை நிறைவேற்றும் துறையின் பிரிவு ஊழலுக்கு இரையாவது என்பது நல்லதல்ல. இது அரசையே சீர்குலைக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இதன் காரணமாக அரசு, தன்னுடைய தவறினாலேயே பலகீனப்படும் ஆபத்து இருக்கிறது என்பதை உணர வேண்டும். காவல் துறையில் இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் வருவதற்குக் காரணம் கள்ளச் சாராயத்தில் ஈடுபட்டுள்ள பெரிய சக்திகளாகும். எனவே இத்தகைய நிலைமைகளை அகற்றுவதற்கும் தடுப்பதற்கும் அரசு இன்னும் தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஆட்களைக் கூப்பிட்டு போலீசை விட்டு அடிக்கச் சொல்லவில்லை. போலீஸ் பார்ட்டிகளை அனுப்பி எல்லா இடங்களையும் ரெய்டு செய்து, பானைகளை உடைத்து, குடிசைகளைப் பிரித்துப் போடச் சொல்லவில்லை. அவைகள் பலனைத் தராது என்பதால், நான் அவற்றைச் சொல்லவில்லை. ஆனால் எப்படி இவைகளைத் திறமையாக அகற்றுவது என்பதில் அரசு





தீவிரமாக முயற்சிக்க வேண்டும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பல்வேறு விதமான உபாயங்கள் இருக்கின்றன. உதாரணமாக, உண்மையான மதுவை எந்த அளவுக்கு மலிவாகக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு மலிவாகக் கொடுக்க முன்வர வேண்டும். அதன் மூலம் அரசின் வருவாய் அதிகமாகும். அந்த வருவாயை வைத்துக்கொண்டு அரசு அபிவிருத்தித் திட்டத்திற்குப் பயன்படுத்த முடியும்.

நமது மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, மாநில போலீஸ் கமிஷன் போடப்பட்டு, அது தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்குத் தந்திருக்கிறது. அதைப்போலவே தேசிய அளவில் நேஷனல் போலீஸ் கமிஷன் போடப்பட்டு அதுவும் தன்னுடைய சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அந்த வகையில், காலத்திற்கு ஏற்றவாறு காவல் துறையில் நாம் மாறுதல்களைக் கொண்டுவர வேண்டும். இப்போது இருக்கும் இரண்டு நிலைமைகளை நாம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றையதினம் காவல் துறையில் ஒரு பகுதியினரிடம் சட்டத்தை மதிக்கும் போக்கு இல்லாமல் இருக்கிறது. சட்டத்தை மதிப்பது மட்டுமல்ல, சட்டத்தை மீறுகிற போக்கும் காவல் துறையில் மலிந்து வருகிறது. நிறைய உதாரணத்தை என்னாலே சொல்ல முடியும் என்றாலும், ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு இடங்களில் இரண்டு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு இடத்தில், அதாவது தெங்கனிக்கோட்டா தாலுக்காவில் ஒரு இனாம்தாரர் இருக்கிறார். அவருக்கு 2,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில் விவசாயிகள் சாகுபடி செய்கிறார்கள். அந்த இனாம்தார் போய் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்கிறார். அந்த இனாம்தார் உதவிக்கு போலீஸ் வந்து, அந்த நிலத்தில் இருந்த நெல் அனைத்தையும் அவர் அறுத்துப் போகிறார். சட்ட ரீதியாக அது தவறு. ஆனால் சட்டத்திற்கு விரோதமாக நெல்லை அறுத்துச் செல்வதற்கு காவல் துறை உடந்தையாக இருக்கிறது. அது மட்டுமல்ல, அந்த விவசாயிகளில் ஆண்களைக் காவல் துறையினர் கைது செய்து சிறையில் வைக்கிறார்கள். அந்த இனாம்தார் தன்னுடைய பண்ணையாட்களை வைத்து, தன்னுடைய கூலியாட்களை வைத்து நெல்லை அறுத்துக் கொண்டது மட்டுமல்லாமல், அந்த விவசாயிகளின்—அதாவது கைது செய்யப்பட்ட விவசாயிகளின்—குடும்பப் பெண்களைக் கற்பழித்து பலாத்காரம் செய்திருக்கிறார்கள். இது இரண்டாவது குற்றம். முதலில் சட்டத்தை மீறினார்கள். அதற்கு போலீசே உடந்தையாக இருந்தார்கள். சாதாரணமாகப் பாதுகாப்பு தரவேண்டிய போலீசே அதற்கு

உடந்தையாக இருந்திருக்கிறது. அதோடு தில்லாமல் விவசாயிகள் வீட்டுப் பெண்களைக் கற்பழிக்கவும் காவல் துறையினர் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். இதற்கு மேல் நான் போக விரும்பவில்லை. இப்படி காவல் துறையினரே சட்டத்தை மீறுபவர்களுக்கு உடந்தையாக இருந்தால், இது எவ்வளவு நாளைக்கு நடக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருவள்ளுவரே சொல்கிறார். இத்தகைய கொடுமைகள் எத்தனை நாளைக்கு நடக்கும் ? எனவேதான் மீண்டும் சொல்கிறேன், காவல் துறையினர் சட்டப்படி நடக்க வேண்டும். சிவில் மேட்டர்களில் கோர்ட்டுக்குப் போக வேண்டிய விஷயங்களில் கோர்ட்டுக்குப் போகச் சொல்ல வேண்டும். ஆண்களை லாக் அப்பில் வைத்துவிட்டு பெண்களைக் கற்பழிக்க உடந்தையாக இருப்பது சரிதானா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். சட்டத்தை இவர்களே மீறுவது சரிதானா என்பதையும் பார்க்க வேண்டும். நிர்வாகம் இப்படி இருந்தால், அரசின் நிலை என்னவாகும்? சென்னையில் கோட்டையில் உள்ளவர்களுக்கு இந்த விவரங்கள் முறையாக வந்து சேர வேண்டுமென்றால், அங்கே உள்ள ஸ்பெஷல் பிரான்ச் இவைகளைப்பற்றிச் சரியான அறிக்கைகளையும் செய்திகளையும் தெரிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் நீடிக்குமானால், காவல் துறை ஒன்று மட்டுமே இந்த ஆளும் கட்சியை வீழ்த்திவிட முடியும். வேறு பகையே தேவையில்லை. எனவே காவல் துறையை முதலில் அரசு சீர் செய்ய வேண்டும். நான் எல்லோரையும் சொல்லவில்லை. சில குறிப்பிட்ட அதிகாரிகள் தங்களுக்கு 1000, 2000 அல்லது 4,000 அல்லது 5,000 கிடைக்கிறது என்பதற்காக இப்படிப்பட்ட நிலைமைகளில் ஈடுபடுகிறார்கள். எந்த அரசும் விவசாயிகளுக்குத் தீங்கிழைத்துவிட்டு, அவர்களைச் சீரழித்துவிட்டு, நீடிக்க முடியாது. இது நல்ல அரசியலும் அல்ல. இதுபோன்ற நிலைமைகள் ஏற்படக்கூடாது, இனி நடக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மூற்பகல் 11-10)

இன்னுமொரு விஷயம். தர்மபுரி மாவட்டம் நல்ல வனவளம் உள்ள இடம். அங்குள்ள காடுகளில் தேக்கு சந்தன மரங்கள் வெட்டப்படுகின்றன. சந்தன மரம் முளைத்ததும் வாசனை வராது. முளைத்து முப்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் வாசனை வரும். சந்தன மரத்திலே கதவு வைக்கலாமா என்றால் முடியாது, நிற்காது, உளுத்துப் போகும். சன்னல் வைக்கலாமா என்றாலும், வலுவு இருக்காது, வைக்க முடியாது. சந்தன மரங்களும், தேக்கு மரங்களும் அங்கே கடத்தப்படுகின்றன. அதை வனத்துறை அதிகாரி



பிடித்தபோது, " இன்னார் வீட்டுக்குப் போகிறது " என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அதிகாரி, யார் வீட்டுக்குப் போனாலும் விட முடியாது என்று மறுத்திருக்கிறார். பிறகு அவரைச் சரிக்கட்டப் பார்த்திருக்கிறார்கள், முடியவில்லை. பிறகு அவரை விட்டுவிட்டு, திருட்டு நகையை அவர் வாங்கியதாகக் கூறி கைது செய்து ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் , அடித்து துன்புறுத்தியிருக்கிறார்கள். அதை எதிர்த்து வனத் துறை அதிகாரிகள் ஊர்வலம் போனார்கள். பிறகு சமரசம் செய்து அதை முடித்து வைத்திருக்கிறார்கள். இதிலே எந்தக் கட்சிக்கும் சம்பந்தமில்லை. இரண்டு இலாக்காக்கள் இப்படி மோதிக் கொண்டிருக்கின்றன. வனத் துறையைச் சேர்ந்தவர்கள் தப்பு செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. தப்பு செய்கிறார்கள். அது வேறு இடத்திலே. இந்த இடத்திலே வனத் துறையைச் சேர்ந்தவர்கள் அப்படிச் செய்யவில்லை. வனத் துறையைச் சேர்ந்த மரம் கடத்தப்படுகிறது என்பதற்காக ஒழுங்காக தன்னுடைய கடமையைச் செய்ததற்காக காவல் துறையினர் அவரை அடித்துத் துன்புறுத்தி பொய் வழக்குப் போட்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினரை அடித்துக்கொண்டிருக்கிறார்கள்—நாங்கள் வாங்குகிறோம். நேரம் வரும்போது பதில் கொடுப்போம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பதிலா ? பதிலடியா ?

**திரு. ப. மாணிக்கம் :** அவசியமானால் பதிலடி. பதிலும் தருவோம், பதில் அடியும் தருவோம். இரண்டும் நேரத்தைப் பொறுத்தது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தமிழ் நாட்டிற்குரிய சொத்தை எப்படி வனத் துறை காக்க விரும்புகிறது, இன்னுமொரு துறை அதை அழிக்க விரும்புகிறது என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான். ஊரிலே மற்றவர்கள் செய்வது வேறு இருக்கின்றன. கோயம்புத்தூரில் கழுவாய் என்ற பகுதியில் பல வளமையான மரங்கள் இருக்கின்றன. அங்கு லாரிகளை விடாமல் இருந்தால், பத்துப் பதினைந்து வருடங்களில் மரம் நன்றாக வளரும் என்று சொல்லுகிறார்கள். அதைப் போலவே திருநெல்வேலி ஜில்லாவில் அருமையான மரங்கள் இருந்தன. குறிஞ்சித் தேன் கிடைக்கும். இப்போது மரங்கள் மொட்டையாக நிற்கின்றன. தமிழ்நாடு—கர்நாடகா எல்லையில் சந்தன மரங்கள், ஐவ்வாது மரங்கள் எல்லாம் தொன்றுதொட்டு வளர்ந்து வரும் செல்வங்கள். வீட்டுக்கு ஒரு மரம் என்று பஸ்ஸில் எழுதி வைத்துக்கொள்ளலாம். அதனால் பிரயோஜனம் இல்லை. காட்டில் நிறைய மரங்கள் இருந்தால்தான் நீர்பிடிப்பு இருக்கும், மழை பெருகும் அதோடு வெள்ளமும் ஒழுங்குபட்டு இருக்கும். இல்லாவிட்டால் நில அரிப்பு

ஏற்படும். மரங்கள் என்பது நம்முடைய செல்வங்கள் மட்டுமல்லாமல், அவை நீர்ப்பாசன வசதிக்கும் மிக அவசியம். ஆகவே இயற்கையிலேயே அவற்றைக் காப்பாற்ற வேண்டியது அவசியம்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே மூன்று அம்சத்தைக் குறிப் பிட்டிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலே நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க ஒரு புதுத் திட்டத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். கேசரிகுளி ஹல்லா என்ற ஊர் என்று நினைக்கிறேன். நம் நாட்டில் எல்லையோரத்தில் உள்ள கன்னடப் பெயர்.

ஏற்கெனவே மூன்று திட்டங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒன்று, தென்னாற்காடு மாவட்டத்தில் நந்தன் கால்வாய் திட்டம். இரண்டு, திருநெல்வேலி மாவட்டத்திலே குடகனாறு திட்டம். அந்த வேலை எடுத்து எடுக்கப்பட்டு நின்றுவிட்டது. அதற்கான காரணங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. மூன்றாவது தர்மபுரி மாவட்டத்திலே கௌவரம்பள்ளி திட்டம். அதுவும் நிலச்சுவாந்தார் அம்மையார் தடை செய்து விட்டார்கள். நந்தன் கால்வாய் திட்டத்தால் தென்னாற்காடு மாவட்டத்திலே உள்ள விவசாயிகளுக்கு உதவி கிடைக்கும். தர்மபுரி மாவட்டத்தில் கௌவரம் பள்ளித் திட்டம்கூட ஓசூர் பகுதியில் தொழில் வளர்ச்சிக்கும், குடிநீர் வசதிக்கும் உதவி செய்யும். இந்த அறிக்கையிலே கேசரிகுளிஹல்லா திட்டம் பற்றி ஒன்றும் காணோம். அதிலே சிரமங்கள் இருந்தாலும், இந்த மூன்று திட்டங்களையும் வரக்கூடிய ஆண்டில் எடுத்து தொடர வேண்டும். ஏற்கெனவே எடுத்து பாதியிலே இந்தத் திட்டங்கள் இருப்பதால், இந்த ஆண்டில் பூர்த்தி செய்ய வேண்டும். மூன்று திட்டங்களும் மூன்று மாவட் டங்களில் இருக்கின்றன. இத்திட்டங்களைத் தொடருவதற்கு அரசு கவனம் செலுத்த வேண்டும். குடகனாறு திட்டத்தில் இருந்த சிக்கல் நீங்கி விட்டது. கௌவரம்பள்ளி திட்டத்திலே வேறுவிதமான சிக்கல் இருக் கிறது. அதைத் தீர்க்க அரசு முயற்சி எடுக்க வேண்டும். இது குடி நீர், பாசன வசதி பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதால், அந்த வட் டாரத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள்.

இன்னுமொன்று. நம்முடைய மாநிலத்தில் ஏழ்மையைக் குறைக்கக் கூடிய நடவடிக்கையில் சிவில் சப்ளைஸ் துறை இயங்கியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சரியான கணக்கு எடுத்து அரிசி விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா? இன்றைக்குள்ள நிலைமையில், அதிகமான



விலையேற்றத்தால், அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியமான பண்டங்களைத் தருவதற்கு சரியான முறையில் என்ன ஏற்பாடுகள் இருக் கின்றன? கூட்டுறவு முறையில் கொடுக்கப்படுகின்றன. மது கூட அப்படி கொடுக்கப்படுகிறது. சிவில் சப்ளைஸ் துறை அத்தியாவசியமான பண்டங்களை விநியோகம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். சென் னையில் ஒரு கூட்டுறவுக் கடை இருக்கிறது. கூட்டுறவுக் கடைகளின் மூலம் மது விற்கக் கூடாது என்பது கொள்கையாக இருக்க வேண்டும். சிந்தாமணி கூட்டுறவு அங்காடி மது விற்பதை மேற்கொண்டிருக்கிறது. மது விற்பதற்காக அனுமதி வாங்கி, மது கடத்தப்பட்ட கணக்கைச் சரிக்கட்ட தீ வைத்த சம்பவம் என்று ஒன்று நடத்தி கணக்கை 'குளோஸ்' ஆக்கி விட் டார்கள் என்று சொல்லப்படுகிறது. பல இலட்சக்கணக்கான ஆதாயம் வீணாகிவிட்டது. தீ விபத்தைத் திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுக்க விரும்புகிறேன் என்றாலும், முறைப்படி அனுமதி பெறாததால், இப்போது தருவது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன். இருந்தாலும், கூட்டுறவுத் துறையில் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. அதே மாதிரி அரிசி, பருப்பு போன்ற பொருள்களிலும் நடக்கின்றன. இதைத் தடுக்க என்ன நட வடிக்கை எடுக்க இருக்கிறது? அரசு நிர்வாகத்திலே இருப்பவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற கவனம் செலுத்த வேண்டும்.

அதைப் போலவே சிமெண்ட். இதை வாங்குபவர்களில் 60 சதவீதம் பேர் தான் உண்மையாகவே சொந்த வீடு கட்டுவதற்காக அதை உபயோகப் படுத்துகிறார்கள். உண்மையாகவே உபயோகப்படுத்துபவர்களுக்கு தாமதம் இல்லாமல் கொடுக்க புதிய விநியோக முறை என்னவென்று சொல்லப்பட வில்லை. சிமெண்ட் விநியோக முறையில் கடந்த காலத்திலே இருந்த ஊழல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ் நாட்டில் வறட்சி நிலைமை இருக்கிறது. இராமநாத புரம் மேற்குப் பகுதியில், சில பகுதிகளில் வறட்சி நிலைமை நிலவுகிறது. அங்கே குடி தண்ணீருக்கு வறட்சி இருக்கிறது. கடுமையான வறட்சி வந்த பிறகுதான், பணிகளை மேற்கொள்வது என்பதை விட முன்கூட்டியே குடி நீர் வசதிக்காக அரசு துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டில் வறட்சி நிலைமை வந்தபோது தாமதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டதைப் போல் இல்லாமல் காலத்திலே மேற்கொள்ள வேண்டும். பல வேலைகளைச் செய்வதில் குறைபாடுகள் ஏற்பட்டதால், அதனுடைய பலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய புகார்களை

இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்பவில்லை. அந்த மாதிரி குறைபாடுகள் வராமல், காலத்திலேயே நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வர வேண்டும்.

மின்சாரக் கட்டணத்தைக் கொஞ்சம் உயர்த்த வேண்டிய நிலைமை வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே விவசாய உற்பத்திக்குச் செலவு அதிகமாக இருக்கிறது. இடுபொருள்களுக்கு அதிகமாகச் செலவு ஏற்படும்போது, விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை உயர்த்தினால், ரொம்ப கஷ்டம் ஏற்படும்.

(முற்பகல் 11-20)

குறிப்பாக விவசாயிகள் மின்சாரக் கட்டண உயர்வால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மின்சார உற்பத்திக்கு ஏற்கெனவே உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது என்று அரசு சொல்லிக்கொண்டு வருகிறது. அந்த உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்தினால், மின்சாரக் கட்டணம் என்பதை விவசாயிகளுக்கு உயர்த்தினால், விவசாயிகள் கஷ்டம் இன்னும் அதிகமாகிவிடும். அதனால் விவசாயமே ஸ்தம்பித்துப்போகும். மின்சாரக் கட்டணத்தை உயர்த்தலாமா வேண்டாமா என்பது பற்றிய பிரச்சினைக்குப் போகவில்லை. இதற்குக் காரணம் கூறுகிறேன். அந்த விவசாயிகளுக்கு ஏற்கெனவே செலவுக்குக் கூட கட்டுப்படியாகவில்லை. இதற்குக் காரணம் மாநில அரசு என்று சொல்ல மாட்டேன். மத்திய அரசு விலை நிர்ணயக் கொள்கையிலே குறிப்பிட்டிருக்கிறது. கோதுமைக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நெல்லுக்கு விலை கூட்டவில்லை என்று சொல்லியிருக்கிறது. தமிழ் நாட்டில் நன்செய் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே விலைகள் குறையாமல் இருக்கின்றன. இந்த நிலையில் அவர்களுக்கு மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படுமானால், மீண்டும் விவசாயிகள் கொந்தளிப்பு வரும். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எப்படி விற்பனை வரி இருக்கக்கூடாது என்று சொல்கிறோமோ, அதுபோல நம்முடைய நெல்லுக்கு விலை கூட்டுவதற்கும் மேலவையிலும் பேரவையிலும் நாம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப வேண்டும். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை. எனவே நம்முடைய விளை பொருள்களுக்கு நல்ல விலை வேண்டுமென்பதை நாம் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இந்தப் பிரச்சினை எழுந்து மத்திய அரசு விவசாய விளை பொருள் கமிஷன் வைத்திருப்பதிலே விலையை நிர்ணயிப்பதிலே, பஞ்சாப் அனுபவத்தை வைத்துச்சொல்கிறார்கள், தமிழ் நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே



குறுவை பயிர்போல வைத்துச் சொல்கிறார்கள். பஞ்சாபில் விற்பனைக்காகவே செய்கின்றார்கள். ஆனால் தஞ்சையில் அப்படி அல்ல. நம்முடைய தமிழ் நாட்டில் உற்பத்திச் செலவு அதிகமாகி இருக்கிறது. நம்முடைய மாநிலத் திட்டக் கமிஷன் ஏற்கெனவே இதில் குறிப்புகளைத் தயாரித்திருக்கிறது. இதையும் வைத்து நாம் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். அதுமட்டுமல்ல. விளை பொருள்கள் விலை நிர்ணயக் கமிஷனிலே இந்த இந்த அளவுக்கு விலை வேண்டும் என்று சொல்ல வேண்டும். நாம் பரிசீலனை செய்து, மாநில அரசே ஒரு விவரமான மனுவை அனுப்பலாம். மாநிலப் பேரவை, மேலவை தீர்மானங்கள் மூலமாகவே அனுப்பி வைக்கலாம். தூதுகோஷ்டிகூட அனுப்பலாம். அதற்கு வேறு சூழ்நிலை வேண்டும். தேர்தல் நேரத்தில் அந்த மாதிரி சூழ்நிலையில் செய்வார்கள். ஆனால் நாம் அப்படிப்பட்ட நிலைமைகளுக்குப் போகாமல், தமிழ் நாட்டினுடைய மக்களுக்கு நெல்லுக்கு விலை கொடுப்பதற்கு, அவர்களுக்கு இருக்கின்ற பொருளாதார நெருக்கடிகளைச் சொல்லி, அந்த நிலைமைகள் உண்டாகியிருக்கின்றன என்று சொல்லி, அந்த உணர்வுகளை எடுத்து வைத்து இப்போது முயற்சிக்க வேண்டும். இந்த விலைகளைக் கட்டுப்படுத்துவது என்ற நிலைமைகள் தஞ்சாவூரில் இருக்கக்கூடாது என்று செய்ய வேண்டும். தஞ்சையிலே மாத்திரம் நெல் வெளியிலே போகக் கூடாது என்று சொல்லக் கூடாது. சென்ற ஆண்டு தஞ்சாவூரில் விலை குறைவாக இருந்தது. இந்தக் கரையில் தஞ்சாவூர் என்றால் அந்தக் கரையில் திருச்சி. திருச்சியிலே உபயோகிப்பவர்களுக்குக் கூடவே கிடைக்கிறது. ஆனால் தஞ்சையிலே இருப்பவர்களுக்குக் கிடைக்கவில்லை. இப்போது எல்லா இடங்களிலும் கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். இப்போது பல இடங்களிலே, வீட்டிற்கு அரிசி வேண்டும் என்று நெல்லை அரிசி ஆலைகளுக்கு எடுத்துச்சென்றால்கூட, ரெவின்யூ அதிகாரிகள் பிடிக்கிறார்கள் என்ற புகார்கள் வருகின்றன. திருநெல்வேலி மாவட்டம், தஞ்சை மாவட்டம் இப்படி பல இடங்களிலே இந்த நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்த நெல் நடமாட்டத்திற்குக் கட்டுப்பாடு என்ற பெயரிலே, அதிகாரிகள் எப்படியாவது கொள்முதல் செய்ய வேண்டும் என்பதற்காக சாதாரண மக்கள் நெல்லை உபயோகத்திற்குக் கொண்டு செல்வதைக்கூட தடுப்பது தவறு என்று சொல்லிக்கொள்கிறேன். நம் நாட்டிலே விலை நிர்ணயம் செய்யவில்லை. அதற்கு ஒரு உத்தரவாதம் அளிக்கவில்லை. கட்டுப்பாடு என்ற பெயரிலே

அப்படிச் செய்வது சரியல்ல. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்து நான் சொல்கிறேன் என்பதல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவரிடம் நான் வேண்டுகோள் விடவில்லை. காரணம், தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்தி என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. ஒரு காலத்தில் கியூபாவிலே திரு. கே. குவேரா என்ற புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட பயிரை மட்டும் வைத்துக்கொண்டு முன்னேற முடியாது என்று சொன்னார்கள். நான் ஒரு மேற்கோளுக்காகத்தான் இதைச் சொல்கிறேன். கியூபாவிலே கரும்புப் பயிர்தான் முக்கியமானது. அந்தக் கரும்புப் பயிரை அமெரிக்காக்காரர்கள் கொள்ளையடித்தார்கள். இப்போது அந்த நாட்டை ஆளுபவர்களாக அவர்களே இருக்கிறார்கள். அதை அவர்கள் இஷ்டம்போல் வெளியிலே விற்கிறார்கள். கட்டுப்பாடு இல்லாமல் அதிக விலைக்கு விற்கிறார்கள். நம் தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் நெல்லை மட்டும் தான் உற்பத்தி செய்கிறார்கள். வேறு பொருள்களை வேறு ஜில்லாக்களில் உற்பத்தி செய்கின்றார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்குக் கட்டுப்பாடு விதித்து கொடுமைப்படுத்தக்கூடிய முறையிலே இருக்கக்கூடாது என்று கேட்டு அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை இரண்டு கோணத்திலே காண வேண்டும் என்ற அவசியம் உருவாகியிருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் கேட்கின்றபோது, அதற்கு பதில் அளித்தார்கள். அப்படி பதில் அளிக்கின்ற போது, நிதிநிலை அறிக்கையினுடைய மூன்றாவது பாராவைப்பற்றிக் குறிப்பிட்டு அதிலே இருக்கின்ற ஆதாரங்களை எடுத்துச்சொன்னார்கள். அந்த மூன்றாவது பாராவிலே மேலும் சொல்லியிருக்கிறார்கள். 'மாநில மக்கள் தங்களுடைய குறைபாடுகளைக் களையவும், தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் பெரும்பாலும் மாநில அரசையே எதிர்பார்க்கிறார்கள். மாநில அரசுக்கு, மக்களை நல்வாழ்வில் வாழ வைப்பதற்கான பொறுப்புக்கள் அதிகமாக அமைந்திருந்தபோதிலும், அந்தப் பொறுப்புக்களைச் சீராகவும், சிறப்பாகவும் நிறைவேற்றுவதற்கான பொருளாதார வசதிகளும் வாய்ப்புகளும், அதிகார அளவுகளும் குறைவாகவே அமைந்திருக்கின்றன. உடல் உறுப்புக்களெல்லாம் வலிவாக இருந்தால்தான், உடன் வலிவாக அமையும்.



அதுபோல இந்தியாவிலுள்ள மாநிலங்களெல்லாம் வலிவுடையனவாகவும், வளமுடையனவாகவும், தேவைகளை நிறைவேற்றிக்கொள்கின்ற வாய்ப்பு வசதியுடையனவாகவும் திகழ்ந்தால்தான், இந்தியா வலிவோடும், வளமோடும் விளங்க முடியும்' என்று அதையெல்லாம் சொல்லி, ஆகவேதான் மாநிலங்களின் நிதி ஆதாரங்களையும், அதிகார அளவுகளையும் பெருக்குவதற்கான வழிவகைகளை மத்திய அரசு காண வேண்டும் என்ற கொள்கையை இந்த அவையில் அடிக்கடி வலியுறுத்திவருகிறோம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய காரணத்தையும் சொல்லி வலியுறுத்தி முடித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் அவருக்கே உரித்த முறையிலே திறமையாக இங்கே சொல்வதற்கு முற்பட்டார்கள். இன்று மத்திய அரசின் மீது அவருக்கு இருக்கின்ற வெறுப்பு, இன்னொன்று இதுவரையில் தோழமையாக இருந்து, அவர்கள் தோழமையை விரும்பினாலும், அவர்களோடு தோழமை உண்டா இல்லையா என்று அ.தி.மு.க. சொல்லாத நிலைமை இருந்தாலும். . .

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். மத்திய அரசு மீது எனக்கு வெறுப்பு இல்லை. வெறுப்பு என்பது Unscientific thing 'சப் ஜெக்டிவ்' நினைவிலேயிருந்து வருவதுதான் வெறுப்பு என்பது. ஆனால் நான் ஒரு ஆதாரத்தோடு தான் சொல்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நாங்கள் மட்டும் கல் எறிவது போதாது, அவர்களும் கல் எடுத்து எறிய வேண்டும் என்ற அளவில் துணை கேட்கின்றார்கள். இவர்கள் (அ.தி.மு.க.) நன்றாக இருக்கக்கூடாது என்ற உணர்வு இருக்கிறது இவர்களுக்கு ஏதாவது சங்கடத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் மத்திய அரசு நிதிநிலை அறிக்கையைப் பற்றி இந்த அரசு ஏன் குறிப்பிட்டுப் பேசாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நிதி அமைச்சர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நமக்கு எவ்வளவு நிதிநிலையிலே மத்திய அரசு துணையாக இருக்கிறது என்று நாம் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, எனக்கு நினைவுக்கு வருகிறது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று மாநிலத்தினுடைய திட்டப் பணிகளுக்கெல்லாம் அனுமதி பெற்று அதற்கான நிதி ஆதாரங்களைப் பெற்றதைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி டில்லியில் பேசி முடித்துவிட்டுத் திரும்புகிறபோது பெருமிதத்தோடு சொன்னார்கள். கேட்டதையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மகிழ்ச்சியோடு திரும்பி வந்திருக்கிறோம் என்று

சொன்னார்கள். அந்த அளவுக்கு இந்த மாநிலத்தை மத்திய அரசு புறக்கணிக்கவில்லை என்று தெரிகிறது. கேட்டதையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், கேட்டு ஏதாவது கொடுக்கப்படவில்லையா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இந்த நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் 'உங்களுக்கு நிதி இல்லாமல் போயிற்று, ஆகவே காரியங்களையெல்லாம் செய்யவில்லை' என்று தெரிவித்தார்கள். உண்மையில் என்ன நடக்கிறது என்றால், மாநில அரசு மத்திய அரசினுடைய பல்வேறு நிதி உதவிகளையும் பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் பல திட்டங்களை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தத் திட்டங்களில் கூட, மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்றபோது, சில திட்டங்கள் மத்திய அரசு மூலமாக, மாநில அரசுத் துறைகள் மூலமாக நடைபெறுகின்ற திட்டங்களாக இருக்கின்றன. அப்படி இருந்தாலும்கூட, அதை மத்திய அரசுக்குரிய மரியாதையோடு தெரிவித்திருக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பல திட்டங்களைப் பற்றித் தெரிவித்தார்கள். டேய்னி-டா ( DANIDA என்கின்ற திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். டேனிஷ் அனைத்து நாடுகள் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் சுகாதாரப் பாதுகாப்பு குடும்ப நலத் திட்டம், சேலம், தென்னார்க்காடு ஆகிய இரு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் ரூ. 14.40 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(முற்பகல் 11-30)

அடுத்தபடியாக, ஸ்வீடிஷ் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் அத்தாரிட்டி (SIDA) உதவியுடன் 1981 ஆம் ஆண்டு முதல் 108 கோடி ரூபாய் அளவிலான திட்டம் நிறைவேற்றப்படுகிறது. பாரா 26-லே அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்—சமூகக் காடு வளர்ப்புத் திட்டம். அடுத்தபடியாக புட் பார் ஒர்க் (Food for work) ஸ்கீட்-பாரா 62-லே தெரிவித்திருக்கிறார்கள். கிராம வளர்ச்சியும், தன்னிறைவுத் திட்டமும் என்ற பெயரிலே 374 பஞ்சாயத்து யூனியன்களிலும் மத்திய அரசு சொல்லியிருக்கின்ற இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. அதோடு மட்டுமல்ல. இதற்காகும் செலவு விவரங்களுக்குப் பின்னால் வருகிறேன். அதற்குப் பிறகு 'செல்ஃப் சபிஷியன்சி ஸ்கீம்', வேலைக்கு உணவுத் திட்டம். அதற்குப் பிறகு தன்னிறைவுத திட்டம். இதல்லாமல், டூரிசத்திற்காக மத்திய அரசு உதவி செய்துகொண்டிருக்கிறது. இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், பெருவாரி



யான சமுதாய நலத் திட்டங்களுக்கு, இந்த அரசு தன்னுடைய வருவாயிலிருந்து, வரி விதிப்பிலிருந்து செலவிடுகிறதா என்றால் இல்லை. அதற்கே கூட அவசியமில்லாத அளவிற்கு மத்திய அரசு துணையோடு, அகில உலக ஸ்தாபனங்கள் உதவியோ அல்லது மத்திய அரசின் நிதி உதவியோ துணை இருக்கும் காரணத்தாலேதான், ஒரு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் அறிவிக்கும்போது, வேறு சில புதிய திட்டங்களைத் தரும் அளவிற்கு இருக்கிறது. அந்தப் புதிய திட்டங்களைப் பார்க்கிறேன். அவற்றைப் பார்க்கும்போது, நாம் வளமாக இருக்கிறோமென்ற உணர்வை ஏற்படுத்தும் அளவிற்கு இருக்கின்றன: ஒன்று, 204 கோடி ரூபாய் அளவிற்கான காகித ஆலைத் திட்டம். இன்னொன்று 100 கோடி ரூபாய் அளவிலே குழந்தைகளுக்கான ஒரு வேளை உணவுத் திட்டம். இந்த இரண்டு திட்டங்களைப் பார்க்கிறபோது, நிச்சயமாக ஒரு உணர்வு யாருக்கும் ஏற்படும். மிக அதிகமான அளவிற்கு நிதி வருவாய் இருந்தால்தான், நிதி வளம் இருந்தால் தான், இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்; இப்படிப்பட்ட திட்டங்களைப் போடும் வாய்ப்பு எந்த ஆட்சிக்கும் ஏற்படும். காகித ஆலைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒன்றிலே தெளிவு உண்டு. அந்தத் திட்டம் எப்படிச் செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதெல்லாம் இல்லை. மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் நிதிநிலை அறிக்கையிலே சிலவற்றைச் சொன்னார்கள். அரசாங்கத்தினுடைய எந்தெந்த இயந்திரம் இன்றைக்கு நஷ்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். மின்சார வாரியம், நுகர்பொருள் வாணிபக் கழகம், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவை நிரந்தரமாக அரசாங்கத்திற்குப் பெரும் தலைவலியாக, நிதி ஆதாரங்களுக்கு உட்படாதவைகளாக, செலவினங்களாக இருந்துகொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த மூன்றோடு இன்னொன்று சேர்க்க, காகித ஆலைத் திட்டம் நிச்சயமாக உதவும். ஆண்டுக்காண்டு பல கோடி ரூபாய் நஷ்டமென்று தெரிவிக்க உதவியாக இருக்கும். இதற்கான மூலப்பொருள் பகாசி (Bagasse ) (கரும்புச்சக்கை) சர்க்கரை ஆலைக்கும் மூலப்பொருளாக இருக்கிறது. காகித ஆலை அதை எடுத்துக்கொள்ளும்போது, சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் ஈடு செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. அதோடு பியூயல் சார்ஜஸ் (Fuel Charges) எரியூட்டு செலவை எத்தனை ஆண்டுகளுக்கு ஈடு செய்யப் போகிறார்கள் என்றால், அதற்கு அளவே கிடையாது. இந்த மாநிலத்திலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது, நிலக்கரி கிடைக்காது. இந்த இரண்டும் இல்லாத நிலையிலே, சர்க்கரை ஆலைக்கு ஈட்டுப் பணம் கொடுக்கிறார்கள். அவர்கள் பியூயல்லாக உபயோகப்படுத்தும் பகாசியை காகித ஆலைக்கு எடுத்துக்

கொள்ளப் போகிறோமென்று சொன்னால், காகித ஆலை நஷ்டத்திலே நடை பெறுவது மட்டுமல்லாமல் சர்க்கரை ஆலைக்கும் மானியம் கொடுக்கப் போகிறார்கள். வளம் இருக்கிறவர்கள் மானியம் கொடுக்க முடியும். எடுக்கும்போதே நஷ்டத்திற்கென்று 200 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தை அறிவிக்க முடிகிறது என்றால், நமக்கு உறுதியாகத் தெரிகிறது, மத்திய அரசு உதவிகள் வருவதால், சமுதாய நலத் திட்டங்களை அதிலே தள்ளிவிட்டு, இது போன்ற திட்டங்களுக்குள் இவர்கள் செல்கிறார்கள் என்று. அதைப் போலவே 100 கோடி ரூபாய் திட்டம். அதில் எனக்கு மகிழ்ச்சிதான். மாண்புமிகு முதலமைச்சரவர்களின் உணர்வை நான் பரிபூரணமாக மதிக்கிறேன், ஏற்கிறேன். ஏழைகள் ஒரு வேளை சோற்றுக்கு இல்லாமல் வாடுவதைக் காண சகிக்காமல் இருக்கும் உணர்வு ஒரு மனிதனுக்கு மிக மிகத் தேவை. எல்லோரும் அதை வெளிப்படுத்துவதில்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த உணர்வை உள்ளடக்கி, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இந்தப் பெரிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். எப்படிப்பட்ட திட்டம்? உங்களுடைய உணர்வுகளோடு இந்தத் திட்டம் ஒத்துப் போகிறதா என்றால், சம்பந்தமே இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. 100 கோடி ரூபாய் திட்டம் எந்தக் கணக்கிலே போட்டார்கள் என்பது புரியவில்லை. பத்திரிகையிலேகூட எழுதியிருந்தார்கள். மாண்புமிகு ஹெல்த் மினிஸ்டர் இப்போது அவையிலே இல்லை. அவர்களே ஒரு பொதுக் கூட்டத்திலே அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே எவ்வளவு பேருக்கு நன்மை பயக்கும் என்பதையும், குழந்தைகளுக்கு ஆளுக்கு ஒரு ரூபாய அளவிற்கு உணவு கிடைக்கும் என்று அறிவித்து, அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்கள், அப்படியில்லை, இன்னும் நிறைய பேருக்கு நன்மை கிடைக்கும், தலைக்கு 30 பைசா என்ற அளவிலேதான் உணவு கிடைக்கும் என்று சொல்லி, அது பத்திரிகைகளில் தலையங்கமாக வந்திருக்கிறது. செய்தித்தாளின் பெயரைச் சொன்னால் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் கொஞ்சம் கோபித்துக் கொள்வார்கள். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் தலையங்கமாக வந்திருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், அமைச்சரவை கூடி, பரிசீலனை செய்து, திட்டம் ஏற்கப்பட்டதா என்ற சந்தேகம் இன்றைக்கு படித்தவர்களிடையே, விவரம் தெரிந்தவர்களிடையே, நிதிநிலை அறிக்கையைப் பார்த்தவர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. அது எப்படியானாலும், அமைச்சரவை உள் விஷயத்திற்குள் நான் போக விரும்பவில்லை. ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்திற்கு முன்னோடியாக, பரீட்சார்த்தமாக ஏதாவது செய்தார்களா; எப்படி நடைபெறுமென்று பார்த்



தார்களா? மெஷினரி உண்டா? இதற்கு நிர்வாக அமைப்பு உண்டா? எதுவும் இல்லாமல், ஓராண்டுக் காலத்தில் 100 கோடி ரூபாய் செலவிட இவ்வளவு பெரிய திட்டம் தந்திருக்கிறீர்களே, இது நியாயமா? இது முறையாகச் செயல்படுமா? நிதி ஆதாரங்களைத் தேடித் தேடி, மக்கள் வளமாக வாழ திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கும் நிலையிலே, இந்தத் திட்டத்தின் செயல்முறை சாத்தியமா என்று சந்தேகப்படும் அளவிற்கு திட்டத்தை வைத்து, அதற்கு 100 கோடி ரூபாய் செலவிடுகிறோமென்றால், அது இடையிலே இருப்பவர்கள் கொள்ளை அடிக்கத்தான் உபயோகப்படும். இந்தத் திட்டம் அரசின் கொள்கையை எதிரொலிக்கவில்லை. 2 முதல் 10 வயது வரையிலான குழந்தைகளுக்கு, ஒரு வேளை சோறுகூட இல்லாமல் அவதிப்படுகின்ற அந்தக் குழந்தைகளுக்கு, அந்த ஏழைத் தாய்மார்களுடைய நெஞ்சிலே கொஞ்சம் மகிழ்ச்சி ததும்ப, இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். 2 வயதுக் குழந்தைக்கு என்ன உணவு கொடுக்கப் போகிறீர்கள். 10 வயதுக் குழந்தைக்கு என்ன உணவு கொடுக்கப் போகிறீர்கள்? 2 வயதுக் குழந்தைக்கும் சோறுதானா? நியூட்ரிஷியஸ் ஃபுட் எது? 10 வயதுக் குழந்தை சீரணம் செய்யுமே, அதை 2 வயதுக் குழந்தையால் சீரணம் செய்ய முடியுமா? 2 வயதுக் குழந்தைகளை எப்படித் தேடிக் கண்டுபிடிப்பது? அதற்கான இயந்திரம் எங்கே இருக்கிறது? இப்போது இருந்து கொண்டிருக்கும் நிர்வாக இயந்திரம், பஞ்சாயத்து ஒன்றியங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் தங்கள் வேலையைச் செய்யாமல், வறட்சி நிவாரணப் பணிகளைக்கூடச் செய்யாமல், வீட்டிலே இருந்துகொண்டு, கமிஷன் வாங்கிக்கொண்டு இருக்கும் தகவல்கள், புகார்கள்தான் வந்துகொண்டிருக்கின்றன. எந்தத் திட்டத்தை அரசாங்கம் தந்தாலும், எவ்வளவு கொள்கை அடிக்க முடியுமென்று நினைக்கும் அடித்தள நிர்வாகத்தை வைத்துக் கொண்டு எப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்? இதற்கும் மேலாக இன்னொரு வேடிக்கை இதில். 2 வயதுக் குழந்தைகளுக்கு என்ன உணவு கொடுக்கப் போகிறார்கள்? எந்த அடிப்படையிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது? பைலட் ஸ்கீம் ஏதாவது செய்திருக்கிறீர்களா? ஓரிரண்டு மாவட்டங்களிலே செயல்படுத்திப் பார்த்து, அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பஞ்சாயத்து யூனியனில் செயல்படுத்திப் பார்த்து, முறையாக, நல்லபடியாக வந்தால், ஒவ்வொரு இடமாக நிறைவேற்றுவது என்ற முறையில் இல்லாமல், நேரடியாக 100 கோடி ரூபாய்க்குத் திட்டம் வகுத்திருக்கிறோமென்று சொல்லி, பெருமை

(முற்பகல் 11-40).

அடைகிறார்கள். அரசினுடைய மாவட்ட நிர்வாகம் எப்படிப்பட்ட நிர்வாகம் என்பதைச் சொல்கிறேன். எனக்கு ஒரு அழைப்பு வந்திருக்கிறது. குழந்தைகள் தின விழா அழைப்பிதழ். நாள் 30—11—1981. குழந்தைகள் தினத்தை பொட்டி அதிகாரப் பூர்வமாக இந்த அரசு வெளியிட்ட அழைப்பிதழ் எப்படி இருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறேன். விழாவுக்கு தலைமை ஏற்று பரிசுகள் வழங்குவது திருமதி சந்திரலேகா, இ. ஆ. ப., மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் திரு. பஞ்சாபிகேசன், இ. கா. ப., மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களும். வாழ்த்துரை வழங்கி இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. மீண்டும் மூன்றாம் பக்கத்தில் நிகழ்ச்சி நிரலில் அடுத்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. தலைமை உரை திருமதி சந்திரலேகா, இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். விளையாட்டுகளைத் தொடங்கி வைத்தல் திரு. பஞ்சாபிகேசன், இ.கா.ப., மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள். பரிசுகள் வழங்குதல் திருமதி சந்திரலேகா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர். இப்படி 3 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்து 4 ஆம் பக்கம் கலை நிகழ்ச்சிகள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தலைமை: திருமதி சந்திரலேகா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். தொடங்கி வைத்தல். திரு. பஞ்சாபிகேசன், இ.கா.ப., மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர். இது குழந்தைகள் தினத்தைக் கொண்டாடுகிற ஒரு சாதாரண விழா. நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிற மாவட்ட உச்ச நிலை அதிகாரிகளுடைய விளையாட்டோ இப்படி இந்த நிலைமையில் 100 கோடி ரூபாய்க்கான செயல் திட்டத்தை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள் ? இந்த அதிகாரிகளை ஏதாவது கேட்டால் உடனே எவ்வளவு வார்த்தைகளைச் சொல்ல முடியுமோ அவ்வளவு வார்த்தைகளைச் சொல்கிறார்கள். 'பொறுக்கிகள்' 'லோபர்ஸ், (loafers) என்று கூட அவர்களால் சொல்ல முடிகிறது. பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களைக் கேட்டால் அவன், இவன் என்று சொல்லும் நிலையும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் 100 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு எப்படி செயல்படப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு சாதாரண குழந்தைகள் தின விழாவில் 4 பக்கத்திலும் தங்கள் பெயரைப் போட்டு விளம்பரப்படுத்திக் கொள்கிற அதிகாரிகளை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டு எப்படி 100 கோடி ரூபாய்க்கான திட்டத்தை உங்களால் நிறைவேற்ற முடியும் ?



அடுத்து, ஒன்றைச் சொல்கிறேன். தன்னிறைவுத் திட்டம் இன்றைக்கு நடைபெறுகிறது. அதற்குள்ளே அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் என்ன நடைபெறுகிறது என்று சொல்கிறேன். தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் அரிசி கொடுக்கப்படுகிறது. அதில் லாப நோக்கு தெரிகிறது. எங்களுடைய ஊருக்கு (Food for work) 'புட் பார் ஒர்க் ஸ்கீம்' ஐச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்பவர்கள் பெரும்பாலும் காண்டிராக்ட் செய்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதற்கான அரிசியை அதிகாரிகளிடம் சென்று வாங்கிக்கொள்கிறார்கள். அந்த மூட்டைகளைப் பிரித்துக்கூடப் பார்ப்பதில்லை. அப்படியே கொண்டுபோய் தனி வியாபாரிகளிடத்தில் 10 ரூபாய் குறைத்து மூட்டைகளை விற்று விடுகிறார்கள். அந்த வியாபாரி மீண்டும் அதை லெவி என்கிற பெயரால் அரசுக்குக் கொடுத்து விடுகிறான். ஒரு விசியஸ் சர்க்கிளாக திரும்பத் திரும்ப அந்த அரிசி வந்து கொண்டிருக்கிறது, சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது. அதுபற்றிய பல குறைபாடுகள் எதனால் இதுவரை அரசுக்கு வரவில்லை என்று எனக்குப் புரியவில்லை. நேற்று முன்தினம் நான் திண்டிவனம் சென்றிருந்தேன். எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். (Food for work) வேலைக்கு உணவுத் திட்டத்தில் போடப்பட்ட அரிசியை, மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பார்வைக்குக் கொடுக்கிறேன். எப்படி அரசின் நோக்கத்தை கீழே இருப்பவர்கள் தோற்கடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அங்கு என்ன நடைபெறுகிறது என்று சொல்கிறேன்.

(ஒரு பொட்டலத்தை திரு. இராமமூர்த்தி அவர்களிடமிருந்து திரு. வீராசாமி அவர்கள் வாங்கி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் மேஜையின் மேல் வைத்தார்கள்.)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நிலைமையை விளக்கி இன்னது சரியில்லை என்று சொன்னாலே போதும். இப்படி ஒவ்வொருவரும் கொண்டு வந்து காண்பித்தால் என்ன ஆகும் ? அங்கு கொடுக்கப்பட்ட அரிசிதானா இல்லை வேறு அரிசியா என்று எப்படித் தெரியும் ?

திரு. க. இராமமூர்த்தி : எங்காவது தவறு நடந்தால், அதைச் சொல்வதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படிச் சொல்வது மரபும் கூட. சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்போடுதான் செயல்படுகிறார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும், உறுப்பினர்கள் சொல்வதை மற்றவர்களும் ஏற்றுக்கொள்வதுதான் மரபு. இந்த மரபில் மாண்புமிகு உறுப்பினருக்கு மாறுபாடு இருந்தால், எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை.

இப்படிப்பட்ட குறை இருப்பதை ஏற்கெனவே யாராவது சுட்டிக்காட்டியிருக்கிறார்களோ என்னவோ ? இந்தத் திட்டத்திற்காகக் கொடுக்கப்பட்ட அரிசியை மூட்டையைக் கூட பிரித்துப் பார்க்காமல் அப்படியே கொண்டு போய் வியாபாரிகளிடத்தில் 10 ரூபாய் குறைத்து விற்று விடுகிறார்கள். வியாபாரிகள் அரசுக்கு அதை அப்படியே லெவிக்காகக் கொடுத்து விடுகிறார்கள். இப்படி அந்த அரிசி சுற்றிக் கொண்டே இருக்கிறது. இதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை அளித்துள்ளதுபற்றி ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் அமைச்சராக வருவதற்கு முன்பு அவருடைய பல பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவன் நான். அவருடைய சொற்பொழிவை அனுபவித்தவன் நான். அவருடைய சொற்பொழிவில் எவ்வளவு தூரம் வாதத் திறமையுடன் சொற்களைக் கையாள்வார்கள் என்பதைப் பார்த்திருக்கிறேன். அவருடைய சொற்பொழிவை விரும்பிக் கேட்டிருக்கிறேன். காங்கிரஸ் ஆட்சியை விமர்சனம் செய்யும் போது, அவர்கள் சுலபமாகச் சொல்வது " ஜனவரி, பிப்ரவரியை விட்டு மற்ற எல்லாவற்றிற்கும் வரி உண்டு " என்று சொல்வார்கள். அப்படிச் சொல்லிய அவர்களே பிற்காலத்தில் நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள், வரியைப் போடுவார்கள் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். " ஜனவரி, பிப்ரவரி தவிர, இரண்டு வரிகளைத் தவிர, வேறு எதற்கும் வரியை விட்டு வைக்கவில்லை " என்று மாற்று ஆட்சிகளை விமர்சனம் செய்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே முடிவில் பரிதாபமான முறையில் மிளகாய், உப்பு என்று சாப்பிடுகிற அத்தனைக்கும் வரி போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கும்போது பேசியதுண்டு. ' ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டும் தான் பணம் செலுத்தாத வரிகள், மற்ற வரிகள் எல்லாம் பணம் செலுத்தக் கூடிய வரிகள் ' என்று சொன்னேன். ஜனவரி சரி, பிப்ரவரி சரி. இதைத்



தவிர மற்ற வரிகள் எல்லாம் பணம் செலுத்தக் கூடிய வரிகள் என்றுதான் சொன்னேன். ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டும் மட்டும் பணம் செலுத்தாத வரிகள் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ' கானல் வரி, கந்துக வரி ' என்று பணம் செலுத்தாத வரிகள் கூட உண்டு. (சிரிப்பு)

திரு. க. இராமமூர்த்தி : அன்றைக்கு இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இன்றைக்கு குழந்தைகள் சாப்பிடுகிற சாக்லெட் முதற்கொண்டு மிளகாய், உப்பு போன்றவற்றுக்கெல்லாம் வரி போடப்பட்டிருக்கிறது. இதை நான் வேடிக்கைக்காகக் குறிப்பிடவில்லை. இதன் காரணமாக சாதாரணமாக சமுதாயத்திலுள்ள நடுத்தர வர்க்கம் எந்த அளவுக்கு பாதிக்கப்படும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். குழந்தைகளுக்கு ஒருவேளை உணவுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், 204 கோடி ரூபாய் காகித ஆலை மூலம் நிரந்தரமாக நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. வரி போடுவதற்கு முன்னால் இதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றிப் பின்னால் பேச நேரம் இருக்கிறதோ இல்லையோ. ஆனால் ஒன்று சொல்கிறேன். காகித ஆலை அமைப்பதுபற்றி திட்டம் போட்டு, மத்திய அரசு மற்றும் உலக வங்கி எல்லாம் இதுபற்றி ஆராய்ந்து, அதற்குப் பிறகு தான் திட்டக் குழுவும் அனுமதி அளித்திருக்கிறது. உறுப்பினர் கேட்கிற கேள்வி அத்தனையையும் திட்டக் குழுவும், மத்திய நிதியமைச்சகமும் கேட்டனர். அதற்குப் பிறகு உலக வங்கி எழுப்பிய வினாக்களுக்கெல்லாம் விடையிறுத்த பிறகு மத்திய நிதியமைச்சகமும் ஏற்று, திட்டக் குழுவும் ஏற்று அவர்கள் எல்லாம் சிபாரிசு செய்து உலக வங்கியும் ஏற்றுக்கொண்டு, நஷ்டம் ஏற்படாது என்கிற நிலை வந்த பிறகுதான், அனுமதி அளித்திருக்கிறார்கள். இன்றைக்கு எவ்வளவோ தொழிற்சாலைகளில் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று சொன்னால், மொத்தம் 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பெரிய தொழிற்சாலைகளுக்கு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மொத்தத்தில் 182 கோடி ரூபாய்க்குத் தான் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் நஷ்டம் வரலாமா வரக் கூடாதா என்கிற வாதத்தில் மட்டும் ஈடுபட வேண்டாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதுவல்ல பிரச்சினை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். என்ன நடைபெறுகிறது என்றால், மத்தியத் திட்டக் குழு பலவற்றுக்கு ஏற்பு அளிக்கிறது. கட்டளைக் கால்வாய் திட்டத்திற்குக் கூட மத்தியத் திட்டக் குழு அனுமதி அளித்திருக்கிறது. ஆனால் என்ன ஆயிற்று? 'இட் ஈஸ் நாட் ஏ பிராக்டிக்கல் ஸ்கீம் (It is not a practical scheme) என்று அன்றைக்கே நாங்கள் சொல்லியிருக்கிறோம். அது சாத்தியப் படாது என்று அன்றைக்கே நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே அனுமதி கொடுத்திருக்கிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அப்போதே கட்டளைக் கால்வாய் திட்டம் வேண்டாமென்று நாங்கள் சொன்னோம். பல திட்டங்களைச் சொல்லிய நேரத்திலேயே மாற்றிக்கொள்ளவும் அரசு நினைத்தால் முடியும், முடிகிறது.

(முற்பகல் 11-50)

அந்த அளவிலே நான் சொல்ல விரும்புவது, இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னதைப் போல, இன்றைக்கு மின்சார வாரியம் நஷ்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, ஆகையால் மின்சாரத்திற்கான கட்டணத்தை உயர்த்துவது பற்றி அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போலவே, உணவுப் பொருள் வழங்கு கார்ப்பரேஷன், போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் இன்றையதினம் நஷ்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இருக்கும் பயம் என்னவென்று சொன்னால், பல பேர் தங்களுடைய போக்கிலே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஒரு கருத்து சொல்ல வேண்டுமென்றால், மத்திய அரசு மிக்செட் எக்கானமியைக் (Mixed Economy) கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. தனியார் நிறுவனமும் வளர வேண்டும் என்ற எண்ணம் இருப்பதால், அவர்களை வளர விடுவது தவறில்லை. அவர்கள் இந்தத் திட்டத்தையெல்லாம் ஏற்று நடத்துவது தவறில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது வேறு விஷயம். ஆனால் அதற்கு மாறாக, எசன்ஷியல் சர்வீஸ், என்ற முறையிலே, அல்லது யூட்டிலிட்டி சர்வீஸ் (Utility service) என்ற அளவிலே மின்சார வாரியத்தை, போக்குவரத்து நிறுவனங்களையெல்லாம் நாம் தேசியமயமாக்கி வளர்த்திருக்கிறோம். அவைகள் நஷ்டத்திலே நடைபெறுகிறது என்றால், எப்படி நஷ்டத்திலே நடைபெறுகிறது, ஏன் நடைபெறுகிறது என்று பார்த்து அவைகளைத் திருத்துவது



என்பது வேறு. ஆனால் அப்படிச் செய்யலாம் என்பதை வாதத்திற்காக ஒத்துக்கொண்டாலும், ஏற்றுக்கொண்டாலும் கூட, அதை யாரிடம் ஒப்படைப்பது? தேசியமயமாக்கியதை இப்போது 'டீ-நேஷனலைஸ்' (De-nationalise) செய்வது என்பது 'மிக்சட் எக்கானமி' (mixed Economy) அல்ல. அது தனியார் துறையை மட்டும் வளர்ப்போம் என்ற அளவிலே இருக்கும் (Capitalistic) எக்கானமி. அப்படிச் செய்யும்போது, நாம் அடுத்தபடியாக போக்குவரத்துக் கார்ப்பரேஷன் போன்ற பலவற்றையும் 'டீ-நேஷனலைஸ்' (De-Nationalise) செய்யும் நெருக்கடிக்கு ஆளாவோம் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதைப்போலவே இந்த நேரத்திலே இன்னொன்றையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, தமிழகத்திலே பல திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, ஒரு வளம் இருக்கிறது என்ற உணர்வு இருக்கிறது. இங்கே நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இல்லை. பல்வேறு சட்டங்களை அவர்கள் சுலபமாகக் கொண்டு வருவார்கள். எல்லாம் புரட்சிகரமான சட்டங்கள் என்று சொல்வார் இந்த அரசினுடைய சட்டங்களின் விளைவாக, திட்டங்களின் விளைவாக, அவைகள் நிறைவேற்றப்பட்ட முறையின் காரணமாக, தமிழகத்திலே தான் எங்குமில்லாத அளவு வேறுபாடுகள், ஏழை பணக்காரன் என்ற வேறுபாடுகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. இந்தத் தன்மையில் இந்தியாவிலே எந்த எந்த மாநிலங்கள் இருக்கின்றன என்ற கணக்கு எடுத்துப் பார்த்தால், இதோ நான் இருக்கிறேன் என்று தமிழகம்தான் முதலிலே நிற்கிறது என்பதை நான் சொல்லாமலிருக்க முடியாது. தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களிலேயெல்லாம் இந்த நிலைமைகள் இருப்பதை நாம் அறியாமல் இல்லை. இது தெரியாத ஒன்றல்ல. அரசுக்கே கூட தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் கூட ஒருமுறை சொன்னார்கள். நக்சலைட்கள் இருக்கிறார்கள், அவர்களை ஒடுக்குகிறோம், ஒடுக்கப் போகிறோம் என்று சொல்லும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். என்ன சொன்னார்கள்? "அந்தப் பகுதியில் இருக்கின்ற பொருளாதார சீர்கேட்டினால் அங்கே உழுபவன் ஒரு நாளைக்கு 1 ரூபாய் கூட பெற முடியாத நிலை இருக்கிறது. கொத்தடிமைகளாக இருக்கும் நிலையிலே பல குடும்பங்கள், பல தலைமுறைகளாக இருந்து வேலை செய்து வரும் நிலைமைகள் இருக்கின்றன. அதிகமாக பாதிக்கப்பட்ட அரிசனங்கள், வன்னியர்கள் போன்றவர்கள் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை நீக்கப்பட வேண்டும். அது நீக்கப்படாத வரையில் நக்சலைட் இயக்கம்

வளருவதை யாரும் தடுக்க முடியாது', என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நான் கேட்கிறேன், இங்கே இந்த 100 கோடி ரூபாய்க்கான திட்டம் இருக்கிறதே இதுபோன்ற அளவிலே இராமநாதபுரம், தர்மபுரி பகுதியிலே இருக்கும் இந்தப் பொருளாதாரக் குறைபாட்டை நீக்க இந்த அரசு எத்தனை கோடி செலவில் திட்டமிட்டிருக்கிறது ? அதற்கென்று ஒரு திட்டம் உண்டா ? அப்படியொரு திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறதா என்றால், இல்லை. அதனாலே தான் அந்தப் பகுதியிலே இருக்கும் நிலைமையைப்பற்றிக் குறிப்பிடும்போது மத்திய அரசு மாநில அரசை இடித்துச் சொல்லியிருக்கிறது.

"It has pointed out that the broad trends in rural dynamics in the State bring into bold relief both positive and negative trends. On the positive side, it has noticed extensive cultivation through use of major irrigation schemes, intensive cultivation using modern implements, increase in output and systematic production நீங்கள் விவசாயம் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக, அதற்கென்று போடப்பட்ட உங்களுடைய திட்டங்களின் விளைவாக நல்ல விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. It has achieved the best results

என்ற அளவிலே உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறீர்கள், விளைவைப் பெருக்கியிருக்கிறீர்கள். ஆனால் அதனுடைய மறுபக்கம் எப்படியிருக்கிறது என்றால்

" On the other hand, the negative side shows the pressure on small farmers to leave their lands to become landless labourers,.

சிறு விவசாயிகள் இருக்கிறார்களே அவர்கள் இந்த விவசாயத்திலே போட்டி போட முடியாமல், தங்களுக்கென்று இருக்கும் நிலத்தை விற்றுவிட்டு விவசாயக் கூலிகளாக வேலை செய்துகொண்டிருக்கும் நிலை இருக்கிறது.

'Decline in real wages of agricultural labourers and tendency of mass poverty to continue is on the increase'.

ஆகவே, இப்படி நிலம் வைத்துக்கொண்டிருப்பவன் விவசாயம் செய்ய இயலாதவனாக ஓடிப்போகும் நிலை ஏற்பட்டு, அதன் விளைவாக அவன் கூலிக்காரனாக வாழும் நிலை வரும்போது, அவனைப் பேரம் பேசி, உனக்குக் குறைந்த பட்ச ஊதியம், மினிமம் வேஜ் (Minimum Wage) கிடையாது 'இந்த அளவுக்குக் குறைந்த அளவுக்கு' வேலை செய்கிறாயா என்று அவனை நிர்ப்பந்தப்படுத்தும் நிலைமையெல்லாம் இருக்கிறது. அதன் காரணமாக பசி, பட்டினி,



பஞ்சம் எல்லாம் இந்த மாவட்டங்களில் கூத்தாடிக்கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, இந்தத் திட்டம் அரசாங்கத்தினுடைய, விவசாய வளர்ச்சித் திட்டத்தினுடைய விளைவு. அதன் விளைவாக, இராமநாதபுரம், தர்மபுரி பகுதிகளிலே

. The major beneficiaries of change have been the richest section, mainly farmers, particularly the top one per cent. என்ற அளவிலே இருக்கிறார்கள். வளமான விவசாயிகள் இங்கே பெரிய நிலப் பிரபுக்கள், நிலச் சுவாந்தார்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால், உண்மையிலேயே கிராமங்களிலே 100 ஏக்கர் நிலச் சொந்தக்காரன் உச்சவரம்புச்சட்ட எல்லைக்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்புக்களை வைத்துக்கொண்டிருக்கும் நிலச் சுவாந்தார்கள் சிறு நில விவசாயிகளை எவ்வளவு கொடுமைப்படுத்துகிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அரசினுடைய மாவட்ட நிர்வாகம் இதையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததா ? இல்லை. ஆனால், சுட்டுத் தள்ளுவதற்கு அனுமதி கேட்கிறது. உங்களுடைய அனுமதி கிடைக்கும் முன்பே சுட்டுத் தள்ளிவிட்டு அதை உங்களுக்குத் தெரிவிக்கிறது. இதுவா நல்ல நிர்வாகம் ? அங்கே இருக்கும் பசி, பட்டினி, ஏழ்மை போன்ற நிலைமைகளை ஒழிக்காமல், இந்த நிலைமை தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமைகளை இந்த அரசு பட்ஜெட் தயாரிப்பதற்கு முன்னதாக அவர்கள் தெரிவித்திருந்தால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதற்கென்று திட்டம் வகுத்து நிதி ஒதுக்கீடு செய்திருக்க முடியும். இந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்குப் போகவில்லை. இந்தப் பிரச்சினையை அணுக முடியாத அளவிலே தான் நிர்வாக இயந்திரம் இருக்கிறது என்று சொன்னால், அது பொருத்தமானதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை எந்த அளவுக்கு ஏழையெளியவர்கள் உள்ளத்திலே நிம்மதியை ஏற்படுத்தும் ? இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதோடு மட்டுமல்ல, The earnings in all these years have been below the poverty line. என்ற வகையிலே, வறுமைக் கோடு, வறுமைக்கோடு என்று 3 ஆண்டு காலமாகப் பேசுகிறோம். வறுமைக் கோட்டுக்குக் கீழே தான் அங்கே இருப்பவர்களின் நிலைமை இருக்கிறது. இதெல்லாம் நான் சொல்வதல்ல. மற்றவர்களும் சொல்வதல்ல. மத்திய அரசின் உள்துறையினர் இந்த ஆட்சிக்கு எடுத்துக்காட்டிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான அறிவுரைகளும், ஆலோசனைகளும் சொல்லி, அந்த நிலைமைகளை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 10

அதைப் போலவே தான், இந்த ஆட்சி, இந்த மாநிலத்திலே தொழில் வளத்தை எப்படி பெருக்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சாராயக் கடைகளை ஊரெல்லாம் திறந்து விட்டோம், அந்த விஷயத்திற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. ரெக்டிஃபைட் ஸ்பிரிட் இருக்கிறதே, அதற்கு என்று ஒரு விலையை நிர்ணயித்திருக்கிறார்களா என்றால், இல்லை. எந்த எந்த இன்டஸ்ட்ரீஸ், தொழிற்சாலை எவ்வளவு கேட்கிறார்களோ. அவர்களுக்கு அந்தந்தத் தொழிற்சாலைகளுக்கேற்ப விலை நிர்ணயிக்கப்படும் நிலைமை இருக்கிறது. இந்த மாநிலத்திலே மட்டும்தான் அந்த நிலைமை இருக்கிறது. என்ன வேடிக்கையான நிலைமை இது என்பதை நாம் பார்க்க வேண்டும். சாராயத்திற்கு லிட்டர் ஒன்றுக்கு இதுதான் விலை என்று மாநில அரசு குறிப்பிட்டு விலை வைத்திருக்கிறதா என்றால் இல்லை. இந்தத் தொழிற்சாலைக்கு இந்த விலை, அந்தத் தொழிற்சாலைக்கு அந்த விலை என்ற வகையிலே, ஒரு தொழிற்சாலைக்கு ஒரு விலை என்ற அளவிலே நிலைமைகள் இருக்கின்றன.

இந்த மாநிலத்திலேயிருந்து வெளி மாநிலத்தில் இருக்கும் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கும் எரி சாராயம் குறைந்த விலையில் போகிறது. இங்கே நாம் வாங்கும் விலையை விடவும் குறைந்த விலைக்கு வெளியே கிடைக்கிறது. இப்படியெல்லாம் நாம் செய்தால், எப்படி தொழில் வளரும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இதைப்பற்றியெல்லாம் எங்களுக்கு இதுவரை சொல்லவில்லையே என்று நீங்கள் சொல்வீர்களேயானால், சொல்வது இது வரை உங்களுடைய காதுகளுக்கு எட்டவில்லை என்றுதான் நான் சொல்வேன். இன்றைக்கு தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால், எரி சாராயம் அவற்றுக்கு ஒரு மூலப்பொருளாக இருக்கிறது. அப்படி இருக்கும் இந்த சாராயத்திற்கு 'இதுதான் விலை' என்ற அளவிலே இந்த அரசு ஒரு விலையை நிர்ணயிக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக எந்தெந்தத் தொழிற்சாலை அந்த எரி சாராயத்தைக் கேட்கிறதோ அவர்கள் செய்கின்ற தொழிலுக்கு ஏற்ப, அந்தத் தொழிற்சாலையிலே உற்பத்தி செய்யும் பொருளுக்கு ஏற்ப இந்த எரி சாராயத்தின் விலையை நிர்ணயிக்கும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமை அவசியமானதுதானா என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புவதோடு, இதனுடைய விளைவாக பல ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1982 மார்ச் 10] [திரு. க. இராமமூர்த்தி]

(நண்பகல் 12-00)

அதைப்போலவே விளையாட்டுத் துறைக்காக நிறைய நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்றும், பல்வேறு திட்டங்களை மேற்கொண்டிருக்கிறோம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விளையாட்டில் நிரம்ப ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதைப் பற்றி மகிழ்ச்சி. அந்த வகையில் விளையாட்டில் நாம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறோம், என்பதைப்பற்றியும் அவர் இங்கே குறிப்பிட்டார்கள். இதைச் சொல்லும்போது, காவல் துறையில் ஏற்பட்ட நிகழ்ச்சி ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்னையிலிருந்து இரண்டு காவல் துறை அதிகாரிகளைப் பயிற்சி பெறுவதற்காக டோக்கியோ நகருக்கு அனுப்பினார்கள்.

Two Officers were sent by the Government for taking part in the Course of Coaches and Managers at Tokyo from 1st June 1981 to 8th June 1981

அதாவது ஜப்பான் நாட்டில் இருக்கிற டோக்கியோ நகருக்கு இரண்டு அதிகாரிகளைக் காவல் துறையின் மூலம் அனுப்பினார்கள். அதாவது அங்கே சென்று பயிற்சி செய்கிற முறைகளையும், மேனேஜராக இருப்பதற்கான முறைகளையும் அறிந்துகொண்டு வருவதற்காக காவல் துறையிலிருந்து அவர்களை அனுப்பி வைக்கிறார்கள். இதைப்பற்றிய அரசாணையில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், இந்தப் பயிற்சியை ஏற்பாடு செய்பவர்கள் இன்டர்நேஷனல் அமெச்சூர் அத்லெடிக் பெடரேஷன் என்ற அமைப்பு என்றும், அந்த அமைப்பின் மூலம் இரு காவல் துறை அதிகாரிகள் பயிற்சி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படுகிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அனுப்பப்பட்ட அந்த இரண்டு அதிகாரிகளும் டோக்கியோ போய்ச் சேர்ந்தார்கள். ஆனால் அங்கே அப்படிப்பட்ட ஒரு பயிற்சியே நடத்தப்படவில்லை. அதுமட்டுமல்ல 'There was no course organised' 1—6—1981 முதல் 8—6—1981 வரை அப்படி ஒரு கோர்ஸ் அங்கே அந்த அமைப்பால் நடத்தப்படவே இல்லை. இதற்காக நமது அரசு அனுமதித்த செலவு ரூ. 44,000. இங்கேயிருந்து அனுப்பப்பட்டார்களே, பயிற்சி பெறுவதற்கு என்று அவர்களாவது அதற்குத் தகுதியுடையவர்களா என்றால், அதுவும் கிடையாது. அதுமட்டுமல்ல. விளையாட்டிற்கு இடம் தரும்போது அதில் வயதும் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. ஆனால் காவல் துறையில் இருந்து இத்தகைய பயிற்சியைப் பெறுவதற்கு அனுப்பி வைக்கப்படுகிறார்களே இவர்களின் வயது என்ன தெரியுமா? இருவருக்கும்

50-க்கும் மேல் வயதாகிறது. இதனை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த அரசு எந்தத் துறையை வளர்க்க வேண்டுமென்று விரும்பினாலும், இவர்களின் கீழ் பணியாற்றும் அமைப்புகள் அதை வளர்க்க விடுவதில்லை அல்லது அவைகளை முறையாக இந்த அரசாங்கத்தால் செயல்படுத்த முடியவில்லை.

நடந்த ஆண்டு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, என்னுடைய மாவட்டத்தில் உள்ள பிச்சாவரம் காட்டைப் பற்றிக் குறிப்பிட்டு, அதை எப்படியெல்லாம் அழகுபடுத்தப் போகிறோம் என்றும், அங்கே அண்ணா அவர்கள் எத்தனை நாள் இருந்து இயற்கை அழகை அனுபவித்தார்கள் என்றும், அங்கே எப்படிப்பட்ட அமைதி நிலவுகிறது என்றும், அதை மாண்புமிகு உறுப்பினர்களும் கண்டு களிக்க வேண்டும் என்றும் சொல்லி, அவை உறுப்பினர்களையெல்லாம் அங்கே அழைத்துப் போகிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ எங்கள் யாரையும் அழைத்துப் போகவில்லை. என்றாலும் நானே அந்தப் பகுதிக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். அங்கே ஒரு கேன்டீன் கட்டுவதற்கு ஒருவருக்கு காண்ட்ராக்ட் விட்டிருக்கிறார்கள். அந்தக் கேன்டீன் கட்டிடம் முழுவதுமாகக் கட்டப்படாமல் பாதியிலேயே இருக்கிறது. அவரால் கட்ட முடியவில்லை என்று அந்த காண்ட்ராக்ட் வேலையை வேறு ஒருவருக்குக் கொடுப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அந்தக் காண்ட்ராக்ட் எடுத்தவர் எவ்வளவு செல்வாக்கு உடையவரோ எனக்குத் தெரியவில்லை. மறுபடியும் அவருக்கே அந்தப் பணி தரப்பட்டிருக்கிறது. அப்படித்தான் அவருக்குக் கொடுக்கப்பட்டதே, இப்போதாவது அந்தப் பணி முடிவடைந்திருக்கிறதா என்றால், இன்னும் முடிவடையவில்லை. அதற்கு எத்தனையாண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது, அதற்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, ஒரு கேன்டீன் வசதியைக் கூட அங்கே செய்ய முடியாதவர்கள்தான் அங்கே இருக்கும் உலகப் புகழ்பெற்ற பிச்சாவரம் காட்டைப்பற்றிப் பேசுகிறார்கள். அண்ணா அவர்கள் அங்கே தங்கினார்கள் என்றும், அமைதி தவழுகிற நிலையை ஒவ்வொருவரும் பார்க்க வேண்டும் என்றும் இந்தியாவின் மிகப் பெரிய தலைவர்களையெல்லாம் அந்த இடத்திற்குக் கொண்டு வந்து காட்டுகிறார்கள். அந்த இடத்திற்கு இந்த ஆட்சி காட்டுகிற அக்கறை இந்த அளவில்தான் இருக்கிறது என்பதற்காக நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். இப்படி இந்த அவையில் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே தவிர, அதிலே முறையான கவனம் செலுத்தப்படவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அங்கே போவோருக்கு என்று ஒரு கேன்டீன் வசதியைக்கூட இவர்களாலே செய்து தர முடிய



வில்லை. ஒரு காண்ட்ராக்டரிடம் உரிய நேரத்தில் வேலை வாங்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, அதன் காரணமாக அரசாங்கத்தின் பணம் பெருமளவில் அங்கே சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உலக வங்கிக் கடனுதவியோடு சென்னை நகரை அழகு படுத்தவும், சென்னை மக்களுக்கு வசதிகளைத் தேடிக் கொடுப்பதற்கும் என்ற அடிப்படையில் ரூ. 55 கோடியில் ஒரு திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இதையும் 1982 ஆம் ஆண்டுக்குள் முடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதோடு இன்னும் ஒரு 74 கோடி ரூபாய் "செகண்டு ஓர்ல்டு பேங்க் எய்டு புராஜக்ட்" உதவியோடு 50,000 குடும்பத்தை வாழ வைப்பதற்கும், அவர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கும் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் 15,000 பேர்களுக்கு "சர்வீஸ் சைட்ஸ்' (Service sites) கொடுக்கப்படும் என்றும், இது பொருளாதாரத்தில் மிகவும் நலிந்த பிரிவினருக்குக் கொடுக்கப்படும் என்றும் இதன் காரணமாக 30,000 குடும்பங்கள் நன்மை பெறும் என்றும் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக யாராவது நன்மை பெறுவார்களா என்று கேட்க விரும்புகிறேன். "இந்தத் திட்டத்தின் காரணமாக இங்கே புதிய சேரிகளை உருவாக்கப் போகிறீர்களா அல்லது மக்களுக்கு நன்மை செய்யப் போகிறீர்களா" என்று நான் கேட்க விரும்புகிறேன். சென்னை நகரைப் பொறுத்தவரை, இங்கே இடமே கிடையாது. இதைத்தான் எம்.எம்.டி.ஏ. 'சொல்கிறது. எனவே குடிசை வாழ்வோரையெல்லாம் சென்னைக்கு வெளியே அழைத்துச் சென்று அங்கே அவர்களுக்கு அரசாங்க இடத்தில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள். அந்த வீட்டை எவ்வளவு ரூபாயில் கட்டப் போகிறார்கள்? இது யாருக்கும் தெரியாது. இப்படி அரசாங்கமே திட்டமிட்டு புறநகர்ச் சேரிகளை உருவாக்குகிற நிலைமைதான் ஏற்படுமே தவிர, மக்களுக்கு உருப்படியான பலன் கிடைக்கப்போவதில்லை . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களுக்கு நான் அவரை அழைத்துச் சென்று அங்கே குடிசைகளுக்குப் பதில் ' அர்பன் புவர் ' என்பவர்களுக்கு எத்தகைய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்ட விரும்புகிறேன். வேண்டுமானால் அவை உறுப்பினர்கள் அனைவரையுமே அழைத்துச் செல்லவும் தயாராக இருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சாதனையைப் பொறுத்தவரையில் அவர் அழைக்கும்போது நான் நேரில் போய் பார்க்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் It is meant for the urban poor அந்தத் திட்டம் நகரத்தில் வாழும் ஏழைகளுக்கு உதவி செய்யக்கூடிய திட்டமாகத்தான் செயல்படுத்தப்படுகிறது.

திருவல்லிக்கேணியிலும், மயிலாப்பூரிலும், மற்ற இடங்களிலும் இருக்கிற ஸ்லம்களை எடுத்துவிட்டு அங்கே போய் அவர்களை இருக்கச் சொன்னால் அவர்கள் போவார்களா ? இவர்களுக்கு இங்கேயே இருப்பதற்கேற்ற வீடுகள் தான் தேவை, பல அடுக்கு மாடி வீடுகளைக் கட்டிக் கொடுப்பதன் மூலம்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமே தவிர, வேறு வழியில் முடியாது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அப்படிச் செய்யும் போது, அந்தக் குடியிருப்புக்குச் சொந்தக்காரர்கள் அங்கே போவதில்லை என்றும், அவைகளை மற்றவர்களுக்கு விட்டுவிடுகிறார்கள் என்றும் பல சங்கடங்கள் ஏற்படலாம். அதற்கு நாம் நமது நிர்வாகத்தைத் தான் சரிப்படுத்த வேண்டுமே தவிர, இருக்கிற மக்களை ஊருக்கு வெளியே கொண்டு போய் அங்கே புறநகர்ச் சேரிகளை அமைப்பது என்பது எந்த ஒரு நல்ல அரசாங்கத்தின் திட்டமாகவும் இருக்க முடியாது.

நீங்கள் எந்தப் பெயரை வைத்து எவ்வளவு அழகாக அமைத்தாலும், அது வெறும் புறநகர்ச் சேரியே தவிர வேறல்ல. எனவே இப்படிப்பட்ட புறநகர்ச் சேரிகளை உருவாக்க வேண்டாம் என்று வேதனையோடு கேட்டுக்கொள்கிறேன். ஒருமுறை பண்டித நேரு அவர்கள் சொன்னதை நான் நினைவுகூர விரும்புகிறேன். ஹரிஜனங்கள் வசிக்கும் காலனிகளை உருவாக்கும்போது அவைகளை ஊர்களுக்கு வெளியே ஒதுக்குப் புறமாக அமைத்தால், அது அவர்களை வாழ வைப்பதாக இருக்காது, எனவே அதை ஏற்க முடியாது என்று குறிப்பிட்டார்கள். எனவே அப்படிப்பட்ட முறையில் ஒரு பக்கம் சேரிகளை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டே, குடிசை வாழ்வோரை அழைத்துக் கொண்டுபோய் ஊருக்கு வெளியே புறநகர்ச் சேரிகளை உருவாக்குவது என்பது நல்லதல்ல. வேண்டுமானால் கூரையில்லாமல் அது கான்க்ரீட் கூறை போட்டதாக இருக்கலாம் அல்லது சிமிண்ட் கூறை போடப்பட்டதாக இருக்கலாம். இருந்தாலும் அவைகள் அனைத்தும் சேரிகள்தாம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ரூம் இரண்டு ரூம் அபார்ட்மெண்டுகளில் மனிதன் வாழ முடியுமா என்று பார்க்க வேண்டும். மைலாப்பூர், திருவல்லிக்கேணி, அண்ணா சாலை போன்ற பகுதிகளிலிருந்து செகரட்டே



ரியட்டுக்கு வேலைக்கு வருகிறவர்களை அங்கே அழைத்துப் போனால் அந்த ஏழைகள் எப்படி இங்கே வர முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே போக்குவரத்து மிகப் பெரிய சங்கடமாக இருக்கிறது. மேலும் அவர்களுக்குப் பண வசதியும் குறைவு. இந்த நிலையில் அவர்களை ஊருக்கு வெளியே கொண்டு போவது எப்படி சாத்தியமாகும் என்றுதான் கேட்க விரும்புகிறேன். எனவேதான் இந்த அரசின் திட்டங்கள் அனைத்தும், வெறும் மாயா ஜால வித்தைகளைப்போல, பிரமையை உருவாக்குவனவாக இருக்கின்றனவே தவிர வேறல்ல என்று கூற விரும்புகிறேன். மத்தாப்புகள் எரிந்து கரியாவதைப் போல் இவைகள் எல்லாம் கடைசியில் ஒன்றுமில்லாமல் போய்விடுகின்றன. உங்கள் திட்டங்களெல்லாம் மத்தாப்புகளைப்போலவும் அவற்றின் விளைவுகள் எரிந்து போன கரித்தூளைப் போலவும் இருக்கின்றன என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

காவல் துறையிலேகூட ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். இப்போது அது என்னவாயிற்று ? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அந்த அறிவிப்பைச் செய்தார்கள் என்று நினைக்கிறேன். காவல் துறை உயர் அதிகாரிகளுக்குப் பணி புரியும் ஆர்டர்லிகளை இனி ஒழித்துவிடுவோம் என்றும், அதற்குப் பதிலாக ஈட்டுப் பணமாக மாதம் ரூ. 100 அல்லது ரூ. 150 அல்லது ரூ. 200 கொடுக்கப் போகிறோம் என்றும் அறிவித்தார். இப்போது என்ன ஆயிற்று ? அந்த அதிகாரிகளுக்கு ரூ. 100 மாதம் போய்ச் சேருகிறது. இருந்தாலும் அங்கே ஆர்டர்லிகள் இன்னும் வேலை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். கான்ஸ்டபிள்களுக்கான சட்டை, டிராயரைப் போட்டுக் கொள்ளாமல், வெறும் சட்டை வேட்டியை அணிந்துகொண்டு அவர்கள் அதிகாரிகளின் வீட்டில் இன்னும் வேலை செய்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை அறிவிக்கும்போது, நான் உங்களின் எண்ணத்தில் தவறு இருக்கிறது என்று சொல்லவில்லை. நல்ல திட்டங்கள்தான், நல்ல எண்ணங்கள் தான், நல்ல நோக்கங்கள்தான் என்பதை நான் உணருகிறேன். ஆனால் அதன் விளைவு என்ன ? உண்மையில் என்ன நடக்கிறது ? அந்த உயர் அதிகாரிகள் மணி மூன்று ஆனதும் கான்ஸ்டேபிளைக் கூப்பிட்டு, "அம்மா தனியாக இருக்கிறார்கள். வீட்டில் வேலை இருக்கிறது. அங்கே போய் அதைச் செய்" என்கிறார். வீட்டிற்குப் போய் சட்டை டிராயரைக் கழட்டி வைத்துவிட்டு வருவதற்கு நேரமாகும் என்பதால், அவர்கள் ஆபீசிலேயே சட்டை டிராயரைக் கழட்டி வைத்துவிட்டு, வேட்டியைக் கட்டிக்கொண்டு அதிகாரியின் வீட்டிற்குப் போகிற நிலை இருக்கிறது. எந்தக் காவல் துறை அதிகாரியின் வீட்டிலாவது வேலைக்கு என்று ஆள் வைத்து அவர்

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 10

களுக்கு ரூ. 100 அல்லது ரூ. 150 கொடுக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா ? இதன் காரணமாக அரசாங்கத்திற்குப் பொருள் செலவு, காவல் காரருக்கு வழக்கம்போல வேலை என்ற நிலைமைதானே இருக்கிறது.

(பிற்பகல் 12-10)

இரண்டாவதாக, காவல் துறையைத் திருத்த வேண்டிய கட்டாயத்தை உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்களை எப்படித் திருத்துவது ? நீங்கள் ஆட்சிக்கு வந்தது முதல் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறீர்கள். அந்த ரேஷியோவில் சாதாரண கான்ஸ்டேபிளின் எண்ணிக்கையை உயர்த்தியிருக்கிறீர்களா ? கான்ஸ்டேபிள் இல்லாமல் எப்படி நிர்வாகம் நடக்கும் ? அதிகாரிகளைக் கூட்டிக்கொண்டே போகிறீர்கள், ஒரு அதிகாரி அதிகமாகும்போது, அவருக்கு வேண்டிய டிரைவர், மற்ற வேலைகளைச் செய்ய ஆட்கள் என்று ஒவ்வொருவருக்கும் பத்துப் பதினைந்து கான்ஸ்டேபிள்களை இருப்பவர்களில் இருந்தே எடுத்துக் கொண்டால், ஊரில் நடக்கும் கலவரங்களைத் தடுக்க முடியாமல் போகிறது. இந்த நிலைமையில் காவல் துறையே சீர்கெட்டு வந்திருக்கிறது. இந்த நிலைமைகளை நாம் புரிந்துகொள்ளாமல் இருக்கிறோம். அதோடு மட்டுமல் லாமல், 160 இலட்சம் ரூபாய் செலவு செய்து புதிய வாகனங்களை காவல் துறைக்கு நாம் கொடுக்கப் போகிறோம். முதலமைச்சருக்கு பந்தோபஸ்து போவதில் இரண்டு ஜீப்புகள் போகின்றன. தென்னாற்காடு மாவட்டத்திலே போலீஸ் டெபுடி சூப்பிரண்டெண்டு ஜீப்பில் போனால், அவரோடு யார் யாரோ போனார்கள், ஒரு அம்மா போனார்கள், ஜீப் கவிழ்ந்தது. ஜீப்பில் என்னமோ நடந்தது என்று சொன்னார்கள். அதற்குள் நான் போக வில்லை. பிறகு இது குறித்து ஊர் சிரித்தது. பிறகு டிபுடி சூப்பிரண் டெண்டை ‘ சஸ்பெண்டு ’ செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அதிகாரிகள் எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். காவல் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்வது மட்டும் முக்கியமல்ல, அந்தத் துறை எப்படி இயங்குகிறது என்பதையும் பார்க்க வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்திலே நடக்கும் அட்டூழிய அநியாயங்களுக்கு அளவே கிடையாது. தலை காய்ந்தவர்களாக இருந்தால் அவர்களைக் கொடுமை படுத்த காவலர்களை உடனே கிராமத்திற்குப் போ என்று அனுப்பிவிடுகிறார்கள். அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் அரிசனங் களாகவும், வன்னியர்களாகவும் இருப்பார்கள். அங்கே ஆளைப் பார்த்து, பெண்களையெல்லாம் சேர்த்து உதைக்கிறார்கள். எங்கோ கொலை நடக்



1982 மார்ச் 10] [திரு. க. இராமமூர்த்தி]

கிறது என்றாலும், இங்கே வந்து பக்கத்திலே கிராமத்திலே வீடு, வீடாகப் புகுந்து பெண்களையெல்லாம் மானபங்கம் செய்கிறார்கள். எங்கோ கொலை நடந்தது என்றால், உடனே ஃபோன் போகிறது. அந்தப் பகுதியிலே யார் யார் காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்களோ, அதில் ஃபோன் செய்கிற பெரிய மனிதருக்கு யார் அடங்காமல் இருக்கிறார்களோ, அவர்களை விசாரி என்று சொல்லி, இந்த முறையில் விசாரணைகளைச் செய்து தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளும் நடவடிக்கையில் காவல் துறையினர் இன்றைக்கு இருக் கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெரியும். பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. ஒரு குறிப்பிட்ட வழக்கில் நடை பெற்றது.

ஒருவரை ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வேண்டும் என்பதற்காக இரண்டு முறை அழைத்துச் சென்றார்கள். அவர் ஒப்புதல் வாக்குமூலத்தைக் கொடுக்க இரண்டு முறையும் மறுத்துவிட்டார். மூன்றாவது முறையாக

Accused was given time for reflection. Refused to give a statement on 8th July 1981. On 9th July 1981 time for reflection given. Refused to give a statement. The Additional Judicial Second Class Magistrate closed the proceedings and sent back the file to the Chief Judicial Magistrate. Accused was released on bail.

அதற்கு பிறகு குற்றவாளி ஜாமீனில் விடப்பட்டார். விட்ட பிறகு திருச்சிக் குப் போயிருக்கிறார் குற்றவாளி என்று கருதப்பட்டார். திருச்சியில் இருக் கும் போது 9 ஆம் தேதிக்குப் பிறகு பெய்லில் விடப்பட்டார்.

18th. Inspector D.C.B. Cuddalore has sent a letter to the Divisional Manager, New India Assurance Company and obtained a complaint on 21st July 1981.

நடைமுறையில் யார் கொண்டுபோய் புகார் செய்கிறார்களோ அதைத்தான் கம்ப்ளைன்ட்டாக ஏற்றுக்கொள்ளுவது வழக்கம் என்பதை நாம் எல்லாம் கேட்டிருக்கிறோம். இங்கே வந்து ஒரு இன்ஸ்பெக்டர் நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனிக்கு, “ நீ கம்ப்ளைன்ட் கொடு. ஃபைலில் வைத்துக்கொள்ளுகிறேன் ” என்று எழுதுகிறார். அதற்குப் பிறகு 23 ஆம் தேதி

Inspector D.C.B. went to Trichi and took into custody Thiru Thamizh Maran from Palakkarai Police Station when he came there to sign, because he was on conditional bail. The arrest was made without the permission of the Court as required by law.

கண்டிஷனல் பெய்லில் இருப்பதால், கையெழுத்துப் போட வந்தபோது, 'அரஸ்ட்' செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவரை பெய்லில் விட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது வேறு. அதற்குப் பிறகு Thamizh Maran was produced in the Chief Judicial Magistrate's Court on 24th July 1981 at Cuddalore in the afternoon along with the F.I.R.

இந்த எஃப்.ஐ.ஆர். கொடுத்த 24 மணி நேரத்திற்குப் பிறகு, 25ஆம் தேதி தமிழ்மாறனுக்கு ஜாமீன் மனு கொடுக்கிறார்கள். 27ஆம் தேதி ஜாமீன் மனு பரிசிலனைக்கு வந்து தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதே நாளில் Recorded in Crime No. 76-81 while in remand for Crime No. 15/81. அதற்குப் பிறகு ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியிருக்கிறார்கள். யார் விசாரணை செய்கிறார்களோ அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. இந்த நிலைமையில் விசாரணை செய்த செகண்ட் கிளாஸ் ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் அந்த ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியிருக்கிறார். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர், டி.ஆர்.ஓ.—அவர் கலெக்டருக்கு மேலா, கீழா என்று எனக்குத் தெரியாது—மாவட்ட சூப்பிரண்டெண்டு—சர்வசக்தி படைத்தவர்—, ஆகிய எல்லோரும் சேர்ந்து பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்திருக்கிறார்கள். "இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை இன்றைக்கே போட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து எப்படி போயிற்று இந்த அதிகாரம்? காவல் துறையினர் இது போன்ற விளையாட்டுக்களை விளையாடுவதால் ஊரில் கலவரம் நேரும்போது, அதைத் தடுக்க நேரம் இல்லை. அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு காவல் துறை அதிகாரியும் சென்னையில் இடம் வாங்கி வீடு கட்டிக் கொண்டிருக்கிறார். எங்கள் ஊரில் இருப்பவர்கள் இன்னும் சிறந்தவர்கள். அங்கு விழுப்புரத்திலிருந்து எலெக்ட்ரீஷியன்கள் வர வேண்டும் என்றும் நெய்வேலி சுரங்க நிறுவனத்திலிருந்து உடென்சில்களைக் கொண்டு வர வேண்டும் என்றும் இத்தகைய வேலைகளையெல்லாம் பார்க்க ஆர்டர்லிகளை உபயோகிக்கிறார்கள். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. இப்படி இருக்கும்போது, காவல் துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்தாலும், என்ன புண்ணியம்? இதையெல்லாம் தடுக்க வேண்டியது யார்? காவல் துறை அதிகாரிகள் வீடு கட்டுகின்ற வேலையையும் செய்து கொண்டு உங்கள் எதிரே கை கட்டி பாதுகாப்பு கொடுக்கின்ற வேலையிலே இருந்துகொண்டு, நல்லவர்களைப் போல காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்னதைப் போல, காவல் துறையினரின் தொல்லைகளால் ஏழைகள் கண்ணீர் விட்டுக்



கொண்டிருக்கிறார்கள். ஏழை அழுத கண்ணீரால் என்னவாகும் என்பதை இனிமேல் நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. இந்த நிலைமையில்தான் ஆட்சியின் பல்வேறு துறைகளில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆளுநர் உரையிலே ஒன்றைத் தெரிவித்தார்கள். கோர்ட்டுகளில் எல்லாம் நடவடிக்கைகள் தமிழிலே உடனே நடக்கும் என்று தெரிவித்தார்கள். அதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். நீதிமன்றங்களில் தீர்ப்புகள் தமிழில் எழுதப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள்—மகிழ்ச்சி. ஆனால் அதற்கு வேண்டிய சுருக்கெழுத்துப் புத்தகங்கள் இதுவரையில் தயாராகவில்லை. அப்படியானால் சுருக்கெழுத்து எப்படி படிக்கப் போகிறார்கள்? தீர்ப்புகளை தமிழில் எழுத அதற்கு வேண்டிய சுருக்கெழுத்துப் புத்தகங்கள் வெளியாகிவிட்டதா? ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டு அதை நிறைவேற்றுகின்ற வகையிலே வழிவகைகளைக் கண்டிருக்கிறோமா என்றால், இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்த வகையில், கும்பகோணத்தில் கடைகளில் புகுந்து இந்த அதிகாரிகள் செய்கின்ற கொடுமையைப் பற்றி தந்திகள் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கின்றன. வருவாய்த் துறை அதிகாரிகள் வரி வசூல் செய்வதைப் பார்த்திருக்கிறேன். அந்த வரி விதிப்பை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றால், நீதிமன்றத்திலே இருக்கும்போதே இடையிலே "இப்படி ஸ்டேட்மெண்ட் கொடு" என்று அதிகாரிகள் நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள். இது நல்லதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு சமுதாயத் திட்டங்களை நாம் அறிவித்திருந்தாலும் கூட, வரிகள் மூலம் நாம் பெறுகின்ற நிதி முழுமையாக சமுதாய நலத் திட்டங்களுக்காகச் செல்லவில்லை என்பதைப் பார்க்கும் போது, வேதனையாக இருக்கிறது. "டானிடா" சுவீடிஷ் இன்டர்நேஷனல் அத்தாரிட்டி, தன்னிறைவுத் திட்டம், ஐ.ஆர்.டி.பி. என்று பல்வேறு திட்டங்களை மத்திய அரசின் உதவியால் நிறைவேற்றுகிறார்கள். ஆகவே வரி விதிப்பு அவசியம் இல்லை. வரிகள் மூலம் வருகின்ற நிதியை 100 கோடி ரூபாய் திட்டத்தில் செலவு செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள், என்னோடு நெருக்கமாக இருப்பதால், என்னறச் சொன்னார்கள். பார், முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாராயக் கடைகள், கள்ளுக் கடைகளைத் திறந்து வைத்து, அதிலே வருகின்ற பணத்தைக் கொண்டு வந்து ஏழைகளுக்கு உதவி பண்ண வேண்டும் என்று சொல்லி, அந்தப் பணத்தையெல்லாம் முதலீடு செய்கின்றார்கள் என்று

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 10

(பிற்பகல் 12-20)

சொன்னார்கள். அதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு இருக்கிறது நிர்வாக இயந்திரம் நேர்மையான இயந்திரமாக இல்லை. திறமையான இயந்திரமாக இல்லை. நமக்கு ஒரு நல்ல அனுபவமே ஏற்படவில்லையே. பற்பொடியைப்பற்றிச் சொல்கின்றார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றி இங்கே சொல்கின்றார்கள், அதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. அது வேறு. இந்த சோசியல் சர்வீசை எவ்வளவோ பேர்கள் செய்துகொண்டுதானிருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் செய்ய வேண்டும் என்று இப்போதுகூட சொல்கின்றார்கள். சில திட்டங்களை கம்பெனிகளுக்குக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். அதுபோல அவர்களிடமே இதையும் இலவசமாகச் செய்யச் சொல்லிக் கொடுக்கலாமே. அதற்கு என்ன செலவு ஆகும்? இதை ஏன் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும்? பற்பொடி கொடுப்பது, 2 வயது குழந்தைகளுக்குப் பால் கொடுப்பது, அல்லது மாத்திரை கொடுப்பது, ரொட்டி கொடுப்பது, பிஸ்கட் கொடுப்பது என்றெல்லாம் சொல்கிறார்கள். அப்படிக் கொடுத்தாலும், அதற்கும் வரி என்று போட்டிருக்கிறார்கள்.

திரு. சி. இராமலிங்கம் : இரண்டு வயது குழந்தைகளுக்கெல்லாம் எங்கள் வீட்டில் சோறுதான் கொடுக்கிறோம். ஏழைகள் வீட்டுக் குழந்தைகளுக்குச் சோறுதான் போட முடியும். அவர்கள் சோறுதான் சாப்பிடுகிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இரண்டு வயது குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் சொன்னார்கள். இந்தத் திட்டத்திலே சத்துணவு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இணைத்தார்கள். அவர்களுக்குத் தெரிகிறது. இரண்டு வயதிலேயே சோற்றைக் கொடுத்தால் நோஞ்சானாகத்தான் வளர முடியும். இந்த மாதிரி ஏழைக் குழந்தைகள் நோஞ்சானாக இருக்கக்கூடாது என்றுதான் இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. சி. இராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, சோறு தின்றுதான் நோஞ்சானாக இல்லை. அவர்கள் சோறு தின்றுதான் வளர்ந்தவர்கள். அதுதான் அவர்கள் நோஞ்சானாக இல்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இரண்டு பேர்களும் நோஞ்சானாக இருப்பதாகத் தெரியவில்லை.



1982 மார்ச் 10]

திரு. க. இராமமூர்த்தி : நான் இரண்டு வயதிலேயே சோறு சாப்பிட ஆரம்பிக்கவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இரண்டு வயது குழந்தைகளுக்குச் சோறு தர முடியாது என்று கருதுகிறேன். இவர்கள் போட்டிருக்கின்ற திட்டங்கள் நிறைவேற்றப்படத் தக்கதாக இருக்கின்றன என்பதை விட, பல்வேறு திட்டங்கள் இவர்களாலே நிறைவேற்றப்படவில்லை. நிதிநிலை அறிக்கையில் வழக்கமாக அரசாங்கத்தினுடைய திட்டங்களை அறிவிப்பார்கள். ஆனால் இங்கே என்ன நடந்திருக்கிறது? மத்திய அரசு இந்த மாநிலத்திலே நிறைவேற்றியிருக்கின்ற திட்டங்களை மாநில அரசின் திட்டங்களாகச் சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசின் திட்டங்கள் என்று என்ன வந்திருக்கிறது? நான் உரிமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதல்ல. இந்த ரூ. 100 கோடி திட்டம், காகித ஆலைத் திட்டம், மின்சார வாரியத்தை தேசிய மயமாக்கப்பட்ட வாரியத்தை தனியார் துறைக்கு விடுவது, காவல் துறையை விஸ்தரிப்பது, டூரிசம் டிப்பார்ட்மெண்ட்டிலே கட்டிடங்கள் கட்டுவது இவைகள் எல்லாம் குறைபாடுகள் உடையனவாகவே இருக்கின்றன. அவைகள் நல்ல முறையிலே செயல்படுத்தப்படவில்லை. இவைகளைச் செயல்படுத்த முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள். அவைகளை நிறைவேற்ற அதிகாரிகள் மூலமாக இதைச் செலவிடப் போகிறார்கள். எதனாலே வறட்சிப் பணிகளில் அவ்வளவு பெரிய குறைகள் வந்தன? கட்டப்பட்ட எத்தனை தண்ணீர் தொட்டிகள் இடிந்து விழுந்தன? போடப்பட்டதாகச் சொல்லி போடாத ரோடுகளுக்கு பணம் வாங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. உங்கள் மீது நான் குறை சொல்லவில்லை., நிர்வாக இயந்திரம் தான் சரியில்லை.

இப்போது 'ரிபிரஷர் கோர்ஸ்' என்று வைத்திருக்கிறார்கள். 5, 6 ஆண்டுகள் ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு, அவர்கள் மறந்துவிடப்போகின்றார்கள் என்று, அவர்களுக்குப் புதிய நிலைமைகளைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு என்று 'ரிபிரஷர் கோர்ஸ்' என்று ஒரு திட்டம் வைத்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ், அதிகாரிகளுக்கு ஒரு ரிபிரஷர் கோர்ஸ் வைக்க வேண்டும். அதைச் செய்வதற்கு நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு கேட்டிருந்தால், அதை நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு வரவேற்றிருப்பேன். அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களுக்கு எவ்வளவு அதிகாரங்கள் இருக்கின்றன? மக்கள் அவர்களை எந்த அளவுக்கு மதிக்கிறார்கள்? உங்கள் தகுதியிலிருந்து இறங்காதீர்கள் என்று எடுத்துச்சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட குறைகள் இருப்பதால், என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை

எடுத்துச்சொல்கிறேன். இதுபோன்ற நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமையில் அரசு வரிகளைப் போடுகிறது. பேச முடியாதவர்கள் மீது வரி போடுகிறது. ஏழைகள் மீது வரி போடுகிறது. பிஸ்கட்டுக்கு வரி போடுகிறார்கள். குழந்தைகள் சாப்பிடுகின்ற சாக்லேட்டுக்கு வரி போடுகிறார்கள்.

நான் பேசி முடிப்பதற்கு முன்னர் நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். ஆயிரம் ரூபாய்க்கு பட்டுத் துணி வாங்குகின்றவர்கள் ரூ. 50 கொடுக்கமுடியாதா என்று சொன்னார்கள். இருந்தாலும், இருக்கின்ற சிரமத்தைப் பார்த்து, கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று சொல்லி அந்த வரியை நீக்கியிருக்கிறார்கள். அதுபோலவே ஒரு ஆயிரம் ரூபாய்க்கு வாங்குவது என்று இல்லாமல், ஒரு ஐந்து ரூபாய் கொடுத்து வாங்குகின்ற கைத்தறி நெசவுத் துணிகளுக்குண்டான வரியையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வரியையும் கைவிட வேண்டுமென்று உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்னதைப் போல, அந்த அவையிலே அந்தப் பட்டுத் துணி வரியைக் கைவிட்டதுபோல, இந்த வரியை இந்த மேலவையிலே கைவிட்டதாக அறிவிக்க வேண்டும். அந்தப் பெருமையை அமைச்சர் அவர்கள் அடைய வேண்டும் என்று கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற நிலையிலே இல்லாமல் இருக்கின்ற நிலையிலே இந்தத் திட்டத்திலே சொல்லப்பட்ட சமூகநலத் திட்டங்களை வரவேற்கின்ற அதே நேரத்திலே, இத்தனை குறைகள் உள்ள அறிக்கை என்று மனதிலே கொண்டு, இந்தக் குறைகளை நீக்கி அரசு செயல்பட வேண்டும் என்ற உணர்வைத் தெரிவித்து என் பேச்சை முடிக்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நானும் அவை முன்னவர் அவர்களும் ஒரு விபத்தில் தப்பித்தாலும், அந்த விபத்தைக் காட்டிலும் நேரம் போதவில்லை என்கின்ற விபத்திலேயிருந்து தப்பித்து இங்கே பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின்மீது எதிர் கருத்துத் தெரிவித்தவர்களிடம் வேகம் இருந்தது என்பதை நான் மறுக்க மாட்டேன். ஆனால் அந்த வேகம் சுரத்தினுடைய வேகம்போல் இருந்தது. அந்த சுரத்திலே இருப்பவர்களுக்கு வேகம் வருகின்ற நேரத்தில், நாலு பேர் பிடித்தால் எழுந்து நிற்பார்கள். அந்த வேகம் தான் அங்கே இருந்தது



என்பது எங்களைப் பொறுத்துமட்டுமல்ல நல்ல முறையிலே உடற்பயிற்சி பெற்று வலிவோடு உள்ளவர்கள் 10 பேர்கள் தள்ளினாலும், நிமிர்ந்து நிற்கின்ற வலிவான வேகம்தான் எங்கள் வேகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது பாரதியார் நூற்றாண்டு என்ற காரணத்தினாலே அவர் பாட்டைச் சொல்லிச் சொல்கிறேன். பாஞ்சாலி சபதத்தில் சொல்கிறார்.

" புள்ளிச் சிறுமான் புலியை போய்ப் பாய்வது போல்
பிள்ளைத் தவளை பெரும் பாம்பை மோதுதல் போல் "

மோதுதல்கள் நடந்திருந்தாலும், " கட்டிய வேங்கை மீது கல் எறிந்து விளையாடும் பிள்ளை " என்பது போல ரசித்தோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கோமாளி என்று சொல்லிப்பார்க்கலாம், கோபம் வருமா என்று பார்த்தார்கள். மோடி மஸ்தான் என்று சொல்லிவிட்டால், இங்கே ஓடி வந்து வஸ்தாதுக்களைத் தாக்க வருகிறார்களா என்று எதிர்பார்த்து, இரட்டை வேடம் என்று சொன்னால் அவர்கள் இதயம் ஏதாவது கொதித்து எழுவார்களா என்று எதிர்பார்த்து, காகிதப் பூக்கள் என்று சொன்னால், இல்லை இல்லை நாங்கள் மல்லிகை மலர்கள்தான், உங்களாலே கசக்கிப் பிழிந்தாலும் நாணம் எனும் மணம் வீசும் என்று நாங்கள் சொல்வோம் என்று எதிர்பார்த்திருக்கக்கூடும்.

நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன்.

' வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோள்கள்
எங்கள் புரட்சித் தலைவர் வெற்றித் தோள்கள் வெங்குருதி
தனில் கமழ்ந்து வீரஞ்செய் மூச்சு அவர் மூச்சு, கங்கை போல் காவிரி
போல் கருத்துக்கள் ஊறும் உள்ளம் அவர் உள்ளம் '.

அந்த உள்ளத்தின் அடிப்படையிலே, இங்கே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு கேபிட்டல் பட்ஜெட்டே தவிர, ரெவின்யூ பட்ஜெட் அல்ல. டெபிசிட் என்று சொல்வார்கள். இது பற்றாக்குறை என்பது. பற்றாக்குறை ரூ. 204.44 கோடி என்று இருந்தாலும்கூட, அதை மின்சாரத்திற்கு ரூ. 220 கோடி அளவுக்கு முதலீடாகச் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்திருக்கின்ற காரணத்தினாலே, இதை ஒரு கேபிடல் டெபிசிட், முதலீட்டு பற்றாக்குறை என்றுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். முன்பு நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு பட்ஜெட் வெளியிடும்போது என்ன சொன்னார்கள் என்றால், ரெவின்யூ எக்ஸ்பெண்டிசர், அதாவது அன்றாடம் ஏற்படக்கூடிய செலவுகள், கேபிடல் எக்ஸ்பெண்டிசர், அதாவது

மூலதனச் செலவுகள் ஆகியவைகளில் இருக்கக்கூடிய அடிப்படையான வித்தியாசத்தைத் தெரிந்துகொண்டால், இதிலே பற்றாக்குறையான பட்ஜெட் என்பது ஒன்று, டெபிசிட் பைனான்சிங் என்பது மற்றொன்று. இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? இதைப்போன்று இருக்கும் நுணுக்கங்களையெல்லாம் நாம் தெரிந்துகொண்டால், விவாதத்தில் ஏற்படக்கூடிய, சொல்லக்கூடிய குற்றங்குறைகள் குறைந்துவிடும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையிலேதான் நாம் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த முறையிலே நாம் அரசு அலுவலர்களை மறந்துவிடவில்லை. பயணப்படி, நிலைப் படி, தினப் படி, நிலையான பயணப்படி என்ற அடிப்படையிலே அவர்களுக்கு உதவி செய்கிறோம். குறைந்த அளவு ஓய்வு ஊதியம் ரூ. 100 என்று இருந்ததை ரூ. 125 என்று உயர்த்தியிருக்கிறோம். அதனாலே 44,500 பேர்கள் பலன் அடைகிறார்கள். அரிசி, ஆடைகள் பெற்று வரும் 65 வயதைக் கடந்த முதியோர்களுக்கு 45 வயது கடந்த ஆதரவற்ற விதவைகளுக்கு உதவி செய்கிறோம். நமது பாரதிதாசன் அவர்கள், 'கோரிக்கை யற்று கிடக்குதண்ணே வேரிற் பழுத்த பலா, குளிர் வடிகின்ற வட்ட நிலா' என்று பாடியிருக்கின்றார்கள், அவர்களுக்கு உதவி செய்கிறோம். அது போலவே 60 வயதைக் கடந்த ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் நம் மாநிலத்தில் உள்ள அனைவருக்கும், கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்களுக்கு ரூ. 25 என்று இருந்த உதவித் தொகையை ரூ. 35 என்று உயர்த்தியிருக்கிறோம். அதனால் நமக்கு 7 கோடி ரூபாய் கூடுதல் செலவாகிறது. அந்தச் செலவை நமது அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, 2 வயது முதல் 10 வயது வரை உள்ள சிறுவர் சிறுமிகளுக்கு என்று உணவுத் திட்டம் நீட்டியிருக்கிறது. அதற்கு ரூ. 100 கோடி என்று ஒதுக்கியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும்வரை அவையின் நடவடிக்கைகள் நீடிக்கப்படுகின்றன.

(பிற்பகல் 12-30)

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்புகளைப் பயன்படுத்திப் பேசுகிறாரா அல்லது படிக்கிறாரா?



**டாக்டர் இரா. சனார்த்தனம்:** நேரம் குறைவாக இருப்பதால், குறிப்புகளைப் பார்த்தும், பயன்படுத்தியும் பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த அரசின் தன்னிறைவுத் திட்டத்தின் காரணமாக, முன்பு 69 வட்டாரங்களில் நிறைவேற்றப்பட்டது. இனி 150 வட்டாரங்களில் நிறைவேற்றப்பட இருப்பதன் காரணமாக 89 கோடி திட்டச் செலவு உயர்ந்திருக்கிறது. குடிநீருக்கு.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்த அரசு என்றால் எந்த அரசு? இதில் மத்திய அரசின் பங்கென்ன, மாநில அரசின் பங்கென்ன?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இது மாநில அரசின் செயல் திட்டத்தில் வருவதால் உரிமையோடு சொல்கிறேன். அந்த உரிமையை அனுமதிப்பார்களென்று நம்புகிறேன். குடிநீருக்கு 30 கோடி ரூபாயைச் செலவு செய்யும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் சொன்னது நினைவிற்கு வருகிறது Water, water everywhere but not a drop to drink என்று coleridge என்ற கவிஞன் The Rhyme of the Ancient Mariver என்ற கவிதைத் தொடரிலே சொல்லுகிறான். ஒரு கப்பலிலே தலைவனை நம்பிப் போன மாலுமிகள் ஏமாந்து போன நிலையில், அந்தத் தலைவனாலே உருவாக்கப்பட்ட நிலையை நினைத்துக் கொண்டு சொல்லியிருக்கலாம்.

வறட்சிப் பணிகளுக்கு மத்திய அரசு நிதி உதவி தந்தாலும், அதைக் காட்டிலும் கூடுதலாகச் செலவு செய்து, 53.49 கோடி ரூபாய் அளவிலே செலவினை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ரயில் கட்டணம் ஏறியிருக்கிற நிலையிலே, மக்கள் பேருந்தை நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதி உதவி தர வேண்டிய நெருக்கடியில் இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றுகூட பேருந்துகள் எரிக்கப்பட்டிருக்கின்றன என்பதும், 4. 5 லட்சம் ரூபாய் இழப்பைப் போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொண்டிருக்கிற நிலையில், இந்த நிதி உதவி தொடர்ந்து தேவைப்படும் நிலையையும் தெரிவித்துகொள்கிறேன்.

மின் வாரியத்தை எடுத்துக்கொண்டால், அதனுடைய பராமரிப்புச் செலவை அது தாங்கிக்கொள்ள முடியாத நிலையில், கேரளாவிலிருந்து வழங்கும் மின்சாரத்திற்குக் கட்டணம் உயருமானால், ஒருவேளை அதற்கே ஒரு 100 கோடி ரூபாய் தர வேண்டிய சிரமம் இருக்கிறது. மக்கள் விலைவாசி உயர்வால் இன்னல்களுக்கு ஆளாகக்கூடாதென்ற காரணத்தால், நுகர்பொருள் வாணிபக் கழகம் மிகுந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதுவும் அரிசி விநி

போகத்தில் மட்டும் 35 கோடி ரூபாய் இழப்பும், ஒரு டன் அரிசி வழங்கு வதிலே 500 ரூபாய் இழப்பும் ஏற்றுள்ளது. இதெல்லாம் ஒரு மக்கள் நல அரசு ஏற்க வேண்டிய பொறுப்பு என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். அதனால், பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை துன்பம் பற்றா, துயரம் பற்றா, தமிழர் நலன் பற்றிய அறிக்கை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையை விமர்சிக்கக் கூடாதென்ப தல்ல. அதிலிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டுமென் பதற்காகச் சொல்லுகிறேன். அவர்கள் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சி தந்தாலும்கூட, அறிஞர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் ' பிளான் டெவலப்மென்ட் மோர் தேன் பேலன்ஸ்ட் ' என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே 19,000 கோடி துண்டு விழுந்திருக்கிறது. விலையேற்றம் என்பது மாநில அரசு மட்டுமல்ல, மத்திய அரசினுடைய செய்கையாலும் வருகிற காரணத்தாலே, இரண்டு அரசுகளும் இந்தப் பொறுப்பினை ஏற்கின்றன. இன்னும் சொல்லப்போனால், 3000 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயம், நீர்ப்பாசனம், கிராம வளர்ச்சி, புறநகர் மின் வழங்கல், தண்ணீர் வழங்கல் ஆகிய காரியங்களுக்கு மாநில அரசு மூல மாக மத்திய அரசு செய்வதைக் காட்டிலும், முழுப் பொறுப்பையும் மாநில அரசுக்குத் தந்தால், இது மத்திய அரசின் சுமையைக் குறைக்குமென்ற கருத்தைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்த நேரத்தில்கூட, மத்திய அரசில் இருப்பவர் களாகட்டும், மாநில அரசில் இருப்பவர்களாகட்டும், வரி விதிக்கக்கூடாதென்று சொல்லவில்லை. வரியில்லாமல் ஆட்சி நடக்காதென்று சொன்னார்கள். மாநில அரசுக்கு நிதிநிலை அறிக்கை தயாரிப்பதிலே கஷ்டமிருக்கிறது என்று டாக்டர் பி. சி. ராய் அவர்கள், பழுத்த தேசியவாதி, தெரிவித்த கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவுபடுத்தினார்கள். மேலும் அவர் சொன்னது, மத்திய அரசு ஒரு பக்கம் வரியைப் போட்டுக்கொண்டே போக, நம் நாட்டு மக்கள் அந்த வரிச் சுமையைத் தாங்கி, மிச்சம் வலிவு இருந்தால் தான், மாநில அரசு போடக்கூடிய வரியைத் தாங்கிக்கொள்ள முடியும். மாநில அரசு மேலும் வரி போடாமல் இருப்பதற்குக் காரணம், மக்களிடம் மேலும் வரிச் சுமையைத் தாங்கிக்கொள்ள முடியாது என்று உணர்ந்திருக்கும் கருணை அடிப்படையிலேதான் என்று தெரிவித்தார்கள். எதிர்க் கட்சியில் இருந்த போது பேரறிஞர் அண்ணா அவர்கள் வரி போடுவது தவறு என்று சொல்ல வில்லை. அதனாலே மத்திய அரசிடமிருந்து நாம் எதிர் பார்ப்பது, ஒரு



தாயிடம் பூட்டு சாவி இருந்து, மகன் மருமகளிடம் அவதிப்படும் நிலையிலே தான் மாநில அரசு எதிர்க் கட்சிகளிடம் மாட்டிக்கொண்டு முழிக்கிறது. அதனாலே உரிமைகளைப் பெற வழி வகை காண வேண்டும்.

இந்த அரசின் நோக்கம், தனி நபர் வருமானத்தைப் பெருக்க வேண்டு மென்பதுதான். இந்தியாவில் தனி நபர் வருமானம் 190 டாலர், சிங்கப் பூரில் 3130 ; இங்கிலாந்தில் 6320 ; அமெரிக்காவில் 10630 ; நமக்கு காடுகள் வளர்ச்சிக்கு உதவும் ஸ்விடனில் 11930 ; இன்று வளர்ச்சி பெற்றுள்ள குவைத் நாட்டில் 17100 டாலர். இந்த நிலைமைகளைப் பார்க்கும்போது, தனி நபர் வருமானம் நமது மாநிலத்தில் அதிகரிக்க இந்த அரசு செய்யும் முயற்சிதான் பல திட்டப் பணிகள் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உணவுப் பொருள்கள் வழங்க அடையாள அட்டைகளைப் புதியதாக வழங்கும் நிலையிலே நம் போன்ற உறுப்பினர்கள் மக்கள் நியாயமான விவரங் களைத் தர வேண்டுமென்று சொல்ல வேண்டும். . .

**திரு. ப. மாணிக்கம் :** தனி நபர் வருமானத்தைப் பொறுத்தவரையிலே, நம்முடைய மாநிலத்திலே சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் என்ன வித் தியாசம் என்று உறுப்பினரவர்கள் சொல்ல முடியுமா ?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் வித்தியா சத்தை விரும்புகிறார் என்ற அடிப்படையிலே நல்ல முன்னேற்றத்திற்கான வழி வகைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே 1000 ரிக்ஷாக்கள் வழங்கும் முயற்சி பெருக வேண்டும். காரணம் . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்கான விளக்கத்தை நாளை நான் என்னுடைய உரையிலே குறிப்பிடுகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பெட்ரோலை மிச்சப்படுத்த இப்போது உலக அரங்கிலே எடுத்துக்கொள்ளும் முயற்சிகளைப் பார்க்கும்போது, மோட்டார் பொருத்திய ரிக்ஷாக்களை அதிகம் வழங்க முயற்சிகளை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாடு தொழில் மேம் பாட்டுக் கழகம் வெளி நாட்டு மூலதனத்தை வரவேற்கிற நிலை பாராட்டுக் குரியதென்ற அடிப்படையிலே, பல வெளிநாட்டுத் தமிழர்கள் தாங்கள் ஈட்டிய முதலை தமிழகத்தில் முதலீடு செய்ய இது வழி வகை காணும். பால் பெருக்

குத் திட்டம், 'ஆனந்த்' மாதிரி நல்ல முறையிலே வளர்ச்சி அடைய பெரிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது இந்த அரசு. கனி வளத்தைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு மேக்னசைட் நிறுவனம் 81.2 லட்சம் லாபம் அடைந்திருப்பதைப் பார்க்கும்போதும், தமிழ் நாடு கனிப்பொருள் நிறுவனம் 25 லட்சம் லாபம் அடைந்திருக்கும் நிலையைப் பார்க்கும்போதும், திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஆதி நாட்கள் முதற்கொண்டு கனி வளத்தைத் தேடி, கன்னித் தமிழ் நாட்டின் பெருமையையும், வளத்தையும் காக்க வேண்டுமென்று கூறியது நினைவிற்கு வருகிறது. ஒருமுறை நாடாளு மன்றத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். சேலத்திலே அந்த நாளிலே எடுத்த இரும்பைக்கொண்டு இங்கிலாந்தில் இரண்டு பாலங்கள் கட்டப்பட்டதென்று சொன்னபோது, தமிழக சட்டசபையில் கேலி யாக, 'சேலம்' என்றால் அமெரிக்காவில் உள்ள சேலம் என்று சொன்ன போது, பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு கருத்தைச் சொன்னார்கள் "ஏப்ரல் 1930-ல் சட்ட மன்றத்தில் குறிப்பிட்டார்கள், இந்தியாஸ் மினரல் வெல்த் என்கிற நூலில் எப்படி அந்த நாளிலே சேலத்திலுள்ள இரும்புத் தாதை எடுத்துச் சென்று, இங்கிலாந்தில் இரண்டு பாலங்கள் கட்டினார்கள் என்ற விவரங்கள் இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்கள்.

பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் பெருக வேண்டுமென்றும், அதை அண்டை மாநிலங்களிலிருந்து எதிர்பார்க்கும் நிலையை மாற்ற வேண்டுமென் றும் எண்ணி, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதற்காகப் பாராட்டு கிறேன்.

கல்வியைப் பொறுத்தமட்டில், பழைய பெரிய பல்கலைக் கழகங்களை மறந்துவிடக்கூடாது. புதிய பல்கலைக் கழகங்கள் 7 வந்திருந்தாலும், நம் முடைய கணக்கிலே மேலும் 2 பல்கலைக் கழகங்கள் வர வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி உருவாகும் பல்கலைக் கழகங்கள் ஒவ்வொரு நோக்கத்தோடு இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் கல்விச் செலவைக் குறைத்த நேரத்திலும், பெரிய, பழைய பல்கலைக் கழகங்களுக்குத் தந்த நிதியைக் குறைக்கவில்லை. அமெரிக்காவில் ஹார்வார்ட், கலிபோர் னியா பல்கலைக்கழகங்களுக்கும், இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்ட், கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்கும் தந்த உதவியைக் குறைக்காமல் இருக்கக் காரணம், பெரிய பல்கலைக் கழகங்கள் ஒரு முன்மாதிரி பல்கலைக் கழகங்கள் என்ற அடிப்படையிலேதான். அதை இங்கும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நீலகிரியைப் பொறுத்தவரையில், வனச் செல்வத்தைப் பாதுகாக்க நல்ல பாதை அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்காக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாசனத்தைப் பொறுத்தவரையில், லாப நோக்கம் இல்லாமல், விடப்பட்ட திட்டங்களையும் எடுத்துச் செயல்படுத்துகிறது. இந்த அரசு அண்ணாவின் கொள்கையிலே நடக்கிறார்களா என்ற சந்தேகத்தோடு அல்லது அதிலிருந்து நழுவுகிறார்களா என்ற எச்சரிக்கையோடு பார்க்கும் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் நீர்ப்பாசனம் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்று சிறுநீர்ப் பாசனத் திட்டத்தைப்பற்றிப் பேசுகிற காலத்தில் உண்மை யிலேயே நம் நாட்டில் இன்னமும் வீணாகிக் கொண்டிருக்கும் மலை அருவி களைக் கட்டுப்படுத்தி, சிறுநீர்ப் பாசனத் திட்டங்கள் செய்யக்கூடியது நிறைய இருக்கிறது. அப்படி செலவழிக்கக்கூடியதன் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவாக இருக்கிறது என்ற ஒரு காரணத்தால் அவை களை ஒதுக்கி வைக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி சிறுநீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதாலே கிடைக்கும் நேர்முக லாபத்தைப் பார்க்கிறார்களே தவிர, அந்த மக்கள் மனத்திலே ஏற்படக்கூடிய சந்தோஷம், அந்த மக்களுக்கு ஏற்படும் திருப்தி இவற்றை ரூபாயாக மாற்றிப் பார்த்தால், உண்மையிலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டை ஏற்றுக்கொள்வார்களென்று கருதுகிறேன். அதனாலே அண்ணா அவர்கள் பாசனம்பற்றி என்ன கருத்து வைத்திருந்தார்களோ அதன் அடிப் படையிலேதான் மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் அளவிலே அணை கட்டும் திட்டமும், கிழக்கு இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பக்கத்து மாவட்டங்களிலிருந்து வெள்ளப் பெருக்கிலே வரும் நீரைத் தேக்கி, விவசாயத்தைப் பெருக்கும் நல்ல முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட ஆற்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் உடைந்த ஏரிகளைச் செப்பனிடும் பணி களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

அடுத்து, மீனவ மேம்பாட்டு நிறுவனம் 11 கோடி ரூபாய் செலவிலே சென்னையிலே மீன்பிடி துறைமுகமும், இறால் பண்ணையும் அமைக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்ன

முட்டத்தில் மீன்பிடி துறைமுகம் வருவது அறிந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் உள்ளம் எல்லாம் பூரித்திருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சியைப் பார்க்கிறபோது, 190 கோடி ரூபாய் மதிப்பிலே வருகிற காகித ஆலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் நானும் அவரும் விரும்புகிற ஒன்றை வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கோபத்திலே கண்டிப்பதில் பொருள் இருக்கும். ஆனால் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செய்கிற ஒரு காரியத்தில் அவருக்கு அவ்வளவு பெரிய சந்தேகம் வர வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுத் துறையைப் பொறுத்தவரையில், இந்த அரசு பல சலுகைகளை அளித்திருந்தபோதிலும், 6 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள் என்ற ஒரு நிலையை அறிவித்திருந்தபோதிலும், இன்னும் பல வட்டங்களை பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 5 இடங்களில் புதிய தொழில் பகுதிகளில் முதல் 5 ஆண்டுகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்களித்து பல நிலைகளிலும் அதை விரிவுபடுத்த வேண்டுமென்று தெரிவித்துகொள்கிறேன்.

அடுத்து, மின் அணுவியல், மருந்துப் பொருள்கள், மோட்டார் துணைப் பகுதிகள் உற்பத்தி செய்பவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வது நல்ல திட்டம். காரணம் மருந்துப் பொருள் உற்பத்தியை எடுத்துக்கொண்டால், வெள்ளைக்காரன் வெளியே போய்விட்டானே தவிர, இன்னமும் பல மருந்துப் பொருள் உற்பத்தி செய்யும் கம்பெனிகள் வெள்ளைக்காரன் மூலதனத்தோடு இருக்கிற நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மருந்து கம்பெனிகளுக்கு ஊக்கம் தருவது, உற்பத்திக்கு ஊக்கம் தருவது போன்றவை பாராட்டுக்குரிய செயல்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மோட்டார் துணைப் பகுதிகளைப்பற்றிச் சொல்லும்போது, நாம் உபயோகித்த பழைய பாகங்களையெல்லாம் வாங்கிச் சென்று வேறு மாநிலங்களில் வைத்து அதைப் புதிதாக வேறு ஒரு மாடலாக மாற்றி மீண்டும் அந்த பழையதையே இங்கு அனுப்புகின்ற ஒரு நிலை இருந்ததைத் தடுத்து நிறுத்தியிருப்பது பாராட்டுக்குரியது. இந்த மோட்டார் பாகங்கள் உற்பத்திக்கு இந்த அரசு உத்வேகமும், உற்சாகமும் தருவது பாராட்டத்தக்கது.



அடுத்து, மத்திய அரசின் பெரிய தொழில்கள் இங்கே வர வேண்டும் என்கிறபோது, நீலகிரி போட்டோ பிலிம் தொழிற்சாலையும் அதிலே வருகிறது. அதிலே கலர் பிலிம் பகுதி வருவது குறித்து இன்னமும் உறுதியற்ற நிலை இருக்கிறது. அதிலே உறுதியற்ற நிலை இருக்கிற காரணத்தாலே, நாம் அனைவரும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் எப்படி ரெயில் பாதை வர வேண்டுமென்று ஆர்வத்தைக் காட்டினோமோ அது போல் இதிலேயும் ஆர்வத்தைக் காட்டி மத்திய அரசிடம் இதை வலியுறுத்திப் பெற வேண்டும். அதோடு 60 கோடி ரூபாய் தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு ஒதுக்கியிருப்பது பல சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, வீட்டு வசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் அரும்பணி ஆற்றியிருக்கின்றன. சாலைகளைப் பொறுத்தமட்டில், 1,200 மக்கள் குடியிருக்கிற இடங்களுக்கெல்லாம் சாலைகள் போடப்பட வேண்டிய நிலையை எடுத்திருப்பது பாராட்டத்தக்கது. பேருந்து போகாத ஊர் இல்லை என்கிற அளவுக்கு அனைத்து கிராமங்களையும் இணைத்த பெருமை இந்த அரசுக்குத் தான் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், கோலாலம்பூர், சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு முகவர்களை நியமித்தது சுற்றுலாப் பயணிகளுக்கு உற்சாகத்தை அளித்து வெளி நாட்டில் இருப்பவர்களை பெரிய அளவில் கவர்ந்து அவர்கள் வருகை தர உதவி செய்திருக்கிறது.

அடுத்து, சென்னை மாநகர் மேம்பாட்டுத் திட்டத்தில் நமக்கு 55 கோடி ரூபாய் முதல் கட்டத்திலே கிடைத்து, இரண்டாவது கட்டத்திலே 21 கோடி ரூபாய் கிடைக்கிறது என்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் இன்னமும் சென்னையை உங்களுக்கு வாக்கு இல்லை என்கிற காரணத்தாலே கைகழுவி விட்டீர்கள் என்று கோபப்பட்டுக்கொண்டது போல், உள்ளபடியே உள்ளத்திலே அந்த அர்த்தம் இல்லை. குடிசைப் பகுதி மக்களுக்கு எளிய தவணையிலே 15 ஆண்டுகளுக்கு கட்டிக் கொள்ளும் அளவுக்கு கழிவு தருகின்ற அளவுக்கு 30 ஆயிரம் குடும்பங்கள் பயன்படுகிற திட்டங்கள் எல்லாம் வருகின்றனவே, இவைகள் எல்லாம் நடைமுறைக்கு வந்தால், சென்னை மாநகர் மக்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய உள்ளத்திலே இடம் பெற்று விடுவார்களே, அப்படி இடம் பெற்றுவிடக் கூடாது என்கிற ஆத்திரத்தில், இப்படி வருத்தத்தோடு சொல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போராட்டம் நடத்துவதெல்லாம்—நாளை இந்த

சென்னை மலரப் போகிறது, நாங்கள்தான் இதற்காகப் போராடினோம் பார்த்தீர்களா என்ற அளவில் பங்கு கொள்ளத்தான் இப்படிப் போராடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

வரிகள் என்று சொல்லும்போது, நாம் எதற்காக வரியைப் போடுகிறோம் என்று பார்க்க வேண்டும். மின்சாரக் கருவிகள், மோட்டார் வண்டி துணை பாகங்கள், டையர், டியூப், பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் பிஸ்கட், சாக்லெட் போன்றவைகளுக்குத் தான். இன்னமும் சொல்லப்போனால், சாக்லெட்டைப் பொறுத்தவரையில், அதைச் சாப்பிடுவதால் இங்கிலாந்தில் 100 மில்லியன் பவுன் ஒவ்வொரு ஆண்டும் உடலைக் குறைப்பதற்காக செலவு செய்கிறார்கள். ஆதலால் இந்த சாக்லெட்டை எல்லாம் சாப்பிட வேண்டும் என்பதிலே அதிக அக்கறை காட்ட வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** உறுப்பினர் அதிகமாகச் சாப்பிடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன் (சிரிப்பு).

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** எனக்கு உடலைக் குறைக்கின்ற கஷ்டம் வந்துவிடக் கூடாது என்பதாலே தான் நானும் இணைந்து இதைச் சொல்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தை தனியாரிடம் தருவது தான் அண்ணாவின் கொள்கையா என்று கேட்டார்கள்.

Nationalisation of industries is needed, more than that, nationalisation of the efficiency in the Private Sector is badly needed என்று நேஷனலைசேஷன் பற்றி அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது தனியாருடைய திறமையைத் தேசியமயமாக்க வேண்டும். தனியாரிடம் சிக்கனம் இருக்கிறது. லாபம் தேடக்கூடிய வழிமுறை இருக்கிறது. திறமை இருக்கிறது. அதை அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற பொருள்பட அண்ணா அவர்கள் சொன்னார்கள். முன்பு பைக்காரா திட்டம் கொண்டுவரப்பட்டபோது, கோவையிலே அதை பைத்தியக்காரத் திட்டம் என்று சொன்னார்கள். அப்போது உற்பத்தியான மின்சாரத்தை விநியோகம் செய்வதற்காக ஆயில் என்ஜின் வைத்திருப்பவர்களைக்கூட அதை மாற்றி மின்சாரம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று அதிகாரிகள் பிரச்சாரம் செய்தார்கள். அந்த நிலை எல்லாம் மாறி இன்றைக்கு மின்சாரத் தேவையிலே நாம் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். அப்போது எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார் அவர்களும் மற்றும் சி. எஸ். ஆர். போன்ற பெரியவர்கள் எல்லாம் காமராஜரை அணுகி ஒன்று சொன்னார்கள். கோவையிலே மில் முதலாளிகளான நாங்கள் தனியாக எங்களுக்குத் தேவையான மின்



சாரத்தை அனல் மின்சாரம் மூலம் தயாரிக்க அனுமதியளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது எப்படி நிலக்கரியைக் கொண்டு வரப்போகிறீர்கள் என்று காமராஜர் கேட்க, "நாங்கள் இரண்டு கப்பல்களை வாங்கிக்கொள்கிறோம், எங்களுக்கு வேண்டாம் என்கிறவற்றை அரசிடம் ஒப்படைத்து விடுகிறோம், எங்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல், கட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் கிடைக்க வேண்டும்" என்று கேட்டார்கள். அதற்கு அன்றைக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. அன்று அனுமதித்திருந்தால், ஒரு வேளை கோவையில் இருக்கிற மின்சாரப் பிரச்சினை தீர்ந்து போயிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** கப்பல் வைத்துக்கொள்ள ஏன் அனுமதிக்கவில்லை என்பதற்கான விவரத்தை மத்திய அரசு கொடுத்திருக்கிறது.

According to particulars furnished by the Poompuhar Shipping Corporation the Shipping Development Fund Committee, the West German firm has quoted..........................

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நான் சொல்ல வந்தது அதை அல்ல. காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே காங்கிரஸ்காரரான திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார், சி.எஸ்.ஆர். போன்றவர்களுக்கு எல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக நிலக்கரியைக் கொண்டு வருவதற்காக கப்பலைப் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் இருந்திருக்கிறது. தனியார்கள் தாங்களே மின்சாரம் உற்பத்தி செய்ய முன்வருகிறோம் என்று சொல்லக்கூடிய ஆர்வம் அப்போதே இருந்திருக்கிறது. அதை அப்போதே காமராஜர் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள் என்பதும், அவர் வழியிலே இருப்பவர்கள் அதை வரவேற்பதிலே தவறில்லை என்கிற கருத்தையும் தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

**திரு. நீலநாராயணன் :** இந்த அவையினுடைய மாண்புமிகு கொறடா அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு பேசும்போது, ஒரு க்ஷேம நல அரசு முக்கியமான துறைகளை தேசியமயமாக்கியிருந்தால், தவிர்க்க முடியாமல் அவற்றிற்கு நஷ்டம் ஏற்படுகின்ற நிலை வந்தால் அந்த நஷ்டத்தை அரசு ஏற்றுக்கொள்கிறது என்றும், அதுபோல் பஸ் துறையிலே ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்றும், அதுபோல மின் வாரியத்திலே ஏற்படுகிற நஷ்டத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். இது தான் ஒரு க்ஷேம நல அரசினுடைய முக்கியமான

லட்சணம் என்ற பொருள்பட இங்கே அதை எடுத்துக்கூறினார். அதே நிலை இந்த மின்சார வாரியத்திற்கும் பொருந்தும் அல்லவா? அப்படிப் பொருந்துகின்றபோது, அதை மட்டும் ஏன் தனியாரிடம் விட வேண்டுமென்ற எண்ணம் எழ வேண்டும் என்பதை மட்டும் விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : உறுப்பினர்களுடைய உள்ளன்பு எனக்குப் புரிகிறது. "220 கோடி ரூபாய் நஷ்டத்தில் மூழ்கி மூழ்கி நீங்கள் மூழ்க வேண்டும். அதையும் தாண்டி இன்னும் ஓர் 5 ஆண்டுகளில் ஆயிரம் கோடிக்கு மேல் நஷ்டம் வந்து அவதிப் படுங்கள்" என்ற ஆசையினாலே அப்படிக் கூறுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு)

**திரு. ஆ. நல்லசிவன்** : மின்சார உற்பத்தி வினியோகத்தைத் தனியாரிடம் விட்டால் மட்டும், இப்படி நஷ்டம் ஏற்படாது என்று எப்படிக் கூறுகிறார்கள்? தனியார் துறையிலே லாபம் வரும் என்றால், அரசுத் துறையிலே அதை ஏன் லாபத்திலே ஓட்டக் கூடாது என்று அரசு பரிசிலித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : இதிலே ஒன்றைத் தெளிவு படுத்த நான் விரும்புகிறேன். இருவருமே இதில் தவறு செய்கிறார்கள் என்பதுதான் என்னுடைய நோக்கம். ஏனென்றால் இப்போது நமக்கு இருக்கிற மூலதனத்தில் முடிந்த அளவு அத்தனையும் செலவு செய்துதான் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம். மத்திய அரசும் அதற்கான பல்வேறு வகைகளில் திட்டங்கள் தீட்டி உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் எவ்வளவு முயற்சி செய்தாலும், 6 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலே நாம் போட்டிருக்கிற திட்டங்களின் அடிப்படையிலே எவ்வளவு தான் மின்சாரம் உற்பத்தியானாலும் கூட, தமிழகத்தினுடைய தேவை முழுவதையும் பார்க்கிறபோது, அப்போதும் நமக்குப் பற்றாக்குறை தான் இருக்கும். ஓரளவு 'சர்ப்பிளஸ்' என்கிற நிலை கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்குத் தான் இருக்கிறது. அவர்கள் ஹைட்ரோ எலெக்ட்ரிக் திட்டம், அதாவது நீர்மின் திட்டம் வைத்திருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இப்போது போட்டிருக்கிற திட்டங்கள் உட்பட, மத்திய அரசு போட்டிருக்கிற திட்டங்கள் உட்பட பார்த்தாலும், 6 வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலே நமக்குப் பற்றாக்குறை தான் வரும். ஒன்றை எல்லோரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் எடுத்துக்கொண்டிருக்கிற,



நடத்தி வருகிற மின்சார நிலையம் எதையும் எந்தத் தனியாருக்கும் ஒப்படைத்து விடுகிற நோக்கமே இதுவரை சொல்லப்படவில்லை. இங்கே தான் இரண்டு சாராரும் இதைப்பற்றிப் புரிந்துகொள்ளாமல் சொல்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். இப்போது நம்மிடம் இருக்கிற மின்சார நிலையம் எதையும் தனியாரிடம் நாம் விற்று விடுகிற முறையில் இத்திட்டத்தைப்பற்றி எங்கேயும் சொல்லவில்லை. நாமும், மத்திய அரசும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்கு மேற்கொண்டு கோயம்புத்தூரில் இருப்பவர்கள் தனியாக எங்களுடைய 192 ஆலைகளையும் பார்த்துக்கொள்ள நாங்களே தனியாக ஒரு தெர்மல் ஸ்டேஷனை எங்கள் சார்பில் வைத்துக்கொள்கிறோம் என்று முன்வருவார்களேயானால், அதற்கு நாங்கள் அனுமதிப்போம் என்று தான் கொள்கையை எடுத்திருக்கிறோம். அப்படி அனுமதித்து விட்டால், அவர்கள் பயன்படுத்தியது போக மீதியிருக்கிற மின்சாரத்தை நமக்குத் தருவார்களேயானால் நாம் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவர்கள் தேவைக்கு மேல் மீதியிருக்கின்ற மின்சாரத்தை நாம் பயன்படுத்துகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு அவர்களுக்கு நாம் அனுமதி கொடுக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அதிலிருந்து கிடைக்கிற மின்சாரத்தை நாம் வேளாண்மைத் துறைக்குக் கூட பயன்படுத்தலாம். ஆகவே இப்படி நாம் தனியாருக்கு வாய்ப்பைக் கொடுத்த பின், என்றைக்காவது ஒருநாள் அவற்றைத் தேசியமயமாக்க வேண்டுமென்ற ஒரு பிரச்சினை வந்தால் கூட—ஆட்டைக் கொழுக்க வைத்து பிறகு வெட்டுவது போல்—ஒரே நாளில் ஒரே நிமிடத்தில் தேசியமயம் ஆக்கு

(பிற்பகல் 12-50)

வதற்கும் நம்முடைய சட்டத்தில் வழிவகை இருக்கிறது. இருக்கிற நெருக்கடியிலே, எதையும் தனியாரிடத்திலே சேர்க்கும் நோக்கம் இல்லை. இதற்கு அப்பாற்பட்டு, தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வருவார்களேயானால் 15, 20 வருஷத்திற்கு முன்னாலே இருந்த நிலைமை என்னவென்றால், திரு. அப்பாத்துரை அவர்கள் சீப்-என்ஜினியராக இருந்தபோது, நான் எலக்ட்ரிசிட்டி மினிஸ்டராக $1\frac{1}{2}$ ஆண்டு காலம் இருந்தபோது, அவரிடத்திலே சொன்னபோது, "தனியாரை அனுமதித்துவிட்டால், மேட்டூரிலேயும் மற்ற இடங்களிலேயும் உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கேட்பதற்கு இடமில்லாமல் இருக்கும் நிலைமை ஏற்படும் ஆகவே, அதை அனுமதிக்க முடியாது" என்ற நிலைமைதான் இருந்தது. இப்போது அந்த

நிலைமை இல்லை. ஆகவே, தனியாரை அனுமதித்தால் நாம் பாதிக்கப்பட மாட்டோம் என்ற கொள்கையே தவிர, தனியாரிடத்திலே விட்டுவிடும் எண்ணம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெயர் வைத்ததிலிருந்து இந்த அரசு எப்படியொரு அணுகுமுறையை வைத்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். பட்டுக்கோட்டை அழகிரி பெயரிலும் ஈரோட்டில் ஜீவா அவர்களின் பெயரிலும், நாகர்கோவிலில் நேசமணி அவர்களின் நினைவாலும், காரைக்குடியிலே மருது பாண்டியரை நினைத்தும் பெயர் வைத்திருக்கிறோம். அதேநேரத்திலே, கத்திட்ரல் சாலை பெயரை மாற்றி வைப்பதுபற்றிக் குழப்பம் வந்தபோது, அது சம்பந்தமாக எதிர்ப்பு வந்தபோது, அந்த எதிர்ப்பை ஏற்று, மக்கள் உணர்வை மதித்தது இந்த அரசு என்பதை எண்ணிப் பார்க்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். கன்னியாகுமரி கடற்கரையிலேயிருந்து விவேகானந்த நினைவுப் பாறைக்கு படகுப் போக்குவரத்து ஏற்பாடு செய்யவும், நடைபாலம் அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பலருடைய மண்டையை நெறுக்கிக்கொண்டிருக்கிற மண்டைக்காட்டிலும் கொஞ்சம் நல்ல சூழ்நிலையை உருவாக்கியிருப்பது எல்லாம் இந்த அரசின் நல்ல பணிகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குழந்தைகளுக்குப் பிசைந்து ஊட்ட சோறு இல்லாமல் கை பிசைந்து, கண் கலங்கி அன்னைகள் நிற்கும் அவல நிலைமையைப் போக்க சிறிதேனும் முயற்சி என்கிற வாசகங்களில் நாம் அணுகும் முறையைத் தெரிவித்திருக்கிறோம். அதைப்போலவே, எதிர்க் கட்சியிலே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பிட்டதைப்போல, இந்தப் பணியை நிறைவேற்றும் பொறுப்பை தாய்மார்களிடம் தாருங்கள் என்றும், குழந்தைகளின் தாயாரிடம் தாருங்கள் என்றும், எப்படி இதை நிறைவேற்றப் போகிறீர்கள் என்ற அளவிலே கருத்துக்களைச் சொன்னார்களே தவிர, இது ஒரு தவறான திட்டம் என்றோ அல்லது குழந்தைகளுக்குத் தராதீர்கள் என்ற அளவிலோ யாரும் கருத்துக்களைச் சொல்லவில்லை. ஒருவேளை பல்பொடியைச் சொன்னபோது, சோப்பு, சீப்பு, கண்ணாடியையும் தாருங்கள் என்று சொன்னதை எடுத்துக்கொண்டால், அது அவர்களுடைய ஆசையாக இருந்தாலும், நிச்சயமாக வசதி வாய்ப்பு இருந்தால், அவற்றையெல்லாம் தரத்தான் ஒரு



அரசு இருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் ஆசை நிறைவேற வேண்டும் என்ற அளவிலேயும் என்னுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன். ஆனால் இதை வழங்குவதற்கு சமூக நல நிறுவனங்களான மதர் திரேசா, இராமகிருஷ்ணா மிஷன், இராமலிங்க மிஷன் போன்றவைகளையெல்லாம் இந்த அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த வகையிலே இருக்கும் தன்னலமற்ற சேவை நிலையங்களை இதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பசி என்கிறபோது, 'உறு பசியும், ஓவாப் பிணியும், செருபகையும் சேராதியல்வது நாடு' என்றார் வள்ளுவர். உறுபசியைப் போக்கினோம், ஓவாப் பிணியையும் போக்கினோம். செருபகை இல்லாத அளவுக்கு இந்த மூன்றாவது கருத்தை எதிர் வரிசையிலே இருப்பவர்கள் பார்த்துக்கொண்டால் இந்த நாடு வளமான நாடாகிவிடும்.

" தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்,

ஜகத்தினை அழித்திடுவோம் " என்றார்கள். இங்கே, 'வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர், இங்கு வாழும் மக்கள் எல்லோருக்கும்' என்பதை கம்யூனிஸ்ட் நண்பர்கள் எல்லோரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். 'பசி என்று வந்தோர்க்கு புசி என்று ஒரு வாய் தந்து பார் தம்பி' என்று பாரதிதாசன் அவர்கள் சொன்ன உணர்வுகளைப் பெற வேண்டும் என்பதையும், மணிமேகலையின், "துன்னிய எந்நோய் துடைத்தாய், அன்னையே கேள் நீ, ஆருயிர் மருத்துவர்" என்று 12 ஆண்டு பசியிலே இருந்த காயசண்டிகைக்குக் கூறிய கருத்துக்கொப்ப, 35 ஆண்டு பசியை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நீக்கும் அரிய முயற்சியை அனைவரும் பாராட்ட வேண்டும்.

**திரு. ப. மாணிக்கம் :** மணிமேகலையிலிருந்து வருகிற மேற்கோள், பாரதியார் பாரதிதாசன் பாடல்கள் போன்றவைகளிலிருந்து எல்லாம் வரும் மேற்கோள் எல்லாம் 2 வயது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள் விஷயத்திலே சொல்வதைவிட, வேறு ஆட்களுக்குச் சொன்னால், நன்றாக இருக்கும். இந்த அரசினுடைய கொள்கை வேறு. இந்தக் கவிதையின் குறிக்கோள் வேறாக இருக்கிறது. அதைத் தயவு செய்து கவனிக்க வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** என்னுடைய கருத்து பசி வந்திட பத்தும் பறந்து போகும். மானம், குலம், கல்வி, வளமை, அறிவுடைமை, தனம், தவம், முயற்சி, தாளாண்மை, கேளிர் பசி வந்து சொல்லியர் மேல் காமுறுதல், என்ற அளவிலே பத்தும் பசி வந்திட பறந்து போகும் என்ற பாடலுடைய கருத்துப்படி பசியை ஒழிக்க இந்த அரசு பாடுபடுகிறது.

இறுதியாக என்னுடைய வேண்டுகோளாக ஒன்றைச் சொல்கிறேன். வீடு என்பது எப்படி தனிப்பட்ட ஒருவனுடைய உரிமையாக இருந்தாலும், நிலத்திற்கு எப்படி உச்சவரம்பு வைத்தோமோ, அதைப்போல, ஒரு நாள் வீட்டிற்கும் உச்ச வரம்பு வர வேண்டும். ஒரு தனி மனிதர் எவ்வளவு வீடுகளை வைத்துக் கொள்ளலாம் என்ற அளவுக்கு நிர்ணயம் செய்யும் காலம் வர வேண்டும்.

வாரியங்களை எடுத்துக்கொண்டால், அரசின் தொழிலாளர்கள் என்பது மட்டுமல்ல, அதிலே மக்களும் இருக்கிறார்கள் என்ற முறையிலே போக்குவரத்து வாரியம் மக்களுடைய நலனையும் மனதில் கொள்ள வேண்டும். திண்டிவனத்திலிருந்து சென்னைக்கு வந்தால், அதற்கு 10 ரூபாய் கட்டணம், ஆனால் சென்னையிலே இருந்து அண்ணா நகருக்குப் போக வேண்டும் என்றால் 12 ரூபாய் கட்டணம் என்று இருக்கும்போது, இந்த மக்களையும் கருத்தில் கொண்டு 'டெம்போ' போன்றவைகள் வைத்து, அந்தப் பணியையும் செய்யும் காரியத்தை வாரியங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் தருவதற்கு 40 ஆயிரம் டாலர் முதல் 50 ஆயிரம் டாலர் வரை வாங்கி, 100 பேருக்கு அந்த அடிப்படையிலே ஆண்டுக்கு இடம் தரலாம் என்று மத்திய அரசு எண்ணி வருகிறபோது, நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன், பல நேரங்களிலே அகில இந்திய அடிப்படையிலே வெளிநாட்டாரை நினைக்கிறபோது, தமிழர்களை மறந்துவிடுகிறார்கள். தோட்டத் தொழிலாளர்களாக வெள்ளைக்காரனால் அழைத்துச் செல்லப்பட்டு, பர்மாவிலே இலங்கையிலே, மலேசியாவிலே இருக்கும் தோட்டத் தொழிலாளி எப்படி 50 ஆயிரம் டாலர் கொடுத்து இடம் பெறப்போகிறான்? ஆகையால் தமிழகத்தைப் பொறுத்த வரையில், 4 ஆண்டுகளுக்கு முன்பு 100 இடங்களை தனியாக ஏழைத் தமிழ் வெளிநாட்டு மாணவர்கள் பயன் பெறும் அளவுக்கு என்று வைத்ததைப் போன்று மீண்டும் அந்த நிலைமையை உருவாக்க வேண்டும்.



ஊட்டிக்கு கோவையிலே இருந்து ஹெலிகாப்டர் விட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு கம்பி வழி போக்குவரத்துக்கு வசதி செய்ய வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால், எதிர்காலத்திலே பாதைகள் கெட்டுவிடுகிறபோது, அதுவும் இப்போது இரயில்வே ஆபத்தான நிலையிலே இருக்கிறது, மிகவும் கஷ்டமான சூழ்நிலை உருவாகும். 100 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இரயில்வே, இதைப் போக்கிவிடலாம், போக்கிவிடலாம், நீக்கிவிடலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இருந்ததன் காரணமாக புதுப்பிக்காமல் விட்டு விட்டதால் அண்மையிலே கூட்ஸ் டிரெய்ன் விபத்து ஏற்பட்டு 10 பேர் இறந்திருப்பதையும் இந்த அரசு கவனத்திற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எழுத்துச் சீர்திருத்தத்திலே, அதுபற்றிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் அரசு வெளியீட்டிலே தமிழ் இல்லை என்று சொன்னார்கள். அது தவறான தகவல். பாலர் பாடத்திலே கூட, 'தலைவன், தலைவி' என்பதிலே கூட எழுத்துச் சீர்திருத்தம் இருக்கிறது. தமிழக வரலாறு, மக்கள் பண்பாடு கழகம் வெளியிட்டவைகளில் புதிய நிலையில் அரசு இந்தத் திட்டம் வெளியிட்டதற்குப் பிறகு எழுத்துச் சீர்திருத்தம் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1-00)

கச்சத் தீவில் விழா நடக்கும் இந்த நேரத்தில் காலரா நோய் இருக்கிற காரணத்தினாலே, அங்கே போக அனுமதியில்லை என்று இலங்கை அரசு நிறுத்திவிட்ட நிலைமையில், அங்கே இருக்கும் தோட்டத் தொழிலாளியும், இங்கே இருக்கும் தொழிலாளியும் ஆண்டுக்கு ஒரு முறை சந்திக்கும் வாய்ப்பை இந்த ஆண்டு இழந்திருக்கிறார்கள். ஆகையால் மீண்டும் அந்த விழாவை 10 நாட்கள் கழித்து நடத்தி ஏழைத் தொழிலாளர்கள் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெறுகிற வாய்ப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசினுடைய அடிப்படைக் கொள்கை, ஒரு தொழிலாளி தொழிற்சாலைக்கு உதவுகிறான், அந்தத் தொழிற்சாலையில் வளர்ச்சி ஏற்படுகிறது. முதலாளி, தொழிலாளிக்குக் கூடுதல் தொகை தருகிறான். அதுபோல நீர்த் தேக்கங்கள் உள்ளவனுக்குப் போய்ப் பாய்கிறது, உழவனுக்குக் கூலி உயர்கிறது, ஆனால் இந்த அரசு இப்போது நேரடியாக இந்த மூன்றாவதாக இருப்பவனுக்கு இடையிலே இருக்கும் தடையை நீக்கி சமுதாயத்திலே இருக்கிற மொத்த மனிதர்களும் பயன்படுத்துவதற்குத் தான் தன்னிறைவுத் திட்டம்,

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1982 மார்ச் 10

குழந்தைகளுக்கு உணவு, பல்பொடி வழங்குதல் ஆகிய திட்டங்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப்போல, ஓட்டு போட்டவர்களுக்கு ஆற்றுகிற கடமையே தவிர, இனி ஓட்டு போடுகிறவர்களை எதிர்பார்த்து நாங்கள் கடமையாற்றவில்லை என்று சொன்னார்கள், அந்த நல்ல எண்ணத்தை இந்த மன்றத்திலே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசு ஏழைகளுக்கும், பாட்டாளிகளுக்கும் என்று இருக்கும் அரசு. இந்த அரசின் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்து, இந்த அரசு ஆற்றும் பணியின் வெற்றியின் காலத்தை நீங்கள் தாமதப்படுத்தாமல், அவைகளை வேகமாகச் செய்து முடிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

### 1. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

### கேள்வி நேரம் கைவிடப்படல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, " சட்டமன்ற மேலவை விதி 222 நிறுத்தி வைக்கப்பட்டு, நாளை 11—3—1982 அன்று கேள்விநேரம் கைவிடப்படலாம் " என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்ற மேலவை விதி 22 நிறுத்தி வைக்கப்பட்டு, நாளை 11—3—1982 அன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் அவை நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-07)



### 7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

114. Notification issued with G.O. Ms. No. 1600, Housing and Urban Development, dated the 22nd December 1980 regarding approval of the detailed Development Plan for Azhagiri Nagar-Map No. 4 [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

115. Notification issued with G.O. Ms. No. 1794, Rural Development and Local Administration, dated the 28th October1981 as amended in G.O. Ms. No. 2054, R.D and L.A., dated 11th December 1981 regarding the new Rules called the Tamil Nadu Panchayats (Fixation of Strength and Reservation of seats for woman) Rules 1981. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958.)

116. Notification issued with G.O.Ms. No. 13, Rural Development and Local Administration, dated the 4th January 1982 regarding declaration of certain Villages as Gramdhan Villages. [Laid on the table of the House under section 28 (3) of the Tamil Nadu Bhoodan Yagna Act, 1958 (Tamil Nadu Act XV of 1958).

### *B. Reports, Notifications and Other Papers.*

* 52. A Review on the working of the Tamil Nadu State Farms Corporation Limited for 1981-82 (Tamil and English).

---

* Circulated to all M.L.Cs. on 9th March 1982.

## இணைப்பு

[209 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

பல்கலைக் கழகத் தேர்வின்போது காப்பியடித்தது, குறுக்கிட்ட கல்லூரி முதல்வரையும், கண்காணிப்பாளர்களையும் அவமரியாதையாகப் பேசியது, வன்முறையில் ஈடுபட்டு கல்லூரிச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தது, கல்லூரி முதல்வரைத் தாக்கியது ஆகிய குற்றங்களுக்காக 9 மாணவர்களை புதுக்கல்லூரி முதல்வர் நிரந்தரமாகக் கல்லூரியிலிருந்து நீக்கினார். அதில் இருவர்மீது காவல்துறையினர் கல்லூரி முதல்வரைத் தாக்கிய குற்றத்திற்காக வழக்குப்பதிவுசெய்து அவர்கள் கைதுசெய்யப்பட்டு ஜாமீனில் விடுதலையாகியுள்ளார்கள், விசாரணை நடந்துவருகிறது.

2. நீக்கப்பட்ட 9 மாணவர்களையும் மீண்டும் கல்லூரியில் சேர்க்கவேண்டுமென்று வற்புறுத்தி 18—1—1982 முதல் வகுப்புகளுக்குச் செல்லாமல் மாணவர்கள் போராட்டம் நடத்திவருகிறார்கள். 4—2—1982 முதல் மேற்கண்ட கோரிக்கைக்காக அனைத்துக்கல்லூரி மாணவர்கள் மன்றத் தலைவர் திரு. தியாகராசன் மற்றும் 8 மாணவர்கள் புதுக்கல்லூரிக்கு எதிரே உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மாநிலக் கல்லூரி, நந்தனம் கலைக்கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, கந்தசாமி நாயுடு கல்லூரி, குருநானக் கல்லூரி, மற்றும் செல்லம்மாள் கல்லூரி மாணவர்கள் 5—2—1982 அன்று வகுப்புக்களுக்குச் செல்லவில்லை. பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் 5-2-1982 அன்று காலை 11 மணியளவில் தங்கள் கல்லூரிக்கு வெளியில் கூடி அந்த வழியாகச் சென்ற பேருந்துகள்மீதும் பந்தோபஸ்துக்காகச் சென்ற காவல்துறையினர் மீதும் கற்களால் தாக்கியுள்ளனர். அதன் விளைவாக காவலர் 7 பேர் காயமுற்றனர். ஒரு பல்லவன் போக்குவரத்துக் கழகபேருந்து சேதமுற்றது. கல்லூரி ஆசிரியர் குழு உறுப்பினர் ஒருவருடைய ஸ்கூட்டருக்கு தீவைக்கப்பட்டது. பொதுச் சொத்துக்களுக்கு மேலும் சேதம் விளைவிப்பதைத் தவிர்க்கும்பொருட்டு தகுந்த எச்சரிக்கைக்குப் பின்னர் மாணவர் கும்பலை கலைக்க வேண்டி கண்ணீர் புகை பிரயோகிக்கப்பட்டது. கலைந்து ஓடிய மாணவர்கள் மின்சார ரயில் வண்டிகள் மீது கற்களை எறிந்ததால் புறநகர் ரயில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. பின்னர் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்தப் போராட்டத்தின்போது நகரத்தில் மற்றும் ஒரு பேருந்துக்கு சேதம் ஏற்பட்டது. கல்லெறியும் நிகழ்ச்சியினால் ஒரு பெண் பயணி



தலையில் காயம் ஏற்பட்டது. மேற்கண்ட நிகழ்ச்சிகள் தொடர்பாக வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளன. தகுந்த காவல் துறை பந்தோபஸ்துகள் போடப்பட்டுள்ளன. சென்னை புதுக் கல்லூரிமுன் உண்ணாவிரதம் இருந்த 8 மாணவர்களில் 2 பேர்களை பெற்றோர்கள் வந்து அழைத்துச்சென்று விட்டனர். 7—2—1982 அன்று 6 பேர்கள்மீது இ.பி.கோ. 209-ன்கீழ் வழக்குப் பதிவு செய்து ஜாமீனில் விடப்பட்டு இராயப்பேட்டை மருத்துவ மனையிலே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டி 5—2—1932-ம் தேதி காலை கல்வித் துறைச் செயலாளரையும், என்னையும் இரு மாணவர்கள் தலைவர்கள் கண்டு பேசினார்கள். கல்லூரி முதல்வரும் வரவழைக்கப்பட்டு அவருடைய கருத்தும் தெரிந்துகொள்ளப்பட்டது.

3. பேச்சுவார்த்தையின்போது மாணவர் தலைவர்கள் கல்லூரி முதல்வர், கல்லூரி ஆசிரியர்கள் கூட்டத்தில் தேர்வுகளைக் கண்டிப்பாக நடத்தவேண்டுமென்று பேசியபோது மாணவர்கள் தன்காலில் விழவேண்டுமென்று தாக்குறைவாகக் கூறியதாக ஒரு பொறுப்புள்ள ஆசிரியர் மாணவரிடம் தெரிவித்ததே மாணவர்கள் ஆத்திரமடைந்து உணர்ச்சிவசப்பட்டு வன்முறையில் ஈடுபட்டதற்குக் காரணமெனவும், எனவே, இதனைப் பரிவுடன் பரிசீலித்து கல்லூரியிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களைத் திரும்பச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதோடு, நடந்த தவறுக்கு மன்னிப்புக் கோரி, இனித்தவறு செய்யமாட்டோமென்று உறுதிகூறிக்கடிதம் தர மாணவர் தயார் என்றும் கல்லூரி சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்துக்கு அபராதப் கட்டவும் அவர்கள் தயார் என்றும் உறுதிமொழியளித்தார்கள்.

4. புதுக்கல்லூரி முதல்வர், தான் மாணவர்கள் தன்காலில் விழவேண்டுமென்று சொல்லவில்லை என்று கூறியதோடு தன்னைத்தாக்கிய மாணவர்களைத் திரும்பக் கல்லூரியில் சேர்த்துக்கொண்டால் கல்லூரியில் ஒழுங்குக் கட்டுப்பாடும் பாழாகிவிடும் என்றும் கூறினார். மேலும் கல்லூரி நிர்வாகக் குழுவின் முழு ஒப்புதலுடன் மாணவர் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டதால் மாணவர்களைத் திரும்பச் சேர்க்கும் பொருள்பற்றி அக்குழுவின் கருத்தையறிந்தே அதுபற்றி முடிவுசெய்ய முடியும் என்றும் கல்லூரி முதல்வர் கூறினார்

5. இந்தக் கல்லூரியைத் தவிர காய்தே மில்லத் ஆண்கள் கல்லூரியில் மாணவர்களும் அம்பேத்கார் அரசு கலைக் கல்லூரியில் 2 மாணவர்களும் தேர்வின்போது ஆசிரியர்களைத் தாக்கியதற்காகவும் கல்லூரி சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததற்காகவும் நீக்கப்பட்டு உள்ளதால் பல கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள் இதைப்பொதுப்பிரச்சினையாக ஆக்கிப் பெரும

வில் போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருப்பதால் இதனை உடனடியாகத் தீர்க்க வேண்டிய அவசியமும் அவசரமுமான பொறுப்பு அரசுக்கு உள்ளதெனச் சுட்டிக்காட்டியதோடு மாணவர் தரும் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு இப்பிரச்சினை பற்றி கல்லூரி நிர்வாகக் குழுவில் விவாதித்துச் சுமுகமான தீர்வுகான முயலும்படி புதுக்கல்லூரி முதல்வரைக் கேட்டுக்கொண்டேன்.

6. பட்டவகுப்பில் இறுதியாண்டில் படிக்கும் 4 மாணவர்களைக் கல்லூரிக்கு வாமலேயே பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் தேர்வு மட்டும் எழுத அனுமதிக்கும் சாத்தியக்கூறு பற்றியும் ஆராயும்படியும் அத்துடன் பட்டவகுப்பில் இரண்டாம் ஆண்டுபடிக்கும் 5 மாணவர்களை மட்டும் மன்னித்து மீண்டும் கல்லூரியில் சேர்த்துக் கொள்வதுபற்றியும் முடிவுசெய்யும்படி கல்லூரி முதல்வர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

7. புதுக்கல்லூரி முதல்வர் வாக்குறுதியளித்தபடியே கல்லூரியின் நிர்வாகக் குழுவின்முன் என் முன்னிலையில் நடந்த பேச்சுவார்த்தைப்பற்றி அறிவித்து அக்குழு அதனைப் பரிசீலித்தபின் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்ட ஒன்பது மாணவர்களையும் திரும்ப எடுத்துக்கொள்வதில்லை என்று ஒருமனதாகத் தீர்மானித்துள்ளது.

8. 6—2—1982 அன்று மாலை சுமார் 6-30 மணிக்கு என் இல்லத்தில் புதுக்கல்லூரி முதல்வர் என்னைச் சந்தித்து, கல்லூரி நிர்வாகக்குழுவின் முடிவை வலியுறுத்திப் பேசினார். நீக்கப்பட்ட 9 மாணவர்களை கல்லூரியில் மீண்டும் சேர்த்துக்கொள்ள இயலாது என்றும் கூறினார். அடுத்து 6—2—1982 அன்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இரண்டு மாணவர் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்தனர். கல்லூரி நிர்வாகக் குழுவின் கருத்து மாணவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இந்நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண மாணவர்களின் கருத்தை மற்ற பிரதிநிதிகளைச் சந்தித்து கூறுமாறு தெரிவிக்கப்பட்டது.

9. கல்லூரிக்கல்வி இயக்குநருடன் இப்பிரச்சினை பற்றி விவாதித்து மாணவர்களின் கல்விவாய்ப்பை பாதிக்காமல் இருக்கும் வகையில் அவர்களைத் தேர்வுஎழுத அனுமதிக்க முடியுமா என பல்கலைக்கழக துணைவேந்தரைச் சந்தித்துப்பேசும்படி கேட்டுக்கொண்டேன்.

10. புதுக்கல்லூரியிலிருந்து நீக்கப்பட்ட 9 மாணவர்களையும் சந்தித்துப் பேசி அவர்களை தேர்வுமட்டும் எழுத வழிவகையுள்ளதா எனப் பரிசீலிக்கப் பல்கலைக்கழகம் தயாராகியுள்ளது.



11. 9—2—1982 லிருந்து காலவரம்பின்றி கல்லூரி மூடப்படுவதாக கல்லூரி முதல்வர் அறிவித்துள்ளார். கல்லூரிவிடுதியில் தங்கியுள்ள மாணவர்களை உடனடியாக விடுதியைவிட்டு வெளியேறுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த அறிவிப்பு மாணவர் அமைதியின்மையைத் தடுக்க வேண்டி செய்யப்பட்டுள்ளது.

12. நாம் ஏற்கனவே சட்டமன்றப்பேரவையில் குறிப்பிட்டதுபோல ஒரு கல்லூரி முதல்வர் ஒரு நடவடிக்கை எடுப்பாரானால் அதற்குப் புறம்பாக அதை மறுத்துச்செய்யக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. கல்லூரி முதல்வருக்கு மட்டுமல்ல, சாதாரண தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியருக்கே அந்த அதிகாரத்தைத் தந்திருக்கிறார்கள். கடந்த நூற்றுக்கணக்கான ஆண்டுக் காலமாக அந்த அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். பள்ளி என்றால் அங்கே இருக்கின்ற தலைமையாசிரியர், கல்லூரி என்றால் அங்கே இருக்கின்றன முதல்வர் ஆகியோருக்கு ஒழுங்கைப் பொறுத்த மட்டில் அந்த அளவிற்கு அதிகாரத்தைத் தந்துதான் இப்போது கல்வி நிறுவனங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே கல்லூரி முதல்வருடைய நிர்வாகத்தில் நீங்கள் எடுத்த நடவடிக்கை தவறு என்று சொல்லி தலையிடக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. இன்றைக்கு மைனாரிட்டி நிறுவனங்களுக்கு எவ்வளவோ உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மெஜாரிட்டி மக்களுக்கு இல்லாத அளவுக்கு அதிகாரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு பரிவுடன் கவனிக்கும் அதே நேரத்தில் தேர்வுகளில் காப்பியடிப்பது வன்முறைகளில் ஈடுபட்டு ஆசிரியரைத்தாக்குவது கல்லூரிச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பது போன்றவற்றிற்குக் காரணமான மாணவர்மீது பொது நன்மை கருதி நடவடிக்கை எடுப்பதில் குறுக்கிட இயலாதென்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

வியாழக்கிழமை, 1982 மார்ச் 11.
மாசி 27, துன்மதி—திருவள்ளுவராண்டு 1013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. கவன ஈர்ப்பு

சென்னை அருங்காட்சியகத்திலிருந்து ஐந்து புத்தர் சிலைகள் களவு போனது குறித்து.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"சென்னை அருங்காட்சியகத்திலிருந்து விலை மதிப்பு மிகுந்த ஐந்து புத்தர் சிலைகள் அண்மையில் களவு போனது குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விவர அறிக்கை @ ஒன்று, அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்தக் கடவுள் சிலைகள்தான் திருடு போய்க் கொண்டிருந்தன. இப்போது புத்தர் சிலைகள் கூட திருட்டுப் போக ஆரம்பித்து விட்டன. இதற்கு முன்பெல்லாம் ஆலயங்களிலிருந்துதான் சிலைகள் திருடு

@ 396 - 397 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

போய்க் கொண்டிருந்தன. இப்பொழுது மியூசியத்திலிருந்தும் திருடு போக ஆரம்பித்துவிட்டன. எனவே இவைகளையெல்லாம் மனதில் வைத்து போலீசார் சரியான முறையில் கவனம் செலுத்தினால் துப்பு கிடைக்கும். எனவே இந்த வகையில் அரசு காவல் துறைக்கு தக்க ஆணை பிறப்பிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் : திருட்டுப் போன சிலைகளைக் கண்டுபிடிக்க போலீசார் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக் கிறார்கள். திருட்டுப்போன நிலைமைகளைப் பரிசீலனை செய்த பிறகு, தற்போது இருக்கும் பாதுகாப்பை விட இன்னும் சற்று அதிகமான அளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரை அங்கே வரும் பார்வையாளர்களிடம் கையெழுத்து வாங்குவதில்லை. இப்போது அங்கே கையெழுத்து வாங்குகிற முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். திருடு கிறவர்கள் சிலையின் மதிப்பை வைத்துத்தான் திருடுகிறார்கள். அவர்களுக்கு கோயிலும் ஒன்றுதான், மியூசியமும் ஒன்றுதான். அது புத்தர் சிலை யானாலும் ஒன்றுதான், நடராஜர் சிலையானாலும் ஒன்றுதான். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, எந்தச் சிலையானாலும் அவை விலை மதிப் புள்ளவை என்பதை உணர்ந்து அவைகளுக்கான தக்க பாதுகாப்பை அளிக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : களவாடப்பட்டுள்ள சிலைகளை மீண்டும் மீட்பதற்காக என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுத்திருக் கிறது ? பெரும்பாலும், இப்படிப்பட்ட சிலைகள் வெளிநாடுகளுக்குத்தான் கடத்திச் செல்லப்படுகின்றன" என்று சொல்லப்படுகிறது. ஆகவே சர்வதேச நிறுவனமான " இன்டர் போல் " என்கிற அமைப்போடு இது குறித்து நமது காவல் துறை தொடர்பு கொண்டிருக்கிறதா? மேலும் அவையில் வைக்கப் பட்ட விவா அறிக்கைக்கு அப்பாற்பட்ட முறையில், அண்மையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இதுகுறித்து ஏதேனும் புதிய தகவல்கள் கிடைத் திருந்தால் அவைகளைப்பற்றி இங்கே அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சர்வதேச காவல் துறை நிறுவனத்தோடு உடனடியாகத் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகத்தான் என்னிடம் சொல்லப்பட்டிருக்கிறது. திருடுபோன சிலைகளை மீட்ப தற்காகத் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். துப்பு துலக்கும் நடவடிக்கைகள் குறித்து மேற்கொண்டு இப்போது விவரம் ஏது மில்லை.





* திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : திருடு போன இந்த ஐந்து படிமங்களின் மதிப்பு என்ன? மதிப்பைப் பொறுத்துத்தான் சிலைகள் திருடப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் கூறினார்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இவைகள் அனைத்தும் விலை மதிப்பற்றவை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்தி வைக்கப்படுகிறது.

## 2. 1982-83 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்— தொடர்ச்சி.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் அணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

கழித்த ஆறு நாட்களாக இந்த அவையில் நடைபெற்ற விவாதத்தில், எங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும், மற்ற கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும், ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து பார்த்து, அதில் எவை எவை சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியவை என்பதையும் எவை எவை பாராட்டத்தக்கவை என்பதையும் எடுத்துச் சொல்லி, பல்வேறு புதிய கருத்துக்களையும் நல்ல முறையில் அளித்திருக்கிறார்கள். அந்த நிலையில் 1,569 கோடி ரூபாய் வருவாய் உள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ. 204.44 கோடி பற்றாக் குறையாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 1.773 கோடி ரூபாய் செலவு செய்யப்பட இருப்பதாகிய இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் எடுத்து வைக்கும்போது, உண்மையில் செலவிடப்பட இருக்கும் தொகை இவ்வளவு பெரிய தொகையாக இருந்தாலுங்கூட, இன்றைய நாணயத்தின் மதிப்பு—அதாவது ஒரு ரூபாய்க் கான மதிப்பு என்பது வெறும் 21 பைசா என்ற நிலையில் இருப்பதைக் கணக்கில் கொண்டு பார்க்கும்போது, நாம் செலவிட இருப்பதாகிய ரூ. 1,773 கோடி உண்மையில் ரூ. 340 கோடி அளவுக்குத்தான் மதிப்புள்ளதாக இருக்கிறது என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நமக்கு ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையை ஈடுசெய்கிற வகையில புதிய வரி விதிப்புகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நாட்டின் நிதி நிலையைச் சீர் செய்வதற்கும், நல்ல நலத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் உரிய நிதியாதாரங்களைத் திரட்டுவது அரசின் இன்றியமையாத கடமையாகும் இருக்கிற வரி முறைகளைச் சீர்திருத்தம் செய்வது, புதிய வரிகளை விதிப்பது. வரி ஏய்ப்புகளைத் தடுத்து, வருவாயை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுவது என்பது சரி. 1947க்குப் பிறகும், அதாவது இந்த நாட்டின் விடுதலைக்குப் பிறகும், இன்னும் சொல்லப்போனால் 1909லிருந்தே—அதாவது நம் நாட்டில் மின்டோ—மார்லி சீர்திருத்தத்தின் மூலமும், அதற்குப் பிறகு 1919-ல் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் மூலமும், 1935 ஆம் ஆண்டு ஆக்ட்படியும் பாராளுமன்ற நடைமுறைகள் நெறிப்படுத்தப்பட்ட காலந்தொட்டு வரி விதிப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. அதாவது 1909 ஆம் ஆண்டிலிருந்தே நமது நாட்டில் வரி விதிப்புகள் கொண்டுவரப்பட்டன. 1947க்குப் பிறகு 1982 வரை தொடர்ந்து நாம் ஆண்டுதோறும் வரி விதிப்புகளைச் சந்தித்துக் கொண்டேயிருக்கிறோம். எந்தெந்தத் துறைகளிலெல்லாம் வரிகளைப் போட முடியுமோ, எப்படி எப்படியெல்லாம் போட முடியுமோ அப்படியெல்லாம் ஏற்கெனவே வரி போட்டாகிவிட்ட காரணத்தால், இனிமேல் புதிதாக வரி போடுவது என்பதைவிட இருக்கிற வரிகளை உயர்த்துவது என்ற நிலைக்கு நாம் ஆளாகியிருக்கிறோம் என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

அண்மையில் சில தினங்களுக்கு முன்னால் வரி விதிப்பைப்பற்றி பொருளாதார நிபுணரான திரு. என். பல்கிவாலாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். தற்போது பல்வேறு நகரங்களிலும் பட்ஜெட்டைப்பற்றிய விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 'அந்த வகையில் வரி விதிப்பில் ஒரு பெரிய நிபுணரான திரு. பல்கிவாலா ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதாவது "நாட்டு மக்களை வரி விதிப்புக் கொடுமையிலிருந்து நாடாளுமன்றங்களும் சட்டமன்றங்களும் காப்பாற்றுவதற்காக சட்டம் இயற்ற வேண்டிய கால கட்டம் இன்னும் அதிக தூரத்தில் இல்லை" என்று சொல்லியிருப்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வா விரும்புகிறேன்.

புதிய வரி விதிப்பு மூலம் முதலில் ரூ. 38 கோடிக்கு வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் பிறகு எல்லோருடைய வேண்டுகோள் அல்லது எதிர்ப்பு காரணமாக, வேண்டுகோளுக்கு செவி சாய்த்து, எதிர்ப்புக்குப் பணிந்து ரூ. 3 கோடிக்கான வரி விதிப்பைத் தளர்த்தி தற்போது ரூ. 35 கோடிக்கு வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை



அறிக்கையில் வரி விதிப்பு முறை எந்த அளவுக்குக் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல் வசதி படைத்தவர்களிடம் வரி பெறுவதும் வாய்ப்பும் வசதியும் அற்றவர்களைத் தட்டிக் கொடுப்பதும் எந்த அளவுக்கு இந்த வரி விதிப்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, சில பொருள்களின் மீதான வரி விதிப்பு மிகவும் இன்றியமையானது போல் தோன்றினாலுங்கூட, இந்தப் பொருள்கள் அனைத்தும் சாதாரண மக்களுடைய தலையில் கை வைக்கிற பொருள்கள் தான் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

(முற்பகல் 9—40)

மின்சாரப் பொருள்கள், மின்சார கருவிகள், மின்சார சாதனங்கள் ஆகியவற்றுக்கான விற்பனை வரியை 9 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி பெரும் பகுதியான வரி விதிப்பு விற்பனை வரியை உயர்த்துவதிலேயே அமைந்திருக்கிறது. 1937-ல் திரு இராஜாஜி அவர்கள், மதுவிலக்கைக் கொண்டு வருகிறபோது, அதன் மூலமாக நமக்கு வந்த கலால் வரி இழப்பை ஈடு செய்ய அரை சதவீதம் விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு இப்போது எத்தனை சதவீதம் உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். மதுவிலக்குக் கொள்கையிலாவது அழுத்தமாக இருந்து, அந்தக் கொள்கையை அமுல்படுத்துவதால் ஏற்படும் இழப்பை ஈடு கட்ட நாம் இப்படி வரி போடுகிறோம் என்று சொன்னால் அது ஓரளவிற்குப் பொருத்தமாக அமையும். மதுவிலக்கை ரத்து செய்கின்ற நிலையில், அதைத் தளர்த்திவிட்டு, தளர்த்துகிறோம் என்று சொன்னாலுங்கூட, மதுவிலக்கையும் அமுல்படுத்துகிறோம் என்று சொல்லிக்கொண்டு, 100 கோடி ரூபாய் வருமானம் அதன்மூலம் வருகிறது என்று சொல்லிக்கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்திலேகூட 35 கோடி ரூபாய்க்கு வரி விதிக்க வேண்டுமா? மின்சாரப் பொருள்கள் எல்லாம், உயர்ந்தவர்கள், செல்வந்தர்கள் மட்டும் பயன்படுத்துகிற பொருள்கள் அல்ல. சாதாரண மக்களும் பயன்படுத்துகிற பொருள்கள் என்பதை மறந்துவிடக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அதற்குப் பிறகு வெளிநாட்டு மதுவகைகளுக்கு 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. இப்படி உயர்த்தியிருப்பதால், எவ்வாறு வரியை ஏய்க்கிற நிலை உருவாகும் என்பதை இறுதியில் சொல்லுகிறேன். இதற்கு வரியை

உயர்த்தியிருப்பதை நான் கண்டிக்கவில்லை. இந்த வரி உயர்வின் மூலம் நாம் எதிர்பார்த்த பலன் வருமா என்பதை இன்னுமொரு சந்தர்ப்பத்தில் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மோட்டார் வண்டிகளின் பகுதிகளுக்கு, துணை உறுப்புகளுக்கு விற்பனை வரியை 13 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். சாதாரண மக்கள்தான் மோட்டார் வண்டிகளில் போகிறார்கள். சாதாரண ஏழை மக்கள்தான் தாங்கள் துன்புறும் காலங்களில் வாடகைக் கார்களில் போகிறார்கள் பிரசவத்திற்கு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும்போது, வாடகைக் கார்களைப் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே பேருந்துகள் கட்டணம் உயர்வதற்கு ஊக்கம் பெறுகிற வகையில் இந்த வரி விதிப்பு அமைந்திருக்கிறது என்பதைச் சொல்கிறேன்.

நான்கு சதவீதமாக இருந்த பலமுனை விற்பனை வரி ஐந்து சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதைப் படிக்கிறபோது, நான்கு சதவீதத்தை 6 சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். ஒன்றும் பெரிய வரி விதிப்பு இல்லை யென்று தோன்றும். ஆனால் இந்த வரிக்கு உட்படக்கூடிய பொருள்களைப் பார்த்தால், மிக அடித்தளத்தில் வாழ்கின்ற மக்கள் உணவைச் சமைத்து உட்கொள்ள இன்றியமையாததாகிய புளி, மஞ்சள், மிளகாய், மல்லி, வெல்லம், சீரகம், பூண்டு, கடுகு ஆகிய பொருள்களில் தொடங்கி குண்டூசி வரை போய்ச் சேருகிறது. இப்படி சாதாரண மக்கள் பயன்படுத்துகிற பொருள்களுக்கு ஒரு சதவீதம் வரி உயர்த்த வேண்டிய தேவை என்ன ஏற்பட்டது என்பது புரியவில்லை.

அதற்குப் பிறகு டயர், ட்யூப் ஆகியவற்றுக்கு பத்து சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக வரியை உயர்த்தியிருக்கிறார்கள். டயர், ட்யூப்புகள்கூட செல்வந்தர்கள் மட்டும் பயன்படுத்துகிற பொருள்கள் அல்ல. கார்களுக்கு மட்டுமல்லாமல், சாதாரண நடுத்தர மக்கள் பயன்படுத்துகிற சைக்கிள்களுக்கும் இவைகள் தேவை என்பதை மறந்து விடுவதற்கில்லை என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

பிஸ்கட், சாக்லெட், மிட்டாய் வகைகளுக்கு 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள் இதை நான் அழுத்தமாகச் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் ஆளுங்கட்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற, ஆலோசனை சொல்லிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும், நேற்று சாக்லெட்டுக்காக எவ்வளவு அழுத்தமாக வாதாடினார்கள் என்பதை நாம் அறிவோம். அதை குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்



பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பதில் சொன்னதிலிருந்து குறைக்க மாட்டார்களோ என்ற ஐயப்பாடு தோன்றி, நானும் இதை எதிர்த்து வலியுறுத்திச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறார்களென்பதால், மீண்டும் எடுத்துச் சொல்கிறேன். மிகச் சாதாரண மக்கள், அடித்தளத்தில் உள்ள மக்கள் வீட்டில் உள்ள குழந்தைகளின் தொல்லைகளிலிருந்து பெற்றோர்களை விடுவிப்பது இந்த ஐந்து பைசா சாக்லெட்தான். ஒருவேளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நாங்கள் போட்டிருக்கிற வரி பெரிய கம்பெனிகள் உற்பத்தி செய்கின்ற சாக்லெட்டுகளுக்குத்தான், சிறிய கம்பெனிகள் செய்கின்ற சாக்லெட்டுகளுக்கு அல்ல, ஆகவே அதை வாங்கிச் சாப்பிடச் சொல்லுங்கள் என்று பதில் சொல்லலாம். பெரிய கம்பெனிகளும் ஐந்து பைசாவுக்குத் தான் கொடுக்கிறார்கள். பெரிய கம்பெனிகள், சிறிய கம்பெனிகள் சாக்லெட்டைவிட நல்ல முறையில் ஏழைகள் பக்கத்திலே வருகிற அளவுக்கு தாமான வகையில் குறைந்த விலைக்கு உள்ள சாக்லெட்டுகளைத்தான் உற்பத்தி செய்கிறார்கள். கம்பெனியைப் பார்த்து சாக்லெட்டுக்கு வரியைப் போட்டாலும், அது ஏழைகள் தலையில்தான் வந்து சேர்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மின் சக்தியால் இயக்கப்படுகிற இயந்திரங்களுக்கு 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக வரி உயர்த்தப்படுகிறது என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகத் திருத்தியதாக சட்டமன்றப் பேரவையிலே சொன்னார்கள். ஒரு வேளை இதுவரை 8 சதவீதம் வசூலித்துக் கொண்டிருந்தார்களோ என்னவோ தெரியவில்லை. அவர்களே தயாரித்துத் தந்திருக்கிற இந்த அறிக்கையிலே எட்டு சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தியிருப்பதால், நடைமுறையில் சேல்ஸ்-டாக்ஸ் இலாக்காவில் எட்டு சதவீதம் வாங்கிக்கொண்டு இருந்திருப்பார்களோ . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆங்கிலத்திலே ஒழுங்காக இருக்கிறது. தமிழில் தவறிவிட்டதன் காரணமாக எட்டு, பத்து என்று ஆகிவிட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இதை நாங்கள் செய்திப் பத்திரிகையின் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள முடிகிறது. இந்த அவையில் அதற்கான குறிப்பு தரப்படவில்லை. செய்திகளை ஒழுங்காகப் படிக்காவிட்டால், எப்படித் தெரியும் ? இங்கே பேசியவர்கள்கூட எட்டு, பத்து என்றுதான் பேசினார்கள். மின்சக்தியால் இயக்கப்படுகிற இயந்திரங்களைக் கூட சாதாரண மக்கள் பயன்படுத்துவதால் அதனுடைய விலை உயரும்போது, பல பொருள்களின் விலை உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், விசைத் தறிக்குப் பயன்படும்

நூலுக்கு ஒரு சதவிதம் வரி உயர்த்தியிருக்கிறார்கள். இப்படிப் பலவிதமாக வரியை உயர்த்திக் கொண்டே செல்வதைப் பார்த்தால், அதிலிருந்து வரக்கூடிய வருமானம் 35 கோடி ரூபாய்தான். 35 கோடி ரூபாய் என்று சொல்லுகிற போது இதற்கு இவ்வளவு வரிகள் தேவையா? உண்மையில் இத்தனை பொருள்களின் மீது வரியை உயர்த்தியிருக்கும்போது, நமக்கு வர வேண்டிய வரி 100 கோடி ரூபாய் இருக்கும் என்பதுதான் என்னுடைய கணிப்பு. இந்த ஆண்டு இறுதியில் வருகிற திருந்திய வரவு-செலவு மதிப்பீட்டில் இந்த வரி உயர்வின் மூலம் வந்த தொகையைத் தனியாகச் சொல்லமாட்டார்கள். அப்படிச் சொன்னால், நாம் எளிதாகக் கண்டுபிடித்துக்கொள்ள முடியும். அப்படியில்லாமல், விற்பனை வரியின் மூலம் வந்த மொத்தத் தொகை என்று தான் சொல்லுவார்கள். இந்த வரி உயர்வுகளின் காரணமாக எவ்வளவு ரூபாய் வரும் என்று இனிமேல் வருகிற சப்ளிமென்டரி பட்ஜெட்டில் தெரிவித்தால், ரூபாய் நூறு கோடிக்கு வரி போடப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய சரியான கணிப்பு—நான் சொல்லுவது தவறாக இருந்தால், அப்போது நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சொல்லுவது தவறாக இருந்தால், அந்தத் தவறு மீண்டும் வராமல் அடுத்த நிதியாண்டுகளில் பின்பற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதுவிற்கு, சாராயத்திற்கு அதிகமாக வரி விதிப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் வரி விதிக்கலாம். அதிலே எல்லாமே குழப்பம், ஆகவே இந்தக் குழப்பத்தைப்பற்றி எங்களுக்குக் கவலை யில்லை. வரி விதிக்கும்போது ஒரு தத்துவத்தை நினைத்துக்கொள்ள வேண்டும். அந்த வரி அரசாங்கக் கஜானாவிற்கு வர வேண்டும், அது வருமா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் தமிழ் நாடு இந்திய துணைக் கண்டத்தில் ஒரு மாநிலம். தன்னிச்சை பெற்ற மாநிலம் கூட இல்லை. மற்ற மாநிலங்களிலிருந்து தங்கு தடையின்றி எடுத்துவரக்கூடிய நிலை இருப்பதால், இப்படிப்பட்ட பெரிய வரி விதிப்பை ஏற்படுத்தும்போது, அண்டை மாநிலங் களில் என்ன வரி விதிப்பு இருக்கிறது என்பதைப் பார்த்து இங்கே வரி விதிக்காமல் போனால், அதனால் வரி ஏய்ப்புகள் அதிகமாக ஏற்படும்.

(முற்பகல் 9.50)

அதைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் நான் இங்கே பல செய்திகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டிலே நம் மாநிலத்திலே ஒரு 10,000த்திற்குள் உள்ள சொத்தை ரெஜிஸ்ட்டர் செய்ய, ரெஜிஸ்ட்ரேஷன் ஆபிசுக்குச் சென்றால் ரெஜிஸ்ட்ரேஷன் சார்ஜ், ஸ்டாம்ப் டியூட்டி என்று



கிட்டத்தட்ட 50 சதவிகிதத்திற்கு மேல் செல்வாகிறது. ஆனால் கேரளாவிலே குறைவாக ஆகிறது. கர்நாடக மாநிலத்திலே குறைவாக இருக்கிறது. கேரளாவுக்குப் பக்கத்திலே உள்ள கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் சொத்தை வைத்துக்கொண்டிருப்பவர்கள், ரெஜிஸ்ட்ரேஷன் செலவு குறைவாக இருப்பதால், கேரளாவிற்குச் சென்று ரெஜிஸ்ட்டர் செய்து கொள்ளுகிறார்கள். அதனால் நமக்கு அந்தப் பணம் வராமல் போகிறது. அண்டை மாநிலத்தில் ரெஜிஸ்ட்ரேஷன் செலவுகள் குறைவாக இருப்பதால், அங்கேயே போய் ரெஜிஸ்ட்டர் செய்து கொள்கிறார்கள். இது இந்த அரசுக்குத் தெரியாத தத்துவமல்ல.

கன்னியாகுமரி மாவட்டத்திலே உணவுப் பொருள்களுக்கு விலையேறிக் கொண்டே இருக்கிறபோது, நான் பல சந்தர்ப்பங்களில் அமைச்சர்களைக் கண்டு சந்தித்து, நெல், அரிசியினுடைய விலை ஏறிக்கொண்டே இருக்கிறது, கண்ட்ரோல் காலங்களில் முன்னர் இருந்த லெவி முறைகளினால் ஏறிக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது சீஃப் செக்ரட்டரியாக இருப்பவர்தான் அப்போது உணவுத் துறை செயலாள ராக இருந்தார்கள். அவர் அரசுக்குச் சொன்ன தத்துவம் என்னவென்றால், கன்னியாகுமரியிலிருந்து அரிசி கேரளாவிற்கு கடத்தப்படுவதைத் தடுக்க கன்னியாகுமரியில் அரிசி விலை உயர்த்தப்பட்டுவிட்டால், இங்கேயிருந்து அங்கே போகாது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். Movement towarls vaccum என்று சொல்வார்கள். கேரளாவிலே கூடுதல் விலை இருந்தால், இங்கேயிருந்து அங்கே போகும். இங்கேயிருந்து அங்கே போகக்கூடிய நிலை வராவிட்டாலும், இந்த விலையை உயர்த்தும் தத்துவத்தை அரசுக்குச் சொல்லும் ஆற்றல் மிகுந்த அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். இப்படி வரி விதிக்கும்போது, பக்கத்தில் இருக்கின்ற மாநிலங்களைப்பற்றி கவனிக்காமல், இங்கே அதிக வரிகள் விதிப்பதால், லெவி கட்டுப்பாடுகள் இருப்பதால், அங்கே நடக்கின்ற விற்பனையிலே சூன்யம் ஏற்பட்டுவிடுகிறது. அதனால் நாம் எதிர்பார்க்கின்ற வரி வராது. அரசாங்கக் கஜானாவிற்கு வருகின்ற வருவாய் வராமல் போய்விடுகிறது என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த வரிவிதிப்புகளைத் தளர்த்துகின்ற நிலையிலே நான் ஒன்றை எடுத்துக் காட்டாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு வைத்திருக்கக் கூடிய வரி விதிப்பிலே இருக்கின்ற குறையைப்பற்றி எடுத்துச் சொல்கிறேன். ஒரு பாட்டில் சார்ந்த பாட்டில் வெளிநாட்டு மதுவிற்கு விலை ரூ. 100 என்று

வைத்துக் கொண்டால், அதற்குத் தமிழ்நாட்டில் சேல்ஸ் டேக்ஸ் 50 பர்சென்ட். அதாவது ரூ.50 ஆகும். அதற்கு எக்சைஸ் டியூட்டி ரூ25, காலனேஜ் பீஸ் ரூ.2 அதற்கு சர்சார்ஜ் சேல்ஸ் டேக்ஸ் ரூ. 5, ஆக மொத்தம் ரூ. 82 என்று ஆகிறது. அதே நேரத்தில் கேரளாவிலே, அங்கே எக்சைஸ் டியூட்டி 14, சேல்ஸ் டேக்ஸ் 15 பர்செண்ட். ஆக இரண்டு டியூட்டிகள்தான் அங்கே. அங்கே ரூ. 69, இங்கே ரூ. 82. பாண்டிச்சேரியில் சேல்ஸ் டேக்ஸ் 18 பர்சென்ட், ரூ. 18, எக்சைஸ் டியூட்டி ரூ. 9. அங்கே இருக்கின்ற பாட்டிலுக்கு மொத்தமே ரூ. 27 தான். அங்கே ரூ. 27 என்று இருக்கும்போது, இங்கே விலை ரூ. 82. மொத்தத்தில் வித்தியாசம் ரூ. 55 ஆக இருக்கிறது. கர்நாடகத்தை எடுத்துக்கொண்டால், சேல்ஸ் டாக்ஸ் ரூ. 40.எக்சைஸ் டியூட்டி ரூ. 19.50, எக்சைஸ் டியூட்டியிலே ஹெல்த் செஸ் என்று 2.92, அது 15 சதவிகிதம் எஜுகேஷன் செஸ் என்று 10 பர்செண்ட், 1.95 ஆகமொத்தம் ரூ. 64.37 என்று வருகிறது. நம் மாநிலத்தில் ரூ. 82 என்று இருக்கும்போது, அங்கேயுள்ளது ரூ. 64.37 தான். அதிலும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு பாட்டிலுக்கு ரூ. 100 என்று விலை வைத்துவிட்டு, இந்த அண்டை மாநிலங்களிலே, நான்கு மாநிலங்களிலே இந்த அளவுக்கு விலை வித்தியாசம் ஏற்படுகின்றது. இந்த 2 மாநிலங்களும் நம்மைச் சுற்றித்தான் இருக்கின்றன. கேரளாவை ஒட்டியும் இருக்கிறோம். கேரளாவையொட்டி கன்னியாகுமரி, கோயம்புத்தூர், செங்கோட்டை திருநெல்வேலி பகுதியும், பாண்டியை ஒட்டி செங்கற்பட்டு தென்னாற்காடு, வட ஆற்காடு பகுதியும் இருக்கின்றன. அதுபோல கர்நாடக மாநிலத்தை ஒட்டியும் சில பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலேயெல்லாம் விலை குறைவாக இருக்கின்றது. பாண்டிச்சேரியில் 12 பாட்டில்கள் கொண்ட கேஸ் இருக்கிறது. அந்த ஒரு கேஸ் உயர்ந்த மது இங்கே வந்தால், ரூ. 660 லாபம் கிடைக்கிறது. ஆந்திராவிலே இருந்து ஒரு கேஸ் கொண்டு வந்தால், ரூ. 324 லாபம் கிடைக்கும். கர்நாடகாவிலேயிருந்து ஒரு கேஸ் கொண்டு வந்தால், ரூ. 216 லாபம் கிடைக்கும். கேரளாவிலேயிருந்து கொண்டுவந்தால், ரூ. 156 லாபம் கிடைக்கும். நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய 15 மாவட்டங்களில் சுமார் 10 மாவட்டங்கள் அந்த மாநிலங்களை ஒட்டியே இருக்கின்றன. அந்த 10 மாவட்டங்களிலே இருக்கின்ற ஒரு தனி நபர் ஒரு காரை வைத்துக்கொண்டு, இப்படிக் கொண்டு வந்து விற்று லாபம் சம்பாதிக்கலாம். இந்த மாநிலத்திலே மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு முன்னால் என்ன நடந்துகொண்டிருந்தது? இந்த மாநிலத்திலே உயர்ந்த மதுக்கள் கடத்தப்பட்டன, விற்கப்பட்டன. அப்படி யாரால் கடத்த முடியும்? அரசாங்கத்தோடு தொடர்புடையவர்கள்தான் கடத்த முடியும். அரசாங்கத்தில் செல்வாக்கு உள்ளவர்களால், அதிகாரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளும் ஆற்றல் உடையர்களால் தான்



முடியும். அப்படிப்பட்ட ஒரு குழுதான் கடத்தல் செய்து சம்பாதித்துக் கொண்டிருந்தது. அதைத் தவிர்க்க வேண்டுமென்றுதான் மது விலக்கைத் தளர்த்தினார்கள். ஆனால் இப்போது இந்த வரிவிதிப்பின் மூலம், அவர்கள் கேரளாவிலிருந்து மற்ற மாநிலங்களிலிருந்து 'டெய்லி' ஒரு கார் மூலம் கொண்டுவந்து விற்கலாம். அதிகமாகக் கூட இல்லை. ஒரு கேஸ் கொண்டு வந்தால் போதும், 12 பாட்டில்கள் கொண்டு வந்து விற்றால், அவர்களுக்கு ரூ. 156 வரையில் லாபம் கிடைக்கிறது. பாண்டிச்சேரியில் இருந்து கொண்டு வந்து விற்றால், ரூ. 660 லாபம். ஆந்திராவிலே இருந்து கொண்டு வந்தால் ரூ. 324 லாபம் கிடைக்கிறது. கர்நாடகாவிலே இருந்து கொண்டு வந்தால், ரூ. 216 லாபம் கிடைக்கும். நாம் இவ்வளவு படித்து, என்ன பெரிய உத்தியோகம் செய்து என்ன பலன்? சட்டமன்ற உறுப்பினராக அல்லது பாராளுமன்ற உறுப்பினராக இருந்து என்ன வருமானம்? இந்த வருமானம் வருமா? இத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்குத்தான் உங்களுடைய வரி விதிப்பு பயன்படுத்தப்படுகிறது அல்லவா என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கள்ளக் கடத்தல் சாம்ராஜ்யத்தை உருவாக்கப் பயன்படுகிறது. நாம் எதிர்பார்க்கின்ற வரி நமக்குக் கிடைக்காமல் போகிறது. சமுதாய ஒழுக்கக் கேடுகள் அதிகமாக ஆகியிருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த விவரங்களை எல்லாம் அதிகமாகச் சொன்னால், பல பேர்கள் இந்தத் தொழிலுக்கு திரும்ப ஆரம்பித்து விடுவார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்த ஆட்கள் எல்லாம் நன்றாகச் செய்கின்றார்கள். எப்போதும் அந்த வேலையைச் செய்யாதவர்கள் இப்போதும் அந்தத் தொழிலுக்குப் போகமாட்டார்கள். ஆனால் அதில் அனுபவம் உள்ளவர்கள் எவ்வளவு சட்டம் கொண்டு வந்தாலும், நிற்க மாட்டார்கள். ஆகவே இந்த வரியைக் குறைத்து அந்த மாதிரி சூழ்நிலைகள் உருவாவதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் எடுத்துச் சொல்கிறேன். இந்த விவரங்களைச் சொல்லிக் கொடுத்து அவர்களைச் செய்யச் சொல்வதற்கு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சூழ்நிலைகளை அரசுக்கு உணர்த்தி, அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, வரியை மாற்றியமைக்க வேண்டும் என்ற அளவில் அறிவுறுத்துகின்ற நோக்கத்தோடுதான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். ஆகவே இப்போது போடுகின்ற வரி விதிப்பினால் எந்தப் பலனையும் பெற முடியாது. இந்த எக்ஸ்செக்கருக்குப் பணம் வர முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த 35 கோடி ரூபாய்பற்றி பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் தவறு என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இவ்வளவு வருவாயைச் சேர்க்க வேண்டுமென்று நாம் நினைக்கிறோம். வரி ஏய்ப்புக்கள் நடக்கின்றன. அதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எச்சரிக்கையாக ஈடுபட வேண்டும். அப்படிச் செய்யப்படுகிறதா? விற்பனை வரியிலே எந்த அளவுக்குத் தவறுகள் நடக்கின்றன? எத்தனை அதிகாரிகள் பெரும்பொருள் ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளுடைய வயல்களுக்கெல்லாம் கான்கிரீட் மதில்கள் போடப்படுகின்றன. வயல்களைச் சுற்றி மதில் சுவர் கட்டுகிறார்கள். அப்படியெல்லாம் அவர்கள் வாழ முடிகிறது என்பதை நாம் பார்க்க முடிகிறது. சில பகுதிகளில் அவர்கள் அதிகாரிகளாக வருவதற்குக்கூட பெரும் தொகை கொடுத்து அங்கே வேலைக்கு வருகிறார்கள். அங்கேதான் அவர்கள் சொர்க்கம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்திற்கு அவ்வளவு மதிப்பு. இப்படியெல்லாம் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்தது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சினிமாத் துறையிலே, படங்களிலே வரி ஏய்ப்பு நடந்திருக்கிறது என்று சொல்லி, அந்த வரியை ஒருமுகப்படுத்தி, ஒருங்கிணைந்த வரியாக மாற்றிப் போட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே 2,000 தியேட்டர்கள் இருக்கின்றன. அதில் 1,500 தியேட்டர்களுக்கு (திரை அரங்குகள்) இரண்டாவது கிரேட் முனிசிபாலிட்டியிலும், பஞ்சாயத்து யூனியனிலும், நகரங்களிலேயும், நகரங்கள் அல்லாத பகுதிகளிலேயும் உள்ள திரை அரங்குகளுக்கு இந்த கம்பௌண்டிங் முறை கொண்டுவரப்பட்டது. அதனால் வரி ஏய்ப்பு ஓரளவுக்குத் தவிர்க்கப்பட்டது. வருவாய் உயர்ந்தது என்று ஆண்டுக்காண்டு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் இந்த வரியை நகரங்களில், முனிசிபாலிட்டிகளில், புற நகரங்களில், கார்ப்பரேஷன் எல்லையில் இருக்கும் திரை அரங்குகளுக்கும் மாற்றியமைத்து வருவாயை உயர்த்தலாம். அதிலே ஒரு 15 கோடி ரூபாய் அளவுக்கு எளிதாக எந்தக் கஷ்டமும் இல்லாமல், யாருக்கும் வரி போடாமல், வருவாயை உயர்த்தியிருக்க முடியும். இப்போது 35 கோடி ரூபாய் வருவாய்க்கு மிளகாய், மல்லி, மஞ்சள், புளி போன்றவற்றிற்கு வரி போட்டிருக்கிறார்கள். இந்த கம்பௌண்டிங் சிஸ்டத்தை பர்ஸ்ட் கிரேட் முனிசிபாலிட்டிகளுக்கும், கார்ப்பரேஷனுக்கும் கொண்டுவந்து 1,500 தியேட்டர்களுக்கு அமல்படுத்தியிருக்கிறார்கள். அதுபோல் இந்தத் திட்டத்திலே இன்னும் 500 தியேட்டர்களுக்கு நீடித்திருந்தால், ரூ. 15 கோடி அல்லது ரூ. 20 கோடிக்கு சம்பாதித்திருக்க முடியும். அதிலே கை வைக்க



ஏன் அஞ்சுகிறார்கள் என்று தெரியவில்லை. அங்கு இருக்கக்கூடிய வரி ஏய்ப்பையும் தவிர்த்திருக்க முடியும். இந்த மர்மத்தை அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டிலே 204 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுகிறது. பற்றாக்குறை பட்ஜெட் என்று சொன்னார்கள். அந்தப் பற்றாக்குறைக்கு என்ன காரணம் சொல்லப்பட்டிருக்கிறது என்று கேட்டால், மின்சார வாரியத்திற்கு 271 கோடி ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அது தவிர்க்க முடியாததுதான். மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டும், மின்சார உற்பத்தியைப் பெருக்குவதனால்தான் நம்முடைய தொழில் வளம் அமைய முடியும். அதைத் தேங்கவிட்டாலும், நாம் பின்தங்கிவிடுவோம். ஆகவேதான் இந்த நிதியிலிருந்து அரசாங்கம் இந்த 271 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. ஆகவேதான் இந்த நிதிப் பற்றாக்குறை என்று சொல்கிறோம். அப்படிக் கொடுக்காமல் இருந்தால், இந்தப் பற்றாக்குறைகூட இருக்காது. உபரி பட்ஜெட்டாக இருக்கும். அதற்கு நாம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஆனால் அப்படிக் கொடுக்கின்ற நிதியை அந்த அமைப்பு சரியாகச் செலவிடுகிறதா, நன்றாகச் செயல்படுகிறதா, என்பதை நாம் பார்க்கவேண்டாமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்பற்றி நான் இங்கே விரிவாகப் பேசவில்லை. ஏனென்றால், மின்சார வாரியத்திலே போனதாக ஆகிவிடும். மின்சார வாரியத்திற்கு ரூ. 271 கோடி கொடுக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு ரூ. 150 கோடி, ரூ. 200 கோடி, ரூ. 230 கோடி என்று கொடுத்துக்கொண்டே

(முற்பகல் 10.00)

இருக்கிறார்கள். அது மிகுந்த நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படி இருக்கக்கூடிய அந்த அமைப்பைச் சீர்திருத்த இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இந்திய நாட்டினுடைய காம்ப்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் திரு. ஜியான் பிரகாஷ் அவர்கள் 1979-80 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அதில் மின்சாரத் துறையைப்பற்றி பக்கம் 110-லிருந்து 150 வரை சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியத்திலே என்னென்ன தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. ஏன் அதில் நஷ்டம் வருகிறதென்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நாம் மின்சார வாரியத்திற்கு 220 கோடி ரூபாய் கொடுக்கும்போது, அதில் இன்னின்ன தவறுகள்

இருக்கின்றன என்று காம்ப்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள், அவற்றைக் களைய இன்னின்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோமென்று சொல்லியிருக்கிறார்களா என்றால், இல்லை.

காம்ப்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் அறிக்கையில் 110 முதல் 140 ஆம் பக்கம் வரை, உற்பத்தித் திறன் அளவிற்கு ஏன் உற்பத்தி செய்யவில்லை என்று கேட்கப்பட்டிருக்கிறது. இன்ஸடால்ட் கெப்பாசிட்டியில் 60, 70 சதவிகிதம்தான் உற்பத்தி செய்யப்படுகிறதென்றும், அதற்கான காரணங்கள், மின்சார வாரியத்தின் திறமைக் குறைவு, அதிலுள்ள கவனக் குறைவு என்று இவைகளையெல்லாம் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதைப் பற்றி விரிவாகச் சொன்னால், அது விவாதமாகிவிடும். பக்கத்தை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் தக்க முறையில் அவற்றைப் பரிசீலிக்க வேண்டும். 142 முதல் 150 ஆம் பக்கங்களில், அந்த வாரியத்தில் ஏற்பட்ட பண விரயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதை மாத்திரம் நான் குறிப்பிட்டு காட்ட விரும்புகிறேன்.

142 ஆம் பக்கத்தில் 1979 ஆம் ஆண்டில் 90,000 three phase meters வாங்க டென்டர் கோரப்பட்டு டென்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு மீட்டர் 151 ரூபாய் என்று திருச்சிராப்பள்ளி கம்பெனி டென்டர் கொடுத்திருந்தது. பிறகு அதன் நிலை என்னவாயிற்று என்று நான் சொல்வதைவிட, ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் அறிக்கையைப் படித்து விடுவது நல்லதென்று நினைக்கிறேன். 142 ஆம் பக்கத்தில் சொல்ல ஆரம்பித்து

Extra expenditure n the purchase of meters ............

144 ஆம் பக்கத்தில் சொல்கிறார்.

"Failure to place orders on the firm 'A' within the validity period after arriving at a mutually agreed delivery schedule as stipulated by the firm in their offer had thus resulted in an extra liability of Rs. 7.25 lakhs to the Board on the ordering of 25,000 meters at higher rates."

90,000 மீட்டர்களுக்கு ஆர்டர் பண்ணினார்கள். அதில் 25,000 மீட்டர்களுக்குக் கூடுதலான தொகை கொடுத்ததால் ஏற்பட்ட இழப்பு 7.25 லட்சம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு விடவில்லை.

The matter was referred to the Board/Government in May 1980; reply awaited.



என்று சொல்லியிருக்கிறார். reply was awaited (June 1981)

Avoidable expenditure on the purchase of bolts and nuts . . .

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட கம்பெனி சிம்கோ மீட்டர்ஸ் கம்பெனியா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அதை அரசிடமிருந்து அறிவது நல்லது. நான் ரிப்போர்ட்டிலிருந்து சொல்கிறேன். Firm 'A' என்று அதில் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் என் வாயால் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

145 ஆம் பக்கத்தில் கடைசியாக சொல்லியிருக்கக்கூடிய ரிமார்க்கைப் படிக்கிறேன்.

"A quantity of 234.10 tonnes was ordered on the Calcutta firm on 24th July 1979 at rates, which were higher than the revised rates offered by the same firm on 15th May 1979 against the first tender call thougn the firm had reiterated these rates in its letter of 4th July 1979 for the quantity of 169 tonnes ordered on it against the first tender call. Consequent to this order on the Calcutta firm, the order placed on them in May 1979 for supply of 168 tonnes, was cancelled by the Chief Engineer on 28th July 1979. The Board incurred an extra expenditure of Rs. 1.74 lakhs on the quantity of 168 tonnes ordered on the Calcutta firm at higher rates against the second tender call, by rejecting the lower revised rates offered by the firm in May 9, 1979, which were reiterated by the firm even on 4th July 1979.

The matter was referred to the Board in January 1980; their reply was awaited (June 1981)."

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

கல்கத்தா ஃபார்ம்-க்கு 234.10 டன் போல்ட் சப்ளைக்கு ஆர்டர் கொடுத்த போது, அவர்கள் 1979 மே 15-ல் என்ன டெண்டர் கொடுத்தார்களோ, அந்த ரேட்டுக்குத் தர அவர்கள் தயாராக இருந்து, ஜுலை 4-ல் அதே ரேட்டுக்குத் தருகிறோமென்று அவர்கள் சொல்லி, பிறகு அதைக் கேன்சல் செய்து, ஜுலை 28—ல் கூடுதல் ரேட்டில் புது டெண்டர் கொடுத்து, அதன்மூலம் 1.74 லட்சம் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டி, அதற்கு விளக்கம் சனவரி 1980-ல் கேட்டு, ஜுன் 1981 வரை வரவில்லை என்று அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து, Revolving Deposit with the Director-General of Supplies and Disposals அதில் ஏற்பட்ட தவறுகளைச் சொல்லுகிறார் ஒரு கமிட்டி இருந்து இதை ஆராய வேண்டும். பெரிய அவையில் ஆராயக் கூடிய விஷயமல்ல அது. சீஃப் இன்டர்னல் ஆடிட் ஆபீசர் சொல்லியிருப்பது பற்றி பக்கம் 148ல் இரண்டாவது பத்தியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"The Chief Internal Audit Officer of the Board . . . had reported Restrictions and Control period

இப்போது 45 சதவிகிதம் மின் வெட்டு அமுலில் இருக்கிறது. அதை மீற கூடுதலாகப் பயன்படுத்தினால், பினல் சார்ஜ் போட வேண்டும். அப்படிப் போட வேண்டியவர்களுக்குப் போடாமல் விட்டுவிட்டார்கள். அடுத்து, ஷார்ட் பில்லிங். 17.40 லட்சம் ரூபாய் அளவிற்கு ஷார்ட் பில்லிங் in 28 out of 139 revenue units. என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து டெஸ்ட் செக் ஆஃப் பில்ஸ்

"A test check of the bills for current consumption charges issued by 151 units/offices of the Board during the period April 1976 to March 1979 disclosed further under-charges of Rs. 60.01 lakhs due to reasons as analysed below".

இதிலே கொஞ்சம் ரூபாய் வந்திருக்கிறது. ரூ. 26.13 லட்சம் வந்திருக்கிறது பாக்கி வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளைப் பார்க்கும் போது ஏறக்குறைய 60 லட்சம் ரூபாய் பணத்திலே பல தவறுகள், கையாடல்கள், ஊழல்கள்—என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். வருத்தம் தரும் பெயராக இருந்தால் விட்டுவிடலாம். இவ்வளவு தவறுகள் நடந்திருக்கின்றன. நாட்டில் எதிர்காலம் எதில் முடங்கிக் கிடக்கிறது என்று கருதுகிறோமோ, எந்த மின்சார உற்பத்திக்கு 220 கோடி ரூபாயை ஒப்படைக்கிறோமோ, அந்த வாரியத்தை இந்த விதத்திலே நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்குப் பிறகும் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டேயிருந்தால் நாம் எங்கு போய்ச் சேருவோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக

(முற்பகல் 10.10)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். அவர்களே கூட அதிர்ச்சி அடைந்திருப்பார்கள். இவ்வளவு பெரிய அளவில் பணத்தைக் கொடுக்கிறோமே, யாராவது இதுபற்றி கேட்க மாட்டார்களா என்று கூட நினைக்கலாம். அப்படியே அவர்கள் நினைக்காமல் இருந்தால் கூட, அவர்கள் இந்த அவையிலும் பேரவையிலும் இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் அடங்கிய ஒரு குழுவை அமைக்க வேண்டும். அதில் மின்சாரம் சம்பந்தப்பட்ட எக்ஸ்பெர்ட், ஆடிட்டர் ஜெனரல் போன்றவர்களையும் போட்டு இதில் நடைபெறக் கூடிய தவறுகளைக் களைந்து நாட்டின் நலனைப் பாதுகாக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து நிதிநிலை அறிக்கையில் விவசாயத்தைப்பற்றி பக்கம் 6, பாரா 8-ல் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள பெரும்பாலோர் வேளாண்மையை நம்பி வாழ்கிறார்கள் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நலனைப் பாதுகாக்க இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் அதுபற்றிக் குறிப்பிடப் படவில்லை. அவர்களுக்கு நல்ல வித்து கொடுப்பது பற்றியும், தொழில் நுட்ப தன்மைகளைக் கொடுப்பது பற்றியும், தொழில் நுட்பக் கருவிகளை கொடுப்பது பற்றியும் என்னென்ன ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் விவசாய உற்பத்தி செய்கிற விவசாயிக்கு, குறிப்பாக நெல்லை உற்பத்தி செய்து அதனுடைய விலையை நம்பிக் கொண்டிருக்கிறானே அதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை. அவன் ஆண்டாண்டு தோறும் அழிந்து கொண்டிருக்கிறான். அவனிடமிருந்த 10 ஏக்கர் என்பது 8 ஏக்கர் ஆகி, 7 ஏக்கர் ஆகி குறைந்து கொண்டே வருகிறது. அதுபோல் 2 ஏக்கர் வைத்திருப்பவர்களுடைய நிலத்தின் அளவு 1½ ஏக்கர் ஆகி, 1 ஏக்கர் ஆகிவிட்டது. இப்படி பெரும்பான்மையினருடைய பொருளாதாரம் இன்றைக்கு அழிந்து கொண்டே வருகிறது. இதுகுறித்து இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவர்களைக் காப்பாற்ற இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவர்கள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 180 ரூபாய் உற்பத்திச் செலவு ஆகிறது. ஆனால் இந்த அரசு லெவி என்கிற பெயரால், அவர்களுக்கு 115 ரூபாய்தான் கொடுக்கிறது. அதைத் தவிர விஞ்சியதை ஓப்பன் மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கலாம் என்று பார்த்தால், அதற்கும் வழியில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதைப்போல, தஞ்சாவூர் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம், அவருடைய தொகுதியான அம்பாசமுத்திரம் போன்ற பகுதிகளில் சிவில் சப்ளைஸ் அதிகாரிகளும், போலீசும் முற்றுகையிட்டு ஒரு கொயர்சிவ் மெதடில் அடக்கு முறையில், கட்டாயப்படுத்தி அவர்களிடமிருந்து 115 ரூபாய்க்கு லெவி என்கிற பெயரால் பெறுகிறார்கள். பெரும்பாலோர் என்று அரசே குறிப்பிட்டிருக்கிற அவர்கள்தான் இப்படி செய்யப்படுகிறார்கள். உணவுப் பொருளை, நெல்லை உற்பத்தி செய்கிற விவசாயிக்குத் தான் இந்த நிலை. அவர்களுக்குக் கூடுதல் விலை கொடுத்தால், ரிசர்வ் பாங்கிலிருந்து உதவி எதுவும் கிடையாது, ஆகவே இதைச் செய்ய மாட்டோம் என்று

சொன்னார்கள். கேரளாவில் அதற்கு மேல் 10 ரூபாய் தருகிறார்கள். கர்நாடகாவில் அதற்கு மேல் 15 ரூபாய் தருகிறார்கள். தேவைப்பட்டால், மக்களுக்கு நலன் பயப்பவை என்றால், அதற்காக மத்திய அரசிடமும் ரிசர்வ் பேங்கிடமும் போராடத்தான் வேண்டும். அதற்கு நாங்களும் மாண்புமிகு மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. நல்லசிவன் போன்றவர்களும் நல்ல காரியங்களுக்குத் துணை நிற்போம். விலையை அதிகமாகக் கொடுப்பது கஷ்டமாக இருந்தால், சப்சிடி என்கிற பெயரால் ஸ்டேட் பண்டிலிருந்து கொடுங்கள். அப்படியும் கொடுக்க முடியாது என்றால், வண்டிச் சத்தம் அல்லது போனஸ் என்கிற பெயரால் கொடுங்கள். அப்படி கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு உங்களைச் சொல்லவில்லையே. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அதற்கு மேல் 10 ரூபாய் வண்டிச் சத்தம் என்கிற பெயரால் கொடுத்தோம். இப்போது அந்த வகையில் நீங்களும் 10 ரூபாய்க்கு பதிலாக 20 ரூபாய் கொடுக்கலாமே. மனம் இருந்தால் கொடுக்கலாம். இன்றைக்கு எவ்வளவு பெரிய திட்டங்களை எல்லாம் அறிவிக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதே அவையில் இதுபற்றி பல தடவை நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். மத்திய அரசுதான் நெல்லின் விலையை நிர்ணயிக்கிறது. அதுபற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கர்நாடகத்தில் 10 ரூபாய் கூடுதலாகக் கொடுத்தார்கள். ஆனால் ஏற்கெனவே கூடுதலாகக் கொடுக்கின்றபோது, அந்தந்த மாநிலத்தின் பங்கு என்று சொல்லி ரிசர்வ் பாங்க் கிரிடிட் தந்தது. சென்ற ஆண்டிலிருந்து எந்தக் காரணத்தைக் கொண்டும், அதுபோல் தரக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். நாங்கள் விலைகளை நிர்ணயிக்கிறோம். ஆனால் மாநில அரசுகள் தங்கள் இஷ்டம் போல் இப்படிச் செய்தால், அரசின் கொள்கை பாதிக்கப்படுகிறது என்று சொல்லி கர்நாடகாவுக்கு 'ஸ்குயிஸ்' பண்ணி விட்டார்கள். பிறகு 4 நாட்களுக்குப் பின் கர்நாடகா முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று பேசிய பிறகு, ஸ்குயிஸை எடுத்து விட்டார்கள். ஆனால் வட்டியை ஏற்றிவிட்டார்கள். 12½ பெர்சன்ட் கிரிடிட்டை 18 பெர்சன்ட்டாக அவர்களுக்குத் தருகிறார்கள். நமக்கு 12½ பர்சென்ட் தருகிறார்கள். ஆகவே தான் விலையை உயர்த்த முடியவில்லை. ஆனால் இன்றைக்கு லெவி மூலம் நாம் 115 ரூபாய்க்கு வாங்கினாலும்கூட, ஓப்பன் மார்க்கெட்டில் 140 ரூபாய், 145 ரூபாய் இப்படி விற்கப்படுகின்றது. குறிப்பாக மதுரையில் 160 ரூபாய்க்கு விற்கிற நிலை இருக்கிறது. ஆனால் ஓப்பன் மார்க்கெட்டில் விலைகள் ஏறும், இறங்கும். நாம் 115 ரூபாய் தருகிறோம். அதனால் தான் அவர்கள் கொடுக்கிற நிலையில் இல்லை.



**திரு. ம. சங்கரலிங்கம் :** நல்ல எண்ணத்தோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். நானும் அவர்களுக்கு நல்லெண்ணத்தோடு ஒன்று சொல்கிறேன். விவசாயிகளுடைய கஷ்டத்தை உணர்ந்திருக்கிறார்கள். ஏழ்மை நிலையில் இருக்கிற பல்வேறு பிரிவு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் தாழ்ந்த நிலையில் இருக்கிற, குறிப்பாக நெல் உற்பத்தி செய்கிற விவசாயிகள் ரொம்ப கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. கமர்சியல் கிராப்ஸ் உற்பத்தி செய்கிற விவசாயிகளுடைய நிலை கொஞ்சம் பரவாயில்லை. ஆகவே நெல் உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஒரு சப்சிடி, போனஸ் போன்ற ஏதாவது ஒரு நல்வாழ்வுத் திட்டத்தை அறிவித்திருக்கலாமே. அவர்களுக்கு ஒரு நன்மையும் செய்யாமல் மேலும் மேலும் லெவி போட்டு அவர்களைக் கொடுமைப்படுத்தலாமா ? சிவில் சப்ளைஸ் இலாகாவுக்கு நெல் தேவைப்பட்டால், வெளி மாநிலங்களிலிருந்து குறிப்பாக ஆந்திராவிலிருந்து வாங்கலாமே. அதுவும் 50 சதவிகித லெவி போட்டிருக்கிறார்கள். 25 சதவிகித லெவி என்று போட்டிருந்தால்கூட, பரவாயில்லை. இன்றைக்கு அப்படி விதித்திருந்தால், நிர்ணயித்தபடி கொள்முதல் ஆகியிருக்கும். அதிகாரிகள் சொல்கிறதை அப்படியே கேட்டு செயல்படுவதை விட்டு விட்டு, விவசாயிகளுடைய கஷ்டத்தையும் உணர்ந்து காரியங்களைச் செய்யுங்கள். ஓப்பன் மார்க்கெட்டில் விற்கலாம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எங்கே போய் ஓப்பன் மார்க்கெட்டில் விற்க முடியும் ? வண்டியில் போனால் பிடித்து விடுகிறார்கள். ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலம் போகலாம் என்று சொன்னால்கூட, அங்கே பெரிய வியாபாரிகள்தான் கலந்துகொள்ள முடியும். சாதாரண விவசாயி கலந்துகொள்ள முடியாது. அங்கே ஒழுங்காக வியாபாரம் பண்ணவில்லை. டி.எஸ்.வுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு, அவன் செய்ய வேண்டியதைச் செய்கிறான். இதனால் நெல் உற்பத்தி செய்கிற சாதாரண விவசாயி கஷ்டப்படுகிறான். இந்த நிலையை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு நிதி நிலை அறிக்கையில் ஒரு அற்புதமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். பேச்சளவில் நன்றாகத்தான் இருக்கிறது. உற்பத்தியாளர்கள், துய்ப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் கூட்டுறவுச் சங்கம் மூலம் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். உற்பத்தியாளர்களுக்கும் துய்ப்பவர்களுக்கும் அதாவது விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் நல்லது செய்யப் போகிறார்களாம். எலியையும் பூனையையும், மயிலையும் கழுகையும் வைத்து ஒரு பார்க் அமைத்தால், நன்றாகத்

தான் இருக்கும். (சிரிப்பு) அதுபோல்தான் இதுவும் இருக்கிறது. உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவும், வாங்குபவர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கவும் இதைச் செய்யப் போகிறார்கள். உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியான விலை கொடுத்துவிட்டு, துய்ப்பவர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்கப்படும் என்றால் அரசாங்கம் சப்சிடி கொடுத்தால்தான், துய்ப்பவர்களுக்கு அதைக் கொாடுக்க முடியும். இப்படி அற்புதமான திட்டங்களை அறிவிக்கிறார்கள். இந்த திட்டங்கள்பற்றி, அறிவிப்புகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் போன்றவர்கள் ஆராய்ச்சி செய்யலாம். நேற்று அவர்கள் இங்கே பேசும்போது படித்தது ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை போல இருந்தது. எனக்கு சக்தி இருந்தால் அவருக்கு இன்னொரு டாக்டர் பட்டம் கொடுத்திருப்பேன். இப்படிப்பட்ட முறையில்தான் அரசின் திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன.

(முற்பகல் 10.20)

அடுத்து, பாசன வசதிபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக 22.23 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். புதிய பாசனத் திட்டங்களை, சிறிய சிறிய பாசனத் திட்டங்களைக் கொண்டு வந்து இந்த நாட்டிலுள்ள நீர் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று எண்ணியிருக்கிற அந்தக் கருத்துக்கு எங்களுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இவையெல்லாம் அமுல்படுத்தப்படுமா என்பதில்தான் எனக்கு ஐயப்பாடு இருக்கிறது. ஒன்று சொல்லியிருக்கிறார்கள். பல நடுத்தர பாசனத் திட்டங்களையும் அறிவித்திருக்கிறார்கள். 14 சிறு பாசனத் திட்டங்களையும் அறிவித்திருக்கிறார்கள். புதிய திட்டங்களையும் அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய பாராட்டுக்கள். ஆனால் திட்டங்களை அமுல்படுத்துகிறபோது, அப்படியே போட்டுவிடுகிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்டம் 1975-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மத்திய திட்டக் கமிஷனுடைய ஒப்புதல் பெற்று, திட்டத்திற்கு 3¼ கோடி ரூபாய்



ஒதுக்கீடு செய்து திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 60 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுவிட்டது. அணையினுடைய அஸ்திவாரம் தோண்டப்பட்டு விட்டது. 100 அடி நீளத்தில் 50 அடி அகலத்தில் கோடவுன் கட்டப்

(முற்பகல் 10.20)

பட்டுவிட்டது. அதிகாரிகள் தங்க 8 ஸ்டாஃப் குவார்ட்டர்ஸ், 2 ஆபீஸ் கட்டிடங்கள், 1 ரெஸ்ட் ஹவுஸ், எஞ்சினியர்கள் தங்க 3 பெரிய வீடுகள் போன்றவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஒரு லாரி என் எம்.டி.ஓய். 8621 இன்றைக்கும் அங்கேயே கிடக்கிறது. 1976-லேயே வேலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அந்த லாரி இன்று வரையிலும் அங்கேயே கிடக்கிறது. கிணறு வெட்டி ஜெனரேட்டர் வைத்து தண்ணீர் எடுக்க வேண்டும் என்று சொல்லி அங்கே ஒரு ஜெனரேட்டர் வைத்தார்கள். இன்றைக்கும் அது அங்கே அப்படியே கிடக்கிறது. 6 வருட காலமாக அங்கேயே பழுதடைந்து கிடக்கிறது. இந்தத் திட்டத்திற்கு 60 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரையொட்டி, திருக்கணங்குடியிலிருந்து வருகின்ற நம்பியாறு, கொடுமுடியாறு போன்ற ஆறுகளைத் தடுத்துக் கட்டும் அணைத் திட்டம் இது. திட்டக் கமிஷன் இத்திட்டத்திற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ஆளுநர் ஆட்சிக் காலத்திலே இந்தத் திட்டம் தடுத்து நிறுத்தப்பட்டு, இத்திட்டத்தினால் தண்ணீர் வருமா என்ற ஃபீசிபிலிட்டியைப் பார்க்க வேண்டும் என்று 1976-லே ஆணை போட்டார்கள். ஆனால் அதற்கென்று போடப்பட்ட கமிட்டி 'நல்லமுறையிலே இத்திட்டத்தினால் தண்ணீர் கிடைக்கும்' என்ற அறிக்கை தந்திருக்கிறது. இந்த அரசு 1979-லே வந்த பிறகு போடப்பட்ட பட்ஜெட்களிலே 1980 பட்ஜெட்டிலே. 1981 பட்ஜெட்டிலே அல்லது 1982-லே கொண்டு வந்திருக்கின்ற இந்த பட்ஜெட்டிலேயாவது இதுபற்றிய எந்தக் குறிப்பாவது இருக்கிறதா என்றால் இல்லை. இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதிலே என்ன கேடு? ஒருவேளை டாக்டர் கலைஞர் அவர்கள் போட்ட திட்டத்தைத் தொடக்கூடாது என்று போட்டிருக்கிறார்களா அல்லது யாராவது பெரியவர்கள் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதால் தங்களுக்குப் பாதிப்பு வரும் என்று சொன்னதால், இந்தத் திட்டம் கவனிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறதா என்று

கேட்கிறேன். ஒரு பெரிய ஆள் இதனால் பாதிக்கப்படுகிறார், அதனால் அவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலே, அவருடைய செல்வாக்கிலே இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறீர்கள் என்று சொல்வதை விட டாக்டர் கலைஞர் அவர்கள் மீது உள்ள வெறுப்பின் காரணமாகத்தான் இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறீர்கள் என்று சொன்னால், அது "வெல்ஸர் சார்ஜ்' அந்த நிலையிலேதான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது என்று நான் சுட்டிக்காட்டுகிறேன். இந்த அவையிலே நானே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து திருநெல்வேலி மாவட்டத்தின் தென்பகுதியிலே தண்ணீர் இல்லாமல் வாடிவிட்ட பயிர் எவ்வளவு என்று கேட்டதற்கு, 20 ஆயிரம் ஏக்கரில் பயிர் பாழடைந்துவிட்ட நிலை இருக்கிறது என்று நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் நிறைவேறினால், இதனால் 45 குளங்களுக்குத் தண்ணீர் கிடைத்து, அதன்மூலம் 6,790 ஏக்கர் நிலங்கள் தண்ணீர் வசதி பெற்று நல்ல விவசாயம் ஏற்படும் நிலை ஏற்படும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருந்தால், அந்த அழிவு ஏற்பட்டிருக்குமா ? நாங்கள் போட்ட திட்டம் என்று சொன்னால், திட்டமே பாவமானதா ? ஆகவே, இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இதைப்போல்தான் வீராணம் திட்டமும். இந்த அவையிலே சில நாட்களுக்கு முன்னால் விவாதம் நடந்தபோது, மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்கள் ஏதோ சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எழுந்து தைரியம் இருந்தால் கேஸ் போடுங்கள் என்று சொன்னார்கள். நான் இந்த கேஸ் சமாச்சாரத்திற்கு வரவில்லை. நான் கேட்கிறேன், வீராணம் திட்டத்தைத் தவிர சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர வேறு எந்தவொரு திட்டமும் கிடையாது. 120 மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கும் வீராணத்திலேயிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வந்து, அதன் மூலமாக சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தை, நாங்கள் கொண்டு வந்த அந்தத் திட்டத்தை, இந்த அரசு தடுத்து நிறுத்தியிருக்கிறது. ஒருவேளை அந்தத் திட்டம் 'ஃபீசிபிள்' ஆக இல்லை என்ற சந்தேகம் இந்த அரசுக்கு வந்திருக்கலாம். ஆளுநர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே அந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்து, அதற்கென்று ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியைப் போட்டு, மூன்று பேர் அடங்கிய ஒரு நிபுணர் குழுவை அமைத்து இந்தத் திட்டம் 'ஃபீசிபிளா' இல்லையா என்று கேட்டார்கள். அந்த எக்ஸ்பர்ட் கமிட்டி இந்தத் திட்டம் 'ஃபீசிபிளான' திட்டம் தான் என்று அறிக்கை கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையை இந்த அவையிலே வைக்க முடியுமா ? அந்த அறிக்கை, வீராணம் திட்டத்தின் மூலம்தான் சென்னை நகருக்குத் குடி தண்ணீர் கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறது.





அப்படிப்பட்ட அந்தத் திட்டத்தை விட்டுவிட்டு இப்போது கட்டளைக் கால்வாய், அதற்குப் பின் இப்போது கிருஷ்ணா நதித் திட்டம் என்றெல்லாம் இந்த அரசு போயிருக்கிறது. இன்னும் இந்த அரசு வேறு எந்த நதிக்குப் போக இருக்கிறதோ எனக்குத் தெரியவில்லை. இப்போது கங்கைக்குப் போய் தண்ணீர் எடுக்க வேண்டும் என்று சொன்னால், முதல் ஏற்றத்திற்கே இந்தியாவிலே உள்ள அத்தனை மின்சார நிலையங்களிலேயும் தயாரிக்கப்படும் மின்சாரமும் அதற்குத் தேவைப்படும் என்று சொன்னவுடனேயே அதையும் நாங்கள் விட்டுவிட்டோம் என்று சொன்னார்கள். அதைப் பொறுத்தவரையிலாவது, அப்படிச் சொன்னதற்காக நான் பாராட்டுகிறேன். இந்தச் சூழ்நிலையிலே நான் இந்த அரசை ஒன்று கேட்கிறேன், சென்னை மாநகரிலே வளர்ந்து வரும் இந்த ஜனத்தொகைக்கு கோடைக் காலத்திலே தட்டுப்பாடில்லாமல் தண்ணீர் கொடுக்க இந்த அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது ? நாங்கள் கொண்டுவந்த வீராணம் திட்டத்திலே உள்ள டெக்னிக்கல் நோஹௌலே என்ன தவறு இருக்கிறது ? பெரிய பெரிய குழாய்களைப் போட்டு வீராணத்திலிருந்து 40 மில்லியன் காலன் தண்ணீர் தினசரி கொண்டு வரும் திட்டம் அந்தத் திட்டம். சென்னைக்கு 50 முதல் 60 மில்லியன் தண்ணீர் தினமும் தேவைப்படுகிறது. இப்படித் தேவைப்படும் தண்ணீரிலே முக்கால் பங்கு தண்ணீர் அங்கேயிருந்து வரும். இப்போது இருக்கும் கான்கிரீட், இரும்பு பைப் அல்லது பி.வி.சி. பைப் மூலமாக 40 மில்லியன் காலன் தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்றால், அவ்வளவு தண்ணீரையும் கொண்டு வரும் அளவுக்கு அந்த பைப்கள் சக்தியுடையதாக இல்லை என்பதால், 'வேக்குவம் பைப் ஸ்கீம்' போடப்பட்டு, அதற்கு ஒரு கம்பெனி டெண்டர் எடுத்தார்கள். ஏதென்ஸ் கம்பெனி ஒன்றின் கொலாபரேஷனோடு செய்கிறேன் என்று ஒப்பந்தத்திலே கையெழுத்து போட்டார்கள். மத்திய அரசுதான் 'பாரின் கொலாபரேஷன்' தேவைப்படும் திட்டங்களுக்கு ஒப்புதல் கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய டெக்னிக்கல் நோஹௌ எல்லாம் இந்தியாவிலே இருக்கிறதா என்று பார்த்துத்தான் கொடுப்பார்கள். இல்லையென்றால் கொடுக்கமாட்டார்கள். மேலும் இந்த ஸ்கீம் பற்றிய ஸ்டெபிலிட்டி எல்லாம் பார்த்துத்தான் கொடுப்பார்கள். அப்படித்தான் கொடுத்தார்கள். ஆனால் இப்போது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் அங்கே கிடக்கும் பைப்கள் எல்லாம் அழுதுகொண்டிருக்கின்றன என்று சொன்னால் அந்த பைப்களை அழவைத்த பெருமை யாருடையது? நான் சொல்லிக்கொள்கிறேன், அந்த பைப் அழவில்லை, அந்தத் திட்டம் அழவில்லை, எந்த ஆட்சி இருந்தாலும்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 மார்ச் 11

சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வேண்டும் என்று சொன்னால், இந்த ஒரு திட்டத்தால்தான் முடியுமே தவிர, வேறு எந்தத் திட்டத்தாலும் முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் மீது வெறுப்பு இருக்கலாம். ஆனால் நாங்கள் தந்த நல்ல திட்டத்தை வெறுக்க வேண்டாம் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஊழல் நடந்துவிட்டது, ஊழல் நடந்துவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். ஊழல் நடந்திருந்தால், வழக்கு போடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போதுகூட சொன்னார்கள். "எல்லா ரெக்கார்ட்களும் உங்களிடம் தான் இருக்கின்றன; தைரியம் இருந்தால் கேஸ் போடுங்கள்" என்று சொன்னார்கள். வழக்கு போடப்பட்டது திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபோது. இப்போது இதுபற்றி விசாரணை பண்ணிய பிறகு, 'ஒன்றுமில்லை' என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின் பிரதமராக வந்த திரு. மொரார்ஜி அவர்கள் இது 'பேஃப்ரிகேட்டட் கேஸ்' என்று சொன்னார்கள். அதற்குப் பின்னர் பிரதமராக வந்த திரு. சரண் சிங் என்பவர், அவருடைய மந்திரி சபையில் இந்த அரசு கூட பங்கு கொண்டிருந்தது, அப்படிப்பட்ட அவரே கூட இது 'பேஃப்ரிகேட்டட் கேஸ்' என்று சொன்னார்கள். ஆகவே, மத்திய அரசியலில் அன்றைக்கு ஆளும் கட்சியாகவும், எதிர்க் கட்சியாகவும் இருந்தவர்களும், இன்றைக்கு ஆளும் கட்சியாகவும், எதிர் கட்சியாகவும் இருப்பவர்களும் எல்லோரும் முழுவதாக இதை 'பேஃப்ரிகேட்டட் கேஸ்' என்று சொன்னதற்குப் பிறகும், இதிலே ஊழல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கும் நிலை இருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** 'பேஃப்ரிகேட்டட் கேஸ்' என்று எங்கே சொல்லியிருக்கிறார்கள்? கேஸ் போட்டதே மத்திய அரசு, 'பேஃப்ரிகேட்டட் கேஸ்' என்று சொன்னால், அதற்கு என்ன பொருள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அறிவார்கள். எனக்குத் தெரிந்த வரையில், சாட்சிகள் சொன்னவர்கள் இப்போது அவ்வளவு உறுதியாக இல்லை என்ற காரணத்தினால்தான் நீங்கள் தப்பித்துக்கொண்டீர்கள் என்பது நாட்டுக்குத் தெரிந்த உண்மை. எனவே 'பேஃப்ரிகேட்டட் கேஸ்' என்பதல்ல. அப்படி மத்திய அரசிலே இருப்பவர்கள் யாரும் சொல்லவில்லை. கேஸ் போட்டவர்களே மத்திய அரசிலே இருப்பவர்கள்தான்.



1982 மார்ச் 11]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சாட்சி சொன்னவர்கள் இப்போது பின் வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். அதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னது. அவசரச் சட்டம் அமுலில் இருந்தபோது அதிகாரிகளால் சாட்சிகள் மிரட்டப்பட்டு, துன்புறுத்தப்பட்டு வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு போடப்பட்ட வழக்கு இது. அதை இன்றையதினம் சாட்சிகள் அப்படித் தான் போடப்பட்டது என்று நிரூபித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** விசாரணை நடத்தியதே மத்திய அரசுதான். விசாரணை நடத்திய பிறகு 1 ஆண்டு, 2 ஆண்டு, 3 ஆண்டு காலம் கழித்து சாட்சிகள் மாறிவிடுகிறார்கள் என்று தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'பேஃப்ரிகேட்டட் கேஸ்' என்று அவர்கள் சொல்லவில்லை. அப்படிச் சொன்னதன் அர்த்தம் நம் இருவருக்குமே நன்றாகத் தெரியும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அந்த வார்த்தையைப்பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கலாமே தவிர இந்த வழக்கு போடப்பட்டபோது சாட்சிகள் மிரட்டப்பட்டார்கள், துன்புறுத்தப் பட்டார்கள், இப்போது ஜனநாயக அடிப்படையிலே மீண்டும் அவர்களிடத்திலே அந்த வழக்குபற்றி விசாரித்தபோது 'அப்போது துன்புறுத்தப்பட்ட அந்தச் சூழ்நிலையிலே சொன்னோம். எங்களுக்கும் அந்த வழக்குக்கும் சம்பந்தம் இல்லை, இந்த வழக்கில் இப்படித்தான் சாட்சி சொல்ல வேண்டும் என்று துன்புறுத்தப்பட்டதால், கொடுமைப்படுத்தப்பட்டதால்தான் அப்படிச் சொன்னோம்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

அதிலும் தெளிவாக, திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று அன்றையதினம் ஆட்சியிலிருந்த, அதிகாரத்தில் இருந்த அதிகாரிகளில் யாரோ சிலர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகத்தான் அந்த வழக்குகள் போடப்பட்டன என்பதும், பிறகு இப்போது சாட்சியங்கள் தங்களின் உண்மை நிலையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொன்னதன் காரணமாக, மத்திய அரசு அந்த வழக்கைத் திரும்பப் பெற்றது என்பதும்தான் நாடறிந்த உண்மையாகும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இதில் விசாரணை நடத்தியதும், வழக்கைத் தொடர்ந்ததும் மத்திய அரசுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் சாட்சிகள் மிரட்டப்பட்டார்கள், அதன் காரணமாகப் பயந்துகொண்டு சொல்லிவிட்டார்கள், ஆகவே இப்போது அது தவறு'

என்று தெரிகிறது என்ற காரணத்தைச் சொல்லி மத்திய அரசு அந்த வழக்கைப் பின்வாங்கவில்லை, வாபஸ் வாங்கவில்லை. அந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினரின் கட்சியைச் சார்ந்தவர்கள் மத்திய அரசிடம் மனு கொடுத்தது உண்மை. வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டது உண்மை. இதை நேரடியாகவே கேட்டார்கள். திரை மறைவில் எப்படி எப்படியோ எல்லாம் முறையீடு செய்தார்கள். அதெல்லாம் நாட்டிற்கு ஓரளவிற்கு நன்றாகத் தெரிந்துதான் இருக்கிறது. ஏதோ கருணைகொண்டு மத்திய அரசு அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்ட காரணத்தாலேயே, இவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று தயவுசெய்து கருதிவிட வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஒரு பொறுப்புள்ள அமைச்சர் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், எந்தவித உண்மையும் இல்லாத ஒரு செய்தியை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் யாரும் மத்திய அரசிடம் இந்த வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று கோரி எப்போதும் எழுதிக் கொடுக்கவில்லை என்பதை நான் திட்டவட்டமாக இங்கே அறிவித்துக் கொள்கிறேன். அப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மையானால், அதை இந்த அவையில் கொண்டு வந்து அவர் காட்ட வேண்டும் அல்லது அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசும் இரண்டு தரப்பாரும் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேச மறுக்கிறார்கள். அதாவது இரண்டு பேருமே உண்மையைப் பேச மறுக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அன்றையதினம் சர்வாதிகாரத்தை எதிர்த்த போது, அது அந்த அம்மாவுக்குப் பிடிக்கவில்லை, அதன் காரணமாக அவர்கள் மீது வழக்கைப் போட்டார்கள். இன்றைக்கு அரசியல் ரீதியாக அந்தக் கட்சியைச் சரிக்கட்டி விட்டார் அந்த அம்மையார். அதன் காரணமாக அந்த வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று வாங்கிவிட்டார். இதுதான் உண்மை. இது நாட்டு மக்களுக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது. ஆனால் இங்கே பேசுகிற இவர்கள் மட்டும் இதைப்பற்றிக் குறிப்பிட மறுக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள் அவருக்கே உரிய முறையில் பிரச்சினையைக் குழப்பிவிட வேண்டும் என்று நினைக்கிறார்.



மத்திய அரசு அந்த வழக்கைத் திரும்பப் பெற்றது தவறானது என்றோ, அல்லது நியாயமற்றது என்றோ மாநில அரசு கருதுமானால், மாநில அரசே அந்த வழக்கைத் தொடருவதில் எந்தத் தடையுமில்லை. இதை மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. இது அவருக்குத் தெரியாது என்பதல்ல. அவருக்குத் தெரியும், மிகுந்த அனுபவம் பெற்றவர். ஆனாலும் எப்போதும் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க வேண்டும் என்பதாலேயே அவர் தமது வாதத்தை இங்கே வைக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** விராணம் தண்ணீர் சென்னைக்கு வந்ததோ இல்லையோ, பலருடைய தொண்டைத் தண்ணீர் இங்கே வற்றிவிட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதத்தை வேறு ஒரு திசைக்கு இழுத்துச் செல்கிறார்கள். நான் கேட்டதெல்லாம் இந்தத் திட்டத்தைத் தவிர, அதாவது விராணம் திட்டத்தைத் தவிர சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான வேறு திட்டம் ஏதாவது இந்த அரசிடம் இருக்கிறதா என்பதுதான். அதற்கு அவர் நேராகப் பதில் சொல்லவில்லை. அது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த யாரும் அந்த வழக்கை வாபஸ் வாங்கக் கோரவில்லை. அது வழக்காகவே வரவில்லை. சர்க்காரியா கமிஷனுக்கு அது 'ரெபர்' ஆனது. சர்க்காரியா கமிஷனிலேயே அதை "இல்லை" என்று சொல்லிவிட்டார்கள். ஆக அதில் வழக்கே போடப்படவில்லை. வழக்குப் போட்டதெல்லாம் இப்போது ஆளும் கட்சியில் இருக்கிற ஆட்களைப்பற்றிதான், அதாவது கோதுமையைப்பற்றியதுதான். இதற்கு வழக்கே போடவில்லை. அவர்கள்மீது அமைச்சருக்கிருக்கும் கோபத்தில் இங்கே இப்படிச் சொல்லி இழுத்துப் பார்க்கிறார் போல் இருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், கமிஷனே எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டது. எனவே அதை நான் விட்டுவிடுகிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீராணத்தைப்பற்றிச் சொல்கிறபோது அதைவிட சிக்கனமான செலவில் அதிகத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு இந்த அரசிடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்பதையும் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இப்போது சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவதைப் பொறுத்த வரையில், தற்போது கிருஷ்ணா நதித் திட்டத்தைத்தான் முடிவு செய்திருக்கிறோம். அதன் மூலம் 15 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும். வீராணத்தின் மூலம் 2½ டி.எம்.சி. தண்ணீர்தான்

கிடைக்கும். வீராணத்தைப்பற்றி நான் ஏற்கெனவே அவையில் பலமுறை சொல்லியிருப்பதால், மீண்டும் சொல்லத் தேவையில்லை என்று சொல்லிக் கொண்டு, இதைப்பற்றி முன்பு நடந்ததுபோல் ஒரு ½ மணி நேரம் விவாதம் வைத்துக்கொள்வதென்றால்கூட, நல்லதாக இருக்கும், அப்போது ஆலந்தூர், பாலவாக்கம் ஆகிய திட்டங்களைப் பற்றியும் கூட விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இது நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் இதில் இரண்டு பேருமே எல்லாக் கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. வினா நேரத்தில் அதிகமான அளவுக்கு விவரங்களை எடுத்துச் சொல்லவோ விவரங்களைக் கோரிப் பெறவோ முடியாத நிலையில்தான் நாம் 1/2 மணி நேரம் விவாதம் தேவை என்கிறோம். கிருஷ்ணா நதித் திட்டத்தின் மூலம் 15 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும் என்கிறார்கள். இதை அமுல்படுத்தும் விஷயம் எந்த அளவில் இருக்கிறது ? இதற்கு எவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது ? எத்தனை மைல் தொலைவிலிருந்து அது வரும் ? இதுபோன்ற விவரங்களையெல்லாம் இப்போது இல்லை என்றாலும், 19 ஆம் தேதிக்குப் பிறகு அவை கூடுகிறபோது ஒரு வெள்ளை அறிக்கையாக வைத்தால், நலமாக இருக்கும். குறிப்பாக கிருஷ்ணா நதி நீர் திட்டத்தைப்பற்றிய வெள்ளை அறிக்கையை இந்த அவையில் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இதைப்பற்றி இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் நான் ஒரு வேண்டுகோளையும் வைத்தேன். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. ஆலந்தூர், பல்லாவரம், பம்மல் ஆகிய இடங்களுக்கான குடிநீர்த் திட்டத்தைப்பற்றியும் ஒரு 1/2 மணி நேர விவாதத்தை நடத்து வதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி இது குறித்து மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இதற்காக ஒரு 1/2மணி நேரம் விவாதம் என்றுகூட அல்ல. இதைப்பற்றி விவாதிக்க என்று அவைக் குழு ஒன்றையே நியமிக்க வேண்டும் என்று நான் அவையில் பேசுகிறபோது பலமுறை கேட்டிருக்கிறேன். வீராணம் திட்டம்பற்றி பெரிய குற்றச்சாட்டுகளைச் சொன்னபோது, நான் இதற்காக அவைக் குழு ஒன்றையே நியமிக்க வேண்டும் என்று கேட்டிருக் கிறேன். அவர்களிடமும் ரிக்கார்டுகள் இருக்கின்றன. எங்களிடமும் ரிக்கார்டுகள் இருக்கின்றன. எனவே அவைக்குழு ஒன்று இவைகளையெல்லாம்



நன்கு தீர விசாரித்து ஆய்ந்து ஒரு அறிக்கை கொடுத்தால், அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்தேகூட அவையில் ஒரு விவாதத்தை மேற்கொள்ளலாம் என்று கூறியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய கோரிக்கையைப் புதுப்பிப்பதைப்போல் நானும் என்னுடைய கோரிக்கையைப் புதுப்பிக்க விரும்புகிறேன். வீராணம் திட்டம்பற்றி ஆராய ஒரு அவைக் குழுவை அமைத்து அதன் அறிக்கையின்மீது நாங்கள் விவாதிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நாங்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்பதற்கு எங்களிடம் ஆதாரம் இருக்கிறது. நாங்கள் ஆதாரம் இல்லாமல் பேசிக்கொண்டிருக்கவில்லை. அதைப் போலவே எதிர்த் தரப்பிலும் அவர்களும் ரிக்கார்டுகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் குற்றத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவின் பிரதமர் அவர்களே "ஸ்குவாண்டர்டு" என்று பேசியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, No one knowsi where the money has gone என்றும் குறிப்பிட்டிருக்கிறார். எனவே இப்படிப்பட்ட ரிக்கார்டுகள் எல்லாம் எங்களிடமும் இருக்கின்றன. அந்த அடிப்படையில் ஒரு அரைமணி நேர விவாதத்திற்கு இதை எடுத்துக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அரைமணி அல்ல, ஒரு மணி நேர விவாதம் என்றால்கூட நாங்கள் இதைப்பற்றி விவாதிப்பதற்குத் தயாகராக இருக்கிறோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்தியாவின் பிரதமர் அவர்கள் எந்தெந்த நேரத்தில் யார் யாரைப்பற்றி என்னென்ன சொன்னார்கள் என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். டாக்டர் கலைஞர் அவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, அவர் நம்பிக்கைக்கு உரியவர் என்றும் இன்றைய முதலமைச்சரான புரட்சித் தலைவரைப்பற்றிச் சொல்லும்போது, அவர் நம்பிக்கைக்கு உரியவர் அல்ல என்றும் பொதுவாகச் சொல்லியிருக் கிறார்கள். இதையெல்லாம் இங்கே குறிப்பிடுவது என்றால் வேறு விஷயமாகிவிடும் . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பிரதமர் இப்படிச் சொன்னார் என்றால், அவர் "வேகிலேட்" பண்ணுகிறார் என்று அர்த்தமா . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** பிரதமர் அவர்கள் அப்படித்தான் சொல்லி யிருக்கிறார். கலைஞர் நம்பிக்கைக்கு உரியவர். திரு. எம். ஜி. ஆர் அவர்கள் நம்பிக்கைக்கு உரியவர் அல்ல என்று சொல்லியிருக்கிறார். உங்களைச்

சொன்னால் கோபம் வந்துவிடுவதும் மற்றவர்களைச் சொன்னால் மகிழ்ச்சியாக இருப்பதும் எந்த வகையிலும் சரியல்ல. நான் இங்கே சொல்ல விரும்புவது, இங்கே ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. வீராணம் திட்டத்தைப் பொறுத்த வரை, நாங்கள் விவாதிக்கத் தயாராக இருக்கிறோம். ஒரு மணி நேரம் அல்ல ஒரு நாள் ஒதுக்கினாலும் நாங்கள் தயாராக இருக்கிறோம், அதிலே நாங்கள் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்று விவாதிக்கத் தயாராக இருக்கிறோம். அதை விட்டுவிட்டு இடையில் இன்னொன்றைச் சொல்லி ஆலந்தூர் குடிநீர் திட்டம் பற்றியும் நாம் விவாதிக்கலாம் என்றால், ஆலந்தூர் தமிழ் நாட்டின் ஒரு பகுதி. இப்படியே பேசிக் கொண்டிருப்பதென்றால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இன்றுவரை நிறைவேற்றப் பட்ட பல்வேறு திட்டங்களில் எந்த அளவுக்கு ஊழல்கள் நடைபெற்றிருக் கின்றன என்று இந்த அவையில் விவாதிக்க நாங்களும் தயாராக இருக்கிறோம். இந்த ஆட்சியில் நடைபெற்ற பல்வேறு ஊழல்களையும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் சொன்னது, வீராணத் தைப் போல் மிகப் பெரிய அளவில் பணம் விரயமாக்கப்பட்ட திட்டம் ஆலந்தூர் குடிநீர்த் திட்டம். அது ஆலந்தூர். பல்லாவரம், பம்மல், சிட்ல பாக்கம், அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் என்பதால் அதில் நடைபெற்ற விரயம் பற்றியும் விவாதிக்கலாம் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க அரசும் ஆயத்தமாக இருக்கிறது, எதிர்க் கட்சி உறுப்பினர்களும் ஆயத்தமாக இருக்கிறார்கள். அதற்கான வழிமுறைகளைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி, இப்போது நிதிநிலை அறிக்கைமீது விவாதத்திற்கு வருவோம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, நான் மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களின் விவாதத் திலிருந்து மாறி, நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்திற்கு வருகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் சாலைகளைப் பழுது பார்ப்பதற்கு கடந்த 3 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய புள்ளிவிவரங்களைத் தந்திருக் கிறார்கள். 1980-81 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 21 கோடி, 1981-82 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி 28.5 கோடி. அதைப்போலவே இந்த



ஆண்டில், அதாவது 1982-83 ஆம் ஆண்டில், ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி 43 கோடி ரூபாயாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் விளக்கமாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயமாகும். சாலைகளின் பராமரிப்புக்கு என்று நாம் நிதி ஒதுக்கு கிறோம். தமிழ்நாட்டின் நிலைமையே இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங் களில் உள்ள சாலைகளின் நிலைமையைவிட உயர்வானதாகும். நெடுஞ் சாலைகளானாலும் சரி, நெடுஞ்சாலைகள் அல்லாத மற்ற சாலைகளானாலும் சரி, அவை அனைத்தும் நல்ல முறையில் செம்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன, வேறு எந்த மாநிலத்தையும் விட தமிழகத்தில் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன என்ற நிலைமைதான் இதுவரை இருந்தது. ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் உள்ள சாலைகள் எந்த அளவுக்குச் சீர் குலைந்து பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன என்பதை நான் அதிகமாக

(முற்பகல் 10-40)

விளக்கத் தேவையில்லை. ஒன்றிரண்டு சாலைகளைச் சுட்டிக்காட்ட முடியும். தமிழ்நாடு முழுவதும் சாலைகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்பதை மாத்திரம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சமூக நலத் திட்டங்களை இந்த அரசு அறிவித்துக் கொண்டே இருக்கிறது. அந்த அறிவிப்புக்காக நன்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். உண்மையில் மனதிலே இருப்பதால்தான் வெளியே வருகின்றன என்று பொதுவாகச் சொல்லுவார்கள். மனதிலே நல்ல எண்ணம் இருப்ப தற்காக நான் பாராட்டுகிறேன். அப்படி அறிவித்த பிறகு, அந்தத் திட்டங் களை அமுல்படுத்துகிறார்களா, செயல்படுத்துகிறார்களா என்று பார்க்கும் போது, எப்படி ஒவ்வொரு திட்டமும் அனாதைக் குழந்தைகள் போல காணப் படுகின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் சொல்ல விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதைவிட ஒரு சிறந்த சமூக நலத் திட்டம் இருக்க முடியாது. சமுதாயத்தில் துர்பாக்கிய நிலை காரணமாக தொழுநோய்க்கு ஆளாக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்காக மறுவாழ்வு இல்லங்கள் 1972-ல் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஏற்படுத்தப்பட்டன. அந்தத் தொழுநோய் இல்லங்கள் எல்லாம் பராமரிக்கப் படாமல் கைவிடுகிற நிலையில் மூடப்படுகிற நிலையில் நாடு முழுவதும் இருந்து கொண்டிருப்பதை இந்த அரசு அறிந்துகொள்ள வேண்டும், அறிந்திருக்கும். என்ன காரணத்தாலோ விட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. சமூகத்தின்

மகப் பெரும் துர்பாக்கியசாலிகளுக்கு உதவ நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் பாராமுகமாக விட்டுக்கொண்டு வருகிறார்கள். அவர்கள், அரசு மருத்துவமனையில் ஒரு நோயாளிக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கொடுக்க அரசு மறுத்து வருகிறது என்பதை மாத்திரம் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அரசு பல திட்டங்களை அறிவித்திருக்கின்றது. இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கின்ற பெரிய திட்டம், பணத்தில் ரொம்பப் பெரிய திட்டம் 100 கோடி ரூபாய் திட்டம். நம்முடைய நிதிநிலையில் 16 சதவிகிதத்தை ஒதுக்கியிருக்கக் கூடிய பெரிய திட்டம். இரண்டு வயது முதல் பத்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஒரு வேளைகூட உணவு இல்லாத குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவு கொடுப்பது என்ற அளவில் வந்திருக்கிறது அந்தத் திட்டம். அதைக் குறை சொல்ல முடியாது. குறை சொல்லுகிறோம் என்று எண்ணக்கூடாது. உண்மையிலேயே இப்படிப்பட்ட திட்டத்திற்கான எண்ணம் வந்ததற்காக, பாராட்டுகிறோம். ஆனால் இதை எப்படி அமுல் நடத்தப் போகிறார்கள் என்று கேட்கிறேன். நாம் ஒரு திட்டத்தைச் சொல்லி, அந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவை மதிப்பீடு செய்து, அந்தத் திட்டத்தை அமுல் படுத்துகிற நிர்வாக இயந்திர முறையைச் சொல்லி அதை உடனடியாக அமுல் நடத்த வேண்டும். இப்போது 1982 ஆம் ஆண்டில் நாம் இருக்கிறோம். இன்னும் சில நாட்களில் முடிந்தால், 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்ட பணத்தை நாம் செலவுசெய்ய வேண்டும். ஆனால் எப்படி செலவுசெய்ய வேண்டும் என்று திட்டம் வைத்திருக்கிறார்களா? எந்த முறையில் அமுல்படுத்தப் போகிறார்கள்? இந்தக் கேள்வியை நாங்கள் மட்டும் கேட்கவில்லை, இந்த வரிசையில் உள்ளவர்கள் மட்டும் கேட்கவில்லை, உங்கள் இடையிலேயே சந்தேகம் வந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். பல நேரங்களில் பலவிதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தத் திட்டத்தைப்பற்றியெல்லாம் சொல்லுவதன் மூலம் இந்தத் திட்டத்திற்கு முழு வடிவம் கொடுத்து அமுல்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் சொல்லுகிறோம். குறை கூறும் எண்ணத்தோடு சொல்லவில்லை என்பதைச் சொல்லுகிறேன்.

தமிழகத்தின் ஜனத்தொகை 4.80 கோடி. இதிலே இரண்டு வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகள் எத்தனை என்று கணக்கெடுத்து அறிவித்திருக்க வேண்டும். அறிவிக்கவில்லை. அப்படி அறிவிக்கவில்லையே



என்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்பத்தூரில் அடிக்கல் நாட்டு விழாவில், "சுமார் 50 முதல் 60 இலட்சம் குழந்தைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றனர். அவர்களுக்குப் பயன்படும் இந்தத் திட்டம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஏன், எப்படி என்பதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள் அதற்குள் நான வரவில்லை. 4.80 கோடி மக்கள் உள்ள தமிழ் நாட்டில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு உயர்ந்தபட்சம் 60 இலட்சம் குழந்தைகள் என்று வைத்துக்கொண்டாலும், அதில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் மொத்தத்தில் எட்டு சதவீதத்திற்கு மேல் இருக்கமாட்டார்கள். அதாவது 35 இலட்சம் குழந்தைகளுக்கு ஒரு நேர உணவு கொடுக்கப் போகிறோம், அதுவும் தினந்தோறும் கொடுக்கப் போகிறோம். ஒரு நேரத்திற்கு 30 பைசா கொடுக்கப் போகிறோம். இப்போது பத்து வயதுக் குழந்தைகளுக்கு 15 பைசா கொடுக்கிறோம். பத்து பைசாவை அரசாங்கமும் 5 பைசாவை பஞ்சாயத்தும் கொடுக்கின்றன. அதைவிட சத்துணவு என்று இப்போது சொல்லுகிறோம். ஆகவே முதலமைச்சரின் கருணையின் காரணமாக இரண்டு மடங்காக 30 பைசா கொடுக்கப் போகிறோம். ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 30 பைசா என்று கணக்கிட்டால், ஒரு வருடத்திற்கு ஒரு குழந்தைக்கு 100 ரூபாய் செலவாகும். அப்படியானால் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள இரண்டு வயது முதல் 10 வயது வரை உள்ள 35 இலட்சம் குழந்தைகளுக்கு உணவு அளிக்க 35 கோடி ரூபாய்தான் செலவாகும். இதற்கு 100 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். 100 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய வரியை 35 கோடி ரூபாய் என்று சொல்லுகிறார்கள். இதை என்னவென்று சொல்லுவது? தமிழில் சொன்னால் கடுமையாக இருக்கும்.

திரு. ப. மாணிக்கம்: ஆங்கிலத்தில் இருந்தால் சொல்லலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: ஆங்கிலத்திலே சொல்லலாம். இது தேவையில்லை. ஆனால் இப்படியொரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமா? அதற்குப் பதிலாக 35 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கலாமே. இரண்டு வயதுக் குழந்தைகளுக்கு உணவு கொடுக்கப் போகிறார்கள். இதற்கு முன்னால் ஏழை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 வீதம் ஏழாம் மாதத்திலிருந்து மூன்று மாதங்களுக்கும் மொத்தம் 150 ரூபாய் கொடுக்கும் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டம் இப்போது கொட்டாம்பட்டியோடு நிற்கிறது. மதுரைக்கு வருகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தையாவது மாநிலம் முழுவதும் விரிவடையச் செய்து குழந்தை பிறக்க மூன்று மாதங்களுக்கு முன்பே 150 ரூபாய் கொடுத்து விட்டோம் என்று சொல்லலாம். பிறந்த அந்தக் குழந்தை இரண்டு வயசு

வரை உயிரோடு இருந்தால்தானே அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தின் கீழ் சாப்பாடு கொடுக்க. அதற்கிடையில் அந்தக் குழந்தைகளின் நிலைமை என்னவாகும்? ஆகவே கருவுற்ற தாய்மார்களுக்கு ஏழாம் மாதத்திலிருந்து உதவித் தொகை கொடுக்கும் திட்டத்தையும் இந்தத் திட்டத்தோடு இணைத்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள, ஒரு நேரம் உணவு கூட இல்லாத 35 இலட்சம் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் ஒரு நேரம் உணவு அளிக்கக் கூடிய வகையில் மாநிலம் முழுவதும் விஸ்தரிக்க வேண்டும். குழந்தை பெற்றவுடனே இந்த உணவு அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். குழந்தை பிறப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்பு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த தாய், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் தாய் மருத்துவமனையில் வந்து பதிவு செய்துகொண்டு மருத்துவப் பரிசோதனை செய்துகொண்டால், மாதம் அவருக்கு 50 ரூபாய் வீதம் மூன்று மாதங்களுக்கும், குழந்தை பெற்றவுடன் இறக்காமல் நல்ல முறையில் இருந்தால் அன்றிலிருந்து அந்தத் தாய்க்கு வருஷத்திற்கு 100 ரூபாய் வீதம் மூன்று வருஷத்திற்கும் கையில் கொடுங்கள். மூன்று வயதான பிறகு அந்தக் குழந்தையை பால்வாடிக்குக் கொண்டு வாருங்கள். ஐந்து வயதுக்குப் பிறகு பள்ளிக்குக் கொண்டு வாருங்கள். அப்படிக் கொண்டு வந்து அங்கே உணவு கொடுங்கள். இப்படிச் சொல்லும்போது, பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறது என்று கூட்டத்திலே சொன்னாலும் சொல்லுவார்கள். இந்தத் திட்டம் தோல்வி அடைய வேண்டுமானால், நாங்கள் வெறுமனே வரவேற்று அமைந்திருக்கலாம். அப்போது நிச்சயமாக இந்தத் திட்டம் தோல்வி அடையும் என்பது எங்களுக்குத் தெரியும். இது இன்னுமொரு கொட்டாம்பட்டியாகும். அப்படி ஆகக்கூடாது என்று நினைத்துத்தான் ஏற்கெனவே நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற, ஏழை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏழாவது மாதம் முதல் 50 ரூபாய் கொடுக்கும் திட்டத்தையும் இந்தத் திட்டத்தையும் இரண்டையும் சேர்த்து 100 கோடி ரூபாய்க்குச் செலவு செய்யுங்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சொல்லுகிறேன். இந்த ஒரு திட்டத்திற்காக மட்டும் 35 கோடி ரூபாய்க்கு மேல் செலவு ஆகாது. உண்மையாகவே இந்த இரண்டு திட்டங்களையும் ஒன்றாகச் சேர்த்து, இருதய சுத்தியோடு அமல்படுத்துவார்களேயானால், அதை நாங்கள் வரவேற்போம். அப்படிச் செய்ய மறுத்தால், இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக அறிவித்த திட்டம் என்று நாங்கள் சொல்லும் கடினமான நிலைக்கு வந்தால், எங்களை மன்னிக்க வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு இந்த அறிவிப்புக்குத்தான் தகுதியுண்டு என்று நீங்கள் நினைத்திருந்தால், செய்யுங்கள்.





அடுத்து, பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். பதினேழாயிரம் கிராமங்களில் நியாய விலைக் கடைகள் என்னவாயிற்று என்று தெரியவில்லை. பிறகு வீடுதோறும் காய்கறிகள் கொண்டு போய்க் கொடுப்பது என்று ஒரு

(முற்பகல் 10-50)

திட்டம். இன்றைக்கு தாலிக்குத் தங்கம் தரும் திட்டம். இப்போது அது ரூபாயாக வந்திருக்கிறது. இந்த ரூபாய் எத்தனை பேர்களுக்கு எப்படிப் போகிறது என்பதெல்லாம் எங்களுக்குத் தெரிய வேண்டும்.

இன்னும் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். ஒரு கிலோ அரிசி வழங்குகின்ற திட்டம். ஏழைகளுக்கு ஒரு திட்டம் என்று அறிவித்தாயிற்று. 5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாமாகத் தருவோம் என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்திலே இப்போது எத்தனை பேர்களுக்கு ஒரு கிலோ அரிசி தருகிறார்கள்? அது யாருக்குக் கொடுக்கிறார்கள்? உதவித் தொகையாக வாங்குகின்றவர்களுக்கு, ஊனம் உற்றவர்களுக்கு, வயதானவர்களுக்கு அனைவருக்கும் ஒரு கிலோ அரிசி என்று சொல்கிறார்கள். ஒரு கிலோ அரிசி என்று கொடுக்கும்போது, வாரம் ரூ. 8 அளவுக்கு என்று வரும். அதை மாற்றி, அத்துடன் இதையும் சேர்த்து அவர்களுக்கு ரூ. 10 என்று கொடுத்துவிடுங்கள். இந்தத் திட்டம் உண்மையானதாக இருந்தால், அப்படித் தான் செய்ய வேண்டும். இந்த உதவித் தொகையை யாருக்குக் கொடுக்கிறார்கள்? விதவைகளுக்குக் கொடுக்கிறார்கள். ஊனமுற்றவர்களுக்குக் கொடுக்கிறார்கள். வயதானவர்களுக்கு பென்ஷன் என்று தருகின்றார்கள். அப்படிக் கொடுக்கும்போது எத்தனை பேர்களுக்குக் கொடுக்கிறார்கள்? தாலுகாவிற்கு ஒரு நூறு பேர்களுக்கு என்றுதான் கொடுக்கிறார்கள் எங்களிடம் கிட்டத்தட்ட ஒரு 300 பேர்கள் அப்ளிகேஷன் வாங்கிக்கொண்டு போகிறார்கள். வயதானவர்கள் அங்கே போனால், 100 பேர்களுக்கு மேல் கொடுக்கப்பட முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஒதுக்கீடு தீர்ந்துவிட்டது என்று சொல்கின்றார்கள். இதற்கு மேல் அப்ளிகேஷன்களை 'ரெகமண்ட்' செய்ய வேண்டாம் என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் மனு செய்தவர்களுக்கு வீடு இருக்கிறது என்று ஏதாவது காரணம் சொல்லி தள்ளிவிடுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வீடு இருக்கிறது என்று தாசில்தார்களுக்கு எழுதி அனுப்பிவிடுகிறார்கள். அந்த வருடத்திற்கான அலாட்மெண்ட் தீர்ந்துவிட்டது என்று எழுதிக்கொடுங்கள் என்று நாங்கள் கேட்டால் "இப்போது இல்லை, அதற்குப் பிறகு அனுப்பினால் கொடுக்கிறோம், அதிலே கஷ்டம் இல்லை" என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் இன்ஸ்பெக்ஷன் செய்து அனுப்பிவிடுகிறார்கள். அந்த ஒதுக்கீட்டை கலெக்டர் அவர்களுக்குக் கொடுத்து, கலெக்டர் தாசில்தார்களுக்குக் கொடுத்து, பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மூலம் விசாரித்து.

கொடுக்கிறார்கள். எல்லோருக்கும் கொடுக்கிறதாகச் சொல்கின்றார்கள் உண்மையில் அப்படி அனைவருக்கும், இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் கொடுக்க முடிகிறதா? ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினருக்குத்தான் கொடுக்கிறார்கள். அப்படியும் அப்படி உதவி பெறுகின்றவர்கள் ஒரு சதவிகிதம் பேர்கள்தான் இருப்பார்கள். அதுவும், நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் கொடுக்க முடியவில்லை. அத்தனை பேர்களுக்கும் கொடுக்கிறதாக அறிவிப்பு செய்கிறார்கள். எங்கேயோ கொஞ்சம் கொடுத்துவிட்டு இப்படிச் சொல்வது. இந்த நிலையை மாற்றுவது நிதி நிலை அறிக்கைக்குரிய அழகுதானா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

படித்த இளைஞர்களுக்கு ரூ. 50 என்று திட்டம் போட்டிருக்கிறார்கள். எத்தனை பேர் பெற்றிருக்கிறார்கள்? ஒரு லட்சம் பேர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். எத்தனை படித்த இளைஞர்கள் நம் நாட்டிலே இருக்கிறார்கள்? அவ்வளவு பேர்களுக்கும் கொடுக்க முடிகிறதா? அவர்கள் எல்லாம் பெற முடிகிறதா? எவ்வளவு திட்டங்களை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம்? இன்னும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு வேலை கிடைக்கும். அளவில், ஓரளவுக்கு வேலையற்று பட்டினியிருக்கும், அவர்களுக்கு வேலை கொடுத்து வாழ்க்கை நடத்தும் அளவுக்கு நிலைமைகளை மாற்ற வேண்டும் என்று திட்டம் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேச்சில் குறுக்கிட விரும்பவில்லை. அவர்கள் அ.தி.மு.க. என்று சொல்கின்றார்கள். அண்ணா தி.மு.க. என்று பெயர் வைத்ததே அண்ணாவின் பெயரை எல்லோரும் அடிக்கடி எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான். அதை எத்தனை பேர்கள் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. நம் இருவரில் யார் சொல்கின்றபோதும், அண்ணா தி.மு.க. என்று சொன்னால், அண்ணாவின் பெயரை அடிக்கடி சொல்வதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்றுதான் சொல்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** 'அகில இந்திய அண்ணா' என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அவர்கள் முழுமையாகச் சொல்ல வேண்டும் என்றால் கடினமாகத் தெரியும். அகில இந்தியா என்பது பற்றிக் கவலைப்படுகின்ற திரு. இராமமூர்த்தி அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். என்னுடைய கவலையெல்லாம் அண்ணாவின் பெயரைச் சொல்ல



வேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் அவர் பெயர் வைக்கப்பட்டது. அவர் பெயரைச் சொன்னால் நல்லது என்று சொல்கிறேன். அப்படிச் சொல்வது அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அண்ணாவின் பெயரை பலமுறை நானும் சொல்லத்தான் விரும்புகிறேன். ஆனால் இங்கே நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான் சுருக்கமாகச் சொல்கிறேன், அண்ணா தி.மு.க. அகில இந்திய அண்ணா தி.மு.க. என்று சொல்வதிலே எனக்குக் கஷ்டம் இல்லை அண்ணா என்று பெயரைச் சொல்வதிலே கஷ்டம் இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அகில இந்திய என்று சொல்வது பற்றி எனக்குக் கவலையில்லை. உங்களுக்கும் எங்களுக்கும், இரண்டு பேர்களுக்கும் பொதுவான அண்ணா அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அவர்களுக்கு அதிகமான கவலை இருந்ததால் தான், அது அகில இந்திய அண்ணா தி. மு.க. என்று பெயர் மாறியது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இரண்டு கட்சிகளுக்கும் பொதுவாக ஆளுங் கட்சி என்று சொன்னேன். எனக்கு அண்ணா என்று சொல்வதிலே பெருமைதான் அப்படித்தான் சொல்லிக்கொண்டு வருகிறோம். அவர் வழியில்தான் நடந்து கொண்டிருக்கிறோம். அதிலே விவாதத்திலே போகாமல் ஆளும் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லப்படுகிறது என்று சொல்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** எப்படியும் இவ்வளவு விவாதம் நடந்து கடைசியிலே அண்ணாவினுடைய பெயரை உச்சரிக்காத அளவுக்கு நிலைமைகள் இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நான் அப்படிப்பட்ட நிலைக்கு வரமாட்டேன் என்று அவர்களுக்குத் தெரியும். திரு. இராமமூர்த்தி அவர்களுக்காக அப்படிச் சொல்கிறார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அண்ணாவின் பெயரைச் சொல்லவேண்டாம் என்று யாரும் கருதவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அண்ணா அவர்கள் பெயர் என்னுடைய பேச்சிலே இருக்கும். அவர் பெயர் இருக்கக்கூடாது என்று அல்ல. அப்போது 'அகில இந்திய' என்று பெயரை மாற்றி வைத்தார்கள். இப்போது 'அகில இந்திய' என்று சொல்வதிலே அவர்களுக்கு ஏதோ ஒரு சங்கடம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : 'அகில இந்திய' என்று சொல்வதிலே எங்களுக்குச் சங்கடம் எதுவும் இல்லை. அகில உலகம் என்று சொன்னாலும் எங்களுக்குச் சங்கடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: பேசுகின்றபோது, அவர்கள் 'அகில இந்தியா' என்று சொல்வதிலே ஏதோ சங்கடப்படுகிறார்கள் என்பது தெரிகிறது.

திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி அண்ணாவை அடிக்கடி வம்புக்கு இழுப்பார்கள் என்று தெரிந்துதான், 'எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது' என்று அண்ணா சமாதியிலே எழுதி வைக்கப்பட்டிருக்கிறதா என்று ஒரு சந்தேகம் எனக்கு வருகிறது.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : அண்ணாவை யாரும் வம்புக்கு இழுக்கவில்லை. உறுப்பினர் அவர்களே தானாக ஒரு கற்பனை செய்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் அண்ணா என்று சொல்லியிருந்தால், இந்த விவாதமே வந்திருக்காது.

திரு ம. சங்காலிங்கம் : இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் அவர்கள் பல திட்டங்களை அறிவித்துக்கொண்டிருக்கின்றபோது, அதைப் பற்றிப் பேசுகின்றபோது, நான் அவர்களுடைய தேர்தல் அறிக்கையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலே ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கொடுக்கப்படுவதாகவும், அதை ஒட்டித்தான் நிதி நிலை அறிக்கையில் பக்கம் 7-லே, 1979-80 நிதி நிலை அறிக்கையிலே, அவர்களுக்கு உறுதியான வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் மூலம் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் ஒவ்வொருவருக்கும் வழங்குவோம் என்று சொல்லி உணவுக்கு வேலைத் திட்டத்தை இணைத்து அதை அமுல்படுத்துவது என்று சொல்லி, அது ஒரு கிலோ அரிசி என்று இப்போது ஆகியிருக்கிறது. அதற்குப் பிறகு அது தேய்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டவே இங்கே அதைப்பற்றிச் சொல்கிறேன்.

இன்னொன்று இப்போது மது விலக்குப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே மிகத் தெளிவாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. பக்கம் 54-ல் மதுவிலக்குக் கொள்கைபற்றி அறிவித்திருக்கிறது. அதாவது 25 வயதிற்கு மேற்பட்டவர்கள்தான் மது அருந்த அனுமதிக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது அப்படி இருக்கிறதா? இங்கே பத்திரிகையிலே 25 வயதிற்குள்ளே உள்ளவர்கள் குடிப்பதைப்



படம் பிடித்துப் போட்டிருக்கிறார்கள். 'அவர்கள் முறைப்படி அனுமதி பெற வேண்டும் என்று சொல்லப்பட்டது. பாட்டில்களில் சாராயம் அடைக்கப்பட்டு, விற்பதற்குரிய கடைகளில் மட்டுமே விற்கப்படும். அவர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்று இருக்கிறது. ஆனால் யார் அனுமதிக்கப்படுகிறார்கள்? அங்கே என்ன நடக்கிறது, கடைகளிலே யாரும் குடிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று புகைப்படம் எடுத்துப் போடுகிறார்கள், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். இன்று நாடு முழுவதும் பல ஆயிரக்கணக்கான கடைகளை திறந்துவிட்டிருக்கிறார்கள். அவரவர்கள் அங்காங்கே உள்ள கடைகளில் மது அருந்துகிறார்கள். அதையெல்லாம் படம் பிடித்துப் போட்டிருக்கிறார்கள் புகைப்படம் எடுத்துப் போடுகிறார்கள். ஆனால் அதிலே என்ன அறிவித்திருக்கிறார்கள்? "கடைகளிலே இருந்து குடிக்க நாங்கள் அனுமதிக்கமாட்டோம். அப்படி அனுமதிக்கப்படமாட்டார்கள்" என்று சொன்னார்கள். அந்த நிதி நிலை அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? "25 வயதிற்கு மேற்பட்டவர்கள் மட்டுமே மது அருந்த அனுமதிக்கப்படுவர். அவர்கள் முறைப்படி அனுமதிச் சீட்டு பெற வேண்டும். பாட்டில்களில் சாராயம் அடைக்கப்பட்டு உரிய கடைகளில் விற்பதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும். கடைகளில் இருந்து குடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்" அதற்குப் பிறகு சொல்லியிருக்கிறார்கள். "கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள், அனைத்து மத வழிபாட்டு இடங்கள், மாணவர் விடுதிகள் போன்றவற்றின் அருகில் மதுக் கடைகள் திறக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது" என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள், அனைத்து மத வழிபாட்டு இடங்கள், மாணவர் விடுதிகள் பக்கத்திலேயே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை பல முறைகள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறேன். 1981-81 நிதிநிலை அறிக்கை வந்த பிறகு, 55-வது பக்கத்திலே இந்த அவையிலே நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு, மதுக் கடைகள் திறப்பதற்கு ஜி.ஓ. அளித்திருக்கிறார்கள். இந்த அவையிலே ஒப்புதல் பெறாத அளவில் ஒரு ஜி.ஓ. போட உரிமை கிடையாது. வேண்டுமானால் இந்த அவையிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாம். அந்த அறிக்கையிலே மிகத்தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகள், பள்ளிகள் இவைகள் பக்கத்தில் திறப்பதற்கு ஒரு அமெண்ட்மெண்ட் கொண்டுவந்து செய்யலாம். இதுவரையிலே அந்த ஜி. ஓ. தான் இருந்துவருகிறது. அது குறித்து நாங்கள் ஒரு உரிமைப்பிரச்சனை எழுப்பலாம். அப்படிக் கொண்டுவந்தால் என்ன முடிவு வரும்? அது காலந்தாழ்ந்து வந்திருக்கிறது என்று சொல்லிவிடுவார்கள். ஆகவேதான் சொல்லவில்லை. இதை மாற்ற காரணம் என்ன என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அவையிலே எடுத்துச் சொன்னேன். முஸ்லீம் கட்சித் தலைவர் திரு. மியாகான் அவர்கள் தந்தையார் காயிதே மில்லத் அவர்கள் வீட்டிற்கு வட இந்தியாவிலே மாத்திரம் அல்ல, கேரளாவிலே இருந்து மாத்திரம் அல்ல, பிற மாநிலத்திலேயிருந்து வரக்கூடிய இஸ்லாமியர்கள் கூட அவர்களுடைய வீட்டிற்கு வந்து செல்கிறார்கள். அவருடைய வீட்டிற்கு அருகிலே மருத்துவ மனை இருக்கிறது. பள்ளிக்கூடம் இருக்கிறது. குரோம்பேட்டையில் உள்ள அந்தப் பள்ளியில் ஆண்களும் பெண்களும் 3 ஆயிரம் பேர்கள் படிக்கின்றார்கள். அந்தப் பள்ளிக்கு அடுத்த காம்பௌண்ட் பக்கத்திலேயே மதுக்கடை இருக்கிறது. அதுபோலவே, நாகர்கோயிலில் மீனாட்சிபுரத்திலே ஒரு பக்கம் ஆஸ்பத்திரி இருக்கிறது, ஒருபக்கம் பள்ளிக்கூடம் இருக்கிறது. அதற்கு மத்தியிலே ஒய். 26. கடை இருக்கிறது. இந்த அவையிலே இதைப்பற்றி நான் எடுத்துச் சொல்வது மூன்றாவது முறை. நிதிநிலை அறிக்கையில் தரக்கூடிய உறுதிமொழிகளைக் காப்பாற்றுவது இந்த லட்சணம் என்றால், எந்தத் திட்டம்பற்றி நாங்கள் பேசுவது என்று கேட்க ஆசைப்படுகிறேன். 55 ஆம் பக்கத்தில், 79-வது பாராவில் சொல்லுகிறார்கள், "அரசு மேற்கொள்ள விருக்கும் இந்த மாற்றங்களின் மூலம் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், அனுமதியின்றி விற்பனை செய்வோர் கள்ள மது நடமாட்டத்திற்கு உடந்தையாக இருப்போர் ஆகியோரிடமிருந்து பொதுமக்களுக்கு உண்டாகும் இன்னல்கள் விலகும் என்று அரசு எதிர்பார்க்கிறது"—என்ன வாயிற்று? இப்போது பெருகியிருக்கிறது. இருக்கிற சட்டம் காணாது, இன்னொரு பெரிய சட்டம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மதுவிலக்கு பற்றி இதைவிடக் கூடுதலாகச் சொல்ல வேண்டியதில்லை. இந்த நாட்டிலே எவ்வளவு சீர்கேடுகள் கொண்டு வரவேண்டுமோ அவ்வளவு சீர்கேடுகளையும் கொண்டு வந்து அமுல்படுத்தியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11.00)

கிராம வளர்ச்சித் திட்டம் என்று பல பகுதிகளில் அமுல்படுத்துகிறார்கள். அது அவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறதா என்று கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். பலமுறை கேட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுக்கா தோப்பூர் என்ற ஊரில் மேல்நிலைத் தொட்டி முடிக்கப்பட்டு 3 மாதங்களாகியும் அந்த கிராமத்திற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. தென் ஆற்காடு மாவட்டத்தில் கொல்லிமலை கீழ் பகுதி, லால்பேட் பேரூராட்சியில் 1976-ல் மேல்நிலைத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டும், இன்றுவரை வரவில்லை. பஞ்சாயத்து அலுவலகத்தில் கேட்டால், இன்னும் வாட்டர் போர்ட் அதை எங்களிடம் ஒப்படைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். வாட்டர் போர்டில் கேட்டால், டெக்னிகல் கிளியரன்ஸ் வரவில்லை





என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. இப்படி பல இடங்களில் இருக்கிறது. மக்களுக்கு தன்னிறைவு ஏற்படும் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை.

நீர்ப்பாசனத் திட்டங்கள்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் எவ்வளவு நீர் வசதி இருக்கிறதோ அவ்வளவையும் பயன்படுத்த வேண்டும். கடலுக்குப் போகும் தண்ணீரைத் தடுக்க வேண்டும். மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று நீரை கிழக்கு நோக்கி கொண்டு வரலாமென்று நாம் சொல்லலாமே தவிர அவர்கள் தருவதாக இல்லை. ஒரு சொட்டுத் தண்ணீர் கூட கிடையாது என்று கம்யூனிஸ்ட் ஆட்சியாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருந்தாலும், சர்வ கட்சி ஆட்சியாக இருந்தாலும் சொல்லுகிறார்கள். எனவே நம்முடைய நாட்டு நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டும். இரண்டு பருவ மழைகளாலும் பயன்படக்கூடிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். வடகிழக்குப் பருவ மழை. தென்மேற்குப் பருவ மழை ஆகிய வற்றால் அங்கே மழை பெய்கிறது. அதன் காரணமாக தாமிரபரணி, பாழையார், பன்னி வாய்க்கால் ஆகிய மூன்று ஆறுகளிலும் 3 அணைக்கட்டுகள் கட்டி, அந்தத் தண்ணீரை திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாற்றலாம். காமராஜர் அவர்கள் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ராதாபுரம் சேனல் வெட்டி வைத்திருக்கிறார்கள். பேச்சிப் பாறை அணையிலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டும். மிஞ்சன் துரை என்பவர் அந்தத் திட்டத்தை வகுக்கும்போது, இன்னும் 5 ஸ்கீம்களைச் சொல்லியிருக்கிறார். மாம்பழத்தணை, உலக்கருவி, பண்ணை வாய்க்கால் என்று 5 திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள், அவற்றைப்பற்றி ஒன்றும் காணவில்லை. நான் கன்னியாகுமரி மாவட்டம்பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. இதன்மூலம் திருநெல்வேலி மாவட்டத்திற்குத் தண்ணீர் கொண்டுவரலாம். அது தமிழகத்திற்கு நன்மை பயக்கும்.

அடுத்து நம்முடைய அரசு இயந்திரம் இயங்குகிற முறை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பல இலாக்காக்களில் பெரிய பதவிகள் நிரப்பப்படவில்லை. அதில் என்ன சிக்கல் இருக்கிறதென்று தெரியவில்லை. டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்—எவ்வளவு பெரிய பதவி? தமிழ்நாட்டின் இன்றைய நிலை எப்படி இருக்கிறதென்று சொல்லத் தேவையில்லை. அவ்வளவு முக்கியமான பதவி, இதுவரை நிரப்பப்படாமல் இருக்கக் காரணம் என்ன? மாவட்டங்களில் பப்ளிக் பிராசிகியூட்டர் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. காலத்தை நீட்டிக் கொண்டு போகிறார்கள். அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிகியுட்டர்கள்

குறைவாக இருக்கிறார்கள். இருக்கிறவர்களின் பதவிக் காலத்தை நீட்டிக் கொண்டு போகிறார்கள். சட்டம் ஒழுங்குபற்றி விரிவாகப் பேச நேரமில்லை. இன்றைக்குத் தமிழ்நாட்டில் வகுப்புக் கலவரங்கள் தோன்றும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அரக்கோணம் குப்பம் கண்டிகையில் பெரிய வகுப்புக் கலவரம் ஏற்பட்டு, 38 குடிசைகள் தீக்கிரையாகியிருக்கின்றன. மின்னல் கிராமத்தில் வகுப்புக் கலவரம், கீழ்வெண்பாக்கத்தில் வகுப்புக் கலவரம், கன்னலம் கிராமத்தில் வகுப்புக் கலவரம்—இவையெல்லாம் அண்மையில் நடந்த கலவரங்கள், வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கும் பகுதிகள். இவ்வளவு தூரத்திற்கு வகுப்புக் கலவரங்கள் உருவெடுக்க என்ன காரணம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா ?

கன்னியாகுமரி மாவட்டத்தில், எந்த நிமிடத்தில் என்ன நடக்குமென்று சொல்ல முடியாத அளவிற்கு, ஒரு பதட்ட நிலை உருவாகியிருப்பதை அறிவோம். பல சந்தர்ப்பங்களிலே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மிக அமைதியாக, ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இருந்தார்கள். கழிந்த 6 மாதங்களாக இந்த நிலை உருவாகியிருக்கிறது. 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் ஆளுநர் உரையில் பேசும்போது, இது குறித்து, இந்த அபாயம்பற்றி எச்சரித்திருக்கிறேன்: கன்னியாகுமரி மாவட்டத்தில் இதற்கு வித்திடப்பட்டிருக்கிறது, அதை அரசு தடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இதுவரை ஒன்றும் செய்யவில்லை. இப்போது அதனுடைய விளைவு என்ன ? 2, 3 மாதங்களுக்குள்ளே கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் மரத்தட்டுவிளை, வண்ணலம்பாறை, குலசேகரம், திங்கள் சந்தை, மண்டைக்காடு, புதூர் ஆகிய இடங்களில் பெரும் கலவரங்கள் ஏற்பட்டு, துப்பாக்கி சூட்டில் 6 சகோதரர்கள் இறந்திருக்கிறார்கள். இந்து, கிருத்துவர், முஸ்லீம் ஆகியோர் சகோதரர்கள்போல் வாழும் ஒரு வீட்டில் என்ன நடக்குமென்று தெரியவில்லை. ஒரு வீட்டிலே போலீசார் புகுந்து, ஒருவரைப் பாதுகாப்பாக வெளியே கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பேரூர்திலே போன ஒருவரை இன்னொரு சாரார் அடித்திருக்கிறார்கள். ஒரு இனத்தவருக்கும், இன்னொரு இனத்தவருக்கும் காழ்ப்புணர்ச்சி சண்டை, கொலை, துப்பாக்கி சூடு வரும் நிலை அந்த மாவட்டத்தில் உருவாகியிருக்கிறதென்றால், அதற்கு யார் காரணம் ? இந்த அட்சிதான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். 3 வருடங்களுக்கு முன்னால் அதற்கான காரணத்தை நான் விளக்கியிருக்கிறேன். அரசியல்வாதிகள் இதைத் தெளிவாகப் பேசமாட்டார்கள். எல்லோரிடமும் ஓட்டு வாங்க வேண்டும். அதிகாரிகள் அப்படியிருந்தால், எப்படி? அதிகாரிகள் தனியாக சமரச மாநாடுகள் நடத்துகிறார்கள். அந்தக் கால கட்டம் முடிந்து விட்டது. ஒரு சாராரைத் தனியாக அழைத்து வைத்து, பெரிய அதிகாரி





அவர்களிடம் பேச வேண்டும். உங்களிடம் இன்னின்ன தவறுகள் இருக்கின்றன, 8, 9 மாதங்களில் உங்களுடைய பங்கு இது என்று பிரஸ் இல்லாமல் தனியாக அவர்களிடம் சொல்லும் ஆற்றலை அதிகாரிகள் பெற வேண்டும். அதே போன்று இன்னொரு சாராரையும் தனியாக அழைத்து, இன்னின்ன தவறுகள் உங்களிடம் இருக்கின்றன என்று சொல்லும் ஆற்றலைப் பெற வேண்டும். ஒரு மாதத்திற்கு முன்னால் அங்கு நடந்த சமாதானக் கூட்டத்தில் எல்லா சமயத்தவர்களும், எல்லாப் பிரிவினரும், எல்லா அதிகாரிகளும் இருக்கிற கூட்டத்தில், நான் தெளிவாகச் சொன்னேன். இத்தனைக்கும் காரணம் அதிகாரிகள் செயல்படாததுதான் என்று சொன்னேன். அதற்குக், காரணம் சொன்னேன். ஒரு தவறு நடக்கிறது. தவறு செய்தவரைக் கைது செய்து, வழக்கு போடப் போகிறார்கள். அப்போது அரசியல்வாதி தலையிடுகிறார். வழக்குப் போடாதே என்று சொல்லுகிறார். இன்னொரு பகுதியில் இதே போன்று ஒரு வழக்கு போடும்போது, இன்னொரு அரசியல்வாதி தலையிடுகிறார், தடுக்கிறார். இப்படி எந்த அரசியல்வாதி தலையிட முடியும் ? எதிர்க் கட்சிக்காரர்கள் தலையிட்டால், அதிகாரிகள் கேட்கமாட்டார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் இருக்கும் கூட்டத்தில் சொன்னேன். மாவட்டத்தில் நடந்த கூட்டத்தில் சொன்னேன். சங்கரலிங்கம் போன் பண்ணி, ஆளை விடுங்கள் என்றால், அவர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர், சட்டசபையிலேதான் பேசுவார், 5, 6 மாதம் கழித்துத்தான் சட்டசபை கூடும், ஆக்ஷன் எடுங்கள் என்று சொல்லுவார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் சொல்லும்போது, அவர் யார் என்று கேட்பார்கள். ஆளுங்கட்சி அமைப்பாளர் என்று சொன்னவுடனே, ஆளை விட்டுவிடுங்கள் என்கிறார்கள். ஆளுங்கட்சிக்காரர்கள் இப்படி போனிலேயே சொல்வதால், அதிகாரிகள் செயலிழந்த தன்மையில், திறமையற்ற தன்மையில் இருக்கிறார்கள். இதனால்தான் இந்த நிலை உருவாகியிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது அந்த ஒரு மாவட்டத்தில் மட்டுமல்ல. வட ஆற்காடு மாவட்டத்தில் காணப்படுகிறது. பல்வேறு மாவட்டங்களில் காணப்படுகிறது. மேலும் இந்த நிலை பரவாமல் தடுக்க அரசு தக்க நேரத்தில் தக்க ஆற்றல் பெற்று, கட்சிமாச்சரியங்களுக்கு அப்பால் நின்று, செயல்படுகிற ஆற்றலைப் பெறவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே சட்டம் ஒழுங்குபற்றிச் சொல்லும்போது, பிற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பரவாயில்லை, என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் முந்தைய காலத்தை ஒப்பிட்டால் பரவாயில்லை. கொள்ளை அடிக்கிறார்கள். கொள்ளைக்காரர்கள் தலைவன் ஒரு மாநிலத்தில், ஒரு நகரத்தில் 4 நாட்கள் ராஜ்யபாரம் பண்ணுகிறான்.

4 நாட்கள் அந்த ஊரிலே இருக்கிறான். பத்திரிகை நிருபர்களைச் சந்திக்கிறான். ஸ்டேட்மென்ட் கொடுக்கிறான். ஊர்க்காரர்கள் அவன் காலில் விழுந்து, கும்பிடுகிறார்கள். அப்படி கொள்ளைக்காரர் சாம்ராஜ்யம் நடக்கிற மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எப்படி? ஒரு நல்ல பர்ஸ்ட் கிளாசில்

(முற்பகல் 11-10)

பாஸ் பண்ணுகிற ஒருவனைப் பார்த்துவிட்டு, அவனைத் தரக் குறைவாகப் பார்க்கிற ஒரு நிலையை ஏன் வருத்திக்கொண்டீர்கள்? கட்சிக்கு அப்பாற்பட்டுப் பார்ப்பதாக இருந்தால், ஒன்றைச் சொல்கிறேன். வட மாநிலங்களில் காவல் துறையினுடைய அநீதியைப் பார்க்கிறோம். காவல் துறையினரை விரோதிகளாக நினைத்துத் தாக்குகிறார்கள். காவல் துறையினர்தான் கொள்ளைக்காரர்களை விடுவிப்பதாகக் கருதுகிறார்கள். கொள்ளைக்காரர்கள் ஊரிலுள்ளவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள். ஊரில் அவர்கள் விழா எடுக்கிறார்கள். சமய விழா நடத்துகிறார்கள். காரணம் அந்த அளவுக்கு அங்கு இருக்கக் கூடிய போலீஸ் ஸ்டேஷன்களில் பொதுமக்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். அந்த நிலைக்கு தமிழ் நாட்டையும் கொண்டு போகிறீர்களா? இன்றைக்கு அத்தகைய ஒரு போக்கு காவல் துறையிடத்தில் உருவாகியிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் நக்சலைட் இயக்கத்தைப் பற்றி என்ன பெயர் சொன்னாலும், அந்தப் பகுதியில் உள்ளவர்கள் அவர்களை நல்லவர்களாகத்தான் கருதுகிறார்கள். அநீதி செய்பவர்களுக்கு எதிராக அவர்களால் தான் நோட்டீஸ் ஒட்ட முடியும், வால்போஸ்ட்டர் ஒட்ட முடியும், தைரியமாகத் தாக்க முடியும் என்று நம்புகிறார்கள். அத்தகைய ஒரு நிலைக்கு இன்று நாடு சென்று கொண்டிருக்கிறது. இத்தகைய ஒரு நிலையை மாற்ற அரசுத் துறைகளும் காவல் துறையும் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும். அதற்கு இந்த நிதி நிலை அறிக்கையின் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இவ்வளவு இவ்வளவு தொகை இந்த இந்தத் துறைக்கு என்று ஒதுக்கீடு செய்யும்போது, சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் அழைத்துப் பேசி அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லி, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ அல்ல பிரச்சினை என்பதையும் சொல்லி நான் சொல்லிய கருத்துக்கள் வழி செயல்பட தாங்கள் என்றும் உறுதுணையோடு இருப்போம் என்று இடித்துச் சொல்லி, எடுத்துச்சொல்லி, அவையின் மூலம் நாட்டு மக்களுக்கும் சொல்லி, உங்களுக்கு என்றும் நல்ல காரியங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்று சொல்லி அமர்கிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ள 1981-82 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகள் பற்றியும் 1982-83 ஆம் ஆண்டுககான நிதி நிலை மதிப்பீடுகள் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்பவும், மன நிலைக்கு ஏற்பவும் சார்பு நிலைக்கு ஏற்பவும், கொள்கைக்கு ஏற்பவும், தங்கள் தங்கள் கட்சியின் கண்ணோட்டத்துக்கேற்பவும் இங்கே கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். நாட்டின் செழுமைக்கும், மக்களுடைய நல்வாழ்வுக்கும் உறுதுணையாக இருக்கின்ற வகையிலே அளிக்கப்பட்ட கருத்துக்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக வகுக்கப்பட்டிருக்கிற திட்டங்களையெல்லாம் வரவேற்று அவைகளை நடைமுறைப்படுத்தும்போது, ஏற்படுகின்ற சிக்கல்களையெல்லாம் தவிர்க்க இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விளக்கிக் காட்டி இங்கே நல்ல உரைகள் வழங்கிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாடு நலம் பெற வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலும், ஆட்சியினர் மேற்கொண்டுள்ள சீரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் சில பல திட்டங்களை வரவேற்றதை நான் இங்கு கண்டேன். அதே சமயத்தில் சிலபல திட்டங்களுக்கு மாற்றுத் திட்டங்கள் கூறியும், பரிந்துரைகள் வழங்கியும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். எதிர்த் தரப்பிலுள்ள நல்லெண்ணம் கொண்டவர்கள் பல கருத்துக்களை சென்ற 6, 7 தினங்களாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'எம் கடன் இந்த ஆட்சி எதைச் செய்தாலும் எதிர்ப்பதே' என்ற தன்மையின் அடிப்படையில் சிலர் தங்களுடைய கருத்துக்களையும் எடுத்து வைத்தார்கள். இங்கே தங்கள் தங்கள் மன நிலைக்கு ஏற்ப பல கருத்துக்களை பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியும் இருக்கிறார்கள். பலர் சிலபல திட்டங்களை வரவேற்று கருத்துக்களைச் சொல்லியும், சிலர் சிலபல திட்டங்களை இழித்தும், பழித்தும், கேலியும், கிண்டலும் செய்தும் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களை நான் குற்றம் சொல்லவில்லை. அவர்களுக்கு அதற்கு உரிமையுண்டு. அப்படி அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையின் மீது சொல்வதன் மூலம் ஒரு மகிழ்ச்சி அவர்களுக்கு ஏற்படும் என்று சொன்னால், அப்படிப்பட்ட ஒரு மகிழ்ச்சியை அவர்கள் இதன் மூலம் பெற்றது குறித்து

எனக்கும் மகிழ்ச்சி. அந்த அடிப்படையில் எனக்கு மகிழ்ச்சி இருந்தாலும்கூட, அவர்கள் நீண்டகாலம் நண்பர்களாக இருப்பதன் காரணமாக அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆக, நட்புத் தன்மையின் அடிப்படையில்தான் இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு) அந்த வகையில் நானும் சிலபல கருத்துக்களை மழலைச் சொற்களாக ஏற்றுக்கொண்டு அந்த வகையில் நானும் மகிழ்ச்சியடைய கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில், ஒரு கருத்தை அருமையாக எடுத்துச் சொன்னார்கள். அதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் உரையாற்றும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.

"I read, I study, I examine, I hear, I listen, I reflect and out of all these, I try to form an idea in which I can put as much commonsense as I can;"

என்று மிக அழகுபட எடுத்துச் சொன்னார்கள். 'நான் படிக்கிறேன், நான் கற்கிறேன், நான் ஆராய்கிறேன், நான் கேட்கிறேன், நான் கவனிக்கிறேன், நான் சிந்திக்கிறேன், இவை அனைத்திலும் என்னுடைய பொது அறிவை எந்த அளவுக்கு செலுத்த முடியுமோ எந்த அளவுக்கு ஒரு கருத்தை உருவாக்க முடியுமோ அந்த அளவுக்கு உருவாக்க முயல்கிறேன்' என்று சொன்னார்கள். அந்த வகையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் படித்து, கற்று, ஆராய்ந்த பிறகு, அதனை நாட்டுக்கு நடைமுறைபடுத்து வதற்கு முன்பு இப்படி இப்படி நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பல்வேறு கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இதிலேயும் குற்றங் குறைகள் இருக்கக்கூடும். ஆனால் இந்தக் குற்றங் குறைகள் மொத்தமாக அதுவே ஆகிவிடாது. நாட்டின் பொதுத் தன்மை என்று பார்க்கும் போது, இந்த ஆட்சிக்கு மட்டுமேதான் குற்றங் குறைகள் பொருந்தும் என்றோ இதற்கு முன்பெல்லாம் குற்றங் குறைகள் நடைபெற வழிவகைகள் இல்லை என்றோ யாரும் எடுத்துக் கூறவில்லை. இந்த அரசின் மீது கொண்ட நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயும், அரசுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய வகையிலேயும் பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சங்கரலிங்கம், மாணிக்கம், நல்லசிவன், இராமமூர்த்தி போன்றவர்களை எல்லாம் பல்வேறு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவை அத்தனையும் நான் புறக்கணிக்கிறேன் என்ற நிலையிலிருந்து நான் கருத்துக்களைச் சொல்லவில்லை. நமக்குக் கிட்டியிருக்கிற நிதி நிலைமைகளை வைத்து, ஆராய்ந்து பார்த்து அதற்கேற்ற முறையில் திட்டங்களை வகுத்து அதற்கேற்ற முறையில் காரியங்



களைச் செய்ய இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி பல்வேறு கருத்துக்களை பலரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சூழ்நிலைக்கு ஏற்ப, வசதிகளுக்கு ஏற்ப எந்த அளவு செய்ய முடியுமோ அதைச் செய்வதில் இந்த அரசு நாட்டம் கொண்டிருக்கிறது. அதற்கான காரண காரிய விளக்கங்களை இதில் விரிவாகவும், விளக்கமாகவும், நுட்பமாகவும் எடுத்துச் சொல்லியிருப்பதை நான் நினைவுபடுத்துகிறேன். இதில் எடுத்துச் சொல்கின்றபோது இந்த மாநிலத்திற்கு என்று இருக்கின்ற நிதி ஆதாரங்களையும், அதிகாரங்கள் குறைவு என்பதற்கான காரணங்களையும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். பலரும் தங்களுக்கு இருக்கின்ற அனுபவத்தின் மூலம் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்தியா ஒன்று என்ற கொள்கையில் யாருக்கும் வேறுபாடு இல்லை. இந்தியாவிலிருந்து பிரிய வேண்டுமென்ற ஒரு கருத்தைக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் கூட— அதன் சார்பாக பேரறிஞர் அண்ணா அவர்கள் நாட்டின் நலன் கருதியும்— உலகத்தின் சூழ்நிலை கருதியும்—எதிர்கால நிலை கருதியும் அதில் மாற்றம் செய்தார்கள். பிரிவினை என்கிற கருத்தை விட்டுவிட்டு இந்தியாவோடு சேர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காக கொள்கையை மாற்றிக்கொள்வது கூட தவறு இல்லையென்று கருதி மக்களிடத்தில் பிரச்சாரம் செய்தார்கள். அன்றைக்குக்கூட சில பேர் பார்த்தீர்களா "கொண்ட கொள்கையைக் கைவிட்டு விட்டார்கள்" என்று சொல்லி கேலியும் கிண்டலும் பேசினார்கள். அப்படிச் செய்தாலும் கூட, 3 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு பொதுமக்களிடத்தில் அவர்களுக்கு ஆதரவு வந்தது. ஆக, பொது மக்களுடைய நிலைமைகளுக்கு ஏற்ப, சிலபல தன்மைகளுக்கு ஏற்ப, காலத்திற்கு ஏற்ப கருத்துக்களை மாற்றிக்கொண்டார்களே தவிர, எந்த விதமான வேறுபாடான கருத்துக்களையும் சொல்லவில்லை. வாய்ப்புகள் ஏற்படுகின்றபோது எல்லாம் நாம் வற்புறுத்தித்தான் வருகிறோம். அண்மையில் நம்முடைய இந்திய குடியரசுத் தலைவர் திரு. நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவது பற்றிப் பேசியிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு மத்திய அரசு அதிக அதிகாரம் வழங்க வேண்டும் என்ற சூழ்நிலை காரணமாக பிரச்சினைகள் வந்தால் பிரச்சினைகள் நாளுக்கு நாள் வளர்ந்து, இந்திய அரசு நாளாவட்டத்தில் பிரச்சினைகளைத் தாங்க முடியாத அளவுக்கு அது கொண்டு போய்விடும். இப்போதே விழித்துக்கொண்டு அதற்கேற்ப மாநிலங்களில் நம்பிக்கை வைத்து—எப்படி மாநில அரசுகள் மத்திய அரசிடம் நம்பிக்கை வைக்க வேண்டுமென்று மத்திய அரசு எதிர்பார்க்கிறதோ அதுபோல் மத்திய அரசும் மாநில அரசுகளிடத்தில் நம்பிக்கை வைத்து காரியங்களை நல்லபடியாகச் செய்தால் தான், எதிர் காலத்தில் ஒரு சுமுகமான நிலைமை வரும் என்கிற கருத்தை எடுத்துச்

(முற்பகல் 11.20)

கூறியிருக்கிறார்கள். மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டும், அதன் மூலமாகத்தான் நாம் நல்லவைகளை, காரியங்களைச் செய்ய முடியும், இந்தக் கருத்தை மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த டாக்டர் ராய் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி கட்சி மாச்சரியம் வேறு எந்த நிலையிலேயும் இல்லை. அந்த அடிப்படையிலே தான் பல்வேறு கருத்துக்களை நாம் வலியுறுத்தி வருகிறோம். வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகிறபோது, சண்டை போட வேண்டும், போராட வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். சண்டை போடலாம், போராட்டம் நடத்தலாம், படையெடுக்கலாம், ஆனால் காரியங்கள் நடக்க வேண்டும் என்று தான் சொல்கிறோம். அதற்கு அரசியல் அமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்னால் மேற்கு வங்க முதலமைச்சர் திரு. ஜோதிபாசு அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் மேற்கு வங்காளத்தைப் பற்றிச் சொல்லும்போது சொல்கிறார். 'இந்த மாநிலத்தினுடைய நிதியாதாரம் பல்வேறு நிலையில் சோர்ந்து இருப்பதற்கும், கொடுத்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்கும் இப்போது இருக்கும் அரசியல் அமைப்புதான் காரணம், இதிலே மாற்றம் இல்லாவிட்டால் இந்த நிலைமைகளிலே எந்தவிதமான சீர்திருத்தத்தையும் செய்ய முடியாது' என்று சொன்னார்கள். அரசியல் அமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும். அப்படி மாற்றப்பட வேண்டும் என்று சொன்னால், மூன்றிலே இரண்டு பகுதியினர் மாற்றுவதற்கான துணிவோடு பாராளுமன்றத்திற்குப் போக வேண்டும். அப்படிப் போக வேண்டும் என்று சொன்னால், இந்தியா முழுவதும் இந்தக் கருத்துக்கு ஆக்கம் தேடி, இந்தக் கருத்துக்களைக் கொண்டவர்களை அங்கே கொண்டு வந்து உட்கார வைக்க வேண்டும். அந்த முறையிலே இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியிலே மனம் மாறி வரும் ஒரு நிலைமை வந்தால், அது நல்லதுதான். இல்லாவிட்டால் மனம் மாறுகின்றவர்களை ஒன்று சேர்த்து, அவர்களை வைத்து ஒரு மெஜாரிட்டி வருகிற அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்று சொன்னால், நாம் காரியங்களின் நியாயத்தை எடுத்துச் சொல்லி, அதற்காக வாதாட வேண்டும். கருத்துக்களுக்கு வாதாடுவதும், அப்படி வாதாடி அந்தக் கருத்துக்களை நிலை நாட்டுவதும் ஒரு பக்கம் இருந்தாலும், இருக்கும் சட்ட திட்டங்களின் அடிப்படையிலே நாம் அந்தக் காரியங்களைச் செய்யவேண்டிய நெருக்கடி இருப்பதால், இந்த வழியையும் கடைப்பிடிக்க வேண்டிய தன்மையிலே நாம் இருக்கிறோம், இருப்பதைக்



கொண்டு என்ன செய்வது என்று இருக்கும் இந்தக் கட்டத்திலேயே நாம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. மாநில அரசு என்று மட்டுமல்ல, மத்திய அரசையும் எடுத்துக்கொண்டால், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னதைப் போல, செலவினங்கள் வளர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. மத்திய அரசானாலும் செலவினத்தைப் பெருக்குவதால் அதை ஈடுசெய்ய வருமானத்தைப் பெருக்கவேண்டிய நிலையிலே தான் இருக்கிறது. இந்த நிலைமையை நாம் அகில இந்திய அளவிலேயும் பார்க்கிறோம். கிட்டத்தட்ட சொல்லவேண்டுமானால் மத்திய அரசின் கொள்கை, புதிய வரிகளைப் போடுவதும், ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்ற வரிகளைத் தூக்கி உயர்த்திப் போடுவதும்தான். 1978-79-லே ஏற்பட்ட பற்றாக்குறை 2,709 கோடி ரூபாய். 1980-81-லே ஏற்பட்ட பற்றாக்குறை 2,400 கோடி ரூபாய். 1981-82-லே, மாண்புமிகு திரு. வெங்கட்ராமன் அவர்கள் நிதியமைச்சராக இருந்தபோது பல்வேறு வரிகள் போட்டு அதன் மூலம் வருமானம் வந்த பிறகும் ஏற்பட்ட மொத்த பற்றாக்குறை 1,700 கோடி ரூபாய். இந்த ஆண்டு 2000-க்குச் சில்லறை கோடி ரூபாய்க்குப் போகிறது பற்றாக்குறை. இந்த ஆண்டு 500 கோடி ரூபாய்க்கு மேல் புதிதாக வரிகள் போட்டிருக்கிறார்கள். இரயில்வே கட்டணத்தை உயர்த்தியதன் மூலமாக 200 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் கிடைத்திருக்கிறது. தபால் தந்தி கட்டணத்தை உயர்த்தியதால், 200 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வந்திருக்கிறது. அப்படியிருந்தும் இன்றைக்கு 1,365 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் மற்றவர்களும் சொன்னது போல, இந்த வரிகளின் விளைவாக மாநிலங்களும் இன்றைக்கு பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நமக்கு இப்போது இருக்கும் பல்வேறு தன்மைகளின் அடிப்படையிலே பார்த்தால், வளர்ச்சித் திட்டங்கள், சமுதாய நலத் திட்டங்கள், இருக்கிற திட்டங்களை விரிவுபடுத்தும் திட்டங்கள் முதலியவைகளால் ஆண்டுக்காண்டு நம்முடைய தேவைகள் வளர்ந்துகொண்டிருப்பதற்கேற்ப நாம் அவைகளுக்கு நிதி ஒதுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த அளவிலே காரியங்களைச் செய்கிறபோது, கூடுமானவரையில் இருக்கிற நிலைமைகளையும், மற்றவைகளையும் ஆராய்ந்து ஏற்பட்டிருக்கக்கூடிய விளைவுகளின் அடிப்படையிலேதான் கவனம் செலுத்தி காரியங்களைச் செய்ய வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். இன்றையதினம் தமிழகத்தினுடைய நிதியமைச்சராக இருப்பவர் பெரிய பொருளாதார வல்லுநர் அல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய பொருளாதார வல்லுநர் அல்ல. ஆனால் பொருளாதாரத்திலே சிறந்த வல்லமை பெற்ற பல அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களுடைய

துணையைக் கொண்டு தான் நாம் திட்டங்களைப் போடுகிறோம். பானையிலே என்ன இருக்கிறதோ அதுதான் அகப்பையிலே வரும். "ஆழ அமுக்கி அமுக்கினும் ஆழ் கடலில் நாழி முகவாது நானாழி" என்பது சான்றோருடைய வாக்கு அதுமட்டுமல்ல. நாம் ஓரளவுக்கு இருக்கிற அதிகாரிகளை; மற்றவர்களை நம்பிச் செய்கிறோம் என்று சொன்னால், குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். இல்லையென்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். நாங்களும் எதிர்க் கட்சியாக இருக்கும்போது சுட்டிக் காட்டியிருக்கிறோம். குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். நூற்றுக்கு நூறு சரியாக இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. இதிலே டிஃபெக்ட் இருக்கக் கூடும். திறமையற்றவர்கள் இருக்கக்கூடும். ஆனால், அதை வைத்துக்கொண்டு அத்தனை பேரும் அந்த நிலைமைக்கு வருகிறார்கள் என்று முடிவு செய்துவிட முடியாது. இருக்கும் குறைகள் என்னவென்று பார்த்து அவைகளைக் களைய வேண்டும். குற்றங்குறைகள் இருந்தால், அவைகள் நீக்கப்பட வேண்டும். அதை ஒப்புக்கொள்கிறேன். அதிலே கருத்து வேறுபாடில்லை. எல்லோருடைய நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் வைத்துத்தான் பணியாற்றுகிறோம். ஆனாலும் ஒப்பிட்டுக் காட்ட வேண்டிய நிலைமை வருகிறது. எது சிறந்தது என்ற நிலைமை வருகிறபோது, 'கம்பேரிசன்' தான் வருகிறது. அந்த வகையிலே ஆண்டவனுக்கு இணையாக எதுவும் இல்லாததால்தான், ஒப்பிட முடியவில்லை என்று சொல்கிறார்கள். 'கம்பேரிசன்' என்ற முறையிலே இந்தியா, இங்கிலாந்து என்ற அளவிலே இல்லாவிட்டாலும், இந்தியாவிலே இருக்கும் 22 மாநிலங்களையும் எடுத்து அவற்றோடு ஒப்பிட்டுக்கொண்டால், எல்லா இடங்களிலேயும் ஓரளவுக்குக் குறைபாடுகளும், குற்றங்களும் இருக்கக்கூடும். அவைகள் இல்லவே இல்லை என்று சொல்லவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்த காலத்திலேயும் சரி, அதைத் தொடர்ந்து வந்த காலத்திலேயும் சரி, இப்போதும் சரி ' 'The best administration ' என்ற அளவிலே, இந்தியாவிலே இருக்கும் 22 மாநிலங்களிலேயும், இன்றைக்கும் தமிழகம் தான் முன்னணியிலேயே, மிகவும் நல்ல முறையிலே இருக்கிறது. அந்த முறையிலே பார்க்கும்போது, இதன் மூலம் ஒன்றை உணர்த்த ஆசைப்படுகிறேன். ஓரளவுக்கு இருக்கிற நிலைமைகளைச் சமாளித்தாலும், இப்போது இருக்கும் செலவினங்களைப் பார்க்கும்போதுகூட, நாம் ஓவர்டிராப்ட் வாங்கும் அளவுக்கு நம் மாநிலத்தின் நிதி நிலைமையைக் கொண்டு போய்ச் சேர்க்காத அளவுக்கு நிதானமாக, செம்மையாக நாம் பணியாற்றி வருகிறோம் என்பதை இந்த வாய்ப்பிலே சொல்லிக்கொள்கிறேன். மாநிலங்கள் ஓவர்டிராப்ட் வாங்கின கணக்கை எடுத்துப் பார்த்தால், 1979-80-லே பல மாநிலங்கள் சேர்ந்து





450 கோடி ரூபாய்க்கு ஓவர்டிராஃப்ட் வாங்க வேண்டிய நிலைமைக்கு அவைகள் வந்திருக்கின்றன. 1980-81-லே பல மாநிலங்கள் சேர்ந்து 650 கோடி ரூபாய்க்கு ஓவர்டிராப்ட் வாங்கின. 1981-82-லே 15 மாநிலங்கள் சேர்ந்து 1,150 கோடி ரூபாய்க்கு ஓவர்டிராப்ட் வாங்கின. அந்த வகையிலே பார்க்கும்போதுதான். நேற்றைக்கு முன்நாள் ராஜ்ய சபையிலே பேசும்போதுகூட, இந்தியாவின் நிதியமைச்சர் திரு. பிரணாப் முக்கர்ஜி அவர்கள், 15 மாநிலங்கள் ஓவர் டிராப்ட் வாங்க வேண்டிய அவசியத்திற்கு வந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டிச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே முதலிடம் ராஜஸ்தான் மாநிலம் பெற்றிருக்கிறது. இரண்டாவது இடத்தை வங்காள மாநிலமும், மூன்றாவது இடத்தை பஞ்சாப் மாநிலமும் பெற்றிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அப்போதுதான் திரு. ஜோதிபாசு அவர்கள், மாநிலத்தினுடைய நிதியாதார வாயில்கள் கூடாமல் இருப்பதற்கும், கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கும் காரணமாக இருப்பது அரசியல் அமைப்புச் சட்டம் தான் என்றும், அது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அந்த வகையிலே பார்த்தால்கூட, இந்த 15 மாநிலங்களும் ஓவர்டிராப்ட் வாங்கும்போது, தமிழகம் அதை வாங்க வேண்டிய தேவையிலே இல்லை. அண்மையில் ஓவர்டிராப்ட் வாங்காமல் இருந்த ஆந்திரா மாநிலம்கூட 1 கோடி சில்லரை ரூபாய் ஓவர்டிராப்ட் ஆக வாங்கியிருக்கிறது. அதைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"Ardhra Pradesh has joined the select list of 15 States which have over-drafts on the Reserve Bank of India".

என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல,

"All the same, it shows the mismanagement of the finances by the State Government in recent years."

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், அப்படிப்பட்ட நிலைமைக்கு இந்த மாநில அரசு ஆளாகவில்லை, அந்த நிலைமையை நாம் சமாளித்துக்கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு நம்முடைய நிதிநிலைமை காப்பாற்றப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல . . .

**திரு. ஆ. நல்லசிவன்:** 'ஓவர்டிராப்ட்' வாங்காதவர்கள் என்பதிலே என்ன பெரிய கிரெடிட் என்று தெரியவில்லை. மாநிலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி வாயில்கள் போதுமானதாக இல்லாததால், மக்களுக்குத் தேவைப்படும் பணிகளை ஆற்ற வேண்டும் என்ற கடமை வரும்போது, அவைகளை நிறைவேற்ற முடியாத நிலை வந்தால், வாங்குகிறார்கள். நாம்

கொடுத்த பணம்தான் ரிசர்வ் வங்கியிலே இருக்கிறது. வேறு மாநிலங்கள் எல்லாம் மக்களின் தேவைகளை உணர்ந்து, அந்த எல்லையையும் மீறி ஓவர் டிராப்ட் வாங்கியிருக்கிறார்கள். நாம் வாங்காமல் இருப்பதனால், என்ன பெரிய கிரெடிட்? ஓவர்டிராஃப்ட் என்று சொன்னவுடனே, என்ன அவப்பெயர் வந்துவிடப் போகிறது? இந்த அரசு அந்தப் பணிகளைச் செய்யவில்லை. அரசுக்கு வரவேண்டிய பணம்தான் அங்கே வங்கியிலே இருக்கிறது.

(முற்பகல் 11.30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சொற்களைக் கூர்ந்து கவனித்தால், நான் இதைக் குறைபாடு என்றோ, அல்லது தவறு என்றோ அல்லது சட்டத்திற்குப் புறம்பானது என்றோ சொல்லவில்லை என்பது புலப்படும். இருக்கிற நிலைமைகளைத்தான் நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். சட்டப்படிதான் ஓவர்டிராப்ட் வாங்குகிறார்கள். சட்டப்படி இல்லை என்றால், ரிசர்வ் பேங்கே அதை அனுமதிக்காது. நான் சொன்னதெல்லாம் ஓவர்டிராப்ட் வாங்குகிற அளவுக்குக்கூட இந்த மாநில அரசு போகவில்லை என்பதுதான். அதிலே நாம் 'கிரிடிட்' எடுத்துக்கொள்கிறோமே தவிர, அதைத் தவறு என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

ஐந்தாண்டுத் திட்டங்களின் வளர்ச்சி கருதி, மாநிலம் வளர்ச்சி பெற வேண்டும் என்று சென்ற காலத்தில் செலவழிக்கப்பட்ட திட்டச் செலவுகளின் அடிப்படையில்கூட, நாம் இடர்பாடுகள் ஏற்படாத அளவுக்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று, திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகிறோம் என்பதை நான் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே சிறப்பாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். அதை மீண்டும் இந்த அவைக்கு நினைவு படுத்துவது உகந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீட்டில் தமிழகத்திற்கு 3,150 கோடி ரூபாய் அளவுக்கு திட்டக் குழுவும் மத்திய அரசும் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக கிட்டத்தட்ட 1,200 கோடி ரூபாய் அளவுக்குத்தான் மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு ரூ. 3,150 கோடி அளவுக்கு இருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டில் அதாவது முதலாண்டில் நம்முடைய பங்கையும் மற்ற எல்லோருடைய பங்கையும் சேர்த்து 408.25 கோடிக்கு திட்டக் குழுவில் மதிப்பீடு செய்து ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால் இந்த மாநிலத்தின் திட்டச் சாதனையாக நாம் ரூ. 408.25 கோடி என்ற



அளவில் நின்று விடாமல் ரூ. 456.46 கோடி அளவுக்கு நாம் திட்டப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் மத்திய அரசும், திட்டக் குழுவும் நம்மைப் பாராட்டுகிற அளவுக்கு நாம் கூடுதலாக ரூ. 48.21 கோடிக்கு பணிகளை நிறைவேற்றியிருக்கிறோம்.

அதைப் போலவே 1981-82 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு நமக்கு ஒப்புதல் அளித்தது ரூ. 504 கோடிதான். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே நான் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது மத்திய அரசின் ஒப்புதல் ரூ. 514 கோடி அளவுக்கு இருந்தாலும், நாம் நம்முடைய நிதியாதாரங்களைக் கொண்டு ரூ. 559.46 கோடி அளவுக்குத் திட்டப் பணிகளை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைச் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனாலும், உள்ளபடியே நாம் செய்திருக்கிற சாதனையின் அடிப்படையில் பார்த்தால், இறுதியாக ரூ. 625.53 கோடி அளவுக்கு நாம் திட்டப் பணிகளை மேற்கொள்ள முடிந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது மத்திய திட்டக் குழு நமக்கு ஒப்புதல் அளித்தது ரூ. 514 கோடிக்குத்தான் என்றாலும், மாநிலத்தின் வளர்ச்சி கருதி, மாநிலத்தின் நன்மையைக் கருதி, பல்வேறு நலன்களைக் கருதி, நமது அரசு 111.53 கோடி ரூபாய் அளவுக்கு கூடுதலாகச் செலவு செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, 1982-83 ஆம் ஆண்டுக்கு அதாவது இந்த ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது ரூ. 711 கோடி அளவுக்குத்தான். அதாவது சென்ற ஆண்டு நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் மாநில அரசு கூடுதலான ரிசோர்சஸ் சேர்க்க வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில், நாம் அதற்கு ஏற்பாடு செய்து, அதில் அவர்களுக்கு நம்பிக்கையும் திருப்தியும் ஏற்பட்டதன் காரணமாக, இந்த ஆண்டுக்கு நாம் ரூ. 711 கோடி அளவுக்குத் திட்டங்களைத் தீட்டி அங்கே கொண்டு சென்றபோது, அது குறித்து சில பல வினாக்களை மட்டுமே எழுப்பிவிட்டு, அதை அப்படியே மத்திய அரசிலும் திட்டக் குழுவிலும் ஏற்றுக்கொண்டார்கள். சென்ற ஆண்டுத் திட்டத்தோடு இந்த ஆண்டுத் திட்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், கிட்டத்தட்ட 40 சதவீதம் அளவுக்கு திட்ட ஒதுக்கீட்டில் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருப்பது நமக்கு விளங்கும். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும், சென்ற ஆண்டு திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீட்டுத் தொகை இவ்வளவு அதிகமான சதவீதத்திற்கு உயர்த்தப்படவில்லை. அந்த அளவுக்கு நாம் மட்டும்தான் பெற்றிருக்கிறோம். ஆக இந்த ஆண்டுக்கு ரூ. 711 கோடி அளவுக்கு ஒப்புதல் பெற்றிருந்தாலும், நான்

ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தபடி, நாம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளின் தன்மையில் நாம் எதிர்பார்ப்பது ரூ. 772.66 கோடி அளவுக்கு நம்முடைய சாதனையைக் கொண்டு செல்ல முடியும் என்பதாகும். இந்தத் தன்மையின் அடிப்படையில் பார்த்தால், சுமார் ரூ. 61.61 கோடி அளவுக்கு நாம் கூடுதலாகத் திட்டப் பணிகளுக்காகச் செலவு செய்ய முடியும் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நிலைமைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து, அறிந்து தெளிவாக எடுத்துச் சொல்லுகிற திறமையும் வாய்ப்பும் வசதியும் பெற்ற ரிசர்வு வங்கியின் தலைவராக இருக்கிற திரு. ஐ.ஜி. பட்டேல் அவர்கள் அண்மையில் ஐதரா பாத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது, ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இந்தியாவிலேயே தமிழ் நாட்டிற்குத்தான இந்த ஆண்டு மத்திய அரசு அதிகமான சதவிதத்திற்கு ஆண்டுத் திட்டத் திற்கான ஒதுக்கீட்டை அதிகரித்திருக்கிறது. அதாவது சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 39.31 சதவீதம் கூடுதலாக தமிழ் நாட்டிற்கு மட்டுமே திட்டத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிவிட்டு, அதே நேரத்தில் திட்டக் குழுவின் ஒதுக்கீடு அதிகமான அளவுக்குச் செய்யப் பட்டிருக்கிறது. இந்த நிலையில் சிறப்பான நிதி நிர்வாகம் தமிழகத்தில்தான் நடைபெறுகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும் என்று குறிப் பிட்டிருக்கிறார் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பதையும் அவைகள் எல்லாம் முறைப்படி நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும், மத்திய அரசின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்படுகிற திட்டங்களின் தன்மைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் ஆராய்ந்து அறிவதற்காக, இந்தியாவினுடைய திட்டக் குழுவின் தலைவரும், இந்தியப் பிரதமருமான திருமதி இந்திரா காந்தி அவர்கள், அண்மையில் 5, 6 மாநிலங் களுக்குச் சென்று பார்வையிட்டுவிட்டு, தமிழகத்திற்கும் வருகை தந்திருந் தார்கள்.

தமிழகத்திற்கு வருவது குறித்து கடந்த செப்டம்பர் 9 ஆம் தேதி அவர்கள் ஒரு தந்தி கொடுத்துவிட்டு, 11 ஆம் தேதியே தமிழகத்திற்கு வர இருக்கிறேன் என்று தெரிவித்திருந்தார்கள். "நிலைமையை நேரில் பார்த்து ஆராய வருகிறேன், நீங்கள் அங்கே இருக்கிற நிலைமையை எனக்குத் தெளிவு படுத்துங்கள்" என்று குறிப்பிட்டு எங்களுக்கு 9 ஆம் தேதி தந்தி கொடுத்



தார்கள். இடையில் ஒரு நாள்தான் இருந்தது. எனவே ஒரு வார காலம் கழித்து வந்தால், நாங்கள் உரிய அதிகாரிகளிடமிருந்து திட்டப்பணிகள் குறித்து சரியான விவரங்களையும் புள்ளிவிவரங்களையும் சேகரித்துத் தருவதற்கு வசதியாக இருக்கும் என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போது, அவர்கள் தாம் வெளிநாடுகளுக்கு இன்றியமையாப் பயணம் செய்ய திட்டம் போட்டுவிட்டதால், உங்களுடைய வேண்டுகோளை ஏற்பதற்கில்லை என்றும், குறிப்பிட்டபடியே வருகிறேன் என்றும், இருப்பதை வைத்துக் கொண்டு எங்களுக்குத் தகவல் கொடுங்கள் என்றும் சொன்னார்கள். அந்த வகையில் கடந்த ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதி அவர்கள் தமிழகத்திற்கு வந்திருந்தார்கள். மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை இங்கே பல்வேறு நிலைமைகளைப்பற்றியும் ஆராய்ந்தார்கள். ஆராய்ந்து பார்த்த பிறகு, நிருபர்களிடம் இந்தியப் பிரதமர் பேசும்போது, என்ன குறிப் பிட்டார்கள் என்றால், "தமிழ் நாட்டில் திட்டப் பணிகள் மிகவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். தமிழகத்தில் திட்டப் பணிகளின் வளர்ச்சியைக் கண்டு மத்திய அரசு எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு உதவி செய்வோம். இங்கே இருக்கும் நிலைமை எனக்குத் திருப்தியளிப்பதாக இருக்கிறது. குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது" என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்போதே இங்கே இருக்கும் சிலர் "அவர்கள் கணக்குப் பார்த்து இந்த அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்ய வருகிறார்கள், கணக்கைப் பார்க்க வருகிறார்கள்", என்று கூறினார்கள். சிலபல ஏடுகள்கூட அப்படி எழுதின. ஆயினும்கூட நிலைமை வேறுவிதமாகத் தான் அமைந்தது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிற வகையில் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியோடு அவைகளின் பணிகளை நிறுத்திவிடவில்லை. மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடிய வகையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும், ஆக்கப் பணிகளையும் ஊக்கப் பணிகளையும் நாம் மேற்கொண்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சில முக்கியமான துறைகளில் ஒதுக்கப் பட்டதற்கும் மேல், கூடுதலாகச் செலவழிக்கும் தன்மையை மேற்கொண்டு அதன் காரணமாக அதிகமான பொறுப்பைச் சுமக்கிற அளவுக்கு இந்த அரசு தன் பணிகளை நிறைவேற்றியிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப் பல்வேறு இடங்களில் நிதிநிலை அறிக்கையிலேயே

நான் குறிப்பிட்டிருக்கிறேன். வறட்சிப் பணிகளுக்காக நாம் எதிர்பாரா சுமையைத் தாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதன் காரணமாக சுமார் ரூ. 53.49 கோடி செலவிட வேண்டி ஏற்பட்டது. பிறகு தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையில் 150 வட்டாரங்களில் அதைச் செயல்படுத்த ரூ. 44 கோடி அளவுக்குக் கூடுதலாகச் செலவழிக்கும் நிலை ஏற்பட்டது. அதோடு, மின்சார வாரியம், குடிமைப் பொருள் வழங்கு நிறுவனம், போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அதிகப்படியாக ரூ. 84 கோடி அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கல்வித் துறையில் திட்ட ஒதுக்கீடு செய்ததைவிட அதிகமாகச் செலவழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதன் காரணமாக அரசுக்கு ரூ. 86 கோடி அதிகம் சுமை ஏற்பட்டது. மருத்துவத் துறையில் கூடுதலாக ரூ. 6 கோடி அளவுக்கும் கூடுதல் சாலைகளை அமைக்க ரூ. 7 கோடி அளவுக்கும், காவல் துறைக்கு ரூ. 10 கோடி அளவுக்கும் புதிய பல்கலைக் கழகங்கள், நீதித் துறை, வேளாண்மை, பாசனம், தொழில்கள் ஆகியவற்றிற்காக ரூ. 97 கோடி அளவுக்கும், ஆக மொத்தம் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அளவுக்கு சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததைவிட சில குறிப்பிட்ட துறைகளில் நாம் வளர்ச்சி காண வேண்டும் மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற அடிப்படையில் செலவழிக்கப்பட்டது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆக, இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் அதன் விரிவாக்கத்தையும், அதன் வளர்ச்சியையும் கணக்கில் கொண்டு, 1981-82 ஆண்டைக் காட்டிலும் 1982-83-ல் எந்த அளவுக்கு வளர வேண்டுமோ அந்த அளவுக்கு வளர்ச்சியை எய்த வேண்டுமோ அந்த அளவுக்கு எய்த வேண்டும் என்ற அடிப்படையில் கணக்கிட்டு, இந்த ஆண்டு தேவையான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பதை நான் நிதிநிலை அறிக்கையிலேயே தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

சென்ற ஆண்டு மருத்துவம்—சுகாதாரத்திற்கு ரூ. 127.94 ஒதுக்கீடு செய்திருந்தோம். ஆனால் இந்த ஆண்டு ரூ. 150.63 கோடி அளவுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

கல்வித் துறையை பொறுத்த வரையில், சென்ற ஆண்டு நாம் ரூ. 253.13 கோடி ஒதுக்கீடு செய்திருந்தோம். ஆனால் இந்த ஆண்டு ரூ. 296.17 கோடி அளவுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம். வீட்டு வசதிக்காக சென்ற ஆண்டு ரூ. 42.51 கோடி மட்டும் ஒதுக்கீடு செய்திருந்ததற்கு மாறாக இந்த ஆண்டு



ரூ. 48.99 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அதைப்போலவே நகர்ப்புற வளர்ச்சிக்காக சென்ற ஆண்டு ரூ. 4.64 கோடி ஒதுக்கப்பட்டிருந்த நிலையினை மாற்றி, இந்த ஆண்டு ரூ. 11.76 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். வேளாண்மைக்கு சென்ற ஆண்டு ரூ. 54.31 கோடி என்று ஒதுக்கப்பட்டிருந்த நிலையை மாற்றி, இந்த ஆண்டு ரூ. 68.74 கோடி என்று உயர்த்தியிருக்கிறோம். அதைப் போலவே கால்நடை வளர்ச்சிக்கு முன்பு ரூ. 15.71 கோடி ஒதுக்கியிருக்கிறோம். இப்போது ரூ. 18.20 கோடி ஒதுக்கியிருக்கிறோம். சில இனங்களில் குறைவாக இருக்கிறதே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்கிறார். அதற்கு நான் இறுதியில் பதில் அளிக்க விருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில், ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் ரூ. 84.05 கோடி செலவழிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது ரூ. 68 கோடி மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஏறத்தாழ ரூ. 16 கோடி அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தன்னுடைய உரையிலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு கடைசியில் விளக்கம் தருகிறேன்.

அதே மாதிரி சிறு தொழில்கள், கிராமத் தொழில்களுக்கு சென்ற ஆண்டு 12 கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 13 கோடியே 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நாம் எதிலும் பின்தங்கிவிடவில்லை என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். அதுமட்டுமல்லாமல் புதிதாக ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 66 இனங்களில் புதிய திட்டங்கள், விரிவாக்கத் திட்டங்கள், மேம்பாட்டுத் திட்டங்கள், நல்வாழ்வுத் திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள் போன்றவைகளுக்காக கூடுதலாகச் செலவழிக்க பொறுப்பு ஏற்றுக்கொள்ள இருக்கிறோம் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால், அவை முழுவதையும் எடுத்துச் சொல்லாமல் அவைகள் நிதிநிலை அறிக்கையில் ஆங்காங்கே தெளிவுபடுத்தப்பட்டிருக்

கின்றன என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன். 66 இனங்களுக்குக் கூடுதலாகச் செலவழிக்கப்படுகிறது, ஒன்றுமே செய்யாமல் விடவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

சராசரி வருமானத்தைப்பற்றி நேற்று சொன்னார்கள். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை ஓரளவிற்கு வளர்த்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், அகில இந்திய அளவிலே நம்முடைய தமிழகத்தின் முன்னேற்றத்தில் எந்த அளவுக்கு அக்கறை காட்டியிருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1974-75 முதல் 1976-77 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் சராசரி தனி நபர் வருமானம் ரூபாய் 585 ஆக இருந்தது. அதே காலத்திலே இந்தியாவின் சராசரி தனி நபர் வருமானம் ரூ. 644 ஆக இருந்தது. 1977-78 முதல் 1979-80 வரை மூன்றாண்டுக் காலத்தில், தமிழ்நாட்டில் சராசரி தனி நபர் வருமானம் ரூபாய் 690 ஆக உயர்ந்தது. இதே காலத்தில் இந்தியா முழுவதற்கும் தனி நபர் வருமானம் ரூ. 688 ஆக உயர்ந்தது. தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் ஆண்டுதோறும் 5.5 சதவீதமாக உயர்ந்தது என்றால், அதே காலத்திலே அகில இந்தியாவில் சராசரி 2.2 சதவீதம்தான் உயர்ந்திருக்கிறது. அந்த வகையிலே பார்க்கும் போது, அகில இந்திய சராசரித் தன்மையைவிட தமிழ் நாட்டினுடைய தனி நபர் சராசரி வருமானம் ஆண்டுக்கு உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

தொழில் உற்பத்தி முன்னேற்றத்தை எடுத்துக்கொண்டாலும், 1970 முதல் 1976 வரை ஆறு ஆண்டுக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 5.5 சதவீதம் உயர்ந்திருக்கிறது. 1976, 1977-ல் அது 8 சதவீதமாக அமைந்திருந்தது. 1978, 1979 ஆகிய இரண்டாண்டுகளில் 10 சதவீதமாக இருந்தது. இப்படி தொழில் உற்பத்தியிலே முன்னேற்றம் காட்டியிருக்கிறோம். அகில இந்திய சராசரி 5.5. சதவீதமாகத்தான் இருந்தது என்பதைக் குறிப்பிட்டுக்கூற விரும்புகிறேன். தொழில் முன்னேற்றத் தன்மைகளில் ஓரளவிற்கு நாம் முன்னேறி வருகிறோம் என்றாலும், நான் முதலிலே சொன்ன மாதிரி வசதி வாய்ப்புகளை வைத்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

மத்திய உதவி தொழில் அமைச்சராக இருந்த திரு. வி. ஏ. சங்மா அவர்கள் தஞ்சாவூருக்கு வந்து பல்வேறு பகுதிகளை பார்வையிட்டு நிருபர்களிடையே பேசும்போது, 2—6—1981 அன்று ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "கடந்த இரண்டாண்டுகளில் தமிழகம் முன்னேறி இருக்கிறது. தமிழ் நாட்டில் புதிதாக தொழில் தொடங்க 1980 ஆம் ஆண்டில் 52 பூர்வாங்க அனுமதி கடிதம் வழங்கப்



பட்டிருக்கிறது. முந்தைய ஆண்டுகளைவிட இது 'எண்ணிக்கையில்' அதிகமாகும். பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் துவக்க மத்திய அரசு மாநிலங்களுக்கு மானியம் வழங்குகிறது. இந்த உதவியைப் பெறுவதில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. ரூபாய் 15 கோடிக்கு மேல் பெற்றிருக்கிறது. இது மொத்தத்தில் 15 சதவீதமாகும். தமிழ்நாட்டில் தொழில்கள் ஆரோக்கிய நிலையில் இருக்கின்றன. 20,840 சிறு தொழில்களில் 955 நலிந்தவைகளாக இருக்கின்றன. 378 பெரிய தொழில்களில் 33 நலிந்தவைகளாக இருக்கின்றன." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தினுடைய பொதுவான பொருளாதார நிலையையும் இங்கே ஏற்பட்டிருக்கக் கூடிய வளர்ச்சி ஆகிய தன்மைகளையும் பொருளாதார வல்லுநர் டாக்டர் பி. நடராஜன்—அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும்—ஈஸ்டர்ன் எக்கானமிஸ்ட் என்ற பொருளாதார பத்திரிகையில் "இண்டஸ்ட்ரியல் அவுட்லுக் ஆன் டமில்நாடு" என்று தலைப்பிட்டு ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார். தமிழ்நாடு பற்றித் தனியாக வெளியிட்ட சிறப்பிதழில்—1981 அக்டோபர் 9 நாளிட்ட—எழுதிய கட்டுரையில் சிறப்புற ஒன்றைச் சொல்லியிருக்கிறார். இதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இருக்கின்ற சூழ்நிலையை ஓரளவிற்கு பொதுவாக ஆராய பயன்படும் என்று நினைக்கிறேன்.

"The vacuum created by the declining Central investment was appreciably made good by the resilience of the small units sector and more active role by the State Government. The small units continued their effort in respect of numbers and output and employment. In employment, especially, they ranked first among the States of India, accounting for about 15 per cent of the All-India total. The growth of industrial co-operative too was impressive during this period The State Government, for its part, set up a number of financial and other agencies like the SIPCOT, TIDCO, TIIC and SIDCO to promote new activity. As a result, the State maintained its lead in select areas. Its share in leather and leather products remained at about 70 per cent. In the manufacture of auto-ancillaries, machinery and machine tools, its contribution was appreciable, next only to Maharashtra. In 1978-79, the State's getting of industrial licences ranked third among the States. In the last two years, there has been a gradual improvement in the industrial climate. Industrial relations seem to have become more congenial. The last two Budgets also

carried some incentives. Here, if the Centre has the responsib lity for investment, the State's responsibility is no less in effic ently managing them."

என்பதை மிகத் தெளிவுபட குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார்கள். அதனுடை தமிழாக்கத்தையும் சொல்ல விரும்புகிறேன். "மத்திய அரசின் முதலீ குறைந்துகொண்டு வருவதன் மூலம் ஏற்படும் வெற்றிடம், சிறு தொழில்களை பெருக்குதலாலும், மாநில அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாலு நிறைவு செய்யப்படுகின்றன. சிறு தொழில்கள் தன்னுடைய எண்ணிக்கை யையும், உற்பத்தியையும் பெருக்குவதிலும், வேலை வாய்ப்பை உருவாக்கு வதிலும் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. சிறு தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கும் தன்மையை எடுத்துக்கொண்டால், தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்று விளங்குகிறது. கிட்டத்தட்ட 15 சதவீதப வேலைவாய்ப்பு தமிழ்நாட்டில் இருக்கின்றது. இந்தக் கால கட்டத்தில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி கவர்ச்சி தரத்தக்க முறையில் அமைந்திருக் கிறது. மாநில அரசு தன்னுடைய பங்காக பல புதிய நிதி நிறுவனங்களையும், மற்ற தொழில் நிறுவனங்களையும்—சிப்காட், டிட்கோ, டி.ஐ.ஐ.சி., சிட்கோ போன்ற நிறுவனங்கள்—உருவாக்கியிருக்கின்றன. இதன் காரணமாக தமிழகம் தன்னுடைய முன்னோடித் தன்மையை நிலைநாட்டியுள்ளது. தோல், தோல் பொருள்கள் உற்பத்தியில் 70 சதவீத நிலையை தமிழகம் காப்பாற்றி வருகிறது. மோட்டார் வண்டி உதிரி பாகங்கள், இயந்திரங்கள், ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் மகாராஷ்டிரத்திற்கு அடுத்த இடத்தை தமிழகம் பெற்றிருக்கிறது. 1978-79 ஆம் ஆண்டில், தொழில் உரிமங்களைப் பெறுவதில் மாநிலங்களுக் கிடையே தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. சென்ற இரண்டாண்டுகளில் தொழில் துறையில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டிருக் கிறது. தொழில் துறையில் உறவுகள் சுமுகமாக இருக்கின்றன. சென்ற இரண்டு நிதிநிலை அறிக்கைகள் தொழில்களுக்கான ஊக்கச் சலுகைகளைக் கொண்டுள்ளன. தொழில் முதலீடுகளைச் செய்வதில் மத்திய அரசுக்குப் பொறுப்புகள் இருந்தாலும், அவைகளைத் திறம்பட நிர்வகிப்பதில் மாநில அரசுக்குள்ள பொறுப்பில் எந்த விதத்திலும் குறைவில்லை." என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். மாநிலத்தின் நிதி ஆதாரங்கள், இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லி வாதாடுகிறோம். பல ஆட்சிக் காலத்திலே தொடர்ந்து வருகிற நிலைமையை எடுத்துச் சொல்லுகிறோம். 1978 வரையில் கணக்கு வந்திருக்கிறது. அந்தக் கணக்கைப் பார்த்தால், தெளிவு ஏற்படும். பெரிய அளவிலே ஒன்றும் நடைபெறவில்லை. 1977-78 வரையில் உள்ள கணக்கைப் பார்த்தால், மத்திய அரசு தொழில் முதலீடு செய்வதில்





மாநிலங்களுக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்றால், பீகார் மாநிலத்தைப் பொறுத்தவரையில், 2,811 கோடியே 33 இலட்சம் ரூபாய், மத்திய பிரதேசத்திற்கு 1,793 கோடியே 59 இலட்சம் ரூபாய், மேற்கு வங்கத்திற்கு 1,058.83 கோடி ரூபாய், மகாராஷ்டிரத்திற்கு 909 கோடியே 18 இலட்சம் ரூபாய், ஒரிசாவிற்கு 654 கோடியே 41 இலட்சம் ரூபாய், குஜராத்திற்கு 626 கோடியே 93 இலட்சம் ரூபாய், தமிழ்நாட்டிற்கு 563 கோடியே 40 இலட்சம் என்று இருப்பதால், மத்திய அரசினுடைய இன்வெஸ்ட்மென்ட் குறைந்திருக் கிறது. இது வளர்ந்தால், தொழில்கள் ஏற்பட்டு அதன் மூலம் மற்ற ஆன்சிலரி தொழில்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்று சொல்லுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 24 வட்டங்களைப் பின்தங்கிய வட்டங்கள் என்று கருதி, அந்த வட்டங்களுக்கு சில பல சலுகைகளை, உதவிகளைச் செய்ய இருக்கிறோம்.

(முற்பகல் 11-50)

**திரு. ப. மாணிக்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய முதலீட்டைப் பொறுத்த வரையில் பீகாரில் முதலீடு முதன்மையாகவும், தமிழகத்தில் அதன் முதலீடு குறைவாகவும் இருக்கிறது என்ற விவரங்கள் சொல்கிறார்கள். அது சரிதானா? மத்திய அரசிடம் நாம் கேட்டு, பல்வேறு துறைகளிலே முதலீடு வேண்டும் என்று கேட்டு மறுக்கப்பட்டதா என்ற விவரத்தைச் சொன்னால், நல்லதாக இருக்கும். பீகாரிலே கனி வளங்கள் நிறைய இருக்கின்றன. நமக்கு இருக்கின்ற பொதுத் துறையிலே ஆரம்பிக்க வேண்டுமென்றபோது மறுக்கப்பட்டிருக்கிறதா? தொகை என்ற அடிப் படையில் அல்லாமல், எந்த வகையில் அவை ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதிலே இருக்கின்ற விவரங்களை நான் விவரமாக எடுத்துச்சொல்ல முடியும். இன்னொரு வாய்ப்பிலே அதைப்பற்றி முழுவதுமாக எடுத்துச் சொல்கிறேன். கனிவளம் மட்டுமே என்று எடுத்துக்கொள்ளவில்லை. கனி வளங்கள் என்று இல்லா மலேயே ரூ. 500 கோடி, ரூ. 600 கோடி என்று ஒதுக்கிச் செய்திருக்கிறார்கள். கோச் பேக்டரி என்று செய்திருக்கிறார்கள். ரா மெட்டீரியல் என்று இல்லை. அந்த அளவில் கோச் பேக்டரி வந்திருக்கிறது. நெய்வேலியிலே நமக்கு கனி வளம் இருக்கிறது. நிலக்கரி இருக்கிறது. மாக்னசைட் இருக்கிறது. இப்படியும் சிலபல இடங்களில் கனி வளம் இருக்கிறது. ஆனால் கனி வளம்

இல்லாமல், ரா மெட்டீரியல் இல்லாமல், மற்ற மாநிலங்களில் என்ன செய்திருக்கின்றார்களோ அதுபோல இங்கேயும் செய்யலாம். எந்தெந்த வகையிலே நமக்கும் காம்பென்சேட் பண்ண முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய வேண்டும். ஆகவே பீகார் மாநிலத்திற்குச் செலவழிக்கவே கூடாது என்று நான் சொல்லவில்லை. அங்கே நிலக்கரி இருக்கிறது, இரும்பு இருக்கிறது ஆகவே அதைப்போலவே எங்களுக்கும் தாருங்கள் என்று நாம் கேட்கலாம் அவர்களுக்குக் கொடுக்கின்ற வாய்ப்புக்களைப்போல், நமக்கு இருக்கின்ற மற்ற மாநிலங்களில் கனி வளங்கள் குறைவாக இருக்கின்ற மாநிலங்களுக்குக் கொடுப்பதுபோல், ரா மெட்டீரியல் இல்லாமல் இருக்கின்ற, தேவைப்படாமல் இருக்கின்ற தொழிற்சாலைகள் அமைக்க வேண்டிய அளவுக்கு நிதி வேண்டும் முதலீடு வேண்டும் என்று கேட்டுக் கொள்ள முடியும். அதைத்தான் நான் இங்கே, சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், எலெக்ட்ரானிக் நிறுவனம் இருக்கிறது. மருத்துவத்தில் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் இருக்கின்றன. கெமிக்கல் நிறுவனங்கள் இருக்கின்றன டிராக்டர் தயாரிக்கும் நிறுவனங்கள் எல்லாம் வைக்க முடியும். எதையெல்லாம் வைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று பார்க்கிறோம். ஒரு குறிப்பாகச் சொல்கிறேனே தவிர, இதைப்பற்றி பின்னர்தான் விரிவான அறிக்கையிலே எடுத்துச் சொல்ல முடியும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதிலைத் தந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கு மத்திய அரசு இன்னொரு கோச் பேக்டரியைப்போல் ஒரு நிறுவனத்தை கோயம்புத்தூர் மாவட்டத்திலே திறப்பதற்கு முன்வந்து நம்முடைய மாநில அரசாங்கம் அதிலே கால தாமதம் செய்த காரணத்தினால், அந்தத் தொழில் பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திராவிற்குப் போய்விட்டது என்று எல்லாப் பத்திரிகைகளிலும், அரசியல் தலைவர்களும் சுட்டிக்காட்டியிருக்கின்ற நிலைமை வந்திருக்கிறது. அதற்குக் காரணம் இந்த மாநிலம் செய்த தவறு என்று சொல்கிறார்கள். இந்த அரசு கால தாமதம் செய்து விட்டது என்று மத்திய சார்பிலே குறைசொல்லப்பட்டது. இதைப்பற்றி அரசு என்ன சொல்கிறது?

**திரு. க. இராமமூர்த்தி :** மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசு முதலீடு செய்வதாக அறிவித்திருக்கிற தொகை ரூ. 500 கோடியிலே நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்குச் செய்திருக்கின்ற முதலீடு சேர்க்கப்படவில்லை.



அந்தத் தொகை சேர்க்கப்படாமல்தான் இந்தத் தொகை என்று என் தகவலுக்கு வந்திருக்கிறது. அது சரிதானா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் 1978 ஆம் ஆண்டு வரையிலேதான் கணக்குச் சொல்கிறேன். நான் லேட்டஸ்ட் கணக்கைச் சொல்லவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே கிளப்பினார்கள். அதற்கு பதில் நான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். வேலெண்ட் சம்பந்தமாகச் சொன்னார்கள். கோச் பேக்டரி பற்றிச் சொல்லி, அதிலே கால தாமதம் செய்ததனால் அந்தத் திட்டம் போய்விட்டது என்றார்கள். அப்படி அல்ல. அதிலே இருந்த கண்டிஷன் மற்றவைகள்பற்றிச் சொன்னார்கள். நாம் போட்ட கண்டிஷன்கள் இருக்கின்றன. அந்த வகையிலே அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டிய பொறுப்பு அங்கு இருந்தது. அதுதான் காரணமாக இருந்ததே தவிர வேறல்ல. நாம் அந்த பேக்டரி வரவேண்டும் என்றுதான் விரும்புகிறோம். அதனால் பல வாய்ப்புக்கள் ஏற்படும் என்றுதான் இருந்தோம். அதிலே ஏற்பட்ட நிபந்தனைகள் காரணமாக, தகராறு வந்திருக்கிறது. கால தாமதத்தினால் அல்ல. இதைப்பற்றி ஏற்கெனவே விரிவான விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. மேலும் தரும்படியாகக் கேட்டால், கொடுக்க முடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் இரும்பாலைபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். சுமார் 560 கோடி ரூபாய் ஒருங்கிணைந்த உருக்காலை அமைக்க கேட்டபோது, ஒரு பகுதியாக ரூ. 126 கோடிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அப்படி ரூ. 526 கோடி கொடுத்திருந்தால், மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கும்.

அண்மையிலே மகிழ்ச்சி தரக்கூடியதாக ஒன்று வந்திருக்கிறது. எண்ணெய் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. 3 இடங்களிலே தோண்டி எடுக்க இருக்கிறோம். தரம் உயர்ந்ததாக இருக்கும். அந்த எண்ணெய் 15 ஆயிரம் பீப்பாய் அளவுக்கு ஒரு நாளைக்கு எடுக்க முடியும் என்று வந்திருக்கிறது. அப்படி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அது வளர்ந்தால், தமிழகம் தொழில் துறையிலே மிகவும் வளரும். அதற்கு மத்திய அரசு நல்ல முதலீடு செய்யும் என்று நான் கருதுகிறேன். இந்த எண்ணெய் கிடைப்பதன் காரணமாக நாம் அந்நியச் செலவாணியைக் குறைக்க முடியும். நம்முடைய நாட்டுப் பணம் வெளியே போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே

மத்திய அரசு அதற்கு ஊக்கம் தர முடியும். அதிலே அவர்கள் ஆக்கம் தர முடியும். இப்படி ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், அதிலே குறைபாடுகள் சொல்கிறோம். அவர்கள் காகிதத் தொழிற்சாலைக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு உலக பாங்கியிலேயிருந்து கடன் உதவி கூட பெற்றிருக்கிறது. அதைப் பெற்று நமக்குத் தந்திருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** ராணிப்பேட்டையிலே கூட B.H.E.L. தொழிற்பேட்டை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவர்கள் செய்யவே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஒப்பிட்டுக் காட்டுகின்ற வகையிலேதான் சொல்லிக்கொண்டிருக்கின்றேனே தவிர, வேறு வகையிலே அல்ல. Percentage of State in net domestic product. -ஐப் பொறுத்த வரையிலே, இந்தியாவிலே தமிழகம் 4-வது இடம் என்று பார்க்கிறபோது, மகாராஷ்டிரா 1-வது இடம் உத்தரப்பிரதேசம் 2-வது இடம். வெஸ்ட் பெங்கால் 3-வது இடம் என்று இருக்கிறது. நாம் மூன்றாவது இடம் என்பதிலிருந்து முன்னேறி இரண்டாவது இடத்திற்கு வந்து அதற்கு மேலும் முதல் இடத்திற்கு வரவேண்டும் என்ற அளவிற்கு முயற்சி செய்யவேண்டும். அதுபோலவே ஸ்டேட்ஸ் எக்னாமிக் பெர்பார்மன்சை எடுத்துக்கொண்டால் இந்திய ஆவரேஜ் 2.9 சதவீதமாக இருக்கிறது. தமிழகம் 4.1 சதவிகிதத்திலே இருக்கிறது. இன்றைக்கு குஜராத் 8 சதவிகிதத்திலே இருக்கிறது. அரியானா 5 சதவிகிதத்திலே இருக்கிறது. மகாராஷ்ட்டிரா 4.80 சதவிகிதத்திலே இருக்கிறது. பஞ்சாப் 4.6 சதவிகிதத்திலே இருக்கிறது. நாம் அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் மேலே வருவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். அதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இயற்கையிலே ஒரு அதிசயம் நடந்திருக்கிறது. 9 கிரகங்கள் ஒரே கோட்டிலே வருகின்றன. இங்கே இருக்கின்ற 8 கிரகங்களும்கூட எந்த வகையிலாவது ஒன்றாக வந்தால், நன்றாக இருக்கும். நம்முடைய காரியங்கள் இன்னும்கூட சிறப்பாக நடப்பதற்கு வழிவகை ஏற்படும். அந்த அளவுக்குச் சிறப்பான தன்மைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இப்படிப்பட்ட பணிகளையெல்லாம் ஆற்றிக்கொண்டு வருகிறோம்.



**திரு. ம. சங்கரலிங்கம்:** இயற்கையிலே ஆயிரம் வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் ஒரு அதிசயத்தைப்பற்றிச் சொல்கிறார்கள். அதைச் சுட்டிக் காட்டிச் சொல்கிறார்கள். எல்லா பேர்களும் ஒன்றாக வரவேண்டுமென்று சொல்கிறார்கள். தமிழகம் முன்னேறுவதிலே எந்த நேரத்திலும் நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், உறுதுணையாக இருப்போம், ஒத்துழைப்புத் தருவோம் என்பதை மகிழ்ச்சியோடு நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அது தான் நல்ல கோள், நல்ல குறிக்கோள், லட்சியம் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** உதாரணத்திற்காகத்தான் நான் கூறினேன். இயற்கையிலே 9 கிரகங்கள் ஒன்றாக வருகின்றன. அடுத்து இந்த கிரகங்கள் ஒன்றாக வருவதற்கு இன்னும் 510 ஆண்டுகள் ஆகும் என்று சொல்கிறார்கள். எப்போது எப்போது கேட்கிறோமோ அப்போது ஒத்துழைப்பு கிடைத்தால் போதும். அப்படி ஒத்துழைப்பு கொடுப்பதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். குற்றங் குறைகள்பற்றி தொடர்ந்து ஒத்திட்டுப் பார்க்கும்போது, தெரிகிறது. அந்தக் குறைபாடுகளை முழுமையாக்கக்கூடாது. ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், இந்த மனப்பான்மை வருகிறது. அந்த அடிப்படையிலேதான் பிற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், இப்படி குறைகள் தெரிகிறது. 40 ஆண்டுகளுக்கு முன் இருந்த சமுதாயத்தைவிட இப்போது கெட்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஒரு 25 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சமூக நிலை இப்போது இல்லை. கான்டெக்ட் அண்டு கோக்டர் கீழே போய்க்கொண்டிருக்கிறது. மற்ற சரக்குகள் எல்லாம் மேலே போய்க் கொண்டிருக்கின்றன. நம் நாட்டிலே மட்டுமல்ல, மற்ற நாடுகளில், ஐரோப்பா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளிலேகூட அந்த நிலைமைகள் இருக்கின்றன. நாளுக்கு நாள் குற்றங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. 30 ஆண்டுக் காலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், அது கூடுதலாகியிருப்பது தெரியும். அதை சதவிகிதத்திலேதான் பார்க்க வேண்டும். இங்கே எடுத்துச் சொல்வதன் மூலமாக, இந்தக் குற்றங்கள் நடைபெறுகின்றன, நடைபெறக்கூடாத குற்றங்கள் நடைபெற்றுவிட்டன என்று இங்கே சொல்வதன் மூலமாக நான் தெரிந்துகொள்கிறேன். அதை

மாண்புமிகு அங்கத்தினர் எடுத்துச்சொல்கிறபோது அந்தந்தத் துறையிலே இருப்பவர்கள் அந்தக் குற்றங் குறைகளைத் தெரிந்துகொண்டு தானாகவே அவைகளை நீக்கிக்கொள்ள வேண்டும். கீழ்மட்ட அதிகாரிகள் தவறு செய்யும்போது, மேல் மட்ட அதிகாரிகள், நியாயமான அதிகாரிகள், நேர்மையான அதிகாரிகள், நாட்டின் நன்மையிலே அக்கறை கொண்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நம் அரசும் இங்கே சுட்டிக் காட்டுவதை வைத்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றங்குறைகளை நீக்க வேண்டும். இங்கே குற்றங்குறைகளை எடுத்துச்சொல்லவே கூடாது என்று சொல்லவில்லை. குற்றங்களைச் சுட்டிக்காட்டலாம்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இங்கே சில நாடுகளைப்பற்றிச் சொன்னார்கள். ஐரோப்பிய நாடு, இங்கிலாந்து நாடு, அமெரிக்கா நாடு, ஜப்பான் நாடு பற்றிச் சொல்லி அங்கேயும் குற்றங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இதுபோல சோஷலிச அமைப்பின்கீழ் உள்ள நாடுகளில் அதிகமாக இருக்கின்றதா அல்லது முதலாளித்துவ அமைப்பின்கீழ் உள்ள நாடுகளில் அதிகமாக இருக்கிறதா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலாளித்துவ நாடானாலும், ஜனநாயக நாடானாலும், குடியாட்சி நாடானாலும், குடிகோனாட்சி நாடானாலும், நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு போலந்து எடுத்துக் காட்டாக இருக்கிறது. பெனவலன்ட் டிக்டேடர் என்று வருகிற சூழ் நிலையில், அப்படிப்பட்ட நாடுகளில் மக்களின் நன்மை கருதி சர்வாதிகாரி இருந்தால் அந்த சர்வாதிகாரியின்கீழே மக்கள் இருந்தால், ஒழுங்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். டெமாக்ரசியில் எப்போதும் டிலேவாகும். அதில் சில 'டிபெக்ட்ஸ்' உண்டு. அந்த முறையில் அனுபவித்துக்கொண்டிருக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அதிலே சந்து பொந்துகள் நிறைய உண்டு. நுழைந்து தப்பித்துக்கொள்ள வழி வகைகள் இருக்கின்றன. கீழ் கோர்ட்டிலிருந்து உச்ச நீதிமன்றம் வரை சென்று, தப்பித்துக்கொள்ள வழி வகைகள் இருக்கின்றன. சோஷலிச நாடுகளில் அதிகமான சந்துபொந்துகள் இல்லை. சரியோ, தப்போ, சுடு என்றால தீர்த்துவிடுவான். பிரச்சினை தீர்ந்துபோச்சு . .





**திரு. ப. மாணிக்கம் :** துணைத் தலைவரவர்களே, சரியோ, தப்போ சுடு என்கின்ற கொள்கை அங்கே கிடையாது. வேண்டுமானால் நிதி அமைச்சரவர்களுக்கு அந்தச் சட்ட அமைப்புகளைப் பற்றிய நூலை நாளையே அனுப்பி வைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உலகின் பல பகுதிகளிலிருந்தும் வருகிற செய்திகளைப் பார்த்துத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்களும் சொல்லுகிறார்கள். இந்த நாடுகளிலே இருப்பதைவிட அங்கே குறைவு.

நேஷனல் போலிஸ் கமிஷன் என்று மத்திய அரசு அமைத்து அதற்கு திரு. தர்மவிரா அவர்களைத் தலைவராக நியமித்து, இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில் உள்ள நிலைமைகளை ஆராயச் செய்தார்கள். அகில இந்தியாவில் இருக்கிற காவல் துறையை எந்தவிதத்தில் செம்மையாக்கலாம், ஒழுங்குபடுத்தலாம், சீராக்கலாம் என்பது குறித்தும், மக்களைப் பாதுகாக்கவும், மக்களுடைய தேவைகளை நிறைவேற்றவும் எப்படி அதனைப் பயன்படுத்தலாம் என்றும் ஆராய அந்தக் கமிஷனைப் போட்டார்கள். அதற்கு மேற்கு வங்கத்தில் ஆளுநராக இருந்த திரு. தர்மவிரா அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் பல்வேறு மாநிலங்களைச் சுற்றிப் பார்த்து மத்திய அரசுக்கு அறிக்கை தந்தார்கள். 6—6—1981 அன்று நிருபர்கள் கூட்டத்தில் பேசும்போது அவர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். குற்றங்களில் ஈடுபடுதல், சட்டத்தை மீறுதல், வன்முறையைத் தூண்டுதல், வன்முறைகளைச் செய்தல் ஆகியவை உலகம் எங்கும் அதிகரித்து வருகிறது ; இந்தியாவைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு, அதற்கடுத்து மராட்டியம், அதற்கடுத்து கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் மனித உரிமைகள் அதிக அளவில் மீறப்படுவதில்லை ; மற்ற மாநிலங்களில் அதிக அளவில் அந்த உரிமைகள் மீறப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே ஒப்பிட்டுக்காட்டுகின்றபோது, அப்படிச் சொல்கின்றேனே தவிர, இங்கே அறவே இல்லை என்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டுகின்றபோது நடவடிக்கைகளை எடுக்கிறோம். நம்பித்தான் பல காரியங்களைச் செய்கிறோம். அதிகாரிகள் எல்லாம் எங்களால் நியமிக்கப்பட்டவர்களல்ல. ஆகவே அவர்களை நியமிக்கும்போது, அவர்கள் சரியாக இருப்பார்களா, இல்லையா என்று பார்த்துச் செய்வதில்லை. இப்போது நாங்கள் நியமிக்கும் அதிகாரிகள் 20 வருடங்கள், 15 வருடங்கள் கழித்து எப்படி இருப்பார்கள் என்பதற்கு குவாரன்டி கொடுக்க

முடியாது. நாணயமான, நேர்மையான, உண்மையான அதிகாரிகள் இருக்கிறார்கள். அதை மறுப்பதற்கில்லை. ஆனால் ஆங்காங்கே சிலர் இருக்கிறார்கள். ஏசுபெருமான் 12 சீடர்களை நம்பினார். ஏசுபெருமான எம்பெருமான். 12 பேரை நம்பினார். அவரையே ஒருவன் காட்டிக் கொடுத்தான் என்றால், அவருக்கே இந்தக் கதி என்றால், நமக்கு எப்படிப் பட்ட கதி வருமென்பதை நம்முடைய வாழ்க்கையிலேயே காணலாம். ஆகவே நடவடிக்கைகள் எடுப்பதிலே உன்னிப்பாக இருக்க வேண்டும். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். அதற்காக நாங்கள் கோபப்படவில்லை. உள்ளதை மறைத்துச் சொல்லும்போது, உண்மைக்கு மாறாகச் சொல்லும்போது, இல்லாததைச் சொல்லி பழி வாங்கும் போது, தவறு என்று சொல்லுகிறோம். உண்மையான குற்றச்சாட்டுகளை, நியாயமான குறைபாடுகளைச் சொல்வதில் தவறில்லை. அவற்றை எடுத்துச் சொல்வதன் மூலமாகத்தான், அவற்றை நீக்க முடியும். நக்சலைட்பற்றி எடுத்துச் சொன்னார்கள். கூடுமானவரையில் அதைத் தடுத்து நிறுத்து கிறோம். அதனால் வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் ஓரளவிற்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. சில சமயங்களில் தவறுதலாகக்கூட நக்சலைட் அல்லாதவர்களுக்குத் தொல்லைகள் ஏற்படுவதுண்டு. மாண்புமிகு உறுப் பினர்கள் பேரவையிலேகூட இது குறித்து கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கிறோம். தீவிர நட வடிக்கை எடுத்ததால், ஓரளவிற்கு திருப்பத்தூர் பகுதியிலும், தர்மபுரி பகுதியிலும் அச்சத் தன்மை நீங்கி, ஓரளவிற்கு அஞ்சி வாழ்ந்த மக்கள் அஞ்சி வாழாமல் இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த அளவிலே அவை கட்டுப்படுத்தப்படுகிறதென்பதைக் குறிப்பிட்டுக் கூறுகிறேன்.

அடுத்து, இங்கே பல்வேறு பிரச்சினைகளைச் சொன்னார்கள். அதுபற்றி விளக்கங்களையெல்லாம் எல்லோரும் அறிவார்கள். விதவைகளின் மகள் திருமணத்திற்குத் தாலி கொடுப்பதென்ற திட்டத்தைத் துவக்கினோம். அதற்கான விளக்கத்தை நான் சொல்லியிருக்கிறேன். நாம் கருதியது, விதவைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படை யிலேதான். மகளுக்குத் திருமணம் செய்யும்போது அதிகச் செலவு ஏற்படும் ஒவ்வொரு வீட்டிலும், எந்த ஒரு இனத்தில் செலவழிக்கிற தொகை, அவர் களுடைய சக்தியை மீறி இருக்கிறதென்று கணக்கிட்டுப் பார்த்தால், திருமண நிகழ்ச்சிதான் வருகிறது. பொருளாதார வல்லுநர் டாக்டர் நாராயணசாமி



நாயுடு அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து, 4000 சில்லரை நடுத்தரக் குடும்பங்கள் குறித்து கணக்கெடுத்து, ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்படுகிற அதிகச் செலவிற்கு என்ன காரணம் என்று கண்டறியப்பட்டது. பிள்ளை களைப் படிக்க வைப்பதால் அதிகச் செலவாகிறதா, வீடு கட்டுவதால் அதிகச் செலவாகிறதா என்று கணக்கெடுத்துப் பார்த்தபோது, அதிகமான அளவிற்கு ஆடம்பரத்திற்காக, மற்றவர்கள் மதிக்க வேண்டுமென்பதற்காக, ஊரார் மெச்ச வேண்டுமென்பதற்காக சக்தியையும் மீறி, அதிகமாகச் செலவிற்காக இருக்கிற வீட்டையும், வாசலையும், வயல்களையும் இழந்துவிடுகிற நிலைமைக்கு பல்வேறு நடுத்தரக் குடும்பங்கள் வருவது திருமணத் தினால்தான். திருமணச் செலவைக் குறைக்க வேண்டுமென்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். விதவையாகட்டும், யாராகட்டும், எப்போது கவலைப்படுகிறார்கள் என்றால், அவர்களுடைய மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்று நினைக்கும்போதுதான். மகனைப்பற்றிக் கவலையில்லை. கல்யாணம் பண்ணாவிட்டாலும், எப்படியாவது அவன் கல்யாணம் பண்ணிக் கொள்வான் என்ற தைரியம் இருக்கிறது. மகளைப் பொறுத்தவரை, அப்படி விட்டுவிட முடியாது, நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், மேலை நாடுகளிலே விட்டுவிடுகிறார்கள். 1 வயதாகிவிட்டால், வெளியே போக வில்லையே என்று கவலைப்படுகிறார்கள். இன்னமும் டேட்டிங்குக்குப் போகவில்லையே என்று கஷ்டப்படுகிறார்கள். இதனால் தன்னுடைய மகளுக்கு ஏதாவது டிபக்ட் இருக்குமோ என்று நினைக்கும் மனப்பான்மை மேலை நாடுகளிலே இருக்கிறது. நம்முடைய நாட்டிலே பெண்களைக் காக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய சமுதாயத்ினுடைய, ஒழுக்கம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றுக்கு ஏற்ப இருப்பதால், மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்க அதிகச் செலவாகிறது. அதனால், தாலிக்குத் தங்கம் வாங்க அதிகச் செலவாகிறது என்பதால், தாலிக்குத் தங்கம் தரலாமென்று முடிவெடுக்கப் பட்டது. அதற்குப் பிறகு விதவைத் தாய்மார்கள், நம்முடைய நாட்டு வழக்கப்படி தாலி கட்டுவது என்பது மாப்பிள்ளை கட்டும் ஒன்று, நீங்கள் தாலிக்குத் தங்கம் வாங்கித் தந்தால் மாப்பிள்ளை வீட்டார் செலவைத்தான் குறைக்க முடியும், எங்களுக்கு ஏற்படும் செலவைக் குறைக்க இதனால் வழி யில்லை, தங்கமாகத் தந்தால் அதை விற்று வேறு ஏதாவது செய்துகொள்ள லாம்; தாலி என்று கொடுத்தால், அதை உருக்க அல்லது மாற்ற முடியாது. குறிப்பிட்ட தொகை தந்தால், எங்களுடைய குழந்தைகளுடைய திரு மணத்தை நடத்த முடியுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, தங்கத் தாலி கொடுப்பதைவிட 4,000 ரூபாய் உதவித் தொகை தரலாமென்ற முடிவிற்கு வந்தோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல், விதவைகளின் மகளுக்கு என்று உத்தரவு போட்டதால்தான், இந்தப் பிரச்சினை வந்தது. விதவைகளுடைய பிள்ளைகள், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்களுக்கு இந்தத் திட்டத்தை அமுல்படுத்தப் போகிறார்களா? 1,000 ரூபாய் என்பது விதவைகளின் மகள்களுக்கு மட்டுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலிலேயே சொன்னேன். மகள் திருமணம் அதிகக் கவலைப்பட வேண்டிய ஒன்று. மகன்கள் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மற்ற நாடுகளில் 55 சதவிகிதம் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அதைக் கடைப்பிடித்தால்கூட நல்லது. அவர்களுக்குக் கல்யாணம் பண்ணியே தீரவேண்டுமென்பதல்ல. ஏராளமான பணம் இருந்தால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதை ஏற்கலாம். பேரவையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டேன். அதைப் பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்தலாமென்று சொன்னேன். விதவைகளின் மகள் திருமணத்திற்கு நீங்கள் உதவி செய்கிறோமென்கிறீர்கள்; தாய் இல்லாமல். தந்தை இல்லாமல் அனாதையாக இருக்கும் பிள்ளைகள் திருமணம் செய்துகொள்ள உதவி உண்டா என்று கேட்டார்கள். அது உள்ளபடியே சிந்திக்க வேண்டிய ஒன்று. அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமென்று சொன்னேன். இப்போது பண வசதி நெருக்கடி இருக்கும் நிலையில் பிள்ளைகள்பற்றிக் கவலைப்படாமல், பெண்கள் பற்றிக் கவலைப்படலாம். பிள்ளைகளைப்பற்றி பின்னாலே கவலைப்படலாம். இப்போது கவலைப்பட வேண்டியதில்லை. அந்த வகையிலே அவர்களுக்குத் தர பிப்ரவரியில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மார்ச் 31 ஆம் தேதிக்குள்ளாக, சென்ற ஆண்டு ஒதுக்கிய 10 லட்சம் ரூபாயைச் செலவழிக்க முடியுமா என்ற வினா எழுந்தது.

(பிற்பகல் 12-10)

மூன்று மாதங்களுக்கு முன்னால் விண்ணப்பித்தால்தான் நிலைமைகளை ஆராய வாய்ப்பு ஏற்படும். அந்த அடிப்படையில்தான் சட்டம் போடப்பட்டிருக்கிறது. பிப்ரவரியில் ஆணையிட்டதற்கும் மார்ச் 31-க்கும் 3 மாத இடைவெளி கூட இல்லை. இந்தக் காலத்திற்குள் திருமணம் செய்ய முடியாது என்று சொன்னதற்குப் பிறகு, அண்மையில் திருமணம் செய்கிறவர்கள் தேர்ந்தெடுக்கப்





படுகிற அளவுக்கு 3 மாதம் என்று இருக்கிற பிரச்சினையைத் தளர்த்தி விட்டு, இதைக் கொடுக்க முடியும் என்றால், கொடுக்கக்கூடிய அளவுக்கு உத்தரவு போட்டிருக்கிறோம். ஒதுக்கப்பட்டுள்ள 10 லட்சம் ரூபாயைக் கொண்டு இந்த ஆண்டுக்குள் எத்தனை பேருக்கு உதவ முடியுமோ அத்தனை பேருக்கும் உதவிவிட்டு, மீதியிருக்கிற தொகையை அடுத்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள 15 லட்சம் ரூபாயுடன் சேர்த்து உதவி செய்யலாம் என்கிற ஒரு எண்ணமும் அரசுக்கு இருக்கிறது. அதோடு விதவை மறுமணத் திட்டமும் தொடர்ந்து இருக்கிறது. விதவை மறுமணம் செய்தால், அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய்க்கு நேஷனல் சேவிங் சர்ட்டிபிகேட் வழங்குவது என்கிற முறையில் உதவி அளித்து வருகிறோம். அவர்கள் 7 ஆண்டுகள் சென்ற பிறகு, கணவன் மனைவி இருவரும் சேர்ந்து 10 ஆயிரம் ரூபாயாக அதைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த வகையில் 1977-78 ஆம் ஆண்டு 90 பேர்களுக்கும், 1978-79 ஆம் ஆண்டு 95 பேர்களுக்கும், 1979-80 ஆம் ஆண்டு 100 பேர்களுக்கும் 1980-81 ஆம் ஆண்டு 371 பேர்களுக்கும் இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. ஏன் இதை 7 ஆண்டுகளுக்குத் தருகிறோம் என்றால், பணமாகத் தந்தால், கல்யாணம் ஆன பிறகு, அந்தப் பணத்தை கணவனாக வரப்போகிறவர் அமுக்கி விட்டால் என்ன செய்வது? அப்படிச் செய்துவிட்டு, மறுபடியும் விதவை மறுமணம் செய்யப் போனால் என்ன செய்வது? அதனால்தான் இந்த முறையை வைத்திருக்கிறோம். 7 ஆண்டுகளுக்குப் பிறகு 10 ஆயிரம் ரூபாயை அந்தக் கணவன்-மனைவி பெற்று அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். அதில் கர்ப்பிணிகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். 1980-81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே கூட இதுபற்றி குறிப்பிட்டிருக்கிறேன். கர்ப்பிணிப் பெண்களுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், இதை ஒரு முன்னோடித் திட்டமாக மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்திவிட்டு படிப்படியாக செங்கற்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, வட ஆற்காடு போன்ற 5 மாவட்டங்களில் விரிவுபடுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். இத்திட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2,485 பெண்களும், 2,985 குழந்தைகளும் பயனடைந்திருக்கிறார்கள். 1982-83 ஆம் ஆண்டு மதுரை

மாவட்டம் பூராவும், எல்லா இடங்களுக்கும், எல்லா ஒன்றியங்களுக்கும் இத் திட்டத்தைப் பரவலாக ஆக்குகிறோம். எதிர்காலத்தில் படிப்படியாக செங்கற்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, வட ஆற்காடு போன்ற பகுதிகளுக்கு இதைப் முறைப்படுத்த 8 கோடியே 18 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இலவச அரிசிபற்றிச் சொன்னார்கள். 5 கிலோ அரிசி வாங்கினால், ஒரு கிலோ அரிசி இலவசம் என்று நாங்கள் சொன்னோம். மறுக்கவில்லை. 5 கிலோ வாங்கக்கூடிய அளவுக்கு அவர்கள் பணத்தை வைத்திருக்க வேண்டுமே. அவர்கள் வாங்குகிற தன்மை இல்லை என்று வந்த பிறகு, சிந்தனை செய்து யார் யாருக்குத் தருவது என்று சிந்தனை செய்து, ஓய்வூதியம் பெறுகிற வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள வர்களுக்கு இலவசமாக வழங்க முடிவு எடுத்தோம். அதன் அடிப்படையில் உதவி பெறுகின்ற விவசாயத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர் இப்படிப் பட்டவர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட வேண்டு மென்ற தன்மையில் அது தரப்பட்டிருக்கிறது. படிப்படியாக இதை உயர்த்தலாம். நிதி நிலைமைக்கு ஏற்பத்தான் அதைத் தர முடியும். பிராக் டிக்கலாக என்ன முடியுமோ அதைத்தான் தர முடியும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்ச ராக இருந்தபோது முதியோருக்கு உதவித் தொகை தருகின்ற ஒரு திட்டத்தை முதலில் கொண்டு வந்தார்கள். ஆனால் திட்டம் நடைமுறைக்கு வருகிற போது 'முதியோருக்கு உதவித் தொகை' என்ற பெயரோடுதான் வந்தது. அந்தப் பெயரோடுதான் அது வர முடியும். ஆனால் அதை வழங்கிய காலத் தில் ஒரு கண்டிசன் எல்லாம் போட்டு 58 வயதுக்கு மேல் ஆன அனாதைகள், திக்கற்றவர்கள் என்று போட்டார்கள். அது 16 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆண்டுக்காண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு, அதற்காக நிதி ஒதுக்குவதில் பற்றாக்குறை வந்த காரணத்தால், யாராவது இறந்தால், அந்த இடத்தில் ஒருவருக்கு வாய்ப்பு கொடுத்து நிரப்புவது என்கிற நிலை வந்தது. படிப்படியாக அது வளர்ந்து 50 ஆயிரம், 60 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் ஆகியது. இப்போது அதோடு விதவைத் தாய்மார்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் இப்படிப்பட்டவர்களை எல்லாம் சேர்த்திருக் கிறோம். இவர்களுக்கு 25 ரூபாய் வழங்கப்பட்டு வந்ததை இப்போது 35 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி இலவச மாக 1,99,188 பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 1 கோடியே 76 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கை மேலும் கூடுதலாக வரும். ரெஸ்டிரிக்ஷன் ஒன்றும் வைக்காமல் அந்த அடிப்படை யில் இத்திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.





**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அருமை யாக பல்வேறு மாநிலங்களினுடைய புள்ளிவிவரத்தை இங்கே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையொட்டி இங்கே அவர்கள் செய்திருப்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதே சமயத்தில் கல்விக்காக இன்றைக்கு பல்வேறு மாநிலங்களில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கே எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி 'கம்பேரிசன்' பண்ணிச் சொல்லவில்லை. கல்விக்காக 18½ சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் குறைவு. அதோடுகூட இன்னொன்றையும் சொல்கிறேன். பல்வேறு மாநிலங் களில் அகவிலைப் படியை அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு உயர்த்தும் போது, இங்கே உயர்த்தப்படுவதில்லை. அதை எப்போது கொடுக்கப் போகிறார்கள் ? கல்விக்காக எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 283 கோடி ரூபாய் கல்விக் காக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 295 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது பொதுவாக கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகை. அதாவது ஜெனரல் எஜுகேஷனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை. இதைத் தவிர வேளாண்மைக் கல்விக்கு, கால்நடைக் கல்விக்கு டெக்னிக்கல் எஜுகேஷனுக்கு என்று தனித் தனியாக ஒதுக்கீட்டுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

அகவிலைப்படிப் பிரச்சினைக்கு கடைசியில் வருகிறேன். இருந்தாலும் உறுப்பினர் கேட்டதற்காகச் சொல்கிறேன். மத்திய அரசின் அறிவிப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். மத்திய அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து இங்கேயும் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம் ஏற்கெனவே மத்திய அரசு அறிவித்த பிறகுதான், நாம் கொடுப்பது என்கிற நிலையை வைத்திருக்கிறோம். அவர்கள் முடிவெடுத்து அறிவிப்பதன் அடிப்படையில் இங்கேயும் அறிவிக்கப்படும். அவர்களுடைய அறிவிப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது வந்ததற்குப் பிறகு அறிவிக்கப்படும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** வாரத்திற்கு ஒரு கிலோ இலவசமாக அரிசி பெறுகின்றவர்களுடைய எண்ணிக்கை 1 லட்சத்து 99 ஆயிரம் பேர் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதோடு கூட உதவித் தொகையையும் 25 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயர்த்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். அப்படி என்றால், முந்தைய ஆண்டை விட ஒதுக்கீடு அதிகமாக ஆகியிருக்க வேண்டுமே, ஆனால் மாண்புமிகு நிதியமைச்சர்

அவர்கள் முந்தைய ஆண்டுகளை விட குறைவாக அதாவது 1 கோடியே 76 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கியிருப்பதாக அல்லவா அறிவித்துள்ளார்கள். இதுகுறித்து விளக்கம் தேவை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பார்ட் 2 ஸ்கீம் வருகிற போது, 25 ரூபாய் என்பது 35 ரூபாயாக ஆகியது இது பட்ஜெட் அலவுன்ஸ் மென்ட்தான். துணை மதிப்பீடுகள் வைக்கிறபோது, கூடுதலாகச் செலவிட்ட தொகை ஏற்றுக்கொள்ளப்படும். இதற்குள் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாது.

அடுத்து, பற்பொடிபற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக கின்றன. கிராம மக்களுக்குப் போடப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் அவர்களுடைய பற்கள் கெடக் காரணம் கரித் துண்டு போன்றவற்றைப் பயன்படுத்துவதுதான் என்று தெரியவந்தது. அதற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு நலன் பயக்கும் வகையில் பற்பொடி வழங்குவது நல்லது என்று மருத்துவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நகர்ப்புறத்தில் இன்ன பேஸ்ட் இன்ன பற்பொடி என்று டாக்டர்கள் குறித்துக் கொடுத்து விடுவார்கள். உடனே வாங்கவும் செய்வார்கள். ஆனால் இது மருந்து அல்ல. நாம் இப்போது அரசாங்க மருத்துவ மனைகளின் மூலம் இலவசமாக மருந்து தருகிறோம். அப்பேர்பட்ட மருந்தல்ல இது. இது ஒரு வசதி. இந்த வசதியை எந்த மருத்துவரும் தரமாட்டார்கள். இப்போது இலவசமாக மருந்து தருகிறார்கள். பழவகைகள் தருகிறார்கள். நகர்ப் புறத்தில் டாக்டர்கள் எழுதி தருவதைக் கொண்டுபோய் கடையில் காட்டி பற்பொடி, பற்பசை போன்றவற்றை வாங்குகிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் அப்படி எழுதிக் கொடுத்தாலும் கூட, அவற்றை வாங்குகிற இயல்பு இல்லை. அதனால்தான் கிராம மக்களின் பல் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதி யாக, அறிவியல் முறையில் தயாரிக்கப்பட்ட பற்பொடிகளை மருத்துவத் துணை நிலையங்கள், தொடக்கச் சுகாதார நிலையங்கள், அரசு மருந்தகங்கள், வட்ட மருத்துவமனைகள் முதலியவற்றின் மூலம் இலவசமாகக் கிராம மக்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்று வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே பொதுவாக இதை கேட்பவர்களுக்கெல்லாம் கொடுக்கப் போகிறோம் என்பதல்ல. பாதிப்புக்கு உள்ளாகின்றவர்களுக்குக் கொடுக்கிறோம். அதுபோல் கிராமப் பகுதிகளில் பாம்புக் கடியால் அவதிப் படும் மக்களுக்கு உடனடியாகவும் திறமையாகவும் சிகிச்சை அளிக்க மருத்துவத் துணை நிலையங்கள், தொடக்க சுகாதார நிலையங்கள்.





மருந்தகங்கள், முதலியவற்றின் மூலம் விஷமுறிவு மருந்து அளிக்க திட்டமிடப் பட்டுள்ளதாக வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இதையும் ஒரு நோக்கத்தின் அடிப்படையில் கொண்டு வந்திருக்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை.

அதுபோலத் தான் இலவசமாக குழந்தைகளுக்கு ஒருவேளை மதிய உணவு அளிக்கும் திட்டத்தைப்பற்றியும் பலர் பேசியிருக்கிறார்கள். பலர் இதை வரவேற்றும் பேசியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட எல்லோரும் அதை ஆதரித்து, வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். யாரும் இதை எதிர்க்கவில்லை. இதிலுள்ள நோக்கம் ஒன்றுதான். 2-லிருந்து 10 வயது வரை உள்ள சிறுவர்கள் அனைவரும் உணவு அருந்த வேண்டும். அவர்கள் ஊட்ட சத்துள்ள உணவை இலவசமாகப் பெற வேண்டும் என்கிற நோக்கத்தை நிறைவேற்ற இத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ' இதை நிறைவேற்றுவதில் கடினம் இருக்கிறது: இதை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள், எப்படி நிலைமையைச் சமாளிக்கப் போகிறீர்கள் ' என்றெல்லாம் கேட்டார்கள். அவர்களுடைய கேள்வியில் அர்த்தம் இருக்கிறது என்பதை நான் ஒப்புக்

(பிற்பகல் 12.20)

கொள்கிறேன். ஆனால் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. தவறுகள் ஏற்படாத அளவுக்கு பாதுகாக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்தார்கள். பல்வேறு துறைகளிலே, பல்வேறு நிலைமைகளிலே இதற்கு முன்னால் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படை யிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அவற்றுக்கு நான் மதிப்பு தருகிறேன். பல்வேறு மாற்றுக் கருத்துக்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பட்ஜெட் என்று வருகிறபோது, இதை நீண்ட காலத்திற்கு முன்னாலே ஒரு ஆறு மாதத்திற்கு முன்னாலேயாவது சிந்தித்திருந்தால், இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே சேர்க்கிறோம் என்று சொன்னால், இதனுடைய அனைத்துத் தன்மையைப் பற்றியும் ஆராய்ந்து முடிவுக்கு வந்திருக்கலாம். அதுபற்றிய ஆலோசனைகளைக் கேட்டு முடிவுக்கு வரலாம். ஆனால், பட்ஜெட்டிலே கொள்கையை எடுக்கும் போது இம்மாதிரியான புதிய திட்டங்களைப் போடும்போது, புதிய வரி களைப் போடுவதுபற்றிச் சொல்லும்போது, இவைகளையெல்லாம் இரண்டு நாளைக்கு அல்லது ஒரு நாளைக்கு முன்னாலேதான் செய்யும் நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அடுத்த நாளோ அல்லது முதல் நாள் காலையிலோ தான் கொண்டு வரும் நிலைமைகள் இருக்கின்றன. கடைசி நேரத்திலே சேர்க்கப்பட்டு, சிந்திக்கப்படாத நிலையில் கொண்டு வந்திருக்கும்

ஒன்று இது. ஆகையால்தான் தோராயமாகக் கணக்கிட்டிருக்கிறோமே தவிர, மாண்புமிகு உறுப்பினர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும் சொன்னதைப்போல இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை மேலும் குறையக்கூடும். தோராயமாக 90 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்குப் போட்டு, ஒரு ஆளுக்கு 50 ரூபாய் செலவாகும் என்று கணக்குப் போடலாம். இத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் என்று தோராயமாகத்தான் கணக்குப் போட்டிருக்கிறோம். ஒரு திருமணத்தை நடத்துவது என்று சொன்னால் கூட, இதற்கு 10 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று சொல்வது என்பது தோராயமாகச் சொல்வது. 10 ஆயிரம் ரூபாயிலே நடத்த வேண்டும் என்று சொல்வது திட்டம். 100 கோடி ரூபாய் என்று சொல்லியிருப்பதால் 100 கோடி ரூபாயும் செலவழிக்க வேண்டும் என்பதுவே நம்முடைய திட்டம். அந்த அடிப்படையிலே தான் தோராயமாக 100 கோடி ரூபாய் என்று நாம் சொல்லியிருக்கிறோம். நடைமுறைப்படுத்தும்போது, அதனுடைய தன்மைகளை ஆராய்ந்து செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள், உண்மையிலே இந்தத் திட்டத்தின் பலன் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் இதுபற்றி இன்னும் முடிவுக்கு வந்துவிடவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த அவையிலே இதுபற்றிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு மேலவை, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இதுபற்றி இன்னும் யோசனைகள் சொல்லலாம். எந்த யோசனை நல்லமுறையில் நடைமுறைக்கு வருமோ அதைப் பரிசீலித்து நடைமுறைப்படுத்தலாம். அதற்கு இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. நாம் ஒதுக்கீடு செய்த பிறகு, இதிலே டெஃபிசிட் வரும் என்ற அளவுக்கு இருக்கும் திட்டம் அல்ல இது. மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், 125 கோடி ரூபாய் அளவிலே பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லி, புதிய வரிகளைப் போடுவதன் மூலமாக அது குறைகிறது. ஏற்கெனவே 17 கோடி ரூபாய் டெஃபிசிட் இருக்கிறது. அதற்காகத்தான் வரிகளையும் போடுகிறோம். இந்த டெஃபிசிட் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சென்ற ஆண்டு மதுவிலக்கை எடுத்ததனால் டெஃபிசிட் வரவில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் போது, பல்வேறு கருத்துக்களையும் நாம் பார்க்க வேண்டும். 2 வயதிலிருந்து



6 வயது வரையில் இருக்கும் குழந்தைகள் ஒரு பகுதி. 6 வயதிலிருந்து 10 வயது வரை இருக்கும் குழந்தைகள் இன்னொரு பகுதி. 6 வயதிலே தான் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திலே சேர்க்க வேண்டும். இந்த இரண்டு பகுதியினரையும் நாம் தனியாகப் பிரிக்க வேண்டும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்னும் திட்டவட்டமான முடிவுக்கு வரவில்லை. இன்னும் ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறது. வல்லுநர்களும், மற்றவர்களும் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். தனியார் சங்கங்கள், அறநிலையங்கள், மேலும் இப்படிப்பட்ட பணிகளிலே ஈடுபட்டிருப்பவர்களுடைய யோசனைகளையும் நாம் கேட்க வேண்டும். இத் திட்டத்தைத் தீட்டியதற்குப் பிறகு, இது குறித்து யார் வேண்டுமானாலும் யோசனைகளையும், மாற்றங்களையும், திருத்தங்களையும் சொல்லலாம். இதிலே எந்தவிதமான கட்சி வேறுபாடும் இல்லை. ஊட்டச் சத்து வழங்குவதற்கு வைட்டமின் அடங்கிய பில்ஸ் அல்லது அதுபோன்ற மற்றவைகள் எல்லாம் வழங்கலாமே என்று கூட சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் வயிறு நிறைய வேண்டும் என்று சொன்னால் சோறு தான் போட வேண்டும். மதிய உணவுத் திட்டத்தை பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்தபோது பலர் அச்சுறுத்தினார்கள். இந்தத் திட்டம் நடைபெறாது, இது சாத்தியமானதல்ல, ஒருவன் சோறு தின்பதற்காக பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு பின்னர் வீட்டிலேயே வைத்துவிடுவான் என்றெல்லாம் 'கிரிட்டிசைஸ்' பண்ணினார்கள். "இப்படி இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால், யார் சமைப்பது? யார் அதை மேற்பார்வையிடுவது? யார் பரிமாறுவது?" என்றெல்லாம் கிண்டல் செய்தார்கள். ஆரம்ப கட்டத்திலே பள்ளிக்கூடத்திலே இருக்கும் ஆசிரியர்கள் இதைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டபோது, ஆசிரியர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமே, அவர்கள் சொல்லிக்கொடுப்பார்களா அல்லது இதைச் செய்வார்களா, அவர்களுக்கு வேறு வேலை இல்லையா என்ற பிரச்சினைகள் எல்லாம் வந்த பிறகு, அதில் சீர்திருத்தம் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த நல்ல நோக்கம் கைவிடப்படவில்லை. இந்த நோக்கம் நாட்டுக்குச் சாதகமாக இருக்கும் நல்ல நோக்கம் என்பது மட்டுமல்ல, இந்த நோக்கத்தை, இதிலே இருக்கும் நல்ல அம்சத்தை உணர்ந்து, கேர் நிறுவனத்தினர் கூட தமிழகம் முன்னோடித் திட்டமாக இதை வைத்திருக்கிறது என்று கண்டறிந்து அவர்களும் பெருந்தொகை கொடுத்து உதவி செய்ய முன்வந்து—நான் கல்வியமைச்சராக இருந்தபோது கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் அளவுக்கு உணவுப் பண்டங்களைத் தந்து, நாமும் அதோடுகூட பொருள் தந்து, அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்

களிலே சமைக்கவும், பரிமாறவும் செய்யும் நிலை வேண்டாம் என்ற அளவிலே சென்ட்ரல் கிச்சன் முறையைத் தந்து, அதற்குத் தேவைப்பட்ட வேன்களைத் தந்து, கட்டிடம் கட்டுவதற்கான செலவையும் அவர்கள் தந்து, சமையல் காரர்கள், பாத்திரங்கள், அந்த சமையல்காரர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், அரிசி முதலியவைகளுக்கு நாம் பொறுப்பு என்ற நிலைமை வந்ததற்குப் பிறகு, அந்தத் திட்டத்திலே இருக்கும் சிக்கல்கள் தீர்ந்தன. அந்த மாதிரி இந்தத் திட்டத்தையும் நாம் மேலும் செம்மைப்படுத்தலாம்.

திரு. செ. முத்துசாமி : கேர் நிறுவனத்திலிருந்து இப்போது அதிகமாகக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் உண்மை நிலைமை என்ன வென்றால், கேர் நிறுவனத்தாலே தற்போது கொடுக்கப்பட்டு வந்த உதவிகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதனால்தான் சென்ற மாதத்திலேகூட ஒரு பிள்ளைக்கு 16 காசு விதம் ஒவ்வொரு பள்ளிக்கும் தந்திருக்கும் சூழ் நிலை இருக்கிறது என்பதையும், கேர் நிறுவனத்தின் உதவி தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எனக்கு அந்த நிலைமை தெரியாத காரணத்தினால் தான், அந்த உதவிகள் இப்போதும் இருக்கக்கூடும் என்று சொன்னேன். அந்த நிலைமைகள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கேர் நிறுவனம் இந்தத் திட்டத் திற்காகக் கொடுத்த மோட்டார் வாகனங்கள் மூலமாக உணவு பரிமாறும் திட்டம் தோல்வியடைந்ததால் வாகனங்கள் எல்லாம் வாபஸ் வாங்கப்பட்டு, மாட்டு வண்டிகள் மூலமாக இப்போது குழந்தைகளுக்கு உணவு பரிமாறப் பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்கிறேன். இப்போது 5 வயதிலிருந்து 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சுமார் 13 இலட்சம் பேருக்கு 4 கோடி ரூபாய் செலவிலே மதிய உணவுத் திட்டம் ஏற்கெனவே இருக்கிறது. இந்த அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, மதிய உணவுத் திட்டம் தற்போது உள்ளவாறு தொடர்ந்து நீடிக்குமா அல்லது இந்தத் திட்டத்துடன் இப்போது இருக்கிற மதிய உணவுத் திட்டம் இணைக்கப்பட்டு ஒரு பொதுத் திட்டமாக ஆக்கப்படுமா? உத்தேசிக்கப்படும் இன்னொரு விஷயம், இந்த 100 கோடி ரூபாய் என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது என்று கருதப் படுவதால், அந்த 100 கோடி ரூபாய்க்கு உள்ளாகவே குழந்தைகளுக்கு 2 வயது முதல் 10 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு ஒரு ஆண்டுக்குக் குறைந்த பட்சம்



ஒரு ஜோடி உடைகளையாவது கொடுக்க வேண்டும் என்று நான் பேசும் போது சொன்னேன். அந்தக் கருத்துபற்றி அரசினுடைய நிலை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதெல்லாம் ஆராயப்பட வேண்டிய ஒன்று. முதலிலே அவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும். பிறகு நாம் உடைக்கு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற மதிய உணவுத் திட்டம் 2 வயது முதல் 10 வயது வரை பள்ளியில் படிக்கும் குழந்தைகளில் 1/3 பகுதியினருக்கு நாம் கொடுக்கிறோம். இப்போது கொண்டு வந்திருக்கும் திட்டத்தைச் செம்மைப்படுத்திச் செயல் படுத்தும்போது, ஏற்கெனவே இருக்கும் இந்தத் திட்டத்தோடு இணைத்துச் செயல்படுத்தும் நிலைதான் வருமே தவிர, இது தனியாக வரும் நிலைமை இல்லை. இரண்டையும் இணைத்து இப்போது இருப்பதை விடவும் சிறப்பாகச் செயல்படுத்தும் அளவுக்குத்தான் திட்டம் வரும். இதற்குள்ளேயே அது அடங்கும் அளவுக்குத் திட்டமிட வேண்டும். அந்த வகையிலே வறுமைக் கோட்டுக்குள் கீழே இருப்பவர்களுடைய நிலைமை என்று வரும் போது, மிகவும் முக்கியமான விஷயம் ஒன்றை நான் சொல்கிறேன். அமெரிக்காவிலே Line of Poverty என்பது 29 சதவீதம் இருக்கிறது. Line of Poverty அந்த நாடுகளிலே இல்லை என்பதல்ல. நம்முடைய நாட்டிலே Line of Poverty, Line of destitution. Line of serve destitution என்ற அளவிலே மொத்தம் மூன்று கோடுகள் இருக்கின்றன. ஏழ்மைக் கோடு என்று ஒன்று, வறுமைக் கோடு என்று இரண்டு, மிக வறுமைக் கோடு என்று மூன்று. நம்முடைய நிதி நிலைமையைப் பொறுத்தவரையில், 1979-80 ஆம் ஆண்டுக் கணக்குப்படி வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் சராசரி 48.11 சதவிகிதத்தினர். ஆக, கிட்டத்தட்ட 48 சதவிகிதம் பேர் இந்தியா முழுக்க வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். இது 'லைன் ஆஃப் பாவர்ட்டி'. ஆனால் செய்தித்தாள்களிலே இதைப் போட்டு குழப்பு கிறார்கள். வறுமைக் கோடு என்பது வேறு, ஏழ்மைக் கோடு என்பது வேறு. ஆனால் வறுமைக்கோடு என்பதன்கீழ் 48.11 சதவீதம் பேர் இருக்கிறார்கள். ஏழ்மைக் கோடு என்பதற்கு விதி என்னவென்று சொன்னால் அது தனி நபருக்கு மாதம் செலவு செய்யும் தொகையின் அடிப்படையிலே வருகிறது. கிராமத்திலே மாதம் ஒன்றுக் 76 ரூபாய். நகரத்தைப் பொறுத்தவரையில் மாதம் ஒன்றுக்கு 88 ரூபாய். 1 ஆண்டுக்கு 912 ரூபாய்க்குக் கீழே செலவு செய்பவர்கள் கிராமத்தைப் பொறுத்தவரையிலும், நகரத்தைப் பொறுத்த வரையிலும், ஒரு ஆண்டுக்கு 1,056 ரூபாய்க்குக் கீழே செலவழிப்பவர்களும் தான் ஏழ்மை என்ற நிலைமையிலே இருக்கிறார்களே தவிர வாழவே முடியாது என்ற நிலைமையிலே அவர்கள் வர முடியாது.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரையாற்றி முடிக்கும் வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆக, 'லைன் ஆப் டெஸ்டிடியூஷன்' வறுமைக் கோடு என்பது 18 சதவீதத்திற்கும் கீழே என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 'சிவியர் டெஸ்டிடியூஷன்' என்கிற வகையில் வாழவே முடியாது கஷ்டப்பட்டுக்கொண்டு, சோறே இல்லாமல் அவதிப்படுகிறவர்கள் மொத்தம் 11 சதவீதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆக, 'பாவர்டி லைன்' என்பது அந்த அளவுக்கு வருகிறது. நமது நாட்டை எடுத்துக்கொண்டால்கூட, நாம் கிட்டத்தட்ட 6-வது இடத்தில்தான் இருக்கிறோம். 'ஆல் இண்டியா ஆவரேஜ் ஆன் லைன் ஆப் பாவர்ட்டி' 48 சதவீதம் என்றால், தமிழகத்தைப் பொறுத்த வரையில், இங்கே 52.12 சதவீதமாக இருக்கிறது. அதிகமாக இருப்பது ஒரிசாவில்தான் அங்கே 66.04 சதவீதமும், உத்தரப் பிரதேசத்தில் 59.09 சதவீதமும், மத்தியப் பிரதேசத்தில் 57.73 சதவீதமும், பீகாரில் 57.49 சதவீதமும், மேற்கு வங்கத்தில் 52.54 சதவீதமும், அதற்கு அடுத்து தமிழ் நாட்டில் 52.12 சதவீதமும் இருக்கின்றன. மற்ற மாநிலங்கள் இன்னும் கீழே இருக்கின்றன. ஹரியானா பஞ்சாப் கீழே இருக்கின்றன. பஞ்சாபில் 15.13 சதவீதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஏழ்மைக் கோடு என்பது எங்கேயும் இருக்கிறது. அமெரிக்காவில்கூட அங்கே இருக்கிற சிவப்பு இந்தியர்கள், மற்றும் தொழிலாளர்கள் வாழ்கிற பகுதிகளில்கூட சில இடங்களில் மதிய உணவு இலவசமாக அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நான் 1970 ஆம் ஆண்டு அரிசோனா மாநிலத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே சிவப்பு இந்தியர்களான 3,000 மாணவர்கள் பயிலும் ஓர் உயர்நிலைப் பள்ளிக்கு என்னை அழைத்துச் சென்று காட்டினார்கள். அங்கே இருக்கிற அவ்வளவு மாணவர்களுக்கும் இலவசமாக மதிய உணவு தருகிறார்கள். அந்த நாட்டின் வசதி வாய்ப்புக்கு ஏற்ப எல்லா மாணவர்களுக்கும் அங்கே உணவளிக்கிறார்கள். பெல்ட்டில் உணவு—அநேக வகையான உணவு வகைகளும்—போகிறது. தேவைப்பட்டவர்கள் தேவைப்பட்ட அளவுக்கு எடுத்துச் சாப்பிட்டுவிட்டு மாநில வகுப்புகளுக்குச் போகலாம் என்று வைத்திருக்கிறார்கள். அதற்கே அங்கே இருக்கிற மத்திய அரசும் மாநில அரசும் சப்சிடி கொடுக்கிறார்கள். எதற்காக இதைக்



குறிப்பிடுகிறேன் என்றால், வசதியும் வாய்ப்பும் இருக்கிற பல இடங்களில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் நம் நாட்டின் பண்பு காரணமாக எந்தத் திட்டம் போட்டாலும், அது கடைசி வரை போய்ச் சேருகிற அளவுக்கு இருக்குமா என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அச்சம் தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு ஃபூல் ப்ரூப் திட்டமாக, குறைகளே ஏற்படாத அளவுக்குத்தான் நிறைவேற்ற வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கம் இதில் முடிவெதையும் எடுத்துவிடவில்லை. இன்னும் சிந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். பலருடைய சீரிய யோசனைகளையும் ஆலோசனைகளையும் பெற வேண்டும் என்றுதான் இருக்கிறோம்.

**திரு. ப. மாணிக்கம் :** யோசனையில் இருக்கும் இந்தத் திட்டம் நல்ல திட்டம்தான். இந்தத் திட்டத்தின் நோக்கம் நல்லதாக இருந்தாலும்கூட, அதைக் காரணமாகக் காட்டித்தான் இப்போது ரூ. 38 கோடி அளவுக்கு வரி போட்டிருக்கிறோம். பட்டு சரிகை மீதான வரியைக் குறைத்தாலும் சுமார் ரூ. 35 கோடி அளவுக்கு புதிய வரிகளை இதற்காகத்தான் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருப்பதால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றி அதற்காக இவ்வளவு வரிகள் தேவை என்று சொன்னால் பரவாயில்லை. திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும்போதே, இதற்காக என்று இத்தனை கோடி ரூபாய்க்கு வரிகள் போடுவது எப்படி நியாயம் என்று கேட்டு, அரசு இதை ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் திட்டத்தை ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து அமுல்படுத்த விரும்புகிறோம். அடுத்த ஆண்டிலிருந்து அமுல்படுத்துவது என்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொல்வதைப்போல், இந்த ஆண்டு வரிவிதிப்பு இல்லாமல் அடுத்த ஆண்டே அதைச் செய்யலாம். ஆனால் வரும் ஜூலை மாதத்திற்கு முன்பு இதை அமுல்படுத்த வேண்டும் என்றும் அதற்கு முன்னால் நிலைமைகளைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, இன்ஃப்ரா ஸ்டிரக்சர் பெசிலிட்டியைச் சரிபடுத்த வேண்டும் என்று இருக்கிறோம். இடையில் 3 மாதம்தான் இருக்கிறது. ஒருவேளை தேவைப்பட்டால், இதைத் தள்ளிப் போட வேண்டிய அவசியம் வந்தாலும் வரலாம். கூடுமான வரை ஜூன்-ஜூலையில் இதை அமுல்படுத்த விரும்புகிறோம். காரணம் அநேகமாக எல்லாப் பள்ளிகளும் ஜூன்-ஜூலையில் ஆரம்பமாகிவிடுகின்றன. அதற்கு முன் நடக்க உரிய அவகாசம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய நிலைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. சி. ஈா. லெட்சுமிகாந்தன் : குழந்தைகளுக்கு ஒரு வேளை ஒரு குவளை பால் வழங்குவது குறித்து மத்திய அரசு மாநில அரசுக்குக் கடிதம் எழுதி இருப்பதாகவும், ஒரு குவளை பால் வழங்கும் திட்டத்தை அமுல் படுத்தினால் குறிப்பிட்ட ஆண்டுக்கு மத்திய அரசு உதவி செய்வதாகவும், அதற்குப் பிறகு மாநிலத் திட்டப் பணிகளின் தொடர்ச்சிப் பணியாக அது இருக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. அந்தத் திட்டம்பற்றி மாநில அரசு என்ன நிலையை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு இடைரென்று என்னால் விடையளிக்க முடியவில்லை. அதற்கென்று இருப்பவர் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள். அவரிடம் கேட்டால் அதற்கு விளக்கம் அளிப்பார். கடிதம் பற்றியோ மற்ற விவரங்கள்பற்றியோ என்னிடம் எந்தக் குறிப்பும் இல்லாத நிலையில், என்னால் இதற்கு விடை அளிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, 1981-82 ஆம் ஆண்டு பட்ஜெட்டை வழங்கும்போது அந்த ஆண்டுக்கான வருவாய் 1,128.26 கோடி ரூபாய் என்று சொல்லிவிட்டு, 1981-82 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் வருவாய் ரூ. 1,423.46 கோடியாக உயர்ந் திருப்பத்தைக் குறிப்பிட்டு, மேலும் 1982-83 வருவாய்க் கணக்கில் வருவாய் ரூ. 1 569.48 கோடி என்று காட்டப்பட்டிருந்தாலும், இந்தத் தொகையில் போடப்பட்ட புதிய வரிகள் ரூ. 100 கோடிக்குச் சேர்க்கப்படவில்லை என்றும், ஆகவே 1982-83 ஆம் ஆண்டுக்கான சரியான வருவாய் ரூ. 1,700 கோடியாக இருக்க வேண்டும் என்றும், வேண்டுமென்றே அரசு வருவாய்க் கணக்கைக் குறைத்துக் காட்டியிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கான விளக்கத்தை மட்டும் நான் இங்கே தர விரும்புகிறேன். வருவாய் உயர்ந்த தற்கு மதுவிலக்குக் கொள்கையில் மேற்கொண்ட சில மாற்றங்கள் முக்கிய காரணமாகும். அதன் காரணமாக வருவாய் உயர்ந்தது. இந்த மாற்றங்கள் வரவு-செலவுத் திட்டத்தின்போது அறிவிக்கப்பட்டவையாகும். இதன் விளைவாக இது வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் காட்டப்படவில்லை. இதைச் சென்ற ஆண்டே நான் குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது ரூ. 100 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் எப்படிக் காட்டப்பட முடிய வில்லையோ, எப்படி நிதிநிலை அறிக்கையில் மட்டும் சொல்லப்பட்டிருக் கிறதோ அப்படியே மதுவிலக்குக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படுத்தி



கடைகளைத் திறப்பது என்று உரையின்போது கொண்டுவரப்பட்டது. முன் கூட்டியே திட்டமிடப்படவில்லை. இதன் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாதப்படி பார்த்தாலும், மதுவிலக்கு தளர்த்தப்பட்ட பிறகு வந்த வருவாய் என்று சொல்லி, ரூ. 104 கோடிதான் எக்சைஸ் டியூட்டியாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 294 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வந்திருக்கிறது, வருவாய் இனத்தில் ரூ. 1,128.26 கோடிதான் பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் வந்திருப்பது ரூ. 1423.46 கோடியாகும். ஆக, ரூ. 295.20 கோடி உபரியாக வந்திருக்கிறது. 1981-82ல் இந்த நிலைமை, மதுவிலக்கு தளர்த்தப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் ரூ. 100 கோடிதான். ஆனால் வந்த வருவாய் ரூ. 195 கோடி கூடுதலாக வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால், அந்த விகிதாச்சாரத்தில் பார்த்தால், 1982-83 ஆம் ஆண்டில் அதிகமான வருவாய் இருக்காதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மதுவிலக்கைத் தளர்த்திய பிறகு, அதை முழுமையாக அமுல் படுத்தவில்லை. சில மாதங்களுக்கு மட்டும்தான் கடைகளைத் திறந்தோம். இன்னும் சில மாவட்டங்களில் கடைகள் சரியாக இயங்கவே இல்லை. அப்படியிருந்தும், 6, 7 மாதங்கள் மட்டும் ரூ. 100 கோடி வருவாய் வந்திருக்கிறது. முழுமையாகச் செயல்பட்டால் இந்த ஆண்டு ரூ. 200 கோடிக்கு வருவாய் வர வேண்டும். ஆனால் நாம் எதிர்பார்ப்பது ரூ. 140 கோடி தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்குத்தான் விளக்கம் கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விளக்கத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தருவார்கள். அதில் எவ்வளவு வருகிறது என்று சொல்வார்கள்.

வறட்சிப் பணிகளுக்காக மத்திய அரசின் உதவியும், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக அளிக்கப்பட்ட உதவி மற்றும் சிறப்புக் கூறுகளுக்கான திட்டங்களுக்காக அளிக்கப்படும் உதவிகள் ஆகிய இனங் களுக்கு மத்திய அரசின் ஒதுக்கீடுகள் இந்த ஆண்டில் துவக்கத்தில் அதிகப் பட்டதால், அவை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெறவில்லை. மேலும் சென்ற ஆண்டு விற்பனை வரி—அதாவது 1979-80 ஆம் ஆண்டுக்கு

வசூல் செய்யப்பட்ட தொகைகள்—வங்கிகள், கருவூலங்கள் ஆகியவற்றின் வேலைகளில் நடைபெற்ற இடர்பாடுகள் காரணமாக 1981-82 ஆம் ஆண்டில் வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆகவே 1981-82 ஆம் ஆண்டுக்கான விற்பனை வரி கூடுதலாகத் தெரிகிறது. வருவாயையும் செலவுகளையும் மதிப்பிடும் போது, இயல்பாகவே மாற்றங்கள் ஏற்படும் என்ற அனுமானத்தின் அடிப் படையில் அவைகள் அமைந்திருக்கின்றன. விலைவாசி உயர்வு போன்ற சில காரணங்களால் விற்பனை வரி போன்றவை உயர்வதும், செலவுகளைப் பார்க்கும்போது அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்வு அளிப்பதும் பொதுவாக நிகழக்கூடிய ஒன்றாகும். ஆனால் பொதுவாக வருவாயில் ஏற்படும் உயர்வும் செலவுகளில் ஏற்படும் உயர்வும் ஈடுகட்டும் வகையில் அமைவதால், வருவாய், செலவுகள் ஆகிய இரண்டையும் இயல்பான ஏற்றங்கள் அடிப்படையில் மதிப்பிடுவது என்பது எப்போதும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்கமாகும். இந்தப் பின்னணியில் 1981-82 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், மதுவிலக்குக் கொள்கை, புதிய வரிகள், மத்திய அரசின் உதவித் தொகை ஆகிய இவற்றின் விளைவாக மட்டுமே வருவாய்க் கணக்கில் உபரி ஏற்பட்டிருப்பது தெளிவாகும். மத்திய அரசின் பங்கு ஓரளவுக்குக் கூடுதலாக வந்ததன் காரணமாகவும், விலைவாசி உயர்வு காரணமாக விற்பனை வரி மூலம் வருவாய் கூடுதலாகிறது. ஆகவே மேற்படி விவரங்கள் 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது இல்லையாதலால், இவை பிறகே, அவையின் கவனத்திற்கு திருத்த மதிப்பீடுகள் மூலமாகக் கொண்டு வரப்பட்டதே தவிர வேண்டுமென்றே வருவாயைக் குறைத்துக் காட்டவில்லை. இப்படி கடந்த 25 ஆண்டுகளாகப் பார்த்தால், எப்போதும் வருவாய்க் கணக்கு பிறகு கூடுதலாகிக் கொண்டு வந்ததைக் காட்ட முடியும். சில நேரங்களில் குறைவாக வரலாம். ஆனால் பெரும்பாலும் அது கூடுதலாகத்தான் வரும். இத்தகைய குற்றச்சாட்டுகளை நானே எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்கு அவர்களும் இதே பதிலைத்தான் சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டிலும்

(பிற்பகல் 12.40)

நடைமுறையில் அப்படித்தான் வருகிறது. ரூ. 200 கோடிக்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது. பிறகு அது ரூ. 260 கோடிக்கு வருகிறது என்றால், ரூ. 60 கோடி எப்படி வந்தது என்று கேட்பது இயல்பு. இருக்கின்ற சூழ்நிலை அப்படி இருப்பதால்தான் அப்படி கணக்கிட வேண்டியிருக்கிறது. மாண்புமிகு





உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் புதிதாகப் போடப்பட்ட வரிகளின் மூலம் 100 கோடி ரூபாய் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு புதிதாகப் போடப்பட்ட வரிகள் 100 கோடி ரூபாய்க்கு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நாம் போட்டிருக்கும் வரிகளின் மூலமாக 38 கோடி ரூபாய்தான் வரும். பட்டுக்குப் போட்ட வரியை நீக்கியதன் காரணமாக ஒரு மூன்று குறையும், மீதி 35 கோடி ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கிறோம். இதிலே கூட 7 கோடி ரூபாய் ஊதிய உயர்வுகளுக்காகவும், ஓய்வுபெற்றவர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியத்திற்காகவும் போகும் என்று கணக்கு எடுத்திருக்கிறோம். இன்றைக்கு போடப்பட்டுள்ள கணக்குகளை புத்தகத்திலேயே தெளிவுபட கூறியிருக்கிறோம். 1982-83 ஆம் ஆண்டுக்கு நமக்கு வரக்கூடிய வருமானம், வரவு-செலவு திட்ட மதிப்பீட்டின்படி—விற்பனை வரியின் மூலம் 670.10 கோடி ரூபாய். அதில் 110.84 கோடி ரூபாய் மத்திய அரசின் பங்காக நமக்கு வந்து சேர்கிறது. அதைக் கழித்தால், இன்றைக்கு 519 கோடி ரூபாய் வரும். இதிலே அடிஷனல் டாக்ஸ் 30 கோடி ரூபாய். இதைக் குறைத்தால் 489 கோடி அளவிற்குத்தான் நமக்கு விற்பனை வரியின் மூலமாக வரும். இதனுடைய ஸ்டாக்ட்சரைப் பார்த்தால், நமக்கு எவ்வளவு வரும் என்று தெரியும். இப்போது 4 சதவீதமாக இருந்ததை 5 சதவீதம் என்று ஒரு சதவீதம் உயர்த்தியிருக்கிறோம். சாதாரணமாக பலமுனை வரியிலிருந்து பலவற்றை ஆண்டுக்காண்டு ஒரு முனை வரியில் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம். இதனுடைய நிலைமையைத் தெளிவுபடுத்தினால்தான் தெளிவுபடும் என்று கருதுகிறேன்.

1972-73-ல் ஒரு முனை வரியின் மூலம் மாநிலத்திற்குக் கிடைத்த வருவாய் 56 சதவீதம், பலமுனை வரியின் மூலமாகக் கிடைத்தது 44 சதவீதம். அதற்குப் பிறகு தொடர்ந்து 1973-74-ல் சில பலமுனை வரிப் பொருள்களை ஒருமுனை வரிக்கு மாற்றியதன் காரணமாக 1975-76-ல் 81 சதவீதம் ஒரு முனை வரியும், 19 சதவீதம் பலமுனை வரியும் வந்தது. அதற்குப் பிறகு 1977, 1978 ஆம் ஆண்டில் ஒரு முனை வரி 86 சதவீதமும் பல முனை வரி 14 சதவீதமும் ஆயிற்று. 1980-81 ஆம் ஆண்டுக் கணக்கைப் பார்த்தால் ஒரு முனை வரி 89 சதவீதமும், பலமுனை வரி 11 சதவீதமும் வருகிறது. ஆனால் 1981-82 ஆம் ஆண்டில் 90 சதவீதம் ஒரு முனை வரியும், 10 சதவீதம் பலமுனை வரியும் வருகிறது. கிட்டத்தட்ட பெரும்பாலான இனங்களை பலமுனை வரியிலிருந்து ஒரு முனை வரிக்குக் கொண்டு வந்துவிட்டோம். எல்லாவற்றையும் ஒரு முனை வரிக்குக் கொண்டுவர வேண்டும் என்ற

கோரிக்கையையும் கொண்டு வருகிறார்கள். மகாராஷ்டிராவில் இதை ஓரளவிற்குச் செய்திருக்கிறார்கள். அது நடைமுறையில் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டுத்தான் செய்ய வேண்டும். கூடுமான வரையில் ஒரு முனை வரியாக ஆக்குவதால், அரசுக்கும் மற்றவர்களுக்கும் கஷ்டம் இல்லாமல் இருக்கும். சிலவற்றை ஒரு முனை வரியாக ஆக்குவதிலும் சங்கடம் வருகிறது. பிளாஸ்டிக்குக்கு ஒரு முனை வரியைப் போட்டோம். இதனால் சங்கடம் வருகிறது, ஆகவே பலமுனை வரி போடுங்கள் என்று கூட கேட்டார்கள். ஆகவே சென்ற ஆண்டு 8 சதவீத பலமுனை வரியை 4 சதவீத ஒருமுனை வரியாக ஆக்கினோம். அதைப் போலவே 'ஸ்டேஷனரி கூட்ஸ்' போன்றவைகள் இருக்கின்றன. ஒரு முனை வரி என்றால், எந்தக் கட்டத்திலே போடுவது என்ற கஷ்டம் வியாபாரிகளுக்கு இருப்பதால் பலமுனை வரியாகப் போடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அவற்றைச் சிந்தித்துப் பார்த்து அவர்களுக்குச் சலுகை தந்து, நமக்கு நஷ்டம் இல்லாமல் இருக்குமானால் அப்படிச் செய்யலாம். அப்படி 20 சதவீதம் ஒருமுனை வரியும் 10 சதவீதம் பலமுனை வரியும் வருகிறது என்ற கணக்கைப் பார்த்தால், மொத்தம் வரும் 489 கோடி ரூபாயில் 10 சதவீதம் என்பது 48 கோடி ரூபாய். ரூ. 48 கோடி வருமானம் என்று சொல்லும்போது, 4 சதவீதத்தை 5 சதவீதமாக உயர்த்தியதால் ரூ. 12 கோடி வருமானம் வரும். இந்த ஒரு இனத்தில் மட்டும் அதிகமாக வராது, 12 கோடி ரூபாய்தான் வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்ன மாதிரி, 100 கோடி ரூபாய் வந்தால் நல்லதுதான். பற்றாக்குறையைக் குறைத்துவிடலாம். அதற்கான தன்மைகள், விவரங்கள் இல்லை. உயர்ந்தால் நல்லதுதான்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி**. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விரும்புவதைப் போல, அடுத்த ஆண்டு அவர்களே சொல்லப்போகிறார்கள். ரூ. 100 கோடி வரப் போகிறது என்பது நான் போட்ட கணக்கு. விற்பனை வரியில் 1980-81 ஆம் ஆண்டுக்கு 486.88 கோடிக்கு வந்திருக்கிறது. அதன்படி பார்க்கும்போது 1981-82 ஆம் ஆண்டு ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் ரூபாய் 582.53 கோடி ரூபாய் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ ரூ. 96 கோடி ஒரே ஆண்டில் உயர்ந்திருக்கிறது. அந்த விகிதாச்சாரத்தில் கணக்கிடும்போது 1982-83 ஆம் ஆண்டில் 120 கோடி ரூபாய் இதிலே வர வேண்டும். இது இல்லாமல் புது வரிகளின் மூலம் ஏறத்தாழ ரூ. 100 கோடி வரும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயமாக அடுத்த ஆண்டு ரிவைஸ்ட் எஸ்டிமேட் வைக்கும்போது ரூபாய் 700 கோடி அளவிற்கு வந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**. புள்ளிவிவரத்தை நான் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஊகத்தின் அடிப்படையில் சொல்லுகிறார்கள். ஊகம் என்றால் நல்லது, மகிழ்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதைப் போல, வேண்டுமென்றால் கணக்கை எடுத்துப் பார்க்கிறேன். 4 சதவீதத்தை ஐந்து சதவீதமாக ஆக்கியதன் மூலமாக எவ்வளவு வந்திருக்கிறது என்பதைக் கணக்கெடுத்துப் பார்த்தால் தெரியும். இதனுடைய எண்ணிக்கை பெருகினால், அந்த அளவிற்குப் பெருகும். இந்த இனத்தை எடுத்துப் பார்த்து எந்த அளவிற்கு வருகிறது என்பதைப் பார்க்கலாம். கூடுதலாக வந்தால், எனக்கு மகிழ்ச்சி. உங்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

ஆயத் தீர்வை வருவாய் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். "1980-81 ஆம் ஆண்டு 12 கோடியே 56 இலட்சம் வருமானம் வந்தபோது 1981-82 ஆம் ஆண்டில் 8 கோடியே 40 இலட்சம் ரூபாய் வரும் என்று குறைத்து மதிப்பீடு செய்திருக்கிறது என்றும், திருத்த மதிப்பீட்டில் 102 கோடியே 76 இலட்சம் ரூபாய் வந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1982-83 ஆம் ஆண்டுக்கு 200 கோடி வர வேண்டும். ஆனால் ரூபாய் 146.50 இலட்சம் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் இவ்வளவுதான் வருமா?" என்று கேட்டிருக்கிறார்கள். 1980-81-ல் திருத்த மதிப்பீட்டில் ரூ. 7.90 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மது உரிமைகள் வழங்குவதில் சில மாற்றங்கள் செய்ததால், அடுத்த ஆண்டு கூடுதல் வருமானம் கிடைத்தது. 1980-81 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ. 7.90 கோடி என்று தெரிவித்ததற்குப் பதிலாக 1981-82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 8.47 கோடி ரூபாய் வந்திருக்கிறது. இதைப் பார்க்கும்போது, கூடியுள்ளதே தவிர, குறையவில்லை. 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மதுவிலக்குக் கொள்கையில் மாற்றங்கள் அறிவிக்கப்பட்டாலும் இதனால் எவ்வளவு வருமானம் வரும் என்பது நிதிநிலை அறிக்கையின் கணக்கிலே சேர்க்கப்படவில்லை. 1981-82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் கூடுதல் வருவாயும் சேர்த்துத்தான் ரூ. 102.76 கோடி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாற்றங்கள் செய்த பின்னர், 9 மாதங்களுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்து மதிப்பிடப்பட்டிருக்கிறது. சராசரியாக மற்ற மாநிலங்களில் இயல்பாக எவ்வளவு வருவாய் வருகிறது என்ற கணக்கைக் கொண்டு 1982-83 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 146.50 கோடி வரும் என்று தெரிவிக்கப்

பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல, வேண்டுமென்று குறைத்துக் காட்டவில்லை. ஏற்கெனவே இருக்கின்ற பழக்கத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கும் அடிப்படையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட மற்ற பொதுச் சுகாதாரம், சாலைகள் பற்றி விவரங்களையெல்லாம் வைத்திருக்கிறேன். காலம் கடந்து விட்டதால் சொல்லாமல் செல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, சுவீடன் நாட்டு நிறுவனம், டானிடா, வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம், சுற்றுலா வளர்ச்சித் திட்டம் இவற்றையெல்லாம் குறிப்பிட்டு இவற்றிற்கு மத்திய அரசின் உதவி கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி தெளிவுபடுத்த விரும்புகிறேன். தன்னிறைவுத் திட்டத்திற்கும், சுற்றுலா வளர்ச்சித் திட்டத்திற்கும் மத்திய அரசு உதவி எதுவும் கொடுக்கவில்லை, சுற்றுலா வளர்ச்சித் திட்டத்திற்கு அனைத்து நாடுகள் வளர்ச்சி மன்றத்தின் உதவியைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏனென்றால் மாநில அரசுக்கு வெளிநாடுகளுடன் உதவி கோர அதிகாரம் கிடையாது. மத்திய அரசுதான் வெளிநாடுகளுடன் பேச வேண்டும். ஆகவே மாநில அரசு மத்திய அரசிடம் சொல்ல வேண்டியிருக்கிறது. உலக வங்கி எஸ்.ஐ.டி.ஏ. டானிடா போன்ற நிறுவனங்கள், மாநில அரசு தயாரித்துத் தரும் திட்டங்கள் திறமையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதைப் பரிசீலித்து மைய அரசுக்குத் தொகை அளிக்கின்றன. அந்தந்த நாடுகள் அந்தந்த நிறுவனங்களுக்குப் பொதுவாக

(பிற்பகல் 12.50)

ஒரு திட்டம் கொடுத்தால், அதற்கு 50 சதவிகிதம் உதவியை உலக வங்கி அளிக்கிறது. நாம் ஒரு திட்டத்தைக் கொடுத்தால், கூடுமானவரையில் 50 சதவிகிதம் அளிப்பார்கள். அந்த உதவியைப் பெற்றுக்கொண்டு, மத்திய அரசு முழுமையாக அதைக் கொடுப்பதில்லை. மத்திய அரசு வைத்திருக்கின்ற முறை என்னவென்றால், கிடைக்கும் உதவித் தொகையில் 30 சதவிகிதத்தை வைத்துக்கொண்டு மீதி உள்ள 70 சதவிகிதத்தைத்தான் நமக்குக் கொடுக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது, அந்தத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை மாநில அரசு எடுத்துக்கொள்கிறது. மத்திய அரசுக்குக் கிடைக்கும் தொகையை அவர்கள் உலக வங்கிக்கு 40 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அவர்கள் 3/4 சதவிகிதம் அளவில் கொடுக்கிறார்கள். இந்தக் கடனை நாம் 15 ஆண்டுகளில் திருப்பித் தர வேண்டும் என்று மத்திய அரசு சொல்கிறது. நமக்கு மத்திய அரசு $6\frac{1}{2}$ பெர்





செண்ட் வட்டி விகிதத்தில் கடன் தருகிறார்கள். அவர்கள் உலக வங்கியில் 3/4 சதவிகிதத்தில் வாங்கிக்கொண்டு நமக்கு $6\frac{1}{2}$ சதவிகிதத்திற்குக் கொடுக்கிறார்கள். உலக வங்கி அவர்களுக்கு 40 ஆண்டுகள் தவணையில் கொடுக்கின்றது. நமக்கு 15 ஆண்டுகள் தவணையில் கொடுக்கிறார்கள். இதைப்பற்றி என்.டி.சி. யிலேகூட கேட்டோம். அப்போது பதில் தெரிவிக்கின்ற போது, "அதிலேயிருந்து வருகின்ற பலன்களை மத்திய அரசு பரவலாக எல்லா மாநிலங்களுக்கும் வேறு வழியில் செலவழித்துக்கொண்டிருக்கிறது" என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த உதவிகளைப் பெறும் மாநிலங்கள் எல்லாம் எங்களுக்கும் அதே வகையிலே தரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் மத்திய அரசுக்குக் கிடைக்கக்கூடிய வருவாயை மாநிலங்களுக்குத்தான் பரவலாகச் செலவு செய்வதாக அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வரிகள்பற்றிக் கூறும் போது, டையர் டியூப்கள் மீது வரி விதிப்பது சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற சைக்கிள் டியூப்கள் மீது விழுகிறது; அந்தப் பொருள்கள் மீது உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். சைக்கிள் டையருக்கும், டியூப்களுக்கும் வரி இல்லை. அந்த வரி மோட்டார் வாகனங்கள் டையர் டியூப்கள் பொறுத்துத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயந்திரங்கள் மீது 6 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதம் ஏற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. அங்கே பேசும்போதுதான் அது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் திருத்தப்பட்டது. மேல்வையிலே வைக்கும் போது, திருத்தப்பட்டதாகத்தான் வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு மறுநாள் அங்கே சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அங்கே திருத்தப்படாமல் கொடுக்கப்பட்டதால், எடுத்துச் சொல்லப்பட்டது. இங்கே திருத்தப்பட்ட பின்பு கொடுக்கப்பட்டதால், அதைப்பற்றிப் பின்னர் இங்கே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வொன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரிகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர்கள் சொன்னார்கள். "இவ்வளவு வரி போட்டும் 35 கோடி ரூபாய் தானே வருகிறது. அந்தக் குறைந்த வரி வருவதை விட்டுவிடக்கூடாதா?" என்று சொல்கிறார்கள். அதையே நான் சொல்கிறேன்: 35 கோடி ரூபாய் தானே வருகிறது, அந்த வரியை எல்லாம் போட்டால் என்ன என்ற முடிவிற்குத்தான் நான் வர இருக்கிறேன். பட்டீத்

துணிக்கு வரி போட்டதற்குக் காரணம் அதைப் போட வேண்டும் என்பது அல்ல. சூழ்நிலைகளை மற்றவைகளைப் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களைப் பார்க்கின்றபோது, பட்டுத் துணியைப் பொறுத்த வரையிலே, கர்நாடகத்திலே பட்டுத் துணி விற்பனை வரியை 2 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். கேரளாவிலே சில்க் ஓவன் வித் மில் மேட் காட்டன் கிளாத்துக்கு 7 சதவிகிதம் என்று வைத்திருக்கிறார்கள். ஆக பட்டுத் துணிக்கு அங்கே போட்டிருப்பதிலே நடுநிலைமையிலே இருந்து 5 சதவிகிதம் என்று போட்டிருந்தோம். ஆயிரம் ரூபாய் கொடுத்து பட்டுத் துணி வாங்குகின்றவர்கள் ரூ. 50 கொடுக்க முடியாதா என்ற அளவில் போட்டோம். அதற்குப் பிறகு இருக்கின்ற நிலைமைகள் எங்களுக்குத் தெரிய வந்தது. ஒரு முனை வரி என்று போட்டால் போதும் என்று முதல் கட்டத்திலே போடுவது என்று உத்தரவு போட்டோம். அதன் காரணமாக நெசவாளர்கள் இக்கட்டுக்கு ஆளானார்கள் என்று தெரிந்தது. இந்த வரியை அவர்கள் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது என்று தெரிந்தது. ஒவ்வொரு நெசவாளியும் இவ்வளவு வாங்கினோம், இவ்வளவுக்கு விற்றோம் என்று வரவு-செலவுக் கணக்கு வைக்க வேண்டியதாக இருக்கின்றது. அப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன என்று அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். அது மட்டுமல்லாமல், இறுதிக் கட்டத்திலே வைக்கலாமா என்று பார்த்தால், அதிலும் குறை இருந்தது. அந்த வரியை இறுதிக் கட்டத்திலே வைத்தாலும், மல்டி பாயிண்ட் என்று ஆகிவிடுகிறது. காஞ்சிபுரத்திலேயிருந்து ஒருவன் 50 புடவைகளை சென்னைக்குக் கொண்டு வந்து விற்றால், அந்த விற்பனை வரியை காஞ்சிபுரத்தில் உள்ளவர் மீது போடுவதா அல்லது சென்னையிலே விற்றவர்மீது போடுவதா என்ற நிலைமைகள் உருவாகின்றன. ஆக இப்பேர்ப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்பதும் தெரிந்தது. அடுத்து, இந்தப் பட்டு நூல்கள் விலை ஏறியிருப்பதால், தொழிலில் ஓரளவுக்கு மந்த நிலைமை இருக்கிறது. நெசவாளிகளுக்குக் கூலி உயராத நிலைமைகள் இருப்பதால், அவர்களுக்கு உள்ள குறைபாடுகளையும் தெரிவித்தார்கள். பேரவையிலேயும் உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அங்கே அவர்கள் தெரிவிக்காமல் இருந்திருந்தால், இங்கேயும் அங்கத்தினர்கள் தெரிவித்திருப்பார்கள். இந்த அவையிலே தெரிவிக்கவில்லை என்று கருதுகிறேன். முன்னாலே நடந்த விவாதத்தில் பேசியிருப்பார்கள். கடைசியிலே பேசவில்லை என்று சொல்கிறேன். அந்தத் தன்மைகளையெல்லாம் ஆராய்ந்த பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தோம். அவர்களுக்குச் சங்கடங்களை ஏற்படுத்த வேண்டுமென்பது எங்களுடைய நோக்கமல்ல.



இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கைத்தறிப் பட்டுக்கு ரிபேட் என்று சொன்னார்கள். அதிலே 10 சதவிகிதம் மத்திய அரசு கொடுக்கிறது. அதிலே இன்னொரு 10 சதவிகிதம் மாநில அரசு கொடுக்கிறது. அப்படி கொடுக்கின்ற சூழ்நிலையில், அதன் மீது ஒரு 5 சதவிகிதம் வரி போடுவது என்பது ஒரு சங்கடத்தை உருவாக்கும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த அளவில் அந்த வரியை எடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட நியாயங்களுக்கு நாங்கள் பணிந்து போகிறோம். மக்கள் மன்றத்திற்கு இந்த அரசு பணிந்து போகிறது. நாம் தனிப்பட்ட ஆளுக்குப் பணியவில்லை. நாம் மக்கள் எண்ணத்திற்குக் கனிந்து, பணிந்து போக வேண்டும். அந்த முறையிலே மக்கள் எண்ணங்களை, விருப்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறோம். அந்த நிலைமையிலேதான் இதை நீக்க வேண்டும் என்று வந்தது.

அடுத்து, மின்சாரப் பொருள்கள்பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே ஒன்பது சதவிகிதம் என்று இருந்தது. மற்ற மாநிலங்களில் ஆந்திராவிலே, கர்நாடகத்திலே, பார்க்கும்போது, அங்கு 10 சதவிகிதம் வரை போட்டிருக்கிறார்கள். அதற்குச் சமமாக ஒரு சதவிகிதம்தான் உயர்த்தினோம். அங்கு 10 சதம் என்று இருப்பதைப்போல் இங்கும் 10 சதம் என்று ஆக்கினோம். மதுவைப் பொறுத்து கேரளாவிலே 50 சதம் என்று ஏற்கெனவே வரி இருந்தது. கர்நாடகத்திலே 30 சதவிகிதம் இருக்கிறது. தமிழகத்திலே 25 சதவிகிதம் என்று இருந்தது. அதை 10 சதவிகிதமாக் மாற்றினோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள் சில சங்கடங்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இங்கே இருக்கின்ற எக்சைஸ் டியூட்டி பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த டியூட்டிகள் காரணமாக இங்கேயிருந்து மது நகருவதற்கு வழி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மது விலக்குக் கொள்கை காரணமாக, வரி விதிப்பு காரணமாக ஓரளவுக்கு நகராது என்று சொல்லவில்லை. ஓரளவுக்கு நகரும். அவர் சொன்ன விவரங்களைக் கவனத்தில் கொண்டு ஆராய்ந்து செய்யலாம். பிற மாநிலத்திற்கு வருமானம் போகாமல், நம் மாநிலத்தில் நமக்கு பாதகம் இல்லாமல், வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சிந்தித்துச் செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் 'கம்பேர்' பண்ணிப் பார்ப்பார்கள். உடனடியாக அறிவிக்காவிட்டாலும்கூட, ஆராய்ந்து அறிந்து இதிலே உள்ளபடியே நமக்கு நஷ்டம் வருகிறது என்றால், அப்படி நஷ்டம் வராத சூழ்நிலை இருக்கும் என்றால், அந்தக் கட்டத்திலே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதை மாற்ற வேண்டுமென்ற சூழ்நிலை இருந்தால், அதைச் செய்வார்கள். அதிக பாதகம் ஏற்படாது. அந்த நிலைமை

களைச் சீர்திருத்த, வேண்டியவற்றைச் செய்ய அரசு ஆயத்தமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் அவருடைய சிந்தனைக்கு உதவி புரியும் என்பதை மட்டும் நான் இங்கே கூறிக்கொள்கிறேன்.

கூம்பு வடிவில் விற்கப்படுகிற பருத்தி நூலுக்கு இப்போது ஒரு சதவிகிதம் கூட்டியிருக்கிறோம். மற்ற மாநிலங்கள் கூட்டியிருக்கின்ற நிலைமையிலே நாமும் ஒரு சதவிகிதம் கூட்டியிருக்கிறோம் என்பதைத் தவிர வேறல்ல. ஏதாவது ஒரு வகையிலே நமக்கு வருவாய் வரவேண்டும் என்றுதான் கூட்டியிருக்கிறோம். எல்லா மாநிலங்களும் போட வேண்டிய எல்லா இடங்களிலும் வரியைப் போட்டுவிட்டு இப்போது எந்த எந்த இடத்திலே உயர்த்தலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். புட்கிரெயின்லைப் பொறுத்து, கேரளாவிலே 3 சதம், 4 சதம் என்று ஆகியிருக்கிறது. ஆனால் நாம் இங்கே புட்கிரெயின்ஸுக்கு வரி போடவில்லை. அப்படி இன்னும் வரி போட்டால், அது அவர்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கும் என்பதால் போடவில்லை. ஒப்பிட்டுப் பார்த்து, ஓரளவுக்கு நாம் சமாளிக்கின்ற அளவிற்குத்தான் வரி போட்டிருக்கிறோமே தவிர வேறல்ல. மக்களை அதிகமாகப் பாதிக்காத வகையிலேதான் வரிகளைப் போட்டிருக்கிறோம். அந்த வருவாயை வைத்து சமூக நலத்திற்காகவும், சமுதாய நல் வாழ்வுத் திட்டத்திற்காகவும் செலவு செய்து திட்டங்களை நிறைவேற்றி மக்கள் சிறப்புற வேண்டும் என்றுதான் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவேதான் இந்த நிதிநிலை அறிக்கையை வைத்துப் பேசுகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் மற்றவைகள் இந்த அரசு தன்னுடைய பணிகளைச் செம்மையாக நடத்திட உறுதுணையாக இருக்கும் என்ற முறையிலே உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற குறைகளைப்பற்றி, கோரிக்கைகளைப் பற்றி தனித்தனியாக கொள்கை விளக்கக் குறிப்புகள் வரும்போது, அவைகளைப்பற்றி விரிவாகத் தெரிவிக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** சாக்லெட், பிஸ்கெட்டுகள் மீது போட்ட வரியைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்குப் போட்டிருக்கிறேன். ஏற்கெனவே 8 சதம் என்று இருந்தது. இப்போது 10 சதவிகிதம் என்று மாற்றியிருக்கிறோம். ஏற்கெனவே கேரளாவில் 10 சதம் என்று போட்டிருக்கிறார்கள். கர்நாடகத்திலே மட்டும் 8 சதம். நம்மைப் பார்த்து அவர்கள் 10 சதம் என்று வரலாம். இங்கே நாம் போட்டிருக்கிறது 2 சதவிகிதம்தான். அதுவும் யாருக்குப் போட்டிருக்கிறோம்? பிரிட்டானியா, பாரி கம்பெனி போன்ற ரெஜிஸ்ட்டர் பண்ணி வணிக முறைச் சட்டத்தின் கீழ் வந்துள்ள கம்பெனிகளுக்குத்தான் போட்டிருக்கிறோமே தவிர, வேறல்ல. பிஸ்கட், பன், ரொட்டி பேக்டரிகளிலே எல்லாம் 6 பெர்செண்ட் என்று இருந்தது.

(பிற்பகல் 1.00)

6 சதவிகித வரியைப் போன ஆண்டே எடுத்துவிட்டோம். பேக்கரிகளுக்கு இந்த வரி கிடையாது. அவர்கள் தாராளமாக விற்கலாம். வெற்றிலை பாக்குக் கடையில் உள்ள சாக்லேட், பெப்பர்மிட் ஆகியவற்றுக்குக் கிடையாது. 12 ரூபாய் கொடுத்து, வாங்கி பிரசன்ட் பண்ணுகிறார்களே. அதற்குத்தான் 2 சதவிகிதம் வரி உயர்ந்திருக்கிறது. இதனால் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவரவர்களே, பொதுவாக பைனான்ஷியல் இயர் என்பது ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து மார்ச் 31 ஆம் தேதி வரையாகும். ஆனால் நம்முடைய எக்சைஸ் துறையிலே எக்சைஸ் இயர் என்று வைத்திருக்கிறார்கள். ஒரே அரசாங்கம், ஒரே அமைச்சர், ஒரே ஆணையர், ஒரே துறை இருக்கிறது. Tamil Nadu Arrack Manufacture Rules, 1981, Tamil Nadu Arrack Supply by Wholesale Rules, 1981. இரண்டுக்கு மட்டும் எக்சைஸ் இயர்—அதாவது ஜூலை 16 துவங்கி ஜூலை 15 முடியும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. லைசன்சிங் பீரியடுக்கு அந்த இயர்தான் வைக்க வேண்டுமென்றால், அதே துறையில் ஐ.எம்.எஃப்.எல். ஹோல்சேல் லைசன்சுக்கும் ரீடெயில் லைசென்சுக்கும் மார்ச் 31 ஆம் தேதி வரை ஏன் வைக்க வேண்டும்? அவர்கள்தான் இரண்டையும் வழங்குகிறார்கள். ஒரே துறையில் அரசுக்கு ஒரு தேதி, ஐ.எம்.எஃப்.எல். க்கு ஒரு தேதி என்று இருப்பது முறைதானா? எல்லாவற்றுக்கும் எக்சைஸ் இயர் ஏன் வைக்கக்கூடாதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, சட்டம் பூராவையும் அவர்கள் பார்த்திருந்தால் தெரியும். கமிஷனருக்கு இத்தனை மாதங்களுக்கு மேலாக லைசன்ஸ் கொடுக்க அதிகாரமில்லை என்று கொடுத்திருக்கிறோம். லைசன்ஸ் கொடுக்கிறபோது, அந்த மாதங்களுக்குக் குறைவாக, அதாவது ஒரு வருடத்திற்கு மேலே கொடுக்கக்கூடாது என்று சொல்லும்போது, ஒரு வருடத்திற்குக் கொடுக்கலாம், 8 மாதங்களுக்குக் கொடுக்கலாம். அது பைனான்ஷியல் இயருக்குள் வரவேண்டுமென்பதற்காகத்தான் லைசன்ஸ் கொடுக்கும்போது, 31—3—1982 என்று கொடுத்திருக்கிறார்கள். வேறு ஒன்றுமில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அதுவல்ல கேள்வி. ஒரே இலாக்காவிலே இரண்டு முறைகள். அராக் மேனுபேக்சரிங் லைசன்ஸ் பீரியட் 31 மார்ச்சுடன் முடிகிறது. அதை ஜூலை 15 வரை நீட்டித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே 'சப்ளை ஆஃப் ஹோல்சேல் அரக்' இருக்கிறதே அதற்கான லைசன்ஸ் பீரியடையும் 31 மார்ச் முடிவடைவதை ஜூலை 15 ஆம் தேதிவரை நீட்டித்துத் தருகிறார்கள். அதைப்போல ஐ.எம்.எஃப்.எல். ஹோல்சேல் லைசன்சாக இருந்தாலும், ரீட்டைல் லைசன்சாக இருந்தாலும் அவர்களுக்கும் இதே மாதிரிதான் இருக்க வேண்டும். ஒரே நேரத்தில் சட்டம் கொண்டுவந்து செய்திருக்கிறோம். எனவே ஐ.எம்.எஃப்.எல். ஹோல்சேல், ரீடெயில் லைசன்ஸ் நாள் நீட்டிக்கப்படாததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் முதலிலேயே தெரிவித்தேன். கள்ளுக்கடை, சாராயக் கடை ஆகியவற்றிற்கு 'ஓப்பன் ஆக்ஷன்' போடுகிறோம். அப்படிப் போடும்போது, ஓராண்டு என்று போடுகிறோம். எந்த மாதத்திலே ஆரம்பிக்க வேண்டுமோ அப்போது அப்படிப் போட்டுவிடுகிறோம். அதற்குப் பிறகு 1½ மாதங்கள் கழித்துத்தான் துவங்கினோம். அதனால் 'சேஞ்ச்' பண்ணியிருக்கிறோம். ஜூன் மாதத்தில் திறக்காமல், ஜூலை மாதத்தில் திறக்கிறோம். அப்படித் திறக்கும்போது, ஆக்ஷன் போடும்போது ஓராண்டு என்று சொல்லியிருப்பதால், காலத்தை நீட்டித்துத் தருகிறோம். ஆனால் ஐ.எம்.எஃப்.எல். லைசன்சுக்கு 31—3 என்று இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இரண்டுக்கும் 31 மார்ச் என்று இருந்தது. அதை மாற்றினார்கள். ஜூலை 15 வரை நீட்டிக்கிறார்கள். அதேபோன்று பிராந்தி, விஸ்கி கடைகளை ஆரம்பித்த தேதியில்—ஜூலை, ஆகஸ்ட்,



நவம்பர் மாதங்களில்கூட ஆரம்பித்திருக்கிறார்கள், ஏன் சனவரியில்கூட ஆரம்பித்திருக்கிறார்கள்—ஆண்டுக்கு இவ்வளவு என்று லைசன்ஸ் பீஸ் வாங்குகிறோம். அப்படி வாங்கும்போது, அதற்கான காலத்தையும் ஜூலை 1 வரை ஏன் நீட்டிக்கக்கூடாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நடைமுறையில் உள்ள சிக்கலை எண்ணிப் பார்க்க வேண்டும். பிராந்தி, விஸ்கி கடைகளுக்கு ஓப்பன் ஆக்ஷன்' இல்லை. யாரும் எப்போது வேண்டுமானாலும் லைசன்சுக்குப் பணம் கட்டலாம். இன்றைக்கு லைசன்ஸ் எடுத்தால்கூட மார்ச் 31 ஆம் தேதிவரைதான் செல்லும். ஏப்ரல் 1 ஆம் தேதி கொடுத்தால், மார்ச் 31 வரை செல்லும். எனவே 'ஓராண்டு' என்றில்லாமல், மார்ச் 31 வரை என்று வைத்திருக்கிறார்கள்,

திரு. ஆற்காடு நா. வீராசாமி: எல்லாவற்றுக்கும் பைனான்ஷியல் இயர் என்பது ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை. ஏலம் விட்டபோதுகூட மார்ச் 31 வரை என்றுதான் விட்டார்கள். சாராயக் கடைகள், கள்ளுக் கடைகளுக்கு அப்படித்தான் ஏலம் விட்டார்கள். பிராந்தி, விஸ்கிக் கடைகளுக்கும் அப்படித்தான். நடத்தினால் நடத்தலாம், இல்லையென்றால் போகலாம். சாராயக் கடை, கள்ளுக்கடை ஆகியவற்றின் லைசன்சு தேதியை ஜூலை 15 வரை நீட்டிக்கிறார்கள். அவர்கள் அப்படியே தொடரலாமென்று சொல்லுகிறார்கள். ஓல்சேல் ப்ளென்டிங் & பாட்டிலிங், சப்ளை ஆஃப் ஓல்சேல் ஆராக் தொடரலாமென்று புது உத்தரவு போடுகிறார்கள். நான் கேட்க விரும்புவது ஏன் ஐ.எம்.எஃப்.எல். ஹோல்சேல், ரீடெயில் லைசன்சுகளுக்கும் இதே சலுகை அளிக்கக்கூடாதா என்பதுதான்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நாம் ஓப்பன் ஆக்ஷன் போடும்போது, ஓராண்டு என்று போட்டுவிட்டோம். ஆக்ஷன் போடுவதற்கு முன்பு, அதற்கான சட்ட திட்டங்கள் பூராவையும் போட்டு, நோட்டிபிகேஷன் போட்டு, அது பேப்பரில் வருகிறது. அதற்குப் பிறகு போட்டதை நீட்டிக்கவும் முடியாது, குறைக்கவும் முடியாது. ஓப்பன் ஆக்ஷன் போடும்போது 'ஓராண்டு' என்று தெளிவாகப் போட்டுவிட்டோம். ஐ.எம்.எஃப்.எல். விற்பனைக்கு லைசன்ஸ் கொடுக்கும்போது, யாருக்குக் கொடுத்தாலும், அப்ளிகேஷன் பாரமில் 31 மார்ச் என்றிருக்கிறது, எழுத்து மூலமாகக் கொடுக்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:* துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அகவிலைப் படி உயர்வு குறித்து மத்திய அரசு அறிவிப்பை எதிர்பார்ப்பதாகச் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசு அகவிலைப் படி உயர்வை அறிவிக்கும்போது, விலைவாசி குறியீட்டு எண் எந்தத தேதியிலிருந்து உயருகிறதோ அதன் அடிப்படையிலே முன் தேதியிட்டு, செயல்படுத்துகிறார்கள். ஆகவே தமிழக அரசும் மத்திய அரசு அறிவிப்பு செய்யும் நோக்கில், எப்படி மத்திய அரசு முன் தேதியிட்டு அமுல்படுத்துகிறதோ, அதைப்போல அறிவிக்குமா? ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 10,000 ரூபாய் உதவித் தொகை வழங்குவது குறித்து மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, ஆராய்ந்து முடிவு செய்யப்படுமென்று அறிவித்து பல மாதங்கள் ஆகின்றன. அது எப்போது அமுல்படுத்தப்படும்?

(பிற்பகல் 1-10)

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* அகவிலைப் படி பற்றி நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன. மத்திய அரசின் அறிவிப்பு வந்த பிறகுதான், அதுபற்றிய நிலைமைகள் வரும். எப்போதும் மத்திய அரசின் அறிவிப்புக்கு பின் தான் நாமும் அறிவிக்கின்ற முறை கையாளப்பட்டு வருகிறது. இப்போதும் அதுதான் கையாளப்படும். மத்திய அரசு இதுபற்றி அறிவிப்பு தந்த பிறகுதான், இதுபற்றி அறிவிக்கப்படும். எப்போதுமே அறிவிப்பு தந்த பிறகு தான் அகவிலைப் படி தருவார்கள். ஆனால் நான் வந்ததற்குப் பிறகு 'முன் தேதியிட்டுத் தருகிற' ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறேன். நமக்கு இருக்கிற நிதி நிலை, சூழ்நிலை இவைகளைப் பொறுத்து, பொது மக்கள் தருகிற ஒத்துழைப்பு மாதிரி, அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து அரசுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.

அடுத்து, ஓய்வு பெறுபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் அளிப்பது சம்பந்தமாக அரசு ஒரு குழுவை அமைத்தது. அதை எப்படித் தருவது என்பதிலே சிந்தித்து முடிவுக்கு வர வேண்டியவர்களாக இருக்கிறோம். இதுபற்றி நன்றாக ஆராய்ந்து, சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி, அவர்களுடைய கருத்துக்கலையும் கேட்டுத்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். இதுபற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இத்திட்டத்தை 1977 ஆம் ஆண்டு அறிவித்ததற்குப் பிறகு, மாற்றும்படியான நிலை வந்தபோது, பல சங்கடங்கள் ஏற்பட்டன. தவிரவும் மத்திய அரசோ, எந்த ஒரு மாநிலமோ இத்திட்டத்தை நிறைவேற்றவில்லை. நாம் இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்





டுமானாலும், சிலபல தன்மைகள், வழிவகைகள் வேண்டும். தவிரவும் இரண்டு சாராரையும் அழைத்து உட்கார வைத்துப் பேசி, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, அதன் பிறகு தான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். இதுபற்றி திடீரென்று அறிவிக்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இதுபற்றி கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்த பிறகு, அறிவிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, யாரையும் ஏமாற்றும் நிலை இல்லை. ஓய்வு பெறுபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதுபற்றி அனுதாபத்தோடு கவனிக்கத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இருக்கிற சூழ்நிலைகளை எல்லாம், இருக்கிற பிரச்சினைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, உட்கார்ந்து பிரதிநிதிகள் எல்லாம் அவர்களுக்கு இருக்கிற நிலைமைகளை எல்லாம் சொல்ல வாய்ப்பு அளித்து, பேசி அதற்குப் பிறகுதான் ஒரு முடிவுக்கு வர வேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது பற்றி அரசு பின்னால் முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:* மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 19—3—1982, வெள்ளிக்கிழமை அன்று காலை 9-30 மணிக்குக் கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-11)

3. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. STATUTORY RULES AND ORDERS.

117. Notification issued with G.O Ms. No. 1492, Industries, dated the 2nd November 1981 and G.O. Ms. No. 1493, Industries, dated 2nd November 1981 regarding appointment of certain persons as members of the Tamil Nadu Khadi and Village Industries Board. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

118. Notification issued with G.O. Ms. No. 1283, Commercial Taxes and Religious Endowments, dated the 18th November 1981 regarding certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

119. Notifications issued with G.O. Ps. No. 1435, Commercial Taxes and Religious Endowments, dated the 31st December 1981 regarding fixation of taxes in respect of inter-venue betting inside the Madras Race Course at Guindy on the races held at Mysore, Uthagamandalam, Bangalore, Hyderabad, Bombay, Pune and Calcutta. [Laid on the table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1934).

120. Notification issued with G.O. Ps. No. 12, Commercial Taxes and Religious Endowments, dated the 4th January 1982 regarding sale of food stuff and purchase of provisions by Kerala Government House at Kanyakumari. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act 1959 (Tamil Nadu Act I of 1959).

121. Notification issued with G.O.P. No. 1098, Commercial Taxes and Religious Endowments, dated the 28th September 1981, regarding declaration of powers under section 41 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 to the Officers of the Statistics Department on Deputation. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).



122. Notification issued with G.O. Ps. No. 29, Commercial Taxes and Religious Endowments, dated the 6th January 1982 regarding reduction in the rate of Totalisator Tax and Bookmakers Tax for Madras Races 1981-82. [Laid on the table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935).

*B. Reports, notifications and other papers.*

* 53. A Review of the activities of the Tamil Nadu Co-operative Milk Producers' Federation Limited during 1981. (Tamil and English).

*54. A Review of the Tamil Nadu Agro-Engineering and Service Co-operative Federation Limited, 1981-82. (Tamil and English).

* 55. Note on Demand No. 4-Tamil Nadu General Sales Tax and Other Taxes and Duties-Administration. (Tamil and English).

---

* Circulated to all M.L.Cs on 10—3—1982.

## இணைப்பு

(297 ஆம் பக்கத்தில் இனம் 1-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னை அரசு அருங்காட்சியகத்திலுள்ள வெண்கலக் கூடத்திலிருந்து (Bronze Gallery) ஐந்து சிலைகள் களவு போனது குறித்தும், அது தொடர்பாக உடனே காவல்துறை ஆணையருடன் தான் தொடர்பு கொண்டு மேல்நடவடிக்கை எடுத்தது குறித்தும், அருங்காட்சியக இயக்குநர் 17—2—1982 நாளிட்ட தனது கடிதத்தில் அரசுக்குத் தெரிவித்துள்ளார்,

### திருடுபோன சிலைகளின் விபரம்.

(i) மைத்ரேயா (மேலையூர்)

(ii) புத்தர் (நாகப்பட்டினம்)

(iii) (10 மற்றும் 11-ம் நூற்றாண்டு)

புத்தர் (நாகப்பட்டினம்)

(சுமார் 16-ம் நூற்றாண்டு)

(iv) புத்தர் (செதுக்கப்பட்டது— (Inscribed)

(v) நாகப்பட்டினம் தஞ்சாவூர் சுமார் 13 மற்றும் 14-ம் நூற்றாண்டு)

புத்தர் (நாகப்பட்டினம், தஞ்சாவூர் சுமார் 14 ஆம் நூற்றாண்டு)

இயக்குநர் தனது கடிதத்தில், 17—2—1982 அன்று காலை 9-30 மணி அளவில், வெண்கலக்கூடத்தின் காவலாளி, பணி எழுத்தரிடம் வெண்கலக் கூடத்தில் 5 சிலைகள் காணவில்லையென்று கூறியதாகவும் பணி எழுத்தர் மற்றும் உதவி இயக்குநர் மூலமாக இயக்குநர் அவர்களுக்குப் பகல் 12 மணி அளவில் இவ்விஷயம் தெரிய வந்து, அதன் பின் இயக்குநர், நேரில் சென்று அவ்விடத்தைப் பார்வையிட்டு பிறகு போலீஸ் ஆணையர் மூலமாக தக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தனது கடிதத்தில் கூறியுள்ளார். மேலும் தனது கடிதத்தில், இயக்குநர், அவ்விடத்தைப் பார்வையிட்டபோது பாலூட்டி



(Mammal) கூடத்திலிருந்து வெண்கலக் கூடத்தின் முதல் தளத்திற்குச் செல்லும் பாதையின் இடையிலுள்ள மரக்கதவின் ஒரு பாகம் நீக்கப்பட்டிருந்ததாகவும், எனவே திருடன் அதன் வழியாக நுழைந்திருக்கலாம் என்றும், களவாடப்பட்ட சிலைகள் வைத்திருந்த காட்சிப் பெட்டியின் கண்ணாடிகள் நீக்கப்பட்டிருந்ததாகவும் கூறியுள்ளார்.

22—2—1982 அன்று முதலமைச்சரும், 23—2—1982 அன்று கல்வி அமைச்சரும் மற்றும் கல்வித்துறை செயலாளரும் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டனர். அருங்காட்சியகத்தில் உள்ள தேசியக் கலைக்கூடம், வெண்கலக்கூடம் ஆகியவற்றைப் பார்க்கவரும் பார்வையாளர்கள் ஒரு பதிவேட்டில் கையொப்பம் இடவேண்டும் என்று இதுவரையில் இல்லாதிருந்தது. இந்த முறை இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அருங்காட்சியகத்தில் அதிகப் பாதுகாப்பு, கண்காணிப்பு ஆகியவற்றிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*5th, 6th, 10th and 11th March*, 1982.

VOLUME CLXXXVI (Nos. 1 to 4)

### A


*Pages.*

ADJOURNMENT MOTION RE—

Police, attack by—on people assembled at Meenambakkam Airport to welcome Thiru Sivaji Ganesan, M.P. ... ... ... ... ... 200

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Headmasters of Higher Secondary Schools, statement *re* non-fixation of pay of .. .. .. 13

Madras Museum, statement *re* theft of five valuable Buddha Icons in ... ... ... ... ... 297, 298, 299

New College, Madras, statement *re* closure of—due to temporary suspension of 9 students .. .. 209, 210, 211—212, 213

ARUMUGAM, THIRU S.—

Budget for 1982-83, general discussion on .. .. 95, 184

D—*cont.*

PAGES.

DAM(S)—

Question *re* construction of—across Thirumalai stream 109—110

DEPUTY CHAIRMAN, Mr.—

Adjournment motion *re* attack by Police on people assembled at Meenambakkam Airport to welcome Thiru Sivaji Ganesan, M.P. ... ... ... 200

Budget for 1982-83, general discussion on ... ... 19, 20, 30, 76, 84, 87, 88, 173, 174, 175, 178, 181, 182, 184, 189, 193, 234, 241, 255, 270, 274, 307, 323, 333, 334, 361, 376

Half-hour discussion *re* Mass Rapid Transit System. 200

Information *re* privilege motion' taking up of .. .. 199

Privilege issue *re* publication of a news item about appeal to Christians in "Malai Murasu" Newspaper, dated 3rd March 1982 .. .. .. .. 12—13

Question Hour, dispensation with—on 10th March 1982 ... ... ... ... ... ... 199

Question Hour, dispensation with—on 11th March 1982 .. .. .. .. .. .. 290



E.

*Pages.*

EAST COAST ROAD SCHEME—

Question *re* estimated cost and execution of .. 5—8

ERADHA, Thiru S. R.—

Budget for 1982-83, general discussion on ... 29, 136, 169—194, 333, 334

F

FIRE ACCIDENT(S)—

Question *re* reason for—in Thirumalairayan Padithurai in Madurai on 27th May 1981 .. .. 103

FIVE-DAYS-A-WEEK.

Question *re* introduction of—in Government Offices. 101—103

G

GENERAL SALES TAX ACT, 1959—

Delegation of powers to officers of Statistics Department, notification laid on the table .. .. 394

GENERAL SALES TAX RULES, 1959—

Amendments to—, notification laid on the table .. 394

GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES-ADMINISTRATION—

Note on Demand *re*—, laid on the table .. .. 395

H

PAGES.

HAJ PILGRIMAGE—

Statement under rule 82 of the Council Rules *re* constitution of a Committee for selection of ... ... 40—41

HALF-HOUR DISCUSSION *re*—

Mass Rapid Transit System ... ... ... ... 200

HANDE, THE HON. DR. H. V.—

Budget for 1982-83, general discussion on .. .. 34—35, 67

Medical Colleges in Tamil Nadu, statement *re* arrest of certain persons in connection with use of bogus mark-sheets for getting admission in ... ... 14—16, 16—17

Nurses in Government Hospitals,, statement *re* direct action by—stressing their ten-point demand ... 213, 214—216, 217

HIGHWAYS—

Question *re*—

East Coast Road Schemes, estimated cost and execution of ... ... ... ... ... 5—8

Grant of additional funds to meet increased maintenance cost of roads by—Department ... ... 3—4

HOUSING SCHEME—

Question *re* houses constructed by Cuddalore Municipality under L.I.G.—to Municipal Employees, sale on hire purchase basis ... ... ... ... 4



I

Pages.

INDUSTRIAL ESTABLISHMENTS (CONFERMENT OF PERMANENT STATUS TO WORKMEN) ACT, 1981—

Date of coming into force of—, notification laid on the table .. .. .. .. .. .. 194

INFORMATION *re*—

Privilege motion, taking up of ... ... ... 199

J

JANARTHANAM, DR. T. R.—

Budget for 1982-83, general discussion on .. .. 20, 30, 141, 148, 178, 189, 224—229, 232, 234, 253, 272—290

Half-hour discussion on Mass Rapid Transit system. 200—201

Privilege issue *re* publication of a news item about speech of Minister for Religious Endowments in "Murasoli", dated 24th February 1982 .. .. 123

JEPPIAAR, THIRU—

Budget for 1982-83, general discussion on ... ... 144

K

PAGES.

KANNAPPAN, THIRU KADUVETTI—

Privilege issue *re* publication of a news item about appeal to Christians in 'Malai Murasu' Newspaper dated 3rd March 1982 .. .. .. .. 12—13

KHADI AND VILLAGE INDUSTRIES BOARD—

Appointment of certain persons as Members of—, notification laid on the table .. .. .. 393

*L*

LAKSHMIKANDHAN, Thiru C. R.—

Budget for 1982-83, general discussion on .. .. 20, 24—40, 75, 334, 374—375, 378, 392

Half-hour discussion on Mass Rapid Transit System 203—204

Madras Museum, calling Minister's attention to theft of five valuable Buddha Icons in ... ... 297, 298

Magistrates, calling Minister's attention to cases pending in Courts due to non-filling up of posts of .. .. .. .. .. .. 124, 125, 126—127

Medical Colleges in Tamil Nadu, calling Minister's attention to arrest of certain persons in connection with use of bogus mark-sheets for getting admission in .. .. .. .. .. .. 13, 14, 16

New College, Madras, calling Minister's attention to closure of—due to temporary suspension of nine students .. .. .. .. .. .. 209—210





PAGES.

LAKSHMIKANDHAN, THIRU C. R.—*cont.*

Nurses in Government Hospitals, calling Minister's attention to direct action stressing their ten-point demand ... ... ... ... 213, 214, 216

LIQUOR (REFUND OF FEE AND DISPOSAL OF STOCKS) RULES, 1981—

Making of—, notification laid on the table ... 98

*M*

MADRAS MUSEUM—

Minister's attention called to theft of five valuable Buddha Icons in ... ... ... ... 297—299

MAGISTRATES—

Minister's Attention called cases pending in Courts of Tamil Nadu due to non-filling up of posts of .. 124—130

MANICKAM, Thiru P.—

Budget for 1982-83, general discussion on ... 231—246, 274, 277, 287, 329, 357, 363, 377

MASS RAPID TRANSIT SYSTEM—

Half-hour discussion on ... ... ... ... 200

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Drinking water in Madras City, calling attention to contamination of—due to pollution with sullage water ... ... ... ... 130—132

PAGES.

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*

Headmasters of Higher Secondary Schools, calling attention to non-fixation of pay of ... ... 13

Madras Museum, calling attention to theft of five valuable Buddha Icons in ... ... ... 297—299

Magistrates, calling attention to cases pending in Courts due to non-filling up of posts of ... 124—130

Medical Colleges in Tamil Nadu, calling attention to arrest of certain persons in connection with use of bogus mark-sheets for getting admission in ... 13—17

New College, Madras, calling attention to closure of due to temporary suspension of nine students. 209—213

Nurses in Government Hospitals, calling attention to direct action by—stressing their ten-point demand ... ... ... ... ... 213—217

MEENAKSHISUNDARAM Thiru K.—

Drinking water in Madras City' calling Minister's attention to contamination of—due to pollution with sullage water ... ... ... ... 130, 131

Half-hour discussion on Mass Rapid Transit System 204—205

Headmasters of Higher Secondary Schools, calling Minister's attention to non-fixation of pay of ... 13

Information *re* privilege motion, taking up of ... 199

New College, Madras, calling Minister's attention to closure of—due to temporary suspension of nine students ... ... ... ... ... 210—211

MIAKHAN, Thiru J. M.—

Budget for 1982-83, general discussion on ... 88—98



PAGES.

MUNUSWAMI, Thiru P.—

Budget for 1982-83, general discussion on .. .. 153—161

MURASOLI—

Privilege issue *re* publication of a news item about speech of Minister for Religious Endowments in "Murasoli", dated 24th February 1982 ... 122, 123

MUTHIAH CHETTIAR, DR. M. A.—

Budget for 1982-83, general discussion on ... 59—70

MUTHUSWAMY, Thiru S.—

Budget for 1982-83, general discussion on ... 22, 70—88, 179—180, 182, 191, 362, 369, 374

N

NALLASIVAN, Thiru A.—

Budget for 1982-83, general discussion on ... 217—231, 247, 284, 311, 322, 347—348

New College, Madras, calling Minister's attention to closure of—due to temporary suspension of nine students ... ... ... ... ... 212

PAGES.

NEDUNCHEZHIYAN, the Hon. Dr. V. R.—

Budget for 1982-83, general discussion on ... 223, 254—255, 277, 284—286, 303, 314, 326, 341—393

NEELANARAYANAN, Thiru—

Budget for 1982-83, general discussion on ... 177, 178, 182, 283-284

NEWSPAPERS—

Privilege issue *re* publication of a news item about appeal to Christians in "Malai Murasu" newspaper, dated 3rd March 1982 ... ... ... 12-13

NEWSPRINT PAPER MILL—

Question re establishment of—at Pugalur, Tiruchirappalli district ... ... ... ... 112-115

NURSES—

Direct action by—of Government Hospitals stressing their ten-point demand, Minister's attention called to ... ... ... ... 213—217

*P.*

PANCHAYATS (FIXATION OF STRENGTH AND RESERVATION OF SEATS FOR WOMEN) RULES, 1981—

Framing of—, notification laid on the table ... 291



PAGES.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Betting Tax Act, 1935—

Fixation of taxes in respect of inter-venue betting on races (G.O. Ps. No. 1435, Commercial Taxes and Religious Endowments, dated 31st December 1981) 394

Reduction in rate of Totalisator Tax and Book makers Tax for Madras Races, 1981-82 (G.O. Ps. No. 29, Commercial Taxes and Religious Endowments, dated 6th January 1982) ... 395

BHOODAN YAGNA ACT, 1958—

Certain villages declared as Gramdhan villages (G.O. Ms. No. 13, Rural Development and Local Administration Act, dated 4th January 1982) 291

Demand *re* Tamil Nadu General Sales Tax and Other Taxes and Duties-Administration, note on 395

General Sales Tax Act, 1959, delegation of powers to Officers of Statistics Department on deputation G.O. P. No. 1098, Commercial Taxes and Religious Endowments, dated 28th September 1981) .. .. 394

General Sales Tax Rules, 1969, amendments to—(G.O. Ms. No. 1283, Commercial Taxes and Religious Endowments, dated 18th November 1981) .. .. .. .. .. .. 394

Industrial Establishments (Conferment of Permanent Status to Workmen) Act, 1981 .. .. 194

Date of coming into force of—(G.O. Ms. No. 2813, Labour and Employment, dated 24th December 1981) .. .. .. .. .. .. 194

Khadi and Village Industries Board, appointment of certain persons as Members of—(G.O. Ms. No. 1492, Industries, dated 2nd November 1981) ... ... ... ... ... 393

Liquor (Refund of Fee and Disposal of Stocks) Rules, 1981, making of—(G.O. Ms. No. 218, Prohibition and Excise, dated 9th September 1981) ... ... ... ... ... 98

Pages

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—Cont.

Panchayats (Fixation of Strength and Reservation of Seats for Women) Rules, 1981, framing of—(G.O. Ms. No. 1794, Rural Development, and Local Administration, 28th October 1981 as amended by G.O. Ms. No. 2054, dated 11th December 1981) .. 291

Payment of Subsistance Allowance Act, 1981,—date of coming into force of—(G.O. Ms. No. 2838, Labour and Employment, dated 29th September 1981) ... ... ... ... ... ... 195

Sales tax—exemption of sale of foodstuff and purchase of provisions by Kerala Government House at Kanyakumari from—(G.O. Ps. No. 12, Commercial Taxes and Religious Endowments, dated 4th January 1982) ... ... ... ... 394

Tamil Nadu Agro-Engineering and Service Co-operative Federation Limited, review of working of—For 1981-82 ... ... ... ... ... 395

Tamil Nadu Co-operative Milk Producers' Federation Limited, Review of activities of—for 1981 .. 395

Tamil Nadu State Farms Corporation Limited,—Review on working of—for 1981-82 ... ... 291

Town and Country Planning Act, 1971—

Approval of detailed development plan for Adyar Map No. 4—(G.O. Ms. No. 1364, Housing and Urban Development, dated 17th October 1980) ... 98

Detailed Development Plan for Azhagiri Nagar, approved (G.O. Ms. No. 1600, Housing and Urban Development, dated 22nd December 1980). .. 291

PAYMENT OF SUBSISTENCE ALLOWANCE ACT, 1981—

Date of coming into force of—notification laid on the table ... ... ... ... ... 195



POLICE—

Adjournment motion *re*—attack by—on people assembled at Meenambakkam Airport to welcome Thiru Sivaji Ganesan, M.P. ... ... ... 200

PONNAIYAN, The Hon. Thiru C.—

Magistrates, statement *re* cases pending in Courts of Tamil Nadu due to non-filling up of posts of ... 124, 125—126, 127—128, 129—130

PRIVILEGE ISSUE—

Information *re* taking up of ... ... ... ... 199

Publication of a news item about appeal to Christians in 'Malai Murasu' newspaper, dated 3rd March 1982 ... ... ... .... 12—13

Publication of a news item in 'Murasoli' about speech of Minister for Religious Endowments, dated 24th February 1982 ... ... ... 122—123

Q

QUESTION HOUR—.

Dispensation with on 10th and 11th March, 1982 .. 199, 290

QUESTIONS AND ANSWERS—

Anandam, Thiru V. V. V.—

Qutstion *re*—

East Coast Road Scheme, estimated cost and execution of ... ... ... ... ... 5—8

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

DAMODARAN, Thiru A. R.—

Question *re*—

Cement. quantity allotted to South Arcot district in third and fourth quarters of 1980 and quantity distributed during fourth quarter by (1) Civil Supplies Corporation, (2) Co-operatives and (3) Private cement stockists .. .. .. .. 111—112

Houses constructed by Cuddalore Municipality under L.I.G. Housing Scheme to Municipal Employees, permission for sale of—on hire purchase basis ... ... ... ... ... ... 4

LAKSHMIKANDHAN, THIRU C. R.—

Question *re*—

Highways Department, grant of additional funds to meet increased maintenance cost of roads by ... 3—4

Newsprint paper mill, establishment of—At Pugalur, Tiruchirappalli district ... ... .. ... 112—115

LEELAVATHI, SELVI A.—

Question *re* Corporation schools having more than 1,500 students strength in Madras City-appointment of additional clerks in .. .. .. .. 1—2

MEENAKSHISUNDARAM, THIRU K.—

Question re Balasevikas working in Children's Homes, increase of salary of ... ... ... ... 10—12

MUTHUSWAMY, THIRU S.—

Question re Teachers and Government staff Co-operative Bank, establishment of—in each Block Development area .. .. .. .. .. 104—105



QUESTIONS AND ANSWERS—*Cont.*

SANTOSHAM, THIRU D.—

Question *re*—

Cement, representations re scarcity of .. .. 115—122

Fire accident in Thirumalairayan Padithurai in Madurai on 27th May 1981 reasons for .. .. 103

THOMAS, THIRU P. R.—

Question *re* Dam across Sirumalai Stream, construction of ... ... ... ... 109—110

VENKATESAN, THIRU E. S.—

Question *re*—

'Five-days-a-week' in Government Offices, introduction of ... ... ... 101—103

Rapid Transit Project between Madras Beach Station and Luz, implementation of .. .. 105—109

R

RAGHAVANANDHAM, THE HON. THIRU S.—

Budget for 1982-83, general discussion on ... .. 171, 172—173, 218, 263, 320, 321—322, 323—324, 325, 326

Drinking water in Madras City, statement *re* contamination of—due to pollution with sullage water .. 130, 131, 132

Half-hour discussion on Mass Rapid Transit System ... ... ... ... 206—209

*Pages*

RAJA MOHAMED, THE. HON. THIRU K.—

Budget for 1982-83, general discussion on ... 136—137, 138, 142—143, 182

Question-hour, dispensation with—on 10th March 1982 ... ... ... ... ... ... 199

Question-hour, dispensation with—on 11th March 1982 ... ... ... ... ... .. 290

Statement under rule 82 of the Council Rules *re* constitution of Committee for selection of Haj Pilgrims from Tamil Nadu ... ... ... 40—41

RAMACHANDRAN, THE HON. THIRU M. G.—

Budget for 1982-83, general discussion on ... 52, 54—55, 55—56, 57—58, 59

RAMALINGAM, THIRU C.—

Budget for 1982-83, general discussion on ... 17—24, 270

RAMAMOORTHY, THIRU K.—

Adjournment motion *re* attack by Police on people assembled at Meenambakkam Airport to welcome Thiru Sivaji Ganesan, M. P. ... ... ... ... 200



PAGES.

RAMAMOORTHY, Thiru K.—*cont.*

Budget for 1982-83, general discussion on .. ... 164, 184, 189, 192, 193, 222, 246—272, 275, 282, 283, 322—323, 332, 333, 334, 358—359, 360

Half-hour discussion on Mass Rapid Transit System. 201—203

RAPID TRANSPORT PROJECT—

*See* Transport

RULINGS AND OBSERVATIONS—

Adjournment motion, *re.*—

Attack on crowd gathered to receive Thiru Sivaji Ganesan, M.P., and on Thiru Rajasekaran, M.L.A. and damage to State Transport Corporation buses-Consent to raising of the matter withheld as the subject—matter related to day-to-day administration of law and order 200

Privilege issue, *re*—

Alleged characterisation of speech of 'Minister (Thiru R. M. Veerappan) in the House as dishonest speech (அயோக்கியத்தனமான பேச்சு) by Thiru K. Anbazhagan, published in 'Murasoli'—Withholding consent to raise the matter, the Chairman observed—

" ஓர் உறுப்பினர் அவையில் உரையாற்றியது குறித்து 'அயோக்கியத்தனமான பேச்சு' என்று கூறுவது உறுப்பினருடைய பேச்சுக்கு மாசு கற்பிப்பதுடன்,

R—*cont.*


| | Pages |
|---|---|
| அவரை அச்சுறுத்துவதாக அமையும். பொது மக்களிடையே அவருடைய கௌரவத்தையும் குறைப்பதாகும். எனவே, இது அவை உரிமை மீறிய செயலில் அடங்கும். இருப்பினும் விதி 160 (1)-ன்படி இந்த நிகழ்வு அண்மையில் நடந்திருக்க வேண்டும். அதை அவையில் உடனடியாக எழுப்பியிருக்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் இதைக் காலம் தாழ்த்தி இங்கு எழுப்பியுள்ளபடியால், விதி 160 (1)-ன்படி நான் இதற்கு இசைவு தர இயலாது. இருப்பினும் அவை நடவடிக்கைகளை பத்திரிகைகளில் பிரசுரிக்கும்போது, சற்று கவனத்துடன் உறுப்பினர் பேச்சுக்குக் களங்கம் விளைவிக்காத வகையில் பிரசுரிக்க வேண்டுமென்று பத்திரிகைகளைக் கேட்டுக் கொள்கிறேன்" | 123 |
| News item in 'Malai Murasu' about the speech of the Minister for Hindu Religious and Endowments—Ruling deferred till after getting clarification from the Editor of the paper ... ... ... ... | 12—13 |


## S


| | |
|---|---|
| **SALES TAX—** | |
| Exemption of sale of foodstuff and purchase of provisions by Kerala Government House at Kanyakumari from—, notification laid on the table ... ... | 394 |
| **SANKARALINGAM, THIRU M.—** | |
| Budget for 1982-83, general discussion on ... | 173, 194, 299—340, 361, 388 |
| **SCHOOL(S)—** | |
| Question *re* appointment of additional Clerks in Corporation—having more than 1500 students strength | 1—2 |




S—*Cont.*


| | PAGES |
|---|---|
| **SEETHAPATHI, THIRU R. D.—** | |
| Half-hour discussion on Mass Rapid Transport System | 205—206 |
| **SOMASUNDARAM, THE HON. THIRU S. D.—** | |
| Budget for 1982-83, general discussion on | 332, 333, 334, 390, 391 |
| **STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES *RE*—** | |
| Constitution of Committee for selection of Haj Pilgrims in Tamil Nadu .. ... ... ... | 40—41 |


## T


| | |
|---|---|
| **TAMIL NADU AGRO-ENGINEERING AND SERVICE CO-OPERATIVE FEDERATION LIMITED—** | |
| Review of working of—for 1981-82, laid on the table | 395 |
| **TAMIL NADU CO-OPERATIVE MILK PRODUCERS' FEDERATION LIMITED—** | |
| Review of activities of—for 1981, laid on the table | 395 |
| **TAMIL NADU STATE FARMS CORPORATION LIMITED—** | |
| Review on working of—for 1981-82, laid on the table ... ... ... ... ... .. | 291 |
| **TEACHERS—** | |
| Headmasters of Higher Secondary Schools, Minister's attention called to non-fixation of pay of ... ... | 13 |
| **THOMAS, THIRU P. R.—** | |
| Budget for 1982-83, general discussion on ... ... | 30, 73 |
| **TOWN AND COUNTRY PLANNING ACT, 1971—** | |
| Detailed Development Plan for Adyar Map No. 4 approved, notification laid on the table ... | 98, |
| Detailed Development Plan for Azhagiri Nagar, approved, notification laid on the table .. .. | 291 |

T—*cont.*


PAGES

TRANSPORT—

Question *re* Rapid Transit Project between Madras Beach and Luz, implementation of ... 105—109

V

VASANTHA PAI, THIRU G.—

Budget for 1982-83, general discussion on ... 154, 161—169

VEERASAMI, THIRU ARCOT N.—

Budget for 1982-83, general discussion on ... .. 132—153, 171, 172, 173, 175, 181, 188, 321, 322, 325—326, 353, 358, 366, 369—370, 379, 382, 389, 390, 391

VENKATESAN, THIRU E. S.—

Madras Museum, calling Minister's attention to theft of five valuable Buddha Icons in ... ... ... 297—298, 299

W

WATER-SUPPLY—

Drinking water in Madras City, Minister's attention called to contamination of—due to pollution with sullage water ... ... ... ... 130—132


Y211,32 N82
N83.186
122060

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.
IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Co., Madras-4.
3. C. Subbiah Chetty & Co., Madras-5.
4. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitaraman & Co., Madras-14.
8. Mohan Pathippagam & Book Depot., Madras-5.
9. C. Venkatesam Chetty & Co., No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. TheSouth India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelvelly) Ltd., Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Ltd., Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

*In Moffussil of Tamil Nadu.*

1. A. Venkatasubban & Co., Vellore (North Arcot District).
2. Bharathamatha Book Depot., Thanjavur (Thanjavur District).
3. P. V. Nathan & Co., Kumbakonam (Thanjavur District).
4. Appar Boek Stall, Thanjavur.
5. Palaniappa Bros., Tiruchirappalli-2.
6. S. R. Subramania Pillai, Tirunelveli Junction
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers. No. 9/31. Cross Cut Road, Coimbatore-12.
10. V. B. Ganesan, Villupuram (South Arcot District).
11. Mercury Book Co., No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
12. S. M. Jeganathan, Book House, P. S. No. 327, No. 35, Nandhi Koil Street. Tiruchirappalli-2.
13. Ganesh Stores, South Car Street, Sivakasi.
14. Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
15. A. K. Chandriah Chettiar and Sons, Salem.
16. Parameswari Book Shop. No. 46-D, Old Market Street, Salem.
17. Meenakshi Pathippagam, Pudukkottai.
18. K. V. Narayana Iyer Sons. Dindigul (Madurai District).
19. Jayakumari Stores, Nagarcoil (Kanyakumari District).
20. Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
21. Dinamani Stores, No. 8/1, Old Post Office Road, Coimbatore-18.
22. Bharathi Puthaganilayam, Publishers and Book Sellers, No. 1-B, Town Hall Road, Madurai-1.
23. Kumaran Book Depot., Book Sellers, Erode-1.
24. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
25. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
26. Ajantha Book Centre, Salem.
27. Sri Vidya, No. 63, Tennore High Road, Tiruchirappalli-17.

*In other States.*

67
R. F.

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
4. The Book Syndicate, Hyderabad-1.
5. Labour Law Publications, Hyderabad.
6. K. P. Bagchi & Company, No. 286, B. B. Ganguli Street, Calcutta-12.
7. Puthaghalayam, Pondicherry.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN